Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தமிழ் இலக்கியத்தில் அங்கதம்

(SATIRE IN TAMIL LITERATURE)

டாக்டர் மு. அருணகிரி

மரகதம் பதிப்பகம்
மதுரை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

maj Foundation Ch

மதுரையில் வித்தியாதிபதி தீர்த்த

ஸ்ரீ மகாலிங்க சுவாமிகள்

ain. Gurukul Kangri

Forwarded free of cost, and with the compliments of the Dept. of Education, Govt of India, New Delhi.

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

D 6845

தமிழ் இலக்கியத்தில் அங்கதம்

(SATIRE IN TAMIL LITERATURE)

DONATION

CL6845

டாக்டர் மு. அருணகிரி, எம்.ஏ.,பிஎச்.டி.,
தமிழ்ப் பேராசிரியர்
தியாகராசர் கல்லூரி,
மதுரை-625 009

மரகதம் பதிப்பகம்
4/329, மாணிக்கவாசகர் தெரு,
சதாசிவநகர், மதுரை-625020.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முத்துச்சாமி அருணகிரி (44)

முதற்பதிப்பு : டிசம்பர் 1989

© உரிமை : மாலதி அருணகிரி

விலை ரூ. 45.00

Satire in Tamil Literature

By Dr. **M. ARUNAGIRI**, M.A.,Ph.D.,

சிறந்த நூல்களைத் தமிழில் வெளியிடுவதற்கு நிதியுதவி வழங்கும் தமிழ்நாடு அரசின் திட்டத்தின் கீழ், இந்நூல் நிதியுதவி பெற்றது.

காணிக்கை
எனது தந்தையார்
அமரர்
ச. முத்துச்சாமிமுதலியார்
அவர்களுக்கு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அணிந்துரை

டாக்டர் சு.ப., அண்ணாமலை
பி.ஓ.எல். (ஆனர்சு); எம்.லிட்; பிஎச்.டி;
முன்னாள் முதல்வர்,
தியாகராசர் கல்லூரி, மதுரை

டாக்டர் **மு. அருணகிரி** அவர்கள் ''தமிழ் இலக்கியத்தில் அங்கதம்'' என்னும் திறனாய்வு நூலை ஆக்கியுள்ளார். தனிநூலை ஆய்வதை விட, பல காலப் பல நூல் ஒப்புநோக்கு அடிப்படையில் இலக்கியப் பாடு பொருள், பாடுமுறை, பாடுபயன் Matter, Manner, and Impact) ஆகியவற்றுள் ஒன்றை ஆய்தல் ளர்ச்சி, தாக்கம், மாறுதல், இவற்றின் பின்னணியான சமுதாய நிலை, கவிஞர் உளப்பாங்கு, புலப்பாட்டுத் திறன் ஆகியவற்றை எடுத்துக்காட்டுவதாகும். இதுவும் வரலாற்று அணுகுமுறையில் செய்யப்படும் ஆய்வே. டாக்டர் மு. அருணகிரி அவர்கள் இவ்வணுகு முறையில் 'அங்கதம்' (Satire) என்னும் சொன்முறை உத்தி, தமிழ் இலக்கியத்தில் ஆளப்படும் பாங்கினை, இவ்வாய்வு நூலில், மூலம் உணர்ந்து, முறைப்பட ஆய்ந்து, திறம்பட உரைக்கின்றார்.

இருபது நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய வரலாற்றில், நாம் பொதுவாகக் காண்பது, 'தமிழ்க் கவிஞர்களுக்கு நகைச்சுவையுணர்வு குறைவு' என்பதுதான். 'எள்ளலால் நகை தோன்றும்' என்று தொல்காப்பியர் வழிகாட்டியும் ஏனோ, தமிழ்க் கவிஞர்கள் பலர் அத்திசையில் காலோட்டவில்லை. அத்தி பூத்தாற் போல் அங்கொருவர், இங்கொருவர் அங்கதம் என்ற 'சங்கதியை'ச் சிறிது எண்ணிப்பார்த்திருக்கின்றார்கள். இரண்டாயிரம் ஆண்டுகள் ஆன பிற்பாடுதான், இன்று புதுக்கவிதை பாடுவோர் தொல்காப்பியரை உண்மையாகப் பின்பற்றுகின்றார்கள். ஆகவே அங்கதத்தின் வரலாறு விரிந்து பரந்தது அன்று; பல கோட்பாடுகளைக் காணும் அளவு ஆழ்ந்து வேரூன்றியதும் அன்று. வெறுப்பு, பகைமை, தனிப்பட்ட கோபம் — இவை இல்லாமல் 'எள்ளலை'க் கையாள்வதில், அவ்வாறு கையாளும் போது, அவற்றின் இலக்காக உள்ளவரும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சேர்ந்து 'கலையின்பம்' பெறுமாறு செய்வதில் வல்லவர் மேனாட்டுக் கவிஞர்களே. அவர்களை அறிமுகப் படுத்திக்கொண்டதனால் இன்றைய தமிழ்க் கவிதையில் அத்தகைய அங்கதம் தலைகாட்டுகின்றது. இந்த உத்தி இன்றும் இங்கு வளர வேண்டும். பல வகைப்பாடுகளைப் பெற வேண்டும்.

இதற்கு ஒரு தூண்டுகோலாகத் திரு. அருணகிரி அவர்களின் ஆய்வு வெளிவந்திருக்கின்றது. அவர் தொல்காப்பியர் காலம் முதல் இன்று வரை தமிழ்க் கவிதைகளில் அங்கதம், எந்த அளவில், எந்தப் பான்மையில், எந்தக் கோட்பாடுகளுடன் அமைந்துள்ளது என்று. சான்றுகளை அருமையாகத் தேடிக் கொணர்ந்து, ஆய்ந்துரைக்கின்றார். பாலையிற் சோலையாகத் திருவள்ளுவர் சில குறள்களில் அங்கதம் கூறுவதைக் காட்டுகின்றார்.

''தேவர் அனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுக லான்''

என்பது அங்கதம் சிறந்த முறையில் அமைந்த குறள். ஆயின் 1330–இல் 10 விழுக்காடு கூட அங்கதம் அமையவில்லையே! திருவள்ளுவர்க்கு இருந்த திறமைக்கு, இவ்வாறு அமைத்தல் கடினமும் இல்லை. இது எதைக் காட்டுகின்றது? சங்க இலக்கியத்தில் புற நானூற்றில் ஒரு சில பாடல்களிலும், மருதத் திணைப் பாடல்கள் சிலவற்றிலுமே அங்கதம் உள்ளது அங்கதப்பாடல் என்று ஒரு முழுப்பாடலையும் கூறமுடியவில்லை என்று இவ்வாய்வு நூலாசிரியர் கூறுகின்றார். இது எதைக் காட்டுகின்றது? அங்கதம் வைத்தல் சங்க காலத்தில் கவிஞர் போக்கே யன்றிக் கவிதைப் போக்காக இல்லை என்பதையன்றோ?

ஆனால் இன்றைய இலக்கியத்தில் தேசிக விநாயகம் பிள்ளையின் 'மருமக்கள் வழி மான்மியம்', முழுவதும் அங்கதமாக அமைந்துள்ளது. நாஞ்சில் நாட்டு வேளாளர் சமூகத்தை எள்ளி நகையாடித் திருத்தியது. 'பஞ்சலட்சணத் திருமுக விலாசம்' சமுதாயச் சீர்கேடுகளை அங்கதப்படுத்திக் காட்டியது. புதுமைப்பித்தன் தொடங்கி மேத்தா வரை புதுக்கவிதை பாடியவர்கள் சமுதாயம், அரசியல், சமயம், தேசீயம் ஆகிய துறைகளில் 'அங்கதத்தால்' சீர்திருத்தம் காண விரும்பி எழுதினார்கள். இந்தச் சமுதாய விழிப்பு உணர்ச்சி தோன்றியிருப்பதை இவ்வாய்வு நூலாசிரியர் நன்கு எடுத்துக் காட்டுகின்றார். தனி மனிதர்களை வசைபாடும் 'அநாகரீக அங்கதம்' இடைக் காலத்தில் காணப்பட்டது. இது மாறி இன்று

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சமுதாய நோக்கு, நாகரீகமாக எள்ளி நகையாடும் திறமை, அதற்கு மேல் 'சீர்திருத்தம் செய்ய வேண்டும்' என்ற இலட்சியம் என்பவை தோன்றியுள்ளன. இது நல்ல மாற்றம்.

இவ்வாறு, இன்றைக்குப் புதிய சூழ்நிலையில், ஆரோக்கியமாக வளர்ந்துவரும் அங்கதத்தை இந்த ஆய்வு நூலாசிரியர் வகைப்படுத்தி, ஆய்வு வழிக்காகச் சில கவிஞர்களை மட்டும் சான்றாக எடுத்துக்கொண்டு ஆய்ந்து கூறுகின்றார். அவரது திறனாய்வு முயற்சியைப் பாராட்டுகின்றேன். தமிழ் உலகம் இதனை வரவேற்கும் என நம்புகின்றேன்.

அன்பன்

கூ.ப. அண்ணாமலை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நன்றியுரை

'தமிழ் இலக்கியத்தில் அங்கதம்' எனும் இந்நூல் மதுரை, காமராசர் பல்கலைக் கழகத்து டாக்டர் (Ph.D) பட்டத்திற்காக அளிக்கப் பெற்ற ஆய்வேடாகும்.

இந்த ஆய்விற்கு மேற்பார்வையாளராக இருந்து என்னை ஆற்றுப்படுத்தியதோடு, அணிந்துரையும் அளித்துள்ள டாக்டர் கு.ப. அண்ணாமலை அவர்களுக்கு எனது நன்றி.

ஆய்விற்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து வரும் எம். தியாகராசர் கல்லூரி மேலாண்மையருக்கு எனது இதயம் நிறைந்த நன்றி.

ஆய்வுப் பணியில் எனக்குப் பெரிதும் ஊக்கமளித்த டாக்டர் நா. பாலுசாமி அவர்களுக்கும், பாரதியார் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவர் அமரர் டாக்டர் நா. செயராமன், எனதினிய நண்பர்கள் ச. செந்தூரன் சி. கதிர்வேலு, மு. பாலசுப்பிரமணியன் ஆகியோருக்கும் எனது நன்றி.

இந்நூலை வெளியிட இசைவுதந்த மதுரை காமராசர் பல்கலைக் கழகத்திற்கு என் நன்றி.

நல்ல தமிழ் நூல்களை வெளியிடுவதற்கு நிதி உதவி வழங்கும் தமிழ்நாடு அரசு, 'தமிழ் வளர்ச்சி இயக்ககம்' மூலம் இந்நூலுக்கு நிதி உதவி அளித்தமைக்கு நன்றி.

ஆய்வினைத் தொடங்க மூலகாரணமாக இருந்து ஊக்கமளித்து வந்த எனது தந்தையார் அமரர் ச. முத்துசாமி முதலியார் அவர்களுக்கு எனது நினைவஞ்சலி.

இந்நூலினை அச்சிட்டுத் தந்த மதுரை உதயம் பிரிண்டர்சாருக்கு நன்றி.

தமிழ் இலக்கிய உலகில் இத்தகைய ஆய்வு புதிய முயற்சி. இந்நூலினைத் தமிழ்ப் பெருமக்கள் வாங்கி ஆதரிக்குமாறு வேண்டுகிறேன்.

அன்புடன்

மு. அருணகிரி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சுருக்கக் குறியீட்டு விளக்கம்

அகம்.	—	அகநானூறு
இளம்.	—	இளம்பூரணர்
உ ஆ.	—	உரையாசிரியர்
ஐங்.	—	ஐங்குறுநூறு
கலித்.	—	கலித்தொகை
குறள்.	—	திருக்குறள்
குறுந்.	—	குறுந்தொகை
செய்.	—	செய்யுளியல்
தொல்.	—	தொல்காப்பியம்
தொ.ஆ.	—	தொகுப்பாசிரியர்
நற்	—	நற்றிணை
நச்.	—	நச்சினார்க்கினியர்
நாலடி.	—	நாலடியார்
நூ.	—	நூற்பா
ப.	—	பக்கம்
பக்.	—	பக்கங்கள்
ப.ஆ.	—	பதிப்பாசிரியர்
பா.	—	பாடல்
புறம்.	—	புறநானூறு
பொருள்.	—	பொருளதிகாரம்
பேரா.	—	பேராசிரியர்
மு.நூ.	—	மூந்நூல்
மேலது.	—	மேலே காட்டப்பட்ட நூல்
வி.உ.	—	விற்பனை உரிமை
Ed.	—	Editor
Ibid.	—	The same place of work
Op.cit.	—	In the work cited
P.	—	Page
PP.	—	Pages
Tr.	—	Translator

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பொருளடக்கம்

		பக்கம்
1.	முன்னுரை	1
2.	அங்கதம் பற்றிய கோட்பாடுகள்	8
3.	பழந்தமிழ்ப் பாடல்களில் அங்கதம்	
	(அ) சங்கப்பாடல்களில் அங்கதம்	38
	(ஆ) பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் அங்கதம்	101
4.	இடைக்காலத் தனிப்பாடல்களில் அங்கதம்	116
5.	இக்காலக் கவிதைகளில் அங்கதம்	173
	(அ) பஞ்சலக்ஷ்ணத் திருமுகவிலாசத்தில் அங்கதம்	175
	(ஆ) மரபுக்கவிதைகளில் அங்கதம்	185
	(இ) புதுக்கவிதைகளில் அங்கதம்	224
6.	முடிவுரை	293
	பின்னிணைப்புகள்	296
	துணைநூற்பட்டியல்	301

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1. முன்னுரை

ஆய்வு நோக்கம்

அங்கதம் என்னும் இலக்கிய உத்தி தொல்காப்பியர் காலம் முதல் இன்றுவரை உத்தியாகவும், இலக்கிய வகையாகவும் வளர்ந்த நிலைகளை மதிப்பிடுவதே ஆய்வின் நோக்கமாகும்.

ஆய்வு மூலங்கள்

அங்கதம் பற்றிய கோட்பாடுகளை வரையறை செய்வதற்குத் தொல்காப்பியம், கிரேக்க, லத்தீன் ஆங்கில இலக்கியத் திறனாய்வுகள் ஆகியவை அடிப்படை மூலங்களாக அமைகின்றன. தமிழில் அங்கதத்தை மதிப்பிடச் சங்க இலக்கியங்கள், பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள், தனிப்பாடல் திரட்டு, பஞ்சலக்ஷ்மணத் திருமுக விலாசம், பாரதியார் கவிதைகள், பாரதிதாசன் கவிதைகள், கவி மணி தேசிக விநாயகம் பிள்ளை பாடல்கள், புதுக்கவிதைத் தொகுப்புக்கள் ஆகியவை அடிப்படை மூலங்களாக அமைகின்றன. அங்கதம் தொடர்பாகவும், பல்வேறு காலத் தமிழ் இலக்கியம் தொடர்பாகவும் எழுதப்பட்ட கட்டுரைகள், ஆய்வேடுகள், நூல்கள் ஆகியவை துணைமூலங்களாக அமைகின்றன.

ஆய்வு எல்லை

'தமிழ் இலக்கியத்தில் அங்கதம்' என்ற தலைப்பு மிகவும் பரந்துபட்ட ஆய்வுப் பரப்பினைக் கொண்டதாகும். அங்கத அமைப்புடைய பாடல்களை முன்னரே அளவிட்டு அறிய இயலாத சூழலில் பொதுப்பட இத்தலைப்புக் கொடுக்கப்பட்டது. ஆயின், தமிழ்க் கவிதைகளில் அங்கதத்தை ஆய்ந்தறிந்த பிறகு, தனிநிலைப் பாடல்களில் மட்டும் பயின்றுவரும் அங்கதம் ஆய்வுக்குப் போதுமான அளவினதாக அமைந்திருந்தது. ஏனைய, காப்பியம், சிற்றிலக்கியம், நாடகம், சிறுகதை, புதினம் என்னும் பிற இலக்கிய வகைகளில் அங்கதத்தைக் காண முற்படின் ஆய்வேட்டின் அளவு பெருகிவிடும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எனவே, தனிநிலைப் பாடல்களில் காணப்படும் அங்கதம் மட்டுமே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

தனிநிலைப் பாடல்கள் பழந்தமிழ்ப் பாடல்கள், இடைக்காலப் பாடல்கள், இக்காலக் கவிதைகள் என மூன்று கட்டங்களாகப் பிரித்துக்கொள்ளப்படுகின்றன. பழத்தமிழ்ப் பாடல்கள் என்ற முதல் பகுதிக்குச் சங்கப்பாடல்களும், பதினெண்கீழ்க்கணக்கு நூல்களும் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. இடைக்கால இலக்கியத்தில் தனிப் பாடல் திரட்டு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. இடைக்காலத்தில் எழுந்துள்ள பக்திப்பாடல்களில் அங்கதக் குறிப்புக்கள் அதிகம் காணப்படாததால், ஈண்டு அவை எடுத்துக்கொள்ளப்படவில்லை. மூன்றாவது பகுப்பான இக்காலக் கவிதைகளில் மூன்று பகுதிகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. முதலாவதாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றி அங்கத நூலாக அமைந்து அருகிய வழக்குடைய பஞ்சலக்ஷ்ணத் திருமுக விலாசம் என்னும் தனி நூல் எடுத்துக்கொள்ளப்படுகிறது. இருபதாம் நூற்றாண்டுக் கவிஞருள் மரபுக் கவிஞர்களான பாரதியார், பாரதிதாசன், கவிமணி ஆகியோரது பாடல்கள் அடுத்து எடுத்துக்கொள்ளப்படுகின்றன. மூன்றாவதாகப் புதுக்கவிதையை அணுகும்போது, காலவரிசைப்படி புதுமைப்பித்தன், மீரா, வாலி, மேத்தா, வைரமுத்து ஆகியோர் கவிதைகள் மட்டுமே எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இக்கவிஞர்களின் கவிதைகளை மட்டும் எடுத்துக்கொண்டமைக்குத் தனிப்பட்ட காரணம் வேறு ஏதுமில்லை.

ஆய்வு அணுகுமுறை

அங்கதம் பற்றிய கோட்பாடுகளை வரையறை செய்வதற்கு ஒப்பாய்வுமுறை பயன்படுத்தப்பட்டுள்ளது. கவிதைகளை எடுத்து ஆராயும் பொழுது வரலாற்றுமுறை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒவ்வொரு காலகட்டக் கவிதையையும் ஆராய்கின்றபோது திறனாய்வு முறையும் பகுப்பாய்வு முறையும் மேற்கொள்ளப்படுகின்றன.

ஆய்வு முன்னோடிகள்

தொல்காப்பியம் தொடங்கி இன்றுவரை தமிழில் தொடர்ந்து பயின்றுவரும் அங்கதம் என்னும் இலக்கிய உத்தி இதுவரை முழுமையாக ஆய்வு செய்யப்பட்வில்லை. பண்டிதமணி மு. கதிரேசச்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

செட்டியார் தமது உரைநடைக்கோவை இரண்டாம் பாகத்தில் எழுதியுள்ள 'சங்ககாலத்து அங்கதம்', பாரதியார் வரலாறும் கவிதையும் எனும் நூலில் ப. மீ. சுந்தரம் எழுதிய 'பாரதியார் அங்கதம்', அனைத்திந்தியத் தமிழாசிரியர் கருத்தரங்க ஏழாவது ஆய்வுக்கோவையில் அ. பிச்சை எழுதிய 'தொல்காப்பியரின் அங்கதம்' இலக்கிய உலகம் என்னும் நூலில் வி. மரியஅந்தோனி எழுதிய 'அங்கதப் பாட்டு' எனும் கட்டுரை, இலக்கியச் செல்வி இதழில் ஜே. முத்துவீராசாமிநாயுடு எழுதிய 'அங்கதம்' எனும் கட்டுரை, செந்தமிழ் தொகுதி 56ல் மது. ச. விமலானந்தம் எழுதிய 'அங்கதச் செய்யுள்' என்னும் கட்டுரை, சங்க இலக்கிய ஒப்பீடு – இலக்கிய வகைகள் என்னும் நூலில் 'அங்கதப் பாடல்கள்' என்னும் தலைப்பில-மைந்த தமிழண்ணல் கட்டுரை, Tamil Studies I Series என்னும் நூலில் ஏ. வி. சுப்பிரமணிய ஐயர் எழுதிய Satires in Tamil என்ற கட்டுரை, பாரதி இயல் என்னும் நூலில் ப. பா. இராசேந்திரன் எழுதியுள்ள 'பாரதி படைப்புக்களில் அங்கதம்' என்னும் கட்டுரை ஆகியவை ஆங்காங்கு அங்கதத்தின் இலக்கணத்தை வரையறை செய்யவும், அங்கதத்திற்குச் சில எடுத்துக்காட்டுகள் தரவும், சில பாடல்களை அங்கதம் என்று விளக்கவும் முற்பட்டுள்ளன திட்டவட்ட மான வரையறையையும், அது பயின்றுவரும் பாடல்கள் பற்றிய முழு ஆய்வினையும் முதன்முறையாக இவ்வாய்வேடு மேற்கொள்கிறது.

ஆய்வுப் பகுப்பு

இவ்வாய்வேடு, முன்னுரை, முடிவுரையுடன் ஆறு இயல்களைக் கொண்டுள்ளது. அவை,

1. முன்னுரை
2. அங்கதம் பற்றிய கோட்பாடுகள்
3. பழந்தமிழ்ப் பாடல்களில் அங்கதம்
4. இடைக்காலத் தனிப்பாடல்களில் அங்கதம்
5. இக்காலக் கவிதைகளில் அங்கதம்
6. முடிவுரை

என்பனவாகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆய்வுச் சுருக்கம்

முதல் இயலான முன்னுரை ஆய்வு நோக்கம், ஆய்வு மூலங்கள், ஆய்வு எல்லை, ஆய்வு அணுகுமுறை, ஆய்வு முன்னோடிகள், ஆய்வுப் பகுப்பு ஆகியவற்றை விளக்குகிறது.

இரண்டாம் இயல், அங்கதம் பற்றிய கோட்பாட்டினை விளக்குகிறது. அங்கதம் பற்றிய தொல்காப்பியர் கோட்பாடு, தொல்காப்பியம் இளம்பூரணர் உரை, பேராசிரியர் உரை, நச்சினார்க்கினியர் உரை ஆகியவற்றின் வழி நிறுவப்படுகிறது. அடுத்து, மேலைநாட்டாரின் அங்கதம் பற்றிய கோட்பாடுகளில் அங்கதம் என்ற சொல்லின் விளக்கம், பொருள், வரையறை, கிரேக்க மொழியில் அங்கதம் வளர்ந்த முறை, இலத்தீன் மொழியில் அங்கதம் வளர்ந்த முறை, ஆங்கில மொழியில் அங்கதம் அமைந்துள்ள முறை ஆகியவை விளக்கப்படுகின்றன. இறுதியாக, ஒவ்வொரு காலகட்டத்திலும் அங்கதத்திற்குரிய இலக்கணங்கள் வரையறை செய்யப்பட்டுள்ளன.

மூன்றாவது இயல் பண்டை இலக்கியத்தில் அங்கதம் அமைந்துள்ள முறையை ஆய்கிறது. முதற்பகுதியாகச் சங்க இலங்கியங்கள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. சங்க இலக்கியப் புறப்பாடல்களில் புறநானூற்றில் மட்டுமே அங்கதம் அமைந்துள்ளது. உரையாசிரியர்கள் மேற்கோளாக எடுத்து விளக்கும் பாடல்களும், திறனரய்வாளர் காட்டும் பாடல்களும் அங்கதக் குறிப்புடையனவாக விளக்கப்பட்டுள்ளன. புறப்பாடல்களில் அங்கதக் குறிப்புத் தோன்றும் சூழல்களாகப் புலவர்களைப் போற்றாது பரிசளிக்கக் காலந்தாழ்த்தி பமை, மன்னர்கள் அரசியல் நெறியில் தவறு கண்டபொழுது திருத்துமுகத்தான் எழுந்தவை ஆகியவை கொள்ளப்படுகின்றன. ஒவ்வொரு பாடலிலும், பயின்றுவரும் அங்கதப்பொருள், அப்பொருளை விளக்கப் புலவர் பயன்படுத்தும் முறைகள் ஆகியவை விளக்கப்படுகின்றன.

அகப்பாடல்கள் திணை அடிப்படையில் பாகுபாடு செய்யப்பட்டுப் பின்னர்க்கூற்று அடிப்படையிலும், சூழல் அடிப்படையிலும் பாகுபாடு செய்யப்படுகின்றன. அங்கதத்திற்குச் சொல்லப்பட்ட வரையறைகளை அளவுகோலாகக் கொண்டு, அகப்பாடல்களில் காணப்படும் அங்கதப் பாடல்களைக் கண்டறிந்து, அவற்றுள் அங்கதப் பொருளையும், அங்கதம் அமைந்துள்ள முறையினையும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விளக்க முயல்கிறது இவ்வாய்வேடு. சங்க அகப்பாடல்களில் 61 பாடல்களில் அங்கதம் அமைந்துள்ள நிலை இவ்வியலில் ஆராயப்-படுகிறது

அடுத்த பகுதியில், பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் அங்கதம் அமைந்துள்ள முறை ஆராயப்படுகிறது. திருக்குறள், நாலடியார், ஐந்திணை எழுபது ஆகிய மூன்று நூல்களில் மட்டும் அங்கதக் குறிப்புக்கள் அமைந்துள்ளமை விளக்கப்படுகிறது. ஒன்பது திருக்குறளில் அமைந்துள்ள அங்கதமும் கருத்தடிப்படையில் விளக்-கப்படுகிறது. நாலடியாரில் ஐந்து பாடல்களில் உள்ள அங்கதம் விளக்கப்பட்டிருக்கிறது. ஐந்திணை எழுபதில் ஒரேயொரு பாடலில் உள்ள அங்கதம் சுட்டிக்காட்டப்படுகிறது. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் அங்கதம் அமையும் சூழல் மாறுபட்டுள்ளமையும், அங்கதம் அதிகம் பயன்படாமைக்குக் காரணமும் விளக்கப்பட்டுள்ளன.

நான்காவது இயலில், இடைக்காலத் தனிப்பாடல்கள் ஆய்-வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன. பல்வேறு காலகட்டப் புலவர்-களால் பாடித்தொகுக்கப்பட்டுள்ள தனிப்பாடல் திரட்டே இங்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. இப்பகுதி புலவர் வாரியாக-பாகுபாடு செய்யப்பட்டுள்ளது. காளமேகப் புலவர் தொடங்கி 23 புலவர்கள் பாடிய பாடல்களில் அமைந்துள்ள அங்கதம் விளக்கப்-படுகிறது. புலவர் வாரியாகப் பிரிக்கப்பட்டுப் பாடுபொருள் அடிப்-படையில் மேலும் பகுக்கப்பட்டுச் செய்திகள் கூறப்படுகின்றன. வசை இக்காலத்தில் மிகுந்துள்ளமை, சாபமிட்டுப் பாடும் முறை இக்-காலத்தில் அமைந்துள்ள நிலை ஆகியவை விளக்கப்படுகின்றன.

ஐந்தாவது இயல், இக்காலக் கவிதைகளில் காணப்படும் அங்கதத்தினை விளக்குகிறது. இது மூன்று பகுப்பினைக் கொண்டுள்ளது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் எழுந்த திருமுக விலாசம் என்னும் இலக்கிய அமைப்பில் அமைந்த நூலொன்று முதலில் ஆராயப்படு-படுகிறது. பஞ்ச காலத்தையடுத்து மக்கள் பண்புநிலை மாறிய தன்மையினை அங்கத முறையில் புலவர் வெளிப்படுத்தியிருக்கும் முறை இப்பகுதியில் விளக்கப்படுகிறது.

அடுத்த பகுதி, மரபுக்கவிஞர்களான பாரதியார், பாரதிதாசன் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை ஆகியோர் கவிதைகளை ஆராய்கிறது. பாரதியார் கவிதைகளில் இந்திய மக்கள் நிலை,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆங்கிலக் கல்வி, காதல், அக்கால வேலைக்காரர் இயல்பு ஆகியவை அங்கத முறையில் புலப்படுத்தப்படுகின்ற முறை ஆராயப்படுகின்றது. நேரடியாகக் கேலி செய்தல், வெள்ளையன் கூற்றில் ஏளனம் செய்தல். புராணம் வாயிலாகக் கேலி செய்தல் ஆகிய மூன்று முறைகளைப் பாரதியார் கையாள்வது விளக்கப்படுகிறது.

பாரதிதாசன் கவிதைகளில் சமயம், சமயவாதிகள், மூடப்-பழக்க வழக்கங்கள், விரதம், புராணங்கள் ஆகியவையும், பெண்கள் நிலை, திரைப்படம், படிப்பறிவின்மை ஆகியவையும் அங்கத முறையில் சாடப்படும் நிலை விளக்கப்படுகிறது. சஞ்சீவி பர்வதத்தின் சாரல், நல்லமுத்துக்கதை, இருண்டவீடு ஆகிய மூன்று கதைப்பாடல் களில் முறையே அமைந்துள்ள அங்கதம் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

கவிமணியின் 'மருமக்கள் வழிமான்மியம்' முழுமையான அங்கத இலக்கியமாக விளங்கும் நிலை விளக்கப்படுகிறது. நூலின் தலைப்பு முதல் பல்வேறு கூறுகள் அங்கதக் குறிப்புடைய நிலை விளக்கப்படுகின்றது.

மூன்றாவது பகுதியாகப் புதுக்கவிதைகள் ஆராயப்படுகின்றன, புதுமைப்பித்தன் கவிதைகளில் புலவர் நிலை, காதலர் நிலை. இந்தியா ஆகிய பாடுபொருள்களும், புதுமைப்பித்தன் அங்கதத்தைப் பயன்படுத்தும் முறைகளும் விளக்கப்படுகின்றன.

மீரா தம் கவிதைத் தொகுப்பில், கல்வி, புலவர், ஆசிரியர் செய்தித்தாள், காதல், சாதி, திரைப்படம், அரசுப்பணியாளர்கள், அரசியல் ஆகிய பாடுபொருள்களில் அங்கதத்தைப் பயன்படுத்திய முறையும் விளக்கப்படுகிறது.

வாலியின் கவிதைகளில் தன்னலம், மகளிர் நிலை, நாட்டுப் பற்றின்மை, மூடநம்பிக்கைகள் ஆகிய சமுதாய நிலைகளும், அரசியல் நிலையும் அங்கதப்படுத்தப்படும் முறை விளக்கப்படுகிறது.

இலஞ்சம், திரைப்படம், கல்வி, வரதட்சணை, இளைஞர் நிலை, ஆகிய சமுதாயக் கூறுகளையும், அரசியலையும் மேத்தா அங்கதப்படுத்தும் முறை அடுத்து விளக்கப்படுகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வைரமுத்து, நடுத்தரவர்க்கத்தின் நிலை, இலக்கியம், சாதி, திரைப்படம், கல்வி, அரசியல் ஆகியவற்றை எவ்வெவ் வகையில் அங்கதப்படுத்திச் சாடுகிறார் என்பது அடுத்து விளக்கப்படுகிறது.

வேறுசில குறிப்பிடத்தக்க கவிதைகள் அடுத்து விளக்கப்படுகின்றன.

ஒவ்வோர் இயலிலும் ஆய்வு முடிவுகள் தனித்தனியே தரப்படுகின்றன.

முடிவுரையில் அங்கதம் பற்றிய பொது மதிப்பீடு சுருக்கமாகத் தரப்பட்டுள்ளது.

துணைநூற் பட்டியல் அடுத்து அமைந்துள்ளது. பின்னிணைப்பில் அங்கதம் அமைந்த பாடல்களின் வகையும் தொகையும் காலவாரியாகப் பிரித்துத் தரப்பட்டுள்ளன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

2 .அங்கதம் பற்றிய கோட்பாடுகள்

முன்னுரை

அங்கதம் என்பது புலவர்கள் பாடுவதற்குப் பயன்படுத்திய ஒரு இலக்கிய உத்தியாகும். அவ்வுத்தி சில வேளைகளில் தனி இலக்கிய வகையாகக் கருதப்பட்டதும் உண்டு. தமிழ் இலக்கியக் கோட்பாட்டை எடுத்துரைக்கும் மிகப் பழைய இலக்கண நூலாசிரியரான தொல்-காப்பியரும், மேலைநாட்டுக் கோட்பாடுகள் பலவற்றிற்கும் அடிப்-படையிட்ட அரிசுடாடிலும் அங்கத உத்தியைப் பற்றிக் குறிப்-பிட்டுள்ளனர். அங்கத உத்தி, கிரேக்க நாட்டில் தொடங்கி இலத்-தீனில் வளர்ந்து, ஆங்கிலத்திலும் செல்வாக்குப் பெற்றுள்ளது போலவே, தொல்காப்பியம் தொடங்கி இக்காலம் வரை தமிழ் இலக்கியத்திலும் இடம் பெற்றுள்ளது.

அங்கதம் பற்றிய தொல்காப்பியர் கோட்பாடு, மேலைநாட்டார் கோட்பாடு, மேலைநாட்டில் அங்கதம் தோன்றி வளர்ந்த விதம், ஆகியவை இவ்வியலில் ஆராயப்படுகின்றன.

அங்கதம் பற்றிய தொல்காப்பியர் கோட்பாடு

தொல்காப்பியர் செய்யுளியலில் ஏழுவகையான இலக்கியங்-களைப் பற்றிப் பேசுகிறார். அவை :

> ''பாட்டு, உரை, நூலே, வாய்மொழி, பிசியே,
> அங்கதம், முதுசொல் அவ்வேழ் நிலத்தும்''[1]

என்று தொல்காப்பியரால் சுட்டப்படுகின்றன. இவற்றையே மீண்டும் ஒருமுறை கூறும் தொல்காப்பியர் அடிவரையறையில்லாத ஆறினைத் தனியாகப் பிரித்து,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

''நூ லினான, உரையினான,
நொடியொடு புணர்ந்த பிசியினான,
ஏது நுதலிய முதுமொழியான,
மறைமொழி கிளந்த மந்திரத் தான,
கூற்றிடை வைத்த குறிப்பினான''[2]

என்று கூறுகிறார். இதிலிருந்து பாட்டு என்பது அடிவரையறையோடு கூடியதென்றும், ஏனைய ஆறும் அடிவரையறையற்ற யாப்பு என்றும் விளங்குகிறது. மேலும், அங்கதம் என்பதை இங்குக் 'கூற்றிடை வைத்த குறிப்பு' என்ற தொடரால் விளக்குவதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வகை இலக்கியத்தை விளக்கும் தொல்காப்பியர்,

''எழுத்தொடும் சொல்லொடும் புணரா தாகிப்
பொருட்புறத் ததுவே குறிப்பு மொழியே''[3]

என்று 'குறிப்புமொழி' என்ற தொடரை அங்கதம் என்பதற்குப் பதிலாகப் பயன்படுத்துகிறார். மேலும் எழுத்தாலும், சொல்லாலும் வெளிப்படையாகக் கூறப்படாமல், குறிப்பால் புலப்படுத்தப்படுவதே இத்தகைய அங்கதம் என மொழிகிறார்.

இங்கு விளக்கப்படும் அங்கதம் என்பது, அடிவரையறைக்குட்-பட்ட வெண்பா யாப்பில் அமைந்த அங்கதம் என்னும் இலக்கிய வகைக்கு வேறான ஒன்றாகத் தொல்காப்பியரால் சொல்லப்படுகிறது. இது பழமொழி, மந்திரம், விடுகதை போன்ற நாட்டுப்புற இலக்கிய வகைகளில் ஒன்றாகத் தொல்காப்பியரால் சுட்டப்படுகிறது. எனவே தொல்காப்பியர் காலத்தில் இத்தகைய அங்கத மொழிகள் நாட்டுப்புற இலக்கியத்தில் பெரு வழக்காக இருந்தன என உணரலாம்.

அடுத்து, அடிவரையறைக்குட்பட்ட வெண்பா யாப்பில் அமைந்த அங்கதம் தொல்காப்பியரால் விளக்கப்படுகிறது. வெண்-பாவின் வகைகளைப் பற்றிச் சொல்லிவரும் தொல்காப்பியர், குறு-வெண்பாட்டு, நெடுவெண்பாட்டு, கைக்கிளை, பரிபாட்டு, அங்கதம் என்று ஐந்தினைச் சொல்கிறார். அங்கதம் என்பது, இங்கு வெண்-பாவின் வகைகளுள் ஒன்றாகக் கூறப்படுவது குறிக்கத்தக்கதாகும். கைக்கிளையும் அங்கதமும் பாடுபொருள் அடிப்படையில் யிரிக்கப்-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பட்ட வகைகளாகத் தோன்றுகின்றன. இங்குத் தொல்காப்பியர் அங்கதம் என்றால் என்ன? என்பது பற்றிய விளக்கத்தைக் கூறவில்லை. அங்கதத்தின் வகைகளை மட்டுமே பிரித்துக் காட்டுகிறார்.

"அங்கதம்தானே அரில்தபத் தெரியின்
செம்பொருள் கரந்தது எனஇரு வகைத்தே"[4]

அடுத்துச் செம்பொருள் என்பதை வசைஎன்றும்[5], பழிகரப்பு என்பதை மொழி கரந்து சொல்லப்படும் என்றும்[6] தொல்காப்பியர் விளக்குகிறார். செம்பொருள் அங்கதத்தைத் தெளிவாக வசை என்று தொல்காப்பியர் விளக்குகிறார். எனவே, நேரடியாக வசைமொழி அமைந்தால் அது செம்பொருள் அங்கதம் என்பது அவர் கருத்தெனத் தெரிகிறது. அதனை மொழி கரந்து சொன்னால் அது பழிகரப்பு அங்கதம் என்பதும் அவர் கருத்து.

அங்கதத்தைப் பற்றி மேலும் ஒரு செய்தியைத் தொல்காப்பியர் கூறுகிறார். செவியுறைக்கும், அங்கதத்திற்கும் உள்ள வேறுபாட்டை இங்கு விளக்குகிறார். செவியுறைச் செய்யுளை விளக்கும்போது,

"புகழொடும் பொருளொடும் புணர்ந்தன் றாயின்
செவியுறைச் செய்யுள் என்மனார் புலவர்"[7]

என்றும், அங்கதச் செய்யுளை விளக்கும்போது,

"வசையொடும் நசையொடும் புணர்ந்தன் றாயின்
அங்கதச் செய்யுள் என்மனார் புலவர்"[8]

என்றும் கூறுகிறார்.

இதில் தொல்காப்பியர், பொதுவாகச் செய்யுளை இருவகையாகப் பிரித்து, ஒன்று செவியுறை என்றும். மற்றொன்று அங்கதம் என்றும் கூறி, இரண்டிற்கும் உள்ள வேறுபாட்டை விளக்குகிறார். பின்னர், செவியுறையை அங்கதத்திலிருந்து வேறாகக் கருதிய தொல்காப்பியர், மற்றோரிடத்தில் அதை விளக்குகிறார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

''செவியுறை தானே,
பொங்குதல் இன்றிப் புரையோர் நாப்பண்
அவிதல் கடன்எனச் செவியுறுத் தன்றே''[9]

இதிலிருந்து நாம் அறிவன.

1. ஏழுவகை இலக்கியங்களில் ஒன்றாக அங்கதமும் தொல் காப்பியர் காலத்தில் பிரிக்கப்பட்டது.

2. அது எழுத்து, சொல்லால் அன்றிப் பொருளால் குறிப்பாகப் புலப்படுத்தப்படுவது.

3. அடிவரையறையுடைய இலக்கியங்களில் வெண்பாயாப்பில் அமைந்த அங்கதம் வசை என்று சொல்லப்படும்; அது இருவகைப்படும், நேரடியாகச் சொல்லும் செம்பொருள், மறைமுகமாகச் சொல்லும் பழிகரப்பு.

4. அங்கதச் செய்யுள் செவியுறைச் செய்யுளிலிருந்து வேறுபட்ட தாகும்.



மேற்கூறிய தொல்காப்பிய நூற்பாக்களுக்கு உரை கூறுகின்ற பொழுது, பல்வேறு உரையாசிரியர்களும் பல்வேறு பாடபேதங்கள், பல்வேறு உரைவிளக்கங்கள், பல்வேறு எடுத்துக்காட்டுக்கள் கூறு-கின்றனர். அவைகளை முறையே கண்டு முடிவு காண்போம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

 Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இளம்பூரணர் கோட்பாடு

செம்பொருளாயின் என்பதற்குப் பதிலாகச் 'செம்பொருளாயின வசையெனப்படுமே' எனப் பாடபேதம் கொள்கிறார் இளம்பூரணர்' செம்பொருள் அங்கதம் வசையெனப் பெயர்பெறும் என விளக்குகிறார். தான் மொழியும் மொழியை மறைத்து மொழியின் அது பழிகரப்பு என அடுத்து மொழிகிறார். செவியுறைச் செய்யுளை விளக்கும்பொழுது, ''புகழொடும் பொருளொடும் புணரவரின் செவியுறைச் செய்யுள்'' என்றும், ''வசையொடும் நசையொடும் புணர்ந்த செய்யுள் அங்கதச் செய்யுள் எனப்பெயர் பெறும்'' என்றும் விளக்குகிறார்.[10]

ஏழுவகை இலக்கியங்களில் ஒன்றாகிய அங்கதத்தை விளக்கும் போது அங்கதம் வசைகுறித்து வரும் என்று விளக்கி, அதற்குக் காரணம் கூறும்போது ''புகழ் குறித்து வந்தாற் குற்றமென்னையெனின், அதனை வெளிப்படக் கூறக் கேட்டார்க்குந் தனக்கும் இன்பம் பயத்தலிற் குறிப்பினாற் கூறல் வேண்டுவது வசையென்று கொள்ளப்படும்'' என்று விளக்குகிறார்.[11] இளம்பூரணர் அங்கதம் என்பது புகழ் குறித்து வராது என்றும், வசை குறித்தே வரும் என்றும் கருதுபவர் எனத் தெரிகிறது.

தொல்காப்பிய நூற்பாவில் 'கூற்றிடை வைத்த குறிப்பு' என்பது அங்கதத்தை விளக்கவந்த சொல்லாகும். ஆயின், அத்தொடர் குறிப்பாகச் சொல்வது என்ற பொருளையுடையதாலும், அங்கதத்தில் ஒருவகை மட்டுமே குறிப்பாகச் சொல்லப்படும் என்பதாலும், அதனை விளக்கவந்த இளம்பூரணர் 'கரந்த அங்கதம் எனினும் சொல் குறிப்பு எனினும் ஒக்கும்'[12] என்று இங்கு 'கூற்றிடை வைத்த குறிப்பு' என்பதைக் கரந்த அங்கதம் என்று விளக்குகிறார். இது எழுவகை இலக்கியத்துள் ஒன்றான அங்கதம் பற்றிய விளக்கமேயன்றி, வெண்பாயாப்பில் அமைந்த அங்கதம் பற்றிய விளக்கமன்று என்பது குறிக்கத்தக்க செய்தியாகும். தொல்காப்பியரது சொற்களை அப்படியே வைத்துக்கொண்டு விளக்குகிறாரேயன்றி, புது விளக்கங்களை இளம்பூரணர் தரவில்லை என்பதும், எடுத்துக் காட்டாக எந்தப் பாடலையும் அவர் தரவில்லை என்பதும் குறிக்கத்தக்கன. மேலும் 'புகழொடும்' என்பதே இளம்பூரணர் கொண்ட பாடம் என்பதும் விளங்குகிறது.[13]

பேராசிரியர் கோட்பாடு

அடிவரையறை இல்லாத ஆறு இலக்கியத்தைப் பற்றிச் சொல்லும்போது தொல்காப்பியர் 'கூற்றிடை வைத்த குறிப்பு' என்ற

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சொல்லைப் பயன்படுத்துகிறார். அதனை விளக்கும் பேராசிரியர் 'சொல்லுகின்ற பொருளை இடை கரந்து சொல்லும் குறிப்பின் கண்ணவும்' என்று விளக்குகிறாரே யன்றி அது அங்கதத்தைக் குறிப்–பதாக விளக்கவில்லை.[14] மேலும், அதனை விளக்கும் தொல்காப்பியர் நூற்பாவிற்கு உரை எழுதும் பொழுதும் அங்கதம் என்ற சொல்லை அவர் பயன்படுத்தவில்லை. அதற்கு எடுத்துக்காட்டாக,

> ''குடத்தலையர் செவ்வாயிற் கொம்பெழுந்தார் கையி
> னடக்கிய மூக்கின ராம்''

என்பதை மேற்கோள் காட்டுகிறார்.[15] இப்பாடலில் ''குடமே தலையாகக் கொண்டு கொம்பெழுந்த வாயைக்கொண்டு, கையுள் கொண்ட மூக்கினையுடைய இயல்புகளைச் சொல்லி அதனைக் குஞ்சரம் என்று சொல்லிய வாறும் கண்டு கொள்க'' என்று பேராசிரியர் விளக்குகிறார். இது பிசியைப் போன்ற அமைப்புடையது போலத் தோன்றுகிறது என்ற ஐயத்தைத் தாமே கிளப்பிக் கொண்டு, ''மற்றிது பிசி யெனப்படாதோ வெனின், இது பாட்டு வடிவிற்றாகலின் அற்றன்றென்பது'' என்று வேறுபடுத்தி விளக்குகிறார்.[16] எனவே பேராசிரியர் கருத்துப்படி அடிவரையறையில்லாத ஆறுவகைகளுள் ஒன்றான கூற்றிடை வைத்த குறிப்பும், அதன் விளக்கமும் அங்கதத்–தோடு தொடர்புடையதாகச் சுட்டப்படவில்லை.

அங்கதம் என்று எழுவகை யாப்பினுள் ஒன்றாகக் கூறியதற்கு, 'மறைமொழி கிளந்த மந்திரம்' என்பதை எடுத்துக்கொண்டு,

> ''நிறைமொழி மாந்த ராணையிற் கிளந்த
> மறைமொழி தானே மந்திர மென்ப''[17]

என்ற நூற்பாவைச் சொல்லி. ''மேற்பாட்டுரை நூலென்புழி அங்கத–மென்றோதினான் இன்ன மந்திரத்தை, இன்ன ஒருவனை இன்ன–வாற்றாற் பெரும்பான்மையுஞ் சபித்தற் பொருட்டாகலின் அப்பெயர்த்தாயிற்று''[18] என்று பேராசிரியர் விளக்குகிறார்.

அங்கதம் இருவகையாக வரும் என்று மேலும் விளக்குகிறார்.

1. பாட்டாகிய அங்கதம்.
2. மந்திரமாயின.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாட்டாகிய அங்கதத்திற்கு எடுத்துக்காட்டாக,

"ஆரிய நன்று தமிழ்தீ தெனவுரைத்த
காரியத்தாற் காலக்கோட் பட்டானைச் – சீரிய
அந்தண் பொதியி லகத்தியனா ராணையாற்
செந்தமிழே தீர்க்கசுவா கா"

எனவும்,

"முரணில் பொதியின் முதற்புத்தேள் வாழி
பரண கபிலரும் வாழி – யரணியல்
ஆனந்த வேட்கையான் வேட்கோக் குயக்கோடன்
ஆனந்தஞ் சேர்க்கசுவா கா"

எனவும், இவை தெற்கண் வாய்திறவாத பட்டி மண்டபத்தார் பொருட்டு நக்கீரன் ஒருவன் வாழவும், ஒருவன் சாவவும் பாடிய மந்திரம் அங்கதப் பாட்டாயின என்று விளக்குகிறார்.[19] மந்திரத்திற்கு எடுத்துக்காட்டுக் கூறாமல் அவை வல்லார் வாய்க் கேட்டுணர்க என்று கூறிவிடுகிறார் பேராசிரியர்.[20]

அங்கதம், கூற்றிடை வைத்த குறிப்பு, குறிப்புமொழி என்–பனவற்றை ஒன்றாக்கக் கருதி விளக்கும் இளம்பூரணர் போக்கி–லிருந்து முற்றிலும் மாறுபட்டுச் செல்கிறார் பேராசிரியர். அங்கதம் என்பது இருவகையாக வரும் என்பதை உடன்படுகிறார் பேரா–சிரியர். ஒன்று பாட்டாக வருவது; அது வெண்பா யாப்பில் விளக்கப்படுகிறது; மற்றொன்றை மந்திரம் என்று கருதி, அதற்குரிய விளக்கத்தையே தருகிறார்.

ஆயின், அங்கதம் என்பதற்குப் பேராசிரியர் கொண்ட விளக்கத்தை விட இளம்பூரணர் கொண்ட விளக்கமே ஏற்புடைத் தெனத் தோன்றுகிறது.

வெண்பாவின் வகையில் ஒன்றாகிய அங்கதத்தை அடுத்துக் காண்போம். அங்கதம் என்பது வசை என்று பேராசிரியர் விளக்–குகிறார். அதனை இரண்டு வகையாகக் கூறுவர் என அடுத்து விளக்குகிறார். இவ்வாறு விளக்கும்போது புகழ்போன்று வசையா–தலும், வசைபோன்று புகழாதலும் அங்கதம் ஆகாது என்ற கருத்–துப்பட விளக்குகிறார். "அரிறப வென்ற தென்னையெனின், அவை புகழ்போன்று வசையாதலும் பட்டுத் தோன்றும் மயக்கமுடைய–வாதலின் மயக்கமறத் தெரியின் என்றவாறு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

''நூற்றுவர் தலைவனைக் குறங்கறுத் திடுவான்'' (கலி.52) என்பது புகழ்போன்று வசையாயிற்று; என்னை? கொன்றானாயினுங் குறங்கினைக் கதத்தண்டு கொண்டு ஏற்றுதல் குற்றமாதலின் என்பதறிக. கொடை மடங் கூறுதல் வசைபோன்று புகழெனப்படும். அஃது அங்க மாகாதென்பான் 'அரிறப' வென்றானென்பது''.[21]

பின்னர் அதன் வகையினை விளக்கும்போது வாய் காவாது சொல்லப்பட்ட வசையே செம்பொருள் அங்கதம் எனப்படும் என்று கூறி, ''அஃது,

''இருடீர் விளக்கத் தேழிலார் கோவே
குருடேயு மன்றுநின் குற்றம்—மருடீர்ந்த
பாட்டு முரையும் பயிலா தனவிரண்
டோட்டைச் செவியு முள''

என்பது ஏழிற்கோவை, அவ்வை முனிந்து பாடியது.

''எம்மிகழ் வோரவர் தம்மிகழ் வோரே
யெம்மிகழாதவர் தம்மிக ழாரே
தம்புக ழிகழ்வோ செம்புக ழிகழ்வோர்
பாரி யோரி நள்ளி யெழினி
யாஅய் பேகன் பெருந்தோண் மலையெனென்
றெழுவரு ளொருவனு மல்லை யதனால்
நின்னை நோவ தெவனோ
அட்டார்க் குதவாக் கட்டி போல
நீயு முளையே நின்னன் னோர்க்கே
யானு முளனே யெம்பா லோர்க்கே
குருகினும் வெளியோய் தேஎத்துப்
பருகுபா லன்னவென் சொல்லுத் தேனே''

எனவும் வரும்'' என்று எடுத்துக்காட்டி விளக்குகிறார்.[22] இவ்வெடுத்துக்காட்டுக்கள் மூலம் நேரடியாக ஒருவனை முனிந்து பாடுவது செம்பொருள் அங்கதம் எனத் தோன்றுகிறது. இது கலிப்பாவிலும், வஞ்சிப்பாவிலும் வருமாயினும், வெண்பாவில் வருவதே பெரும்பான்மை என்பது பேராசிரியர் கருத்து. அடுத்து, பழிகரப்பு அங்கதத்தை வசைப்பொருளினைச் செம்பொருள் படாமல் இசைப்பது என்று விளங்குகிறார். மேலும் அதனை விளக்கும்போது ''மாற்றரசனையும் அவனிளங்கோவினையும் வசை கூறுமாறு போலாது, தங்கோனையும் அவனிளங்கோனையும் வசை கூறுங்கால் தாங்-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யுரைப்பர்; அவைபோலப் பழிப்பன வென்றவாறு என்று விளக்குகிறார். அது,

> ''நன்றாய்ந்த செங்கோலாய் நாடிய நின்னிளங்கோக்
> குன்றெறிந்த சேந்த னெனமதியா - வன்றிறத்து
> நின்றொலிக்குந் தானையோ டெல்லா நிகர்த்தார் மேல்
> வென்றெறியும் வேலே விடும்''

என வந்த வெண்டொடைச் செய்யுளுட் கண்டுகொள்க. இதனுள், 'வென்றெறியும் வேலே விடும்' என்பது 'முனையகத்துப் படையோடு' மென வசைகூறுவான் 'குன்றெறிந்த சேந்தனைப்' போல எறிந்–தானெனப் புகழ்ந்தான் போலக் கூறினான் என்பது'' எனப் புகழ்வது போலப் பழிப்பதைப் பழிகரப்பங்கதம் என்று பேராசிரியர் விளக்கு–கிறார். இதற்கு,

> ''இன்றுள னாயி னன்றும னென்றநின்
> னாடுகொள் வரிசைக் கேற்பப்
> பாடுவன் மன்னால் பகைவரைக் கடப்பே''

என்ற புறநானூற்றுப் பாடலைச் சான்றாகக் காட்டுகிறார்.[24]

செவியுறையும் அங்கதமும்

அங்கதத்தை, கூறப்படும் முறையில் செம்பொருள் என்றும், பழிகரப்பு என்றும் வகைப்படுத்தி விளக்கிய பின்னர், ''செய்யுள்தானே இரண்டென மொழிப'' என்ற நூற்பா வருகிறது.[25] இதனை விளக்கும் பேராசிரியர்,

1. செம்பொருள் செவியுறை
2. செம்பொருள் அங்கதம்
3. பழிகரப்புச் செவியுறை
4. பழிகரப்பு அங்கதம்

என நான்காக வகைப்படுத்திக் கூறுகிறார்.

''துகளொடும் பொருளொடும் புணர்ந்தன்றாயின்''[26]

என்று பாடபேதம் கொண்டு, ''துகளாவது படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண் ஆறும் என்னும் இவற்றைப் பாதுகாவா திருத்தல் என விளக்கி, அவற்கு உறுவகையாகலான் அவற்றை உள்ளவாறு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உணர்த்திப் பொருள்செய அவர்க்குப் பொருள் செயல்வகை கூறி–னமையின் அது செவியுறைப் பாற்படும்'' என்று விளக்குகிறார்.[27]

''அறவை யாயி னினதெனத் திறத்தன்
மறவை யாயிற் போரொடு திறத்தல்
அறவையு மறவையு மல்லை யாகத்
திறவா தடைத்த திண்ணிலைக் கதவின்
நீண்மதி லொருசிறை யொடுங்குதல்
நாணுத்தக வுடைத்திது காணுங் காலே''

(புறம். 44)

என, இது செம்பொருட் செவியுறை என்றும் காட்டுகிறார்.

''புகழொடும் பொருளொடும் என்பதூஉம் பாடமாக உரைப்ப', என்று மற்றொரு பாடத்தையும் ஏற்றுக்கொண்டு, புகழும் பொருளும் புணர்ப்பது அங்கதமாயின் அஃது அமையும்; அற்றன்றாயின் ஈண்டு ஆராய்ச்சி இன்று என்பது'' என விளக்குகிறார்.[28]

அடுத்து 'வசையொடும் நசையொடும் புணர்ந்தன்றாயின் அங்–கதச் செய்யுள்' என விளக்கும் பேராசிரியர், வசையே யன்றி அவ்–வசையானே நசை தோன்றச் செய்வது செவியறிவுறை எனப்படாது அங்கதச் செய்யுள் எனவேபடும்,[29] என விளக்கி 'எனவே இல்–லாதன சொல்லி நகைப் பொருட்டாகச் செய்யினும் அங்கதச் செய்யுள் எனப்படும்' என விளக்குகிறார். இதுவும் செம்பொரு–ளாகவும், பழிகரப்பாகவும் வரும் என விளக்குகிறார். இதற்கு எடுத்துக்காட்டுகள் எவற்றையும் காட்டவில்லை.

அங்கதத்தைக் கூறுகின்ற முறையால் செம்பொருள் என்றும், பழிகரப்பு என்றும் இளம்பூரணர் பிரிப்பார். (செம்பொருள்—நேரடி–யாக; பழிகரப்பு - குறிப்பாக). ஆனால், பேராசிரியர் சினந்து வசை பாடுவது செம்பொருள் என்றும், இசைக் குறிப்பின்றிப் புகழ்வது போல வசைபாடுவது பழிகரப்பு என்றும் வேறுபடுத்தி விளக்குகிறார்.

பொதுவாகச் செய்யுளை, செவியுறை, அங்கதம் என இரு பாகு–பாடுகளைச் செய்து அவற்றின் வேறுபாடுகளை விளக்குகிறார் இளம்பூரணர். ஆயின் பேராசிரியர் அங்கதச் செய்யுளையே இரு கூறாக வைத்துக்கொண்டு ஒன்று செவியுறை அங்கதம் என்றும், மற்றொன்று வேறு அங்கதம் என்றும் விளக்குகிறார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இங்கு இளம்பூரணர் செவியுறை, அங்கதம் என வேறுபடுத்தி விளக்குவதே பொருத்தமாகப்படுகிறது. அங்கதத்தையே செவியுறை அங்கதம், ஏனைய அங்கதம் எனப் பிரிவாக்கிப் பேராசிரியர் விளக்குவது பொருத்தமாகத் தோன்றவில்லை.

நச்சினார்க்கினியர் கோட்பாடு

எழுவகை யாப்புக்களில் ஒன்றான அங்கதத்தைப் பேராசிரியரைப் போலவே நச்சினார்க்கினியரும் 'மறைமொழி கிளந்த மந்திரம்' என எடுத்துக்கொண்டு, பேராசிரியர் காட்டிய எடுத்துக்காட்டுக்களையே தந்து விளக்குகிறார். ''அவை,

''ஆரிய நன்று தமிழ்தீ தெனவுரைத்த
காரியத்தாற் காலக்கோட் பட்டானைச் — சீரிய
வந்தண் பொதியி லகத்தியனா ராணையாற்
செந்தமிழே தீர்க்க சுவா''
''முரணில் பொதியின் முதற்புத்தேள் வாழி
பரண கபிலரும் வாழி – யரணிய
லானந்த வேட்கையான் வேட்கோக் குயக்கோட
னானந்தஞ் சேர்க சுவா''

இவை தெற்கில் வாய்திறவாத பட்டிமண்டபத்தோர் பொருட்டு நக்கீரர் ஒருவன் வாழவுஞ் சாவவும் பாடி யின்னவாறாக வெனச்சவித்தற் பொருட்டாய் வந்த மந்திரம் பாட்டாய் வருதலின் அங்கதமாயிற்று''.[30]

அதுபோலவே குறிப்புமொழி என்பதைப் பிசி என்பதுபோலப் பொருளுடையதாக விளக்குகிறார்.

அங்கதத்தை வசைச்செய்யுள் என விளக்கும் நச்சினார்க்கினியர் செம்பொருள் அங்கதம், பழிகரப்பங்கதம் என இருவகை உடையதாக அதனை விளக்குகிறார்.

''அவை புகழ்போன்று வசையாதலும், வசைபோன்று புகழாதலும்படி வருமென்றற்கு 'அரில்தப' என்றார்.

(எ-டு.) ''நூற்றுவர் தலைவனைக், குறங்கறுத்திட்டானும் போன்ம்'' என்றது புகழ் போன்று வசை; மாயோன் கூறவுணர்தலின் இது காந்தத்தின் பாற்படும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கொடைமடம் படுதலல்லது'' (புறம். 142) என்பது வசை போன்று புகழ். இது செம்பொருளின் பாற்படும் இதனானே அங்கதமாகாதென்பது கருத்தாயிற்று''.[31]

அவ்வாறே வாய்கரவாது கூறப்படும் வசை செம்பொருள் வசை என விளக்கி, பேராசிரியர் போல எடுத்துக்காட்டுக்களைக் கூறுகிறார். பழிகரப்பங்கதத்திற்கு எடுத்துக்காட்டுக் காட்டும்போது, ''ஈயென விரத்தல் (புறம். 204) என்னும் பாட்டினுள் ''தெண்ணீர்ப் பரப்பி னிமிழ்திரைப் பெருங்கட, லுண்ணா ராகுவா நீர்வேட் டோரே'' என்ற வழி நின்செல்வங் கடல்போற் பெரிதேனும் பிறர்க்கினிதாய் நுகரப்படாதென வசையைச் செம்பொருளாகாமற் கூறியவாறு காண்க. புறத்தினுட் பலவு மிவ்வாறே வருவன காண்க. வெண்பாவில் வருவன வந்துழிக் காண்க''[32] என்று கூறுகிறார்.

செய்யுள் என்பதை அங்கதச் செய்யுள் என்றே கொண்டு பேராசிரியர் போலவே நான்காகப் பகுக்கிறார். ''துகளொடும்'' என்று பாடங்கொண்டு, ''துகளாவது படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண் எனும் இவற்றைப் பாதுகாவாதிருத்தல்';[33] என்று விளக்கம் கூறிப் புறம் 35ஆவது பாடலை மேற்கோள் காட்டி அதனைச் செம்பொருள் செவியுறை அங்கதம் என்றும், புறம் 47ஆவது பாட்லைக் காட்டி, அதனைப் பழிகரப்புச் செவியுறை அங்கதம் என்றும் விளக்குகிறார். மேலும் ''புகழொடும் பொருளொடும் என்று பாடம் ஓதின், மேல் வசையொடும் நசையொடும் என்பது பொருந்தாதாம்'' என்று ஒரு பாடத்தை மறுக்கிறார்.[34]

ஒழிந்த அங்கதத்தை விளக்கும் நச்சினார்க்கினியர், ''வசைப் பொருளோடும், அதனால் பிறந்த நசைப்பொருளோடும் ஒரு செய்யுள் கூடி வருமாயின் அதனைச் செம்பொருளங்கதம், பழிகரப்பங்கதம் எனப்பெயர் கூறப்படும்'' என விளக்குகிறார்.[35] ஆனால் எடுத்துக் காட்டுத் தரவில்லை.

தொல்காப்பியத்தின் உரையாசிரியர்களான இளம்பூரணர், பேராசிரியர், நச்சினார்க்கினியர் ஆகியோரது உரைகளைக் காணுங்கின்ற பொழுது மூன்று செய்திகளில் சிக்கல் இருப்பது தெரிகிறது.

1. அங்கதம் என்னும் இலக்கிய வகையின் இலக்கணம்.
2. வெண்பாவின் வகையான அங்கதத்தின் பிரிவுகள்.
3. செவியுறையும் அங்கதமும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1. அங்கதம் என்னும் இலக்கிய வகையின் இலக்கணம்

அங்கதம் என்பதற்குக் 'கூற்றிடை வைத்த குறிப்பு' என்பதை விளக்கமாகக் கொண்டு, எழுத்தொடும் சொல்லொடும் புணராது பொருட் புறத்ததுவே குறிப்புமொழி என்பதை இலக்கணமாகக் கொண்டு விளக்குகிறார் இளம்பூரணர். ஆயின், அங்கதம் என்பதற்கு மந்திரம் எனப்பொருள்கொண்டு ''நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழி தானே மந்திரம் என்ப'' என்று பேராசிரியரும், நச்சினார்க்கினியரும் விளக்குகின்றனர். எனினும், அங்கதம் என்பதற்கு இளம்பூரணர் கொண்ட உரை விளக்கமே ஏற்புடையது எனலாம்.

2. வெண்பாவின் வகையான அங்கதத்தின் பிரிவுகள்

அங்கதம் இருவகைப்படும் என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இல்லை. ஆயின் அவ்வகைக்குரிய பெயர்கள் என்ன என்பது பற்றியும், அவற்றின் விளக்கம் எவை என்பது பற்றியுமே கருத்து வேறுபாடு காணப்படுகிறது. தொல்காப்பியர் நூற்பாவை ஒட்டி உரை செய்துள்ள இளம்பூரணர் கருத்துப்படி அங்கதத்தின் இருவகையின் பெயர்கள் 1) வசை, 2) பழிகரப்பு. செம்பொருளாகச் சொல்லப்படுவது வசையெனப்படும். மொழிகரந்து சொல்லப்படுவது பழிகரப்பாகும். ஆயின், இரண்டு வகையின் பெயர்களைச் செம்பொருள் அங்கதம் என்றும், பழிகரப்பங்கதம் என்றும் கூறி, வாய்காவாது சொல்லப்பட்ட வசை செம்பொருளங்கதம் என்றும், வசைப் பொருளைச் செம்பொருள் படாமல் இசைப்பது பழிகரப்பங்கதம் என்றும் விளக்குவர் பேராசிரியரும், நச்சினார்க்கினியரும். இந்த இருவேறு விளக்கங்களுக்கிடையே மிக நுண்ணிய வேறுபாடே காணப்படுகிறது, வெளிப்படையாகச் சொல்லப்படுவது வசை என்றும், மறைமுகமாகச் சொல்வது பழிகரப்பு என்றும் கொள்ளுவதே பொருத்தம் எனத் தோன்றுகிறது.

3. செவியுறையும் அங்கதமும்

செய்யுளை இரண்டாகப் பிரித்து செவியுறை என்றும், அங்கதம் என்றும் வகுத்துப் புகழொடும் பொருளொடும் சேர்ந்து வருவது செவியுறை என்றும். வசையொடும் நசையொடும் புணரவரின் அது அங்கதம் என்றும் விளக்குவார் இளம்பூரணர். ஆயின் பேராசிரியரும், நச்சினார்க்கினியரும் அங்கதச் செய்யுளின் வகையாக இரண்டனைக் கொண்டு, ஒன்று செவியுறை அங்கதம் என்றும், மற்றது ஒழிந்த

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அங்கதம் என்றும் விளக்க முயல்வர். செவியுறை அங்கதம் என்பதற்கு அரசியல் அறிவுரை கூறும் செவியறிவுறூஉத்துறைப் பாடல்களைச் சான்று தந்து விளக்குகின்றனர். ஆயின் ஒழிந்த அங்கதத்திற்கு எடுத்துக்காட்டுக் காட்டவில்லை.

6845

இளம்பூரணர் கருத்துப்படி, செய்யுளைச் செவியுறிவுறை என்றும், அங்கதம் என்றும் வேறுபடுத்திக் காட்டி, அவற்றின் வேற்றுமைகளை இங்கு விளக்குவதே தொல்காப்பியரின் நோக்கம் என்று கொள்வதே ஏற்புடையதாகும்.

पुस्तकालय गुरुकुल कांगड़ी विश्वविद्यालय

மேலைநாட்டாரின் அங்கதம் பற்றிய கோட்பாடு

தொல்காப்பியர் கூறும் 'அங்கதம்' என்ற சொல்லுக்கு நிகராகவும், தமிழில் பயன்படுத்தப்படும் சூழலை ஒட்டியும் மேலை நாடுகளில் பயன்படுத்தும் சொல்லான 'சடையர்' (satire) என்பதன் சொற்பொருள் விளக்கத்தினையும், இலக்கணத்தினையும், கிரேக்க, இலத்தீன். ஆங்கில மொழிகளில் வளர்ந்தமுறை பற்றியும் அடுத்துக் காணலாம்.

சொற்பொருள் விளக்கம்

அங்கதம் என்னும் பொருளுடைய 'சடையர்' (Satire) என்ற சொல், இலத்தீன் மொழிச் சொல்லான 'சாட்சுரா' (Satura) வில் இருந்து வந்தது என்பர். சாட்சுரா என்பதற்கு முதலில் 'முழுவதும்' (Full) என்ற பொருளும், பின்னர் 'பலபொருட்களின் கலப்பு' (A mixture of full of different things) என்ற பொருளும் வழக்கில் இருந்தது. கதம்பம், குழப்பம் என்ற பொருளும் இச்சொல்லுக்கு உண்டு. இது ஓர் உணவுப்பொருளின் பெயர் எனவும் கூறுவர்.[36]

மற்றொரு கலப்பு உணவான கால்நடைகளுக்குக் கொடுக்கப் படும் தீனியைக் கொண்டு (Farrago) தனது அங்கதப் படைப்புக் களுக்கு சூவெனல் (Juvenal) பெயர் சூட்டினார் எனவும் கூறுவர்.[37]

இலத்தீன் மொழியில் உணவுப்பொருட்களின் பெயர்களைத் தம் இலக்கிய வகைகளுக்குச் சூட்டும் மரபு இருந்தமையால், 'சாடுரா' என்ற உணவுப்பொருளே இவ்விலக்கிய வகையின் பெயராயிற்று எனக் கருதலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பலபொருட்களின் கலப்பு என்பதால், அங்கதம் என்ற இவ்-விலக்கிய வகையும் பல வடிவங்களின் கலப்பு எனலாம்.

'சடையர்' என்ற சொல்லிற்கும், கிரேக்க மொழியில் வழங்கும் 'சாடிர்' (Satyr) என்ற சொல்லிற்கும் எவ்வித தத்தொடர்பும் இல்லை.

அங்கதம் - விளக்கம்

அங்கதம் பற்றிப் பல விளக்கங்களும், கருத்துக்களும் பலரால் தரப்பட்டுள்ளன.

'அங்கதம் என்பது நீங்கையும் அறிவின்மையையும் கண்டனம் செய்யும் பாட்டு' என்பார் டாக்டர் சான்சன் [38]

'தனிப்பட்ட மனிதனின் குறையையோ, ஒரு சமுதாயத்தின் குறையையோ, ஒரு இயக்கத்தின் குறையையோ குறிப்பாகவோ, வெளிப்படையாகவோ சுட்டிக்காட்டுவது அங்கதம்' என்று பிரிட்டானிகா கலைக்களஞ்சியம் காட்டுகிறது.[39]

'அங்கதம் சமுதாயக் குறைகளைக் கேலிக்குரியதாக ஆக்கி-னால், அதனைப் படிக்கின்ற ஒவ்வொருவரும் தன்னை விடுத்துப் பிறரையும், தன் செயல்களை விடுத்துப் பிறர் செயல்களையும் தாக்குவதாக நினைப்பதால் சமுதாயம் திருந்தவில்லை. கேலிக்குட்-படும் குறைகள் இருந்துகொண்டே உள்ளன' என்பார் ஸ்விப்ட். [49]

'குறைகளின் சீர்திருத்தமே அங்கதத்தின் உண்மையான நோக்கம்' என்பர் டிரைடனும், டிஃபோவும். [40]

'அறிவின்மை, தீமை போன்றவற்றை மென்மையாக-வோ, வன்மையாகவோ கேலி அல்லது வசைமூலம் மறைமுகமா-கவோ, நேரடியாகவோ தாக்குவது அங்கதம்' என்று சிப்லே இலக்கியக் கலைச்சொல் அகராதி குறிப்பிடுகிறது. [42]

அங்கதம் என்பது அநீதியைச் சாடல் என்ற எண்ணத்திலிருந்து முகிழ்க்கிறது என்றும் அதுவே பின்னர் ஒரு கலையாயிற்று என்றும் கூறலாம். [43]

ஒரு குறிக்கோளைக் கொண்டதாக அமைந்து, கேலியும் நகையும் கலந்து திருந்தவேண்டும் என்ற எண்ணத்துடன் படைப்பது அங்கதப் படைப்பு என்று பிரிட்டானிகா கலைக்களஞ்சியம் மேலும விளக்கும். [44]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஒன்றன் நிலை எப்படி இருக்கவேண்டும் என்பதற்கும் அது எப்படி இருக்கிறது என்பதற்கும் உள்ள வேறுபாட்டை வெளிப்படுத்த முயல்வது அங்கதமாகும்.[45] எனவே, சமுதாயம் எப்படி இருக்கவேண்டும், எப்படி இருக்கிறது என்ற இரண்டிற்குமுள்ள இடைவெளியைக் குறித்து மிகுதியாகச் சிந்தித்து உணர்ச்சி வயப்படுபவன் அங்கதம் படைப்பவன் ஆகிறான்.[46]

மக்களால் புறக்கணிக்கப்பட்ட பிறர் குற்றங்களைத் தகர்த்தெறிவதற்காகவும், அவர்களை இனம் காட்டுவதற்காகவும் எவனொருவன் மக்களை ஆற்றுப்படுத்துகிறானோ அவன் சிறந்த அங்கதம் படைப்பவன் என்பார் சதர்லாண்ட்.[47]

குறைகளை நீக்குவதற்குக் கடிந்துரையைப் பயன்படுத்துகிறார்கள். ஆனால் இக்கடிந்துரைக்கு மென்மையான நகைச்சுவையை ஒரு கருவியாகப் பயன்படுத்தவேண்டும். அவ்வாறு நகைச்சுவை இல்லாவிட்டால் அது கடும் வசையாகிவிடும் என்றும், இலக்கிய நயம் இல்லாவிடில் அது பொருளற்ற கேலிக்கூத்தாகிவிடும் என்றும் பிரிட்டானிகா கலைக்களஞ்சியம் காட்டுகிறது.[48]

அங்கதம் நேர்மையானவரை நீதி பிறழாமல் காக்கும் கருவியேயன்றி, கெட்டவரை நல்வழிப்படுத்துவதாக அமைவதில்லை. எனவேதான் அங்கதம் படைப்பவர் வெளிப்படையாகத் தீச்செயல்களைச் செய்பவனைக் கண்டிப்பதைவிட, நல்லவரைப் போன்று நடித்துத் தீச்செயல் புரியும் மனிதரையும் போலித்தனத்தையும் கண்டிக்க முயல்கின்றனர்.

அங்கதம் பிற இலக்கியச் சொற்களைப் போலன்றிப் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. எல்லா இலக்கிய வகைகளுக்குள்ளும், அக, புற வாழ்க்கைக்குள்ளும் அங்கதம் இடம்பெறும் என்பார் ஹெண்ட்ரிக்சன்.[49]

கிரேக்க மொழியில் அங்கதம் வளர்ந்த முறை

கிரேக்க இலக்கியத்திலும், மக்களிடமும் அங்கதம் மிகச்சிறந்த இடம்பெற்றிருந்தமைக்கான சான்றுகள் உள்ளன.

கிரேக்க நாட்டில் மெனிப்பஸ் என்பவர் (கி. மு. 340—270) அங்கதத்தை இயற்றியுள்ளார். இவரது அங்கதம் 'மெனிப்பியன் அங்கதம்' எனப் பெயர் பெற்றது. இவர் தமது அங்கதங்களை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உரைநடை, செய்யுள், பாடல் அனைத்தும் கலந்த ஒன்றாக அமைத்தார் என்பர். இவரது அங்கதத்தில் பல உட்பிரிவுகள் இருந்திருக்கின்றன. விசித்திரப் புனைந்துரை (Fantasy), பேச்சு மொழியில் அமைந்த உரையாடல் என்பவை இவரது அங்கத உட்பிரிவுகள் ஆகும்.

லுசியன் (Lucian) என்பவரும் கிரேக்க மொழியில் அங்கதம் படைத்தவரே. இவர் மெனிப்பசின் அங்கத வகையில் கவரப்பட்டு, அங்கதம் எழுதத்தொடங்கினார் என்பர். இவர் சமயத்திலும், இலக்கியத்திலும் காணப்படும் பாசாங்கினையும், வெளிவேடங்களையும் கண்டு அவற்றை எதிர்த்தார். மிகவும் மென்மையாகக் கண்டித்து, வேடிக்கையாக எழுதினார்.

கி.மு. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த அர்கிலோகசு (Archilochus) அங்கதம் எழுதுவதில் மிகச்சிறந்தவராகக் கருதப்பட்டார். தனிமனித எதிர்ப்பினையே கருவாகக்கொண்டிருந்த அங்கதமுறையை. பொதுவாழ்விற்குரிய ஒன்றாக உயர்த்திய பெருமை இவரையே சாரும் கிரேக்கமொழியில் இன்பியல் நாடகங்களிலேயே அங்கதக் குறிப்புக்கள் அதிகம் இடம்பெற்றிருந்தன. அத்தகைய நாடகங்களில் நகைச்சுவைக்காகக் கவிஞர்கள் ஒருவரை ஒருவர் தாக்கிக்கொள்ளும் வசனங்களைப் புகுத்தியிருந்தனர். இத்தகைய வசைகளே அங்கதமாக இருந்தன. இதற்கு இலக்கிய மதிப்புக்கொடுத்து உயத்திய பெருமை ஆர்கிலோகசையே சாரும்.

கிரேக்கத்தில் அங்கதம் தனியொரு இலக்கிய வகையாக இருந்ததில்லை என்று குவிண்டீலியன் கூறுவார். இலத்தீன் மொழியில் தான் அங்கதம் தனி இலக்கிய வகையாக இருந்தது எனவும் கூறுவார்.[50] ஆனால் ஒரேசு என்ற உரோமானியக் கவிஞரோ கிரேக்கத்தில் அங்கதம் தனி இலக்கிய வகையாக இருந்தது என்பார். இதற்குச் சான்றாக அரிசுடோபேனசு எழுதிய (Aristophanes) 'பழைய நகைச்சுவையை' (Old Comedy) எடுத்துக்காட்டி அதில் அங்கதம் இருந்ததை வெளிப்படுத்துவார். இப்'பழைய நகைச்சுவை' யில், அன்றைய சமுதாயமும், சமுதாயத்தில் அங்கதம் வகித்த அனைவரும் அங்கதப் பார்வைக்கு உள்ளாகி ஏளனக் குறிப்புடன் சாடப்பட்டிருக்கின்றனர். இது மிகச்சிறந்த அங்கத நாடகமாகக் கருதப்பட்டது. எனவே, இத்தகைய அங்கத நாடகம் இருந்த மொழியில், அங்கதம் ஒரு தனி இலக்கிய வகையாகத்தான் இருந்திருக்க வேண்டும் என்று ஒரேசு கூறுவார்.[51]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இவர்களுக்குப் பின்னர் ஹோமர் என்பவர் 'மார்ஜைடீஸ்' (Margites) என்ற அங்கத நூலைக் கிரேக்க மொழியில் இயற்றியதாக அரிசுடாடில் தன் கவிதையியலில் கூறியுள்ளார்.[52]

குவிண்டீலியன் கூறியது போன்று கிரேக்கத்தில் அங்கத இலக்கிய வகை இருந்திருக்க முடியாது என்று ஹிகெட் கூறுவார். இதற்குச் சான்றாக அங்கதம் என்ற சொல்லாட்சி கிரேக்க மொழியில் இல்லாதிருந்த நிலையைக் காட்டுவார். அங்கதம் என்பது படைப்பாளிகளின் உள்ளத்தினின்று எழும் இயற்கையான எதிர்ப்புணர்வு ஆதலால் இத்தகைய உணர்வு கிரேக்கர்களிடையே உறுதியாக இருந்திருக்கவேண்டும். ஏனெனில், கிரேக்கர்கள் கொடுமையை எப்பொழுதுமே எதிர்ப்பவர்களாகவும், ஏளனச்சிரிப்பினை இரசிப்பவர்களாகவும் இருந்திருக்கின்றனர். எனவே, அங்கத இயல்புகள் ஏதேனும் ஒரு காலகட்டத்தில் கிரேக்க இலக்கியத்தில் இருந்திருக்க வேண்டும்.என்றும்,அதுவே பின்னர் உரோமானியர்களுக்கு அங்கதம் என்ற தனி ஒரு இலக்கிய வகையைப் படைக்கத் தூண்டுகோலாக இருந்திருக்கவேண்டும் என்றும் ஹிகெட் கூறுவார் [53]

கிரேக்க மொழியில் அங்கதம் வசைமொழியாகவும், மந்திரப் பாடல்களாகவும், சடங்குகளை எதிர்த்துப் பேசும் வசைமொழிகளாகவும் இருந்திருக்கிறது. கிரேக்க நாட்டில் சமயத்தொடர்பான சாபங்கள் பலித்துவிடும் என்ற பெருநம்பிக்கை இருந்தமையே வசை மொழி தோன்றுவதற்குக் காரணமாக அமைந்திருக்கவேண்டும் எனக் கருத இடமுண்டு. ஆர்கிலோகசு அங்கதத்தை லிகாம்பசு என்பவருக்கு எதிராகப் பாடியதாகவும், அதன் விளைவாக லிகாம்பசும், அவரது இரு பெண்களும் தூக்கில் தொங்கி இறந்தனர் என்றும் கூறுவர். இதிலிருந்து அங்கதத்திற்கும், மந்திரத்திற்கும் தொடர்பு இருந்திருக்கவேண்டும் என்பதை அறியலாம்.

அங்கதங்கள் கிரேக்க மொழியில் அயாம்பிக்கு யாப்பில் எழுதப்பட்டன. கி.மு. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆர்கிலோகசும் அயாம்பிக்கு யாப்பிலேயே அங்கதம் படைத்துள்ளார். ஈரசைச் சீரால் ஆன அயாம்பிக்கு யாப்பு ஒருவரையொருவர் தாக்கிப் பழிக்கும் வசைக்கவிகளுக்குப் பயன்படும் யாப்பாக இருந்து அங்கத யாப்பு, வசையாப்பு என்றும், அயாம்பிக்கு யாப்பு, அயாம்பிக்குக் கவிதை அல்லது அங்கதக்கவிதை என வும் அழைக்கப்படுகிறது. இக்கவிதை பெரும்பாலும் பேச்சுமொழியையே அடிப்படையாகக் கொண்டு அமைகிறது.[54]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பொதுவாக, அங்கதம் கிரேக்க மொழியில் இருந்திருக்கிறது எனவும், அதனைப் பலரும் பின்பற்றியிருந்தனர் எனவும் மந்திரம் வசை போன்று இருந்தது எனவும், ஒருவரையொருவர் தாக்கி வசைபாடும் நிலையில் இருந்து உயர்ந்து சமயத்திலும் மதத்திலும் காணப்பட்ட பாசாங்கினை எதிர்த்துக் கேலி செய்வதாக உயர்ந்தது எனவும், அயாம்பிக்கு யாப்பில் எழுதப்பட்டது எனவும், கிரேக்க மொழியில் இருந்து இலத்தீனுக்கு இக்கோட்பாடு சென்றிருப்பதற்கான சான்றுகள் உள்ளன எனவும் அறியலாம்.

இலத்தீன் மொழியில் அங்கதம் வளர்ந்த முறை

கிரேக்க மொழியில் அங்கதம் என்ற கோட்பாடு வளர்ச்சி பெற்றது போன்று, இலத்தீன் மொழியிலும் வளர்ச்சி பெற்ற நிலையைக் காணலாம்.

லுசிலியசு என்ற உரோமானியக் கவிஞரே அங்கதம் எழுதுவதில் சிறப்புப் பெற்றவராக இருந்திருக்கிறார். இவர் முப்பது அங்கத நூல்களை எழுதினார். இவரே 'சடையர்' (Satire) என்பது சாட்சுரா (Satura) என்ற இலத்தீன் மொழிச்சொல்லிலிருந்து உருவானது என்பார். லுசிலியசு தன் பாடல்களைப் 'பொழிவுகள்' (Sermons) என்றழைத்தார். குறிப்பிட்டவர்களைத் தாக்கியும். சமூகக் குற்றங்குறைகளைக் கண்டித்தும் இவர் பாடினார். பல நிலைகளில் மக்களும், பிறரும் பாசாங்கு செய்வதை இவர் வெறுத்தார். நிகழ்ச்சிக்குறிப்பு, நீதிக்கதை, நாடகக்காட்சி, விளித்தற்பாடல்கள் (Apostrophe), உரையாடல் போன்ற பல உத்திகளை இவர் பயன்படுத்தியுள்ளார்.

அடுத்துவந்த ஒரேசும் அங்கதப் பாடல்களைப் பாடியுள்ளார். இவரது பாடல்கள் கேலிசெய்யும் போக்குடையனவாக அமைந்தனவே தவிர, குறைகளை நேரடியாகத் தாக்கித் துகிலுரியும் பாங்கில் அமையவில்லை. இவரே அங்கதத்தை ஒரு சிறந்த இலக்கிய வகையாகவும், வளர்ச்சிக்குரிய ஒரு துறையாகவும் மாற்றினார்.

உரோமானியக் கவிஞர்களில் பெர்சியசு என்பார் நீதிக்கருத்துக்களை மையமிட்ட அங்கதங்களைப் பாடினார்.

சூவெனல் (Juvenal) என்பவர் உரோமானிய அங்கதக் கவிஞர்களுள் சிறப்பிடம் பெறுபவர் ஆவார். இவர் பதினாறு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அங்கதங்களை எழுதினார். குற்றவாளிகளைப் பற்றியும், அறத்தை உபதேசிப்போரிடம் காணப்படும் இயற்கையல்லாத தீங்கினைப் பற்றியும், மனிதமன ஆசைகளின் வெறுமை பற்றியும், பல்வேறு பொருள்களில் அங்கதம் பாடியுள்ளார். இவர் சமகாலக் குற்றங்களை மிக வன்மையாகக் கண்டிக்கிறார். இவரது படைப்புக்கள் தாக்கும் ஆற்றலுடையன; குற்றம் காணும் போக்குடையன; அழுத்தம் மிக்கன. எனவே இவர் ஒப்பற்ற அங்கதப் படைப்பாளராகக் கருதப்படுகிறார்.

ஒரேசின் அங்கதம் மென்மையாகவும், நயமாகவும், சரளமாகவும் அமைந்திருக்கும். ஆனால் சுவெனலின் அங்கதமோ நேர்மாறான அங்கதமாக அமைந்திருக்கும்.

இத்தாலியில் ஆரம்ப காலங்களில் அங்கதம் தரம்தாழ்ந்த வசையாகவும், அறுவடைக் காலங்களில் ஒருவரை ஒருவர் தாக்கிப் பாடிக்கொள்ளும் பாடல்களாகவும் அமைந்திருந்தன.

லுசிலியசின் அங்கதம் அறுசீர் யாப்பில் அமைந்த உரையாடல் வடிவில் உள்ளது. ஒரேசின் அங்கதம் அயாம்பிக்கு யாப்பு வடிவில் உள்ளது.

பொதுவாக, உரோமானியர்களால் உருவாக்கப்பட்ட அங்கத இலக்கிய வகை, இலத்தீன் மொழியிலே ஏறக்குறை மூன்று நூற்றாண்டுகள் இருந்து வளர்ச்சிபெற்று, பின்னர் லுசியன் என்பவரால் கிரேக்கமொழியில் செல்வாக்குப் பெறத்தொடங்கியது எனலாம் என்பார் உறிகெட்.[55]

ஆங்கில மொழியில் அங்கதம் வளர்ந்த முறை

ஆங்கில இலக்கியத்தில் இடைக்காலச் சமயச்சொற்பொழிவுகளே அங்கதம் தோன்றுவதற்குக் காரணமாக அமைந்தன எனலாம்.

மதவாதிகளிடம் காணப்பட்ட ஒழுக்கச்சிதைவே இத்தகைய இலக்கியம் தோன்றக் காரணமாயிற்று. இத்தகைய ஒழுக்கச்சிதைவுகளைக் கண்டு மனம் வெதும்பியே, அங்கதக் கவிஞர்கள் மதவாதிகளைச் சாடினர்.

மதத்தை அங்கதத் தாக்குதலுக்கு உள்ளாக்குவதில்லை. கடவுளை இத்தகைய முறையில் விமரிசிப்பதும் இல்லை. ஆனால்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மதவாதிகளின் போலித்தனங்கள் அங்கதப் படைப்பாளர்களால் தாக்கப்படுகின்றன.[56]

ஆங்கில இலக்கியத்தில் அங்கதத்தைக் கையாண்டவர்களுள் சிறப்பிடம் பெற்றவர்களாக, டிரைடன், போப், எச். ஜி வெல்சு ஸ்விப்ட், பீகாக், ஆல்டசு ஹக்ஸ்லி, ஆர்வெல் போன்றோரைக் குறிப்பிடலாம். இவர்கள் அங்கதத்தை முழுமையாகவும், அதிகமாகவும் கையாண்டு சிறப்பிடம் பெற்றனர். ஆங்கில இலக்கியங்களில் பிற இலக்கிய வகைகளைவிடப் புதினத்தில்தான் அங்கதம் அதிகமாகக் கையாளப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது. கி.பி. 18ஆம் நூற்றாண்டு அங்கத இலக்கியத்தின் பொற்காலம் என அழைக்கப்படுகிறது.

மதவாதிகளிடமும் தேவாலயங்களிலும் (Churches) ஒழுக்கச் சிதைவு ஏற்பட்டதைக் கண்டு தாக்கி எழுதியவர் சாசர் ஆவார். இவரது படைப்புக்கள் உரோமானிய சூவெனலைப் போன்று கடுமையாக இல்லாமல், மென்மையான தாக்குதல்களைக் கொண்டவையாக உள்ளன.

பொதுவாக அங்கதப் படைப்பாளர்கள் 'வசை' யினையே மிக எளிமையான ஆயுதமாகப் பயன்படுத்தியிருப்பதைக் காணலாம். இவ்வசை நேரடியாக அமைந்து, தீவிரமாகவும், அழுத்தமாகவும் தாக்குகிறது எனலாம். வசைக்கு அடுத்தாற்போன்று நகைச்சுவையுடன் கூடிய குறிப்பு முரணை (Irony) வெகுவாகப் பயன்படுத்தினர். இத்தகைய குறிப்புமுரண் எதிர்மறைப் பொருளைத் தருவதாக அமைந்து, தாக்கும் தன்மையன. பின்னர், நையாண்டியையே பெரிதும் அங்கதத்திற்குப் பயன்படுத்திய நிலைஏற்பட்டது என்பார் ரீஸ்.[57]

அங்கதத்தை நான்கு முறைகளில் அங்கதப் படைப்பாளர்கள் வெளிப்படுத்தியிருப்பதைக் காணலாம்.

1. வசை (invective)
2. நையாண்டி (Burlesque)
3. இன்பியல் குறிப்புமுரண் (Comic Irony)
4. துன்பியல் குறிப்புமுரண் (Tragic Irony)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இவற்றுள் நையாண்டியும், குறிப்பு முரணும் நாசூக்காகப் பயன்படுத்த உதவுகின்றன.

வசை ஒரு இலக்கியம் முழுவதும் இருக்கமுடியாது. இதேபோன்று குறிப்பு முரணும் ஓரளவுதான் இருக்கவேண்டுமே தவிர, அதிகமாக இருத்தல் கூடாது. நேரடியான அங்கதக் கதைக்கூற்றும் (Satirical Narration) பயன்படுவதில்லை. எனவே, நகைச்சுவையுடன் கூடிய தாக்குதலே சிறந்த அங்கதமாகும்.

கிரேக்கம், இலத்தீன், ஆங்கிலம் ஆகியவற்றின் அங்கதக் கோட்பாடுகளைக் கொண்டு பின்வரும் முடிவுகளைப் பெறலாம்.

அங்கதம் தனியொரு இலக்கிய வகையாகவும், இலக்கிய உத்தியாகவும் அமைந்திருக்கிறது.

அங்கத இலக்கிய வகை

1. நேரடி அங்கதம் (Direct Satire)
2. மறைமுக அங்கதம் (Indirect Satire)

என இருவகைப்படுகிறது.

ஒரு மனிதனை அல்லது கொள்கையைத் தவறுகண்டபொழுது உண்மைநிலையினை வெளிக்காட்டுவதற்காக, நேரடியாக வசைபாடுவது நேரடி அங்கதத்தின் முதல்வகையாகும்.

நேரடி அங்கதத்தின் அடுத்த பிரிவாக 'மிகைப்படுத்தல்' (Exaggeration) அமைகிறது. இது ஒருவரது நற்குணங்களை விட்டு விட்டு, தீயகுணங்களையும், கேலிக்குரிய செயல்களையும் மிகைப்படுத்திக் கூறுவது ஆகும்.

மறைமுக அங்கதத்தில் குறையுடையவர்களின் கொள்கைகள் கேலி செய்யப்படுகின்றன. இவர்களது குறைகள் நேரடியாக அன்றி, மறைமுகமாகச் சுட்டிக் காட்டப்படுகின்றன. அவ்வாறு மறைமுகமாகச் சுட்டிக்காட்டுவதற்கு,

1. குறிப்புமுரண் (Irony)
2. நையாண்டி (Burlesque)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3. ஏளனம் (Travesty)

4. நையாண்டிப்போலி (Parody)

என்னும் உத்திகளைப் பயன்படுத்துவர்.

சமுதாய அங்கதம், அரசியல் அங்கதம், இலக்கிய அங்கதம், தனிமனித அங்கதம் என அங்கதம் பலவகைப்படும். இவற்றுள் தனிமனித அங்கதம் மிகவும் கீழ்த்தரமான அங்கதம் எனப்படும்.[58]

அங்கதத்தின் இயல்புகளாகப் பின்வருவனவற்றை ஹிகெட் கூறுவார்.

1. உண்மையைப் படம்பிடித்துக் காட்டும்.
2. சமகால நடப்பினை வெளிக்காட்டுவதாக அமையும்.
3. அதிர்ச்சி தரக்கூடியதாக அமையும்.
4. வேடிக்கை கலந்ததாக இருக்கும்.
5. அங்கத இலக்கியத்தில் அடுத்துவரும் நிகழ்ச்சிகளை முன்னரே உய்த்துணர முடியாததாக இருக்கும்.

அங்கதம் எழுதுவதற்கான காரணங்களாகப் பின்வருவனவற்றை ஹிகெட் காட்டுகிறார்.[60]

1. மற்றவர்களைவிடச் சமுதாயத்தின் மீது தீவிர வெறுப்புடையவராய் இருப்பது.
2. தான் மற்றவரைவிட ஒழுக்கத்திற் சிறந்தவனாக இருப்பதாக நினைப்பது.
3. சமுதாயத்தில் உள்ள தீமைகளின் மீதும், கொடுமைகளின் மீதும் வெறுப்புடையவனாக இருப்பது.
4. சமுதாயத்தில் உள்ள குறைகளை நீக்கவேண்டும் என்ற ஆவல் கொள்வது.
5. தனது பார்வைக்கு மட்டும் அக்கொடுமைகள் படுவதால், அவற்றை வெளிப்படுத்தவேண்டும் என்ற எண்ணம் உடையவனாக இருப்பது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அங்கதம் குற்றம் செய்தவனை எதிர்த்து வாதிடுவதாகவும், திருந்தவேண்டும் என்ற நோக்கமுடையதாகவும் அமையும். அங்கத உணர்வினை நகைச்சுவை, ஏளனம் பட எடுத்துரைக்க வேண்டும். அங்கதத்தில் கையாளப்படும் நகைச்சுவை, பொழுதுபோக்குக்காக இல்லாமல், குறைகளை வெளிப்படுத்திக் காட்டுவதற்காகவும், அவற்றைத் திருத்துவதற்காகவும் அமைந்திருத்தல் வேண்டும்.

ஆய்வு முடிவுகள்

அங்கதம் பற்றித் தொல்காப்பியர் கூறும் செய்திகளோடு, மேலைநாட்டார் கூறும் செய்திகளை ஒப்பிட்டால் பல ஒற்றுமைக் கூறுகளையும், வேற்றுமைக் கூறுகளையும் காணமுடிகிறது.

நேரடியாக வசைபாடுவதும், மறைமுகமாகக் கேலிசெய்வது மாகிய இரண்டு வகைகள் அங்கதத்தில் உண்டு என்பது இருபாலருக்கும் உடன்பட்ட கருத்தாகும். இதையே தொல்காப்பியர் செம்பொருள் அங்கதம், பழிகரப்பு அங்கதம் எனக் கூறுகிறார். மேலைநாட்டார் நேரடிஅங்கதம் (Direct Satire), மறைமுக அங்கதம் (Indirect Satire) என்று கூறுகின்றனர்.

மந்திரம் போலப் புனைவது பாட்டு, சிலநேரங்களில் பாடப் படுவோருக்குத் தீமையை விளைவிக்கும் என்னும் நிலை மேலைநாட்டாற்குரியது. தமிழ் நாட்டாரிடத்திலும் இது காணப்படுகிறது.

அவ்வாறே சில வேறுபாடுகளும் காணப்படுகின்றன. தொல்காப்பியர் கால இலக்கியம் பெரும்பாலும் மன்னரையே மையமாகக் கொண்டு எழுந்தவை. எனவே, மன்னர் தொடர்பான அங்கதத்திற்கே அங்கு வாய்ப்பு இருந்தது. ஆனால் மேலைநாட்டாரின் இலக்கியங்களில் மன்னர் மட்டுமன்றி, மக்கட் சமுதாயமும், தேவாலயங்களும் (Churches) பாடப்பட்ட காரணத்தால், அவர்கள் தொடர்பான சமுதாய அங்கதப் பாடல்கள் இருந்தன.

மேலைநாட்டு இலக்கியப் போக்கில் அங்கதம் சிறப்பிடம் வகித்த காரணத்தால், அது பல்வேறு வழிகளில் வளர்ச்சிபெற்று, பல்வேறு வகைகளாகப் பெருகியிருக்கக் காணலாம். ஆயினும், தமிழ் இலக்கியத்தைப் பொருத்தவரை, அங்கதத்தைப் பல்வேறு உத்திகளில் பயன்படுத்தும் முறையையோ, பல்வேறு வகையாக வளர்ந்த நிலையையோ காணமுடியவில்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அங்கதத்திற்குத் தொல்காப்பியர் கூறும் விளக்கத்திற்கேற்ற பொருத்தமான இலக்கியங்கள் தமிழிலக்கியத்தில் சரிவரக் கிடைக்கவில்லை. கிடைத்திருக்குமாயின், அங்கதம் பற்றிய தொல்காப்பியரது கோட்பாடுகளை இன்னும் விளக்கமாக நம்மால் புரிந்துகொண்டிருக்க முடியும். மேலைநாட்டார் கூட்டுறவுக்குப் பிறகு, தமிழிலக்கியத்தில் அங்கத உத்தியில் புதிய வேகமும், வளர்ச்சியும் காணப்படுகின்றன. இருப்பினும் தொல்காப்பியர் வகுத்த நெறியிலிருந்து அவர்கள் அதிகம் மாறிச்செல்லவில்லை என்பது குறிக்கத்தக்கது.

தமிழிலக்கியத்தைப் பொருத்தவரை அங்கதத்திற்கான இலக்கணம் காலந்தோறும் மாறுபட்டு வந்திருக்கக் காணுகிறோம். நேரடியாக வசைபாடுவதும், மறைமுகமாகக் கேலிசெய்வதும் அங்கதம் எனச் சங்க காலத்திலும், தனிப்பாடல்கள் காலத்திலும் கருதப்பட்டு வந்தது. ஆனால் இருபதாம் நூற்றாண்டு இலக்கியங்களில் நேரடியாக வசைபாடுவது அங்கதம் எனக் கருதப்படவில்லை. கேலிசெய்து சாடுவதே அங்கதம் என இன்று இலக்கணம் அமைந்துள்ளது. எனவே, அவ்வக் காலகட்டத்திற்கேற்ப இலக்கியங்களில் அங்கத இலக்கணத்தைப் பொருத்திப் பார்த்தல் அவசியமாகிறது.

இவ்வடிப்படையில், சங்க இலக்கியத்தைப் பொருத்தவரை,

1. நேரடிவசையாக அமைந்திருக்கலாம்.

2. குறிப்புமொழியால் கேலி செய்வதாக அமைந்திருக்கலாம்.

3. தவற்றை இடித்துரைப்பதாக அமைந்திருக்கலாம்.

4. தவற்றைத் திருத்தவேண்டும் என்ற நோக்கம் உடையதாக இருக்கலாம்.

5. அகப் பாடுபொருளைத் பொருத்தவரை உள்ளுறை, உவமை வாயிலாகவும் அங்கதம் அமையலாம் என்று வரையறை செய்யமுடிகிறது.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களைப் பொருத்தவரை,

1. நகைச்சுவையுடன் கூடிய எள்ளற் குறிப்பமைந்த, எதிர்மறைப் பொருள் தரக்கூடிய, தவற்றைச் சுட்டிக்காட்டித் திருத்த வேண்டும் என்ற நோக்கம் உடையவையாக இருக்கலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

2. நேரடியாக வசைபாடுவது, குறிப்பிட்ட மாந்தர்களைச் சுட்டிக்-காட்டிப் பாடாததால் அங்கதமாக எடுத்துக்கொள்ளப்பட-வில்லை என்ற வரையறையை அங்கதப் பாடல்களுக்கு அமைக்கலாம்.

இடைக்காலத் தனிப்பாடல்களைப் பொருத்தவரை,

1. நேரடியாகத் திட்டி வசைபாடுவதாக அமைந்திருக்கலாம்.

2. சாபமிட்டுப் பாடுவதாக இருக்கலாம்.

3. ஏளனம் செய்து, எள்ளி நகையாடிக் குறிப்பாகச் சாடுவதாக அமையலாம் என்பனவே அங்கத நெறிகளாகக் கூறப்படலாம்.

இக்கால இலக்கியங்களைக் காணும்போது,

1. வசைபாடுவதை அங்கதமாக ஏற்றுக்கொள்வதில்லை.

2 நகைச்சுவையோடு தீமைகளை, குறைகளைச் சாடித் திருத்த முற்படுகின்ற தன்மை கொண்டதாக இருக்கலாம்.

3. குறைகளைச் சுட்டிக்காட்டாது அமைகின்ற வெற்று நகைச் சுவை அங்கதமெனக் கொள்ளப்படமாட்டாது.

4. சமுதாயத்தில் எல்லாத் துறையைச் சார்ந்தவர்களையும் இம் முறையில் பாடலாம்.

5. எல்லாத் துறைகளும் சாடப்படலாம்.

6 புராணங்களை. புராணக் கருத்துக்களை அங்கதத்திற்கு அதிகம் பயன்படுத்தலாம் என்பனவே அங்கதத்திற்குரிய கோட்பாடுகளாகக் கொள்ளப்படுகின்றன.

இக்கால இலக்கியத்தில் சமுதாயமே கவிஞர்களது பாடு பொருளாக அமைவதைக் காணமுடிகிறது. மேலும், விடுதலை இயக்கம், பகுத்தறிவு இயக்கம், தனித்தமிழ் இயக்கம் போன்ற பொது மக்கள் இயக்கங்கள் கவிதையின் பாடுபொருளாக அமைந்தன. குறிப்பிட்ட மன்னன், வள்ளல், சமீன்தார் ஆகியோரது அவைக்களம் என்ற தமது குறுகிய எல்லையை விட்டுவிட்டு, சமுதாயம் என்ற பெரும்பரப்பில் கவிஞர்கள் தங்கள் களத்தை அமைத்துக்கொண்டனர். மேலும், அவர்கள் வெறும் கவிஞர்களாக நின்றுவிடாமல், சமுதாயச் சீர்திருத்தவாதிகளாகவும் செயல்பட்டனர். இவ்வாறு பாடுபொருளில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஏற்பட்ட மாற்றம், பரப்பளவில் ஏற்பட்ட மாற்றம் ஆகியவற்றால் அங்கதமும் தன் அமைப்பில் மாறியுள்ளது எனலாம். குறைகளை நேரே நின்று சினத்தோடு பாடுவது அங்கதம் என இன்று ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. அதே குறையை நகைச்சுவை கலந்து ஏளனப்படுத்தும்பொழுது அது அங்கதமாகிறது எனலாம்.

அவ்வாறே நீதிகளைப் போதிப்பது அங்கதமாக அன்றுமுதல் இன்றுவரை ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. எனவேதான், 'இதனைச் செய். இதனைச் செய்யாதே, என்று எடுத்துரைக்கும் நீதிநூல்களில் அங்கத இயல்பினை அதிகம் காண முடிவதில்லை.

பிற்கால அணியிலக்கண நூலார், அங்கதத்தினை அணிவகைகளில் ஒன்றாக நேரடியாகக் கொள்ளவில்லை. அதற்குப்பதில் 'இலேசவணி' 'மாறுபடுபுகழ் நிலையணி' என்னும் அணிகளில் அங்கதத்தின் உத்திகளை எடுத்து விளக்கக் காணுகிறோம். இலேசவணியின் உட்பிரிவுகளை விளக்கும்போது,

> ''புகழ்வது போலப் பழித்திறம் புனைதலும்
> பழிப்பது போலப் புகழ்புலப் படுத்தலும்
> அவையு மன்னதென் றறைகுந ருளரே''61

என்பார். இதில் புகழ்வது போலப் பழித்தல் என்பது அங்கத இலக்கணம் போன்று அமைந்துள்ளது. அவ்வாறே, மாறுபடு புகழ் நிலை என்னும் அணியினை விளக்கும்போது,

> ''கருதிய பொருடொகுத் தாங்கது பழித்தற்கு
> வேறொன்று புகழ்வது மாறுபடு புகழ்நிலை''62

என்று கூறுவார். இக்கருத்தும் அங்கத இலக்கணத்தோடு பொருந்தியிருக்கக் காணலாம்.

இதற்கு மாறாகப் புகழாப் புகழ்ச்சியும், வஞ்சப்புகழ்ச்சியும் ஒருவரைப் பழிப்பது போன்று பாராட்டுவதாக அமைந்துள்ளன. அவை அங்கத இலக்கணத்திற்குப் பொருந்தாது.

இவ்வணிகளும், இன்னும் பெரும்பாலான அணிகளும், தண்டியலங்கார ஆசிரியரால் கூறப்படினும் புலவர்களால் போற்றப்படவில்லை. எனவே, இலேசவணியும், மாறுபடு புகழ்நிலை அணியும் பெரிதும் போற்றப்படவில்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அங்கதம் என்ற இலக்கிய உத்தி நாவல், சிறுகதை, நாடகம், கவிதை, உரைநடை என்ற வெவ்வேறு இலக்கிய வகைகளில் பயன்படுத்தப்பட்டாலும், இங்குக் கவிதைகளிலமைந்த அங்கதம் மட்டுமே எடுத்து ஆராயப்படுகின்றது.

குறிப்புக்கள்

1. தொல். பொருள். இளம். நூ, 384.
2. மேலது, 467.
3. மேலது, 481.
4. மேலது, 429.
5. மேலது, 430.
6. மேலது. 431.
7. மேலது, 433.
8. மேலது, 434.
9. மேலது; 419.
10 தொல். பொருள். இளம். உரை, நூ, 433, 434, ப. 494.
11 மேலது, நூ, 481, ப. 522.
12 மேலது, நூ. 467, ப. 516.
13 தொல். பொருள். இளம். நூ, 433
14 தொல். பொருள். பேரா. உரை. நூ, 491, ப.392.
15 மேலது, நூ, 491, ப. 392.
16 மேலது, நூ, 491, ப. 393.
17 தொல். பொருள். பேரா. நூ, 490.
18 தொல். பொருள். பேரா, உரை. நூ, 490, ப. 392.
19 மேலது, நூ, 490, பக், 391—392.
20 மேலது, நூ, 490, ப. 391.
21 மேலது, நூ, 436, ப. 307.
22 மேலது, நூ, 437, பக். 307—308,
23 மேலது, நூ, 438, ப. 308.
24 மேலது, நூ, 438, ப. 309.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

25 தொல். பொருள். பேரா. நூ, 439.

26. மேலது, 440.

27. தொல். பொருள் பேரா. உரை. நூ, 440, ப. 310.

28. மேலது, நூ, 440, ப. 310.

29. மேலது. நூ. 441, ப. 311.

30. தொல். பொருள். செய். நச். உரை. நூ, 178, ப. 232.

31. மேலது, நூ, 124, ப. 150.

32. மேலது, நூ, 126, ப. 151.

33. மேலது. நூ. 128, ப. 152.

34. மேலது, நூ. 128, ப, 154.

35. மேல்து, நூ, 129, ப. 154.

36. It seems to have been part of the vocabulary of food''.
-Gilbert Highet, The Anatomy of Satire, P. 231.

37. ''Juvenal calls his satires by the name of another mixed food, farrago, a mishmash of grain given to cattle''.
– Ibid., P. 231.

38. ''A poem in which wickedness or folly is censured''.
- Arthur Pollard, Satire, P. 1.

39. Satire, Encyclopaedia Britannica - Vol.24. P.294.

40. Arthur Pollard, Satire, P.2.

41. ''The true end of Satire is the amendment of vices''.
– Dryden and Defoe quoted by Arthur Pollard, Satire, P.2.

42. Joseph T.Shipley, Dictionary of World Literary Terms, P. 286.

43. ''Satire is born of the instinct to protest, it is protest become Art''.
—Arthur Pollard, Satire, P. 9.

44. Satire, Encyclopaedia Britannica, P.294.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

45. "Satire is always conscious of difference of between what things are and what they ought to be".
—Arthur Pollard, Satire, P.2.

46 "A satirist is merely always a man who is abnormally sensitive to the gap between what might be and what is".
—James Sutherland, English Satire, P.4.

47. Ibid., P.11.

48. Satire, Encyclopaedia Britannica – Vol. 19, P.1086.

49. "Satire is a term more widely used than of these. It is an indispensable label not only for scenes and situations of private and public life, but essential for the characterisation of parts of almost every form of literary expression".
—G.L. Hendrickson, Satire, P.37.

50. "For the Greeks, Satire was not an independant literary form. This was a unique Roman invention".
—Michael Coffey, Roman Satire, P.3.

51. Gilbert Highet, Op. cit., P.29.

52. அ.அ மணவாளன், அரிஸ்டாடிலின் கவிதை இயல், ப.29.

53. Gilbert Highet, Op, cit., P.25.

54. அ.அ. மணவாளன், மு.நூ, பக். 111—112.

55. Gilbert Highet, Op. cit., P.35.

56. Arthur Pollard, Op. cit.. P.10.

57. R.J.Rees, English Literature, P.152.

58. S.H. Butcher (Tr.) Aristotle's Theory of Poetry and Fine Art, P.224.

59. Gilbert Highet, Op.cit., P.5.

60. Ibid., PP. 238-243.

61. தண்டியலங்காரம், நூ. 66.

62. மேலது, 83.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3. (அ) சங்கப் பாடல்களில் அங்கதம்

முன்னுரை

தொல்காப்பியர் அங்கதம் என்ற தனி இலக்கிய வகையைச் சிறப்பாகக் குறிப்பிட்டு, அதன் இலக்கணங்களையும் வகைகளையும் விளக்கியுள்ளார்.[1] ஆயின், சங்கப்பாடல்களில் அங்கதம் அந்த அளவுக்குச் செல்வாக்குடையதாகக் காணப்படவில்லை. சங்க இலக்கியப் பாடல்கள் பெரும்பாலும் மன்னனைச் சுற்றியமைந்த பாடல்களாகவும், காதலைப் பாடுபொருளாகக் கொண்ட பாடல்களாகவும் அமைந்துள்ளமையால் சமுதாய அங்கதமாகப் பாடல்களைக் காணமுடியவில்லை. மன்னன் தொடர்புடையதாகவும், காதல் தொடர்புடையதாகவும் அங்கதப் பாடல்கள் அமைந்திருப்பதைக் காணமுடிகிறது.

சங்க இலக்கியங்களாக இன்று கருதப்படுபவை பத்துப்பாட்டும் எட்டுத்தொகையுமாகும். எட்டுத்தொகைப் பாடல்களில் பதிற்றுப் பத்தும் புறநானூறும் புறப்பொருள் பற்றியதாகும். பரிபாடல் பக்தி பற்றியதாகவும், இயற்கை பற்றியதாகவும் அமைந்துள்ளது. ஏனைய குறுந்தொகை, நற்றிணை, ஐங்குறுநூறு, அகநானூறு, கலித்தொகை ஆகிய ஐந்தும் அகப்பொருள் பற்றியதாக அமைந்துள்ளன. நெடும் பாடல்களாக அமைந்து காதல் பற்றியதாகவும், ஆற்றுப்படை அமைப்பிலும் அமைந்தவை பத்துப்பாட்டாகும். தனிநிலைப் பாடலின் அமைப்பிலிருந்து, காப்பியத்தை நோக்கிய வளர்ச்சியில் இப்பாடல்கள் தோன்றியுள்ளன. எனினும பத்துப்பாட்டில் அங்கதக் குறிப்புக்களைக் காண்பது அரிதாக உள்ளது.

புறப்பொருளில் அமைந்துள்ள புறநானூறு, பதிற்றுப்பத்துப் பாடல்களில், பதிற்றுப்பத்து சேரமன்னர்களைப் போற்றிப் பாடும் பாடலாக அமைந்துள்ளமையால் அதில் அங்கதக் குறிப்பைக் காண இயலவில்லை. அதேசமயத்தில் மன்னனைப் போற்றிப் பாடுவது மட்டுமல்லாமல், வேறுபட்ட சில சூழல்களில் அவனோடு புலந்து பாடும் பாடல்களும், புறநானூற்றில் இடம்பெற்றுள்ளன. அத்தகைய பாடல்களில் அங்கதக் குறிப்புக்களைக் காணமுடிகிறது. அவ்வாறு புறநானூற்றில் அங்கதக் குறிப்போடு காணப்படும் பாடல்கள் பதினைந்து ஆகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அகப்பாடல்களில் அங்கதக் குறிப்புடையனவாகப் பாடும் சூழல் பெரும்பாலும் தலைவனது பரத்தமை ஒழுக்கம் பற்றியதே எனலாம். ஐந்து அகப்பொருள் தொகை நூல்களிலும் மொத்தம் 61 பாடல்களில் அங்கதக் குறிப்புக்களைக் காணமுடிகிறது. அப்-பாடல்கள் பின்வருமாறு அமைந்துள்ளன.

1.	மருதத்திணைக்குரியவை	... 40
2.	குறிஞ்சித்திணைக்குரியவை	... 10
3.	பாலைத்திணைக்குரியவை	... 6
4.	நெய்தல் திணைக்குரியவை	... 5
5.	முல்லைத்திணைக்குரியவை	... —
		61

இவ்வியல் புறப்பாடல்களிலும் அகப்பாடல்களிலும் அங்கதம் அமைந்த சூழலையும் முறைகளையும் விளக்கியமைகிறது.

புறப்பாடல்களில் அங்கதம்

புறப்பாடல்களாகச் சங்கப்பாடல்களில் நமக்குக் கிடைப்பன 400 பாடல்களடங்கிய புறநானூறும், நூறு பாடல்களடங்கிய பதிற்றுப்பத்துமாகும். பதிற்றுப்பத்தில் அங்கதக் குறிப்புக்கள் காணப்படவில்லை என முன்னரே விளக்கப்பட்டது பல்வேறு சூழல்-களில் மன்னரைப் போற்றியும், மன்னருக்கு அறிவுரை கூறியும் நீதியை வலியுறுத்தியும் பாடப்பட்ட பாடல்கள் அடங்கிய புற-நானூற்றில் மட்டுமே அங்கதக் குறிப்புடைய பாடல்கள் தோன்று-வதற்குச் சூழல் அமைந்துள்ளது. எனவே, புறநானூற்றில் மட்டும் அங்கதக் குறிப்பைக் காணுகிறோம். அங்கதக் குறிப்புடைய புறநானூற்றுப் பாடல்களின் பட்டியல் பின்னிணைப்பில் தரப்-பட்டுள்ளது.[2]

அங்கதக் குறிப்புடையனவாகப் பேராசிரியர், நச்சினார்க்-கினியர் ஆகிய உரையாசிரியர்கள் மேற்கோளாக எடுத்தாளும் பாடல்களும், திறனாய்வாளர் அங்கதம் எனக் குறித்துக் கூறும் பாடல்களும், பழைய உரைகாரர் தம் உரையில் குறிப்புமொழியாகக் குறித்துச் சொன்ன பாடல்களும் இங்கு அங்கதக் குறிப்புடைய பாடல்களாகக் கொள்ளப்பட்டுள்ளன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இப்பாடல்களைப் பார்க்கும்பொழுது, சங்கப்புறப் பாடல்களில் அங்கதக் குறிப்புத் தோன்றும் சூழல்களாக இரண்டினை நாம் காணலாம்.

1. புலவர்களைப் போற்றாது பரிசளிக்கக் காலம் தாழ்த்தியமை

2. மன்னர்கள் அரசியல் நெறியில் நின்று தவறியமை.

பரிசில் நீட்டித்தபோது பாடியமை

பரிசில் தொடர்புடைய பாடல்களாக அமைந்தவை 11 பாடல்களாகும்[3] அவை அனைத்தும் பாடாண்திணையில் அடங்கியவை. பரிசில் கடாநிலை, பரிசல்துறை, பரிசில் விடை ஆகிய துறைகளில் அப்பாடல்கள் அமைந்துள்ளன. புலவர்களுக்குப் பரிசில் அளிக்க அரசர்கள் காலம் நீட்டித்தபொழுது அரசர்களைப் பார்த்துப் பாடும் பாடல்களில் அங்கதக் குறிப்பு இருப்பதைக் காணலாம். சிலநேரங்களில், புலவரின் தகுதியினை அறியாது அரசன் சிறிதே கொடுத்த பொழுது பாடிய பாடலையும் காணமுடிகிறது. இப்பாடல்கள் அரசனைப் பார்த்து நேரடியாகவோ, குறிப்பு மொழியாகவோ, தன் நெஞ்சிற்குக் கூறும் முகமாகவோ அமைந்துள்ளன.

பரிசில் கடாநிலைத் துறையில் அமைந்த பாடல்கள்

பரிசில் நீட்டித்தபொழுது ஆவூர் மூலங்கிழார், பெருந்தலைச் சாத்தனார், பெருங்குன்றூர்க்கிழார் போன்ற புலவர்கள் பரிசில் கடாநிலைத் துறையில் பாடியுள்ளார்கள். பாண்டியன் இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நன்மாறன் பரிசில் நீட்டித்தபொழுது ஆவூர் மூலங்கிழார்,

'தம்மால் இயன்ற பொருளை மனம் விரும்பிக் கொடுத்தலும் அப்படித் தர இயலாதபோது இல்லையென்று கூறுதலும் தாளாண்மை உள்ளவர்பால் உளளன. இயலாததனை இயலும் என்றலும், இயன்றதனை இல்லை என மறுத்தலும், இரப்போரை மெலிவிப்பதன்றி, புரப்போரின் கொடைப்பண்பிற்கு இழுக்காகவும் அமைவதாம். நீ என்னிடம் செய்ததும் அவ்வாறே. வெயிலோ பனியோ எதனையும் பொருளாக்காது, கல்லாகிக் கரையாது நிற்கும் என் வறுமையோடு, கற்புடைய மனைவியின் நிலையை நினைந்து நான் போகிறேன். நின் வாழ்நாள் சிறப்பதாக! உன் புதல்வர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நோயற்று வாழ்வாராக!' என்று அங்கதக் குறிப்புப்படப் பாடுகிறார்.[4]

அரசன் பரிசில் நீட்டித்தபொழுது மனம் கவன்ற புலவர் அரசனின் தன்மையை எடுத்துக்கூறி, அவன் புகழ் குறையும்படியாக நடந்து கொள்கிறான் என்று விளக்கி, 'நோயிலராக நின்புதல்வர்' என்றும் 'சிறக்க நின்னாள்' என்றும் கூறுகிறார்.

இச்சொற்கள் குறிப்புமொழியாக அமைந்து எதிர்மறைப் பொருளைத் தருகின்றன.

நேரடி வசையாக அமையாது, குறிப்பாக மொழிந்து பழிகரப்பு அங்கதமாக இப்பாடல் அமைந்திருக்கிறது.

மூவன் எனும் மன்னனைப் பெருந்தலைச் சாத்தனார் காணச் சென்றார். ஆனால் மன்னனோ புலவர் பெருமையை உணராது, இகழவும் செய்தான். பரிசில் தருவதையும் நீட்டித்தான். இதனால் மனம் கவன்ற பெருந்தலைச் சாத்தனார்,

'நன்செய் வளம்மிக்க நன்னாட்டுக்குத் தலைவ! பெருமலை விடரகத்தில் நின்ற பழுமரம் பழுத்து மாறினால், அதனைச் சார்ந்து வாழ்ந்த புள்ளினம் செயலற்று வேறுமரம் நாடிச் செல்லும், அப்புள்ளினம் போல நின்னை நாடி வந்தேன், நான் வெறுங்கையுடன் செல்லவேண்டிய நிலையுடையவனாயினேன். நீ பரிசில் அளிக்காவிடில அது குறித்து வருந்துவேன் அல்லேன். நீ நோயின்றி வாழ்க. நான் நின்பால் வந்து வறிதுசெல்லும் செய்தி மகிழ்ந்திருக்கும் உனக்கு மிக நெருக்கமானவர் அன்றிப் பிறர் அறியாராக வேண்டும். அது உனக்கும் எனக்கும் நலம் தரும்' என்று பாடுகிறார்.[5]

இப்பாடலிலும் பரிசில் நீட்டித்த வழி மனம் கவன்ற புலவர், அரசனை நேரடியாகச் சாடாமல், குறிப்பாகச் சாடுவதைக் காணலாம். ''நோயிலை யாகுமதி பெரும!'' என்பது நீ நோயின்றிப் பலகாலம் இருப்பாயாக என்ற நேர்பொருளையுடைத்தாயினும், பரிசிலர்க்கு அளிக்காத அவன் நோயுடன் அழிவான் என்ற குறிப்புப் பொருளுடன் விளங்குகிறது.

தான் வறிதே திரும்புவதை மன்னனின் சுற்றத்தார் அறியாதிருக்க வேண்டும் என்று கூறுவது, தன் அரசனிடம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தருவதற்குப் பொருள் இல்லை; அரசன் வறியனாகிவிட்டான்; எனவே அவனிடம் நாம் இருத்தல் பயனில்லை என்று அவர்கள் கருதிச் சென்றுவிடக் கூடும் என்று மறைமுகமாக—குறிப்பாகக் கூறுகிறார்.

''பெருமலை விடரகஞ் சிலம்ப முன்னிப்
பழனுடைப் பெருமரந் தீர்ந்தெனக் கையற்றுப்
பெறாது பெயரும் புள்ளினம் போல''

என்ற உவமை இதனையே குறிப்பாகக் காட்டுகிறது.

சேரமான் குடக்கோச்சேரல் இரும்பொறையிடம் சென்று பாடிய பெருங்குன்றூர்க் கிழாருக்குப் பரிசில் தராது, நீட்டித்தபோது ஏமாற்றமும் வருத்தமும் கொண்டு புலவர் பாடுகிறார்.[6]

'உலக மக்களைப் பாதுகாக்கும் உனது உயர்வு நினையாமல் என்னிடம் அன்பில்லாதவனாகி விட்டாய். உன்னைப்போலும் மன்னர் உலகத்தில் இருந்தால் என்னைப்போலும் இரவலர் இவ்வுலகில் பிறக்கவே மாட்டார். வறுமை மிகுந்தாலும் என் மனைவி கற்பறம் தவறாது இருப்பாள். வறுமையில் ஒருகால் உயிரிழந்திருக்கக்கூடும் இறவாதிருந்தால் என்னை நினையாதிராள். நினைக்கும்போது தன்னைப் பிரிந்து வாழும் நான் இறந்து ஒழிந்தேனோ என நினைந்து 'என் உயிரும் ஒழிக' என வருந்தியுரைப்பாள். அவள் துன்பம் தீர்க்க யான் செய்வதறியாது செல்கிறேன். நீ வாழ்க' என்பது பாடற் கருத்து.

''மன்பதை காக்கும்நின் புரைமை நோக்காது
அன்புகண் மாறிய அறனில் காட்சியொடு
நும்ம னோரும் மற்று இனையர் ஆயின்
எம்மனோர் இவண் பிறவலர் மாதோ''

என்ற வரிகள் 'மக்களைக் காக்கும் நின்போல்பவரே இவ்வாறு அருள் மறந்தனீராயின் எம்போல் இரவலரே இனி இவ்வுலகில் பிறவாது ஒழிவாராக' என்று அரசன் கொடை வழங்க நீட்டித்த தன்மையைச் சுட்டிக்காட்டுகிறார். 'என் வறுமை என்னை விட்டு நீங்கப் போதலை-யொழியப் புலம்பை முந்துறுத்துக் கொண்டு போகா நின்றேன்' என்று புலவர் இரங்கிக் கூறுவதால் ''வாழியர் குருசில்'' என்பது நேரடியான பொருளைத் தராது எதிர்மறைப் பொருளைக் குறிப்பாக உணர்த்துவதைக் காணலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மற்றுமொரு பாடலில், பரிசில் நீட்டித்த சேரமான் குடக்கோச்சேரல் இரும்பொறையைப் பெருங்குன்றூர்க் கிழார்,

'நீ தரும் பரிசிலை விரும்பி வந்த பரிசிலருள் நானும் ஒருவன். என்னைச் சேர்ந்தார்க்கும் வீரர்க்கும் செய்யும் வள்ளன்மையையும் அன்பையும் கண்டு எனக்கும் வண்மை புரிகுவாய் எனக் கருதினேன். என்னை எதிர் ஏற்றுப் பரிசில் கொடாது மறுத்த பிறர் கொடுமை-யையும் கூறினேன். அதனைக் கேட்டும் நீ நினைத்ததையே செய்தாய். முதல்நாள், பரிசில் என் கையில் வந்துவிட்டது போன்-றே காட்டினாய். பின் அது பொய்யாகிப் போக, நான் வருந்திய வருத்தத்திற்கு நீ வெட்கப்படவில்லை. என் நாவால் உன் புகழை நீ வெட்கப்படும்படிப் பலமுறையும் பாடினேன். என் பாடுபுகழை நீ ஏற்றுக்கொண்டாய். உணவின்றி வருந்தி, எலிகள் மடிந்த வீட்டில், பால் காணாது பால் குடிப்பதையே நிறுத்திவிட்ட பிள்ளையுடன் என்னை எதிர்பார்த்து வாடி நிற்பாள் என் மனைவி. அவளை நோக்கிச் செல்கிறேன். உன் மார்பை வாழ்த்தியே செல்கிறேன். நீ வாழ்க' என்று அங்கதக் குறிப்பு அமையப்பாடுகிறார்.[7]

இப்பாடலில் புலவர் அரசனை வாழ்த்திய முறையில் இகழ்ச்-சிக் குறிப்பினைக் காணலாம்,

''நாணக் கூறியென்
நுணங்கு செந்நா வணங்க ஏத்திப்
பாடப்பாடப் பாடுபுகழ் கொண்டநின்
ஆடுகொள் வியன்மார்பு தொழுதனென் பழிச்சிச்
செல்வல் அத்தையானே''

என்ற வரிகளில் ''நாணுமாறு கூறிய புலவர் பின்பு ஏத்துதலும் பழிச்சுதலும் பிறவும் செய்திகள் அந்நாணத்தை மிகுதிப்படுத்து வதனால், அவை ஏத்துதல் முதலியன ஆகாது பழிப்பாதல் பற்றிக் குறிப்பு மொழியாகும்'' என்று உரை கூறுவார் ஔவை. துரைசாமி பிள்ளை.[8]

பரிசில் துறையில் அமைந்த பாடல்கள்

பரிசில் துறையில் பெருந்தலைச் சாத்தனார், ஔவையார், பெருஞ்சித்திரனார், கழைதின் யானையார் போன்ற புலவர்கள் பரிசில் நீட்டித்தபோது அங்கதக் குறிப்புப்படப் பாடுகின்றனர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெருந்தலைச் சாத்தனார் எனும் புலவர், கடிய நெடுவேட்டுவன் எனும் மன்னனைப் பரிசில் பெறக் காணச்சென்ற பொழுது அவன் பரிசில் நீட்டித்தவழி,

'மன்னனே! முடிவேந்தர்பால் சென்றால் அவர்கள் கொடையில் விருப்பின்றி, அது வேண்டிவரும் பரிசிலர்க்கு நீட்டித்துத் தருவது இயல்பு. அதனையறிந்தே எம்போலும் பரிசிலர் அவர் விருப்பின்றித் தருவதை விரும்புவதில்லை. உன்னிடம் வரும் பரிசிலர் கடலுக்குச் சென்ற முகில் நீரின்றிப் பெயர்ந்து செல்லாதது போலப் பரிசிலின்றிப் போவது கண்டிலேன். இன்று யான் பரிசிலின்றி வறிது செல்லுமாறு நீட்டித்தாய் யான் வருந்தும் மனத்தோடு செல்கின்றேன். ஆயினும் நீ வருத்தமின்றி வாழ்க' என்று பாடுகிறார்.[9]

இப்பாடலில் பரிசில் இன்றிச் செல்லும் சூழலில் பெருந்தச்ல சாத்தனார் ''நோயிலையாகுக'' என்று எதிர்மறைப் பொருளைத் தரும் படியான குறிப்புப்படப் பாடியிருப்பதனைக் காணலாம். 'களிறின்று பெயரல பரிசிலர் கடும்பே' என்ற புலவர் தனக்கு மட்டும் களிறு கிடைக்கவில்லை என்ற குறிப்பைக் காட்டுகிறார். ''நோன்சிலை வேட்டுவ'' என்றவர் நீ நீடு வாழ்க என்று வாழ்த்தாது ''நோயிலையாகுக'' என்றது, பரிசிலர் கடும்பு போலாது யான் களிறின்று பெயருமாறு விடுக்குமாற்றால் என் நெஞ்சு நோவச் செய்கின்றாய்; 'நோயெல்லாம் நோய்செய்தார் மேலவாம்' (குறள். 320) என்பவாகலின், நீ நோயுறாதொழிக என்று இகழ்ந்து கூறிய வாறாயிற்று' என்று ஔவை உரைவிளக்கம் தருவார்.[10]

ஔவையார் தகடூரை ஆண்டுவந்த அதியமான் நெடுமான் அஞ்சியைக் காணச்சென்றார். பலநாட்கள் அவன் அரண்மனையில் இருந்தும், புலவருக்குப் பரிசில் தந்து விடை தரவில்லை அதியமான். இதனால் மனம் உடைந்த நிலையில் ஔவையார் வாயிற்காவலனை நோக்கிப் பாடுகிறார்.[11]

'வாயிலோயே! வாயிலோயே! நீ எப்போதும் பரிசிலர் பரிசிற்கு வருந்தும் வாழ்க்கையுடையவர் என்பதறிந்து அவர்க்கு வாயிலை அடைப்பது இல்லை. ஆயினும் என்பொருட்டு வாயிலை அடைக்கிறாய். இது உன் செயலன்று என்பதை அறிவேன். உன் தலைவனான அதியமான் தன் தகவுடைமையை அறியானாக வேண்டும். அல்லது என் தரத்தை அறியானாக வேண்டும். நல்லோர் பலர் இறந்ததால் இவ்வுலகம் வறிதாகி விடவில்லை நாங்கள் எத்திசைச் சென்றாலும் அத்திசைச் சோறு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கிடைக்கும். சோறு ஒன்றே யான் வேண்டுவது என எண்ணி எனக்கு விடைதர நீட்டிப்பது விழுமிதன்று' என்பது பாடற்கருத்து.

இப்பாடலில் தனக்குப் பரிசில்தரக் காலம் நீட்டித்தபோது ஔவையார் சினந்து பாடுவதைக் காணமுடிகிறது. ''தன்னறியலன் கொல் என்னறியலன் கொல்'' என்று நேரடியாகவே வசைபாடுகிறார். ''அறிவும் புகழும் உடையோர் மாய்ந்தென வறுந்தலை உலகமும் அன்றே. அதனால் காவினெம் கலன், சுருக்கினெம் கலப்பை'' என்ற கூற்றில், ஔவையாரின் மிதமிஞ்சிய சினம் வெளிப்படுகிறது.

செம்பொருளாயின் வசையெனப் படுமே என்ற தொல்காப்பிய நூற்பாவின்படி இப்பாடல் செம்பொருள் அங்கதத்தின் பாற்படும் எனலாம்.

அதியமான் நெடுமான் அஞ்சியைப் பெருஞ்சித்திரனார் காணச் செல்கிறார். ஆனால் மன்னனோ புலவரை நேரில் காணாது, பிறர் மூலம் பரிசிலைத் தந்துவிடுகிறான். அப்பரிசிலைக் கொள்ளாது பெருஞ்சித்திரனார்,

'குன்றுகளையும் மலைகளையும் கடந்து நெடுவழி நடந்து பரிசில் ஒன்றே கருதி யான் இங்கே வந்துள்ளேன் என்பதை இக்கொடை வள்ளல் எங்ஙனம் அறிந்தான்? வருக எனல் வேண்டும் வரிசையுடையேனாகிய என்னைக் கண்ணால் காணாமல் தரும் இப்பரிசிலை ஏற்றுக்கொள்ள யான் ஒரு வாணிகப் பரிசிலன் அல்லன். என்னை விரும்பி வருக என எதிர்கொண்டு என் புலமையைக் கண்டு, எனக்குத் தரும் பரிசில் மிகச்சிறியதாயினும் அது மிகவும் இன்பம் தருவதாகும்' என்று பாடுகிறார்.[12]

இப்பாடல் புலவரின் பெருமித உள்ளத்தைக் காட்டினாலும், அரசனது குறையைச் சுட்டிக்காட்டி, அரசன் அக்குறையினை நீக்கிக்கொள்ளவேண்டும் என்ற கருத்துப்பட இருப்பதைக் காணலாம். அரசனது கடமை புலவரை வரவேற்று, வரிசையறிந்து தரல்வேண்டும் என்பது. ''பேணித் தினையனைத்தாயினும் இனிது அவர் துணையளவறிந்து நல்கினர் விடினே'' என்று அரசனது குறையைச் சுட்டுகிறார். ''காணாது ஈத்த இப்பொருட்கு யானோர் வாணிகப் பரிசிலன் அல்லேன்'' என்பது அரசன் தன்னைப் பரிசின்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மேல் கருத்துச் செலுத்தும் புலவன் என்று கருதினன் போலும் என நினைந்து வருந்திய தன்மையைக் காட்டுகிறது.

பெருஞ்சித்திரனார் எனும் புலவர் வெளிமான் எனும் மன்னனைக் காணச் சென்றார். சிறந்த கொடையாளியாகிய மன்னன் துஞ்சும் நிலையில் இருந்தான். அந்நிலையிலும் தனது இளவலாகிய இளவெளிமானிடம் புலவருக்குப் பரிசில் அளிக்கச் சொல்லிவிட்டுத் துஞ்சினான். ஆயின் இளவெளிமானோ, புலவரை அறியாதான் போல் இருந்ததுடன் சிறிதே பொருள் கொடுத்தான். இதனால் வெகுண்ட புலவர் தன் நெஞ்சிற்கு உரைப்பது போன்று பாடுகிறார்.[13]

'எழுக நெஞ்சமே! யாம் செல்வோம். அருகில் இருப்ப இரு கண்களால் கண்டு வைத்தும் காணார் போல முகம் கசந்து தரும் பரிசில் பெரிதாயினும், தாளாளர் விரும்பார். வருக என்று வரவேற்றுத் தருவது சிறிதாயினும் ஏற்பர். அதுவே நம் வரிசைக்கும் தகுதி. நமக்கு உலகம் பெரிது. நம்மை விரும்பியேற்றுப் பேணுவோரும் பலர். நீ உள்ளம் உடையற்க. வேறிடம் செல்வோம்' என்பது பாடலின் கருத்து.

தன் வரிசையறிந்து பரிசில் தராததுடன், நேரடியாக அழைத்துக் கண்டும் காணாதவர் போலக் கொடுப்பது புலவரை இகழ்வதற்கு ஒப்பாகும் என்று சினத்துடன் தன்னை மதிக்காத இளவெளிமானை இகழ்ந்து பாடுகிறார்.

'இளவெளிமானைத் தவிர வேறு யாரும் எம்மை ஆதரிப்பார் இல்லெனக் கருதற்க' என்ற குறிப்புப்பொருள் தோன்றப் ''பெரிதே உலகம் பேணுநர் பலரே'' என்று புலவர் கூறியிருப்பதும் கருதத்தக்கது.

வல்வில் ஓரியைக் காணச்சென்ற கழைதின் யானையார் என்னும் புலவர், பரிசில் அளிப்போர்க்கும் பெறுவோர்க்கும் உள்ள உயர்வு தாழ்வுகளைக் காட்டி, ஈவோர் ஈயேன் என்பதால் ஏற்போரினும் இழிந்தவராவர் என்றும், ஏற்போர் கொள்ளேன் என்பதால் ஈவோரினும் உயர்ந்தவராவர் என்றும் விளக்குகிறார். உண்ணும் நீர்நிலை வற்றிச் சேறுபட்டதாயினும் அதனைப் பலரும் நாடிச் செல்வர். அதுபோல வரையா ஈகையுடையோரை நாடிப் பலரும் வருவர். வருவோர் தாம் வேண்டியதைப் பெறாவிட்டாலும்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நம்மை நொந்து கொள்வதன்றிக் கொடாதவரை நோவார். அதனால் நீ எனக்கு இன்னையாயினும் வெறேன் என்கிறார்.[14]

"தெண்ணீர்ப் பரப்பின் இமிழ்திரைப் பெருங்கடல் உண்ணாராகுப நீர் வேட்டோரே" என்ற அடிகள் நின் செல்வம் கடல்போல் பெரிதேனும் பிறர்க்கு இனிதாய் நுகரப்படாது என்ற குறிப்பைக் காட்டி, கடல்நீரின் உவர்ப்பினால் பயனில்லை என்பது போலப் பிறர்க்கு ஈயாதான் செல்வம் மிகுதியாக இருப்பினும் பயனில்லை என்று வசைபடக் கூறியிருப்பதைக் காணலாம். தொல்காப்பியச் செய்யுளியல் சூத்திரத்திற்கு உரை எழுதும் நச்சினார்க்கினியரும் இவ்வடிகளை மேற்கோள் காட்டி, "ஈயென விரத்தலென்னும் புறப்பாட்டினுள், தெண்ணீர் ..... வேட்டோரே என்றவழி, நின் செல்வம் கடல்போல் பெரிதேனும் பிறர்க்கு இனிதாய் நுகரப்படாதென வசையைச் செம்பொருளாகாமற் கூறியவாறு காண்க" என்கிறார்.[15] இதன்படி இப்பாடலில் வசையை நேரடியாகக் கூறாமல், மறைமுகமாக — குறிப்பாக — எடுத்துக்காட்டியிருப்பதால் இது பழிகரப்பு அங்கதத்தின் பாற்படும் என்ற கருத்தையுடையவராக நச்சினார்க்கினியர் இருந்திருக்கக் கூடும்.

வல்வில்ஓரி பரிசில் அளிக்க நீட்டித்தமையால், அவனை நேரடியாக வசைபாடாமல் குறிப்பாகக் கூறுகிறார். "விசும்பிற் கருவி வானம்போல வரையாது சுரக்கும் வள்ளியோய் நின்னே" என்ற அடிகளும் இவ்வாறு குறிப்பு மொழியாக இகழ்வதாகும். மழை வரையாது கொடுப்பது போன்று நீ தரவில்லை என்ற எதிர்மறைப் பொருளைக் காட்டி அங்கதமாக உணர்த்துவதைக் காணலாம்.

வேண்டுகோள் மறுக்கப்பட்டபோது அமைந்த பாடல்

புலவர்கள் அரசர்களிடம் சிலசமயம் சில வேண்டுகோள்களை விடுக்கக்கூடும். அவ்வேண்டுகோள்களுக்கு அரசன் செவிசாய்க்காவிடில் புலவர்கள் வருத்தப்படுவர். அத்தகைய சூழலில், தான் வேண்டிய சரியான வேண்டுகோளை மறுக்கும் அவ்வரசர்கள் மீது அங்கதக் குறிப்புப்படப் பாடல்களைப் பாடுவர். இவ்வகையில் ஒரு பாடல் புறநானூற்றில் காணப்படுகிறது.

இருங்கோவேள் என்னும் மன்னனிடம் சென்ற கபிலர், பாரியின் மகளிரை மணம் புரிந்துகொள்ளும்படி வேண்டினார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆனால் கபிலரின் வேண்டுகோளை இருங்கோவேள் மறுத்துவிட்டான்.

'அரசனே! உனது நாட்டில் பொன் வளம் சிறந்து, சிற்றரையம் பேரரையம் என்று இருபகுதியாக விளங்கிய மூதூர் இன்று அழிந்து கிடக்கிறது. அதற்கான காரணம் உனது முன்னோருள் உன்னைப் போல் அறிவுடைய ஒருவன் கழாஅத்தலையாரை இகழ்ந்தான். அவ்விகழ்ச்சி பொறாது புலவரும் சினந்து பாடியதின் விளைவுதான் மூதூர் அழிந்தது. நான் அழைத்து வந்துள்ள இப்பெண்கள் எவ்வி குடியில் பிறந்த பாரியின் மகளிர் என்று கூறியும், இச்சொற்கள் புன் சொல் என எள்ளி என்னை இகழ்ந்தாய். நான் கூறியதனைப் பொறுத்துக் கொள்க. நான் விடைபெறுகிறேன். உன் வேல் வெற்றி பெறட்டும்' என்று கபிலர் பாடுகிறார்.[16]

இப்பாடலில் காணப்படும் சில அடிகள் குறிப்புமொழியாக அமைந்து அங்கதமாக இருப்பதைக் காணலாம்.

கழாஅத்தலையார் எனும் புலவரை இருங்கோவேளின் முன்னோருள் ஒருவன இகழ்ந்தான். புலவரை இகழ்ந்த ஒருவன் அறிவுடையனாக இருத்தல் இயலாது. இங்குக் கபிலர், அவனை அறிவுடையவன் என்று எதிர்மறைப் பொருள் தரும் குறிப்புடன் சொல்வதுடன் மட்டும் அல்லாது 'கழாஅத் தலையார் என்ற புலவரை இகழ்ந்தமையால் உனது முன்னோரும் அறிவற்றவர் என்பதை ''நும்போல் அறிவின்'' என்று கூறி இருங்கோவேளிற்கும் அறிவு மங்கி விட்டது என்பதைக் குறிப்பாகக் காட்டுகிறார்.

'கழாஅத் தலையாரை இகழ்ந்தமையால் உனது அரையத்துக்குக் கேடு விளைந்தது' என்று கூறி, 'என்னை இகழ்வதாலும் உனக்குக் கேடுவரும்' என்று குறிப்பாகக் கூறுவதைக் காணலாம்

'நுந்தை தாய நிறைவுற வெய்திய' என்றமை இருங்கோவேள் தானாக முயன்று தன் ஆற்றலால் நாட்டைப் பெருக்கவில்லை; அவனது முந்தையோரிடமிருந்து பெற்ற நாடுதான் என்ற குறிப்பினையும் உணர்த்தி நிற்கிறது.

''வெலீஇயர் நின்வேல்'' என்பதும் குறிப்புமொழியாக அமைந்து, நின் வேல் வெற்றி பெறுக என்ற நேர்பொருளுக்கு எதிர்மறையான பொருளைத் தருகிறது. ''எழுத்தொடும் சொல்லொடும் புண

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ராதாகிப் பொருட் புறத்ததுவே குறிப்புமொழி என்ப''[17] என்ற நூற்பாவின்படி இச்சொற்கள் அமைத்திருப்பதையும் காணலாம்.

'' ..... அடுக்கத்து
அருர்பு அற மலர்ந்த கருங்கால் வேங்கை
மாத்தகட்டு ஒள்வீதாய துறுகல்
இரும்புலி வரிப்புறம் கடுக்கும்
பெருங்கல் வைப்பின் நாடு கிழவோயே''

என்ற அடிகள் வேங்கை மலர்கள் வேங்கைபோலக் காட்சியளிப்பது ஏதம் செய்யாத ஒன்று ஏதம் செய்வது போலக் கண்டார்க்கு அச்சம் தரத் தோன்றுகிறது என்ற இகழ்ச்சிக் குறிப்பினை உணர்த்தி நிற்பதைக் காணலாம்.

பரிசில் விடைத்துறையில் அமைந்த பாடல்

சங்கப்புலவர்கள் செப்மாந்த நோக்குடையவர்கள். பெருமிதர் மிக்கவர்கள். தங்கள் புகழுக்கு ஊறு நேர்ந்தால், தங்களை அரசன் மதிக்காவிட்டால், தங்களது பெருமை அறிந்து பரிசில் தராவிட்டால் புலவர்கள் கோபம் அடைவர். அத்தகைய சூழலிலும் அங்கதக் குறிப்புப்படப் பாடல்கள் அமைகின்றன. புறநானூற்றில் அத்தகைய சூழலில் அங்கதக் குறிப்புப்படப் பாடப்பட்ட ஒரு பாடலைக் காணலாம்.

பெருஞ்சித்திரனார் வெளிமானிடம் பரிசில் வேண்டிச்சென்றார் வெளிமான் துஞ்சுகின்ற வேளையாதலின் தனது தம்பியைப் பரிசில் வழங்குமாறு பணிக்கிறான். இளவெளிமானோ புலவரின் தகுதியறியாது சிறிது பொருளை வழங்குகின்றான். அது பெறாத புலவர், குமணனைப் பாடி, யானை பெற்று, இளவெளிமானின் காவல் மரத்தில் கட்டி.

'இரப்போர்க்கு ஈந்து பாதுகாப்பாய் நீயுமல்லை; புரப்போர் இரப்போர்க்கு இல்லையுமல்லர். இனி இரப்போர் உண்டாதலையும் காண்க. உன்னுடைய ஊரின்கண் காவலையுடைய மரம் வருந்தக் கொண்டுவந்து யான் கட்டிய யானை எனது பரிசில். இனி யான் போவேன்' என்று பாடுகிறார்.[18]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இப்பாடலில் ''இரவலர் புரவலை நீயும் அல்லை; புரவலர் இரவலர்க்கு இல்லையும் அல்லர்'' என்று புலவர் இளவெளிமானை நேரடியாகக் கடிந்து மொழிவதைக் காணலாம்.

புலவரை வரவேற்று, தகுதியான பரிசில் அரசன் தராதபோது' புலவர் அரசனைக் கடிந்து இகழ்ந்துபேசுவது வழக்கமாகக்காணப்-படுகிறது. ''நின் ஊர்க் கடிமரம் வருந்தத் தந்து யாம் பிணித்த நெடு நல் யானை எம் பரிசில்'' என்று அரசனுக்கே புலவர் பரிசில் அளிப்பது, அரசனது தவறைச் சுட்டிக்காட்டி, இனிமேலாவது திருந்தட்டும் என்பதை உணர்த்துவதற்காகவே என்பதைக் காணலாம்.

இதுவரை ஆராயப்பட்ட 11 பாடல்களிலும் புலவர்களைப் போற்றாது பரிசளிக்கக் காலம் தாழ்த்திய சூழலில் அப்புலவர்கள் குறிப்பாகவோ, நேரடியாகவோ அங்கதக் குறிப்புத் தோன்றப் பாடி-யிருப்பதைக் காணலாம்.

மன்னர்கள் அரசியல் நெறியில் நின்று தவறியமை

மன்னர்கள் அரசியல் நெறியினின்று பிறழ்ந்து தவறு செய்த பொழுதும் புலவர்கள் அவர்களைத் திருத்துவதற்காக அங்கதக் குறிப்புப்படப் பாடியுள்ளார்கள்.

புலவரை ஒற்றன் என்று கருதிக் கொல்ல நினைத்த அரசனை நெறிப்படுத்துவதற்காகவும்,தமது படைக் கருவிகள்தான் சிறந்தவை, மாற்றார் படைக் கருவிகள் சிறந்தவை அல்ல என்ற எண்ணம் கொண்டிருக்கும் பொழுதும், அரசனைக் குத்திக்காட்டுவதற்காகவும் பாடல்கள் பாடியுள்ளனர்.

சோழன் நலங்கிள்ளியுழை நின்று உறையூர் புகுந்த இளந்தத் தன் என்னும் புலவனைக் காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி ஒற்றி வந்தான் என்று சொல்லப் புக்குழிக் கோவூர்கிழார் பாடி உய்யக் கொண்ட பாடலில் அங்கதக் குறிப்பு இருப்பதைக் காணலாம்.[19]

'பழமரம் நாடிச் செல்வன பறவை இனம். அதுபோல அரிய வழிகள் பலவும் கடந்து பரிசளிப்போரை நாடிச் செல்வோர் பரி-சிலர்கள். தம் திறமைக்கு ஏற்பப்பாடிப் பெறும் பரிசால் மகிழ்வர். அதனால் தம் சுற்றத்தையும் காத்துக்கொள்வர். பொருளைப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாதுகாத்து வைத்துக் கொள்வது இவர் இயல்பில்லை. தாமும் உண்டு, பிறர்க்கும் தந்து மனம் மகிழ்பவர் இவர். தம்மைப் புரப்போரால் பெறும் சிறப்புக்காக வருந்தி நாளும் அலைவதே இவர்தம் வாழ்வின் தன்மை. பிறருக்குக் கொடுமை செய்ய அறிந்தவர் இல்லை இவர். கல்வியால் தம்மோடு மலைந்தவரை, அவர் நாண, வென்று செம்மாந்து நடந்து அவ்விடத்தில் இனிதாக உறைவர். எனவே ஓங்கு புகழுடன் நிலம் ஆளும் நும்போன்ற சீரும் உடையோர் இவர்' என்பது இளந்தத்தன் என்ற புலவரைக் கோவூர்கிழார் இறப்பிலிருந்து காக்கப்பாடிய பாடல். தொல்காப்பியச் செய்யுளியல் 128 ம் நூற்பாவிற்கு உரை எழுதும் நச்சினார்க்கினியர் ''வள்ளியோர்ப் படர்ந்து... செம்மலுமுடைத்தே, இது சோழன் நலங்கிள்ளியுழை நின்று உறையூர் புக்க இளந்தத்தன் என்னும் புலவனைக் காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி ஒற்று வந்தானென்று கொல்லப்புக்குழி அவ்வரசர்க்கு வருகின்ற துகளினைக் கோவூர்கிழார் புலப்படாமற் செய்யுள் செய்து, தமது சொல்லை அரசன் கேட்டு அஞ்சினான் என்னும் பொருளை நிறுத்துதலிற் பழிகரப்புச் செவியுறை அங்கதமாயிற்று'' என்று குறிப்பிடுகிறார்.[20]

இதன் மூலம் புலவர் பெருமையைக் கூறி, அதன் மூலமாக அவர் குற்றமற்றவர்—ஒற்றரல்லர் என்று சுட்டி அரசனைத் திருத்திய தன்மையை அறியலாகையால் இது பழிகரப்புச் செவியுறை அங்கதமாயிற்று. அரசனுக்கு அறிவுரை கூறுவது போன்று அமைந்திருப்பதையும் காணலாம்.

அதியமான் நெடுமானதுஞ்சியின் தூதாகத் தொண்டைமானிடம் சென்ற ஔவையாருக்கு அவன் தன் படைக்கலக் கொட்டிலைக் காட்டியபோது,

'இப்படைக் கொட்டிலில் அனைத்துக் கருவிகளும் பீலி அணிந்து, மாலைசூட்டி, அழகுடன் நெய்பூசப்பட்டுக் காவலையுடைய உன் அரண்மனையிலே உள்ளன. உண்டானால் உணவு அளித்தும்; இல்லையானால் உள்ளதைப் பகிர்ந்தும் மகிழும் வறியோர் தலைவனான எம் வேந்தன் அஞ்சியின் வேல்களோ பகைவரைக் குத்துதலால் நுனி முரிந்தனவாகக் கொல்லன் உலைக்களத்தில் கிடக்கின்றன' என்று பாடுகிறார்.[21]

இப்பாடல் பழிகரப்பங்கதத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது. ஔவையார் தொண்டைமானின் படைக்கருவிகளைப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

புகழ்வது போலப் புகழ்ந்து, அவனது போர்த்திறமையின்மையை, போர்க்களம் செல்லாதிருக்கும் தன்மையைச் சாடுகிறார். அதே நேரத்தில், அஞ்சி படைப் பயிற்சிமிக்கவன் என்பதையும், அடிக்கடி போர்க்களம் செல்வதால் அவன் போர்க்கருவிகள் மழுங்கி எப்பொழுதும் கொல்லன் உலைக்களத்திலேயே கிடப்பதையும் காட்டுகிறார். இப்பாடலில் ''இவ்வே பீலி அணிந்து மாலை சூட்டிக் கண்திரள் நோன்காழ் திருத்தி நெய்அணிந்து கடியுடை வியன்நகர்'' என்ற வரிகள் அங்கதக் குறிப்புடன் அமைந்திருப்பதைக் காணலாம்

இப்பாடலைத் திறனாய்வாளர்களும் அங்கதத்திற்கு எடுத்துக் காட்டாகக் காட்டியுள்ளனர் பண்டிதமணி கதிரேசச் செட்டியார் தம் உரைநடைக்கோவை எனும் நூலுள் ''சங்ககாலத்து அங்கதம்'' எனும் கட்டுரையில் இப்பாடலை அங்கதத்திற்குக் காட்டாகக் காட்டி, தொண்டைமான் ஆயுதங்களைப் புகழ்ந்து கூறுதல் போலப் பழித்து அவன் வசையைக் குறிப்பிற் கூறிச் செருக்கொழியச் செய்ய இப்பாடல் உதவிற்று என்று குறிப்பிடுகிறார்.[22] இதே பாடலை இளநகை அரும்ப, மென்மையாகத் தாக்கும் நயமான அங்கதம் என்று கூறுவார் தமிழண்ணல்.[23]

பேராசிரியராலும், நச்சினார்க்கினியராலும் பழிகரப்பு அங்கதம், செம்பொருள் செவியுறை அங்கதம் என்பனவற்றிற்குப் பின்வரும் பாடல்கள் எடுத்துக்காட்டுப் பாடல்களாகத் தரப்பட்டுள்ளன,

சேரன் மாந்தரஞ்சேரல் இரும்பொறையைப் பொருந்தில் இளங்கீரனார் பாடிய பாடல்,

'சிப்பி முத்துப் போன்ற வெண்மணல் நிறைந்த கடற்கரையருகே மாடத்தின் மேல் இளமகளிர் தெற்றியாடிக் கொண்டிருப்பர். அத்தகைய விளங்கிலைப் பகைவர் சூழ, அவரை வென்று அதன் துயரைத் தீர்த்தாய். யானைப்படையும், குதிரைப்படையும் கொண்டோனே! உன் புகழை விரித்தும் சொல்ல முடியவில்லை; தொகுத்தும் சொல்லஇயலவில்லை.அதனால் மயங்கிய நெஞ்சினனான எனக்கு நின்னை வாழ்த்தவும் முடியாது. 'கல்வி சிறந்தோர் பிறந்த இந்நாட்டில், நாமும் வாழோம்' என்று போய்விடவும் கூடாது. 'பல பொருள்களையும் அடக்கிய செய்யுட்களை விரைந்து பாடும், செந்நாவும் அறிவும் விளங்கிய புகழும் உடைய கபிலன் இன்றிருந்தால் நல்லது' என்று நீ சொன்னாய். நன்று! அவரில்லாத-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தால் உன் பகைவரை வெற்றிகொண்ட சிறப்பை என்னால் இயன்றவரை நானே பாடுவேன்! என்றமைந்துளது.[24]

இப்பாடலில் ''கபிலன் இன்று ளனாயின் நன்றுமன் என்ற நின் ஆடுகொள் வரிசைக்கு ஒப்பப் பாடுவன் மன்னால் பகைவரைக் கடப்பே'' என்ற வரிகள் பேராசிரியரால் பழிகரப்பு அங்கதத்திற்கு மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளது.

வெள்ளைக்குடி நாகனார் பாடிப் பழம்செய்க்கடன் வீடு கொண்டதாக ஒரு பாடல் அமைந்துள்ளது. புலவர் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனது ஆட்சிச் சிறப்பையும், நாட்டின் பெருமையையும் பெண்கொற்றக்குடையின் சிறப்பையும் எடுத்துச்சொல்லி 'மாரி பெய்யாவிட்டாலும், வளம் பெருகாவிட்டாலும், இயற்கைக்கு மாறான செயற்கையில் துன்பங்கள் தோன்றினாலும் மன்னனையே இந்த ஞாலம் பழிக்கும். எனவே உழவர்கள் நலத்தைப் பாதுகாத்தால் உன் பகைவர் உனக்கு அடங்கி நடப்பர்' என்று அறிவுரை கூறுகிறார்.[25]

இப்பாடலை நச்சினார்க்கினியர் செம்பொருட் செவியுறை அங்கதத்திற்குச் சான்றாகக் காட்டி,

''நளியிரு முந்நீர்.....அடங்காதோரே – இது இஞ்ஞாலம் இயற்கையல்லது தமது செயற்கையிற்றோன்றினும் காவலனைப் பழிக்கும்; இதனையு முணராதே நீ வேற்றரசர்க்குப் பெறுதற்கரிதாகிய சிறந்த நாட்டினை நினதாகப் பெற்று வைத்தும் அதனை யழிக்கின்றது நினக்கு அரசியலன்றென்று அவனாட்டை யழித்தமை கூறுதலில், துகளொடு புணர்வும், குடிபுறந்தாரின் நினக்குச் செல்வம் முதலிய சிறத்தலிற் பகைவர் நின்னை வணங்குவரெனப் பொருளொடு புணர்வும் வெளிப்படக் கூறலிற் செம்பொருட் செவியுறை அங்கதமாயிற்று'' என்று விளக்குகிறார்.[26]

இப்பாடலில் அரசன் நெறிமாறிச் செல்கின்ற தன்மையையும், அவன் நடக்கவேண்டிய நெறியினையும் வெளிப்பட எடுத்துரைப்பதால் இது செம்பொருட் செவியுறை அங்கதம் என்று நச்சினார்க்கினியர் கருதுகிறார் என்பது மேற்கூறிய செய்தியால் விளங்கும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அகப்பாடல்களில் அங்கதம்

சங்கப்பாடல்களில் காதல் தொடர்புடைய பாடல்களே பேரிடம் பெறுகின்றன. அவை பெரும்பாலும் தலைவி, தோழி, தலைவன், தாய், பாங்கன், பரத்தை முதலான பல்வேறு அகத்திணை மாந்தர் கூற்றுக்களாகவே அமைந்துள்ளன. அகப்பொருட் பாடல்களில் தலைவனது பரத்தமை ஒழுக்கமே அங்கதத்திற்கேற்ற களமாகப் பெரும்பான்மை அமைந்துள்ளது. களவொழுக்கத்தின் பொழுதும், தலைவன் பிரிவின்பொழுதும் இத்தகைய அங்கதக் குறிப்புக்கள் இடம்பெற்றுள்ளன. சங்க அக இலக்கியத்தொகை நூல்களில் காணப்படும் அங்கதக் குறிப்புடைய பாடல்கள் மொத்தம் 61 என்பதன் பட்டியல் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளது. இப்பாடல்கள் முறையே

1.	நற்றிணை	... 15
2.	குறுந்தொகை	... 12
3.	ஐங்குறுநூறு	... 11
4.	கலித்தொகை	... 7
5.	அகநானூறு	... 16
		———
என்று அமைந்துள்ளன.		61
		———

இப்பகுதியில் திணைவாரியாகப் பாடல்களைப் பிரித்து, கூற்றக்கள் வாரியாக அங்கதக் குறிப்புக்கள் அமைந்துள்ள முறை விளக்கப்படுகிறது.

மருதத்திணைப் பாடல்களில் அங்கதம்

மருதத்திணைப் பாடல்களில் நாற்பது பாடல்கள் அங்கதக் குறிப்புடையனவாக அமைந்துள்ளன. அவை தலைவி கூற்றிலும், தோழி கூற்றிலும், பரத்தை கூற்றிலும் அமைந்துள்ளன.

தலைவி கூற்றில் அங்கதம்

மருதத்திணைப் பாடல்களில் தலைவி கூற்றாக அமைந்த 18 பாடல்கள் அங்கதக் குறிப்பினைக் கொண்ட பாடல்களாக இருக்கின்றன. தலைவி 1) தோழியிடமோ, 2) தலைவனிடமோ, 3) பாணனிடமோ பேசுகின்ற முறையில் இவை அமைந்துள்ளன. தோழி-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யிடம் பேசுகின்ற முறையில் இரு பாடல்களும்,[27] தலைவனிடம் பேசுகின்ற முறையில் 14 பாடல்களும்,[28] பாணனிடம் பேசுகின்ற முறையில் இரு பாடல்களும் உள்ளன.[29]

இப்பாடல்கள் அனைத்தும்,

1. தலைவன் பரத்தை இல்லம் சென்று திரும்பிவந்தபோதும்
2. அவன் வாயில்வேண்டித் தோழியையும், பாணனையும் அனுப்பியபோதும் பாடப்பட்டவை ஆகும்.

இப்பாடல்கள் அனைத்திலும் தலைவனின் பரத்தமைய எள்ளி நகையாடுவதிலும், தலைவன் பொய் கூறும்போது அவனது பொய்யைத் தான் அறிந்து கொண்டதாகக் காட்டுவதிலும் அங்கதக் குறிப்புக்கள் உள்ளன. மூன்று பாடல்களில்[30] அங்கதம் உள்ளுறையாக வெளிப்படுத்தப்படுகிறது.

தலைவி தோழியிடம் பேசும் பேச்சில் அங்கதம்

தலைவி தோழியிடம் பேசுவதாக அங்கதக் குறிப்புடைய பாடல்கள் இரண்டு மட்டுமே காணப்படுகின்றன. அவை வாயில் மறுத்த சூழலில் காணப்படுகின்றன.

பரத்தையிடம் சென்று மீண்ட தலைவன் தன் இல்லத்தில் நேரே புகத் துணியமாட்டான். தனது பரத்தமை ஒழுக்கத்தால் தலைவிக்கு ஏற்பட்ட சினத்தைப் பல்வேறு வாயில்கள் மூலம் தணித்த பிறகு தக்க சூழல் ஏற்பட்ட பின்னரே தன் இல்லத்தில் புகுவான். அந்நிலை வாயில் வேண்டல் எனப்படும். அவ்வாறு வரும் வாயில்களாக...

''தோழி, தாயே, பார்ப்பான், பாங்கன்,
பாணன், பாட்டி, இளையர், விருந்தினர்,
கூத்தர், விறலியர், அறிவர், கண்டோர்
யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப''[31]

என்று தொல்காப்பியர் கூறுவார். அவ்வாறு வாயில் வேண்டி வரும்போது தலைவி உடன்படியாக உடன்படாமல், தன் சினத்தைத் தெரிவித்து மறுப்பாள். இந்நிலை வாயில் மறுத்தல் எனப்படும்.

அவ்வாறு வாயில் மறுக்கும் சூழலில் பின்வரும் பாடல் அமைந்துள்ளது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பரத்தையிற் பிரிந்தமையால் தலைவனோடு ஊடியிருந்த தலைமகளை ஊடல் தீர்த்துத் தலைவனோடு கூட்டுவிக்க முயல்கிறாள் தோழி. தலைவர் அன்புடையவர் என்கிறாள். வாயிலாக வந்த தோழிக்கு வாயில் மறுக்கும்போது தலைவி தலைவனை ஏளனம் செய்வதாக இப்பாடல் உள்ளது.

'தலைவன் பரத்தமை காரணமாகத் தம் அழகு கெட்டு உயிர் நீங்குவதாயினும் நாணம் கெடுமாறு புலந்துள்ளோம் எனக் கூறாதே என்று நீ கூறுகிறாய். அவர் நமக்குத் தாயும் தந்தையும் போலும் சிறப்புடையவர் ஆவார். அவர் நம்மிடம் கொள்ளற்குரிய அன்பிலாத விடத்தே புலவி என்ன செய்யும்?' என்ற கருத்துடைய இப்பாடலில் தலைவன் அன்னையும் அத்தனும் போல வழிபடத்தக்கவரே அன்றி அன்புடையார் அல்ல என்று கூறுகிறாள். இதன்மூலம் தலைவனுக்குத் தன்மீது அன்பில்லை என்று குத்திக்காட்டுகிறாள். 'புலவியஃ தெவனோ அன்பிலங்கடையே' என அன்பில்லாதவரிடத்தில் எவ்வாறு ஊடல் கொள்வது என்று கூறுவதில் ஏளனக் குறிப்பு இருப்பதைக் காணமுடிகிறது. 'அன்னையும் அத்தனும் அல்லனே' என்று தலைவி குறிப்பிடுவது அன்னையுமாக, அத்தனுமாக அன்பு செலுத்த வேண்டிய தலைவன் தன்னிடம் அன்பு செலுத்தவில்லையே என்பதைக் குறிப்பாக இடித்துரைக்கவே, இதன்மூலம் தலைவன் பரத்தையொழுக்கத்தை நீக்கித் தன்பால் அன்பு செலுத்தவேண்டும் என்று தலைவி விரும்புவது தெரிகிறது.

பரத்தை மனைக்குச் செல்கின்ற பாணன் தன் மனைக்கு வந்தானாகத் தோழிக்குத் தலைவி,

'நேற்று வதுவைக் காலத்து ஒப்பனையையுடைய பரத்தையரைப் புணர்க்க ஆவலுடன் வந்த பாணன், தெருவில் ஈன்ற அணிமையுடையதோர் ஆ தன்னைப் பாய்ந்தமையால் கலக்கமுற்று என் வீட்டிற்குள் நுழைந்தான். அவன் எதிரே சென்று, 'உங்கள் மனை இம்மனையன்று; அதுவாகும்' என்று கூறினேன். அதனைக்கேட்டு மயங்கிய நெஞ்சுடன் என்னைத் தொழுது நின்ற நிலை நகையை விளைவிக்கிறது' என்று கூறுகிறாள்.[33]

இக்கூற்றில் பரத்தையர் இல்லம் சென்ற பாணனைத் தெருவில் ஆ துரத்தியமையால் பயந்து தலைவியின் வீட்டினுள் நுழைந்த பொழுது 'உன் வீடு இதுவல்ல அது, என்று தலைவி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கூறுவது ஏளனக் குறிப்புடையது. பாணன் தலைவனையும் பரத்தையர் வீட்டிற்கு அழைத்துச் செல்பவன் ஆதலால் அவனை எள்ளி நகையாட இதனை வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்கிறாள் தலைவி. பாணன் தன்னைத் தொழுது நின்ற காட்சியைக்காட்டி, அது நகைத்தற்குரியது என்றும் தலைவி காட்டுவது அங்கதக் குறிப்புடையது.

தலைவி தலைவனிடம் பேசும் பேச்சில் அங்கதம்

தலைவன் தான் பரத்தை வீடு சென்று திரும்பியபொழுது வாயில் வேண்டிப் பொய் பேசுகிறான். பரத்தை வீடு செல்லவில்லை என்றும், பரத்தையைப் பற்றித் தெரியாது என்றும் கூறுகிறான். இத்தகைய சூழ்நிலையில் தலைவி தலைவனது பொய்ம்மையைக் குறிப்பாகவும், நேரடியாகவும் உள்ளுறையாகவும் சுட்டிக்காட்டுவதில் அங்கதக் குறிப்புக்களைக் காணமுடிகிறது. தலைவன் தன்னை அழகற்றவள் என்று நினைப்பதைச் சுட்டிக்காட்டும்போதும்; அலர் எழும்போதும் இதேபோன்று அங்கதக் குறிப்புடைய பேச்சுக்களைத் தலைவி பேசக் காண்கிறோம். பொதுவாக இம்மூன்று சூழல்களிலேயே அங்கதக் குறிப்புடைய பாடல்கள் அதிகம் காணப்படுகின்றன.

அ) தலைவனின் பொய்ம்மையைச் சுட்டிக்காட்டும்போது

பரத்தையிற் பிரிந்துவந்த தலைவன் யாரையும் அறியேன் என்று தலைவியிடம் கூறுகிறான். அவன் கூறுவது பொய்யே என்பதையும். அவன் பரத்தையிடம் சென்று வந்துள்ளதைத் தான் அறிந்திருப்பதையும் தலைவி கூறுகின்ற முறையில் அங்கதக் குறிப்பு இருக்கிறது.[34]

'உன் காதற்பரத்தை நேற்று உனது மார்பில் சாய்ந்து-கொண்டு இடையில் கட்டிய உடை சரிந்து அசைய, வளைகள் ஒலிக்க கைகளை வீசிக்கொண்டு சென்றதைக் கண்டேன். நீ அவளை விட்டுப் பிரிந்து வந்ததால் இன்று நின் முயக்கம் நீங்கினவளாகிச் செல்வதையும் கண்டேன். அவள் உன்னோடு நீடுழி வாழ்வாளாக!' என்பது பாடற் கருத்து.

'வீணே பொய் கூறவேண்டாம்; உன் காதற் பரத்தையை நேற்றுப் பார்த்தேன்; இன்றும் பார்த்தேன்' என்று தலைவி கூறு-வது தலைவனது பொய்மையைச் சுட்டிக்காட்டுவதாக அமைந்-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

துள்ளது. பொய் கூறும் அவனது குறையைத் தான் அறிந்து-கொண்டதை நேருக்கு நேர் சுட்டிக்காட்டுகிறாள். 'வாழிய மடந்தை' எனப் பரத்தையைப் பற்றிக் கூறுவது குறிப்பு மொழியாக அமைந்து எதிர்மறைப் பொருளைத் தருகிறது.

பரத்தையிடம் சென்றுவந்த தலைவனிடம் தலைவி ஊடல் கொள்ளும் பொழுது அவனை நேரடியாக வசைபாடுவதும் பரத்-தையைக் குறிப்புமொழியால் இகழ்வதும் மருதப்பாடல்களில் காணப்படுகின்றன. நற்றிணைத் தலைவி, பரத்தையிடம் சென்று மீண்டு தன்னைப் பள்ளியறையில் சந்திக்கும் தலைவனை வெகுண்டு-ரைக்கிறாள்.[35] 'என்னருகில் நெருங்காதே. நெருங்கினாலும் என் கைகள் உன்னை முயங்காது, உனது மார்பு பரத்தையின் மார்பில் படிந்ததால் அவளது சந்தனம் உனது மார்பில் உள்ளது. அவள் உன்னை அணைத்தமையால் வாடிய மாலையைக் கொண்டுள்ளாய். உன்னைத் தீண்டுவது கலங்கழித்து எறிந்த தாழியைத் தீண்டிய தன்மைத்தாகும். எனவே இங்குவராதே. உன்னை அணைத்து முயங்கும் அப்பரத்தை நெடுங்காலம் வாழ்வாளாக' என்பது பாடற் கருத்து.

இப்பாடலில் தலைவனை 'கலங்கழித் தெறிந்த தாழி போன்றவன்' என்று நேரடியாக இகழ்கிறாள். 'வாழிய கவைஇ நின்றோளே' என்று பரத்தையைப் பற்றிக் கூறுவது குறிப்புமொழி-யாக அமைந்து எதிர்மறைப் பொருளைத் தருவதையும் காணலாம்.

கலித்தொகைத் தலைவன் ஒருவன் பரத்தை வீடு சென்று திரும்பி வருகிறான். அவனுடன் ஊடல் கொண்ட தலைவியிடம், அவன் தனது ஆற்றாமையைக் கூறி ஊடலைத் தீர்த்து வைக்-கிறான்.[36] இப்பாடலில் தலைவன் தன்னுடன் புலவி கொள்ள வேண்டாமென்று கூறி ஓர் உயிர்ப்புள்ளின் இரு தலையுள் ஒன்று போர் எதிர்ந்தற்றாப் புலவல்? நீ கூறின், என் ஆர் உயிர் நிற்கும் ஆறுயாது?' என்று கேட்கிறான். இதற்கு விடையாகத் தலைவி 'ஏஎ! தெளிந்தேம் யாம்; காயாதி - எல்லாம் வல் - எல்லா! பெருங்காட்டுக் கொற்றிற்குப் பேய் நொடித்தாங்கு, வருந்தல் நின் வஞ்சம் உரைத்து' என்று கூறுவதில், வீணாகத் தலைவன் பொய்-களைச் சொல்கிறான் என்பதைச் சுட்டிக் காட்டுவதையும், அவை உணர்ந்திருக்கும் கொற்றவைக்கு அவள் அறியாதன சில உண்டாகப் பேய் நொடி சொன்னாற்போல உள்ளதென்று கூறுகிறாள் இதில் தனக்குத் தலைவனின் பரத்தை ஒழுக்கம் தெரியும் என்பதிலும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அதனால் நீ பொய் சொல்லாதே என்று கேலி செய்வதிலும் அங்கதக் குறிப்பு உள்ளது.

பரத்தையிற் சென்ற தலைவன் திரும்பி வந்தபோது 'நீ புறத்தே போய்க் கண்ட விநோதம் எத்தன்மைத்து?' என்று தலைவி கேட்கிறாள். 'ஆங்கோர் பக்கமான கடவுளரைக் கண்டு தங்கினேன்' என்று தலைவன் பதில் உரைக்கிறான். 'சோலையில் மலரைச் சூடின மாண்பினை போலும் நோக்குடைய பரத்தையர் பலர் உளர்; அப்-பரத்தையருள் நீ கூறி வந்த கடவுள் எந்தக் கடவுள்? அக்கடவுளைச் சொல்' என்று தலைவனிடம் கேட்கிறாள் தலைவி. மேலும் தலைவன் பரத்தையிடம்தான் சென்று வந்திருக்கிறான்; அப்பரத்தையரைத்-தான் கடவுள் என்கிறான் என்று சொல்லி 'சிறுவரைத் தங்கின் வெகுள்வர் - சென்றீ நீ - செல்லாவிடுவாயேல் நல்தார் அகலத்துக்கு ஓர் சாரமேவிய நெட்டிருங் கூந்தற் கடவுளர் எல்லார்க்கும் முட்டுப்-பாடு ஆகலும் உண்டு' என்று நகையாடுகிறாள்.[37]

இப்பாடலில் தலைமகன் பரத்தையர் பாலொழுகிய தீயொழுக்-கத்தைக் கடிந்து, அவன் திருந்தியொழுக வேண்டும் என்னும் கருத்தினளாய்த் தலைவி குறிப்பிற்கூறிய வசைமொழி புலப்படுகிறது. இது பழிகரப்பு அங்கதத்தின் பாற்படும் என்பார் பண்டிதமணி கதிரேசச்செட்டியார்.[38]

பரத்தையிற் பிரிந்து சென்றுவந்த தலைவனை 'காலம் தாழ்த்தக் காரணம் என்ன?' என்று தலைவி வினவுகிறாள். 'புதுப்புனல் ஆடியமையால் காலம் தாழ்த்தினேன்' என்று தலைவன் பதிலிறுக்கிறான். அவன் புனலாடிய விதத்தைத் தலைவி கூறும்போது தலைவன் பரத்தமையைக் குறிப்பாகக் குறிப்பிட்டு நகையாடுவதை அறியமுடிகிறது.[39] ''புனல் ஆடினாய் எனவும் கேட்டேன்; புனல் ஆங்கே நீள் நீர் நெறி கதுப்பு வாரும் அறல்ஆக, மான் எழில் உண்கண் பிறழும் கயல் ஆக, கார்மலர் வேய்ந்த கமழ்பூம் பரப்பு ஆகம் நாணுச் சிறை அழிந்து நண்பகல் வந்த அவ்யாணர்ப் புதுப்புனல் ஆடினாய்'' என்று தலைவன் பரத்தையுடன் நீராடியதைக் காட்டுமிடத்தில் அங்கதக் குறிப்புக் காணப்படுகிறது.

பரத்தையிற் பிரிந்து வந்த தலைமகனிடம், தலைவி

'காவிரியாற்று நீர்ப்பெருக்கில் நேற்று உன்னால் விரும்பப் பட்ட காதற் பரத்தையொடு மிக்க மகிழ்ச்சியுடன் புனலாடினாய். இன்று மார்பில் தோன்றிய தேமலையும், குற்றமற்ற கற்பினையும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உடைய எனது புதல்வன் தாயே என்று பொய்ம்மொழிகள் பலவும் கூறி நிற்கிறாய். எங்கள் முதுமையை இகழாதே. உனதுப் பொய்மொழிகள் எங்களுக்கு இனிமேல் இனிமை செய்யாது' என்று கூறுகிறாள் 40

இப்பாடலில் தலைவன் பரத்தையுடன் மகிழ்ச்சியாக இருந்த நிலையும், ''புதல்வன் தாயே'' என்று விளித்த நிலையும் தலைவியால் சுட்டப்படுகிறது. புதல்வன் தாய் என்றதால் தன்னுடைய முதுமை நிலையைச் சுட்டுகிறான் தலைவன் என்று நினைந்து 'முதுமையடைந்த நான் உனக்குப் பயன்படப் போவதில்லை' என்று இகழ்ச்சியாகக் கூறி 'உனது சொற்கள் மாயப்பொய்ம் மொழிகளே' என்று கடிந்துரைக்கிறாள்.

மற்றொரு பாடலில், பரத்தையர் சேரியினின்றும் வந்த தலைமகன் யாரையும் அறியேன் என்றபொழுது தலைவி அவனிடம்,

'நம் புதல்வன் சிறுதேர் ஓட்டிக்கொண்டு தனியாகத் தெருவில் விளையாடியிருந்தான். அப்பொழுது உன்னால் பெரிதும் விரும்பப்பட்ட பரத்தை, எவரும் இல்லை என்று நினைத்து மகன் அருகில் சென்றாள். அவனிடம் உன் ஒப்புமை கருதிப் போற்றி' என் உயிரே வருவாயாக' என்று அவனை அணைத்துக் கொண்டாள். அப்பொழுது நான் விரைந்து சென்று அவளையும் சேர்த்து அணைத்துக்கொண்டு 'இவனுக்கு நீயும் ஒரு தாயல்லவோ' என்றேன். அவளது களவை நான் அறிந்ததால் நாணி வானத்து அருந்ததி போன்று நின்றாள். உனது மகனுக்கு அவளும் தாயாதல் ஒக்கும் என எண்ணி நானும் அவளை விரும்பினேன்' என்று கூறுகிறாள்.41

'இப்பாடல் தலைவனின் பொய்மையைப் படம்பிடித்துக் காட்டுகிறது, யாரையும் அறியேன் என்ற தலைவன் சொல்லுக்கு மாறாகப் பரத்தை தலைவனது மகனை அணைத்துக்கொண்டு நின்றதைக் கூறுகிறாள் தலைவி 'நீயும் தாயை' என்று தலைவி பரத்தையைப் பார்த்துக் கூறுவது தலைவனின் பரத்தமையை எள்ளுதற் பொருட்டே. 'வானத்து அணங்கு அருங்கடவுள் அன்னோள்' என்பது எப்பொழுதும் நின்னையே உள்ளத்துக் கொண்டிருப்பாள் என எள்ளுவாளாய் அருந்ததியன்னாள் என்றாள் தலைவி.

பரத்தையிற் பிரிந்துவந்த தலைமகற்குத் தலைவி கூறியதாக ஒரு பாடல் உள்ளது.42

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இப்பாடலில், 'வரால் மீனை விற்றுக் கள்ளுண்டு ஆடி மீண்டும் வேட்டம் செல்லுதலை மறந்து உறங்கும் கணவருக்கு அவர்தம் மனைவியர் அகன்ற இலையில் சோறும் பழமும் கொடுப்பர். இத்தகைய ஊரனே! நின் நலத்திற்குத் தக்காளாகிய பரத்தை தழுவிய மார்பினை நான் தொடமாட்டேன். என்னை அணுக வராதே' என்று தலைவி கூறுகிறாள்.

இங்கு நேரடியாகத் தலைவனின் பரத்தமையைச் சுட்டி இகழ்-கிறாள். மேலும் தலைவன் இரவெல்லாம் பரத்தைக்குத் தன் மார்பினை நல்கி அவள் தரும் இன்பத்தை நுகர்ந்து, தலைவியை மறந்தொழுகி, விடியலில் தலைவியை நினைந்து வருகிறான் என்பதை ''வராஅற் கொழுங்குறை நொடுத்து உண்டு ஆடி வேட்-டம் மறந்து துஞ்சும் கொழுநர்க்குப் பாட்டியர் அமலை வெஞ்-சோறு வைகறை இடும் ஊர'' என்ற பாடல் வரிகள் குறிப்பாகக் காட்டும்.

மற்றொரு பாடலில். 'தலைவனே! நீ பரத்தையின் வீட்-டுக்குச் செல்கின்றபொழுது, வழிதவறி இங்கு வந்துவிட்டாய் போல் தெரிகிறது. உள்ளே வராதே! அங்கேயே நில்! உன் பரத்தையின் வீட்டிற்கே செல்' எனத் தலைவி தலைவனை வீட்டிற்குள் விட மறுக்கிறாள். அதற்கு 'நான் குறும்பூழ்ப்போர் கண்டு வந்தேன். நீ கூறுவது போல வேறு எதனையும் அறிந்தேன் இல்லை, எனத் தலைவன் கூறுகிறான்.

இதற்குப் பதிலுரைக்கும் தலைவி தலைவன் கண்டதாகக் கூறும் குறும்பூழ்ப் போரையும் தான் கருதுகின்ற பரத்தமையையும் வைத்து இரு பொருள்படப் பேசி ஏளனம் செய்கின்றாள்.

'நீ குறும்பூழ்ப் போரினைக் கண்டதைப் பற்றிக் கேள்விப் பட்டேன். நாளும் புதிதாகக் கொடுக்கும் உனது கையின் வளத்தைப் பாடி உன்னை விட்டுப் பிரியாத பாணனது யாழிசையைச் செவி மடுத்து, அதுபோல அவன் சொன்ன பிறவற்றிற்கும் செவிசாய்த்துக் குறும்பூழ்ப் போரையும் கண்டாய் போலும். உன் மேனியில் வடுக்கள் எண்ணிறந்தனவாக இருக்கின்றன.

ஊரார் கூறும் அலருக்கு நீ அஞ்சவில்லை. உனது மாலை யோடு அணைத்துக்கொண்டு குறும்பூழ்ப் போரைக் காணப்போகாமல் கலவிப்போரை மேற்கொண்டாய். உனது தோளில் உள்ள புண்க ளெல்லாம் ஈரமாக உள்ளன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மேனி முழுவதும் கையால் தடவிக்கொடுத்து நீ தன்னை வெல்லாமல் மேற்கொள்ளும் கலவிப்போரை நுகர்ந்தாய் போலும். அதனை முகமே காட்டிக்கொடுக்கிறது' என்று இப்பகுதிகளில் குறும்பூழ்ப் போரையும் பரத்தையையும் இணைத்து வைத்து ஏளனம் செய்கிறாள் தலைவி.[43] இதில் பாணனைப் புலையன் என்று திட்டுவது குறிப்பிடத்தக்கது.

முதற்கூற்றில் குறிப்பாகச் சொல்லி, ஏனைய இரண்டு கூற்றிலும் வெளிப்படையாகவே ஏளனம் செய்வதைக் காணலாம்.

பாடல் இறுதியிலும் பரத்தையைப் 'பூழ்' என்ற சொல்லாலே குறித்து 'நீ பண்ணிய பூழ் எல்லாம் நோய் பெரிதும் தரும்' என்று முடிக்கிறாள்.

இவ்வாறு பாடலில் தலைவன் குறும்பூழ்ப் போர் கண்டதாக ஒரு பொய்யைச் சொல்ல, அப்பொய்யையே வைத்துக்கொண்டு தலைவி தலைவனைக் கேலி செய்து தலைவனது குற்றங்களைச் சுட்டிக்காட்டுவதைக் காணுகிறோம்.

அடுத்துவரும் ஏனைய இரு பாடல்களிலும் அவ்வாறே தலைவன் குதிரையூர்ந்து வருவதாகவும், யானையைக் கண்டு வருவதாகவும் கூற, அதனை வைத்துக்கொண்டு தலைவி தலைவனை இதுபோன்றே கேலி செய்வதைக் காணலாம்.[44]

'அன்னையும் அத்தனும் போல அன்புடையார் அல்லர்' என்று ஏளனக் குறிப்புப்படப் பேசுகிறாள். தான் வேறொரு காரணத்திற்குச் சென்றதாகத் தலைவன் கூற, தலைவி அக்காரணத்தைப் பரத்தையோடு இருபொருள்பட வைத்துப் பேசுகின்ற தன்மையைக் கலித்தொகைத் தலைவியிடம் மட்டுமே காணலாம். இது பிற்காலச் சிலேடை போன்ற அமைப்புடையதாகும்.

ஆ) தலைவன் தன்னை அழகற்றவள் என்று நினைப்பதாகச் சுட்டும்போது

தலைவன் தன்னை அழகற்றவன் என்று நினைப்பதைத் தலைவி சுட்டிக் காட்டும் பேச்சுக்களிலும் அங்கதக் குறிப்புக்கள் அமைந்திருப்பதைக் காணலாம். இத்தகைய சூழலில் அமைந்த இரு பாடல்களைக் காணலாம்.

பரத்தையிடம் சென்றுவந்த தலைவனைக் கண்டு தலைவி 'புதல்வனைப் பயந்து முதிர்ந்த எம் மேனியைப் புல்லுதல் ஒழிக;

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அது உன் மார்பின் அழகைச் சிதைக்கும்' என்று தான் குழந்தை பெற்றமையால் வயதானவளாகவும், அழகிழந்தவளாகவும் அவனுக்குத் தெரிவதைக் காட்டுகிறாள். தன்னை அணைந்தால் அது தலைவனது அழகான மார்புக்குச் சிறப்பன்று என்று ஏளனமாகக் கூறுகிறாள் ஐங்குறுநூற்றுத் தலைவி.[45]

இப்பாடலில் காணலாகும் உள்ளுறையிலும் அங்கதக் குறிப்பு உள்ளது. ''கரும்பு நடு பாத்தியிற் கலித்த ஆம்பல் சுரும்புபசி களையும் பெரும்புனல் ஊர'' என்று தலைவனை விளிக்கும்போது தலைவனது தீய ஒழுக்கத்தைக் கடிந்து அவன் நெஞ்சுற உணர்த்திய முறையினைக் காணமுடிகிறது. 'கரும்பு நடுதற்குச் செய்த பாத்தியில் ஆம்பல் முதலியன தழைத்துச் சுரும்பினத்தின் பசி களையும் என்றாற்போலப் பரத்தையர் தங்குதற்குரிய இல்லில் யானிருந்து விருந்திரை உபசரிக்கலானேன்' என்ற இகழ்ச்சிக் குறிப்பினைக் காட்டுகிறாள் தலைவி.

எம் மார்பினை அணைத்தால் உம் அழகு கெட்டுவிடும் என்பதிலும் தலைவி வேண்டுமென்றே தலைவனைக் கேலிசெய்கிறாள்.

பயன்படாத மலரைத் தாங்கிய கரும்பும், வண்டுக்கு பயன்படும் ஆம்பலும் முறையே பரத்தையையும் தலைவியையும் உள்ளுறையாகக் குறிக்கிறதெனலாம். பயன்படாத கரும்பின் பூப்போல, பரத்தை மகப்பேறு அடைய வாய்ப்பற்றவள். ஆனால் ஆம்பல் வண்டுக்குப் பயன்படும் தேனைத் தாங்கியிருப்பது போல, தலைவி மகப்பேறு அடையும் வாய்ப்புப் பெற்றவள். உயர்வாகவும் கவர்ச்சியாகவும் உள்ளது கரும்பு. அடக்கமாகவும் தண்ணீரில் தாழ்ந்தும் காணப்படுகிறது ஆம்பல். இவ்வேறுபாடு பரத்தைக்கும் தலைவிக்கும் இடையே உள்ள வேறுபாடாகச் சுட்டிக்காட்டப்படுகிறது

தலைவன் தலைவியர் இல்லற வாழ்வில் இன்றியமையாச் சிறப்பிடம் பெறுவது மக்கட்பேறாகும். பரத்தைக்கு அத்தகைய உரிமை இல்லை என்பது குறிக்கத்தக்கது. எனவே மகப்பேறு என்பது தலைவிக்கு மட்டுமே உரிய தனிச்சிறப்பாகும். தலைவியின் குறிப்பில், தான் மகப்பேறு அடைந்த நிலையைச் சொல்வது தலைவனின் பிரிவுக்குக் காரணமாக இருப்பதாக மேலோட்டமாகத் தோன்றினாலும், பரத்தையைவிடத் தான்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உயர்ந்தவள் என்று தலைவனுக்கு அறிவுறுத்துவதே நோக்கமாக அமைந்துள்ளது.

இப்பாடலை அங்கதத்திற்கு எடுத்துக்காட்டாகப் பண்டிதமணி கதிரேசச் செட்டியாரும் எடுத்துக்காட்டியுள்ளார்.[46]

பொதுவாகச் சங்கப்பாடல் முழுவதும் இத்தகைய அமைப்பினைக் காணமுடிகிறது.

பரத்தையரொடு பொழுதுபோக்கி நெடிது துய்த்து வந்த தலைமகனைப் புலந்து கூறும் தலைவி கூற்றில் அமைந்துள்ள பாடலிலும் அங்கதக் குறிப்புக் காணப்படுகிறது.[47] 'குழந்தை பெற்றமையால் தான் பேய் போன்று காட்சியளிப்பதாகக் கூறி, தூயர், நறியர், நின் பெண்டிர் என்று கூறுவது வெளி ஒப்பனையுடன் இருப்பதால் நின் பரத்தையர் உனது கண்களுக்கு அழகாகத் தோற்றமளிக்கின்றனர்; உண்மையில் அத்தகைய அழகுடையவர் அல்லர் என்ற குறிப்புப்படத் தலைவனின் பரத்தமையைச் சாடுகிறாள். இப்பாடல் கேலிக்குறிப்புடன் அமைந்து, தலைவனின் தவற்றினைச் சுட்டிக் காட்டுகிறது.

இ) அலர் எழும்போது

அலர் எழுந்த சூழலில் அங்கதக் குறிப்புடைய ஒரு பாடல் இருப்பதைக் காணலாம்.

பரத்தையைப் பிரித்துவந்த தலைமகனோடு புலந்த தலைவி, 'வையை ஆற்றங்கரையில் உள்ள மலர்களையுடைய சோலையில் பரத்தையை நீ மணம்செய்து கொண்டாய் என்று அனைவரும் கூறுவர். இதனால் ஏற்பட்ட அலரானது பாண்டியன் தலையானங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் படையினர் ஏழு மன்னர்களையும் ஒருசேர வெற்றிகொண்ட போர்க்களத்தில் எழுந்த ஆரவாரத்தை விடப் பெரிது' என்று கூறுகிறாள்.[48]

'தலைவன் பரத்தையுடன் கூடியிருந்த செய்தி ஊர்முழுவதும் பரவிவிட்டது; அவன் பரத்தையைக் திருமணம் செய்துகொண்டான் என்று அலர் எழுந்துள்ளதாகப் பரத்தையைப் பிரிந்துவந்த தலைவனிடம் தலைவி கூறுவது அவனது பரத்தமையை எள்ளுவதற்காகவே. அலருக்கு உவமையாகப் போர்க்களத்து எழுந்த

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஓசையினைக் காட்டியிருப்பது 'தன் செயல் எவருக்கும் தெரியாது' என்று நினைத்திருக்கும் தலைவனிடம், அவனது செயல் பெரிதும் பரவிவிட்டது என்று காட்டற்பொருட்டே. ''நறும்பல் கூந்தற் குறுந்-தொடி மடந்தையொடு வதுவை அயர்ந்தனையென்ப அவர் வென்றி கொள் வீரர் ஆர்ப்பினும் பெரிது'' என்று தலைவி கூறியிருப்பது தலைவனைக் குத்திக்காட்டற் பொருட்டே.

தலைவி பாணனிடம் பேசும் பேச்சில் காணப்படும் அங்கதக் குறிப்புக்கள்

தலைவி பாணனிடம் பேசுவதாக அமைந்த பாடல்களில் அங்கதம் நேரடியாக அமைந்திருப்பதைக் காணலாம்.

கழறித் தெருட்டற்பாலராகிய அகம்புகல் மரபின் வாயில்கள் புகுந்துழி, தலைவனையும் பாணன் முதலாகிய பக்கத்தாரையும் இகழ்ந்து தலைவி, 'தான் ஈன்ற பார்ப்பினைத் தானே தின்னும் அன்பில்லாத முதலைகளோடு வெண்மையான பூக்கள் நிறைந்த பொய்கையினை உடையது அவனது ஊர்; அதனால் அவ்வூர்த் தலைமகன், தான் தெளித்த சொல்லைத் தேறியிருந்த தன் மேனியில் பிரிவால் பொன்போலும் பசப்புத் தோன்றுவதற்குக் காரணமா-கிறான்' என்று கூறுகிறாள்.[49]

இப்பாடலில் காணலாகும் உள்ளுறை மூலம் தலைவி பாணன், தலைவன் முதலியோரை இகழ்ந்திருப்பதைக் காணமுடிகிறது. அன்புடைமைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாவது தாய்மை. ஆனால் அப்பண்பிற்கு மாறாகிய செயலுடைமை பற்றித் தாய் முதலை யைத் ''தன்பார்ப்புத் தின்னும் அன்பில் முதலை'' என்கிறாள். தான் ஈன்று புறந் தருதற்குரிய தன் பார்ப்பினைத் தானே தின்னும் முதலையினையும் அதனோடு உடன் உறையும் வெள்ளாம்பலினை-யும் உடைய ஊர் என்றதனால், தான் தெளிவிப்பான் கூறிய சொற்களைத் தன் புறத்தொழுக்கத்தால் தானே சிதைத்தலையும், தன் கொடுமை நினையாது கூடியுறையும் அறிவில்லாத பரத்தை-யரை யுடையவன் என்கிறாள் தலைவி.

வாயில்வேண்டிச் சென்ற பாணற்குத் தலைமகள் வாயில் மறுத்த பாடலிலும் அங்கதத்தைக் காணலாம்.

தலைவியின் வீட்டிற்கு வாயில்வேண்டிப் பாணன் செல்கிறான். அப்பொழுது தலைவனைப் பற்றிப் பாணனிடம்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'தலைவன் கூறும் மொழிகளை எல்லாம் உண்மை என்று நம்பி ஏமாந்தவள் நான். மாயம்பல செய்யும் பரத்தமைத் தொழிலை-யுடைய அவனது மொழிகளை நம்பித் தன் நலத்தினை இழப்பவள் யாரோ? அவள் இரங்கத்தக்கவள்' என்று கூறி வாயில் மறுக்கி-றாள் தலைவி.[50]

இப்பாடலில் தலைவனின் பரத்தமையைச் சாடுகிறாள் தலைவி. தலைவனது சொற்களை நம்பும் பரத்தையை 'அளியள்' என்று கூறுகிறாள். தலைவன் பரத்தமையை உள்ளுறை மூலமாகவும் எடுத்துக்காட்டுகிறாள். எருமைமாடு மலர் நிறைந்த பொய்கையில் விழுந்து, பெண் எருமையை அணைந்து, தோட்டம், வயல் போன்ற இடங்களில் மேய்ந்து திரிவது போன்று தலைவனும் பரத்தையர் சேரியில் பல பரத்தையரிடம் சென்று வருகிறான் என்று நேரடியாக ஏளனம் செய்கிறாள்.

தோழி கூற்றில் அங்கதம்

மருதத்திணையில் தோழி கூற்றாக வரும் 17 பாடல்களில் அங்கதக் குறிப்புக்கள் இருப்பதைக் காணமுடிகிறது. இப்பாடல்கள் அனைத்தும் தலைவனை வாயில்மறுத்த சூழ்நிலையிலேயே அமைந்துள்ளன. தலைவி தலைவனைத் தன் இல்லத்துள் வராதே என்று வாயில்மறுப்பதுபோலவே தோழியும் வாயில்மறுப்பதுண்டு. இவற்றுள்,

1. 14 பாடல்கள் நேரடியாகத் தலைவனிடம் பேசுவது போன்றும்,[51]
2. இரண்டு பாடல்கள் பாணனிடம் பேசுவது போன்றும்,[52]
3. ஒரு பாடல் பாணனைப் பற்றிக் குயவனிடம் பேசுவது போன்றும்[53] அமைந்துள்ளன. நான்கு பாடல்கள் உள்ளுறையில் அங்கதக் குறிப்பினை உடையனவாய் உள்ளன. 11 பாடல்கள் மறைமுகமாகவும், 6 பாடல்கள் நேரடியாகவும் (தலைவனின் பரத்தமை ஒழுக்கத்தைச் சுட்டிக்காட்டும்படி) அங்கதக் குறிப்புப்படஅமைந்துள்ளன.

தோழி தலைவனிடம் பேசும் பேச்சில் அங்கதம்

தோழி தலைவனிடம் பேசும் பேச்சில் அமைந்துள்ள அங்கதக் குறிப்புக்கள் வாயில் மறுத்த சூழலிலேயே இருப்பதைக் காணலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பரத்தையிற் பிரிந்து வருகிறான் தலைமகன். வாயில்வேண்டி வந்த அவனுக்குத் தோழி வாயில் மறுக்கிறாள்,

'இங்கே வராதே' என்னைக்[54] கைவிட்டுச் சிறிதும் உன்னிடம் சினம் கொள்ளாதிருக்கும் பரத்தையிடம் அன்புகொண்டு அங்கேயே இருப்பாயாக! நான் உன்னிடம் வெகுள்வதால் அன்புகொள்ளத்-தக்கவள் அல்லள். நீ இங்கு வந்ததே போதும். உன்னைப் பார்த்ததே எனக்கு இனிமையாக உள்ளது. இக்காட்சியொன்றே போதும். இங்கே வராதே' என்பதே பாடற்கருத்து.[54அ]

'முனிவில் பரத்தை' என்று தோழி கூறுவதில் இகழ்ச்சிக் குறிப்பு உள்ளது. உன்னைப் பார்த்ததே போதும், நீ இங்கே வராதே என்று தோழி கூறுவது, இதுகாலம் வாராது தலைவன் காலம் தாழ்த்ததைக் குறிப்பால் உணர்த்தி இகழ்வதாயிற்று.

மற்றொரு பாடலில், பரத்தையிற் பிரிந்த தலைமகனைத் தோழி வாயில் மறுக்கிறாள். தலைவன் மீது தலைவி சினம் கொண்டி-ருப்பதைக் குறிப்பால் அறிந்த தோழி,

'தலைவனே! நீ இங்கே வந்து துயில்வது மற்றொரு நாளில் இருக்கட்டும். நேற்றைப் பொழுதிலே வந்து உன்னை முயங்கிய பரத்தையருடைய புதிய நலனை எல்லாம் கொள்ளை கொண்டு இன்று பாணனால் கொணர்ந்து தரப்படும் பரத்தையரின் மெல்லிய தோளை அணையும்படி விரைந்து செல். உன்னோடு உன் பரத்தை நீடு வாழ்க' என்று வாயில் மறுக்கிறாள் [55]

தலைவன் பரத்தையர் பலரிடம் செல்வதை வெறுத்த தோழி, அவனை நயமாகக் கடிந்துரைக்கிறாள். 'சிறக்க நின் பரத்தை' என்பது குறிப்பு மொழியாக அமைந்து எதிர்மறைப் பொருளைத் தருகிறது. தலைவன் பரத்தமை ஒழுகுகத்தினின்று நீங்கித் தலை-வியுடன் வாழவேண்டும் என்ற எண்ணத்துடன் தோழி இவ்வாறு கூறுகிறாள்.

உனது சொந்த வீட்டில் எப்பொழுது வேண்டுமானாலும் துயின்று கொள்ளலாம் என்ற பொருள்பட 'மற்றும் கூடும் மனை-மடி துயிலே' என்று 'பரத்தையருடைய இல்லங்களுக்கு விரைந்து செல்; இல்லாவிடில் உனக்குக் கிடைக்கமாட்டார்கள்' என்ற கருத்தை இகழ்ச்சி தோன்றக் குறிப்பாகத் தோழி கூறுகிறாள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வாயில் வேண்டிப் புக்க தலைவனுக்குத் தோழி, பரத்தையர் வீட்டிற்குச்சென்ற தலைவன் தலைவியிடத்தே மீண்டுவந்த காலத்தில் நீ இங்கே வந்தால் பரத்தையர் பழிகூறுவர். ஆதலின் இங்கே வாரற்க! என்று வாயில் மறுத்துக் கூறும் பாடலில் அங்ஙதக் குறிப்பு இருப்பதைக் காணலாம்[56].

'மாலை நேரத்தில் கோழியையும் அதன் குஞ்சுகளையும் கவருவதற்காக வேலியோரம் காட்டுப்பூனைகள் வருகின்றன. அப்பூனைகளிடம் அகப்படாமல் தப்பித்தற் பொருட்டுக் கோழி தன் குஞ்சினத்தை ஒருங்கே கூடும் பொருட்டுக் கூவி அழைக்கிறது' இத்தகைய ஓசைபோன்று, காதுகளுக்கு இன்னாததாகத் தூற்றப்படும் பழிச்சொல்லோடு எமது தெருவில் வராதே. நீ வாழ்க' என்பது பாடலின் பொருள். இப்பாடலில் உள்ளுறை மூலம் தோழி தலைவனை இகழ்வதைக் காணலாம். 'தன்னாற் பாதுகாக்கப்பட்ட பிள்ளையை வெருகு கவருமோ வென்னும் அச்சத்தினால் கோழிப்பேடை கூவியது போலத் தம்பால் இருந்துவந்த தலைவனைத் தலைவி கவர்ந்து தன்பால் இருத்திக்கொள்வாளோ என்னும் அச்சத்தினால் பரத்தையர் பழமொழி கூறினர்' என்று பொருள் கூறுவார் உ.வே சாமிநாதய்யர்.[57] குஞ்சுகளை வஞ்சனையாற் கொள்ள வேலியில் மறைந்து வரும் காட்டுப்பூனை போல. நீயும் தலைவியை வஞ்சித்துக்கொள்ள நல்லன் போன்று நடித்து மறைந்து வருகின்றாய் என்ற குறிப்பு உள்ளது. இதனால் தலைவனின் பரத்தையற் பிரிவு இகழப்படுகிறது. 'எந் தெருவே' என்று தோழி கூறுவது 'இது எங்கள் தெரு, உனது தெரு இதுவன்று; அது பரத்தையர் இருக்கும் தெரு' என்று நகைச்சுவையுடன் தலைவனின் குறையைக் குத்திக் காட்டுவதற்கே.

மற்றொரு பாடலில், பரத்தமையாலே ஊடியிருந்த தலைவியிடம் உடம்பாடு பெறுவதற்குத் துணைபுரியும் வண்ணம் தலைவன் தோழியை வேண்டியபோது, 'நீர் முன்பு எம் தலைவிபால் அன்புடையரானீர்; இப்பொழுது அதனை நீங்கினீர்; ஆதலின் உன்னை ஏற்றுக்கொள்ளுமாறு எங்ஙனம்?' என்று அவனை ஏளனம் செய்கிறாள்.[58]

'களவுக் காலத்தில் எனது தலைவி வேப்பங்காயினைத் தந்தாலும் அது உனக்கு தேம்பூங்கட்டி போன்றிருந்தது; ஆனால் இப்போது பறம்பு மலையில் உள்ள குளிர்ந்த சுனைத்தண்ணீரை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தை மாதத்தில் கொடுத்தாலும் அது உவர்ப்பாக இருந்தது என்று சொன்னாய்! என்ற இக்கூற்றில் தலைவன் அன்பு மாறுபாட்டைச் சுட்டிக்காட்டுகிறாள் தோழி. அன்பு மாறுபாட்டிற்குக் காரணம் பரத்தையே என்றும்; அப்பரத்தமையை நீக்கவேண்டும் என்ற நோக்கத்தையும் தோழி வெளிப்படுத்துகிறாள் ''ஐய அற்றால் அன்பின்பாலே'' என்ற தொடர் தோழி தலைவனின் தவற்றை எள்ளி நகையாடுவதைக் காட்டுகிறது.

வாயில் வேண்டிச்சென்ற தலைவனுக்குத் தோழி உரைப்பதாக அமைந்த பாடலில்,

'நீ நன்கு ஒப்பனை செய்துகொண்ட பரத்தையர் கூட்டத்தொடு நீர் விழாவிற்கு வந்தாய். அதனைக் கண்ட இவ்வூர் மக்கள் ஒரு பசுவினால் வரும் ஊதியத்தைக் கொண்டு உண்ணும் உணவையுடைய சிறப்பில்லாத இவ்வாழ்க்கை, அழகான தலைவி இவனுக்கு வாழ்க்கைப்பட்டுப்புக்கனளாக இப்பொழுது விழாவையுடையதாயிற்று என்று சொல்வார்கள்' என்று கூறுகிறாள்.[59]

இப்பாடலில் தலைவனைத் தோழி இடித்துரைக்கும் முறையைக் காணமுடிகிறது. தலைவியைத் திருமணம் முடித்துக்-கொண்ட பின்னர்தான், தலைவனுக்கு மிக்க செல்வம் உண்டாயிற்று. அப்படியிருக்கத் தலைவன் தலைவியைப் புறக்கணித்துவிட்டுப் பரத்தையருடன் விழா அயர்கிறானே என்று தோழி தலைவனை இடித்துரைத்து வாயில் மறுக்கிறாள்.

நின் பரத்தையர்க்கு நீ உற்ற சூளுறவு நன்றாயிருந்தது என்று நகையாடித் தோழி வாயில் மறுக்கின்றபொழுது,

'தலைவனே! கரும்பெழுதிய தொய்யிலையுடைய பருத்த தோளையும், நெடிய கூந்தலையும், வளைகளையும் உடைய பரத்-தையரது பெண்மை நலத்தை நுகர்ந்து, துறந்து இங்கு வந்-துள்ளாய். நீ அவர்களிடம் செய்த சூள் மிக நன்று!' என்று இகழ்ச்சிப் பொருள்படப் பேசுகிறாள்.[60]

பரத்தையரிடமிருந்து வந்து தன்னிடம் குறையிரந்து வாயில் வேண்டிய தலைவனை ''நீ பரத்தையர்க்கு, 'உங்களை விட்டுப் பிரியேன்' எனச் சூள் உரைத்திருப்பாயன்றே; அங்ஙனம் உரைத்த சூள் என்னாம்' என நகைக்கிறாள். இதனால் தலைவியின் வாக்-குறுதி பொய்மையுடையது என்றும்; தலைவியிடமும் இவ்வித-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மாகவே சூளுரைத்துப் பின் பரத்தையிடம் சென்றவன் என்றும் தலைவனின் நிலையினைத் தோழி காட்டுகிறாள். ''மிகநன்றம்ம மகிழ்ந நின் சூளே'' என்ற பாடலடி இகழ்ச்சிக் குறிப்புடன் அமைந்துள்ளது.

புறத்தொழுக்கத்திலே நெடுநாள் ஒழுகி, ''இது தகாது'' எனத் தெளிந்த மனத்தனாய் மீண்டு, தலைவியோடு கூடி ஒழுகா நின்ற தலைமகன் தோழியோடு சொல்லாடி ''யான் அவ்வாறொழுக நீயீர் நினைத்த திறம் யாது'' என்றாற்கு அவள் சொல்லியதாக அமைந்த பாடலிலும் அங்கதக் குறிப்பு இருப்பதைக் காணலாம்.[61]

'ஆதன் வாழ்க; அவன் குடியிற் பிறந்த ஆவினி வாழ்க; நெல் மிக்கு விளைக; பொன்மிக உண்டாகுக என்ற தலைவி இல்லறமே நினைந்து ஒழுகினாள். பூக்களை நிறையவுடைய காஞ்சியும், சினைகளையுடைய சிறு மீன்களுமுடைய ஊரன் வாழ்க; அவற்கு வாயிலாகும் பாண்மகனும் வாழ்க என்று நாங்கள் விரும்பியுணர்ந்தோம்' என்று பதில் கூறுவதாகப் பாடல் உள்ளது.

இப்பாடலில் ''நனைய காஞ்சிச் சினைய சிறு மீன்'' என்ற உள்ளுறையில் அங்கதக் குறிப்பு உள்ளது. தலைவன் தலைமகளையும் பொது மகளிரையும் ஒன்றாகக் கருதியுள்ளான் என்பதைக் குறிப்பாக இவ்வரி உணர்த்துகிறது. ''யாணர் ஊரன் வாழ்க! பாணனும் வாழ்க'' என்பது வாழ்த்துவது போன்றிருந்தாலும் அவனது பரத்தமையை இகழ்ந்து கூறுவதாகவே அமைந்துள்ளது.

வாயில்வேண்டிச் சென்ற தலைமகற்குத் தோழி,

'தலைவனே! உன்னை நாங்கள் புலத்தற்கு நீ என்ன உறவினை? இவ்வூரார் பிறரும் கரிய கூந்தலையுடையவள் ஒருத்தியை எம் மனையில் கொண்டு வந்து காட்டி. நீ அவளை மணந்து கொண்டாய் என்று கூறுவர். அதனை நீ செய்தாய் என்று நாங்கள் சொல்லேம். நீ வாழ்க. எனது வளையல் நெகிழ்ந்து வீழினும் வீழ்க. நீ நினைத்த இடத்திற்குச் செல். உன்னை யார் தடுக்க முடியும்?' என்று வாயில் மறுக்கிறாள்.[62]

இப்பாடலில் தலைவியின் புலவியைத் தீர்த்ததற்கு வந்த தலைவனை உன்னை நாங்கள் புலத்தற்கு நீ என்ன உறவு? என்று வினவுவது நீ இதுநாள் வரை எங்களை நினைக்காது மறந்து பரத்தையின் வீட்டிலே தங்கிவிட்டாய் என்ற தலைவனது தவற்றைச் சுட்டிக்காட்டுவதற்குத்தான். பரத்தையை நீ மணந்துகொண்டாய்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்று ஊரார் சொல்வர், நாங்கள் சொல்லவில்லை !என்பதும்; நீ நினைத்த இடத்திற்குச் செல், உன்னை யார் தடுக்கமுடியும் என்-பதும் தலைவனது தவற்றை மறைமுகமாகச் சுட்டிக்காட்டுவதாக அமைகிறது.

மற்றொரு பாடலில், தலைமகனைவாயில் மறுத்த தோழி, அவனது பரத்தமையைச் சுட்டிக்காட்டி அதனால் ஏற்படும் அலை த் தெளிவுறுத்தும்போது அங்கதக் குறிப்புப்படப் பேசுகிறாள்.[63]

'தலைவனே! நீ நாணில்லாதவனாவாய். ஒளி பொருந்திய நெற்றியையும், மலர் சூடிய கூந்தலையும் மாவடு போன்ற கண்ணையும், முத்துவடம் அசையும் மார்பகத்தையும் உடைய ஒரு பரத்தையோடு நீ நீர் விளையாட்டு அயர்ந்தாய் என்று பலரும் கூறுவர். அது உண்மையல்ல, பொய் என்று நாங்கள் மூடிமறைக்க முயன்றாலும், எம் செயலையும் கடந்து போர்க்களத்தில் எழும் ஓசையினைக் காட்டிலும் பெரிதாக அலராயிற்று. நீ பரத்தையுடன் நீர் விளையாடியதை நாங்கள் மறைக்க எண்ணினாலும் அது ஊர் முழுக்கப் பரவிட்டது என்று கூற அவனது செயலை இகழ்கிறாள் தோழி.

நெல்லரியும் வினைஞர் தம் தொழிலை விடுத்து இழிந்த கள் வண்டியின் ஆழ்ச்சியைப் போக்கற்குச் சிறந்த கரும்பினைச் சிதைப்பதுபோல, நீ இல்லறம் செய்தலாய நின் ஒழுக்கத்தைக் கைவிட்டு, இழிந்த பரத்தையின் இன்பத்தை நுகர்தற்குச் சிறந்த தலைவியை வருத்துகிறாய் என்று தோழி தலைவனை இகழ்கிறாள். இப்பாடலில் உள்ளுறையாக அங்கதக் குறிப்பு அமைந்துள்ளது.

மற்றொரு பாடலில், 'தலைவனே! பரத்தையை அறியேன் என்று கூறாதே! நான் அதனைமெய் என்று நம்பேன். நீ உண்மையில் நாணமில்லாதவன். உனது பரத்தையர் புனல் விளையாட்டை வெறுத்ததால் நீ நேற்று அவர்களுடன் சேர்ந்து குருகினை ஓட்டி விளையாடினாய். அதனால் எழுந்த அலர் மிகப்பெரிது' என்று வாயில் மறுக்கிறாள்.[64]

''நின் மாயம் உரையல்'' என்பது தலைவன் பொய் கூறுகிறான் என்பதனைக் குறிக்கும். பரத்தையர் புனல் விளை-யாட்டினை வெறுத்ததால் அவர்களுடன் சேர்ந்து குருகினை ஓட்டும் விளையாட்டினை ஆடுவாய் என்பது பரத்தையர் விருப்பத்திற்காகத் தலைவன் எதுவும் செய்வான் என்ற இகழ்ச்சியினைக் குறிப்பதாகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தோழி தலைவற்கு வாயில் மறுக்கின்ற மற்றோரிடத்தில்,

'தலைவனே! நீ பொய் கூறாதே! உன் வஞ்சனையை அறிவேன். உன் பரத்தமை வெளிப்பட்டதை நீ அறியமாட்டாய். பரத்தையுடன் நீ வையை ஆற்றில் இன்பம் நுகர்ந்ததை அப்பரத்தையர் ஊரார் அறியாமல் மறைக்க எண்ணினர். ஆனால் அது மறைக்க முடியாமல் அலராக எழுந்தது. கள்ளூர் என்ற ஊரில் அழகிய பெண் ஒருத்தியின் அழகை ஒருவன் கவர்ந்துண்ட பின்பு அவளை அறியேன் என்றான். அதனால் அப்பெண்ணின் கூட்டம் சான்றோர் அவையில் முறையிடப்பட்டது. உண்மையை உணர்ந்து அவனைப் பெரிய மரத்தின் கிளையில் கட்டிவைத்தனர். அவன் தலையில் நீற்றினைப் பெய்தனர். அப்பொழுது மிக்க ஓசை எழுந்தது. அவ்வோசையைக் காட்டிலும் உன்னால் எழுந்த அலர் பெரியதாயிற்று' என்று கூறுகிறாள்.[65]

''நின்மயம் கையகப்பட்டமை அறியாய்'' என்ற கூற்றில் தலைவனின் பரத்தமை ஒழுக்கம் அவன் அறியாத நிலையில் வெளிப்பட்டமை சுட்டப்படுகிறது.

பாடலின் பின்பகுதியில் கூறப்படும் நிகழ்ச்சி, பொய் கூறுவோருக்குக் கிடைக்கும் தண்டனையைக் காட்டற்கே. பொய் கூறுவதனால் தலைவனுக்கும் இத்தண்டனை கிடைக்கும் என்று குறிப்பாகக் காட்டி அவன் திருந்தித் தலைவியுடன் மட்டுமே வாழவேண்டும் என்ற கருத்தினைத் தோழி உணர்த்துகிறாள்.

வாயில்வேண்டிச் சென்ற தலைமகற்கு வாயில் மறுக்கும் தோழி,

'தலைவனே! நேற்று பரத்தையுடன் மணம் கமழும் பொழிலில் துயின்றாய். இன்று வையை நீர்ப்பெருக்கில் விளையாடினாய். அதனால் ஏற்பட்ட ஈரம் புலராத மார்புடன் எம் முன்னால் வந்து நிற்கிறாய். இதனை எமக்கு மறைக்க முடியுமோ? இதனால் எழுந்த அலர் பாண்டியன் நெடுஞ்செழியன் போர்ப்படையினர் வெற்றிக்களிப்பில் ஆடியதால் ஏற்பட்ட ஆரவாரத்தை விடப் பெரிதாக உள்ளது' என்று கூறுகிறாள்.[66]

இப்பாடலில் தலைவன் தன் பரத்தமை ஒழுக்கத்தை மறைத்தாலும், மறைக்க நினைத்தாலும் அவனது தோற்றம் காட்டிவிடுகிற நிலையையும், அலராகி ஊரெல்லாம் பரவிவிட்ட நிலையையும் தோழி குறிப்பாக உணர்த்துகிறாள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மற்றொரு பாடலில், 'பெரும்புகழையுடைய தலைவனே! உன் பரத்தை ஒருத்தி உன்னை இகழ்ந்து கூறி, கண்களால் வருத்தம் மிகப் பார்த்து, உனது மாலையினை அறுத்து, உன்னுடன் ஊடல் கொண்டு சிறு கலகம் செய்து எம் தெருவழியில் சென்றாள். இதுதான் உனது தலைமையோ? எம்மைப்போற்றாது அகன்று செல்' என்று தோழி வாயில் மறுக்கிறாள் [67]

பரத்தையிற் பிரிந்து வந்த தலைவன், தன் தலைமை தோன்றப் பரத்தையரை இழித்துரைத்துத் தலைவியைப் பாராட்டி நின்றான். இத்தகைய தலைவனைப் பரத்தை ஒருத்தி இகழ்ந்து, மாலையினை அறுத்து ஊடல்கொண்டு கலகம் செய்தாள் என்று தோழி கூறுவது தலைவனின் தலைமையை இகழ்வது ஆகும். அதனால் 'பேணாது அகன்மோ'' என்கிறாள். ''பெரும் பெயர் மகிழ்ந'' என்பதும் இகழ்ச்சிக் குறிப்பாக அமைந்து, தலைவனுக்குப் புகழ்இல்லை என்பதை உணர்த்துகிறது.

மற்றோரிடத்தில், 'தலைவனே! நீ பாணனுடன் கள்ளுண்டு எம் வீட்டிற்கு வராமல் நும் மனையான பரத்தையின் வீட்டில் இருந்தபோது, அப்பரத்தை மகிழ்ந்திருந்தாள். அம்மகிழ்ச்சி மிகப் பெரிது. நாங்கள் அதனைக் கருதியது இல்லை. அங்ஙனமாக நீ மறுப்பது நகையை உண்டாக்குகிறது' என்று தோழி வாயில் மறுக்கிறாள்.[68]

தலைவன் பரத்தையுடன் தங்கியிருந்த பொழுது பரத்தை மகிழ்ச்சியடைகிறாள். இந்நிகழ்ச்சியைத் தோழி நினையாதபொழுதும் தலைவன்தான் பரத்தை வீடு செல்லவில்லை என்று மறுப்பது தோழிக்கு நகையைத் தோற்றுவிக்கிறது. இங்ஙனம் தோழி தலைவனிடம் அங்கதக் குறிப்புப்படப் பேசி வாயில் மறுக்கிறாள்.

''யாம் அது பேணின்றோ இலம்; நகை நன்று அம்ம'' என்பவை தலைவனின் இயல்பை இகழ்வனவாக அமைந்துள்ளன.

'நீ பரத்தை வீட்டில் இருந்தாய். அதனால் பரத்தையும் மகிழ்ந்திருந்தாள். பாணனும் மகிழ்ந்திருந்தான். அது எங்களுக்குத் தெரியும். இப்பொழுது இங்கு வந்து பரத்தைவீடு செல்லாதது போலப் பேசுவது எங்களுக்கு நகையை உண்டாக்குகிறது' என்று தலைவனின் பொய்யைச் சுட்டிக்காட்டுவதில் அங்கதக் குறிப்பு அமைந்துள்ளது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தோழி பாணனிடம் பேசும் பேச்சில் அங்கதம்

தோழி பாணனிடம் பேசுவதாக அமைந்த பாடல்களில் அங்கதக் குறிப்புப்படப் பேசுவதைக் காணலாம். இவ்வகையில் நற்றிணையில் இரு பாடல்கள் காணப்படுகின்றன.[69]

'பாணர் தலைவனே! தலைவன் ஏனையொருத்திக்குப் பரியம் அளிக்கச் செல்கின்றபோது என்னைப் பார்த்துவிட்டான். உடனே, இவளுக்குரிய விலை இது எனத் தன் பெரிய தேரினை அலங்கரித்து எனது முன்றிலில் நிறுத்தி விட்டான். பின்னர் வேறொரு பரத்தையின் வீடு நோக்கிச் சென்றான். அவன் தேருடன் வந்த நீயும், அவன் பின் செல்லாது, தழும்பன் என்பான் ஊரில் பிச்சைக்கு வந்த யானை நிற்றல் போல எம்முடைய அட்டிற்சாலைக் கூரையின் பனை ஓலையைத் தொட்டு நிற்கிறாய். அப்படியே நில்' என்று ஒரு பாடலில் தோழி வாயில் மறுக்கிறாள்.

இப்பாடலில் தோழி, பாணனைப் பிச்சைக்காரன் என்று நேரடியாக வசைபாடுகிறாள். ''பிச்சை சூழ் பெருங்களிறு போல எம் அட்டில் ஓலை தொட்டனை நின்மே'' என்பது செம்பொருள் அங்கதமாக அமைந்து விளங்குகிறது.

தலைவன் தன்னைப் பார்த்ததால் தேரை நிறுத்திவிட்டுச் சென்றான். இல்லாவிட்டால் நேரடியாகத் தேருடன் சென்றிருப்பான் என்று தோழி தலைவன் இயல்பினையும் குறிப்பாக உணர்த்தி இகழ்கிறாள்.

மற்றொரு பாடலில், 'பாணனே! எம் ஆடைகள் தூய்மையாக இல்லை. அண்மையில் குழந்தை பெற்றமையால், குழந்தைக்குப் பால் கொடுக்கும் தன்மையால் எம்மீது முடை நாற்றம் வீசும் எவே தூய இழையணிந்த பரத்தையர் சேரியில் உள்ள தலைவன் கூடுதற்குரிய தகுதி எங்களிடம் இல்லை. நீ தலைவனைப் பரத்தையரிடம் கொண்டு செல். நீ பாடுவதில் வல்லவனாயினும் எங்களை வணங்காதே! இங்கேயே நீண்ட நேரம் நிற்காதே. பயனில்லாத சொற்களைக் கூறாதே' என்று தோழி வாயில் மறுக்கிறாள்.[71]

இப்பாடலில் தலைவன், பாணன் இருவரையும் இகழ்ந்து பேசுவதைக் காணலாம். தலைவன் விரும்பும் இளமையும், அழகும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இன்மையால் தலைவியை விடுத்துப் பரத்தையிடம் சென்ற அவனது தன்மை இகழப்படுகிறது. தலைவியின் சிறப்பை—மகப்பேறு பெற்ற தன்மையை—உணராது இருக்கும் தலைவன் நிலை சுட்டப்படுகிறது.

தலைவனுக்காக வாயில்வேண்டி வந்த பாணன் நிற்கும் நிலையும் தோழியால் எள்ளப்படுகிறது. பாணனே தலைவனைப் பிற பரத்தையரிடம் கொண்டு செல்பவன் என்பதைக் 'கொண்டு செல் பாண நின் தண்துறையூரனை' என்ற வரிகள் காட்டும்.

தோழி குயவன் வாயிலாகப் பாணனைப் பழிக்கும் பேச்சில் அங்கதம்

தோழி பாணனை நேரடியாக இகழாமல் குயவன் மூலமாக இகழ்கின்ற தன்மையில் அங்கதக் குறிப்புடைய பாடல் ஒன்று நற்றிணையில் காணப்படுகிறது.[72]

'இற்றை நாளில் இவ்வூரில் திருவிழா நடக்கிறது. எல்லோரும் சென்று காணுங்கள் என்று கூறிச் செல்லும் குயவனே! நீ செல்-கின்றபொழுது அங்குள்ள மகளிரை அழைத்து பெண்களே! பாணன் செய்த துன்பங்கள் மிகப் பலவாகியுள்ளன. எனவே, இப்பாணன் உள்ளே பொய்யை நிரப்பி வைத்து, மேலே மெய்ம்-மையைக் கொண்டு மூடிச் சொல்கின்ற கொடிய சொல்லில் மயங்-காமல் உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்' என்றும் கூறிக் செல்' என்று தோழி கூறுவதாக இப்பாடல் அமைகிறது.

இப்பாடலில் பாணனின் பொய் கூறும் தன்மையைக் காட்டி, அவனால்தான் தலைவன் பரத்தையிடம் செல்கிறான் என்றும், அவனே தலைவனுக்காகத் தலைவியிடம் வாயில்வேண்டித் தூதாக வருகிறான் என்றும் கூறுவது பாணனிடம் எச்சரிக்கையாக, இருக்க-வேண்டும் என்ற குறிப்பை உணர்த்தவே.

பாணன் கூறுவது எல்லாம் பொய்ம்மொழிகளே என்பதைக் குயவனிடம் கூறுவதுபோலத் தோழி குறிப்பாகக் காட்டுகிறாள்.

பரத்தை கூற்றில் அங்கதம்

மருதத்திணைப் பாடல்களில் பரத்தை கூற்றில் அமைந்த ஐந்து பாடல்கள் அங்கதக் குறிப்புடையனவாக உள்ளன. அவற்றுள் மூன்று

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாடல்கள் தலைவிக்குப் பாங்காயினார் கேட்பக் கூறுவதாகவும் (நற். 40; குறுந். 8; அகம். 276), இரு பாடல்கள் பரத்தைக்குப் பாங்காயினார் — கேட்பக் கூறுவதாகவும் (நற். 320; அகம். 166) அமைந்துள்ளன.

தலைவிக்குப் பாங்காயினார் கேட்பக் கூறியதில் அங்கதம்

தலைமகன் பரத்தையிற் பிரிந்த காலத்தில் தலைவி மகப்பேறடைந்து வெள்ளணி விழா காண்கிறாள். அதனையறிந்த தலைவன் பரத்தையை விட்டுத் தன் தலைவி வீடு செல்கிறான். அப்பொழுது தலைவன் சென்ற விதத்தைத் தலைவிக்குப் பாங்காயினார் கேட்குமாறு பரத்தை கூறுகிறாள்.[7]

'நறுமணமிக்க விரிப்பு விரித்த மெல்லணை மீது செவிலியுடனே அண்மையில் பிறந்த புதல்வன் துயில்கிறான். அழகான மனைவியும் கண்ணுறங்காமல் அருகே இருக்கிறாள். அத்தகைய நேரத்தில் தன் தந்தையின் பெயரைக் கொண்டிருக்கும் தன் மகன் பிறந்தமையால் நள்ளிருளில் கள்வனைப் போல் வந்து நின்றான் தலைவன்'.

இப்பாடலில் தலைவியைப் விட்டுப் பிரிந்த தலைவன், தனக்கு மகன் பிறந்த செய்தி கேட்டு நள்ளிரவில் செல்கிறான். பரத்தையிற் சென்றமையால் பகலில் செல்லத் தயங்குகிறான் என்பது குறிப்பு. இரவில் தலைவன் அவன் வீட்டிற்குள்ளேயே திருடன் போன்று செல்கிறான் என்று பரத்தை கூறுவது ஏளனக் குறிப்புடையதாக அமைகிறது.

இதுநாள் வரை தன்னிடம் இருந்த தலைவன் இப்பொழுது தனக்கு மகன் பிறந்துவிட்டான் என்று அறிந்தவுடன் தன்னைப் பிரிந்து அவன் வீடு செல்கிறானே! என்ற ஆற்றாமை காரணமாகத் தலைவனைக் 'கள்வன்' என்று குறிப்பிடுகிறாள் பரத்தை.

தலைமகளுக்குப் பாங்காயினார் கேட்பப் பரத்தை,

'தலைவனால் நமக்கு ஆம்பழி ஆவதாக! இனி நமக்கு நாண் என்பதும் உளதோ? தலைவன் எம் சேரிக்கு வந்தால், அவனது மனைவியும் பிற பெண்டிரும் காணும்படியாக அவன் மாலையையும் ஆடையையும் பிடித்துக் கொள்வேன் பெண்யானை ஆண்யானையை இழுத்து வருவதுபோல, எனது கூந்தலால் அவனைக் கட்டி அவன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மார்பினைச் சிறைசெய்வேன். அப்படிச் செய்யாவிட்டால் என் தாய் பாதுகாத்து வளர்த்த என் அழகு, இரந்தவர்களுக்கு ஈயாமல் சேர்த்தவன் பொருள் போல, அழியட்டும்' என்று சூளுரைக்–கிறாள் 75

இப்பாடலில் ''நாரை கள்வன் 'போலச் சாஅய் ஒதுங்கும் ஊரன்'' என்பதில் தலைவன் பிறரை நாடும் இயல்புடையவன் என்று உள்ளுறையாக அங்கதக் குறிப்பு சுட்டப்படுகிறது.

தலைவி தன்னை இகழ்ந்து கூறினாள் எனப் பிறர் சொல்லக் கேட்ட பரத்தை, தலைவிக்குப் பாங்காயினார் கேட்கும் படியாக,

'தலைவன் எம் மனையிடத்தே இருந்து எம்மைப் பெருமைப் படுத்தும் மொழிகளைக் கூறினான். அவனது வீட்டிற்குச் சென்றவுடன் முன்னின்றார் கையையும் காலையும் தூக்கும் பொழுது தானும் கைகால்களைத் தூக்கும் இயல்புடைய கண்ணாடியில் தோன்றும் பாவையைப் போன்று தலைவியிடம் உள்ளான்' என்று தலைவனை இகழ்ந்து கூறுகிறாள்.[76]

இப்பாடலில் தலைவன் தனக்கு வயப்பட்டான் போன்றிருந்–துவிட்டுத் தலைவியிடம் சென்று அவளுக்கு அஞ்சி 'அவள் மனம்–போல இயைந்து வாழ்கிறான் என்றும், அதனால் தலைவி செருக்–குற்று என்னை இகழ்கிறாள் என்றும் பரத்தை கூறுகிறாள்.

கண்ணாடியிற் பாவை முன்னின்றார் செய்தன செய்தலன்றித் தானொன்று கருதிச் செய்யாது போலத் தலைவனும் தலைவி செய்விப்பன செய்வதன்றித் தனக்கெனச் செயல் இலன் என்று இங்கு பரத்தை தலைவனை இகழ்வது குறிப்பிடத்தக்கது.

'புதல்வன் தாய்க்கு' என்று பரத்தை குறிப்பிடுவது. தலை–வன் ஆண்மையின் இழிந்து மனைவியைத் தாழ்ந்து ஒழுகுகின்றான் என்பதைச் சுட்டவே. இதனாலும் தலைவன் பரத்தையால் இகழப்–படுவதைக் காணலாம்.

பரத்தை தனக்குப் பாங்காயினார் கேட்பக் கூறியதில் அங்கதம்

பரத்தையிற் பிரிந்த தலைவன் அவளை நீங்கிப் புதிய பரத்–தை ஒருத்தியிடம் செல்கிறான். அதனை அறிந்த முதற் பரத்தை சினந்து தனது தோழியரிடம் கூறுவது போல,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'திருவிழா முடிந்த காலத்தில் இப்பரத்தைதன்னை நன்றாக ஒப்பனை செய்துகொண்டு தெருவில் சென்றாள். அப்பொழுது கல்லென்னும் நகை ஒலி உண்டாயிற்று. அந்நகையொலியைக் கேட்டவுடன், 'இவள் நம் கணவரைக் கைப்பற்றிச் சென்றுவிடுவாள்' என்று எண்ணி, குலப்பெண்டிர் அனைவரும் தத்தம் கணவரைப் பாதுகாத்துக் கொண்டு நன்மையடைந்தார்கள். எனவே தான் இவனைக் கைக்கொண்டாள், இது இவளுக்கு ஒரு அரிய செயல் இல்லை' என்று புதிய பரத்தையை இகழ்கிறாள்.[77]

விழா இல்லாத காலத்தில் இவள் வெளியே வந்தாள் என்பது இவள் ஆண்களைத் தன்வயப்படுத்துவதற்காக என்பதைக் குறிக்கும். குலப்பெண்டிர் அனைவரும் தத்தம் கணவரைப் பாதுகாத்துக் கொண்டதால், காக்கப்படாத இவனைக் கைப்பற்றிக்கொண்டாள் என்று குறிப்பால் புலப்படுத்தி, 'இது ஒன்றும் அரிய செயல் இல்லை' என்று புதிய பரத்தையை ஏளனம் செய்கிறாள்.

மற்றொரு பாடலில், பரத்தையொடு புனலாடிய தலைமகன் தலைமகளிடம் சென்று 'யான் அவ்வாறு புனலாடவில்லை' என்று கூறக்கேட்ட பரத்தை, தன் பாங்காயினார் கேட்ப,

'தோழி! பரத்தையுடன் யான் புனலாடி வந்தேனாயின் தெய்வம் என்னை வருத்துவதாக தலைவியிடம் தலைவன் சூளுரைத்தானாம். அவ்விதமாயின், நேற்று காவிரிப்புது வெள்ளத்தில் தாரணிந்த களிற்றினைப் போன்ற புணையின் தலையிடத்தைத் தழுவியிருந்து கூட்டத்திற்குரிய பெரிய அணியால் பொலிவுற்ற நம்மோடு கூடிப் புனலாடியவர் யார்?' என்று தோழியிடம் கேட்கிறாள்.[78]

தலைவன், பரத்தையாகிய தன்னுடன் புனலாடவில்லை என்று சூளுரைத்தால், நேற்று என்னுடன் புனலாடியவர் வேறு யார்? என்று கேட்கும் பரத்தை தன்னுடன் புனலாடியவன் தலைவன்தான் என்பதையும், அதனை அவன் மறைக்கிறான் என்பதையும் கேலியுடன் கூறித் தலைவனின் பொய்மையினைச் சுட்டிக்காட்டுகிறாள்.

குறிஞ்சித்திணைப் பாடல்களில் அங்கதம்

சங்கஇலக்கிய அகப்பாடல்களில் குறிஞ்சித்திணையில் பத்துப் பாடல்கள் அங்கதக் குறிப்புடையனவாக அமைந்துள்ளன.[79] இப்-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாடல்களுள் தலைவனையோ, வேலனையோ, நேரடியாகவோ, குறிப்பாகவோ ஏளனம் செய்கின்ற முறையில் இருப்பதைக் காண முடிகிறது. தலைவன் செய்யும் தவற்றினைச் சுட்டிக்காட்டி, அவன் அதனை உணர்ந்து கொள்ளும்படியாகச் சில பாடல்கள் அமைந்துள்ளன.

1. சிறைப்புறமாகத் தலைவன் இருந்தபொழுதும்,
2. தலைவன் களவு நீட்டித்த பொழுதும்,
3. தலைவன் பிரிந்திருந்த பொழுதும்

ஆகிய மூன்று சூழல்களில் தலைவன் தொடர்புடைய அங்கதப் பாடல்கள் அமைந்திருப்பதைக் காணலாம்.

வேலனைக் கேலி செய்வதாக உள்ள பாடல்கள் அனைத்தும் வெறியாடல் தொடர்புடைய சூழல்களில் அமைந்துள்ளன.

இவற்றுள் தலைவனை ஏளனம் செய்கின்ற பாடல்களாக ஆறு பாடல்களும்,[80] வேலனை ஏளனம் செய்கின்ற பாடல்களான நான்கு பாடல்களும்[81] உள்ளன. தலைவி கூற்றாக நற்றிணைப்பாடலும்,[82] பாங்கன் கூற்றாகக் குறுந்தொகைப் பாடலும்[83] உள்ளன. ஏனைய எட்டுப் பாடல்களும் தோழி கூற்றாக நற்றிணை, ஐங்குறுநூறு ஆகிய அக நூல்களில் காணப்படுகின்றன.[84] பிற அகநூல்களில் குறிஞ்சித் திணைப் பாடல்களில் அங்கதம் பற்றிய குறிப்புகள் கிடைக்கவில்லை.

இவற்றுள் ஏழு பாடல்கள் குறிப்பாகவும், மூன்று பாடல்கள் நேரடியாகவும் அங்கதக் குறிப்புடையனவாக அமைந்துள்ளன. குறிஞ்சித்திணைப்பாடல் ஒன்றில் உள்ளுறை மூலமாகவும், அங்கதக் குறிப்பு உணர்த்தப்படுகிறது.

தலைவி கூற்றில் அங்கதம்

சிறைப்புறமாகத் தலைவி தோழிக்கு உரைத்த முறையில் அங்கதக் குறிப்பு அமைந்த ஒரு பாடல் நற்றிணையில் காண்படுகிறது.[85]

களவு மேற்கொண்ட தலைவன் பிரிவின் காரணமாகத் தலைவியை வருத்துகிறான். அவ்வாறு தன்னை விட்டுப் பிரியாது விரை-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வில் திருமணம் முடித்துக்கொள்ள வேண்டும் என்று விரும்பிய தலைவி தோழியைப் பார்த்து,

'நான் என், தந்தைபிடம் தோள்வளை கேட்டு அழுததும், நான் வேண்டாமென்று கழற்றினாலும் கழன்று நீங்காது ஒருபொழுது சுழன்றாலும் தன் எல்லை நீங்காது தங்கி எனக்கு உண்டாகிய தோளின் பழியை மறைக்கின்ற சிறிய தோள்வளை செய்து கொடுத்-தான். நானும் நம் காதலரும் ஒருவரை ஒருவர் இடையிடை விட்டுப் பிரிகின்ற உண்மை சிறிதளவு அறிந்திருப்பான் போலும். என் ஐ வாழிய' என்று கூறுகிறாள்.

இப்பாடலில் தான் வளையல் வேண்டுமாறு கூற, தந்தை இறுக்கமான தொடியை வாங்கிக் கொடுத்துத் தலைவன் பிரிவால் ஏற்படும் மெலிவினைப் பிறருக்குப் புலனாகாமல் செய்துவிட்டான் என்று தலைவி அங்கதக் குறிப்புப்படப் பேசுகிறாள்.

''திருந்துகோல் எல்வளை வேண்டியான் அழவும்
.....
என் ஐய வாழிய பலவே...
நிலைப்ப நீங் காது வரின்வரை அமைந்து
தோட்பழி மறைக்கும் உதவிப்
போக்கில் பொலந்தொடி செறீஇ யோனே''

என்பது பாடலடியாகும்.

தலைவனின் பிரிவால் தலைவி உடல் மெலிதல் இயல்பு உடல் மெலிந்தால் தோள்வளை கழலும். அதனால் அவளது மாறுபாடு கண்டு செவிலித்தாயும், நற்றாயும் ஐயம் கொள்வர். இத்தகைய துன்பங்களுக்கு எல்லாம் இடம் தராமல், 'எனது தந்தை சிறிய-தொடி செய்து தந்தான். எனது உடல் தலைவன் பிரிவால் மெலிந்தாலும் தொடி தன் நிலையில் இருந்து கெடாது. எனது காதலை ஒருவரும் அறியமாட்டார். எனவே தலைவன் திருமணம் செய்துகொள்ளக் கால நீட்டிப்புச் செய்தாலும் பரவாயில்லை' என்று தலைவனின் கால நீட்டிப்பை ஏளனம் செய்து கண்டிக்கிறாள். இதனால் தலைவன் தனது தவற்றினை உணர்ந்து விரைந்து வந்து மணம் முடிக்கவேண்டும் என்பது குறிப்பாக இப்பாடலால் பெறப்-படுகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தோழி கூற்றில் அங்கதம்

தோழி தலைவியின் வாழ்க்கையில் இரண்டறக் கலந்து நிற்-பவள் தலைவியின் நல்வாழ்க்கையினைக் குறிக்கோளாகக் கொண்டு தலைவனிடம் அவளை மணந்துகொள்ளத் தூண்டுபவள். எனவே அவனது தவறுகளைச் சுட்டிக்காட்டி, ஏளனம் செய்து, அவனை நல்வழிப்படுத்துவாள். தலைவியின் மாறுபாடு கண்டு தாய் 'நோய்' என நினைத்து வெறியாட வேலனை அழைக்கும் பொழுதும் வேல-னிடம் குறிப்பாக, தலைவியுடைய நோயின் காரணத்தைச் சுட்டிக்-காட்டி, வேலனை ஏளனமும் செய்வாள். இத்தகைய சூழல்களில் அங்கதக் குறிப்புடைய பாடல்கள் அமைந்துள்ளன.

தலைவன் சிறைப்புறத்தானாக இருந்த சூழலில் அங்கதம்

தோழி தலைமகன் சிறைப்புறத்தானாக, தலைமகளுக்கு உரைப்பவளாய் இயற்பழித்து இன்னது செய்தும் என்பாளாய்ச் சொல்லியதாக ஒரு பாடல் உள்ளது.[86]

தலைவன் விரைவில் தலைவியை மணம் முடிக்கவேண்டும் என்று விரும்பிய தோழி தலைவனின் இயல்பை,

'தோழி! மலைநாடனை நெருங்கி, உம்மை அடைந்த எம்மை நீ கைவிடுதலால், நீ சான்றோன் இல்லை என்று கூறி வரவேண்டி நாம் நாணத்தை விட்டு மன்றத்திற்குப் பகலில் சென்று அவன் ஊர் பற்றி விசாரித்து வருவோமா?' என்று இகழ்ந்து கேட்கிறாள்.

இப்பாடலில், தாயின் கட்டுக்காவலை மீறி, வீட்டை விட்டு வெளியேறி, பகல்நேரத்தில் பலரறிய மன்றத்தில் தலைவனுடைய ஊரைப்பற்றி வினவித் தலைவன் ஊருக்குச் செல்வோம் என்று தோழி கூறுகிறாள். அவ்வாறு செல்வதற்கு அவள் சொல்லும் காரணம், சென்று தலைவனை 'நீ சான்றோய் அல்லை' எனச் சொல்வதற்கே. உண்மையில் தோழி இதனை நடைமுறைப்படுத்தக் கூறவில்லை. சிறைப்புறமாக இருக்கும் தலைவனிடத்தில் தங்களது துயரநிலை-யையும், அதைப்போக்குவதற்கு எடுத்துக்கொள்ளும் முயற்சிகளையும் அவனுக்குப் புரியவைத்து, அவனை விரைவில் மணம் முடிக்கத் தூண்டுவதற்கேயாகும்.

இக்குறிப்பினாலும், தலைவன் இயல்பினைக் குறிப்பால் சாடுவதாலும் இப்பாடல் அங்கதப் பொருளுடையதாகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தினையரிந்துழிக் கிளியை நோக்கிக் கூறுவாள் போலச் சிறைப்புறத்தானாகிய தலைவனுக்குத் தோழி,

'குன்றத்தில் வாழும் குறவர்கள் விதைத்த தினை வளர்ந்து அது கொய்யப்பட்ட நிலையில் அரிதாள் மட்டுமே நிற்கும். அந்நிலையில் கூடச்சிவந்த வாயினையுடைய பசிய கிளிகள் அப்புனத்தைவிட்டு நீங்காத அன்பினை உடையனவாய் உள்ளன. இரங்கத்தக்கன அக்கிளிகள்' என்று கூறுகிறாள்.[87]

இப்பாடலில் காதல் தொடர்பான செய்திகளோ, அகப்-பொருள் இயல்போ காணப்படவில்லை. ஆனால் துறைக்குறிப்போடு இணைத்து வைத்துப் பார்க்கும்போது கிளியைப் போலன்றித் தலைவன் தலைவியைப் பிரிந்து அன்பின்றி இருக்கிறான் என்ற பொருள் தோன்றுகிறது. எனவே தலைவனது அன்பின்மையை இடித்துக்காட்டக் 'கிளியை' இங்கே கருவியாகப் பயன்படுத்தியதில் அங்கதக் குறிப்புக் காணப்படுகிறது.

தினைக்காக மட்டுமே தினைப்புனம் வரும் கிளிகள், தினைக்-கதிர்கள் அறுக்கப்பட்டு அரிதாள் மட்டுமே இருக்கும்பொழுதுகூட அதனைவிட்டு நீங்காது உள்ளன என்று தோழி கூறுவது, 'தலைவியின் இளமைநலம் புதல்வற் பயந்து முதுமை எய்துத-லால் குறையினும் பிரியாப் பேரன்புடன் வாழவேண்டும்' என்று அறிவுறுத்துவதற்கே.

இவ்வாறு குறிப்பாக அறிவுறுத்திய காரணத்தாலும் இப்பா-டலில் அங்கதம் இருப்பதாகக் கொள்வளாம்.

வேலன் வெறியாடும் சூழலில் அங்கதம்

வெறிவிலக்கலுறும் தோழி தமர்கேட்பத் தலைமகளை வினவு-வாளாய்ச் சொல்லியதாக ஒரு பாடல் உள்ளது.[88]

இப்பாடலில், 'அன்னை வெறி அயர்தற்பொருட்டு வேலனை அழைத்துள்ளாள். அவன் எடுக்கும் வெறியால் விளையும் பயனை நான் நன்கு அறிவேன். அழகிய இம்மனையிடத்தே வெறியாடிக் கன்னத்தை அணிந்து, 'இவளை அணங்கியவன் முருகன்' என்று அவன் சொன்னால். 'முருகன் என்னும் பெயர் அம்மலை நாடனது பெயர் ஆமோ? என்று கேட்பேன்' எனததோழி தோழி கேட்கிறாள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வேலன் தலைவியை முருகன் அணங்கியிருக்கிறான் என்று சொன்னால் என் தலைவன் பெயர் முருகனோ? என்று கேட்பேன் என்று தோழி கூறி வேலனைக் கேலி செய்கிறாள்.

இப்பாடலில் தலைவிக்கு நோய் செய்வதன் முருகன் என்று கூற, மலைநாடனது பெயர் அருவரை நாடனது பெயராகுமே என்று வேலனை எள்ளி நகையாடுவது போல இருப்பதாலும், அவ்–வாறு எள்ளி நகையாடுவதன் மூலமாகத் தலைவியின் களவொழுக்–கத்தைத் தாய்க்குக் குறிப்பாகப் புலப்படுத்துவதாலும் இப்பாடல் அங்கதக் குறிப்புடையதாகிறது.

'தலைமகள் வேறுபாடு கழங்கினால் தெரியும்' என்று வேலன் கூறியபோது அதனைப் 'பொய்' என இகழ்ந்த தோழி வெறி–விலக்கிச் செவிலிக்கு அறத்தொடு நின்றதாக ஒரு பாடல் உள்ளது [89]

இப்பாடல் 'மலையையும் வானையும் வென்றுகொண்ட சினத்தை உடைய முருகனது வேலை ஏந்திய வேலன் புதுமணல் இடப்பட்ட முற்றம் அழகுபெற அமைத்துக் கழங்கினால் அறிந்துகொள்ளலாம் என்கிறான். அப்படி என்றால், இவளது கற்பு நலம் நன்று மிக நன்று' என்று தோழி கூறுவதாக அமைகிறது.

தலைவியின் நோயைக் கழங்கினால் அறியலாம் என்றால் தலைவியின் கற்பின் திறம் மிக நன்று எனத் தோழி கூறுவதும் வேலனை இகழ்தற் பொருட்டே. வேலனால் இவளுக்குற்ற நோய் தலைவனால் நேர்ந்தது என்று சொல்லாமல், முருகனால் நேர்ந்தது என்று பொய்யுரை கூறுவதைக் குறிப்பிட்டு, அவனை இவ்விதம் தோழி இகழ்வது அங்கதக் குறிப்புடையதாக அமைகிறது.

வேலன் கூறிய மாற்றத்தை மெய் எனக் கொண்ட தாய் கேட்பத் தலைமகளுக்குத் தோழி கூறிய ஐங்குறுநூற்றுப் பாடலிலும் அங்கதக் குறிப்பைக் காணலாம்.[90]

இப்பாடல். 'கருவிகளையுடைய அச்சம் பொருந்திய மலை–நாடனை அறியாதவனாய், புதுமணல் பரப்பியவிடத்தே கழங்கு வைத்து,'இவளது மெலிவிற்குக்காரணம் முருகன்' என்று கூறுகிறான். தாயும் அதனை மெய் எனக் கொண்டாள். அவ்வேலன் வாழ்வானாக' என்று தோழி கூறுவதாக அமைகிறது.

இப்பாடலிலும் தோழி வேலனைக் கேலி செய்து இகழ்வதைக் காணமுடிகிறது. உண்மையான நோயை அறியாது, முருகனே

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காரணம் என்பது வேலனது அறியாமையையே காட்டும் என்ற குறிப்புப்பட மொழிகிறாள் தோழி. 'வேலன் மற்றவன் வாழிய என்பதும் குறிப்பு மொழியாகஅமைந்து வேலனை இகழ்வதைக் காணலாம்.

இப்பாடலிலும் முன் இரு பாடல்களைப் போலவே தலைவியின் காதல் ஒழுக்கத்தைத் தாய்க்குப் புலப்படுத்துவதற்கு வேலனைக் குறிப்பாக இகழ்ந்து பாடுவதில் அங்கதக் குறிப்புக் காணப்படுகிறது.

தோழி தெய்வத்திற்கு உரைப்பாளாய் வெறிவிலக்கிய பாடலிலும் அங்கதக் குறிப்பு இருப்பதைக் காணலாம்.[91]

களவுக்காலத்துப் பிரிவிடை வேறுபட்ட தலைவியை நோக்கி 'இவள் முருகனால் அணங்கப்பட்டாள்' என்று அன்னை வெறியெடுத்தாள். அதனைக்கண்ட தோழி அறத்தோடு நிற்பாளாய் வெறிவிலக்க எண்ணினாள். வேலன் மேல் வந்த முருகனை நோக்கி 'நாடனது மார்பினால் வந்த இந்நோய் உன்னால் அணங்கப்பட்டது அன்று என்று நீ அறிவாய். இருந்தும் நின் அணங்கு என்று விலக்குவதற்காகப் பலி ஏற்க வருவாய் என்றால் நீ அறிவில்லாதவனே. வாழிய முருகே!' என்று தோழி கூறுகிறாள்.

இப்பாடலில் தோழி முருகனை எள்ளி நகையாடுவதைக் காணலாம். முருகனால் ஏற்பட்ட நோய் அல்ல இது என்று நன்கு அறிந்திருந்தும் முருகன் பலி ஏற்க வருகிறான் என்றால், அவன் அறியாமை உடையவன்தான் என்று இகழ்கிறாள். ''கடவுளாயினும் ஆக மடவை மன்ற வாழிய முருகே'' என்று முருகனைத் தோழி ஏளனம் செய்வது அங்கதக் குறிப்புடையதாக விளக்குகிறது.

தலைவன்பிரிவு நீட்டித்து வந்த சூழலில் அங்கதம்

வரைவிடைவைத்துப் பிரிந்த தலைமகன் நீட்டித்து வந்த-போது தோழி,

'தோழி! கேள்! நம் மலையில் உள்ள மலரின் தேனை உண்ணும வண்டைப்போல நம்மைவிட்டு நீங்கி உன் அழகைக் கவர்ந்து கொண்ட அன்பில்லாதவன் இப்பொழுது வந்துள்ளான் காண்க' என்று தலைவியிடம் கூறுகிறாள்.[92]

இப்பாடலில் தலைவனைத் தோழி **'அன்பில்லாதவன்'** என்று இகழ்கிறாள். காந்தள் மலரின் தேனை உண்டு பிரிந்து செல்லும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வண்டு போலத் தலைவனும் தலைவியின் நலனை நுகர்ந்து சென்றான் என்பதைக் காட்டி, தலைவியைத் திருமணம் செய்து-கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்துகிறாள் தோழி.

பிரிந்து சிறிதுகால நீட்டிப்புச் செய்துவந்த தலைவனை 'அன்பிலாளன் வந்தனன்' என்று ஏளனத்தோடு கூறிய காரணத்-தினால் இப்பாடல் அங்கதக் குறிப்புடையதாகிறது.

களவு நீட்டித்த சூழலில் அங்கதம்

செறிப்பறிவுறுக்கப்பட்டபின் வரைவின்கண் செல்லாது, பின்-னும் வரவு வேண்டிய தலைமகனைத் தோழி நெருங்கச் சொல்லி வரைவு கடாவுகிறாள்.

தலைவி இற்செறிக்கப்படுகிறாள். இதனைத் தோழி தலை-வனுக்குக் கூறி விரைவில் மணம் முடித்துக்கொள்ளச் சொல்கிறாள். ஆனால் தலைவன் களவொழுக்கத்தினை விரும்புகிறான். இதனால் தோழி தலைவனைக் கடிந்து பேசுகிறாள். 'மலைநாடனே! தலைவி இங்கே துன்புறுகிறாள். உன்னை விரும்பியவர்களது துன்பத்தைத் தீர்க்கும் நல்வினைப் பயனை நீ அடையாத இயல்புடையாய் என்றால் அவ்வியல்பு உனக்குத் தகுமா?' என்கிறாள்.[93]

தலைவி துன்பம் அடைந்திருக்கிறாள். அவள் துன்பத்தைத் தீர்க்க வேண்டியது உனது கடன். அதனைச் செய்யாதிருப்பது உனது இயல்புக்குத் தகுதியல்ல என்றும், வரையாது களவின்பமே காமுறுதல் உனது பெருமைக்கு இழுக்கு என்றும் கடிந்துரைக்கிறாள்.

தலைவனின் இயல்பைத் தோழி,

''குன்றநாட! தகுமோ — பைஞ்சுனைக்
குவளைத் தண் தழை இவள் ஈண்டு வருந்த
நயந்தோர் புன்கண் தீர்க்கும்
பயம் தலைப்படாஅப் பண்பினை எனினே?''

என்று நேரடியாக இடித்துரைப்பதில் அங்கதக் குறிப்புக் காணப்-படுகிறது.

பாங்கன் கூற்றில் அங்கதம்

காமநோயால் மெலிந்த தலைவனை, 'இது உன் தகைமைக்குத் தக்க தன்று' என்று கடிந்துரைப்பதாகக் குறுந்தொகையில் ஒரு பாடல் உள்ளது.[94]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'பெரிய மலையுச்சியில் தோன்றிய வெள்ளிய அருவி நீர் முழவு போன்று ஒலித்து, பக்க மலையின் கண்ணே வீழும். இத்தகைய மலைகளையுடைய தலைவனே! காமநோய் வெறுக்கத் தக்கதொன்று. ஏனெனில் தன்னைச் சிறிதும் நன்று என உணராதவரிடத்தும் வலிந்து சென்று குறையிரந்து நிற்கும் மடமையை அது உடையது' என்று பாங்கன் தலைவனிடம் கூறுவதாக அப்பாடல் அமைகிறது.

பெரிய மலையுச்சியில் பிறந்த அருவி தன் பிறப்புயர்வு நோக்காது, தாழ்ந்த மலைகளிடத்தே வீழ்ந்து இழிவது போல, நீயும் உன் உயர்குடிப் பிறப்பிற்கேற்ப நக்காது காமநோயால் இழிந்து கலங்குகின்றாய் எனப் பாங்கன் தலைவனைக் கடிந்துரைக்கின்றான். இப்பாடல் உள்ளுறை மூலமாகத் தலைவனை இகழ்ந்துரைக்கும் அங்கதக் குறிப்பினை வெளிப்படுத்தி நிற்கக் காணலாம்.

நெய்தல்திணைப் பாடல்களில் அங்கதம்

நெய்தல்திணைப் பாடல்களில், தலைவி கூற்றாகவும், தோழி கூற்றாகவும் ஐந்து பாடல்கள் அங்கதக் குறிப்புடையனவாக உள்ளன [95]

இப்பாடல்களில் தலைவனைக் குறிப்பாக இகழ்ந்தும், துன்பம் தரக்கூடிய பொழுதினை இகழ்ந்தும் அங்கதம் அமைந்திருக்கக் காணமுடிகிறது

தலைவி கூற்றில் அங்கதம்

தலைவி கூற்றாக அங்கதக் குறிப்புடைய பாடல்கள் மூன்று உள்ளன [96]

வாயில் வேண்டி வந்த பாணன் தலைவனின் காதல் தன்மை கூறினான். அப்பொழுது தலைமகள் வாயில் மறுத்து,

'பாணனே! தில்லை மரங்களினால் ஆகிய வேலி சூழ்ந்த இவ்வூரில் கல்லென்னும்படி அலர் எழுந்து பரவாதாயின் கொண்கனது நட்புப் பெரிதும் நன்றே' என்று கூறுகிறாள். [97]

தலைவன் புறத்தொழுக்கத்தால் அலர் பரவுகிறது. அவ்வலரையும் உன்னால் தடுக்க முடியவில்லை. இவ்வலர் இல்லாவிட்டால் தலைவன் நட்பு நன்றே என்று கேலியாக கூறுவதனையும் காணமுடிகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

''நன்றே, பாண! கொண்கனது நட்பே
தில்லை வேலி இவ் ஊர்க்
கல்லென் கௌவை எழாஅக் காலே''

என்பது பாடலடிகள்.

மிகச்சிறிய இப்பாடலில் 'நன்றே' எனத் தொடங்கியிருப்பதும். 'கௌவை எழாஅக் காலே' என்று முடிந்திருப்பதும் அங்கதச் சுவைபட அமைந்துள்ளது.

மற்றொரு பாடல், வாயில் வேண்டி வந்த பாணன், 'நீர் கொடுமை கூறல் வேண்டாம்; நும்போல் அருளுடையர்' என்றார்க்-குத் தலைமகள் சொல்லியதாக அமைகிறது.[98]

'பாணனே! கேட்பாயாக; புன்னையின் அரும்பு மிக்க கானற் சோலையினுடைய இவ்வூரில் அவர் அருளுந் திறம் அலராக நின்றது. அவ்வாறாக அவர் அருளுடையராதல் எங்ஙனம் அமையும்?' என்று தலைமகள் கூறுவதாகத் பாடல் அமைகிறது.

இப்பாடலிலும் தலைவனின் புறத்தொழுக்கத்தைக் கூறி அதனால் அலர் எழுந்தது என்று கூறுகிறாள் இத்தகைய புறத்தொழுக்கம் கொண்ட தலைவன் அருளுடையவன் இல்லை என்ற குறிப்புப்பட 'அவர் அருளுமாறே' என்று தலைவி கூறுகிறாள்.

'அலர் ஆகின்று அவர் அருளுமாறே' என்ற பாடல் அடிகளில் அவனது பரத்தமை ஒழுக்கத்தை 'அருளுமாறு' என்று அங்கதப் பொருள்படக் கூறியிருப்பது குறிக்கத்தக்கது.

மற்றொரு பாடலில். தலைவன் பிரிந்துறையும் நாளில் தலைவி, அந்தி மாலைப்பொழுதின் வரவுகண்டு ஆற்றாமையால்,

'ஆம்பல் மலர்கள் குவியத் தொடங்கிவிட்டன. இப்பொழுது பிரிந்திருப்பவர்களின் உயிரை உண்ணும் மாலைக் காலமும் வந்தது. அது வாழ்க! அம்மாலைப்பொழுது மட்டுமா என்னைத் துன்புறுத்து-கிறது? அதன் பின்னாக ஆற்றமுடியாத துயர் செய்யும் இரவுக் காலத்தையும் உடையதாக உள்ளது' என்று கூறுகிறாள்.[99]

தன்னைத் துன்புறுத்துகின்ற மாலைப்பொழுதினை 'வாழியோ மாலை!' என்று தலைவி கூறுகிறாள். இது குறிப்புமொழியாக அமைந்து துன்பம் தரக்கூடிய மாலைப்பொழுது ஒழியட்டும் என்பதை உணர்த்துகிறது. 'மாலைவாழி' என்றது அது கெடுக

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்னும் பொருளில் வந்த குறிப்புமொழி என்று பெருமழைப் புலவரும் குறிப்பிடுவார்.[100]

தோழி கூற்றில் அங்கதம்

தோழி கூற்றாக அமைந்த இரண்டு பாடல்களில் அங்கதக் குறிப்பு அமைந்துள்ளது[101] அவை வரைவுகடா அவுதல் என்ற சூழலில் அமைந்த பாடல்கள் ஆகும்.

தோழி செறிப்பறிவுறுத்தி வரைவுகடாவுகின்ற ஒரு பாடலில்,

'தலைவனே! தலைவியின் களவு ஒழுக்கத்தைத் தாய் அறிந்து இற்செறித்துக் காவல் செய்கிறாள். எனவே எமது இளமையும் அழகும் வீட்டிலேயே கெடுப்படியாக; வீட்டை விட்டு வெளியே செல்லமுடியாது இருப்போம். இவ்வீட்டிலேயே வயதாகி இறப்போம். இத்தீங்கினை விளைத்த நீ நெடுங்காலம் வாழ்வாயாக!' என்று கூறுகிறாள்.[102]

இப்பாடலில் இற்செறிக்கப்பட்ட தலைவியின் நிலையினைக் கூறியிருப்பதைக் காணலாம். இத்தகைய நிலைக்குக் காரணம் நீ தான்; எனவே விரைந்து மணம்முடித்துக்கொள் என்று கூற எண்ணுகிறாள் தோழி. அதற்காக 'வாழிய' என்ற சொல்லைக் கூறுகிறாள். இச்சொல் இகழ்ச்சிக் குறிப்பாக அமைந்து தலைவனின் குற்றத்தைச் சுட்டிக்காட்டி நிற்கிறது. எனவே இது அங்கதப் பொருளுடையது.

வேற்றுவரைவு நேர்ந்தது கூறித் தோழி தலைவனை வரைவு கடாஅவிய நிலையில் உள்ள ஒரு பாடலிலும் அங்கதக் குறிப்புக் காணப்படுகிறது[103]

'நண்பனே! யாரை நட்பாகக் கொண்டுள்ளாய்? நீ எமக்கு எத்தன்மையுடையவன்? ஆராய்ந்து பார்த்தால் நட்புக் கொண்டவன் போலத் தெரியவில்லை. அயலவன் போன்றிருக்கின்றாய் உன்னால் நான் நலன் இழந்தேன். அதனைத் தந்து அப்பாற் செல்வாயாக!' என்பது பாடற் கருத்து.

இப்பாடலில் "யாரை எலுவ யாரே நீ எமக்கு யாரையும் அல்லை" என்ற வரிகள் தலைவியைக் காதலித்த தலைவனை 'யார் நீ' என்பது போலக் கேட்டு அவன் நினைவு மறந்துபோகும் அளவுக்குக் காலம் நீட்டித்ததைக் கேலியுடன் சுட்டிக்காட்டித் தலைவனைத் தோழி இடித்துரைக்கக் காணலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மகளிர் கழித்துப்போட்ட பூவை முதிர்ந்த பசு தின்னும் என்ற உள்ளுறையால் நீ களவு ஒழுக்கத்தில் கூடிப் பின் கைவிட்ட தலைவியைப் பிறர் மணம் முடிக்க இருக்கின்றார் என்பதைக் காட்டுகிறாள். எனவே நீ விரைவில் மணம் முடித்துக்கொள் என்றும் சுட்டுகிறாள்.

ஏளனம் இருப்பதாலும் உள்ளுறையில் குறிப்புப்பொருள் இருப்பதாலும் இப்பாடலில் அங்கதம் அமைந்துள்ளது.

பாலைத்திணைப் பாடல்களில் அங்கதம்

சங்க இலக்கியப் பாலைத்திணைப் பாடல்களில் ஆறு பாடல்களில் மட்டுமே அங்கதக் குறிப்புகள் அமைந்துள்ளன.[104] அவை தலைவி கூற்றிலும், தோழி கூற்றிலும், தாய் கூற்றிலும் அமைந்துள்ளன. இவற்றுள் ஐந்து பாடல்கள் தலைவன் தலைவியை விட்டுப் பொருள் தேடிப்பிரிந்து செல்கின்ற பொழுது தலைவியாலும், தோழியாலும் பாடப்பட்டவையாகும். ஒரு பாடல் தாய் தன்மகளைப் பிரிந்த வருத்தம் தாங்காது வசைபாடும் பாடலாக அமைந்துள்ளது.[105]

தலைவி கூற்றில் அங்கதம்

தலைவன் தன்னை விட்டுப் பொருள் தேடிச் செல்லப் பிரிந்த பொழுது தலைவி கூறுவதாக அமைத்துள்ள பாடல்களில் அங்கதப் குறிப்பினைக் காணமுடிகிறது. அப்பாடல்களில் தன்னை விடுத்துக் பொருளே சிறந்தது என்று நினைத்துச் செல்லும் தலைவனின் தன்மையினை மறைமுகமாகத் தலைவி கண்டித்து தலைவனின் அன்பின்மையினையும் சுட்டிக் காட்டுகிறாள்.

பொருள்வயிற் பிரியக் கருதிய தலைவன், தன் கருத்தைத் தோழிக்குக் கூறினான். தோழி தலைவிக்குக் கூறினாள். அப்பொழுது தலைவி புலந்து,

'தோழி! அருளையும், அன்பையும் நம் உள்ளத்தில் இருந்து அகற்றி, எனக்குத் துணையாக இருப்பதையும் நீக்கி, நிலையில்லாத பொருளைக் கருதி அதற்காகப் பிரியக் கருதுபவர்கள் அறிவுடையவர்களாக இருக்கட்டும். அவரது பிரிவிற்கு ஆற்றாது வருந்தும் நாம் அறிவற்றவர்கள் ஆகட்டும்' என்கிறாள்.[106]

இப்பாடலில் தலைவன் பொருள்வயிற் பிரிவதைத் தலைவி வெறுக்கிறாள். இல்வாழ்க்கைக்குப் பொருள் மட்டும் இன்றியமை-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யாதது அல்ல என்றும், அதனையே விரும்பிச் செல்வதுதான் அறிவுடைமை என்று நினைத்தால் நினைக்கட்டும் என்கிறாள். இதில் 'உரவோர் உரவோர் ஆக' என்ற வரி தலைவனின் பொருள்தேடும் தன்மையைச் சுட்டி, தன்னை நினைக்காத தன்மையை உணர்த்துகிறது.

பிரிந்து செல்லும் தலைவனை அறிவுடையவர் என்றும் அவன் பிரிவிற்கு வருந்தும் தன்னை அறிவற்றவள் என்றும் சொல்வது மறைமுகமாக எதிரிடைப் பொருளைத் தருவதைக் காணமுடிகிறது. உரவோர் என்ற சொல் எதிரிடையான பொருளை உணர்த்துவதனால் இது அங்கதக் குறிப்புடையது எனலாம்.

பருவ வரவின்கண் ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்கு,

'தோழி! நம் தலைவரோ கேடில்லாத சிறந்த பொருளைக் கொண்டுவரும் பொருட்டுப் பிரிந்து சென்றுள்ளார். அவரை நினைந்து நினைந்து நான் வருந்தி இருக்கின்றேன். இச்சமயத்தில், மழையும் என்மீது இரக்கம் கொள்ளவில்லை. இதனை எப்படி ஆற்றுவேன்' என்று தலைவி கூறுகிறாள்.[107]

இப்பாடலில் பொருள்தேடிப் பிரிந்துசென்ற தலைவனின் செயலைக் கடிந்துரைக்கிறாள் தலைவி பொருட்செல்வம் அழியக்கூடியது என்றும், நிலையில்லாதது என்றும் கூறி அக்கேடுடைய செல்வத்தைத் தேடிச் சென்றிருக்கிறான் என்ற குறிப்புப்படப் பேசியுள்ளாள். இப்பாடலில் 'கேடில் விழுச்செல்வம் தருமார்' என்ற தொடர் குறிப்புமொழியாக அமைந்து நேர் எதிரிடையான பொருளைத் தருவதால் அங்கதக் குறிப்புடையது எனலாம்.

பிரிவிடை வேறுபட்ட தலைமகளது ஆற்றாமை கண்டு ஆற்றாளாகிய தோழியைப் பார்த்து 'நீ நம் நெஞ்சு கலங்கும்படியாக இனிப் பிரியமாட்டோம் என்று சூளுரைத்த நம் தலைவர் பிரிவு நீட்டித்தது கண்டு ஆற்றாது நிற்கிறாய். நீ அப்படிக் கூறி வருந்தாதே. கொடிய சுரம் பல கடந்த நம் தலைவர் பழியுடையவர் அல்லர். நம்மிடம் அன்புடைய அவரைப் பிணைத்துக் கொள்ள அறியாத நம் தோள்களே தவறுடையன. அதனால் ஆற்றியிருத்தலே நமது கடனாகும்' என்று கூறுகிறாள்.[108]

இப்பாடலில் தலைவி தலைவர் பழியுடையரல்லர் என்றும், தோளே தவறுடைய என்றும் கூறுவது நேர் எதிர்மறைப் பொருளை உணர்த்துவனவாய் அங்கதக் குறிப்புப்பட அமைந்துள்ளன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தோழி கூற்றில் அங்கதம்

பாலைத்திணைப் பாடல்களில் தோழி கூற்றாக அமைந்த இரு பாடல்கள் அங்கதக் குறிப்புடையனவாக உள்ளன.[109] ஒரு பாடலில் குறிப்பாகவும், மற்றொரு பாடலில் நேரடியாகவும் தலைவனை இகழ்கின்ற நிலையினைக் காணலாம்.

தலைவன் தன்னை விட்டுப் பிரிந்து சென்றுவிடுவானோ என்று குறிப்பை உணர்ந்து, வருந்திய தலைவிக்குத் தோழி,

'நம்மைக் காட்டிலும் தலைவருக்குச் சிறந்ததாகத் தோன்றுகின்ற தேடுதற்குரிய பொருளைத் தேடிக்கொண்டு வருவதற்கு, பாலை நிலத்தில் வழிப்போக்கர்களைக் கொன்று திரியும் ஆறலைக் கள்வர் நிறைந்த காட்டைக் கடந்து செல்வாரோ?' என்று கூறுகிறாள்.[110]

இப்பாடலிலும் தலைவியைக் காட்டிலும் சிறப்பு வாய்ந்தது அல்ல அரும்பொருள் என்று தலைவனுக்கு உணர்த்தவேண்டி 'நம்மினும் சிறந்த அரும் பொருள் தரற்கே' என்று கேலி செய்வது அங்கதக் குறிப்புடையதாக விளங்குகிறது. 'நம்மினும் சிறந்த அரும்பொருள்' என்றது 'குறிப்புமொழியாகும் என்று உ வே.சா.வும் சுட்டுவார் [111]

தலைவன் பிரிந்து சென்றால் தலைவி இறந்துபடுவாள் என்பதனைத் தலைவனுக்கு உணர்த்தி அவனது பிரிவினைத் தடுத்தற் பொருட்டுத் தோழி,

'தலைவனே' களவுக்காலத்தில் நீ கூறிய இனிய சொற்கள் எல்லாம் பொய்யாய் இருத்தலை அறிவில்லாத நான் எப்படி அறிவேன். அருகே உள்ளோரிடமும் அலர் தோன்றுமாறு எம்மை இங்கே விட்டுவிட்டு நீ பிரிய நினைத்தலை அறிந்தேன். நீ உண்மையில் நன் மகனுக்குரிய தன்மைகளை உடையவன் இல்லை. பிரிந்து சென்ற நீ இங்கிருந்து வருவோரிடம் தலைவியின் நிலை பற்றிக் கேட்காதே. கேட்டால அவள் படும் துன்பங்களைக் கூற நேரிடும். அதனைக் கேட்டால் நீ நினைந்து சென்ற செயல் முடியத் தடை ஏற்படவும் கூடும்' என்று தலைவனிடம் கூறுகிறாள்.[112]

இப்பாடலில் ''மகனல்லை மன்ற இனி'' என்று தலைவனை நேரடியாக வசைபாடுவதைக் காணலாம். குறிப்பால் தலைவியை விட்டுப் பிரிந்து செல்லாதே என்று உணர்த்துவதற்கு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

''செல்லினிச் சென்று நீ செய்யும் வினைமுற்றி
அன்பற மாறியா முள்ளத் துறந்தவள்
பண்பு மறிதீரோ வென்று வருவாரை
என்றிறம் யாதும் வினவல்''

என்று கூறுகிறாள். தலைவன் பிரிவால் தலைவி இறந்துபடக்கூடும் என்ற கருத்தினைக் குறிப்பால் புலப்படுத்துவதால் இப்பாடல் அங்கதக் குறிப்புடையது.

தாய் கூற்றில் அங்கதம்

தாய் மனைமருண்டு சொல்லியது என்ற துறையில் அமைந்த பாடல் ஒன்றில் அங்கதக் குறிப்புக் காணப்படுகிறது.[113] களவில் ஒழுகும் தலைமகன் தலைவியை உடன்கொண்டு சென்றதைச் செவிலியால் அறிந்த நற்றாய்,

'என் மகளுடன் இருந்த தோழியரை நான் காணும் பொழுதெல்லாம் நடுங்கி நொந்து ஒழிகிறேன். அதுபோல என் மகளை மருட்டிப் பல பொய்ம்மொழிகளைக் கூறித் தன் சொற்படி கேட்கச் செய்து தன்னுடன் அழைத்துச் சென்ற தலைவனை ஈன்ற தாயும் இத்தகைய கொடிய மகனை ஈன்றதால் பெருந்துன்பம் அடையட்டும்' என்று வசைபாடுகிறாள்.

இப்பாடலில் தலைவியின் தாய் நேரடியாகத் தலைவனின் தாயைப் பற்றி உரைப்பதை — அவள் துன்பம் அடைக என்று சாபம் இடுவதை உணரமுடிகிறது. எனவே இது நேரடிவசையாக அமைந்த அங்கதமாகிறது

ஆய்வு முடிவுகள்

புறநானூற்றைப் பொருத்தவரைத் தொண்டைமானிடம் ஔவையார் பாடிய ''இவ்வே பீலி அணிந்து'' (புறம்.95) என்ற பாடலே பெரும்பான்மையான இலக்கியத் திறனாய்வாளர்களால் அங்கதத்திற்குச் சான்றாக எடுத்துக்காட்டப்படுகிறது. ஏனைய பாடல்களிலும் அங்கதக் குறிப்புக்கள் அமைந்துள்ளமை உரையாசிரியர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. அவற்றுள் 'நோயிலையாக' (புறம்.209, 205); 'நோயிலையாக நின்புதல்வர்' (புறம். 196); 'வாழியர் குருசில்' (புறம். 210, 211); 'சிறக்க நின்னாள் (புறம். 196) 'வெலீஇயர் நின்வேல்' (புறம்.202); 'நும்போல் அறிவின்'

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

(புறம்.202) என்று புலவர்கள் வாழ்த்துவது போன்ற மொழிகள் அங்கதக் குறிப்புடைய மொழிகளாகக் காணப்படுகின்றன. இயற்கை வருணனை மூலமாகவும் (புறம். 202, 204, 209) அங்கதக் குறிப்புக்களைக் காணமுடிகிறது.

பொதுவாக, பாடுகின்ற புலவர்கள் அரசரோடு தொடர்புடைய புலவர்களாக இருப்பதாலும், பாடுகின்ற களம் அரசவை என்பதாலும். கேட்போன் அரசன் என்பதாலும் இப்பாடல்களில் பெரும்பாலும் அரசியல் பற்றிய செய்திகளே அங்கதமாக அமைந்துள்ளமை குறிக்கத்தக்க செய்தியாகும்.

தொண்டமானது படைப்பயிற்சியின்மை, புலவரை ஒற்றன் எனக் கொல்ல முற்பட்டமை, உழவரைப் போற்றாமை, புலவரைப் போற்றாமை, கொடுத்த பரிசிலில் குறையுடைமை ஆகிய அரசியல் தொடர்பான மன்னனது குறைகளைக் கண்டபொழுது புலவர்கள் அங்கதக் குறிப்புடைய பாடல்களைப் பாடியுள்ளனர்.

இவை தவிரச் சமுதாயத்தில் உள்ள சீர்கேடுகளையோ, தனிமனிதன் குறைகளையோ அங்கதப் பொருளில் புலவர்கள் பாடவில்லை என்பதும் குறிக்கத்தக்க செய்தியாகும். பேகன் தன் மனைவியைப் பிரிந்து வாழ்ந்தபொழுது, அவனது செயலைக் கண்டிக்க முற்படும் புலவர்கள் அங்கத உத்தியைப் பயன்படுத்தாமல், மறைமுகமாகவும் நேரடியாகவும் அவனைக் கண்டித்து நன்னெறிப்-படுத்தியுள்ளமை இங்குக் குறிக்கத்தக்க செய்தியாகும்.

சங்கஇலக்கிய அகப்பாடல்களில் 61 பாடல்களில் அங்கதக் குறிப்புக்கள் காணப்படுகின்றன. பாடல்களின் மொத்த எண்ணிக்-கையை நோக்க அங்கதம் மிகக் குறைந்த எண்ணிக்கையிலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது என அறிகிறோம்.

அங்கதம் பயன்படுத்தப்பட்டுள்ள சூழல் பெரும்பான்மை பரத்தமைத் தொடர்புடையதாகவும், வரைவு வேண்டுதல் தொடர்-பாகவும், சிறுபான்மை பிரிவு தொடர்பாகவும் இருக்கக் காண்-கிறோம்.

மருதத்திணைப் பாடல்களில் நாற்பது பாடல்களில் அங்கதக் குறிப்புக்கள் காணப்படுகின்றன. களவுத் தொடர்புடையதாகக் குறிஞ்சித் திணையில் பத்துப் பாடல்களிலும், நெய்தல் திணையில் ஐந்து பாடல்களிலும் இக்குறிப்புக்கள் காணப்படுகின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மருதத்திணையில் தலைவி கூற்றிலும், தோழி கூறறிலு ம் பெரும்பாலும் அங்கதக் குறிப்புக்கள் காணப்படுகின்றன. தலைவி தோழியிடமும், பாணனிடமும் அங்கதக் குறிப்புப்படப் பேசும் பாடல்கள் 18 இருப்பதைக் காணலாம். பரத்தையிடம் சென்று மீண்டபோது தலைவனிடம் தோழி அங்கதக் குறிப்புப்படப் பேசுகிறாள். வாயில் மறுத்தபோது தோழியிடமும், பாணனிடமும் தலைவி இவ்விதம் பேசுகிறாள். தோழி கூற்றாக 17 பாடல்கள் இவ்வாறு இருக்கக் காண்கிறோம். நேரடியாகத் தலைவனிடம் வாயில் மறுத்த சூழலில் 14 பாடல்களும், பாணனிடம் கூற்று நிகழ்த்தும் சூழலில் இருபாடல்களும் குயவன் வாயிலாகப் பாணனைப் பழிக்கும் சூழலில் ஒரு பாடலும் உள்ளன. பரத்தை கூற்றாக ஐந்து பாடல்களில் அங்கதக் குறிப்புக்கள் காணப்படுகின்றன. பாங்காயினார் கேட்பச் சொல்லியதாக இவை அமைந்துள்ளன. ஒரு பாடல் பரத்தை மற்றொரு பரத்தையை ஏளனம் செய்வதாக அமைந்திருப்பதைக் காணலாம்.

களவுத்தொடர்புடைய குறிஞ்சித்திணைப் பாடல்களில் பத்துப் பாடல்கள் அங்கத முறையில் அமைந்துள்ளன. தலைவனை நேரடியாகவோ, சிறைப்புறமாக இருக்கும்போதோ பேசுவதாக இப்பாடல்கள் அமைந்திருக்கக் காணலாம். தோழி கூற்றாக எட்டுப் பாடல்களும், தலைவி கூற்றாக ஒரு பாடலும், பாங்கன் கூற்றாக ஒரு பாடலும் அங்கதக் குறிப்புடையனவாகக் காணப்படுகின்றன. தலைவன் காதலைப் பாங்கன் ஏளனம் செய்வதாக ஒரே ஒரு பாடல் அரிதாக அமைந்துள்ளது குறிக்கத்தக்கது. தோழி தலைவனிடம் வரைவு வேண்டுவதாக ஒரு பாடல் அமைந்துள்ளது. தோழி கூற்றாக அமைந்த எட்டுப் பாடல்களில் தலைவனிடம் நேரடியாகவோ, குறிப்பாகவோ பேசுவதாகப் பாடல்கள் அமைந்துள்ளன. தலைவன் களவு நீட்டித்தபோதும், பிரிவு மேலிட்டபோதும் பெரும்பாலும் தோழி கூற்றுக்கள் அமைந்துள்ளன. வெறியாடும் சூழலில் அங்கதக் குறிப்புடையனவாய் இரு பாடல்கள் அமைந்துள்ளன.

களவு தொடர்புடைய மூன்று நெய்தல்திணைப் பாடல்களில் அங்கதக் குறிப்புக்களைக் காணமுடிகிறது. நெய்தலிலும் பரத்தமை தொடர்புடைய இரு பாடல்கள் உள்ளமை குறிக்கத்தக்கது (ஐங். 131, 132). தலைவி கூற்றாக மூன்று பாடல்களும், தோழி கூற்றாக இரு பாடல்களும் அங்கதக் குறிப்புடையனவாக உள்ளன. தலைவி கூற்றில் அமைந்த இரு பாடல்கள் வாயில் மறுப்பதாகவும், ஒரு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாடல் பொழுதைப் பழித்துள்ளதாகவும் அமைந்துள்ளன. தோழி கூற்றாக உள்ள இரு பாடல்கள் வரைவு கடாஅதல் தொடர்புடையனவாகும்.

பாலைத்திணைப் பாடல்களில் ஐந்து பாடல்கள் பிரிவு தொடர்புடையதாகவும், ஒரு பாடல் உடன்போக்குத் தொடர்புடையதாகவும் இருக்கக் காணலாம். பிரிவு தொடர்பாகத் தலைவி கூற்றில் மூன்று பாடல்களும், தோழி கூற்றில் இரு பாடல்களும் உள்ளன.

அங்கதப் பாடல்களில் நேரடியாகக் கூற்று நிகழ்த்துவதாகவும், ஒரு கதைமாந்தரிடம் கூறி மற்றவர் கேட்பதாகவும் ஆகிய இருமுறைகளில் பாடல்கள் அமைந்திருக்கக் காண்கிறோம்.

இப்பாடல்களில் நேரடியாக வசைபாடுவதாகவும், மறைமுகமாக ஏளனம் செய்வதாகவும் அங்கதமுறை பயன்படுத்தப்பட்டிருக்கக் காணலாம்.

உவமை, உள்ளுறை, உருவகம் ஆகியவற்றின் மூலமாக அங்கதக் குறிப்பினைப் புலப்படுத்தும் முறை காணப்படுகிறது. ஓரிரு வரலாற்றுச் செய்திகள் உவமையாக அமைந்து அங்கதக் குறிப்பைப் புலப்படுத்தக் காண்கிறோம்.

முல்லைத்திணைப் பாடல்களில் அங்கதக் குறிப்புக்கள் காணப்படவில்லை என்பது குறிக்கத்தக்கது. அங்கதம் பயன்படுத்த வேண்டிய சூழல் அங்கு இல்லாமையே அதற்கான காரணம் எனலாம்.

நேரடியாக வசைபாடுகின்ற குறிப்பு அகப்பாடல்களில் அருகியே அமைந்துள்ளது பெரும்பாலும் அகப்பாடல்களில் அங்கதக் குறிப்புடைய பாடல்கள் தலைவனிடம் கூறுவதாகவே இருக்கக் காண்கிறோம்

சங்கஇலக்கியத்தில் அங்கதக் குறிப்புடைய பாடல்கள் காணப்படுகின்றனவே தவிர, முழுதும் அங்கதமாகவே அமைந்த பாடல்கள் காணப்படவில்லை.

தொண்டைமான் படைக்கலக் கொட்டிலைப் பார்வையிட்டு, ஔவையார் பாடிய ''இவ்வே பீலியணிந்து...'' என்று தொடங்கும் புறநானூற்றுப் பாடல் ஒன்றே முழுதும் அங்கதப் பாடலாக அமைந்தது என்று திறனாய்வாளர்கள் எடுத்துக் காட்டுவர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தொல்காப்பியர் இலக்கிய வகைகளுள் ஒன்றாக அங்கதத்தைக் கூறுவார். ஆனால் சங்கஇலக்கியத்தில் தனி ஒரு இலக்கிய வகையாக அங்கதப் பாடல்கள் காணப்படவில்லை.

சங்கப்பாடல்களில் நேரடி வசையாகவும், குறிப்பாக ஏளனம் செய்வதாகவும் ஆகிய இரு முறைகளிலும் அங்கதக் குறிப்புகள் அமைந்துள்ளன.

புறப்பாடல்களில் மன்னனை நேரடியாக வசை கூறுவதாகவும், மறைமுகமாக ஏளனம் செய்வதாகவும் உள்ள பாடல்கள் மட்டுமே காணப்படுகின்றன.

அகப்பாடல்களில் உவமை, உள்ளுறை, உருவகம் ஆகியவை மறைமுகமாக ஏளனம் செய்வதற்குப் பயன்படுகின்றன.

புறப்பாடல்களில் புலவனது நேரடிக்கூற்றில் அங்கதமும் அகப்பாடல்களில் கதைமாந்தர்களின் கூற்றில் அங்கதமும் அமைந்துள்ளன.

சங்கப்பாடல்களில் தனிமனிதன் தொடர்புடைய அங்கதம் காணப்படுகிறதே தவிர, சமுதாய அங்கதம் காணப்படவில்லை என்பதும் குறிக்கத்தக்கது.

புறப்பாடல்களில் வசைமொழியாகப் பாடுகின்ற அமைப்புமுறை, பிற்காலத் தனிப்பாடல்களில் மிகுந்துள்ளதே தவிரச் சங்க இலக்கியத்தில் காணப்படவில்லை.

குறிப்புக்கள்

1. தொல். பொருள். செய். நூற்பா. 120, இளம்.உரை.
2. பின்னிணைப்பு எண்—1.
3. புறம். 162, 196, 209, 210, 211, 202, 205, 206, 208, 207, 204.
4. புறம்.196.
5. புறம்.209.
6. புறம்.210.
7. புறம்,211.
8. புறநானூறு—இரண்டாம் பகுதி, (ஔவை உரை), ப.30.
9. புறம் 205;

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

10. புறநானூறு—இரண்டாம் பகுதி (ஔவை உரை), ப.12.
11. புறம் 206.
12. புறம்.208.
13. புறம்.207.
14. புறம்.204.
15 தொல். பொருள். செய். நூற்பா. 126, நச்சர். உரை.
16. புறம்.202
17. தொல். பொருள். செய். நூற்பா. 177, நச்சர். உரை.
18. புறம். 162
19. புறம். 47.
20. தொல். பொருள். செய். நூற்பா. 142, நச்சர். உரை,
21. புறம்.95.
22. மு கதிரேசச்செட்டியார், உரைநடைக்கோவை — இரண்டாம் பாகம், ப.78.
23. தமிழண்ணல், சங்கஇலக்கிய ஒப்பீடு — இலக்கிய வகைகள். ப.150.
24. புறம்.53.
25. புறம்.35.
26. தொல்.பொருள்.செய்.நூற்பா. 128, நச்சர்.உரை.
27. குறுந்.93; அகம்.56.
28. நற்.250, 350; கலித். 89,93,95,96,97,98; அகம்.6,16,36,196; ஐங். 65,70.
29 ஐங். 41; அகம். 146.
30. ஐங். 65,41; அகம். 146.
31. தொல்.பொருள்.கற்பியல்.நூற்பா. 52.
32. குறுந். 93.
33. அகம். 56.
34. நற். 20.
35. நற். 350.
36. கலித். 89

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

 Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

37. கலித். 93

38. மு. கதிரேசச் செட்டியார், உரைநடைக்கோவை — இரண்டாம் பாகம். ப. 81.

39. கலித். 98.

40. அகம். 6.

41. அகம். 16.

42. அகம். 196.

43. கலித். 95.

44. கலித். 96,97.

45. ஐங். 65.

46. மு. கதிரேசச் செட்டியார், உரைநடைக்கோவை — இரண்டாம் பாகம், ப. 82.

47. ஐங். 70.

48. அகம். 36.

49. ஐங். 41.

50. அகம். 146.

51. நற். 230, 360; குறுந். 139, 196, 295, 384; ஐங். 1; அகம். 46, 116, 226, 256, 296, 306 346.

52. நற். 300, 380.

53. நற். 200.

54. இங்கு 'என்னை' எனத் தன்மை ஒருமையைப் பயன்படுத்துவது தலைவிக்கு உரிமையுடையது என்றாலும், தலைவனிடத்தில் அதிக உரிமையுடைய தோழி தன்னைத் தலைவியாகவே பாவித்-துப் பேசுகிறாள் எனலாம். பின்னத்தூர் நாராயணசாமி ஐயரும், 'இது தலைவியைத் தானாகக் கூறியது' என்று (ப. 263) விளக்கம் கூறுகிறார்.

54அ. நற். 230.

55. நற். 360.

56. குறுந். 139.

57. குறுந். (உ. வே சா. உரை), ப. 278.

58. குறுந். 196.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

59. குறுந். 295.
60. குறுந். 384.
61. ஐங். 1.
62. அகம். 46.
63. அகம் 116.
64. அகம். 226.
65. அகம். 256.
66. அகம் 296.
67. அகக். 306.
68. அகம். 346.
69. நற்.300 380.
70. நற்.300.
71. நற் 380.
72. நற்.200.
73. நற்.40,320; அகம்.166,276; குறுந்.8.
74. நற்.40
75. அகம்.276
76. குறுந்.8.
77. நற்.320.
78. அகம்.166.
79. நற்.34,136,365; குறுந்.78,342; ஐங்.226,247,248,249,284.
80. நற்.136,365; ஐங்.226,284; குறுந்.78,342.
81. நற்.34; ஐங்.247,248,249.
82. நற் 136
83. குறுந்.78.
84. நற்.34,365; ஐங்.247,248,249,284, 226; குறுந். 342
85. நற்.136.
86. நற்.365.
87. ஐங்.284.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

88. ஐங்.247.
89. ஐங்.248.
90. ஐங்.249.
91. நற்.34.
92. ஐங்.226.
93. குறுந்.342.
94. குறுந்.78.
95. ஐங்.131,132; குறுந்.122; நற்.295,395.
96. ஐங்.131;132; குறுந்.122.
97. ஐங்.131.
98. ஐங்.132.
99. குறுந்.122.
100. குறுந். (பெருமழைப்புலவர் உரை), ப.178.
101. நற்.295,395.
102. நற்.295.
103. நற்.395.
104. குறுந்.20,216; அகம்.267; கலித்.19; நற்.293; குறுந்.331.
105. நற்.293.
106. குறுந்.20.
107. குறுந்.216.
108. அகம்.267.
109. குறுந்.331; கலித்.19.
110. குறுந்.331.
111. குறுந். (உ.வே.சா. உரை), ப.607.
112. கலித்.19.
113. நற். 293.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3 (ஆ) பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் அங்கதம்

முன்னுரை

சங்ககாலத்தை அடுத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு மாற்றத்தைக் காணமுடிகிறது. காதலும், வீரமும் போற்றப்பட்ட நிலை மாறி, நிலையாமைக் கோட்பாடும், துறவற நெறியும் போற்றப்படும் நிலை வந்தது. சமண சமயமும், பௌத்த சமயமும், பெரிதும் செல்வாக்குப் பெற்றன. அச்சமயங்கள் நிலையாமையையும், துறவறத்தையும் பெரிதும் வலியுறுத்திப் பேசின. அதுமட்டுமன்றி, வாழ்க்கையில் கட்டுப்பாடுகளையும், ஒழுக்க நெறிகளையும் அதிகம் வலியுறுத்தின. எனவே, இக்காலகட்டத்தில் நீதி நூல்கள் பல எழுந்தன.

இவ்வாறு எழுந்த நீதி நூல்கள் பதினெண்கீழ்க்கணக்கில் இடம் பெற்றுள்ளன. நாலடியார், நான்மணிக்கடிகை, இனியவை நாற்பது, இன்னா நாற்பது, திருக்குறள், திரிகடுகம், ஏலாதி, ஆசாரக்கோவை, முதுமொழிக் காஞ்சி, பழமொழி, சிறுபஞ்சமூலம் எனும் பதினொரு நூல்கள் நீதிநூல்களாக அமைகின்றன. புறம் பற்றியும் போர் பற்றி களவழி நாற்பது எனும் நூல் பேசுகிறது. ஏனைய ஆறு நூல்களான ஐந்திணை ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, கைந்-நிலை, கார் நாற்பது போன்றவை அகம் பற்றி அமைகின்றன.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் பெரும்பாலும் நீதியை வலியுறுத்துகின்ற காரணத்தினால், நகைச்சுவையுடன் கூடிய அங்கதப் பாடல்கள் அதிகமாக இடம்பெறவில்லை. அகம் பற்றிய நூல்களில் ஐந்திணை எழுபது என்ற நூலில் ஒரு பாடலில் மட்டுமே அங்கதக் குறிப்பினைக் காணலாம்.

திருக்குறள், நாலடியார் ஆகிய இரு நூல்களில் பதினான்கு இடங்களில் மட்டுமே அங்கதக் குறிப்புக்கள் காணப்படுகின்றன. பெரும்பாலும் நிலையாமை உணர்வையே இப்பாடல்கள் அங்கதக் குறிப்பின் மூலம் வெளிப்படுத்துகின்றன. திருவள்ளுவர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சங்க இலக்கிய நெறியில் நின்று அகப்பாடல்களிலும் அங்கதக் குறிப்புப்படப் பேசக் காணுகிறோம்.

திருக்குறளில் அங்கதம்

திருவள்ளுவரது 1330 குறட்பாக்களில் ஒன்பது குறள்களில் மட்டுமே நகையுடன் கூடிய ஏளனக் குறிப்பைக் காணமுடிகிறது.[1] அறத்துப்பாலில் ஒரு குறளும், பொருட்பாலில் மூன்று குறள்களும், காமத்துப்பாலில் ஐந்து குறள்களும் அங்கதக் குறிப்புடன் காணப்படுகின்றன

நிலையாமையை வலியுறுத்தும்போதும், கல்லாதார், பேதையர் கயவர் ஆகியோர் நிலைகளை எடுத்துச் சொல்கின்றபோதும், திருவள்ளுவர் அங்கதக் குறிப்புக்களைப் பயன்படுத்துகிறார். காமத்துப்பாலில் பிரிவால் வாடும் நிலையில் தலைவியின் கூற்றுக்களில் அங்கதக் குறிப்பு அமையப்பாடக் காணலாம்.

நிலையாமை

நிலையாமைக் கருத்தினை வெளிப்படுத்தத் திருவள்ளுவர் அங்கதக் குறிப்பினைப் பயன்படுத்தியிருக்கக் காணலாம்.

மனித உயிர் நிலையற்றது; அதுபோன்றே உடலும் அழியக்கூடிய ஒன்று என்பதை,

'நேற்று ஒருவன் இருந்தான்; அத்தகையவன் இன்று இல்லை என்று சொல்லும்படியான பெருமையை இவ்வுலகம் கொண்டிருக்கிறது' என்பதன் மூலம் காட்டுகிறார்.

> ''நெருந லுளனொருவன் இன்றில்லை என்னும்
> பெருமை யுடைத்திவ் வுலகு''[2]

ஆன்ற இக்குறளில் ''பெருமை உடைத்து இவ்வுலகு'' என்பது அங்கதக் குறிப்புடையது. நேற்று இருந்தவன் இன்று உலகந்தில் இல்லை என்ற நிலையாமைக் கருத்தை இங்குக் காட்டுகிறார்.

கல்லாமை

கல்வி கற்காமையின் இழிவினைத் திருவள்ளுவர் அங்கதக் குறிப்புப்படக் காட்டியிருப்பதை ஒரு குறளில் காணலாம்.[3]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'கல்லாதவர்களும் மிக நல்லவர்களே, அவர்கள் தாமே தம்மையறிந்து கற்றார் அவையில் ஒன்றையும் சொல்லாதிருக்க முடிந்தால்' என்ற குறட் கருத்தில் கல்லாமையினையும், கல்லாதவர்களையும் நயமாகக் கேலி செய்திருப்பதைக் காணலாம்.

''கல்லா தவரும் நனிநல்லர் கற்றார்முன்
சொல்லா திருக்கப் பெறின்''

என்று இக்குறளில் "கல்லாதவரும் நனிநல்லர்'' என்று கல்வி கற்காதவர்களை மிகவும் நல்லவர்கள் என்று உயர்த்திப் பேசுவது முதலில் காணமுடிகிறது. அவர்கள் நல்லவர்களாவது எப்பொழுது எனின், கற்றவர்கள் முன்னர் எதுவும் சொல்லாதிருக்கும்போது என முடித்திருப்பதால் இக்குறள் அங்கதக் குறிப்பு உடையதாகிறது. கல்வி கற்காதவர்களைப் பொதுவாகத் திருவள்ளுவர் வசைபாடுவது வழக்கம். ஆனால், இங்குக் ''கல்லாதவரும் நனி நல்லர்'' என்று கூறியவுடன், அவர்களை மிகவும் சிறப்பாக உயர்த்திச்செல்வது போன்று தோன்றுகிறது. ''கற்றார்முன் சொல்லாதிருக்கப்பெறின்'' என்று முடித்திருப்பது, கற்றவர்கள் முன்னிலையில் வாய்பேசாதிருக்கும் வரைதான் அவர்கள் நல்லவர்கள். வாய்பேசத் தொடங்கிவிட்டால் அவர்கள் இயல்பு தெரிந்துவிடும் என்று காட்டுவதற்கே. இங்கு ''நனி நல்லர்'' என்பது அங்கதக் குறிப்புப்பட நிற்கிறது.

பேதைமை

நட்பின் வகைகளைக் கூறிய திருவள்ளுவர், நட்பினைப் பேணிக் கொள்ளாத பேதைமையை எடுத்துக்காட்டுகிறார். இச்சூழலில் அங்கதக் குறிப்பினைக் கையாண்டிருப்பதைக் காணலாம்.

'பேதையர் இருவர் தம்முள் பழகினர். பின்னர் ஒருநாள் பிரிவு வந்தது. அப்பிரிவின் போது அவர்கள் துன்பப்படவேயில்லை. எனவே பேதையர் தம்முட் கொண்ட நட்பு மிக இனியது' என்ற பொருட்பட,

''பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கண்
பீழை தருவதொன் றில்''

என்ற குறள் அமைந்துள்ளது.

''பெரிது இனிது பேதையார் கேண்மை'' என்பதில் அங்கதக் குறிப்பு அமைந்துள்ளது எனலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'உண்மையான நட்பு என்பது, பிரிவு வந்தபோது துன்பம் தருவது, ஆனால் பேதையரின் நட்போ பிரிவு வந்தபொழுது துன்பம் தருவதில்லை. எனவே பிரிவின்போது துன்பம் தராத இவர்களின் நட்பே இனியது' என்று பேதையரைப் பாராட்டுவது போன்று பழித்திருப்பதைக் காணமுடிகிறது பேதையர் தம்முள் உண்மையான அன்பு கொள்வதில்லை என்பதையும். எனவே தான் அவர்கள் பிரிவு வந்தபோது கூடக் கவலைப்படாமல் இருக்கிறார்கள் என்பதையும் குறிப்பாகச் சுட்டிக்காட்டுகிறார் திருவள்ளுவர்.

''நாடோறுந் தேய்ந்து வருதலின் துன்பம்' தாராதாயிற்று புகழ்வார் போன்று பழித்தவாறு. இதனால் அவரது நட்பின் குற்றம் கூறப்பட்டது'' என்று இக்குறளுக்குப் பரிமேலழகர் உரை கூறுவது குறிக்கத்தக்கது.[5]

கயமை

கயமைக் குணம் கொண்டவர்களை ஒரு குறளின் மூலம் இனம் காட்டுகிறார் திருவள்ளுவர்.

'கயவர்கள் தேவர்களைப் போன்றவர்கள். எவ்வொறெனின். தேவர்களைப் போன்று தம்மை நியமிப்பாரின்றிக் கயவரும் தாம் விரும்புவனவற்றைச் செய்தொழுகுவதால்' என்று,

''தேவ ரனையர் கயவர் அவருந்தான்
மேவன செய்தொழுக லான்''[6]

என்ற குறளில் காட்டுகிறார்.

மண்ணுலகில் வாழும் கயவர்களை விண்ணில் வாழும் தேவர்களுக்கு ஒப்புமையாக்குகிறார். முதலில் தேவர்கள் போன்று மிக உயர்ந்தவர்கள் இக்கயவர்கள் என்ற குறிப்புத் தோன்றும்படி அமைக்கிறார். அதற்கான காரணத்தைப் பின்னர் காட்டுகிறார் தேவர்களைக் கட்டுப்படுத்துவதற்கு எவரும் இல்லை; அவர்கள் தாம் விரும்பியவற்றை விரும்பிய முறையில் செய்வர். அதேபோன்று கயவர்களும் நன்மைதீமை ஆராயாது தாம் விரும்பியவற்றை யாவருக்கும் அஞ்சாமல் செய்கின்றனர் என்று கூறுகிறார். இக்கூற்றில் ஏளனக் குறிப்போடு கீழ்மக்களின் இழிதன்மையைக் காட்டுவதால், இக்குறளில் அங்கதம் அமைந்திருக்கக் காணலாம்.

''உயர்ச்சியும் இழிவுமாகியதங் காரண வேறுபாடு, குறிப்பால் தோன்ற நின்றமையின், இது புகழ்வார் போன்று பழித்தவாறா-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யிற்று. இதனால் விலக்கற்பாடின்றி வேண்டிய செய்வரென்பது கூறப்பட்டது'' என்ற பரிமேலழகர் உரையும் குறிக்கத்தக்கது.[7]

''நெஞ்சத்து அவலமில்லாத வஞ்சக்கயவர் சாதாரண மண்ணுலக மக்களுக்கு ஒப்பாகார்; ஆனால் அவர்கள் உயர்ந்த விண்ணுலகத்து வாழும் தேவர்க்கு ஒப்பாவார்; எதனாலெனின், தேவர்கள் தம்மை நியமிப்பாரின்றி எண்ணியவற்றைத் தாமே செய்தொழுகுதல் போல, கீழ்மக்களும் நல்லன தீயன ஆராயாது தாம் விரும்புவனவற்றை விலக்கற்பாடின்றிச் செய்தொழுகும் இயல்புடைமையான் என்று குறிக்கப்பட்டுள்ளது. மறைந்த மொழிகளாற் கயவருடைய கயமைக் குணங்களை நகைச்சுவை தோன்ற இடித்துரைக்கும் வள்ளுவர் வாய்மொழி மாண்பு இங்கே நினைக்கத்தக்கது'' என்று கதிரேசச்செட்டியார் இக்குறளை அங்கதத்திற்குச் சான்றாகக் காட்டி விளக்குவார்.[8]

பொழுதைப் பழித்தல்

பிரிவாற்றாத தலைமகள் தான் அடைகின்ற துன்பத்தினையே எப்பொழுதும் நினைத்துக்கொண்டிருக்கிறாள். அதனால் உடல் மெலிகிறாள். இந்நிலையில் அவள் மாலைப்பொழுதினையும், இரவினையும் இகழ்கின்ற சூழலில் அங்கதக் குறிப்பினைக் காணலாம்.

'உலகத்து நிலைபெறுகின்ற உயிர்களை எல்லாம் இவ்விரவே துயிலச்செய்கிறது. எனவே இவ்விரவிற்கு என்னைத்தவிர வேறு துணையில்லை. இவ்விரவு அளித்தாயிருந்தது' என்ற பொருள்பட அமைந்துள்ள,

''மண்ணுயிர் எல்லாம் துயிற்றி அளித்திரா
என்னல்ல தில்லை துணை''[9]

என்னும் குறளில் அங்கதக் குறிப்பினைக் காணலாம்.

பிரிவால் தான் வருந்திக்கொண்டிருப்பதால் தனக்கு உறக்கம் வரவில்லை என்றும், தன்னைத்தவிர இவ்வுலகில் அனைவரையும் இரவு உறங்கச் செய்கிறது என்றும் தலைவி குறிப்பாகக் கூறுகிறாள். அனைவரும் உறங்கி விட்டதால் இரவுக்குத் துணையாகத் தன்னையன்றி எவரும் இல்லை எனக்கூறி, இரவினை 'அளித்து' எனத் தலைவி கூறுவது இகழ்ச்சிக் குறிப்பாக அமைந்து அங்கதமாயிற்று

''துணையோடொன்றுகின்ற உயிர்களெல்லாம் விட்டு இறந்துபடும் எல்லையேனாய என்னையே துணையாகக் கோடலின்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அறிவின்றென்பது பற்றி 'அளித்' தென்றாள்; இகழ்ச்சிக் குறிப்பு'' என்று பரிமேலழகர் கூறுவது குறிக்கத்தக்கது.[10] 'இறந்துபடும் நிலைமையிலுள்ள தன்னைத் துணையாகக் கொண்ட அறிவின்மை பற்றி, இருளை 'அளித்து' என்கிறாள். இது இகழ்ச்சியைப் புலப்-படுத்தும்'' என்று வை மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியார் விளக்கம் தருவார்.[11]

கண்களைப் பழித்தல்

தலைமகளின் அழகு குறைந்ததைக் கண்ட தோழி, தலை-வியைப் பார்த்து, 'உன் கண்கள் கலுழ்ந்து தம்மழகு இழந்து நின்றன. நீ ஆற்றல் வேண்டும்' என்கிறாள். அதற்குத் தலைமகள்,

'இக்கண்கள் அன்று காதலரைத் தாமே விரைந்து நோக்கி, இன்றும் தாமே இருந்து அழுகின்ற இது நம்மாற் சிரிக்கத்தக்க இயல்பினை உடைத்து' என்று கூறுவதில் அங்கதக் குறிப்பினைக் காணலாம்.

''கதுமெனத் தாநோக்கித் தாமே கலுழும்
இதுநகத் தக்க துடைத்து''[12]

என்ற குறளில் ''இது நகத்தக்க துடைத்து'' என்ற தலைவியின் கூற்று அங்கதக் குறிப்புடையது.

மாலைப்பொழுதைப் பழித்தல்

இதேபோன்று மாலைப்பொழுதினைக் குறிப்பாக இகழும் குறட்பாக்களையும் காணலாம்,

'பொழுதே! நீ முன்னாட்களில் வந்த மாலைப்பொழுதோ-வெனின், இல்லை. இருந்தவாற்றான் அந்நாட்காதலரை மணந்த மகளிரை உண்ணும் இறுதிக்காலமாயிருந்தாய். நீ வாழ்க!' என்ற கருத்தமைந்த.

''மாலையோ அல்லை மணந்தார் உயிருண்ணும்
வேலைநீ வாழி பொழுது''[13]

என்னும் குறளில் காதலர்க்குத் துன்பம் தரும் மாலைப்பொழுதின் இயல்பினைச் சுட்டி, 'வாழி' என்று வாழ்த்துவது, குறிப்பாக அதனை இகழ்வது போன்றதாய் அமைந்து அங்கதமாகியுள்ளது எனலாம்.

இதேபோன்று, 'மயங்கிய மாலைப்பொழுதே! நீயும் எம்போலப் புன்கண்ணுடையையாயிருந்தாய்; உன் துணையும் எம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

துணைபோல வன்கண்மையுடையதோ? கூறுவாயாக! நீ வாழ்க!' என்ற பொருள்பட,

''புன்கண்ணை வாழி மருள்மாலை எங்கேள்போல்
வன்கண்ண தோநின் துணை''[14]

என்ற குறள் அமைந்துள்ளது.

இக்குறளில் 'வாழி' என்ற சொல் இகழ்ச்சிக் குறிப்புப்பட நிற்கிறது. இதனையே, ''எமக்குத் துன்பம் செய்தாய், நீயும் இன்ப முற்றிலையென்னும் குறிப்பால் மாலையை 'வாழி' என்றாள்'' என்று பரிமேலழகரும் விரித்துரைப்பார்.[15] எனவே 'வாழி' என்பது குறிப்புச்சொல்லாக அமைந்து அங்கதப் பொருள்பட நிற்கிறது.

தலைமகனைக் கண்டவுடன் வேட்கை மிகுதியால் தன் நெஞ்சிற்குக் கூறிய முறையில் அமைந்துள்ள ஒரு குறளில் அங்கதக் குறிப்பு அமைந்திருப்பதைக் காணலாம்.

'என் நெஞ்சே, வாழ்வாயாக! அவர் நம்மிடம் காதல் இலராகவும், நீ அவர் வரவுநோக்கி வருந்துவதற்குக் காரணம் உன்னுடைய பேதைமையே தவிரப் பிறிதில்லை' என,

''காத லவரிலர் ஆகநீ நோவது
பேதைமை வாழியென் நெஞ்சு''[16]

என்று வள்ளுவர் கூறுகிறார்.

இங்கு 'வாழி' என்பது இகழ்ச்சிக் குறிப்பாக அமைந்து அங்கதமாகிறது.

''நம்மை நினையாமையின் நங்கட் காதலிலரென்ப தறியலாம், அஃதறியாமை மேலும் அவர்பால் செல்லக் கருதாது அவர் வரவு பார்த்து வருந்தா நின்றாய், இது நீ செய்துகொள்கின்ற தென்னுங் கருத்தாற் 'பேதைமை'யென்றாள். 'வாழி' இகழ்ச்சிக்குறிப்பு'', எனப் பரிமேலழகரின் உரையும் இங்குக் குறிக்கத்தக்கது.[17]

நாலடியாரில் அங்கதம்

நாலடியார் என்னும் நூல் சமண முனிவர்களால் பாடப்பட்டுத் தொகுக்கப்பட்டது. விரதங்களையும், துறவற நெறிகளையும், இளமை, யாக்கை, செல்வம், உலகம் ஆகியவற்றின் நிலையாமையையும், பெண்பிறவியின் புன்மையையும் இம்முனிவர்கள் பெரிதும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வெறுத்துப் பாடியுள்ளனர் சங்ககால நிலைக்கு முற்றிலும் மாறுபட்ட நிலை இது. இந்நூலில், பெண் பிறவியின் இழிநிலையைச் சுட்டும் நான்கு பாடல்களிலும், ஈயாதார் இயல்பைச் சுட்டும் ஒரு பாடலிலும் அங்கதக் குறிப்புக்களைக் காணலாம்,

மனித உடம்பு தூய்மையற்றது; நிலையில்லாதது என்று கூறும் நாலடியார், அதற்கு விளக்கமாகச் சில பாடல்களைத் தருகிறது. அத்தகைய பாடல்களில் அங்கதக் குறிப்பினைக் காணலாம்.

பெண்களது அழகைக்கண்டு மகிழும் தன்மையை மிகவும் ஏளனக் குறிப்போடு புலப்படுத்தி அறிவுறுத்துவதைக் காணலாம்.

'மாந்தளிர் போன்ற உடம்புடைய இளநங்கையே! என்று ஒரு பெண்ணைப் பார்த்து மேலும் பல சிறப்புச்சொற்களை எல்லாம் கூறிச் சான்றோர்கள் மிகவும் உருகுவார்கள். இவ்வாறு உருகும் அவர்கள் உடம்பின் இயல்பினை எண்ணிப் பார்க்க மாட்டார்களா? அத்தகைய உடம்புக்கு ஓர் ஈயின் சிறகைப் போன்றதொரு தோல் அறுபட்டாலும், காக்கையைத் துறத்துவதற்குப் பயன்படும் ஒருகோல் வேண்டியிருக்கும்' என்று இகழ்ச்சிக் குறிப்புப்படப் பேசுகிறார் [18]

> ''மாக்கேழ் மடநல்லாய் என்றரற்றும் சான்றவர்
> நோக்கார்கொல் நொய்யதோர் புக்கிலை யாக்கைக்கோர்
> ஈச்சிற கன்னதோர் தோல்அறினும் வேண்டுமே
> காக்கை கடிவதோர் கோல்''

என்ற இப்பாடலில் ''மாக்கேழ் மடநல்லாய்'', ''சான்றவர்'' 'நொய்யது'' என்ற சொற்கள் இகழ்ச்சிப் பொருளில் வந்து அங்கதமாயின. மேலும் ''காக்கை கடிவதோர் கோல்'' வேண்டியிருக்கக் கூடிய பெண்ணின் உடம்பை, ''மாக்கேழ் மடநல்லாய்'' என்று கூறுகிறார்களே என்பதும் அங்கதக் குறிப்புடையது. அழகு என்று பெரிதும் கருதப்படுவது உண்மையில் அழகு இல்லை என்பதை உணர்த்துவதற்குப் புலவர் அங்கதக் குறிப்பினைப் பயன்படுத்துகிறார் எனலாம்.

உடம்பின் தூய்மையற்ற தன்மையை மற்றொரு பாடலும் அங்கதக் குறிப்புப்படப் பேசுகிறது.

'தோலால் ஆன போர்வையில் தொளைகள் பல உள்ளன. அவற்றின் உள்ளே அழுக்கு நிறைந்திருக்கிறது. இத்தகைய அழுக்கினை மறைக்கும் மேற்போர்வையாக ஆடை உள்ளது. இத்தகைய பெருமையுடையது இவ்வுடம்பு. இவ்வுடம்பைக் காமக்கண்கொண்டு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மகிழ்தல் கூடாது. ஆடையை அழுக்கு மறைக்கும் திரையாகவும், போர்வையாகிய தோலை ஒரு பையின் திருப்பமாகவும் நினைக்க வேண்டும்' என்ற இப்பாடலில் உடம்பின் தூய்மையற்ற தன்மையும், இகழ்ச்சியும் வெளிப்படக் காணலாம் [19]

உடம்பினை மூடியுள்ள தோல் ஒரு போர்வை போன்றது. இத்தோலில் பல ஓட்டைகள் உள்ளன. இவற்றில் அழுக்குச் சேருகிறது. இவ்வழுக்கினை மறைக்கும் போர்வையாக ஆடை உள்ளது என்று தோலையும், ஆடையையும் பற்றிக் கூறுகிறார். இத்தகைய உடம்பினை ''மாட்சித்து'' என்று பெருமையாகக் கூறுவதில் அங்கதக் குறிப்பினைக் காணலாம்.

> ''தோல்போர்வை மேலும்தொளை பலவாய்ப் பொய்ம்மறைக்கும்
> மீப்போர்வை மாட்சித் துடம்பானால் — மீப்போர்வை
> பொய்ம்மறையாகக் காமம் புகலாது மற்றதனைப்
> பைம்மறியாப் பார்க்கப் படும்''

என்ற இப்பாடலில், முதலிரண்டு வரிகளில் அங்கதக் குறிப்பு அமைந்திருக்கிறது. இப்பாடல் குறையினைச் சுட்டினாலும், அக்குறையினைப் போக்கும் வழியையும் சுட்டுவது சிறப்பு. இழிவான தோலையும், ஆடையையும் காமக்கண் கொண்டு பாராது வேறுவிதமாக நினைத்து விருப்பத்தை நீக்கிக்கொள்ள வேண்டும் என்று வழிமுறையினையும் கூறுவது இங்குக் குறிப்பிடத்தக்கது.

பெண்மை என்பது பெண்ணின் உடம்பில் இல்லை என்பதைச் சுட்டிக் காட்டும் மற்றொரு பாடலில் அங்கதக் குறிப்பினைக் காணலாம்.[20]

'குடலும், கொழுமையும், குருதியும், எலும்பும், தசைநாரும் நரம்பும், தோலும் இவற்றின் இடையிடையே வைத்த தசையும், கொழுப்பும் போன்றவற்றால் ஆகியது உடம்பு. இவ்வுடம்பில் எப்பகுதியைச் சேர்ந்தவள் இனிய மாலையை அணிந்திருக்கும் பெண்?' என்று கேட்கிறார்.

பெண் ஒருத்தி எதனால் பெண் என்று அழைக்கப்படுகிறாள் என்று கேட்டு, வரிசையாகக் குடல், கொழு, குருதி, எலும்பு, தொடர், நரம்பு, தோல், தசை, கொழுப்பு என்று பட்டியல் போட்டு, இவற்றாலா? என்று கேட்பது நகை கலந்த அங்கதமாகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"குடருங் கொழுவுங் குருதியும் என்பும்
தொடரும் நரம்பொடு தோலும்—இடையிடையே
வைத்த தடியும் வழும்புமாம் மற்றிவற்றுள்
எத்திறத்தாள் ஈர்ங்கோதை யாள்"

என்ற இப்பாடல் முழுதும் அங்கதக் குறிப்புடையதெனலாம்.

பிறருக்குப் பொருள் கொடுத்து வாழாதவனையும், அவனது செல்வத்தையும் ஒரு பாடலில் நகைச்சுவைபடச் சாடியிருப்பதைக் காணலாம்.[21]

'என்னுடையது, என்னுடையது' என்று எண்ணிக்கொண்டிருக்கும் அறிவற்றவனது செல்வத்தை, நானும் என்னுடையது, என்னுடையது என்று எண்ணிக் கொண்டிருப்பேன். ஏனென்றால், அச்செல்வம் அவனுடையதாக இருப்பின், அதற்கு அறிகுறியாக அவன் அதனைப் பிறர்க்கு உதவாமலும், அதன் பயனைத் துய்க்காமலும் இருக்கின்றான்; நானும் அச்செல்வத்தை அது செய்யாமல் இருக்கின்றேன்' என்ற பாடலில் பிறர்க்கு ஈயாத பொருள், அதனை உடையானுக்கும் உரிமையுடையதன்று என்று காட்டி நிற்கிறது.

இப்பாடலில், பிறருக்குத் தந்து உதவாதவனது செல்வம் அதனை உடையவனுக்கும் உரிமையுடையது அல்ல என்ற கருத்தை நகைச் சுவைபட வெளியிடுகிறார். ஒருவனிடம் இருக்கும் செல்வம், அதனைப் பிறர்க்குக் கொடுத்து உதவினால் மட்டுமே அவனுடையது என்று தெரியும். அவ்வாறின்றி, பிறருக்கு உதவி செய்யாதிருந்தால் அச்செல்வம் அவனுடையதுதான் என்பதற்குச் சான்று இல்லை. எனவே நானும் அச்செல்வத்தை எடுத்துப் பிறருக்குக் கொடுக்காமல் இருக்கிறேன் என்று நகைச்சுவைபடக் கூறுவதன் மூலம் ஈயாத் தன்மையைச் சுட்டிக்காட்டிச் சாடுகிறார். தன்னுடைய செல்வம் என்று சொல்லிக் கொண்டிருப்பான்; தானும் அச்செல்வத்தை அனுபவிக்கமாட்டான்; மற்றவர்களுக்கும் அச்செல்வத்தைத் தரமாட்டான். எனவே அச்செல்வத்தை நானும் என்னுடையது என்று சொல்வேன். ஏனெனில் அச்செல்வத்தை நானும் அனுபவிக்கவில்லை, மற்றவர்களுக்குப் பயன்படும்படித் தரவும் இல்லை என்று பாடல் அமைந்து நகைச்சுவையுடன் கூடிய அங்கதக் குறிப்பினை வெளிப்படுத்துகிறது.

"எனதென தென்றிருக்கும் ஏழை பொருளை
எனதென தென்றிருப்பன் யானும்; — தனதாயின்
தானும் அதனை வழங்கான் பயன்துவ்வான்;
யானும் அதனை அது"

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்ற பாடலில் ''ஏழை'' என்ற சொல்லும் அங்கதக் குறிப்புடையதாக அமைகிறது.

பொதுமகளிரின் அன்பினைப் போலி என்று கூறுவதற்கு ஒரு பாடலில் அங்கதக் குறிப்பினைக் கையாண்டிருப்பதைக் காணலாம்.[22]

'நம்மிடம் பொருள் மிகுதியாக இருந்த காலத்தில் விலைமகள் நம்மோடு 'செங்குத்தான மலையுச்சியில் ஏறிக் கீழே விழுந்து ஒன்றாய் உயிர் துறப்போம்' என்று அன்புரை கூறினாள். இப்போது, நம் கையில் பொருள் இல்லாமையால் தனது காலில் வாதநோய் என்று காட்டி, அழுது அம்மலை உச்சியின் மேல் வராமல் போனாள்' என்ற பாடலில் விலைமகளிரின் இயல்பு காட்டப்-படுகிறது.

தம்மிடம் இருந்த பொருளை எல்லாம் கவர்ந்து கொண்ட பின்னர், தம்முடன் வாழாமல் இருப்பதற்குக் காரணமாகக் காலில் வாதநோய் என்று கூறுவாள் என்றும், அவளது அன்புரை பொய்யுரை என்றும், போலி என்றும் காட்டுவது அங்கதக் குறிப்புடையது. ''செங்கோடு பாய்துமே''என்பதும், ''செங்கோட்டின்... மேவாதொழிந்தாளே'' என்பதும் பொதுமகளிரின் இயல்பை நகைச்சுவைபடக் காட்டிச் சாடுவதற்கேயாகும்.

> ''அங்கோட் டகலல்குல் ஆயிழையாள் நம்மோடு
> செங்கோடு பாய்துமே என்றாள்மன்; — செங்கோட்டின்
> மேற்காணம் இன்மையான் மேவா தொழிந்தாளே
> காற்கால்நோய் காட்டிக் கலுழ்ந்து''

என்பது பாடல். ''மேற்காணம் இன்மையால் காற்கால்நோய் காட்டிக் கலுழ்ந்து செங்கோட்டின் மேவாதொழிந்தாள்'' என்ற அடிகளில், விலைமகள் 'தன் காலில் வாதநோய் வந்துவிட்டதால் உன்னுடன் வரவில்லை. இல்லாவிடில் வந்திருப்பேன்' என்று கூறுவதாகக் காட்டுவது அங்கதக் குறிப்புடையது.

ஐந்திணை எழுபதில் அங்கதம்

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் உள்ள அகஇலக்கியங்களில் ஐந்திணை எழுபது என்ற நூலில்ஒரு பாடலில் மட்டும் அங்கதக் குறிப்பினைக் காணமுடிகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்நூலின் மருதத்திணைப் பாடலில் தலைமகள் பாணனுக்கு வாயில் மறுத்துத் தலைமகனைக் கேலி செய்வதாக அமைந்த பாடலில் அங்கதக் குறிப்பினைக் காணலாம்.[23]

"யாணர்நல் லூரன் நிறங்கிளப்ப லென்னுடைய
பாண! இருக்க வதுகளை—நாணுடையான்
றன்னுற்ற வெல்லா மிருக்க விரும்பாண!
நின்னுற்ற துண்டே லுரை"

எனும் இப்பாடலில் பாணனே! நீ இவ்விடத்தே இரு. தலைவன் மேன்மையை எடுத்துச்சொல்லும் போக்கினை விட்டுவிடு. பிற பெண்களைக் காணுதலில் வெட்கமுற்றுப் பின்வாங்கும் பெருமையினை உடைய தலைமகனுக்கு நேர்ந்த குறைகளெல்லாம் இருக்கட்டும். உனது வாழ்வில் குறை இருந்தால் எடுத்துச் சொல்' என்று கூறும்போது, பிற பெண்களைக் காணுவதில் வெட்கமுற்றுப் பின்வாங்கும் பெருமையுடைய தலைவன் என்று கூறுவதில், தலைவன் பிற பெண்களிடம் செலலும் தன்மையுடையவன் என்பது பெறப்படுகிறது. "நாணுடையான்" என்று சுட்டுவது இகழ்ச்சிப் பொருள்பட நின்று அங்கதமாக விளங்குகிறது.

ஆய்வு முடிவுகள்

அறத்துப்பாலிலும், பொருட்பாலிலும் திருவள்ளுவர் அங்கதத்தை, 'பெருமை', 'பெரிதினிது'. 'நனிநல்லர்', 'தேவரனையர்" ஆகிய சொற்றொடர் மூலம் வெளிக்காட்டுகிறார். இவை அங்கதச் சுவையோடு எதிர்மறைப் பொருளைத்தரக் காண்கிறோம்.

சங்கஇலக்கியப் பாடல்களில் அங்கதம் பெரிதும் பரத்தமையோடு தொடர்புடையதாகக் காணப்படுகிறது ஆனால், வள்ளுவரது காமத்துப்பாலில் பிரிவால் வாடும் தலைவியின் கூற்றில் அங்கதக் குறிப்பினைக் காண்கிறோம். மூன்று குறள்களில் 'வாழி' என்பதை அங்கத உணர்வோடு பயன்படுத்தக் காண்கிறோம். ஒரு குறளில் இரவுப்பொழுது இரங்கத்தக்கது என்றும், கண்கள் நகத்தக்கவை என்றும் அங்கத உணர்வை வெளிப்படுத்துகிறார்.

திருக்குறள் மொத்தப் பாடல்களை நோக்க, திருவள்ளுவர் மிகக் குறைந்த அளவிலேயே எள்ளற் குறிப்புடன் கூடிய அங்கதத்தைப் பயன்படுத்துகிறார். ஒழுக்கநெறி நில்லாதவர்களைக் கடுமையாகச் சாடும் வசை மொழிகள் பலவும் திருக்குறளில் காணப்படுகின்றன. அவற்றைத் தொல்காப்பியரின் செம்பொருள் அங்கதத்திற்குச் சான்றாகக் காட்டுவார் கதிரேசச்செட்டியார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

''வாய்காவாது சொல்லும் வசையே இங்குச் செம்பொருளங்-கதம் எனப்படும். இதனைச் செவியாலனுபவிக்கப்படுஞ் சொற்சுவை பொருட்சுவைகளை யுணராது வாயால் நுகரப்படும் உணவின் சுவையிலேயே ஈடுபடும் மனிதர் செத்தால் வரும் இழப்பும், வாழ்ந்தால் வரும் பேறும் இன்மையால் உலகிற்கு அவரால் வருவது யாது? என்னும் பொருள் தோன்றக்கூறும்,

'செவியாற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்?'

என்னும் திருக்குறளால் அறியலாம். இங்ஙனம் வெளிப்படையாகக் கூறல் நீதி நூற்கு இயல்பாகும். கவிநயந் தோன்றக் கூறற்குக் கரந்த மொழியாற் கூறலே சிறந்ததாகும்'' என்று பண்டிதமணி கதிரேசச்செட்டியார் கூறுவது இங்குக் குறிக்கத்தக்கது.[24]

வெளிப்படையாகக் கூறும் வசையினை அங்கதம் என்று கொள்வதற்குத் தயங்கிய தன்மை இங்குப் புலப்படுகிறது. ஏனெனில் நீதிநூல் பாடவந்த புலவர்கள் இவ்வாறு நெறி மாறியவர்களைக் கடுமையாகச் சாடுவது வழக்கம். எனவே அவற்றையெல்லாம் அங்கதம் என்று கூறுதல் ஐயத்திற்கிடமானது.

சங்கப்பாடல்களிலும்,பிற்காலத்தனிப்பாடல்களிலும் குறிப்பிட்ட மனிதர்களை வசையாகப் பாடும் பாடல்கள் அங்கதமாகக் கொள்ளப்பட்டுள்ளன. திருக்குறளில் குறிப்பிட்ட மனிதர்களைச் சாடும் நிலையின்றி, ஒழுக்க நெறி நில்லாதவர்களைப் பொதுப்படச் சினந்து பேசும நிலை காணப்படுகிறது. எனவே, நேரடியாக வசைபாடும் நிலை தவிர, எள்ளல் குறிப்புடன் அங்கத உணர்வோடு பாடப்பட்டுள்ள பாடல்கள் மட்டுமே இங்கு எடுத்துக்கொள்ளப்-பட்டுள்ளன.

நாலடியார் பாடல்களில் பெண்கள் பெரிதும் போற்றப்படுவது போல எடுத்துச்சொல்லி, அதற்கு நேர்மாறாக அவர் இழிவை அங்கதக் குறிப்புப்படப் பேசக் காண்கிறோம். அவ்வாறே விலை-மகளிர் இயல்பும் முரண்பட வைத்துக் காட்டப்படுகிறது. ஈயார் நிலையைச் சொல்லும்போது பயன்படாத செல்வம் எவர் கையில் இருந்தால் என்ன? என்னும் கருத்தை விளக்கும் வகையில் அமைந்துள்ளது. நானூறு பாடல்களில் ஐந்து பாடல்களில் மட்டுமே அங்கதம் அமைந்திருப்பதை நோக்க, மிகக்குறைவாக அங்கதம் பயன்படுத்திய நிலையைக் காணமுடிகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பதினெண்கீழ்க்கணக்கு நீதிநூல்களைப் பொதுப்படப் பார்க்–கும் போது, அங்கத உணர்வுடைய பாடல்கள் மிகவும் குறைவாகவே உள்ளன. நீதியை எடுத்துச்சொல்வதற்கு நேரடியாக, 'இதனைச்-செய், இதனைச் செய்யாதே' என்று சொல்லும் முறையினைப் பெரும்பாலும் கடைப்பிடித்துள்ளனர். எனவே, அத்தகைய கண்டிப்-புடனும், கட்டுப்பாட்டுடனும் பாடும் புலவர்கள், நகைச்சுவையுடன் கூடிய அங்கத உத்தியை அதிகம் பயன்படுத்துவதற்கு மிகுந்த வாய்ப்பு இல்லை எனலாம்.

முந்தைய காலகட்டத்தில் பெரிதும் சிறப்பாகப் போற்றப்பட்ட பெண்ணின் உயர்வு கேலிக்குரியனவாகக் கருதப்பட்ட சூழலில், அங்கத உணர்வை வெளிப்படுத்தக் காணுகிறோம். இன்னும் இது-போன்ற ஓரிரு இடங்களில் மட்டுமே அங்கதக் குறிப்புடைய பாடல்-கள் காணப்படுகின்றன.

திருவள்ளுவர், சங்ககால நெறியிலிருந்து ஓரளவு வேறுபட்டு அங்கத உணர்வை வெளிப்படுத்தக் காண்கிறோம். ஆனால், நாலடி-யாரில் முழுவதும் மாறான சூழலில் அங்கதம் பயன்படுத்தப்பட்–டுள்ளது. எஞ்சிய அற நூல்கள் அங்கத உத்தியைப் பயன்படுத்–தாமை இங்குக் குறிக்கத்தக்கது. மொத்தத்தில் அங்கதம் என்ற இலக்கிய உத்தி இக்காலகட்டத்தில் அதிகம் செல்வாக்குப் பெற-வில்லை எனத் தெரிகிறது.

குறிப்புக்கள்

1. குறள். 336,403,839,1073,1168,1173,1221,1222,1242.
2. குறள்.336.
3. குறள்.403.
4. குறள்.839.
5. திருக்குறள்,பரிமேலழகர் உரை, ப.316.
6. குறள்.1073.
7. திருக்குறள், மு.நூ, ப.403.
8. மு.கதிரேசச்செட்டியார், உரைநடைக்கோவை — இரண்டாம் பாகம், 'சங்ககாலத்து அங்கதம்', ப.76.
9. குறள்.1168.
10. திருக்குறள், மு.நூ, ப.443.
11. திருக்குறள், 'காமத்துப்பால்', வை.மு.கோபாலகிருஷ்ணமாசாரி-யார் விளக்கஉரை, ப.70.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

12. குறள்.117.3
13. குறள்.1221.
14. குறள்.1222.
15. திருக்குறள், மு.நூ, ப.464.
16. குறள்.1242.
17. திருக்குறள், மு.நூ, ப.471.
18. நாலடியார், பா.41.
19. மேலது, பா.-2.
20. மேலது, பா.46.
21. மேலது, பா.276.
22. மேலது, பா.372.
23. ஐந்திணை எழுபது, பா.49.
24. மு.கதிரேசச்செட்டியார், மு.நூ. பக்.75—76.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

4. இடைக்காலத் தனிப்பாடல்களில் அங்கதம்

முன்னுரை

சங்ககாலத்திற்குப் பிறகு தனிநிலைச் செய்யுளின் ஆட்சி குறைந்து, காப்பியம், சிற்றிலக்கியம் போன்ற இலக்கிய வகைகள் பெரிதும் தழைத்தோங்கின. எனினும் பழைய மரபை விட்டுவிடாது இடைப்பட்ட காலத்தில் மன்னர்களையும், வள்ளல்களையும், கடவுளரையும் பாடும் தனிநிலைப் பாடல்கள் தோன்றாமல் இல்லை. பல்வேறு புலவர்களால் வெவ்வேறு சூழ்நிலையில் இப்பாடல்கள் பாடப்பட்டுள்ளன. அவை தொகுக்கப்பட்டுத் தனிப்பாடல் திரட்டு என்றும், தனிச்செய்யுட் சிந்தாமணி என்றும் பின்னர் வெளியிடப் பட்டுள்ளன.

தனிப்பாடல் திரட்டு என்னும் பெயரில் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் ஐந்து நூல்களை வெளியிட்டுள்ளது. அவை தவிர கா.இராமசாமி நாயுடு என்பவர் உரையுடன் ஒரு தனிப்பாடற்றிரட்டு வெளியிடப்பட்டுள்ளது. கா. சுப்பிரமணிய பிள்ளை தனிப்பாடல் திரட்டு நூல்கள் இரண்டினை வெளியிட்டுள்ளார். இந்நூல்களில் ஏறக்குறைய ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்கள் காணப்படுகின்றன. ஐநூறுக்கும் மேற்பட்ட புலவர்கள் இதனைப் பாடியுள்ளனர். இப்பாடல்கள் அகப்பொருள் அமைப்பிலும், போற்றிப் பாடல்கள் அமைப்பிலும் பெரும்பாலும் அமைந்திருக்கக் காணலாம். இடையிடையே புலவர்கள் சினந்து பாடும் வசைமொழிப் பாடல்களும் காணப்படுகின்றன. அவ்வாறு வசைபாடுவதில் காளமேகப் புலவர் தனிச்சிறப்புப் பெற்றுள்ளார். மாயூரம் வேதநாயகம் பிள்ளையும் அங்கதக் குறிப்புப்படப் பாடும் சிறப்புடையவராகக் காணப்படுகிறார். காளமேகம் முதல் வேதநாயகம் பிள்ளை ஈறாக ஏறக்குறைய இருபத்து மூன்று புலவர்கள் பாடியுள்ள எழுபத்தேழு பாடல்கள் அங்கதக் குறிப்புடையனவாகக் காணப்படுகின்றன.

சங்க இலக்கியத்தில் பரிசில் நீட்டித்தபொழுது பாடப்பட்டது போல, பரிசில் கொடாதபொழுது வள்ளல் மீது வசைபாடும் நிலை இப்பாடல்களில் காணப்படுவது குறிக்கத்தக்கது. அந்நிலை தவிரத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தனிப்பட்டோரை இகழ்தல், இறைவனை இகழ்தல், பிற புலவரை இகழ்தல், தன்னை மதிக்காதோரை இகழ்தல், தாசியை இகழ்தல் ஆகியவை இக்கால வளர்ச்சியாக அமைந்துள்ளன. போலித் துறவிகளையும் கட்சி மாறுவோரையும் அங்கதக் குறிப்புப்பட வசைபாடும் நிலையும் காணப்படுகிறது. அக்காலச் சமுதாய நிலையைச் சாடும் குறிப்போடு இப்பாடல்கள் அமைந்துள்ளமை இக்காலத்தில் ஏற்பட்டுள்ள பொது வளர்ச்சி எனலாம். போற்றிப் புகழ்ந்து பாடுவது போலவே, தூற்றி வசைபாடும் நிலை இக்காலத்துப் புது மரபாகக் காணப்படுகிறது. சிலேடை முதலான சொல்வித்தை காட்டும்பாடல்கள் இக்கால கட்டத்தில்பேரிடம்பெறுகின்றன. அவ்வகையில் அங்கதம் பாடுவோரும் அச்சொல்வித்தையைக் கையாண்டுள்ளமை குறிக்கத்தக்கதாகும்.

இவ்வியலில் புலவர் வாரியாக அவர்கள் பாடிய அங்கதப் பாடல்கள் ஆராயப்படுகின்றன. அவ்வாறு ஆராயப்படும் புலவர்கள் வருமாறு :

1. காளமேகப் புலவர்
2. ஔவையார்
3. அந்தகக்கவி வீரராகவ முதலியார்
4. இரட்டையர்
5. இராமச்சந்திரக் கவிராயர்
6. ஒப்பிலாமணிப் புலவர்
7. கம்பர்
8. கையேட்டுத் தம்பான்
9. சவ்வாதுப் புலவர்
10. சாமிநாதப் புலவர்
11. சிவப்பிரகாச சுவாமிகள்
12. சுத்தானந்த பாரதியார்
13. செகவீரபாண்டிய கவிராச பண்டிதர்
14. தத்துவப் பிரகாசர்
15. படிக்காசுத் தம்பிரான்
16. பலப்பட்டடைச் சொக்கநாதப் புலவர்
17. பொய்யாமொழிப் புலவர்
18. வசைகவி ஆண்டான் கவிராயர்
19. வேலாயுதம் பிள்ளை
20. நையாண்டிப் புலவர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

21. முத்துராம முதலியார்
22. முத்துச் சுப்பையர்
23. வேதநாயகம் பிள்ளை

மற்றும் பெயர் தெரியாத புலவர்கள்.

1. காளமேகப்புலவர்

நாயக்க மன்னர்கள் தமிழகத்தில் ஆட்சி புரிந்த பொழுது வாழ்ந்தவர் காளமேகம். இவர் பெருமாள் கோவில மடைப்பள்ளித் தொழிலில் முதலில் இருந்து பின்னர் சிவன்கோவில் மடைப்பள்ளித் தொழிலுக்கு வந்தவர் என்பர். அம்மையின் அருளைப் பெற்றவர் என்றும் கூறுவர். இவரைப் பற்றிப் பல்வேறு கதைகள் கூறப்-பட்டாலும், இவரது பாடல்கள் அனைத்துமே தனிப்பாடல்களாக உள்ளன. தனிப்பாடல்கள் மூலமே இவர் புகழ் பெற்றார். திரு-வானைக்கா உலா, கடல் விசாலம் போன்றவை இவர் எழுதிய நூல்கள் என்றாலும், அவை சிறப்புப் பெறவில்லை. இவரது தனிப்-பாடல்களில் அமைந்த கேலிப்பாடல்கள், வசைப்பாடல்கள்போன்ற-வற்றாலும், இறைவன் மீது பாடிய நிந்தாஸ்துதிப் பாடல்களாலும் இவர் புகழப்படுகிறார். இவரது காலம் 14 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியும் 15 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியும் ஆகும்

இவர் பாடிய பாடல்கள் 187 என்று தனிப்பாடற் திரட்டு கூறுகின்றது. 214 என்று கழகப்பதிப்புக் கூறுகின்றது. இப்பாடல்-களில் பெரும்பான்மையான பாடல்கள் நிந்தாஸ்துதிப் பாடல்களா-கவும், சிலேடைப் பாடல்களாகவும் உள்ளன. இவற்றை விடுத்துள்ள பிற பாடல்களில் 19 பாடல்கள் அங்கதக் குறிப்புடையனவாக இருப்பதைக் காணமுடிகிறது. இவர் கையாளும் அங்கதம் நேரடி வசையாகவும், ஏளனம் செய்வதாகவும், ஒரு குறிப்பிட்ட நிலையைத் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டுவதாகவும் இருக்கிறது. இவரது பாடல்களில் காணலாகும் அங்கதக் குறிப்புக்களை ஆறுபிரிவுகளில் அடக்கலாம்.

1. ஈகை தொடர்பானவை
2. பரத்தையர் தொடர்பாவை
3. பிற புலவர்கள், அரசர்கள் தொடர்பானவை
5. சமயம் தொடர்பானவை
5. ஊர்கள், பிராணிகள் தொடர்பானவை
6. பிற குறைகள் தொடர்பானவை

என்று வகைப்படுத்தலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1. ஈகை தொடர்பான பாடல்களில் அங்கதம்

புலவர்கள் செல்வந்தர்களையோ, சமயத் தலைவர்களையோ, அரசர்களையோ பொருள் வேண்டிப் புகழ்ந்து பாடுவது இயல்பு. இதனைச் சங்ககாலம் தொட்டே இலக்கியங்களில் காணமுடிகிறது. தனிப்பாடல் காலப் புலவர்களும் தனிமனிதனையும், தலைவனையும் பொருள் வேண்டிச் சிறப்பித்துப் பாடியுள்ளனர். பொருள் தந்தால் புகழ்ந்தும், தராவிட்டால் இகழ்ந்தும் பாடியுள்ள நிலை இங்குக் காணப்படுகிறது.

காளமேகப் புலவரும் இத்தகைய சூழலில் பாடல்கள் பாடியுள்ளார். தான் கேட்டபொழுது தராவிட்டாலும், சிறிதே கொடுத்தாலும், மரியாதையின்றிக் கொடுத்தாலும் வசைபாடுபவராகத் தோன்றுகிறார். நேரடியாக வசை பாடுவதுடன், குறிப்பாகக் கேலி-எள்ளல்-செய்வதன் மூலம் அங்கதக் குறிப்பினை வெளிப்படுத்துகிறார்.

இவரது பாடல்களுள் 5 பாடல்களில் ஈகை தொடர்பான அங்கதக் குறிப்பைக் காணமுடிகிறது. ஒருபாடலில் இவர் உண்ட விருந்து, விருந்தில் பரிமாறப்பட்ட உணவு ஆகியவை பற்றி அங்கதக் குறிப்புப் படப் பாடுகிறார்.

வீரசேனன் என்னும் வடுகப் பிராமணன் வீட்டில் விருந்துண்ணச் செல்கிறார் காளமேகப் புலவர். ஆனால் அவன் கூழ்மட்டுமே படைக்கிறான். அதனைக் கண்ட புலவர்,

''ஏழு மனிதர்களை ஒரு காலத்தில் கொன்ற புலியை அடித்து வென்றவன் வீரசேனன் என்ற வடுகப் பிராமணன். இதனை அறிந்த புலிகள் காட்டில் தங்காமல் ஈயாகவும் எலியாகவும் வடிவம் எடுத்தன. அவை வடுகனது சமையலறையில் வந்து கூழ்வடிவமாகி என்னுடைய வயிற்றுக்குள்ளே செல்லும்போது தங்களது இயற்கைத் தன்மையை விடாமல் இரைச்சலிடுகின்றன'' என்று பாடுகிறார்.[1]

காட்டில் வாழும் புலிகள் இரைச்சல் இடும் தன்மையன. இத்தன்மை புலிகளுக்கு அமைந்த இயற்கைத்தன்மை. காளமேகப் புலவர் வீரசேனனாகிய பிராமணனது வீட்டில் உண்ட கூழ் நல்ல தன்மையதாக இல்லாமல், புலவரது வயிற்றைக் கெடுத்தது என்ற பொருள்பட,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"சிறுபுலிகள் ஈப்புலியோடு எலிப்புலியாய் வடிவங்கொண்டு
பாழாகிக் காடெல்லாம் பரதவிக்க வடுகரடுப் படியில்வந்து
கூழாகி வயிற்றினிற் போம்பொழுது குணம்போகாமற்
குமுறுந்தானே"

என்று பாடுகிறார். இவ்வரிகள் வீரசேனனது கூழினைக் கேலிசெய்து அங்கதக் குறிப்புப்பட உள்ளன.

இப்புலவர் ஒருசமயம் சீரங்கத்தில் உள்ள ஒரு பெண்ணின் வீட்டிற்குச் சாப்பிடச் சென்றார். அவ்வீட்டில் அவ்வம்மையார் படைத்த உணவின் தரம் குறித்துப் பாடுகின்ற பாடலிலும் கேலிக் குறிப்பு அமைந்துள்ளது.

'நீச்சல் அடித்துச் செல்லத்தக்க அளவு வெள்ளமாகப் போவது காவேரி ஆறு. அத்தகைய ஆற்றினைத் தடுத்து அந்நீரைக் கீரைச் சாற்றினில் செலுத்தினாள். மேலும் காய்ந்துபோன புளியினையும் அக்கீரைச் சாற்றினில் சேர்த்தாள். நல்ல கற்களோடு சோற்றையும் சேர்த்துச் சமைத்து வைத்தாள் அந்த அம்மையார். அவ்வம்மையாரை நான் மறவேன். நான் மறந்தாலும் எனது மனம் கேட்குமா?' என்கிறார் காளமேகம்,[2]

இப்பாடலிலும் சீரங்கத்து அம்மையார் படைத்த சோற்றின் தரத்தைக் கேலி செய்வதைக் காணலாம். காவேரி ஆற்று வெள்ளம் போல் கீரைச்சாறு உள்ளது என்பதில் கீரைச்சாறு மிகவும் மிகவும் நீர்த்த நிலையில் இருப்பதைக் குறிப்பாகக் காட்டுகிறார். கீரையே தாழ்ந்த உணவு. அதையும் நீர்த்ததாகக் காட்டியுள்ளார். படைக்கப்பட்ட சோற்றில் கற்கள் மிகுந்து இருப்பதை "நற்கல்லுடன் சோறுங்கலந்து வைத்த ஆச்சரள்" என்று குத்திக் காட்டுகிறார். சோற்றில் கல் கலக்காது கல்லில் சோற்றைக் கலந்தமையைச் சுட்டுகிறார். கேலியின் உச்சமாக 'ஆச்சாளை யான் மறவேன், மறந்தால் மனம் ஆற்றிடுமோ" என்று கூறுவது அங்கதத் தன்மை மிக்கதாகும்.

காளமேகப் புலவர் வசைகவி என்று பெயர் பெற்றவர். அதே நேரத்தில் அவ்வசைகளையே புகழாகவும் மாற்றத்தக்க ஆற்றல் மிக்கவர். அத்தகைய சிறப்புமிக்க பாடல் ஒன்று காணக்கிடக்கிறது.[3] இப்பாட்டிலே பெரும்பாலான திறனாய்வாளர்களால் அங்கதத்திற்கு எடுத்துக்காட்டாகவும் தரப்பட்டுள்ளது.

நாகப்பட்டினத்திற்கு ஒரு சமயம் காளமேகப் புலவர் சென்றிருக்கிறார். அங்கு காத்தான் என்பவனது சத்திரத்தில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உணவு உண்பதற்காகப் புலவர் நீண்டநேரம் காத்துக்கொண்டிருக்க வேண்டியதாயிற்று. அதனால் மனம் வெகுண்ட காளமேகப் புலவர் காத்தானையும் அவனது சத்திரத்தையும், அவன் உணவு அளிக்கும் விதத்தையும் ஏளனமாகப் பாடுகிறார்.

'கடலால் சூழப்பட்ட நகரம் நாகப்பட்டினம் அத்தகைய ஊரில் காத்தான் என்பவனது சத்திரத்தில் சூரியன் மாலையில் மறையும் போதுதான் அங்கு தங்கியிருக்கும் வழிப்போக்கர்க்கு உணவு சமைத்துப் படைப்பதற்காக அரிசி வரும் அவ்வரிசியினைச் சீராக்-கிக் கொதிநீரில் இடுவதற்குள் நள்ளிரவு ஆகிவிடும். சோறு வெந்து உணவாகி அவ்வுணவு வழிப்போக்கர் உண்ணுவதற்காக இடப்பட்-பட்டிருக்கும் இலையில் ஒரு அகப்பைச் சோறு வைக்கும்போது விடிவெள்ளி தோன்றிவிடும்.' என்று பாடுகிறார்.[4]

பசியோடு காத்திருக்கும் வழிப்போக்கர்களுக்கு உணவு அளிப்-பதற்காகச் சத்திரங்கள் உள்ளன. ஆனால் அச்சத்திரங்களின் நிர்வாகம் சரிவர இல்லாததால் வழிப்போக்கர்களுக்குக் காலத்தில் உணவு கிடைப்பதில்லை என்பதைக் காட்டுவதற்காக இப்பாடலைப் பாடியுள்ளார் காளமேகப் புலவர். மாலை நேரத்தில் வருகின்ற அரிசி உணவாக ஆகும்போது மறுநாள் காலைப்பொழுது ஆகிவிடும் என்று நகைச்சுவையுடனும், அதேநேரத்தில் அச்சத்திர நிர்வாகத்தின் குறையினையும் சுட்டிக்காட்டும் முறையில் இப்பாடல் அங்கதமாக அமைகிறது.

இப்பாடலைக் கேட்ட சத்திரத்துத் தலைவன் காத்தான், காளமேகப் புலவரை அணுகித் தன் தவற்றைப் பொறுத்துக்கொள்ள வேண்டி நின்றபொழுது இதே பாடலுக்கு வேறு ஒரு பொருளை— காத்தான் சத்திரத்தைப் புகழ்கின்ற தன்மையதாகிய பொருளை— வெளிப்படுத்திக் காட்டுகிறார்.

காளமேகப் புலவரின் கேலிப்பார்வைக்கு எதுவும் தப்பிய-தில்லை. ஒருசமயம் இடையர் குலப்பெண் ஒருத்தி வீட்டிற்குச் சென்றார். அங்கு அவளிடம் குடிப்பதற்காக மோர் கேட்டார் இடைச்சியும் மோர் அளித்தாள். அம்மோரின் தன்மையைக் கண்ட காளமேகம், அதனைப்பற்றி

'ஆயர் குலப்பெண் கொடுத்த மோரே! வானத்தில் இருக்கும் போது மேகம் என்று பேர் பெற்றாய். நில உலகிற்கு வந்தவுடன் நீர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்று பேர் பெற்றாய். இடைச்சியர் கையினைச் சேர்ந்த பின்னர் மோர் என்று பெயர் பெற்றாய். இவ்வாறு கார், நீர், மோர் என்று முப்பேரும் பெற்றாயே' என்று பாடுகிறார்.[5]

இடைச்சி அளித்த மோர் தண்ணீர் மிகுதியாகக் கலக்கப்பட்ட மோராக இருந்ததால் இவ்வாறு கேலி செய்கிறார் புலவர். இடைச்சி கை மோர் கார் எனவும், நீர் எனவும், மோர் எனவும் முப்பேர் பெற்றது என்று புலவர் கூறுவது அங்கதக் குறிப்புடையது.

காளமேகப் புலவரின் கோபத்தை வெளிப்படுத்தும் வசைப்பாடலாக ஒரு பாடல் அமைந்துள்ளது.[6]

கும்பகோணத்தில் சமாராதனை ஒன்றில் காளமேகப் புலவர் உணவு உண்டு கொண்டிருந்தார். அச்சமயம் புலவருக்கு எதிரே சோழியப் பிராமணன் ஒருவன் உண்டு கொண்டிருந்தான். அப்பொழுது பிராமணனின் குடுமி அவிழ்ந்து இலையில் விழுந்தது. அவன் அதனை எடுத்து உதறியபொழுது அவனது கையிலிருந்த எச்சிற்சோறு காளமேகப் புலவரின் இலையில் விழுந்தது. உடனே கோபம் கொண்ட புலவர்,

'கட்டு அவிழ்ந்த முன் குடுமியை உடைய சோழியப் பிராமணனே! சோற்றுப்பற்று கழுவாது காய்ந்து கிடக்கின்ற வாயை உடையவனே! கீழ் மகனே! கும்பகோணத்திலுள்ள ஆந்தையே! நாயே! குரங்கே! ஒரு பெண் வீணாக உன்னைப் போன்ற இழிவான ஒருவனைப் பெற்றுப்போட்டாள்' என்று வசைபாடுகிறார்.

இப்பாடலில் பிராமணனை நேரடியாக இகழ்வதை—வசைபாடுவதை உணரலாம். புலையன் என்றும், கோட்டான் என்றும், நாய் என்றும், குரங்கு என்றும் நேரடியாகத் திட்டுகிறார். அதுமட்டுமின்றி அவனைப் பெற்றெடுத்த தாய், வேறு வேலையில்லாமல் பெற்றுப்போட்டாள் என்று இழிவு தோன்றக் கூறியிருப்பதும் குறிக்கத்தக்கது. இப்பாடல் செம்பொருளங்கதமாக விளங்குவதைக் காணலாம்.

இவ்வாறு ஐந்து பாடல்கள் ஈகை தொடர்பாக — உணவு உண்ணல் தொடர்பாக—அமைந்து அங்கதக் குறிப்பினை உடையனவாக விளங்குகின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

2. பரத்தையர் தொடர்பான பாடல்களில் அங்கதம்

பரத்தையர் வீடு செல்லல் என்பது சங்ககாலத்திலிருந்து வந்த வழக்கம். தனிப்பாடல் காலத்திலும் இத்தகைய வழக்கம் இருந்திருக்கிறது. பரத்தையர் இல்லம் செல்வது சாதாரணச் செயலாகக் கருதப்பட்டு வந்திருப்பதைத் தனிப்பாடல்கள் மூலம் அறியலாம். அப்பரத்தையரைக் கேலி செய்கின்ற தன்மையினையும், தன்னை மதிக்காத பரத்தையர் மீது வசைபாடும் தன்மையினையும் காணலாம். காளமேகப் புலவர் பாடல்களில் நான்கு பாடல்கள் பரத்தையரைப் பற்றி — தாசியரைப்பற்றிப் பாடப்பட்டுள்ளன.

தன்னை ஏளனம் செய்த தாசியின் மீது வசைபாடும் பாடல்களாக இரண்டு பாடல்கள் உள்ளன.

ஒருபாடலில், 'சிவபெருமான் கோயில் கொண்டுள்ள தொண்டை மண்டலத்தில் நொண்டிச் சிந்துகளும், சிறந்த பாடல்களும் பாடத்தெரியாத அறிவிலியே! உனக்கு வாசனைப்பொடி எதற்கு? வயது முதிர்ந்த நரை திரை உன்முகத்தில் உண்டான பிறகும் கெம்பீரம் எதற்கு? இறுமாப்பு எதற்கு? கிளர்ச்சி எதற்கு? உன்னை இழக்க ஆயத்தமாக உள்ளேன்' என்று தாசியை வசைபாடுகிறார் காளமேகம்.[7]

இப்பாடலின் மூலம் தாசிகுலத்தைச் சார்ந்தவர்களுக்குச் சிந்து பாடவும், வேறுபல பாடல்கள் பாடவும் தெரிந்திருக்க வேண்டும் என்று தெரிகிறது. இவை தெரியாத காரணத்தால் காளமேகப் புலவர் தாசியை 'அறிவிலி' என்று வசைபாடுகிறார். வயதான நிலையிலும் அத்தாசி ஒப்பனை செய்து இருப்பதைக் கேலி செய்கிறார் 'கெந்தப் பொடியேன், பூமுடியேன், முறுக்கேன், வீறாப்புஏன்'' என்று தாசியின் இயல்பைச் சுட்டிக்காட்டி ஏளனம் செய்வதில் அங்கதக் குறிப்புக் காணப்படுகிறது. இவ்வாறு தாசியை ஏளனம் செய்வதற்குக் காரணம் அத்தாசி அவரை மதிக்காமல் இருந்ததுதான்.

இதே தன்மையுடைய பாடல் மற்றொன்றும் உள்ளது. இப்பாடல் இஞ்சிக்குடி என்னும் ஊரிலிருக்கும் கலைச்சி என்னும் தாசி தம்மை மதியாமல் இருந்தபோது, 'பாறிப்போன தலைமயிரில் மூன்று கலம் அளவு சிக்குப் பிடித்த மூதேவி போன்றவள். நாய் விரும்பும் கலைச்சி என்னும் தாசி திருவாரூரில் உள்ளாள். இவ-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

 Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ளுக்கு அமைந்த இரண்டு முலைகளும் இரண்டு பாகற்காய் போல நீண்டு தொங்குவன. இடுப்பு செக்குலக்கை அளவு பருத்திருக்கும்' என்று வசைபாடுகிறார் காளமேகம்.

இப்பாடலிலும் தன்னை மதிக்காத காரணத்தால் கலைச்சி என்னும் தாசியை மூதேவி என்றும், நாய் விரும்பும் தன்மையள் என்றும், பாகற்காய் போன்று தொங்கும் முலைகளை உடையவள் என்றும், செக்குலக்கை போன்ற பருத்த இடுப்பை உடையவள் என்றும் வசைபாடியுள்ளார். இவ்வாறு நேரடி வசையாக இப்-பாடலில் அங்கதம் அமைந்திருக்கக் காணலாம்.

தாசி தன்னை மதிக்காத பொழுது வசைபாடியது போன்று, அவளது பாடல் இனிமையாக இல்லாதபோது அவளது குரலைக் கேலி செய்யும் பாடல் ஒன்றினையும் காளமேகப் புலவர் பாடல்-களில் காணலாம்.[9]

நாகப்பட்டினத்தில் தாசியொருத்தி பாடிக்கொண்டிருப்பதைக் கேட்கிறார் காளமேகப் புலவர். அவள் பாடும் பாடல் புலவரின் செவிக்கு இனிமை பயக்காததால் அவளைக் கேலி செய்து,

'வாழ்வு நன்கு விளங்கும் அழகிய ஊர் நாகப்பட்டினம். அங்கு அழகான தாசி ஒருத்தி பாட்டுப் பாடினாள். நேற்று கழுதையை இழந்த வண்ணான் அவள் குரலைத் தன் கழுதையின் குரலாகக் கருதிக் கொண்டான். உடனே ஒரு கோலைக் கையில் எடுத்துக்கொண்டு கழுதையை அடித்து மீட்டுக்கொண்டு போவதற்கு ஓடிவந்தான்' என்று பாடுகிறார்.

இப்பாடலில் நாகப்பட்டினத்துத் தாசி ஒருத்தி பாடினாள் என்று கூறுகிறார். உடனே கழுதையினை இழந்த வண்ணான் தன் கழுதைதான் கத்துகிறது என்று கருதி அதனை அடித்து மீட்டுவர ஓடினான் என்று கூறுகிறார். இதன்மூலம் தாசி பாடிய பாடல் கழுதையின் குரலைப் போன்று இழிவாக இருந்தது—காதுகளுக்கு இனிமையற்றதாக இருந்தது—என்று குறிப்பாகச் சுட்டிக்காட்டுவது நகைச்சுவையும், கேலியும் கலந்து அங்கதப் பொருள்பட உள்ளது. ''குரலெடுத்துப் பாடினாள்.....கழுதை கெட்ட வண்ணான் கண்டேன் கண்டேன் என்று பழுதை எடுத்து ஓடிவந்தான்'' என்பது அங்கதக் குறிப்புப்பட அமைந்துள்ளது. இதேபோன்ற பாடலை நந்திக்கலம்பகத்திலும் காணலாம்.[10]

தாசியரைக் கேலிசெய்வதில் மற்றுமொரு முறையைப் பின்பற்றுகிறார் காளமேகப் புலவர். இவர் வாழ்ந்த காலத்தில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிறமொழி பேசும் தாசியர்களும் இருந்திருக்கிறார்கள். அவர்கள் பேசும் மொழி புலவருக்குப் புரியாதபொழுது, அம்மொழியினைக் கேலிசெய்வதன் மூலமாகத் தாசியரையும் ஒரு பாடலில் கேலி செய்கின்றார்.[11]

தெலுங்கு மொழி பேசும் திம்மி என்ற பெயருடைய தாசியை அவள் பேசிய மொழியினைக் கொண்டே கேலி செய்து,

'திம்மி' என்னும் தெலுங்குத் தாசி என்னடா அடே என்பாள், எங்கிருந்து வருகிறாய் என்பாள், நேற்று இரவு அவள் பேசிய மொழியில் முதலும் தெரியவில்லை, முடிவும் தெரியவில்லை. அவளிடம் நான்பட்ட துன்பம் எமன் கையில் அகப்பட்டால் படும் துன்பமே' என்று பாடுகிறார்.

திம்மி என்ற தாசி பேசும் மொழி புரியாத காரணத்தால், தான்பட்ட துன்பத்தை நகைச்சுவைபடக் கூறி, அவளைக் கேலி செய்கிறார். ஏமிரா ஓரி, எந்துண்டி வஸ்தி போன்ற தெலுங்குமொழிச் சொற்கள் இப்பாடலில் இடம்பெற்று, சூழலுக்கேற்ப நகைச்சுவையாக அமைந்து அங்கதப் பொருள்பட நிற்கின்றன.

இப்பாடல்கள் மூலம் தாசியரைக் கேலிசெய்து, அவர்களை இகழ்வதிலும் சிறந்தவராகத் திகழ்கிறார் காளமேகப் புலவர்.

3. பிற புலவர்கள் தொடர்பான பாடல்களில் அங்கதம்

காளமேகப் புலவர் வாழ்ந்த காலம் புலவர்களிடையே போட்டி இருந்த காலம். புலவர்கள் ஒருவருக்கொருவர் தாழ்ந்தவரல்ல என்பதனைத் தங்கள் புலமைத் தன்மையால் நிறுவ முயன்றிருக்கின்றனர் என்பது தனிப்பாடல்கள் மூலம் நன்கு புலனாகிறது. அத்தகைய சூழலில் தனிப்பட்ட முறையில் ஒருவரை ஒருவர் தாக்குகின்ற பாடல்களும் கிடைக்கின்றன. புலவர்கள் உண்மையான புலவர்களா? என்று அறிந்துகொள்வதிலும் புலவர்கள் இடையே போட்டி நிலவியிருக்கிறது. புலவர்களைப் பற்றிப் பாடிய இரண்டு பாடல்கள் அங்கதக் குறிப்புடையனவாகக் காளமேகப் புலவர் பாடல்களில் காணப்படுகின்றன.

திருமலைராயன் என்பானின் அரசவைக் கவிஞர்களைக் காண்கிறார் காளமேகம். "நீங்கள் யார்?" என்று கேட்கிறார். பதிலாக அவர்கள் "கவிராயர்" என்கிறனர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கவி என்றால் குரங்கு என்று ஒரு பொருள் உண்டு. இப்-பொருளை நினைவில் கொண்டு, அப்புலவர்களைப் பார்த்து,

'அரசர்கள் மிகுதியும் பாராட்டுகின்ற புலவர்களே! நீங்கள் 'கவிராயர்' என்றால் உங்களுடைய வால் எங்கே உள்ளது? நீளமான வயிறு எங்கே? முன்பக்கம் இருக்கும் இரு கால்கள் எங்கே? உள்பக்கம் குழிந்து இருக்கும் கண்கள் எங்கே?' என்று கேட்கிறார்.[12]

கவிராயர் என்றால் குரங்குத் தலைவன் என்று பொருள் இருப்பதைக் கொண்டு, குரங்குக்கு இருக்கவேண்டிய வால், நீளமான வயிறு, முன்னங்கால்கள், குழிவிழுந்த கண்கள் இவையெல்லாம் எங்கே? என்று கேட்கிறார். இதன்மூலம் அவர்களைக் 'குரங்குகள்' என்று மறைமுகமாகத் திட்டுவதில் அங்கதக் குறிப்பினைக் காணலாம்.

இதேபோன்று தனிப்பட்ட புலவர் ஒருவரை ஏளனம் செய்-யும் ஒரு பாடலும் காணப்படுகிறது. கம்பரைக் கேலிசெய்து "நாராயணன் என்ற சொல்லை நராயணன் என்று முதல் எழுத்தைக் குறுக்கிக் கம்பர் உபயோகித்தார். அப்படி என்றால் நானும வார் என்பதற்குப் பதிலாக வர் என்பேன், வாள் என்பதற்குப் பதிலாக வள் என்பேன், நார் என்ற சொல்லை நர் என்பேன் என்று பாடுகிறார்.[13]

இப்பாடல் மூலம் கம்பரைக் காளமேகப் புலவர் ஏளனம் செய்வதைக் காணமுடிகிறது. 'குறுக்கல்விகாரம்' என்ற இலக்கணத்-தின்படி கம்பர் பாடியிருந்தாலும், அதனை ஒப்புக்கொள்ளாத காளமேகம் கம்பரைத் தாழ்த்திப் பேசவேண்டும் என்ற குறிக்கோ-ளுடன் இவ்வாறு பாடியிருக்கிறார் என்றே கருத இடமுண்டு.

4. சமயம் தொடர்பான பாடல்களில் அங்கதம்

புலவர்கள் பார்வையில் சமயமும், கடவுளரும் தப்பியதில்லை. இவர்கள் நிந்தாஸ்துதியாக—பழிப்பது போன்று புகழ்கின்ற தன்மையுடைய பாடல்களைப் பாடியிருந்தாலும், சில நேரங்களில் இறைவனையும் சாடுகின்ற தன்மையைக் காணமுடிகிறது. பெரும்பாலும் இறைவனைத் தரிசிப்பதற்குக் கால நீட்டிப்பு நேர்ந்தால் அத்தகைய சூழலில் அவ்விறைவனையும், அச்-சமயத்தையும் பழிக்கின்ற தன்மையைக் காணலாம். காளமேகப் புலவர் பாடல்களிலும் இத்தன்மையுடைய பாடல் ஒன்று காணப்படுகிறது. திருவாரூர்த் தியாகராயர் சுவாமிக்கு வைரமாலை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சாத்தியிருந்தார்கள். அக்கோவிலுக்குச் சென்றார் காளமேகப் புலவர். இறைவனைத் தரிசிக்கத் தாமதம் ஆனதால் கோபம் அடைந்தார். அதனால் தியாகராயர் கழுத்தில் இருந்த வைர மாலை அறுந்து விழவேண்டும் என்ற எண்ணத்தில்,

'அன்னங்கள் உலாவும் வயல்கள் சூழ்ந்த திருவாரூரில் இருக்கும் தியாகராயர் மார்பில் முற்காலத்தில் சிறுத்தொண்டர் பிள்ளையைக் கொன்ற பிற்பாடும், மனுநீதிச் சோழன் மகனைக் கொன்ற பிற்பாடும், பிள்ளையாகிய சண்டேசுர நாயனாரது தந்தையைக் கொன்ற பிற்பாடும் வயிரம் இருப்பதா?' என்று பாடுகிறார்.[16]

''அன்னவயல் சூழ்ந்திருக்கும் ஆரூரான் நெஞ்சத்தில் இன்னும் வயிரம் இருப்பதா'' என்ற பாடலடிகளில் உள்ள 'வயிரம்' என்ற சொல் 'கோபம்' என்ற பொருளையும், 'வைரமாலை' என்ற பொருளையும் குறிக்கிறது. இதன்படி இப்பாடலின் மூலமாகத் ''தியாகராயர் நெஞ்சில், இன்னும் கோபம் இருக்கவேண்டுமா?'' என்று கேட்பது போலவும் ''வைரமாலை இருக்க வேண்டுமா?'' என்று கேட்பது போலவும் தோன்றுகிறது. தனது தரிசனத்திற்குத் தாமதம் ஆனமையால் வயிரமாலை இருக்கவேண்டுமா? என்று கேட்பது இங்குப் பொருத்தமாகத் தோன்றுகிறது. சிலேடை என்ற அமைப்பின் மூலமாக இப்பாடலில் அங்கதக் குறிப்பினை வெளிப்படுத்துகிறார் காளமேகப் புலவர்.

5. ஊர்கள், பிராணிகள் தொடர்பான பாடல்களில் அங்கதம்

இடைக்காலத்தில் வாழ்ந்த புலவர்கள் தனிப்பட்ட முறையில் ஒருவரை ஒருவர் தாக்கிப் பாடுபவர்களாகவும், புலவர்கள் முன்னிலையிலும் அரசர்கள் முன்னிலையிலும் தங்கள் விருப்பு வெறுப்புக்களைக் காட்டுபவர்களாகவும் இருந்தார்கள். இதேபோன்று காளமேகப் புலவரும் ஐந்து பாடல்கள் பாடியுள்ளார். ஊர் அழிந்து போகும்படி வசைபாடுவனவாக மூன்று பாடல்கள் உள்ளன.

காளமேகப் புலவர் ஓர் ஊரில் வாழும் வேளாளர் மீது கொண்ட வெறுப்பின் காரணமாக, அவ்வூரிலுள்ள ஏரி அவர்களால் ஓட்டை ஏரியாக உடைந்து அக்குற்றத்திற்குரிய தண்டனையை அவர்கள் பெறவேண்டும் என்று விரும்பிப் பின்வருமாறு பாடுகிறார்.

'கலங்கிய தண்ணீருள்ள ஏரியின் படித்துறைக்கருகில் வேளாளர் செல்லும்போது ஏரியின் நடுவில் வெள்ளம் பெருக்கெடுக்க

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வேண்டும். ஏரியின் கரை உடைந்து தண்ணீர் புறத்தே பாய்ந்-தோட வேண்டும். இக்குற்றத்திற்குரிய தண்டனையைத் தெலுங்கு அதிகாரியாகிய நாரணன் வேளாளர்க்கு வழங்க வேண்டும் என்பது அப்பாடலின் பொருள்.[15]

''கலங்கற் றுறையதனிற் காராளர் போகத்
தெலுங்கப்ப நாரணன் தெண்டிக்க''

என்று கரை உடைவதனால் வேளாளர் தண்டிக்கப்பட வேண்டும் என்கிறார். இது நேரடி வசையாக அமைந்து விளங்குகிறது.

இதேபோன்று திருமலைராயன் பட்டணத்தில் மண்மாரிபொழிய வேண்டும் என்று இருபாடல்களைப் பாடுகிறார்.

'சிவபெருமானே! அடாத காரியங்களைச் செய்தவன் திருமலை-ராயன். இவனது ஆட்சி எல்லையில் அரை நொடியில் கொடுமை-யான நெற்றிக்கண்ணில் இருந்து விடுத்த நெருப்பு மழையால் மன்மதனை அழித்தாற்போல, தீயமக்களை மண் மழையால் இறந்-தொழியும்படிச் செய்வாயாக' என்றும்,[16]

'கொலையாளிகள் இருக்கின்ற ஊர் இது. புறங்கூறுதலும் வஞ்சகமும் தெரிந்தவர்கள் இருக்கின்ற ஊர். பொறுப்பில்லாத இளைஞர்கள் நின்று தம்முள் சண்டையிட்டுக் கூக்குரல் செய்யும் ஊர். இத்தகைய ஊரில் நாளைய தினமே விண்ணிலிருந்து பெய்-கின்ற மழை ஒழியவேண்டும். வானம் நீரின்றி வெளுத்து, மண்-மாரி பெய்ய வேண்டும்' என்றும் பாடுகிறார்.[17]

இவ்விரு பாடல்களிலும் திருமலைராயன் பட்டணத்தில் உள்ள கொடுமைகளையும், குறைகளையும் கண்டு அவ்வூர் அழியவேண்டும் என்று வசை பாடுகிறார்.

இப்பாடல்கள் சினத்தால் பாடப்பட்ட பாடல்கள் என்பதற்கு மற்றொரு காரணமும் கூறப்படுகிறது. திருமலைராயனும் அதிமதுர கவிராயரும் அறுபத்து நான்கு தண்டிசைப் புவவர்களும் கேட்ட வினாக்களுக்குக் காளமேகப் புலவர் யமகண்டத்திலிருந்து தக்க விடை கூறியதைக் குறித்து மகிழ்ந்து சம்மதியாமல் பொறாமையால் அவரை வெறுத்தனர். அதனால் சினம் கொண்டு காளமேகப் புலவர் திருமலைராயன் பட்டணத்தில் மண்மாரி பெய்யப் பாடினார் என்றும் கூறப்படுகிறது. இக்கூற்றுப்படி திருமலைராயன், அதிமதுர

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கவிராயர், பிறபுலவர்கள் மீது கொண்ட கோபம் காரணமாகத் திருமலைராயன் பட்டணத்தின் மீது மண்மாரி பொழிய வேண்டும் என்று பாடினார் எனக் கருத இடமுண்டு.

புலவர்கள் சினம்கொண்டு பாடியதால் ஊர் அழிந்த செய்தி புறப்பாடல் மூலம் தெரிகிறது (புறம்.202). இருங்கோவேளின் மூதாதையருள் ஒருவன் கழாஅத் தலையாரை இகழ்ந்ததால், புலவர் சினம் கொண்டு பாட, நிரையம் என்ற அவ்வூர் அழிந்ததாகக் கபிலர் பாடியுள்ளமை இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

தனக்கு வேண்டிய ஒருவரின் குதிரையைப் புகழ்ந்து பிறர் குதிரைகளைப் பழிக்கின்ற தன்மையுடைய காளமேகப் புலவர் பாடல் ஒன்று உள்ளது. இப்பாடலில் ஆமூர் வேங்கடமுதலியார் குதிரையைப் புகழ்ந்தும் பிறர் குதிரைகளை இகழ்ந்தும், 'பிழைப்பதற்கு வழியும், பதினாறு பேறுகளும் ஏற்படக்கூடிய ஆமூரில் உள்ள திருவேங்கட முதலியார் ஏறுகின்ற குதிரையே உயர்ந்த குதிரையாகும். மற்ற குதிரைகள் வெந்துபோன மாவைப் போன்றவை. சோம்பலாக இருக்கின்ற பயனற்ற பிராணிகள். களி கிண்டுவதற்குரிய மர போன்றவை' என்று பாடுகிறார்.[18]

இப்பாடலிலும் மா என்பதற்குக் குதிரை, மாவு என்ற இரு பொருள் இருப்பதைக் கொண்டு, சொற் சிலம்பம் ஆடுவதன் மூலம் பிற குதிரைகளை இகழ்கிறார் காளமேகப் புலவர். ''வேறுமா வெந்தமா சும்மா, வெறுமா களி கிளற வந்தமா'' என்ற அடிகள் இகழ்ச்சிக் குறிப்புடையனவாக அமைந்து அங்கதப் பாடலாயிற்று.

விகடராமன் என்பானின் குதிரையைப் பழித்துப் பாடிய மற்றொரு பாடலிலும் அங்கதக் குறிப்பைக் காணலாம்.[19]

'எப்பொழுதும் வேதம் ஓதுகின்ற வாயினை உடையவன் விகடராமன். இவன் விகடம் செய்வதிலும் வல்லவன். இவ்விராமனுடைய குதிரையானது அதற்கு முன்பக்கத்திலே அதன் கடிவாளத்தைப் பிடித்து மூன்றுபேர் இழுக்கவும், பின்பக்கத்தில் இருந்து இருவர் பிடித்துத் தள்ளவும் செய்தால் ஒருமாதத்திற்கு எட்டுமைல் தூரம் செல்லும்' என்று பாடுகிறார்.

இப்பாடலில் விகடராமனின் குதிரையைப் பற்றி நகைச்சுவை பாடக் கூறி, அதன் தன்மையை இகழ்கின்றார். ''முன்னே கடி-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வாளம் மூன்றுபேர் தொட்டிழுக்க பின்னே இருந்து இரண்டு பேர் தள்ள — மாதம் போம் காதவழி'' என்ற வரிகள் அங்கதக் குறிப்புடையன.

6 பிற குறைகள் தொடர்பான பாடல்களில் அங்கதம்

ஊரில் வாழும் மக்களும், தொழில் புரிவோரும் தத்தம் அறநெறியினின்று தவறினால் அதனால் கோபம் கொண்டு அவர்கள் மீது வசைபாடுகின்ற நிலை புலவர்களிடம் காணப்படுகிறது. அவ்வகையில் காளமேகப் புலவர் பாடிய பாடல்களிலும் இரு பாடல்களைக் காணலாம்.

தண்டாங்கூர் என்ற ஊரில் உள்ளவர்கள் பண்டம் எடை குறைய விற்றார்கள். இதனைக் கண்ணுற்றார் காளமேகப் புலவர். மனம் வெகுண்ட புலவர் அவர் மீது வசையாக,

'தண்டாங்கூரில் வாழும் பொதுமக்களே! நீங்கள் அனைவரும் நல்ல குணம் கொண்டவர்கள் என்று நினைத்திருந்தேன். சரக்குகளை விலைக்குத் தக்க அளவு கொடுக்காமல் குறைவாகக் கொடுத்த பாவிகள் நீங்கள்! ஆடிமாதம் முதல் ஆனி மாதம் வரை ஒவ்வொரு தெருவிலும் உணவுக்காக உழைத்துப் பொருள் தேடி உண்ணும்படிப் பெண்களை அலைய விட்டீர்கள்' என்று பாடுகிறார்.[20]

இப்பாடலில் 'பண்டங்குறைய விற்ற பாவிகாள்' என்று வணிகர்களை நேரடியாகச் சாடுவதைக் காணலாம். 'ஆடிமுதல் ஆனி வரை' என்று கூறுவதன் மூலம் வருடம் முழுவதும் என்ற கருத்தைக் காட்டுகிறார். பெண்கள் இவ்வாறு வருடம் முழுவதும் உணவுக்காகத் தெருக்கள் தோறும் அலைகின்றமைக்குக் காரணம் தண்டாங்கூர் மக்கள்தான் என்று கூறுகிறார். 'சற்குணர்' நீர் என்றிருந்தேன்' என்பது எதிர்மறையான பொருளைத் தருகிறது. இவ்வாறு அநீதியைச் சாடுகின்ற முறையில் அங்கதக் குறிப்புடையதாக இப்பாடல் காணப்படுகிறது.

மற்றொரு பாடலில், 'மாட்டின் மாமிசத்தை அந்தணன் தின்பான். குயவன் வேதம் கற்பான். கொல்லன் பாத்திரம் வனையும் பொருட்டு மண் பிசைவான். வாணியன் தனது வேலைக்காக முயன்று இரும்படிக்கும் தொழிலைச் செய்வான். வண்ணான் எண்ணை விற்பான். பறையன் ஆடையைத் தோய்ப்பான்' என்று ஒவ்வொருவரும் தத்தமக்குரிய கடமைகளைச் செய்யாது நெறி தவறுகிறார்கள் என்பதனைக் கேலி செய்கிறார்.[21]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இப்பாடலின் மற்றொரு இலக்கியச் சிறப்பு இங்குக் குறிப்பிடத்தக்கது. இப்பாடல் கடைமொழிமாற்று என்ற உத்தியில் பாடப்பட்டுள்ளது. பாடலின் கடைசி அடியில் உள்ள கடைசிச் சொல்லை முதல் அடியின் முதற் சொல்லுடன் சேர்த்துப் பார்த்தால் சரியான பொருள் வரும். இதன்படி "பறைமாடு தின்பான்.....வண்ணான் புடவை தோய்ப்பான்" என்று அமையும். இருப்பினும் காளமேகப் புலவர் இப்பாடலைப் பாடிய முறையினால் அங்கதப் பாடலாயிற்று என்று கருதலாம்.

2. ஔவையார்

ஔவையார் என்னும் பெயரையுடையவர்கள் இரண்டு மூன்று பேர்களுக்கு மேல் பெரும் புலவர்களாக இருந்ததாக அறியப்படுகின்றனர். அவர்களுள் இந்த ஔவையார் யாவர் என்று புலப்படவில்லை. ஔவையார் பெயரால் ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி, அசதிக்கோவை, நன்னூற்கோவை, நான்மணிக்கோவை, அருந்தமிழ்மாலை, ஞானக்குறள், பந்தனந்தாதி முதலிய தனிநூல்களும், புறநானூறு முதலிய நூல்களில் பல தனிப்பாடல்களும் வழங்குகின்றன எனக் கழக வெளியீடான தனிப்பாடல் திரட்டு தெரிவிக்கிறது. ஔவையார் பாடிய தனிப்பாடல்களாக 102 பாடல்கள் கிடைக்கின்றன. இவற்றுள் ஏழு பாடல்கள் அங்கதக் குறிப்புடையனவாகக் காணப்படுகின்றன. பிற புலவர்களைப் பற்றிய மூன்று பாடல்களிலும், இறைவனைப் பற்றிய ஒரு பாடலிலும் அங்கதக் குறிப்புக்கள் உள்ளன. ஈகை தொடர்பான மூன்று பாடல்களும் இத்தன்மையனவே.

1. ஈகை தொடர்பான பாடல்களில் அங்கதம்

காளமேகம் போலவே ஔவையாரும் தனக்குப் பொருள் தராதவரையும், சிறிதளவே பொருள் கொடுப்பவரையும் இகழ்ந்து பாடும் தன்மையுடையவராக இருக்கிறார். இத்தகைய பாடல்களில் அங்கதக் குறிப்புக்கள் உள்ளன. ஈகை தொடர்பாக மூன்று பாடல்கள் மட்டுமே கிடைக்கின்றன.

முதற்பாடலில் தனக்குத் தரும் கொடையின் அளவு குறைந்து வருவதைக் கண்டு வெகுண்டு பாடியதைக் காணலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கோரைக்கால் எனும் ஊரில் இருக்கும் ஆழ்வான் என்பவனது கொடையை நிந்தித்துப் பாடுவதாக இப்பாடல உள்ளது.[22]

'கோரைக்காலிலுள்ள ஆழ்வான் என்னும் பெயருடையவனது ஈகைத்தன்மை எவ்விதம் உள்ளதென்றால் படிப்படியாக யானை-யாகியும், குதிரையாகியும், எருமையாகியும், காளையாகியும், ஒருமுடித் துணியாகியும், பின்னர் நூல் நூலாகப் பிரிந்துபோன உடையாகியும் குறைந்து குறைந்து நடையற்றுப் போயிற்று' என்பது பாடலின் பொருள்.

இப்பாடலில் அவனது கொடைத்தன்மை எவ்வாறு யானை-யிலிருந்து கிழிந்துபோன துணியாகக் குறைந்தது என்பதைப் பாடு-கிறார். ''திரிதிரியாய்த் தேரைக்கால் பெற்று மிகத்தேய்ந்து கால் ஓய்ந்ததே கோரைக்கால் ஆழ்வான் கொடை'' என்று ஆழ்வான் கொடை நிந்திக்கப்படுவதில் அங்கதக் குறிப்பைக் காணலாம்.

இதேபோன்று ஈகைத் தன்மை இல்லாதவனைப் பழித்தும் பாடுகிறார்.[23]

'சேடன் என்பவன் செல்வம் மிகுதியாக உடையவனாக இருந்-தும் ஈகைத் தன்மையற்றவன். எனவே பாவலர்களால் பாடப்பெறு வதில்லை. எல்லோரும் புகழும்படி வாழ்க்கை நடத்துவதில்லை பலருக்கும் தெரியும்படிச் சிறந்த மங்கல நிகழ்ச்சிகளை விரும்பி நடத்துவதில்லை. கடல் சூழ்ந்த இவ்வுலகில் இவனது இழிந்த பிறப்பானது ஒழிந்தாலும் கெடுவதில்லை. நிலைத்தாலும் பய-னில்லை' என்பது பாடலின் பொருள்.

இப்பாடலிலும் சேடன் என்பவனது ஈகையற்ற தன்மையை விளக்கி, அவனால் எவ்விதப் பயனும் இல்லை என்று கூறுகிறார். 'இவன் வாழும் வாழ்க்கை இருங்கடல் சூழ்வாரில் கவிழ்ந்தென்ன மலர்ந்தென்ன காண்' என்பது வசையாக அமைந்து அங்கதமாகிறது.

ஒரு திருமண வீட்டிற்குச் செல்கிறார் ஔவையார். அதுவும் மன்னன் பாண்டியனின் திருமணம். அத்திருமண வீட்டு விருந்தில் கலந்துகொண்டு தான் பெற்ற துன்பத்தைக் கூறும் பாடல் அங்கதக் குறிப்புடையதாக இருக்கிறது.

'தமிழ் இலக்கியங்களில் தேர்ச்சி பெற்ற பாண்டியன் திரு-மணத்தில் விருந்துண்ட சிறப்பை விரித்துரைப்பேன்; கேட்பீர்களாக!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சமீபத்தில் போய்க் கூட்டத்தில் நெருக்குண்டேன்; இடித்துத் தள்–ளப்பட்டேன்; நெடுநேரம் பசித்திருந்ததால் வயிறு சுருங்கப் பெற்–றேன்; ஆனால் சோறு மட்டும் கிடைக்கவில்லை' என்கிறார்.

இப்பாடலில் 'நெருக்குண்டேன், தள்ளுண்டேன், நீள் பசியி–னாலே சுருக்குண்டேன் சோறுண்டிலேன்' என்ற வரிகள் 'உண்–டேன்' என்ற சொல்லைக் கொண்டே பல்வேறு பொருள் தருவதாய் அமைந்து அங்கதக் குறிப்புடைதாகின்றது.

2. பிற புலவரைப் பற்றிய பாடல்கள் அங்கதம்

ஔவையார் பிற புலவர்களைப் பற்றிப் பாடும்போது அங்கதக் குறிப்புப்படப் பாடுகிறார். அதிலும் குறிப்பாக இவர் கம்பரைப் பற்றியே பெரிதும் அங்கதப் பாடல்களைப் பாடுகிறார். இத்தகைய பாடல்கள் மூன்று உள்ளன.

ஔவையாருக்கும் கம்பருக்கும் புலமையில் நேரடி மோதல் நடைபெற்றிருப்பதாகப் பாடல்கள் உள்ளன. ஒருசமயம் கம்பர் பொறாமையால் ஔவையாரை அடியென்று சொல்ல விரும்பி 'ஒரு காலடி, நாலிலைப் பந்தலடி' என்று சிலேடையாகச் சொல்லிப் பொருள் கேட்டபொழுது,

'அவலட்சணமுடையவனே! எமன் ஏறிவருகின்ற எருமையே! அளவு கடந்த சீர்கேடான மூதேவியைத் தாங்கிவரும் கழுதையே! கூரை வேயப்படாத குட்டிச்சுவரே! உயர்குடிப் பிறந்த இராமனது தூதனான குரங்கே! நீ கூறியது ஆரைக்கீரையைக் குறிக்குமடா!' என்று ஔவையார் பதிலுரைத்ததாக இப்பாடலைக் காட்டுவர்.[25]

இப்பாடலில் கம்பரை நேரடியாகவும் குறிப்பாகவும் இகழ்–வதைக் காணலாம்.

''எட்டேகால் லட்சணமே எமன் ஏறும் வாகனமே'' என்பதில் எட்டு என்பதற்குத் தமிழில் 'அ' என்பதும், கால் என்பதற்கு 'வ' என்பதும் எழுத்துக்களாக உள்ளமையால் அவலட்சனம் என்ற பொருளையும், எமன் ஏறும் வாகனம் என்பது எருமை என்ற பொருளையும் தந்து புலவரை வசைபாடுவதக் காணமுடிகிறது. இதே போன்று மூதேவி என்றும், குட்டிச்சுவரே என்றும், குரங்கு என்றும் திட்டுவதிலும் அங்கதக் குறிப்பைக் காணலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எட்டேகால் லட்சணமே	—	அவலட்சணம்
எமனேறும் பாரி	—	எருமை
பெரியம்மை வாகனம்	—	கழுதை
கூரை இல்லா வீடு	—	குட்டிச்சுவர்
குலராமன் தூதுவன்	—	குரங்கு

என்று நேரடியாக வசைபாடாமல் குறிப்பாகக் கூறி அதன் பொருளை உய்துணரச்செய்து அதனையே வசைப்பொருளாக்கிப் பாடியிருப்பதைத் தனிப்பாடல்களில் காணலாம்.

இதேபோன்று ஒருசமயம் சோழமன்னன் இவரை ஔவையார் என்று அறியாமல் மதிப்புத் தரவில்லை. மேலும் கம்பர் பாடலை வியந்தும் கூறினான். அப்பொழுது பாடிய பாடலில் அங்கதக் குறிப்பு உள்ளது.[26]

'தந்திரக்காரர்கள் இரண்டுபேர் பரிசுபெறக் கருதும் பாவலர் அருகிருந்து அவரைத் துதிபாட வேண்டும், ஒவ்வொரு விரலிலும் மோதிரம் அணிந்திருக்க வேண்டும். இடுப்பில் பஞ்சு நூலினால் அல்லது பட்டு நூலினால் செய்த நல்ல உடை தரித்திருக்க வேண்டும். அத்தகைய புலவர் பாடும் பாட்டு நஞ்சுபோலக் கெடுதியாக இருப்பினும் வேம்புபோலக் கசப்பாக இருப்பினும் நல்லதென்று ஏற்றுக்கொள்ளப்படும்' என்கிறார்.

இப்பாடலில் போலிப்புலமை சாடப்படுகிறது. ஒருவனுக்கு உண்மையில் தேர்ந்த புலமை தேவையில்லை. அவனைச் சுற்றிலும் அவனைத் துதிபாடத் தெரிந்த சிலபேர் இருந்தால் போதும். கைவிரல்களில் மோதிரங்களும் நல்ல உடையும் அணிந்திருந்தால் சிறந்தவன் என்று எண்ணுவார்கள். வெளிவேடமும், பகட்டுமே உலகில் அனைவராலும் மதிக்கப்படுகின்றன. எனவே அவர் பாடும் பாடல் எத்தகையதாக இருப்பினும் — நஞ்சாக இருந்தாலும் வேம்பாக இருந்தாலும் — சிறந்தது என்று கூறுவர் என்று உலக இயல்பைச் சுட்டிக்காட்டுகின்ற தன்மையால் இப்பாடல் அங்கதப் பாடலாகிறது.

சோழமன்னன் கம்பர் போலக் காப்பியம் படைப்போர் எவருமேயில்லை என்று கூறியபோது ஔவையார்,

"தூக்கணங்குருவியின் அழகிய கூடும், உறுதியான இயற்கையான அரக்கும், பழமையான கரையான் புற்றும், தேன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கூடும், சிலந்திக் கூடும் எல்லாரும் செய்யக் கூடியதல்ல. நாம் மிகவும் திறமை உடையோம் என்று நினைத்துப் பெருமையாகப் பிதற்ற வேண்டாம். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு செயல் முடிப்பது எளியது ஆகும்' என்று பாடுகிறார்.[27]

இப்பாடலில் கம்பரைச் சோழன் புகழ்ந்தபொழுது ''யாம் பெரிதும் வல்லோமே என்று வலிமை சொலவேண்டாம் ..... எல்லார்க்கும் ஒவ்வொன்று எளிது'' என்று கூறுவது அங்கதக் குறிப்புடையதாக விளங்குகிறது.

3. இறைவனைப் பற்றிய பாடலில் அங்கதம்

இறைவனைப் புகழ்வது மரபாக இருப்பினும் இறைவனை இகழ்வதையும் காணமுடிகிறது. அறிவு அற்ற ஒருவனுக்கு வாழ்க்கைப்பட்ட பெண்ணின் துன்ப நிலையைக் கண்ட ஔவையார் அவளைப் படைத்த பிரமனை நிந்திக்கும் முகமாக,

'பட்டமரம் போன்ற தன்மையுடையவனுக்கு இப்பெண்ணை மனைவியாக, தலையில் எழுதிய பிரமனை நான் கண்டால் முன்பு சிவனால் கிள்ளப்பட்டு ஒழிந்த ஒரு தலை தவிர எஞ்சிய நான்கு தலைகளையும் என் கையில் அகப்படுத்தி வளைத்துக் கொய்து விடுவேன்' என்கிறார்.[28]

இப்பாடலில் பிரமன் மீது கொண்ட கோபம் நேரடியாகத் தெரிகிறது. ''அற்றதலை போக அறாத தலை நான்கினையும் பற்றித் திருகிப் பறியேனோ'' என்பதில் அங்கதக் குறிப்பு உள்ளது.

3. அந்தகக்கவி வீரராகவ முதலியார்

இவர் தொண்டைநாட்டில் பிறந்தவர். வேளாளர் குலத்தவர். கண்பார்வையற்றவர் என்பதால் அந்தகக்கவி எனப்பட்டார். கற்பனை நலம் மிக்க பாடல்களைப் பாடியவர் இவர். இவர் வாழ்ந்த காலம் 1654 என்பர்[29] இவர் பாடியதாகக் கருதப்படும் 40 தனிப்பாடல்களில் இரு பாடல்களில் மட்டுமே அங்கதக் குறிப்புக்கள் உள்ளன.

இவ்விரு பாடல்களும் இவருக்குப் பொருள்தந்து போற்றாத வள்ளல்களின் மேல் வசையாகப் பாடப்பட்டவையாகும். புலவர் புகழ்ந்து பாடியதைக் கேட்டு மகிழ்ந்து நன்கொடை வழங்கிப் போற்றாத தினகரன் என்னும் செல்வந்தன் மீது வசைபாடியதாக ஒரு பாடல் அமைந்துள்ளது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'கள்ளத்தனமிக்க தினகரன் என்ற செல்வந்தனை நான் தூரை என்று கூறிக் கவிதை பாடினேன். ஆனால் அவனோ கவிஞனுக்குச் சிறப்புச் செய்யவேண்டும் என்ற எண்ணம் கொண்டவனாகவே இல்லை' என்று பாடுகிறார்.

தனக்குப்பொருள் தராததபோது வெகுண்டு பாடுகின்ற தன்மையுடைய புலவர்களைத் தனிப்பாடல்களில் மிகுதியாகக் காணமுடிகிறது. இப்பாடலில் 'சுரையன்' என்று தினகரன் என்ற வள்ளலைத் திருட்டுத்தனமுடையவன் என வசைபாடுவதால் இப்பாடல் அங்கதக் குறிப்புடையதாயிற்று [30]

இதேபோன்று திருவேங்கட வள்ளல் என்பாரைச் சந்திக்கிறார் புலவர். அவரும் புலவருக்குப் பொருள் கொடுக்கிறார். ஆனால் திருவேங்கடத்தின் உடன்பிறந்தவனாகிய கண்ணுக்கினியான் என்பவன் பொருள் கொடுப்பதைத் தடுக்கிறான். மனம் வருந்திய புலவர் அவனை இழித்து,

'தேன் பொழிந்த வாயான் திருவேங்கடத்தான். அவனுடனே ஏன் பிறந்தான், கண்ணுக்கினியான்? பாற்கடலில் சீதேவியுடன் மூதேவியும் பிறந்தது போன்றிருக்கிறது' என்று பாடுகிறார்.[31]

தனக்குப் பொருள் கொடுப்பதைத் தடுத்த காரணத்தால் கண்ணுக்கினியானை 'மூதேவி' என்றே நேரடியாக வசைபாடுவதைக் காணமுடிகிறது. தனக்கு வேண்டியவர்களை உயர்த்தியும், வேண்டாதவர்களைப் பழித்தும் பாடுகின்ற பழக்கத்தை இங்குத் தெளிவாகக் காணலாம். திருவேங்கடத்தைத் தேன்பொழிந்தவாயான் என்றும், சீதேவி என்றும் கூறுகிறார். ஆனால் கண்ணுக்கினியானை மூதேவி என்று இழித்துப் பேசி அங்கதக் குறிப்புப்படப் பாடுகிறார்.

4. இரட்டையர்

இவர்கள் சோழநாட்டைச் சார்ந்த ஆலந்துறையில் பிறந்தவர்கள். காலம் 15ஆம் நூற்றாண்டு. இரட்டைப் பிள்ளைகளான இவர்களுள் ஒருவர் முடவர். மற்றவர் குருடர். முடவரைக் குருடர் சுமந்து செல்வார். இவர்கள் இளஞ்சூரியர் என்றும், முதுசூரியர் என்றும் அழைக்கப்பட்டனர்.[32] இவர்கள் பாடியனவாக வழங்கும் தனிப்பாடல்களில் மூன்று பாடல்கள் அங்கதக் குறிப்புடையனவாக உள்ளன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இப்பாடல்கள்,

1. வள்ளல் தங்களுக்குப் பரிசு கொடுத்தபொழுது தடுத்தவனை இகழ்கின்ற போதும்,

2. தங்களை இழிவுபடுத்திய ஒருவன் வீடு எரியப்பாடிய போதும்,

3. மகளைத் தந்தை கூடியபொழுது இகழ்ந்து பாடிய-போதும் பாடப்பட்டு அங்கதக் குறிப்புடையனவாக விளங்குகின்றன.

வள்ளல் தங்களுக்குப் பரிசு கொடுத்தபொழுது தடுத்தவனை இகழ்கின்ற பாடலில் அங்கதம்

பாண்டியன் அவையில் இரட்டையர்கள் மன்னனைப் பாடி நிற்கிறார்கள். மனம் மகிழ்ந்த மன்னன் பரிசளிக்கிறான். ஆனால் மன்னன் பரிசு கொடுப்பதைத் தடுக்கிறான் அமைச்சன் ஒருவன். அப்பொழுது,

'பழந்தமிழ் அறிந்த கல்வியிற் சிறந்தோரே! புலவருக்குக் கொடுப்பதைத் தடுக்கின்ற அமைச்சராகிய இச்சிறு குரங்கு மாமரத்தில் இருக்காமல் இங்கே வந்தது ஏன்? காரணம் கேட்கவில்லையோ? பாண்டியனையும் அவன் தம்பியையும் நான் இராமன் இலக்குவன் என்று எண்ணிவந்தேன்' என்று தடுத்த அமைச்சனை இகழ்ந்து பாடுகிறார்கள்.[33]

இப்பாடலில் தனக்குப் பொருள் கொடுப்பதைத் தடுத்த அமைச்சரைப் 'புன் குரங்கு' என்றும, அக்குரங்கு இருக்கவேண்டிய இடம் மாமரம் தானே தவிர இவ் அரசசபை அல்ல என்பதைப் ''புன் குரங்கு மாமரம் விட்டிங்கு வந்ததென்னோ?'' என்றும் புலவர் கேட்பதில் அவ்வமைச்சரை அங்கதக் குறிப்புப்பட இகழ்ந்து பாடு-வதைக் காணமுடிகிறது. புலவர்களுக்குப் பொருளுதவி செய்வதை ஊக்குவிக்க வேண்டிய அமைச்சனே தடுக்கிறானே என்று அமைச்சர் தன் நிலையிலிருந்து தாழ்ந்தமையையும் இப்பாடலில் சுட்டிக் காட்டுகிறார்கள் புலவர்கள்.

தங்களை இழிவுபடுத்தியவன் வீடு எரியப் பாடிய பாடலில் அங்கதம்

இதே புலவர்கள் தங்களை இழிவுபடுத்திய ஓமளநாதன் என்பானின் வீடு எரியும்படியாகவும் வசைபாடியுள்ளனர். இப்-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாடலில் ஓமளநாதன் என்பானது வீடும் அவனுடன் சேர்ந்து புலவர்களை இகழ்ந்த கம்பத்தான் என்பவன் வீடும் எரிந்து, சொத்துக்களெல்லாம் அழியட்டும் என்று வசைபாடுகிறார்கள்.

"ஒருகாவித் தண்டலம்வாழ் ஓமளநா தன்வீடு
இருகாலும் பற்றி எரிக — அருகாரும்
கம்பத்தான் வீடும் கலந்தெரிக மற்றிவர்கள்
சம்பத்தெல் லாமொழியத் தான்"

என்பது அப்பாடல்.[34]

5 இராமச்சந்திரக் கவிராயர்

இவர் சென்னையில் 1888ல் வாழ்ந்தவர். பல தனிப்பாடல் களைப் பாடியதோடு நாடகப் புலமையிற் சிறந்து விளங்கியவர்.

இவர் பாடிய தனிப்பாடல்களில் மூன்று பாடல்கள் மட்டுமே அங்கதக் குறிப்புடையனவாக உள்ளன. இப்பாடல்கள்,

1. பொருள் தராதவனை இகழ்ந்தும்
2. தனிப்பட்ட ஒருவனை இகழ்ந்தும்
3. இறைவனை இகழ்ந்தும் பாடப்பட்டவை.

பொருள் தராத உலோபியை இகழ்ந்து பாடியதில் அங்கதம்

புலவர்களுக்குப் பொருள் தந்து ஆதரிக்க வேண்டியது வள்ளல் களின் கடமைகளுள் ஒன்று. ஆதரிக்காதவன் உலோபி எனப்படுவான். அத்தகைய உலோபி மிகவும் கீழாகக் கருதப்படுவான் என்ற பொருள்பட,

'கல்லானது கோயில் கட்டவும் உதவும், கடவுளாகவும் கருதப்படும். கழுதை சுமைகளைத் தாங்கும். எருமைக்கடாவோ உழவு வேலைகளுக்குப் பயன்படும். மலமோ பன்றிக்குத் தீனியாகும். காளைமாடு சிவபெருமானுக்கு வாகனமாகும். பாரமும் தாங்கும். பிணம்கூட மந்திரம் கூறுகின்றவர்களுக்குத்தெட்சணை கொடுப்பதால் சிறப்பாகப் பேசப்படும். குட்டிச்சுவராக இருந்தாலும் மாடு உராய்ந்து கொள்ளும் இடமாகும். அல்லது எதையாவது மறைத்துக்கொள்ள வசதியாக இருக்கும். துடைப்பக்கட்டையோ மாளிகையிலுள்ள குப்பைகளை அகற்ற உதவும். எனவே இவை எல்லாம் பயனுடையன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஒரு பயனுமில்லாத உலோபிக்கு ஒப்புமையாக உலகில் யாரைக் கூறலாம் என்றால் அவனுக்கு நிகர் அவன் தான்' என்று இகழ்ச்சியாகப் பாடுகிறார் இராமச்சந்திரக் கவிராயர்.[35]

இப்பாடலில் பிறருக்கு உதவிசெய்யாத உலோபியைப் புலவர் மிகவும் தாழ்வாக இகழ்ந்து பேசக் காணலாம். கல், கழுதை, எருமை, மலம், காளை, பிணம், குட்டிச்சுவர், துடைப்பக்கட்டை போன்ற மிகத்தாழ்ந்ததாகக் கருதப்படும் பொருட்களினால் கூடப் பயன் உண்டு. ஆனால் உலுத்தனால் — உலோபியினால் — எவ்விதப்பயனும் இல்லை. அவனுக்கு நிகர் அவனே என்று புலவர் கூறுவது அங்கதக் குறிப்புடையது. இதுவும் தொல்காப்பியர் கூறிய செம்பொருள் அங்கதத்தின் பாற்படும்.

தனிப்பட்ட ஒருவனை இகழ்ந்து பாடியதில் அங்கதம்

மழவரங்கன் என்பவன் பிறருக்கு ஈயாத தன்மையன். அவனுக்கு 'அதிவீர மழவரங்க பூபதி' என்ற பட்டம் உண்டு. இப்பட்டம் அவனுக்கு எதற்கு என்று இகழ்ச்சியாகப் புலவர் கேட்பதாக இப்பாடல் உள்ளது.[36]

'கள்ளிமரத்திற்கு முள்வேலி ஏன்? குதிரைக்குப் போடும் கடிவாளம் கழுதைக்கு ஏன்? வெள்ளை உள்ளிக்கு வாசனைப் பொருட்கள் ஏன் கலக்க வேண்டும்? உப்புத்தரையில் விதைப்பதால் என்ன பயன்? கையினால் ஒடித்துப்போடும் சுள்ளிக்கு ஏன் கோடாலி? துடைப்பத்திற்கு ஏன் கவசம்? பயனில்லாமல் இருக்கின்ற பள்ளிக்குல அற்பனுக்கு அதிவீரமழவரங்க பூபதி என்னும் பட்டம் ஏன்?' என்று கேட்கும் இப்பாடலின் இறுதி அடியில் மழவரங்கனை இகழ்ந்திருப்பதைக் காணலாம்.

முள்வேலி பயனுடைய மரங்களைப் பாதுகாக்கப் போடப்படுகின்றது. ஆனால் எதற்கும் பயன்படாத கள்ளிமரத்திற்குக் காவலாக முள்வேலி தேவையில்லை. அதேபோன்று மழவரங்கனுக்கு அளிக்கப்பட்ட பட்டத்திற்கு அவன் தகுதியுடையவன் அல்ல என்பதை, கள்ளிமரம், கழுதை, வெள்ளைஉள்ளி, உப்புத்தரை, சுள்ளி, துடைப்பம் என்று உவமை வாயிலாக நேரடியாக இகழ்ந்திருப்பதால் இப்பாடல் செம்பொருள் அங்கதமாக அமைகிறது.

இறைவனை இகழ்ந்து பாடியதில் அங்கதம்

இறைவனைத் துதித்துப் புகழ் பாடுகின்ற புலவர்கள் இறைவனை இகழ்வதையும் காணமுடிகிறது. வறுமையின் கொடுமையைச் சுட்டி, ஔவையார் போன்றே இவரும் அவ்வறுமையினை அளித்த இறைவனான பிரமனை இகழ்வதாக ஒரு பாடல் உள்ளது.[37]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இப்பாடலில், 'தாமரை மலரின் மீது இருக்கும் பிரமன் கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான் குடிக்கத்தான் கற்பித்தானா? பொன்னைத்தான் எனக்குத்தான் கொடுத்துத்தான் இரட்சித்தானா? நான் படும் துயரைக் கூறி யாரை நொந்து கொள்வது? ஐயோ, எங்கும் பல்லைத்தான் திறக்கத்தான் புவியில்தான் பண்ணிவிட்டானே' என்று கூறுவதன் மூலம் வறுமையின் கொடுமையினைச் சித்திரிக்கிறார். ''எங்கும் பல்லைத்தான் திறக்கத்தான் பதுமத்தான் புவியில்தான் பண்ணினானே'' என்ற வரிகள் தன்னை இந்நிலைக்கு ஆக்கிய பிரமனை இகழ்கின்ற தன்மை உடையதாக அமைந்து அங்கதப் பொருள்பட நிற்கிறது.

6. ஒப்பிலாமணிப் புலவர்

ஒப்பிலாமணிப் புலவர் என்ற பெயரில் 18ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஒருவரும், 19ஆம் நூற்றாண்டில் ஒருவரும் இருந்ததாகத் தமிழ்ப் புலவர் அகராதி சுட்டுகிறது.[38]

இங்குள்ள பாடலைப் பாடியவர் 19ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவராக இருக்கக்கூடும். ஏனெனில் இவரே குமணன் கதையைச் செய்யுள் வடிவில் செய்தவராகிறார். தனிப்பாடல் திரட்டில் காணலாகும் பாடல்களில் பல, குமணன் பற்றிய பாடல்களாக இருப்பதால் இம்முடிவுக்கு வரலாம்.

புலவர்களுக்கு உதவிசெய்பவர்கள் வள்ளல்கள். அவ்வள்ளல்கள் இறந்தால் அதனால் துயர் அடைவது புலவர்களே. அத்தகைய சூழலில், வள்ளல் இறப்புக்குக் காரணமான கூற்றுவனை இகழ்ந்து பாடுவது புலவர்களின் பொதுப்பண்பாகக் காணப்படுகிறது. புறநானூற்றுக் கையறுநிலைப் பாடல்களில் இதுபோலவே வள்ளல்கள் இறப்பிற்குக் காரணமான கூற்றுவனை வசைபாடும் பாடல்கள் காணப்படுகின்றன.[39] ஒப்பிலாமணிப் புலவரும் இதேசூழலில்,

'இவ்வுலகில் கொடுப்பவர் தொகை சிறிது. ஏற்பவர்கள் தொகை பெரிது கெடுகின்ற தன்மையுடைய எமனே! கூவத்து நாரணன் என்னும் வள்ளலை நீ உயிர் போக்கிவிட்டாயே! 'படுபாவி கெடுவாய்!' கறிக்குக் கற்பகப் பூங்காவை வெட்டலாமோ?' என்று கூற்றுவனைச் சினந்து பாடுகின்ற நிலையினைக் காணலாம்.[40]

உணவு சமைப்பதற்குத் தேவையான கறிக்காகக் கற்பகப் பூங்காவை வெட்டலாமா? கற்பகப் பூங்கா எல்லோருக்கும், என்றும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பயன் தரக்கூடியது. அப்பூங்காவை அழித்தால் பலருடைய வாழ்வும் பயனற்றதாகிவிடும். அத்தகைய செயலைச் செய்த எமனே! நீ கெடுவாயாக! என்று கூற்றுவனை இகழ்வதால் இது அங்கதமாயிற்று ''கெடுவாய் நமனே கெடுவாய், படுபாவி'' என்று கூற்றுவனை வசைபாடியிருப்பதைக் காணலாம்.

7. கம்பர்

கம்பர் திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப் பெற்றவர். இராமாயணம் எனும் பெரும் காவியத்தை இயற்றிய இவர், சடகோபரந்தாதி, ஏரெழுபது முதலிய நூல்களையும் இயற்றியதாகக் கூறுவர்.

கம்பர் பாடிய தனிப்பாடல்களில் இரண்டில் மட்டுமே அங்கதக் குறிப்புக்கள் காணப்படுகின்றன. அப்பாடல்களும்,

1. தன்னை மதிக்காமல் இருந்த ஊரை இகழ்ந்தும்
2. தாசியை இகழ்ந்தும் பாடப்பட்டவையாக உள்ளன.

புலவர்கள் புலமைக் கர்வம் உடையவர்கள். அரசன் முதல் ஆண்டிவரை அனைவரும் தம்மை மதிக்கவேண்டும் என்ற எண்ணம் உடையவர்கள். தன்னை மதிக்காவிட்டால் அவர்களை இகழ்வதும், ஏளனம் செய்வதும் அவர்கள் இயல்பு. இராமாயணம் எனும் காவியம் படைத்த கம்பனும் இதற்கு விலக்கல்ல.

ஒருசமயம் கொங்கு நாட்டிற்குச் சென்றார் கம்பர். அங்கு அவரை அறியாமையால் மக்கள் மரியாதை செலுத்தவில்லை. அதனால் கோபம் கொண்டு,

'கொங்குநாட்டில் ஓடுகின்ற நீர் சேற்று நாற்றம் அடிக்கும். அங்குள்ள நிலங்கள் அனைத்தும் கல்லாலும் முள்ளாலும் நிறைந்திருக்கும் ஊர்கள் அனைத்தும் குக்கிராமங்களே. அங்குள்ள மக்கள் கம்மஞ் சோற்றைத் தவிர நல்ல உணவு உட்கொண்டது இல்லை. அங்கிருப்பவர்கள் பொம்மன் என்றும், திம்மன் என்றும் பெயர் வைத்திருப்பார்கள். பெண்கள் நாய்களாகவும் பேய்களாகவும் இருப்பர். இத்தகைய கொங்குநாட்டைக் கனவில்கூட நினைக்க-முடியாது' என்று கொங்கு நாட்டையும் மக்களையும் இகழ்ந்து பாடுகிறார்.41

''நீரெலாம் சேற்றுநாற்றம் நிலமெலாம் கல்லும்முள்ளும்
ஊரெலாம் பட்டிதொட்டி உண்பதோ கம்பஞ்சோறு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பேரெலாம் பொம்மன்திம்மன் பெண்களோ நாயும்பேயும்
காருலாம் கொங்குநாட்டைக் கனவிலும்நினைக்கொணாதே''

என்பது அப்பாடல்.

மற்றொரு பாடலில், வல்லி என்ற தாசியை,

''தாமரைப்பூவில் வீற்றிருக்கும் பிரமன் மணமாகாத மங்கையர் அனைவருக்கும் இளநீர்க் காய்கள் என்னும்படி முலைகளை அமைத்தான். ஆனால் அழகான பார்வையைக் கொண்ட வல்லி என்ற தாசிக்கோ இளநீர்த் தோப்பையே முலைகளாக அமைத்து-விட்டான். இவ்வகையில் உயர்ந்தவர்கள் யார்?' என்று இகழ்ந்து பாடுகிறார்.[42]

பெண்களுக்கு அழகு அவர்களது இரு மார்புகள். அம்மார்பு-களும் தகுந்த அளவுடன் இருப்பின் சிறப்புடையது. ஆனால் வல்லி என்ற தாசிக்கோ தோப்பே முலைகளாக உள்ளனவாம். தோப்பில் எவ்வாறு இளநீர்க் காய்கள் தொங்கிக் கொண்டிருக்குமோ அது போல வல்லி என்ற தாசியின் மார்புகளும் தொங்கிக் கொண்டி-ருக்கின்றன என்று கேலியாகக் கூறுகிறார். இதன் மூலம் அவளது அழகின்மையைக் குறிப்பாக வெளிப்படுத்தவும் செய்கிறார்.

''கந்த மலர்ப்பிரமன் கன்னிமட வார்க்கெல்லாம்
அந்த இளநீரை முலையாக்கினான்—சுந்தரம்சேர்
தோற்றமிகு வல்லிக்குத் தோப்பைமுலை ஆக்கினான்
ஏற்றமதில் யார்தான் இயம்பு''

என்ற இப்பாடலில் ஏற்றம் உரைப்பதுபோல் இகழல் குறிப்புக் காணப்படுகிறது.

8. கையேட்டுத் தம்பான்

கொங்கு நாட்டில் வாழ்ந்த இப்புலவரது இயற்பெயர் தம்பான் இலட்சுமணன் பாரதியார் என்பவரிடம் கல்வி கற்று, அவரிடம் கையேடு எழுதிக் கொண்டிருந்ததால் கையேட்டுத் தம்பான் என்று ஆயிற்று.

சைவமடாலயங்கள் சமயப்பணியுடன் அங்கு வரும் மக்களுக்கு உணவு அளிக்கவும் செய்தன. சில நேரங்களில் மடங்களில் அளிக்-கப்படும் உணவின் தரம் குறைவாக இருப்பதுண்டு. இந்நிலையை அங்கு வரும் புலவர்கள் இகழ்ச்சியாகப் பாடுவதும் உண்டு. அவ்-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வகையில் ஒரு மடத்தினையும் அங்கு வழங்கப்பட்ட உணவினையும் இகழ்ச்சியாகப் பாடிய பாடல் ஒன்று கையேட்டுத் தம்பான் பாடல்களிலும் காணப்படுகிறது.

மாணிக்கவாசகர் பெயரால் மடம் ஒன்று இயங்கிவந்தது. அம்மடத்தில் உணவுண்டு திரும்பிய தம்பானிடம் இலட்சுமண பாரதியார் 'மாணிக்கவாசகர் மடத்தில் சாப்பிட்ட சாப்பாடு எப்படி?' என்று கேட்டார். அதற்குத் தம்பான்,

'சோளத்தினால் ஆன சோற்றின் பெரிய உருண்டையினை அளித்தார்கள். கத்தரிக்காய்க் குழம்பினைத் தூக்கிவிட்டார்கள். இதனால் மனம் நாணிக் கோபமுற்று வந்தேன்'' என்று பதில் கூறுகிறார்.

மடங்கள் சிறந்த உணவை அளிக்கவேண்டும். ஆனால் மாணிக்கவாசகர் மடத்திலோ நல்ல உணவு படைக்கப்படவில்லை. சோளச்சோறும் கத்தரிக்காய்க் குழம்பும்தான். அவற்றையும் தூக்கி எறிவது போலப் போடுகிறார்கள் என்று மடத்தின் இழிநிலையைக் கூறி மடத்தினை இகழ்கிறார்.

''மொட்டைச் சோளச்சோற்றின் மொத்தையிட்டுக் கத்தரிக்காய்த்
தட்டைச்சாற் றைத்தூக்கித் தானிட்டார் .....
நாணிக் கடிந்துவந்தேன் நான்''

என்பது அப்பாடலாகும் 43

9. சவ்வாதுப் புலவர்

சவ்வாதுப் புலவர் என்ற பெயரில் 17ஆம் நூற்றாண்டில் ஒருவரும், 18ஆம் நூற்றாண்டில் ஒருவரும் வாழ்ந்ததாகத் தமிழ்ப்புலவர் அகராதி கூறுகிறது. ஆனால் இங்குக் காணப்படும் பாடல்களைப் பாடியவர் 18ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவரே என்று கழகப் பதிப்பு உறுதிசெய்கிறது. தொண்டை நாட்டில் வாழ்ந்த இவரது இயற்பெயர் முகைதீன் என்பது. இவர் 'ஆண்டவன்பிள்ளைத்தமிழ்' என்ற நூலைப் பாடியுள்ளார் எனத் தெரிகிறது.

இவர் பாடிய தனிப்பாடல்களில் மூன்று பாடல்களில் மட்டுமே அங்கதம் காணப்படுகிறது. அப்பாடல்கள்.

1. புலவரை இகழ்வதாகவும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

2. தன்னைச் சார்ந்தோரைச் சரிவரக் கவனிக்காமையால் வசையாகப் பாடியதாகவும்

3 பள்ளிவாசலின் இழிநிலையைக் குறிப்பதாகவும் அமைந்துள்ளன.

புலவரை இகழ்வதாக அமைந்த பாடல்

இப்பாடலில் சர்க்கரை என்னும் புலவரை இழித்துரைத்து,

"தாமதியா மல்எங்கள் ஷாகுல் ஹமீதொலியை
நாமதி யாதிருந்த நாளெல்லாம்-நேமம்
கலைத்தவனுக்கு இன்னமொரு கண்போனால் மட்டும்
நிலைக்கும் ஷரகு நெறி"

என்று வசைபாடுகிறார்.[44]

சர்க்கரை என்னும் புலவர் நியமனத்தைக் கலைத்ததால் அவனுக்குக் கண் அழிய வேண்டும் என்று வசைப்பாடுவதில் அங்கதக் குறிப்புக் காணப்படுகிறது.

தம்மைச் சார்ந்தோரைக் கவனிக்காததால் பாடிய பாடல்

சவ்வாதுப் புலவர் ஒருசமயம் பல்லக்கில் ஏறித் திருவாரூரை அடைந்தார். அங்கிருந்த தண்ணீர்ப் பந்தலுக்குச் சென்றார். தண்ணீர்ப் பந்தலைச் சார்ந்த கனகசபை ஆண்டி என்பவன் புலவரது பல்லக்கினைச் சுமப்பவர்களுக்குக் குவளையில் தண்ணீர் கொடுக்க மறுத்தான். தண்ணீரைக் கையில் ஊற்றுவதாகவும், அதனைத்தான் குடிக்கவேண்டும் என்றும் சொன்னான். குவளையைக் கையில் தருமாறு புலவர் வற்புறுத்திக் கூறியும் பயனில்லை. இதனால் வெகுண்டு,

'திருவாரூரில் உள்ள கனகசபை ஆண்டியின் செயலைக் கேளுங்கள். தனமாது தன்முகத்தில் முகம் வைத்து அணைப்பதற்கு உயரம் தேவைப்படுவதற்காகவும் தலையணை போன்று சடையை வளர்த்துள்ளான்' என்று வசைபாடுகிறார்.

"முலைக்குயர்ந்த தனமாது தன்முகத்தில்
முகம்வைத்து முயங்கவேண்டித்
தலைக்குயரம் வேண்டுமென்று தலையணைக்காய்
வளர்த்தான் சடையைத்தானே"

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்ற இப்பாடலடிகளில் கனகசபை ஆண்டியின் சடைமுடி பற்றிய இகழ்ச்சிக் குறிப்புக் காணப்படுகிறது.[45]

பள்ளிவாசலின் இழிநிலை குறித்துப் பாடிய பாடல்

முக்குளம் என்ற ஊர்ப் பள்ளிவாசலில் தொழுகை சரிவர நடைபெறாமல் இருந்தது. இதனைக் கண்ட புலவர் மனம் வெதும்பினார். பள்ளிவாசலின் இழிநிலையினைக் கண்டு,

'மகமதியர் மறையான குரானைச் சொல்ல முகமதிய குருக்கள் இல்லை. பள்ளிவாசலில் வந்து தொழுவதற்கு முகம்மதியர்கள் இல்லை. இருப்பவர்களும் பள்ளிவாசல் வராது உழச்சென்று விட்டார்கள். அதனால் எல்லாக் குளங்களிலிருக்கும் கொக்குகள் அனைத்தும் பள்ளிவாசல் முகப்பில் வந்து முட்டையிடும்' என்று பாடுகிறார்.[46]

''எக்குளத்துக் கொக்கும் இகலிவந்து முட்டையிடும்
முக்குளத்துப் பள்ளிமுகப் பில்''

என்று பள்ளிவாசலின் நிலையினைக் கூறுவது அங்கதக் குறிப்புடையது. பள்ளிவாசலில் நடைபெற வேண்டிய தொழுகையும், தொழுகைக்கு வரவேண்டிய முகமதியர்களும் இல்லாமல் பள்ளிவாசல் எதற்கு? கொக்குகள் முட்டை இடவா? என்று ஏளனமாகப் பாடுகிறார்.

10. சாமிநாதப் புலவர்

இவர் கொங்கு நாட்டில் விசயமங்கலம் என்ற ஊரைச் சார்ந்தவர். இவரது பாடல் ஒன்றில் தனிமனித வசை இருப்பதைக் காணமுடிகிறது. புற்றிரைச்சல் என்னும் ஊரில் இருந்த முத்தான் என்பவன் மீது,

'புற்றிரைச்சல் எனும் ஊரில் உள்ள முத்தான் என்பவன் ஒரு பாவி. மலைபோன்ற அவனது நெற்போர் பொடிப்பொடியாகத் தீயில் வெந்து போகட்டும். மற்றவர்கள் வாழ்த்தும்படியாக எதுவும் கொடாதவன். சிறிய உடையைக் கூடத் தோய்த்து உடுத்தாதவன் அவன். அத்தகைய முத்தான் பெருந்துயர் அடைக' என்று வசை பாடியுள்ளார்.[47]

''பாவிமுத்தான்'' என்றும், ''குன்றையொப்ப வீழ்த்த நெற்போர் வெண் பொடியாய் வேகவின்றே'' என்றும் ''பெருந்துயருள் உற்று'' என்றும் அங்கதக் குறிப்புப்பட வசைபாடுகிறார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

11. சிவப்பிரகாச சுவாமிகள்

இவர் காஞ்சியில் வாழ்ந்த குமாரசுவாமிப் பண்டாரம் என்பவரது மகன். வீரசைவரான இவர் விரும்பிய வண்ணம் கவிபாட வல்லவர். காலம் 17ஆம் நூற்றாண்டு. இவர் கற்பனைக் களஞ்சியம் என்றும் போற்றப்படுவார்.

இவரது பாடல்களில ஒரு பாடல் மட்டுமே அங்கதக் குறிப்புடையதாக உள்ளது. அப்பாடலும் வசைப்பாடலாக—ஒருவன் மாளப் பாடியதாக அமைந்துள்ளது.

மாந்தோப்பில் ஒருநாள் கீழே கிடந்த மாங்காய் ஒன்றை எடுத்துத் தம் மடியில் வைத்துக்கொண்டார் புலவர். இதனைக் கண்ட தோட்டக்காரன் அம்மாங்காயினைத் திருப்பிப் பெறுவதற்காகப் புலவர் மடியைப் பிடித்து இழுத்தான். இதனால் வெகுண்டு,

"உன்னை நெருங்கி வழிபட்ட அடியவராகிய மார்க்கண்டேயனுக்காக எமனை உனது காலால் தாக்கியது உண்மையே. ஆனால் கீழே கிடந்து எடுத்த ஒரு மாம்பழத்திற்காக என் அரைத்துணியைப் பற்றியிழுத்த இப்பாவியாகிய தோட்டக்காரன் கன்னி ராசிக்குச் சூரியன் வருகிறபோது மரணம் அடைவானாக" என்று தோட்டக்காரன் மீது வசைபாடுகிறார்.[48]

"எடுத்ததொரு மாங்கனிக்கா என்னை மடிபிடித்த மாபாவி சாம் கனிக்கு ஆதித்தனைவரத்தான்" என்று சாபம் போன்று வசைபாடுவதால் அங்கதப் பொருள்பட நிற்கிறது.

12. சுத்தானந்த பாரதியார்

இவர் பாண்டிநாட்டில் உள்ள சிவகெங்கையில் 1897ல் பிறந்தார். சிறுவயதிலேயே துறவு பூண்டார். பராசக்தியருளால் பாடலியற்றும் திறன் பெற்றார். தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக் கழகத்திலிருந்து இவர் எழுதிய 'பாரதசக்தி மகாகாவியம்' என்ற நூலுக்காக இலட்சரூபாய் பரிசாகப் பெற்றார்.

இவர் பிறருக்கு உதவவேண்டும் என்ற சிந்தனையற்றவர்களைப் பார்த்து, அவர்களது செய்கைகளைச் சுட்டிக்காட்டி ஏளனமாக,

'பிறருக்கு உதவ நினைக்காதவர்கள் தம் பொருளை ஆட்டத்திற்கும், இசைநிகழ்ச்சிகளுக்கும், ஆசைக் கிழத்திகளுக்கும்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வழக்கு மன்றங்களுக்கும், மக்களிடமிருந்து வாக்கினைப் பெறுவ தற்கும் வீணாகச் செலவு செய்வர். ஏழை ஒருவன் தன் பசிக்காக வந்து உதவி செய்யுமாறு கேட்டால் எச்சில் கையால் கூட உதவமாட்டார்கள். இத்தகையசெல்வம் வீண்தான்'' என்று பாடுகிறார்.[49]

''ஆட்டுக்கும் பாட்டுக்கும் ஆசைக் கிழத்திக்கும்
கோட்டுக்கும் ஓட்டுக்கும் கொட்டுவார்—வாட்டமாம்
ஏழை தருமமெனில் எச்சிற்கை யுங்கூதவார்
பாழும் பணமே பதர்''

என்ற இப்பாடலில் யாருக்கும் உதவாத செல்வர்களின் நிலையை அங்கதக் குறிப்புப்பட எள்ளி நகையாடுகிறார்.

13. சிகவீரபாண்டிய கவிராச பண்டிதர்

இவர் பாண்டியநாட்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் ஒட்டநத்தம் என்ற ஊரில் 1886ஆம் ஆண்டில் பிறந்தார். இவர் திருக்குறட் குமரேச வெண்பா, தருமதீபிகை போன்ற நூல்களையும், பல தனிப்பாடல்களையும் இயற்றியுள்ளார்.

போலித் துறவிகளைப் பற்றியும், அடிக்கடி கட்சி மாறுவோர் பற்றியும் இவர் பாடிய இரு பாடல்களில் மட்டுமே அங்கதக் குறிப்புக்களைக் காணலாம்.

போலித் துறவிகளைக் குறித்துப் பாடியது

'நிலஉலகில் உள்ள போகங்கள் அனைத்தும் இழிந்தது என்று கூறுவர். போகங்களை அறவே வெறுத்தது போன்றிருப்பர். நான் என்ற அகந்தையை நீக்கிய தவமுனிவர் போன்று சாமியார் வேடம் தாங்கி இருப்பர். அத்தகையோர் மாமியார் பலரை அடைந்து மடிகின்றார்கள்' என்று பாடுகிறார்.[50]

இப்பாடலில் சாமியார் போன்று காட்சியளிக்கின்ற சிலர் பல பெண்களோடு தொடர்புகொண்டு அறநெறியினின்று மாறி வாழு-கின்ற நிலையினை ஏளனம் செய்கிறார்.

''சாமியார் வேடங்கள் சதுருடனே
தரித்தவரும் சார்புள் ஓங்கி
மாமியார் பலரடைய மாலடைந்து
மடிகின்றார் மதிஎன் அம்மா''

என்பது அப்பாடல்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அடிக்கடி கட்சிமாறுவோர்களைக் குறித்துப் பாடியது

அடிக்கடி கட்சி மாறுகின்ற அரசியல் வாதிகளை இவர், 'காலையில் ஒருகட்சியில் இருப்பார்கள். பகலில் மற்றொரு கட்சியில் இருப்பார்கள். இரவில் இன்னுமொரு கட்சிக்குத் தாவுவார்கள். மறுநாள் காலையிலோ அந்தக்கட்சியினையும் விடுத்துப் பிறிதொரு கட்சிக்குச் செல்வர். ஆலையில் சுற்றிச்சுற்றி வரும் எருதைப்போல இவர்களும் ஒவ்வொரு கட்சியாகச் சுற்றிச்சுற்றி வருவார்கள். இத்தகைய போக்கையுடைய இவர்கள் நிலை வியப்பிற்குரியது' என்று சாடுகிறார்.[51]

இப்பாடலில்,

''காலையிலே ஒரு கட்சி கடும்பகலில்
ஒரு கட்சி கதிரோன் சாயும்
மாலையிலே ஒரு கட்சி மறுநாளில்
ஒரு கட்சி மாறி மாறி.....
.....
திரிந்துவரும் வித்தகர்தம்
சித்தநிலை வியப்பே யம்மா''

என்ற அடிகள் கட்சிமாறிகளின் நிலையினைப் படம்பிடித்துக் காட்டி அங்கதப் பொருள்பட நிற்கின்றன.

14. தத்துவப் பிரகாசர்

இப்புலவர் 16ஆம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சார்ந்தவர். 'தத்துவப் பிரகாசம்' என்ற நூலை இயற்றிய இவர் கிருஷ்ணதேவராயர் காலத்தைச் சேர்ந்தவர்.

இவரது தனிப்பாடல் ஒன்றில் சீநக்க அரசரிடம் பெற்ற ஆடை குறித்து ஏளனமாகப் பாடுவதைக் காணமுடிகிறது. அப்பாடலில்,

''சீநக்க மன்னரின் வெற்றியையும் குணத்தையும், வீரத்தையும் ஒரு கவியில் சேர்த்துப் பாடினேன். அதனைக்கேட்டு மன்னர் எனக்கு ஆடை ஒன்று அளித்தார். அதனை எடுத்துப் பார்த்தேன். அதனுள் தேவர்களுக்குத் தலைவனாகிய இந்திரன் வீற்றிருந்தான். எனவே 'ஆடையைக் கட்டுவதற்குப் பயப்பட்டுத் தூர வைத்து வணங்கினேன்'' என்று அங்கதக் குறிப்புப்படப் பாடுவதைக் காணலாம்[52].

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சீநக்கர் கொடுத்த ஆடையில் 'பலதேவீசர் வீற்றிருந்தார்' என்பது இந்திரன் வீற்றிருந்தான் என்பதனைக் குறிக்கும். இந்திரன் ஆயிரம் கண்களை உடையவன் என்பர். அதேபோன்று மன்னன் அளித்த உடையிலும் ஆயிரம் கண்கள் — ஓட்டைகள் — இருந்தன என்கிறார். ஆடையினைக் கட்ட முடியாது ஆகையால் அதனைத் தூர வைத்துவிட்டேன் என்று குறிப்பிடும்போது கூட இந்திரன் அவ்வாடையில் இருந்தமையால் அவ்விந்திரனைத் தொழவேண்டுமே தவிர, வேறு எதுவும் செய்தல் கூடாது என்று நகைச்சுவை படக் கூறியிருக்கிறார்.

"வெற்றிப்பாடும் குணப்பாடும் வீரப்பாடும் ஒருகவியில்
தெற்றிப்பாடும் அதுகேட்டுச் சீநக்கரசர் துகிலீந்தார்
பற்றிப்பார்க்க அதனூடே பலதேவீசர் வீற்றிருந்தார்
சுற்றிப்பார்க்கப் பயப்பட்டுத் தூரவைத்துத் தொழுதோமே"

என்ற இப்பாடலின் இறுதி இரு வரிகள் சிறந்த அங்கதமாகத் திகழ்கின்றன.

15 படிக்காசுத் தம்பிரான்

இப்புலவர் தொண்டைநாட்டில் பொற்களந்தை எனும் ஊரில் பிறந்தவர். இவர் இராமநாதபுரம் இரகுநாத சேதுபதியின் அவைக்களப் புலவராகவும் இருந்தார். தொண்டை மண்டல சதகம், தண்டலையார் சதகம் போன்ற நூல்களையும் தனிப்பாடல்கள் பலவற்றையும் பாடியுள்ளார். இவரது காலம் கி.பி.1680-1723. இவரே படிக்காசுப்புலவர் என்றும் பெயர் பெறுகிறார்.

இவரது பாடல்களில் இரு பாடல்கள் போலிப் புலவர்களைப் பற்றிய அங்கதக் குறிப்புடையனவாகத் திகழ்கின்றன.

ஒருபாடலில்,

'கேள்விக்குத் தகுந்த பதில் கூறாதவர்களைத் தலையில் குட்டிக் கண்டிப்பதற்குப் பிள்ளைப் பாண்டியன் என்ற மன்னன் இப்பொழுது இல்லை. குற்றமுள்ள புலவர்களின் காதைக் குறும்பிவரை குடைந்து வெட்டுவதற்கு வில்லிபுத்தூராரும் இல்லை. குற்றமுடைய இருவர் தலைகளை ஒன்றாய் முடிந்து அவர்களைப் பலியிடுவதற்கு ஒட்டக்கூத்தரும் இல்லை. வேடிக்கையாகப் பாடல்களைத் துரிதமாகப் பிழையோடு பாடி ஏய்ப்பதற்கோ கல்வியறிவற்ற துரைகள் உள்ளனர். எனவே நாடெங்கும் கல்வியறிவு அற்றவர்களும் தங்களைப் புல-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வர்கள் என்று கூறிக்கொண்டு தைரியமாகச் சுற்றலாம்'' என்று பாடுகிறார்.[53]

பிள்ளைப்பாண்டியன், வில்லிபுத்தூரார், ஒட்டக்கூத்தர் போன்றோர் இல்லாததால்தான் புலமையிற் குறைந்தவர்கள் இருக்கிறார்கள் என்கிறார். இப்புலவர்கள் என்ன பாடினாலும் அவற்றிலுள்ள தவற்றினை அறிந்துகொள்ளக் கூடிய அறிவில்லாதவர்களாகிய தூரைகள் மட்டுமே உள்ளார்கள் என்கிறார். எனவே தேசமெங்கும் புலவர் என்று பெயர் சொல்லிக்கொண்டு திரியலாம் என்று கூறுவதில் நகைச்சுவையுடன் அங்கதமும் இருக்கிறது.

''விளையாட்டாக கவிதைதனை விரைந்துபாடித்
தெட்டுதற்கோ அறிவில்லாத் தூரைகள் உண்டு
தேசமெங்கும் புலவரெனத் திரியலாமே''

என்ற வரிகளில் புலமை குறைந்த புலவர்கள் மிகுதியாகத் தோன்றுவதற்கான சூழலையும் காட்டுகிறார் புலவர்.

மற்றொரு பாடலில் படிக்காசுத் தம்பிரான் சில புலவர்களை இழித்துப் பாடுவதைக் காணலாம். தங்கள் கவிதைகளை வள்ளல்கள் மதிக்காததற்கான காரணங்களை இங்குக் காட்டுகிறார்.

'இடையரில் ஒரு பிரிவினரான அஞ்சாலி மக்கள், சானார் பாணர், அம்பட்டர், துணிகளுக்குச் சாயம் போடும் சாயக்காரர், வேசையர் போன்ற அனைவரும் தமிழைப் பஞ்சுபோல ஆக்கி ஒரு காசுக்கு ஒரு பாடல் என்ற முறையில் பாடத் தொடங்கிவிட்டனர். எனவே தான் எங்களது நல்ல கவிதைகள் வள்ளல்களுக்கு நஞ்சுபோலாயிற்று' என்பது அப்பாடல்.[54]

இப்பாடலில் அஞ்சாலி மக்கள் முதலானோர் பாடத் தொடங்கிவிட்டனர் என்று புலவர் கூறுவது அவர்கள் தத்தமக்குரிய தொழில்களை விட்டுவிட்டுப் புதியதோர் தொழிலாகிய புலமைத் தொழிலுக்கு, எவ்வித அனுபவமும் இன்றி வந்துவிட்டனர் என்று காட்டுவதற்கே. மேலும் எவர் வேண்டுமானாலும் புலவராகிவிடலாம் என்ற மனப்பான்மை உள்ளது என்பதையும் காட்டுகிறார். இதனால்தான் போலிப்புலவர்கள் மிகுந்துவிட்டார்கள் என்கிறார், ''நஞ்சாகப் போயிற்று ராசாக்களுக்கு எங்கள் நற்கவியே', என்பதும், ''செந்தமிழைப் பஞ்சாகப் பன்னி ஒரு காசுக்கு ஓர் வண்ணம் பாடலுற்றார்'' என்பதும் அங்கதக் குறிப்புடையன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

16. பலபட்டைச் சொக்கநாதப்புலவர்

இப்புலவர் 18 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சார்ந்தவர். தொண்டைநாட்டில் வாழ்ந்தவர். சொக்கர் மீதும் மீனாட்சி மீதும் பல பாடல்கள் இயற்றியவர். பல தனிப்பாடல்களும் பாடியுள்ளார்.

இவர் தட்டான் என்ற இனத்தவரையும் அவர்தம் இயல்புகளையும் இகழ்ந்து பாடும் பாடல் அங்கதக் குறிப்புடையதாகத் தோன்றுகிறது.

'கால் வராகன் பொன்னில் ஒருமா அளவு பொன்னாவது உரை கல்லில் ஒட்டும் படியாகத் தேய்த்துத் திருடாமல் இருக்கமாட்டான். அதே நேரத்தில் நகைகளைச் செய்யாமலிருக்க மாட்டான். மேருமலை அளவுள்ள பொன்னையும் இறுக்கி ஒடுக்கிக் கடுகின் கனமுடையதாக நிறுத்துக்காட்டும் வல்லமையுடையவன் தட்டான். இத்தகைய தட்டானுக்குப் பயந்துதான் சிவபெருமானே பாம்பினைத் தரித்துள்ளார்' என்ற இகழ்ச்சிக் குறிப்புப்படப் பாடல் அமைந்துள்ளது.[55]

இப்பாடலில் தட்டானைத் திருடன், நேர்மையற்றவன் என்று குறிப்பாகக் காட்டுகிறார். இவர்களுக்குப் பயந்துதான் சிவபெருமான் பொன்நகைகளை அணியாமல் பாம்பினை அணிந்துள்ளான் என்று நகைச்சுவையாகக் கூறி, தட்டானின் இயல்புகளை இகழ்ந்துள்ளமையால் இப்பாடல் அங்கதக் குறிப்புப்பட அமைந்துள்ளது எனலாம்.

''ஒட்டாக ஒட்டியும் காப்பொன்னில் மாப்பொன் உபாயமதாய்த்
தெட்டாது இரான் பணிசெய்யாது இரான் செம்பொன்மேரு-
வினைக்கட்டாகக் கட்டிக் கடுகுஅளவாய் நிறைகாட்டவல்ல
தட்டானுக்கு அஞ்சியல்லோ அணிந்தான்சிவன்சர்ப்பத்தையே''

என்பது பாடல்.

17. பொய்யாமொழிப் புலவர்

இப்புலவர் சோழநாட்டில் உள்ள துறையூரில் வேளாண் குடியில் பிறந்தவர். 13ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர். தஞ்சைவாணன் கோவை என்னும் நூலை இயற்றியவர்.

இவர் பாடிய தனிப்பாடல்களில் ஒரு பாடல் மட்டுமே அங்கதப் பாடலாக அமைந்துள்ளது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஒருசமயம் இவர் தமது ஆசிரியர் கொல்லையைக் காவல் காத்துக்கொண்டிருந்தார். அப்பொழுது காளிங்கண் என்னும் மன்னனது குதிரை வேகமாக வந்து அக்கொல்லையை அழித்தது. அதனால் வெகுண்ட பொய்யாமொழிப் புலவர்,

'எல்லா வளங்களும் பொருந்திய வயிரபுரத்தில் உள்ள பெரிய காளியாகிய தாயே! கொல்லையில் விளைந்த பயிரின் கதிர்களைத் தின்று அழித்த காளிங்கராயன் சவாரி செய்யும் குதிரையைச் சாகும்படியாகத் தூரத்திக்கொண்டு போ' என்று அக்குதிரை இறக்கவேண்டும் என்று பாடுகிறார்.[56]

''வாய்த்த வயிரபுர மாகாளி அம்மையே
ஆய்த்த மணலில் அணிவரையில்—காய்த்த
கதிரைமா ளத்தின்னும் காளிங்கண் ஏறும்
குதிரைமா ளக்கொண்டு போ''

என்று பாடுவதில் நேரடி வசையாகக் குதிரை இறக்கவேண்டும் என்ற குறிப்பு உள்ளது.

18. வசைகவி ஆண்டான் கவிராயர்

இப்புலவர் திருநெல்வேலிப் பகுதியில் உள்ள ஒட்டைப்பிடாரத்தில் பிறந்தவர். அந்தணர் குலத்தைச் சார்ந்த இவர் வசைபாடுவதில் வல்லவர். இவரது காலம் 19ஆம் நூற்றாண்டு ஆகும்.

இவரது பாடல்களில் சேஷி என்ற பெண் வீட்டில் அளிக்கப்பட்ட உணவு பற்றிப் பாடும் ஒருபாடலில் மட்டுமே அங்கதக் குறிப்புக் காணப்படுகிறது.

'சேஷி என்பவள் அளித்த உணவு உண்டதால் எனது வாய் எரிந்தது கை எரிந்தது. வயிறு எரிந்தது. மேலும் அவள் உணவை எனது அரை வயிற்றுக்கு மட்டுமே படைத்தாள். முழுமையாகப் படைக்கவில்லை எனவே கல்நெஞ்சுக்காரி அவள். அத்தகைய சேஷி என்ற 'மொட்டை முண்டை' தலை பற்றி எரியவேண்டும். அவள் தாயும் மகளும் எரியவேண்டும். இவற்றைக் கண்டால் தான் எனது வயிற்றெரிச்சல் தீரும்' என்று பாடுவதாக அப்பாடல் அமைந்துள்ளது.[57]

சேஷி என்பவள் படைத்த உணவின் தரம் தாழ்ந்தது என்பதையும், படைத்த உணவும் வயிறு நிறையும் அளவுக்குப் படைக்-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கப்படாமல் அரை வயிற்றுக்கே படைக்கப்பட்டது என்பதையும் சுட்டிக் காட்டியுள்ளார். இத்தகைய சேஷியும், அவள் தாயும் மகளும் எரியவேண்டும் என்று வசை பாடுகிறார்.

இப்பாடல் மூலம் தனக்குச் சரிவர உணவு படைக்காத, நல்ல உணவு படைக்காத பெண்களை வசைபாடுவது மரபாக இருந்திருப்பது தெரியவருகிறது.

19. வேலாயுதம் பிள்ளை

இப்புலவர் பாண்டிநாட்டில் மங்கை நகர் என்னும் ஊரில் பிறந்தவர். 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்தவர். இவர் பாடியதாகக் கூறப்படும் 30 பாடல்களில் ஒரு பாடல் மட்டும் அங்கதக் குறிப்புடையதாக உள்ளது.

சென்னை நகரில் மழை செழித்துள்ளதா? என்று ஒருவர் வேலாயுதம் பிள்ளையிடம் கேட்டபொழுது,

'உலகில் மாதம் மும்மாரி பொழியும் என்று சொல்வார்கள். சென்னை நகரில் தினமும் இரண்டுமுறை மாரி கண்டேன். புலியினை ஒத்த மக்கள் வாயினில் உள்ள சுருட்டில் இருந்து புகை கிளம்பும்; தொண்டையில் இருந்து உண்டாகும் காறல் ஒலி கேட்கும்; உமிழ்நீர் எங்கும் பொழியும். இவை முறையே மேகம், இடி, மழை போன்றிருக்கும். இது ஒவ்வொரு நாளும் நடக்கும்' என்று கூறுவதில் அங்கதக் குறிப்பினைக் காணமுடிகிறது.[58]

இப்பாடலில் மக்களின் புகை பிடிக்கும் பழக்கத்தையும், அதனால் ஏற்படும் காறல் ஒலியாகிய இருமலையும், அடிக்கடி எச்சில் துப்பும் நிலையினையும் காட்டுகிறார். சுருட்டுப்புகை — மேகம்; தொண்டையில் உண்டாகும் காறல் ஒலி — இடி; உமிழ்நீர் — மழை என்று ஒப்புமை காட்டியிருப்பது நகைச்சுவையுடன் கூடிய அங்கதமாகும். மாதத்திற்கு மூன்று மழை பொழியும் என்பார்கள். ஆனால் சென்னை நகரிலோ தினமும் இரு முறை மழை பொழிகிறது என்று கூறுவதும் அங்கதக் குறிப்புடையதே.

"ஒலிகடல் உடுத்த பாரினில் திங்கள்
ஒன்றில்மும் மாரிஉண் டென்பார்
மலிபுகழ்ச் சென்னை யினில்தினம் இரண்டு
மாரிகண் டேன் இரு போதும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

புலிபரை மாந்தர் வாயினில் கவ்வி
புகையிலைச் சுருளினில் புகைதீ
கலிகளக் காறல் தொனிஉமிழ் நீர்மே
கம்மினல் இடிமழை கடுக்கும்''

என்பது அப்பாடல்.

20 நையாண்டிப் புலவர்

தொண்டைநாட்டைச் சார்ந்த இப்புலவர் 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவர் வேடிக்கையாகவும் நையாண்டித்தனமாகவும் செய்யுள் செய்வதன் காரணமாக இப்பெயர் பெற்றார். இவரது இயற்பெயர் தெரியவில்லை.

'மேலாடை இன்றிச் சபையில் புகுந்தால், மக்கள் பல நூல்களைக் கற்ற புலவராக இருந்தாலும் மதிப்பதில்லை. திருப்பாற்கடல் திருமால் அணிந்திருந்த பொன்னாடை கண்டு அவருக்குத் தன்னிடத்தில் பிறந்த திருமகளை அளித்தது. புலித்தோலை ஆடையாக அணிந்திருந்த சிவபெருமானார்க்கோ நஞ்சினையே கொடுத்தது' என்ற பொருள்பட அமைந்த பாடலில் மேலாடை அணியாதவர்க்குக் கிடைக்கும் தாழ்வினை அங்கதக் குறிப்புடன் காட்டுகிறார்.[59]

இப்பாடலில் 'ஆள்பாதி ஆடைபாதி' என்று இக்காலத்தில் வழங்கப்படும் பழமொழியின் கருத்துப் பொதிந்திருப்பதைக் காணமுடிகிறது. நல்ல உடையின்றி எங்குச் சென்றாலும் மதிப்புக் கிடைக்காது. கற்றுத் தேர்ந்த புலவராக இருந்தாலும் நல்லாடை—மேலாடை தேவை. நல்லாடை இருந்தமையால் திருமாலுக்குத் திருமகளும், நல்லாடை இன்மையால் சிவனுக்கு நஞ்சும் கிடைத்தது என்று கூறுவது நகைச்சுவைபட முற்கூறிய கருத்தினை வலியுறுத்துவதற்கே.

''மேலாடையின்றிச் சபைபுகுந்தால் இந்தமேதினியோர்
நூலாயிரம் படித்தாலும் எண்ணார்''

என்ற வரிகள் மேலாடையின் சிறப்பைக் காட்டுவதுடன், மக்களின் அறியாமையையும், வெளிப்பகட்டினை விரும்புகின்ற தன்மையினையும் அங்கதக் குறிப்போடு வெளிப்படுத்தி நிற்கின்றன.

21. முத்துராம முதலியார்

இப்புலவர் 19ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் சென்னையில் வாழ்ந்தவர். 'மகாபாரதக் கீர்த்தனம்' என்னும் நூலையும், பல தனிப்பாடல்களையும் பாடியுள்ளார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முருகப்ப முதலியார் என்பவர் கொடுத்த விருந்து பற்றிப் பாடுகின்றபொழுது,

'அட்டைக்கு மணிமந்திரம் எதற்கு? அறுகம்புல்லை அறுக்கக் கூர்வாள் எதற்கு? கால் கழுவ மட்டுமே பயன்படும் குட்டைக்குப் பொற்படிகள் ஏன்? கருடனுக்குக் கண்ணாடி ஏன்? கொல்லும் தன்மை மிக்க கள்ளிப்பட்டைக்கு மணம் தரும் தாளிதம் ஏன்? படுபாவியாகிய முருகன் எனும் பழந்துடைப்பக் கட்டைக்கு ஊர் விருந்து ஏன்? புலவர்களே கூறுங்கள்' என்று விருந்தின் தரம் குறித்து இகழ்ச்சியாகப் பாடுகிறார்.[60]

முருகப்ப முதலியார் அளித்த விருந்து நன்றாக இல்லை என்ற காரணத்தால் வெகுண்ட புலவர் வசைபாடக் காண்கிறோம். முருகப்ப முதலியாரைப் பழந்துடைப்பாக்கட்டை என்று இகழ்கிறார். அட்டைக்கு மந்திரமும், அறுகினுக்குக் கூர்வாளும், குட்டைக்குப் பொற்படிகளும், பட்டைக்குச் சம்பாரமும் எப்படித் தேவையில்லையோ அதுபோன்று முருகனுக்கும் ஊர் விருந்து தேவையில்லை. நல்ல விருந்து படைப்பதாக இருந்தால் அது விருந்து என்று பெயர்பெறும். அப்படியின்றித் தரம் குறைந்ததாக இருந்தால் அது எப்படி ஊர்விருந்து என்று பெயர்பெறும்? என்று ஏளனம் தோன்றப் புலவர் கேட்பது அங்கதக் குறிப்புப்பட அமைந்துள்ளது.

22. முத்துச் சுப்பையர்

இப்புலவர் திருநெல்வேலி மாவட்டத்தில் புனல்வேலி என்னும் ஊரில் வாழ்ந்தவர். 19ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர் இவர். 'வேதாந்த நாடகம்' என்ற நூலை இயற்றியவர்.

இவர் பாடிய தனிப்பாடல்கள் ஆறு மட்டுமே கிடைக்கின்றன. இந்த ஆறு பாடல்களும் கலிகாலத்தின் இயல்பைக் கூறுவனவாக அமைந்து அங்கதக் குறிப்புடன் உள்ளன.[61] கலிகாலத்தில் நடை-பெறும் நிகழ்ச்சிகளை எல்லாம் நகைச்சுவைபட இப்பாடல்களில் பாடியுள்ளார்.

'கலியுகத்தில் வாழ்பவர்கள் பின்வரும் தன்மையுடையவர்கள் உயர்ந்த இடத்தைப் பள்ளம் ஆக்குவார்கள். பள்ளத்தை வானம்வரை உயரும்படி உயர்த்துவார்கள். காட்டை நாடாக்குவார்கள். ஊரை தொலைக்க எண்ணுவார்கள். மரத்தை வேரோடு பிடுங்கித் தலைகீழாக நட்டு அதனையும் முளைக்கச் செய்வார்கள். இத்தகைய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குறும்புகளை எல்லாம் செய்வதற்காகவா உன்னைப் பிரமன் படைத்-தான்?' என்று கூறும் பாடலில் கலிகாலத்தில் மக்கள் இயல்பை எடுத்-துக் காட்டுகிறார்.

கலிகாலத்தில் யாருக்குப் பலம் அதிகம் என்று காட்டும் முறை யில்

'தன்னையடைந்தவர்களைக் கெடும்படிச் செய்வார்கள்; ஒன்-றைப் பத்தாய்ப் பெருக்கிப் பொய்சொல்லி விரோதத்தை உண்-டாக்கும் கோடரிக்காம்பு போன்றவர்கள்; தினமும் கொலையே செய்யும் துட்டர்களுடன் சேர்ந்து பழகும் பிராமணர்கள்; குதர்க்-கவாதிகள் ஆகிய இவர்களே பலம் நிறைந்தவர்கள்' என்கிறார்.

இப்பாடலில் நல்லவர்கள், நியாயமாக வாழ நினைப்பவர்கள், பிறருக்கு உதவி செய்பவர்கள் ஆகிய இவர்களுக்குக் காலமில்லை என்பதைக் குறிப்பாகச் சுட்டிக் காட்டுகிறார் புலவர்.

கலிகாலம் யாருக்குப் பொருத்தமுடையது என்று மூன்றாவது பாடலில் காட்டுகிறார்.

'பொருந்தும் காரியங்களைப் பொருந்தவிடாமல் தடுக்கும் பாவிகள்; எசமானர்களுக்குத் துரோகம் செய்பவர்கள்; தீராத விவகாரம் பேசுபவர்கள்; கற்பிற் சிறந்து விளங்கும் பெண்களை யாசிப்பவர்கள் இவர்களுக்குத்தான் கலிகாலம் பொருத்தம் உடையது' என்று பாடுவது கலிகாலத்தில் நல்லவர்கள் வாழமுடி-யாத நிலையினைச் சுட்டுவதாக அமைகிறது.

'பொய் சொல்லச் சொல்லி எவ்வளவுதான் பொருள் கொடுத்-தாலும் பெரய்சொல்லாதவர்களைத் திருடர்கள் என்று இக்கலி-காலத்தில் சொல்வர். விநாடிக்கு ஆயிரம் பொய்களை உறுதியாகச் சொல்பவர்களே உயர்ந்தவர்கள்; இவர்களே உலகத்தார்க்கு இனிமையானவர்களாக இருப்பார்கள்' என்று, பொய் பேசுவோர் அடையும் உயர்நிலையினையும், உண்மை பேசுவோர் அடையும் அவலநிலையினையும் காட்டுகிறார்.

குடும்பப் பெண்டிர் பற்றியும் வேசியர் பற்றியும் பாடும் புலவர்

'தன் கணவனுடன் மட்டுமே சேர்ந்து வாழவேண்டிய குடும்பப் பெண்கள், காமப் பித்துக்கொண்ட பிற ஆடவரையும் சேருகிறார்கள். இதனால் கலியுகத்தில் தாசியர் குலப்பெண்கள் பிழைக்க இராட்-டினத்தை வைத்து நூற்கின்றனர்' என்றும் கூறுகிறார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இப்பாடலில் நன்றாக வாழவேண்டிய குலப்பெண்டிரின் மாறுபட்ட நிலையினையும் தாசியரின் நிலையினையும் காட்டுகிறார். தாசியர் தங்கள் தொழிலுக்குப் போட்டியாகக் குலப்பெண்டிர் வந்துவிட்டமையால் இராட்டினம் வைத்து நூற்கின்றனர் என்பது நகைச்சுவைபடத் தோன்றினாலும், கலிகாலத்தில் புரையோடி-யிருக்கும் பண்பாட்டுச் சீரழிவினை இப்பாடல் மூலம் தெளிவாகச் சித்திரிக்கிறார் புலவர்.

கலிகாலத்தில் கடன் வாங்கியோர் நிலையும் கடன் கொடுத்-தவர் நிலையும் மற்றொரு பாடலில் காட்டப்படுகிறது.

'கடன் வாங்கும்போது வில்போன்று மரியாதையாக வளைந்து குனிவார்கள். திருப்பிக் கொடுப்பவர்போலத் தோன்றுவார்கள். கடன் வாங்கியவுடன் மாறிவிடுவார்கள். கடன் கொடுத்தவர்கள் இரவுபக-லாக அலைந்தாலும் வல்வழக்கு பேசுவார்கள். வாங்கிய பொருளை இல்லை என்று சொல்வார்கள். கத்தியெடுத்துக் கொலை செய்யவும் முயல்வார்கள்' என்று, கடன் வாங்கும்வரை எவ்வாறெல்லாம் பணிந்து நடப்பர் என்பதையும், கடன் வாங்கியவுடன் அதனைத் திருப்பித்தராது எவ்வாறு வல்வழக்குப் பேசுகின்றனர் என்பதையும் தெளிவுபடுத்துகின்றார்,

இவ்வாறு பாடல்களிலும் கலிகாலத்தின் இயல்பினைக் கூறி மக்கள் தங்கள் நிலையிலின்று எவ்வாறெல்லாம் இக்காலத்தில் மாறி வாழ்கிறார்கள் என்பதையும் காட்டுகிறார். நல்லவர்-களாக மதிக்கப்படுகின்ற தன்மையினையும் இக்காலச் சமுதாயத்தின் அவல நிலையாகச் சுட்டுகிறார்.

இப்பாடல்கள் உண்மைநிலையினைப் படம்பிடித்துக் காட்டு-வதுடன் மட்டுமல்லாது, அதனால் ஏற்படும் பாதிப்புகளையும் காட்டு-வதால் அங்கதப் பாடல்களாகின்றன. குறைகள் சுட்டிக்காட்டப்படு-கின்றன; அக்குறைகள் சுட்டிக்காட்டப்படும்போது நகைச்சுவையும் (''ராட்டு வைத்தார்கள் இன்றே கலியில் தாசியரே''), ஏளனமும் (கடன் கொள்ளிகளே) கலந்து இருப்பதைக் காணலாம்.

23. வேதநாயகம் பிள்ளை

இவர் மாயவரம் வேதநாயகம் பிள்ளை எனப்படுவார். திருசிர-புரத்தில் உள்ள வேளாண்களத்தூரில் பிறந்தவர். கத்தோலிக்கக் கிறித்துவ மதத்தினரான இவர் முனிசீபாகவும் பணியாற்றியவர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நீதிநூல், பிரதாப முதலியார் சரித்திரம், சுகுணசுந்தரி சரித்திரம் போன்ற நூல்களையும், தனிப்பாடல்கள் சிலவற்றையும் இயற்றியவர். இவர் 1824 முதல் 1889 வரை வாழ்ந்தார்.

இவர் நீதித்துறை அதிகாரியாகப் பணிபுரிந்தமையால் பலருடன் பழகும் வாய்ப்பு ஏற்பட்டது. அதனால் அவர்களின் குணங்களை நன்கு அறிந்திருந்தார். சிறந்த தமிழ்ப்பற்று மிக்கவராகவும் இருந்தமையால் பிற தமிழ்ப்புலவர்களின் நிலையினையும் அறிந்தார். எனவே இவர்தம் பாடல்களில் நாட்டில் உள்ள சமுதாயக் குறைகளும், சமயக் குறைகளும் சுட்டப்பட்டு நாட்டில் நடமிடுகின்ற போலிப் புலவர்களும் இனம் காட்டப்படுகின்றனர். இவை பற்றிப் பாடிய பாடல்களில் சில அங்கதக் குறிப்புடையனவாகத் திகழ்கின்றன.

'மிகத் தாழ்வான நிலையில் பிறந்தவன் தலைமை அதிகாரியாக வந்தால் எப்பொழுதும் கள் குடிப்போரிடமும், இலஞ்சம் வாங்குவோரிடமும், மானக்கேடு பெறுவோரிடமும் அதிகாரத்தைத் தந்து விடுவான். அறிவில் சிறந்தவர்களை வேலையை விட்டு நீக்கித் துன்புறுத்துவான்' என்று கூறும் பாடலில்,

தலைமையதிகாரி நற்குடிப்பிறந்தவனாக இல்லாவிட்டால் ஏற்படும் நிலையினை வெளிப்படுத்துகிறார்.

இப்பாடல் மூலம் வேதநாயகம் பிள்ளை காலத்திலும் தலைமை அதிகாரிகள் தங்களுக்கு இருக்கும் அதிகாரத்தைத் தகுதியற்றவர்களுக்குத் தருவதும், தகுதியுள்ளவர்களைத் துன்புறுத்துவதும் நிகழ்ந்திருக்கிறது என்பது தெரிகிறது.

''ஞானத்திலே சிறந்தோரை எல்லாம் தள்ளி நைவிப்பானே'' என்ற வரி தகுதியுடையவர்கள் வெளித்தள்ளப்படுகின்ற நிலையைக் காட்டுவதால் அங்கதக் குறிப்புப்பட நிற்கிறது.[62]

வேதநாயகம் பிள்ளை தம் பதவியிலிருந்து ஓய்வுபெற்றவுடன் நண்பர்கள் தன்னைத் தேடி வராமல் இருந்ததைக் காட்டும் பாடலில் அங்கதக் குறிப்பு இருக்கக் காணலாம்.

'குற்றங்கலந்த பதவி இப்போது என்ன விட்டுப்போய்விட்டது. நான் ஞானம், ஒழுக்கம், நல்ல தன்மை இவற்றோடுதான் இருக்கிறேன். பேசுவதற்கு என்னிடம் நரக்கும் இருக்கிறது. என்னுடன் பழகிய பழைய நண்பரும் இருக்கிறார்கள். அவர்கள் நடந்து என்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வீட்டிற்கு வர அவர்களுக்குக் கால்களும் உள்ளன. நம் வீட்டு வாசல் கதவும் திறந்துதானிருக்கிறது. அந்நபர்கள் வராமல் இருப்பதற்குக் காரணம் என்னவோ?' என்ற இப்பாடலில் முன்பு பொலவே அனைத்தும் இருந்தாலும்கூடப் பதவி போய்விட்டால் எவரும் அருகில் வருவதில்லை என்பதைக் காட்டுகிறார். தான் வகிக்கும் பதவியின் மூலம் பலன்கள் பெறத்தான் வருகிறார்களே தவிர, உண்மையான நட்புடன் எவரும் பழகுவதில்லை என்று இச்சமுதாய நிலையை விளக்குவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

''தோமிருந்த தொழிலொன்றே தொலைந்ததன்றி
அறிவொழுக்கம் சுகங்களோடு
நாமிருந்தோம்உரை யாடநாவும் இருந்தது
பழைய நட்பினோடும்
தாமிருந் தார்அவர் நடக்கத் தாளும்இருந்தன
நிதமும்தடை ஒன்றின்றித்
தேமிருந்த நம்வீடு திறந்திருந்தும் அவர்
வாராச் செய்கை என்னே''

என்பது பாடல்.[63]

திருவாவடுதுறை சுப்பிரமணிய தேசிகரை நோக்கி வேதநாயகம் பிள்ளை பாடிய ஒரு பாடலில்,

'ஆணவம், கன்மம், மாயை என்ற மூவகைப் பாசங்களாகிய வியாதியைத் தொலைப்பதற்கு உள்ள சுப்பிரமணிய தேசிகரே! இலக்கண நூலில் மெய்யெழுத்துக்கு அரைமாத்திரை என்று உள்ளது. இங்கும் இவ்வுடம்புக்கும் — மெய்க்கும் வேண்டியது அரை மாத்திரையே. அந்த அரை மாத்திரை கூடக் கிடைக்காமல் மிகுதியாக மலம் கழிகின்ற பேதி நோயினால் மக்கள் இறந்தார்கள். இவ்வியாதி நீங்க அருள்புரிக' என்று வேண்டுகிறார்.[64]

இப்பாடலில் ஆணவம் கன்மம் மாயை என்ற மூவகை நோய்க்கு மருந்து தரும் சுப்பிரமணிய தேசிகரே இந்தப் பேதி நோய்க்கு மருந்து தாருங்கள் என்பது எள்ளல்பட அங்கதமாகிறது. அடுத்து இலக்கண மெய்யெழுத்தையும், மெய்யாகிய உடலையும் காட்டி இரண்டுக்கும் தேவை அரை மாத்திரைதான் என்று நகைச்சுவைபடக் காட்டியிருப்பதும் அங்கதமே.

மேலும் இவர் சமுதாயத்தில் உள்ள பலதரப்பட்ட மக்களையும், அவர்தம் இயல்புகளையும் குறைகளையுயும் சுட்டு-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கிறார். அக்குறைகள் நீங்கினாலே சமுதாயம் பயன்பெறும் என்பதை-யும் குறிப்பாக உணர்த்துகிறார்.

ஒரு பாடலில் தாசியிடம் செல்வோர் அடையும் துன்பங்களை நகைச்சுவைபட,

''மேகங்கள் எல்லாம் உயர்ந்த ஆகாயத்திலிருந்து விலகி விலைமாதரின் உடம்புகளில் நோயாக - மேகநோயாகத் தங்கி-விட்டன. எனவே வானத்தில் ஆசையாய்ப் பார்ப்பதற்கு ஒரு மேகம் கூட இல்லை. விலைமாதர்கள் தங்களுக்குக் காசுகொடுப்பவர்களுக்கு, காசுக்குப் பதிலாக மேகநோயைக் கொடுப்பர்' என்று பாடுகிறார்.

வானத்தில் மேகங்கள் இருக்கவேண்டியது இயல்பு. ஆனால் ஆசையாகப் பார்ப்பதற்குக் கூட ஒரு மேகமும் இல்லை. ஏனெனில் அம்மேகங்கள் விலைமாதரின் உடம்புகளில் தங்கிவிட்டன என்று கூறுவது சிறந்த அங்கதமாகும்.

விலைமாதர்கள் தாம்பெறும் காசுக்குப் பதில் மேகநோயைத் தருவர் என்று நகைச்சுவைபட ஆடவர் அடையும் நோயினை எடுத்துக் காட்டுகிறார்.

''மேகங்கள் யாவும்உயர் விண்நீங்கி வேசையர்தம்
தேகங்களில்வாசம் செய்கையான் - மாகமிசை
ஆசைக்கும் கார்காணோம் அவ்வேசை யர்கொடுப்பர்
காசைக் கொடுப்பவர்க்குக் காண்''

என்பது இப்பாடல்.[65]

மற்றொரு பாடலில், சவுளி விற்பவரைப் பழித்து வேதநாயகம் பிள்ளை,

'உடுத்திக் களைந்த கந்தல் துணியைப் புதிய துணி என்று விற்பார்கள். கடனாக வாங்கினால் கணக்குப் புத்தகத்தில் விலை-யைக் கூட்டி எழுதுவார்கள். வாங்கும் துணிக்கு உடனே பணம் கொடுத்தாலும் விலையில் ஒன்றுக்கு நூறாக வட்டியும் இலாபமும் சேர்த்து வாங்குவார்கள். அந்தச் செட்டிகளுக்குப் பயப்பட்டல்லவா நமது பரமசிவம் திக்கைய ஆடையாக உடுத்திக் கொண்டான்' என்று பாடுகிறார்.[66]

இப்பாடலில் துணி விற்பனை செய்யும் செட்டியார்கள் தங்கள் தொழிலில் எவ்வாறெல்லாம் நேர்மையற்று இருக்கிறார்கள் என்-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பதை அங்கதக் குறிப்புடன் காட்டுகிறார். ''செட்டிகட்கு அஞ்சியலவோ நம்மீசன் திகம்பரனே'' என்று கூறிச் சிவபெருமான் திசைகளையே ஆடையாக உடுத்தியிருப்பதற்குக் காரணம் செட்டியார்களிடம் கொண்ட பயமே என்று நகைச்சுவைப்படக் கூறி அவர்களின் வியாபாரத்தன்மையை இகழ்கிறார்.

மற்றொரு பாடலில், 'சந்நியாசி வேடம் கொண்டவர்களே! நீங்கள் சடைமுடி வளர்க்கக் காரணம் என்ன? கங்கையைச் சடையில் வைத்த கடவுள்போல நீங்களும் உங்கள் சடையில் பெண்ணை வைத்து மறைக்கவா? மற்றவர்கள் உங்களைக் கண்டால் ஆண்-பெண் என்ற வேறுபாடு தெரியாமல் இருப்பதற்காகவா? சடைமுடியைப் பாய்போல் விரித்துப் பெண்களோடு அதில் படுப்பதற்காகவா? எமனது பாசக்கயிறுபோலப் பிறரைச் சுற்றியிழுத்து அவரிடம் உள்ள பொருளைக் கொள்ளையடிக்கவா? அழகான பெண்களின் கால்களில் உள்ள புழுதியைத் தட்டித் துடைப்பதற்காகவா. மாயத்துறவு கொண்டிருக்கிறோமே தவிர மயிர்துறவோம் என்பதற்காகவா? எதற்காகச் சடைமுடியை வளர்க்கிறீர்கள்' என்று பொய்யான துறவிகளின் சடைமுடி பற்றி இகழ்ச்சிக் குறிப்புத் தோன்றப் பாடுகிறார் [67]

இப்பாடலில் வேதநாயகம் பிள்ளை காலத்தில் இருந்த சில போலிச் சந்நியாசிகளின் நிலை தெளிவாகப் புலப்படுத்தப்படுகிறது. துறவிகள் என்றால் முற்றும் துறந்தவர்கள் எனப்படுவர். ஆனால் வேதநாயகம் பிள்ளை காட்டும் துறவிகளோ பொய்வேடம் கொண்டவராக இருப்பதைக் காணமுடிகிறது. இத்துறவிகள் பெண்ணின்பம் ஒன்றே குறிக்கோளாகக் கொண்டிருக்கவேண்டும் என்பதை இப்பாடல் மூலம் நன்கு அறியமுடிகிறது. துறவிகளின் சடைமுடியைப் பழித்து அதன் உண்மையான பெருமையை இழந்திருப்பதாகக் காட்டுவதில் அங்கதக் குறிப்பு வெளிப்படுகிறது.

மற்றொரு பாடலில், 'வேதம் ஓதுகின்ற வாயினை உடையவர்கள் அந்தணர்கள். அவர்கள் ஆடுமாடுகளை அடித்து அவித்து உண்ணும் பழக்கத்தை மேற்கொண்டனர். மது அருந்தும் பழக்கத்தையும் கொண்டவர்கள் ஆயினர். இவ்வாறு கெட்ட புத்தி உடையவர்கள் ஆனார்கள். அதனால்தான் இவர்களைப் படைத்த பிரமனின் ஒரு தலையைச் சிவபெருமான் கிள்ளி எறிந்துவிட்டார்' என்று பாடுகிறார். [68]

இப்பாடலில் அந்தணர்கள் எவ்வாறு தம் உயர்நிலையிலிருந்து தாழ்ந்துவிட்டனர் என்பதைக் காட்டுகிறார். அந்தணர்கள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஊன் உண்ணாதிருத்தல், மது அருந்தாதிருத்தல் போன்ற நற்-பழக்கங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பது அக்கால மர-பாக இருந்திருக்கிறது. அந்தணர்கள் தம் நிலையிலிருந்து மாறி-யதற்கு அவர்கள் தண்டனை பெறாமல் அவர்களைப் படைத்த பிரமன் பெற்றான் என்று கூறுவதன் மூலம் நகைச்சுவையுடன் இவர்கள் பழக்கத்தை இகழ்ந்திருப்பதைக் காணலாம்.

மாமிசம் உண்ணும் அந்தணர்களைப் பழித்து மற்றொரு பாடலில்,

'மாமிசம் சாப்பிடும் பிராமணர்களுக்குப் பயந்து சிவ-பெருமான் மானைத் தன் கையில் வைத்துக்கொண்டார். கோழியை முருகன் தனது கொடியாக எடுத்துக் கொண்டான். மீனை மன்மதன் தன் கொடியாகஆக்கிக் கொண்டான். ஆடு தன் தலையைத் தூக்கி நிற்க ஆறுமுகக்கடவுள் அதன்மேல் ஏறித் தனது வாகனமாக்கிக் கொண்டார்' என்று பாடுகிறார். [69]

இப்பாடலிலும் அந்தணர்கள் புலால் உண்பதைப் பழித்-துரைக்கக் காணலாம். எனவே வேதநாயகம் பிள்ளை காலத்தில் பிராமணர்கள் மாமிசம் உண்டிருக்கக்கூடும். அதனைக் கண்ணுற்ற வேதநாயகம்பிள்ளை மனம் வருந்தி உயர்நிலையில் இருக்க வேண்டிய அந்தணர்கள் இவ்வாறு தாழ்ந்து விட்டனரே என்று எண்ணி இகழ்ச்சிக் குறிப்புப்படப் பாடியிருக்கிறார் எனலாம்.

புலால் உண்ணும் பழக்கம் மக்கள் மத்தியில் பெருகியதைக் கண்ட வேதநாயகம் பிள்ளை மனம் நொந்து மக்களுக்கு உண-வாகும் விலங்குகள் எல்லாம் பயந்துகொண்டு இறைவனைத் தஞ்சம் அடைந்துவிட்டன என்று நகைச்சுவைபட,

'கள்ளும் புலாலும் உண்ணும் மனிதர்களுக்குப் பயப்பட்டு மான் சிவபெருமான் கையில் ஓடிப் புகுந்து கொண்டது. ஆடும் கோழியும் முருகனிடம் தஞ்சம் அடைந்தன. மீன்கள் வானத்தில் நட்சத்திரங்களாகவும், கடல் நடுவிலும் போய் ஒளிந்து கொண்டன. கொடிய மிருகங்களும் வானில் சென்று பல ராசிகளாய் உயிர் வாழ்ந்தன' என்று பாடுகிறார். [70]

இப்பாடலின் மூலம் புலால் உண்பது கண்டிக்கப்படுவதைக் காணமுடிகிறது. விலங்குகள் அனைத்தும் மனிதர்களுக்குப் பயந்து கொண்டு, கடவுளரிடமும் வானிலும் சென்று அடைக்கலம் அடைந்து வாழ்ந்து கொண்டிருக்கின்றன என்று காட்டுவது அங்கதக் குறிப்-புடையதாகத் தோன்றுகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வேதநாயகம் பிள்ளை தம் காலத்தில் வாழ்ந்த புலவர்களின் நிலையினைக் கண்டு சிலசமயம் மனம் கொதித்திருக்கிறார். தான் இருக்க வேண்டிய நிலையினின்று தாழ்ந்த புலவர்களையும், நற்-புலமையற்றவர்களையும் இகழ்ந்திருக்கிறார்.

வேதநாயகம் பிள்ளை அரசுப்பதவியில் இருந்திருந்தாலும் முகஸ்துதியைக் கண்டித்திருக்கிறார். அத்தகைய பாடல்களையும் இவரிடம் காணலாம்.

ஒருசமயம் ஒரு புலவர் இவரிடம் வந்து 'அருமையான மலை போன்றவனே! கற்பகம் போன்ற கொடையாளியே! காளை போன்ற வலிமையுடையவனே! ஆதிசேடன் போன்ற அறிவுடையோனே!' என்று புகழ்கிறார். இதனைக் கேட்ட வேதநாயகம் பிள்ளை உடனே அப்புலவரைப் பார்த்து 'கல்லே, மரமே, மாடே, பாம்பே, மிருகமே' என்றார். உடனே அப்புலவர் வருத்தப்பட்டுக் கொண்டார். 'அப்-புலவர் கூறிய அதே வார்த்தைகளைத் திருப்பிச் சொன்னதற்கு ஏன் வருத்தப்படவேண்டும்' என்று வேதநாயகம்பிள்ளை கேட்கி-றார்.[71]

இப்பாடலில் சொற்களை வைத்துச் சிலம்பம் ஆடும் உத்தியில் அங்கதத்தைப் புகுத்தியிருப்பதைக் காணமுடிகிறது. உயர்வாகக் கூறிய அதே சொற்களைத் தாழ்ந்த பொருளைத் தரும் சொற்களாக மாற்றிக் கூறுவதால் அடையும் கோபத்தை—வருத்தத்தை—இங்குக் காட்டுகிறார்.

அருங்கிரி—கல், கற்பகம்—மரம், காளை—மாடு
அனந்தன்—பாம்பு, அரி—மிருகம்

என்று ஒரு சொல்லுக்கு உள்ள உயர்ந்த பொருளையும் சாதாரணப் பொருளையும் கொண்டு பாடல் அமைத்துப் பாடியுள்ளார். இவ்வாறு பாடுவதன் நோக்கம் புலவர்கள் மற்றவரைக் கண்டு முகஸ்துதி செய்யா திருக்கவேண்டும்; அவ்வெண்ணத்தை ஒழிக்கவேண்டும் என்று வற்புறுத்துவதற்கே. இங்ஙனம் இப்பாடலிலும் அங்கதப் பொருள் வெளிப்படக் காணலாம்.

இதேபோன்று இன்னொரு பாடலிலும் முகஸ்துதிக்குப் பொருள் வேறுபாடு கொண்டு பேசும் நிலையினையும் காணலாம்.

'நீ இந்திரன் போனறவன், நீ சந்திரன் போன்றவன் என்று சிலர் புகழ்கிறார்கள். கௌதமன் மனைவியாகிய அகலிகையைத் தந்திரமாகப் போய்ச் சேர்ந்தவன் இந்திரன். அதுபோல், பிறர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மனைவியைச் சேருபவன் நீ என்று சொல்கிறார்களா? சந்திரன் தனது குருவின் மனைவியைச்சேர்ந்தவன் என்பதுபோல நீயும் பிறர் மனைவியைச் சேர்ந்தவன் என்பதற்குச் சந்திரன் நீ என்று சொல்கிறார்களா? இவ்வாறு இருப்பதால் அவர்கள் கூறுவது புகழ்ச்சியா? அல்லது இகழ்ச்சியா?' என்று கேட்கிறார் வேதநாயகம்பிள்ளை.[72]

இந்திரன், சந்திரன் என்பது உண்மையில் அவர்கள் உயர்வைக் கூறினாலும் மேற்கூறியவாறும் பொருள் இருப்பதால் இகழ்ச்சிப் பொருள்படவும் வழியுண்டு. எனவே முகஸ்துதி செய்யவேண்டாம் என்று தன்னைப் போன்ற புலவர்களைக் கண்டிக்கிறார் வேதநாயகம் பிள்ளை. அவற்றினைச் சுட்டிக்காட்டுவதால் இப்பாடலிலும் அங்கதம் உள்ளதாகக் கொள்ளலாம்.

இன்னொரு பாடலில்,

'கர்ணனே! பொன்னனே! காமனே! என்று புகழ்ந்து பாடல் இயற்றி என் எதிரில் வந்து பொருள்கேட்கும் புலவரே! உமக்கு ஒன்றும் தாமாட்டேன். ஏனெனில் நீர் பாடிய பாடல் என்னைக் குறிக்கவில்லை. கர்ணன், காமன் போன்றோருக்கே. எனவே அவர்களிடம் சென்று பாடல் பாடிப் பொருள் பெற்றுக்கொள்க' என்கிறார்.[73]

இப்பாடலிலும் நேரடியாகப் புலவர்களை இகழ்கிறார். இயல்பான நிலையினைச் சுட்டிப் பாடாமல் புகழ்பாடும் தன்மை புலவர்களுக்கு இருப்பதைக் கண்டு மனம் குமுறுகின்ற நிலையை இப்பாடலில் காணமுடிகிறது. தானும் ஒரு புலவர் என்ற காரணத்தால் புலவர் சமுதாயம் தாழ்நிலைக்குச் செல்லக்கூடாது என்ற எண்ணம் கொண்டவராக இருப்பது காணத்தக்கது.

தம் காலத்தில் வாழ்ந்த புலவர்கள் நிலையைக் கண்டு மனம் நொந்த வேதநாயகம் பிள்ளை வெறுப்பின் எல்லைக்குச் சென்று புலவர்களைப் பார்த்து,

'நிலம் வேண்டும் என்றும், பெண்கள் வேண்டும் என்றும், பொன் வேண்டும் என்றும் ஆசைப்பட்டுக் கீழ் மக்களைக் கற்பகமரம் என்றும், அரசன் என்றும் புகழ்கிறீர்களே! பரிசு தாருங்கள் என்று கேட்கிறீர்களே! எப்பொழுதும் தூய்மையான, நன்மை செய்கின்ற ஒரு மெய்ப்பொருளைத் தெய்வமே என்றும் அரசனே என்றும் புகழ்ந்து, காப்பாற்றியருளுங்கள் என்று கேட்டு கவிதை இயற்றுவீர்களா?' என்று கேட்கிறார்.[74]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வேதநாயகம் பிள்ளை கவிஞர்களின் இழிநிலையினை – மண், பெண், பொன்னுக்காக எப்படி வேண்டுமானாலும் பாடும் நிலையினை இழித்துப் பேசுவதால் இப்பாடலில் அங்கதக் குறிப்புக் காணப்படுகிறது.

பெயர் தெரியாத புலவர்கள் பாடிய பாடல்களில் அங்கதம்

பல தனிப்பாடல்கள் யாரால் பாடப்பட்டன என்று தெரியவில்லை. கழகவெளியீடாக வெளிவந்துள்ள ஐந்து தனிப்பாடல் திரட்டுத் தொகுதிகளில், இத்தகைய பாடல்களைத் தனியே தொகுத்துப் 'பலபுலவர்கள் பாடியவை' என்று வெளியிட்டிருக்கிறார்கள். அத்தகைய பாடல்களில் மூன்று பாடல்கள் மட்டுமே அங்கதக் குறிப்புடையனவாக உள்ளன.

ஒரு பாடல், தன்னிடத்தில் மிகுதியாக அன்பு வைத்திருந்த விலைமகளைப் பேதப்படுத்தியவர்களைக் குறித்து ஒரு புலவர் பழனியாண்டவரிடம் முறையிட்டுப் பாடுவதாக உள்ளது.

'தென்பழநியில் இருக்கும் முருகப்பெருமானே! என்மீது மிகுதியான அன்பினை ஒரு பரத்தை வைத்திருந்தாள். அது முழுவதையும் அழித்துவிட்டார்கள் சில பேர். அவர்கள் எல்லோரும் நன்றாக இருக்கட்டும்' என்பது அப்பாடல்.[75]

இப்பாடலில் ''எல்லோரும் நன்றாக இருக்கட்டும்'' என்பது குறிப்பாக எதிர்மறைப் பொருளைத் தந்து அழிந்தொழியவேண்டும் என்ற பொருள்படப் பாடுகிறார். தம்மீது அன்பு செலுத்தியவர்களைப் பிரித்தவர்கள் இறக்கட்டும் என்று குறிப்பாக வசைபாடுவதால் இது அங்கதப் பாடலாகிறது.

''எல்லாரும் நன்றா யிருக்கட்டும் மேதினியில்
வில்லாரும் தென்பழநி வேலோனே—பொல்லாத
பாதகப் பரத்தைவைத்த பாசம்மெத்த முற்றும் அத்தைப்
பேதகப்ப டுத்திவிட்ட பேர்''

என்பது அப்பாடல்.

மற்றொரு பாடல், 'முப்பத்திரண்டு பற்களையும் திறந்து காட்டிச் செந்தமிழ்ப் பாடல்களை இயற்றிப் பாடினாலும் இப்பூமியில் உள்ளோர் தம் தலையினை உயர்த்தி அப்பாடல்களைக் கவனமாகக் கேட்பார்கள்; மிகவும் நன்றாக இருக்கிறது என்று புகழ்வார்கள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆனால் பாட்டியற்றிய புலவருக்குச் சுண்ணாம்பு இருந்த இலையைக் கூடத் தரமாட்டார்கள்' என்று பாடுவதாக அமைந்துள்ளது.[76]

இப்பாடலில் மக்கள் கருமித்தனம் நன்கு வெளிக்காட்டப்பட்டுள்ளது. நல்ல புலவர்களும் தம் பாடல்களைப் பாடி வரும்பொழுது தம் பற்கள் அனைத்தும் வெளியே தெரியும்படி வரவேண்டுமாம். அதாவது அவர்களைக் கண்டு பணிந்து வணங்கி வரவேண்டும். பாடலைக் கேட்டு நன்றாக உள்ளது என்பார்களே தவிரப் பொருள் எதுவும் தரமாட்டார்கள் என்று சுண்ணாம்பு இருந்த இலையைக் கூடத் தரமாட்டார்கள் என்று பாடுகிறார். இக்குறிப்புக்களே அங்கதமாகின்றன.

இன்னொரு பாடலில் மக்களுக்கு உள்ள கவலைகளைப் பற்றிப் பாடுகிறார் ஒரு புலவர்.

'கவலை என்பது அனைவருக்கும் உண்டு. ஒவ்வொருவருக்கும் ஒரு கவலை. பாலுக்குச் சர்க்கரை இல்லை என்பாருக்கும் கவலை. சோறில்லாத கூழுக்குப் போட உப்பில்லை என்பாருக்கும் கவலை. முள்குத்தும் காலுக்குச் செருப்பில்லை என்பாருக்கும் கவலை. பொன்னால் ஆன கட்டிலின் மீது விரிப்பதற்குப் பஞ்சு மெத்தை இல்லை என்பாருக்கும் கவலை. இக்கவலைகள் எல்லாம் ஒன்றே' என்று கவலைகளைப் பற்றிப் பாடுவதில் ஒவ்வொருவருக்கும் உள்ள கவலைகளைக் காட்டுகிறார்.[77] இதில் ''கனக தண்டி மேலுக்குப் பஞ்சனையில்லை என்பார்க்கும் விசனமொன்றே'' என்ற அடி அங்கதக் குறிப்புடையது.

ஆய்வு முடிவுகள்

காளமேகப் புலவர் பொருள் பெறுவது தொடர்பாகவும், காலம் தாழ்த்தி உணவளித்தல், நீர் கலந்த மோர் தருதல், எச்சிற்சோறு தம்மீது படுதல் போன்ற சூழல்களிலும் அங்கதப் பாடல்கள் பாடியுள்ளார்.

தாசியரை இகழ்ந்து, அவர்களது குரல், அழகின்மை, அறிவின்மை ஆகியவற்றைக் கேலி செய்து பாடக் காண்கிறோம்.

புலவர்களைக் கேலி செய்தும், கடவுளரைக் கேலி செய்தும் பாடும் நிலையும் காணப்படுகிறது.

இவர் கோபம் கொண்டு சபித்துப் பாடுவதும் காணப்படுகிறது. இவை தவிர, வணிகர் முதலானோர் குறையினையும் பாடுகிறார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இவ்வாறு காளமேகப் புலவர் மிகச் சிறந்த அங்கதப் புலவராகச் சிறப்-பிடம் பெறுகிறார் எனலாம்.

ஔவையாரும் பொருள் பெறுவது தொடர்பாகவும், பிற புலவர்களை இகழ்ந்தும், இறைவனை இகழ்ந்தும் அங்கத முறை-யில் பாடக் காண்கிறோம்.

பெரும்பாலும் போலிப் புலவர்களைச் சாடும் நிலை இக்-காலப் பொதுப்போக்காகக் காணப்படுகிறது. புலவர்களுக்கிடையே போட்டியும் பொறாமையும் நிலவி வந்தமை இதற்குக் காரணம் எனலாம்.

முத்துச்சுப்பையர் என்பவர் அக்காலச் சமுதாயச் சீர்கேடு-களைச் சிறப்பான முறையில் அங்கதக் குறிப்புடன் பாடக் காண்-கிறோம்.

வேதநாயகம் பிள்ளை அரசியல், அதிகாரிகள், வணிகர், தாசியர், துறவியர், அந்தணர், புலால் உண்போர், புலவர்கள், பொருள்கொடா வள்ளல்கள் என்று பற்பல சூழல்களில் அங்கதச் சுவைபடப்பாடக் காண்கிறோம்.

பொதுவாக இக்காலகட்ட இயல்பினை நோக்கும்போது சங்க காலத்தைப் போலப் புலவர்களைப் போற்றிப் பரிசு தரும் நிலை காணப்படவில்லை எனத் தெரிகிறது. அதுபோலவே புலவர்களி-டையே பெருமித உணர்வும் குன்றியே அமைந்துள்ளது. எனவே-தான், பொருள்கொடாதோரை வசைபாடும் நிலை பெருகிக் காணப்படுகிறது.

சமுதாயச் சீர்கேடுகளைச் சாடும் நிலை புதிய வளர்ச்சி-யாகத் தோன்றுகிறது.

தங்களுக்குக் கோபம் வந்தபொழுதெல்லாம் தனிப்பட்ட நிலையிலும் புலவர்கள் வசைபாடுவது குறிக்கத்தக்க செய்தியாகும். அவ்வாறு வசைபாடி இயற்கை இறந்த நிகழ்ச்சிகளை நிகழ்த்தி-யிருப்பதாகக் கூறப்படுவது குறிக்கத் தக்கது.

சமயமும் இக்கால கட்டத்தில் சாடப்படுவது குறிக்கத்தக்க செய்தியாகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பொதுவாக, வள்ளல்கள், புலவர்கள், வணிகர்கள், பரத்தையர் ஆகிய பலதரப்பட்ட மக்கள் தரம் தாழ்ந்துவிட்ட நிலையை இப்-பாடல்கள் வெளிக்காட்டுகின்றன.

இப்பாடல்களில் நகைச்சுவை உணர்வையோ, திருத்தும் நோக்கத்தையோ அதிகம் காணமுடியவில்லை. மாறாக, சினம் கொண்டு பேசும் நிலையையே பெரிதும் காணமுடிகிறது. இது இக்காலகட்டத்து அங்கதப் பாடல்களின் பொதுப் போக்கு எனலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குறிப்புக்கள்

1. தனிப்பாடல் திரட்டு — முதல பகுதி (கழகப்பதிப்பு), பா. 511 ப. 120.
2. தனிப்பாடல் திரட்டு — முதல்பாகம்(கா.சு. பிள்ளை), பா. 174, ப. 175.
3. மேலது, பா. 67, ப. 129.
4. தனிப்பாடல் திரட்டு — முதல்பாகம் (கா. சு. பிள்ளை), பா. 67 ப. 129.
5. மேலது, பா. 184, ப. 180.
6. மேலது, பா. 63, ப. 127.
7. மேலது, பா. 187, ப. 182
8. மேலது, பா. 117, ப. 150.
9. மேலது, பா. 124, ப. 152.
10. நந்திக்கலம்பகம், பா. 106. பா. 242.
11. தனிப்பாடல் திரட்டு — முதல்பகுதி (கழப்பதிப்பு), பா. 186, ப. 181.
12. மேலது, பா. 65, ப. 128.
13. மேலது, பா. 123, ப. 152.
14. மேலது, பா. 146, ப. 161.
15. மேலது, பா. 177, ப. 176.
16. மேலது, பா. 148, ப. 162.
17. மேலது, பா. 149, ப. 162
18. மேலது, பா. 79, ப. 134.
19. மேலது, பா. 78, ப. 134.
20. மேலது, பா. 122, ப. 152.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

21. மேலது, பா. 133, ப. 156.

22. மேலது, பா. 36, ப. 17.

23. தனிப்பாடல் திரட்டு—முதல் பகுதி (கழகப்பதிப்பு), பா. 37, ப. 18.

24. மேலது, பா. 69, ப. 32.

25. மேலது, பா. 17, ப. 10.

26. மேலது, பா. 3, ப. 4.

27. மேலது, பா. 4, ப. 4.

28. மேலது, பா. 13, ப. 8.

29. தமிழ்ப்புலவர் அகராதி, ப. 12.

30. தனிப்பாடல் திரட்டு-இரண்டாம் பகுதி, (கழகப்பதிப்பு), பா. 30, ப. 12

31. தனிப்பாடல் திரட்டு—முதல் பாகம், (கா. சு. பிள்ளை), பா. 1, ப. 218

32. தமிழ்ப்புலவர் அகராதி, ப. 45.

33. தனிப்பாடல் திரட்டு—முதல் பாகம், (கா. சு. பிள்ளை), பா. 12 ப. 202.

34. தனிப்பாடல் திரட்டு—முதல்பகுதி, (கழகப்பதிப்பு), பா. 581, ப. 205

35. மேலது, பா. 24, ப. 419

36. மேலது, பா. 20, ப. 417.

37. மேலது, பா, 18, ப. 415.

38. தமிழ்ப்புலவர் அகராதி, ப. 79.

39. புறம், 221, 237, 238, 240.

40. தனிப்பாடல் திரட்டு—முதல்பாகம், (கா.சு. பிள்ளை), பா. 9, ப. 190,

41. மேலது, பா. 43, ப. 86.

42. மேலது, பா. 15, ப. 75.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

43. தனிப்பாடல் திரட்டு—நான்காம் பகுதி, (கழகப்பதிப்பு), பா. 181, ப. 106.

44. தனிப்பாடல் திரட்டு—ஐந்தாம் பகுதி, (கழகப்பதிப்பு), பா.49, ப.25.

45. மேலது, பா.50, ப.23.

46. மேலது, பா.48, ப.22.

47. மேலது, நான்காம் பகுதி (கழகப்பதிப்பு), பா.150, ப.83.

48. தனிப்பாடல் திரட்டு—முதல்பாகம், (கா.சு.பிள்ளை), பா.7, ப.213.

49. தனிப்பாடல் திரட்டு—நான்காம் பகுதி, (கழகப்பதிப்பு), பா.345, ப.193.

50. மேலது, பா.323, ப.185.

51. மேலது, பா.320, ப.183.

52. தனிப்பாடல் திரட்டு—முதல்பகுதி, (கழகப்பதிப்பு), பா.154, ப.55.

53. தனிப்பாடல் திரட்டு—முதல்பாகம், (கா.சு.பிள்ளை), பா.21, ப.237.

54. தனிப்பாடல் திரட்டு—முதல்பகுதி, (கழகப்பதிப்பு), பா.694, ப.259.

55. மேலது, பா.782, ப.295.

56. மேலது, பா.529, ப.188.

57. தனிச்செய்யுட் சிந்தாமணி, பா.4, ப.376.

58. தனிப்பாடல் திரட்டு—மூன்றாம் பகுதி, (கழகப்பதிப்பு), பா.27, ப.14.

59. தனிப்பாடல் திரட்டு—முதல்பாகம், (கா.சு.பிள்ளை) பா.3, ப.317.

60. தனிப்பாடல் திரட்டு—இரண்டாம் பகுதி, (கழகப்பதிப்பு), பா.139, ப.53.

61. மேலது, பா. 1—6, பக்.98, 100.

62. தனிப்பாடல் திரட்டு—இரண்டாம் பாகம், (கா.சு.பிள்ளை), பா.4, ப.111.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

63. தனிப்பாடல் திரட்டு – இரண்டாம் பாகம், (கா. சு. பிள்ளை), பா. 7, ப. 112.

64. மேலது, பா. 18, ப. 117.

65. மேலது, பா. 23, ப. 119.

66. மேலது, பா. 24, ப. 119.

67. மேலது, பா. 25, ப. 120.

68. மேலது, பா. 26, ப. 121.

69. மேலது, பா. 29. ப. 122.

70. மேலது, பா. 27, ப. 121.

71. மேலது, பா. 30, ப. 122.

72. மேலது, பா. 31, ப. 123.

73. மேலது, பா. 32, ப. 123.

74. மேலது, பா. 33, ப. 124.

75. தனிப்பாடல் திரட்டு – ஐந்தாம் பகுதி, (கழகப்பதிப்பு), பா. 309, ப. 144.

76. தனிப்பாடல் திரட்டு - இரண்டாம் பகுதி (கழகப்பதிப்பு), பா. 246, ப. 311.

77. மேலது, பா, 340, ப. 349.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

5. இக்காலக் கவிதைகளில் அங்கதம்

முன்னுரை

இக்கால இலக்கியம் பெரும்பாலும் முந்தைய நூற்றாண்டு களின் பழமைப் பிடியிலிருந்து விடுபட்டுப் புதிய வளர்ச்சியை மேற் கொண்டிருக்கிறது எனலாம். சிற்றிலக்கியங்களில் வள்ளல்களையும், சமீன்தார்களையும் துதி பாடிவந்த நிலைமாறி, நாட்டையும் சமுதா யத்தையும் பாடுபொருளாக்கிப் பாடும் நிலை உருவாகியது. மேலும் இந்திய நாட்டில் இக்காலகட்டத்தில் விடுதலைப் போராட்ட உணர்வு காட்டுத்தீபோல் எங்கும் கனன்று கொண்டிருந்தது. சாதி ஒழிப்பு, பெண் விடுதலை, விதவை மறுவாழ்வு, பொருளாதார ஏற்றத்தாழ்வைப் போக்குதல் போன்ற சமூக சீர்திருத்தக் கோட்பாடு கள் தோன்றலாயின. பல்வேறு வகையில் மாற்றமும் எழுச்சியும் கொண்டது போலவே, இலக்கியத்திலும் இந்நூற்றாண்டு புதிய மாற்றங்களையும், புதிய உணர்வுகளையும் பெற்றது. சிற்றிலக்கிய வடிவம் மாறித் தனிநிலைப் பாடல்கள் பெருகின. நாடு அடிமைப் பட்ட நிலையையும், சமுதாயம் சீர்கெட்ட நிலையையும் கவிஞர்கள் தம் கவிதைகளில் சுட்டிக்காட்டுவதற்கு அங்கதம் என்ற இலக்கிய உத்தியை மிக அழுத்தமாகவும். அதிகமாகவும் பயன்படுத்தினர்.

விடுதலை பெறுவதற்கு முன்பு விடுதலை உணர்வும், சமுதாய உணர்வும் இணைந்திருந்தன. விடுதலைக்குப் பிறகு சமுதாய உணர்வு மட்டுமே மேலோங்கியிருந்தது. எனவே இக்கால இலக்கியங்களில் ஏனையக்கால கட்டத்தைக் காட்டிலும் அங்கத உத்தி அதிகமாகக் கையாளப்பட்டது அதிலும் இக்கால மரபுக் கவிஞர்களைக் காட்டி லும் விடுதலைக்குப் பிறகு, சிறப்பிடம் பெற்ற புதுக்கவிஞர்களிடம் இவ்வுத்தி மேலோங்கியிருக்கக் காணலாம். விடுதலை பெற்றால் துன் பங்கள் தொலையும் என்று நம்பியிருந்த மக்களிடையே விடுதலை பெற்ற பிறகும் அந்நிலை மாறாதது நம்பிக்கையின்மையை ஏற்– படுத்தியது. மேலும் விடுதலைக்குப் போராடும் தேசியவாதிகள் அரசி யலிலிருந்தும், ஆட்சிபீடத்திலிருந்தும் நீங்க அவர்களுக்குப் பதில் மக்களாட்சி என்ற முறையில் பலரும் அரசியலிலும், ஆட்சியிலும் இடம் பிடிக்கத் தொடங்கினர். பின்னர் அரசியல்வாதி என்ற ஒரு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தனி இனம் மக்கள் மத்தியில் தோன்றிச் சமுதாய வாழ்வில் பெரும் பகுதியைத் தன்வயப்படுத்தியது. எனவே அரசியல்வாதியைச் சாடுகின்ற அங்கதப்போக்கு இக்காலகட்டத்தில் கவிஞர்களிடையே காணப்பட்டது.

இக்காலக் கவிதைகளில் மரபுவழியில் பாடப்பட்ட கவிதைகளைக் காட்டிலும் புதுக்கவிதைகளில் அங்கதம் பேரிடம் பெறுவதோடு அழுத்தமும் கூர்மையும் பெற்று விளங்கக் காணலாம்.

இக்காலக் கவிஞர்களை அனைவரையும் ஒட்டுமொத்தமாகக் காணமுற்படின் ஆய்வின் எல்லை மிகவும் பரந்துபட்டதாகிவிடும். பத்தொன்பதாம் நூற்றாண்டு இலக்கியங்களுள் ஒன்றாக, சிவகங்கைச் சமீன்தாரான துரைசிங்கத்தேவர் மீது சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றான 'திருமுகவிலாசம்' என்னும் அமைப்பில் பாடப்பட்ட நூல் ஒன்று அமைந்துள்ளது. அது பாட்டுடைத் தலைவனது புகழைப் பாடுவதைவிட, அக்காலத்தில் ஏற்பட்ட பஞ்சத்தின் பயனாகச் சமுதாயத்தில் விளைந்த சீர்கேடுகள் பலவற்றை அங்கத முறையில் எடுத்துரைப்பதையே நோக்கமாகக் கொண்டுள்ளது எனலாம். 'பஞ்சலக்ஷ்மணத் திருமுக விலாசம்' எனும் பெயரிய நூலில் மிகச்சிறந்த அங்கத அமைப்பினைக் காணமுடிகிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டு இலக்கியங்களில் இந்நூல் ஒன்றே அங்கதச் சுவைபட அமைந்திருப்பது குறிக்கத்தக்கது.

இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர் வரிசையில் மரபுவழிப்பட்ட கவிஞர் மூவரையும், புதுக்கவிதை வரிசையில் ஐவரையும் இப்பகுதி ஆராய எடுத்துக்கொள்கிறது. இருபதாம் நூற்றாண்டு மரபுவழிக் கவிஞர்களுள் முதலிடம் வகிக்கின்ற பாரதியார், பாரதிதாசன், கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை ஆகியோர் இடம்பெறுகின்றனர். புதுக்கவிஞர் வரிசையில் அங்கதத்தை ஓரளவு அதிகமாகப் பயன்படுத்திப் புகழ்பெற்ற கவிஞர் வரிசையில் புதுமைப்பித்தன், மீரா, வாலி, மேத்தா, வைரமுத்து ஆகிய ஐவரின் கவிதைகள் ஆராயப்படுகின்றன.

என்வே, பத்தொன்பதாம் நூற்றாண்டில் அங்கதக் குறிப்புக்கள் நிறைந்திருந்த நூலாகக் கருதப்பட்ட 'பஞ்சலக்ஷ்மணத் திருமுக விலாசம்' முதலிலும், அதனையடுத்து இருபதாம் நூற்றாண்டு இலக்கியம் கவிஞர் வாரியாகவும் ஆராயப்படுகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

(அ) பஞ்சலக்ஷ்ணத் திருமுகவிலாசத்தில் அங்கதம்

இந்நூலை இயற்றிய வில்லியப்பபிள்ளை பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், அதன் பின்னர் சிலகாலமும் வாழ்ந்த புலவர், இவர் சிவகெங்கைக்கருகே உள்ள பிரமனூரில் அய்யம்-பெருமாள் பிள்ளையின் மகனாகப் பிறந்தார். இவர் அங்கு மிராசுக்-கணக்கராக இருந்ததோடு, சிவகெங்கைச் சமீனில் புலவராகவும் இருந்தவர். இவர் இயற்றியதே 'உலகரகசிய வெளிப்படையென்னும் பஞ்சலக்ஷ்ணத் திருமுகவிலாசம்' என்னும் நூலாகும்.

இயற்றிய நூலும் பெயர்க்காரணமும்

1876ஆம் ஆண்டு தமிழகத்தில் கடும் பஞ்சம் ஏற்பட்டது. அப்பஞ்சம் தமிழ் தாது ஆண்டில் ஏற்பட்டதால் 'தாது வருஷப்-பஞ்சம்' என்றழைப்பர். வில்லியப்பபிள்ளை இத்தாது வருடப் பஞ்சத்தைக் கருப்பொருளாகக் கொண்டு 'பஞ்சலக்ஷ்ணத் திருமுக விலாசம்' என்னும் ஒருநூல் எழுதினார். சிவகெங்கை சமீன்தாராக விளங்கிய துரைசிங்கத் தேவரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு இப்பாடலை எழுதியுள்ளார். பஞ்சத்தினை அடிப்படையாகக் கொண்டு எழுந்த இந்நூல் ''உலக ரகசிய வெளிப்படையென்னும் பஞ்சலக்ஷ்ணத் திருமுகவிலாசம்'' என்ற பெயருடன் அழைக்கப்-படுகிறது. 'பசி வந்தால் பத்தும் பறந்துபோம்' என்ற பழமொழிப்-படி, பஞ்சம் வந்த காரணத்தினால் மக்களின் நாணயம், ஒழுக்கம், சிதைந்து போகும் தன்மையை இந்நூலில் வில்லியப்பபிள்ளை வெளிப்-படுத்தியுள்ளார். கலிவெண்பாவால் ஆன இந்நூல் 2302 கண்ணிகளைக் கொண்டு விளங்குகிறது.

''தூதுப்பிரபந்தத்தில் புலவன் எப்படி தான் தூதுவிடும் விறலியிடமோ, பறவையிடமோ, வேறு பொருளிடமோ தனது வரலாற்றைக் கூறித் தூது விடுகிறானோ, அதுபோன்று திருமுக-விலாசம் என்ற இந்தப் பிரபந்தம் பஞ்சத்தால் வாடும் மக்கள் சோமசுந்தரக் கடவுளிடம் தமது குறையை முறையிட்டு, அவரிட-மிருந்து சிவகெங்கை சமீன்தாருக்கு ஒரு சிபாரிசுக் கடிதம் வாங்கி-வந்து கொடுப்பதாகப்பாடுகிறது. கடிதத்தை வாங்கிவந்து கொடுக்-கும் மரபைப் பிரதிபலிப்பதால் இதற்குத் திருமுக விலாசம் எனப்-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

 Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெயர் வைக்கப்பெற்றுள்ளது'' என்று நூலின் பெயர்க்காரணத்தைக் காட்டுவார் ரகுநாதன். 1

கதைச்சுருக்கம்

தாது வருடம் பிறக்கிறது. அப்பொழுது கிரகக்கோள்கள் நிலைமாறியமையால் எங்கும் மழையில்லை. கால்நடைகள் பெரிதும் துன்புறுகின்றன. மக்கள் மழை வேண்டிக் கடவுளை வழிபடுகின்றனர். கையிலிருந்த விதைகளை நிலத்தில் விதைக்கின்றனர். மழை பொழியாமையால் அவ்விதைகளும் அழிந்துவிடுகின்றன. வாங்குவோர் இல்லாமையாலும், வாங்கும் சக்தி குறைந்தமையாலும் பொருள்கள் மலிவாகின்றன. இருப்பினும் தங்களிடமிருந்த உடைமைகளை விற்று வாழ்கின்றனர். கிடைப்பதை எல்லாம் உண்ணும் நிலையும் ஏற்படுகிறது. அரசினர் 'கஞ்சித்தொட்டி' வைக்கிறார்கள். மக்கள் பிழைப்புக்காகக கண்மாய் ஆழப்படுத்தும் பணியைத் தொடங்குகின்றனர். ஏழை எளியோர் அப்பணியில் ஈடுபடுகின்றனர். ஆனால் வேலைசெய்ய மனமில்லாதவர்கள் ஏமாற்று வேலையில் ஈடுபட்டு, பிறரை ஏய்த்துப் பிழைக்கிறார்கள். காசுக்கடைக்காரர், ஜவுளிக்கடைக்காரர், பொற்கொல்லர், வேசியர் ஆகியோர் மோசடியில் ஈடுபடுகின்றனர். பிழைப்புக்கு வழியின்றிச் சிலர் வைத்தியன், சாமியார், கோடாங்கி, சோதிடன், புலவன் எனப் பொய்வேடமிட்டு இழிதொழில் புரிகின்றனர். குடும்பச் சண்டைகளும் மாமியார் மருமகள் சண்டைகளும் அதிகமாகின்றன. மிகவும் துன்பமடைந்த மக்கள் இறுதியில் சோமசுந்தரக் கடவுளிடம் முறையிடுகின்றனர். கடவுள் தனது இயலாத்தன்மையினையும், பிற கடவுளரின் இயலாததன்மையினையும் எடுத்துக்காட்டி, பரட்டுடைத் தலைவரான துரைச்சிங்கத்தேவருக்கு ஒரு திருமுகம் அளிக்கிறார். அத்திருமுகத்தை எடுத்துச்சென்று ஜமீன்தாரிடம் அளிக்கின்றனர். அவர் திருமுக விலாசத்தைப் பாடிய புலவருக்கும் மக்களுக்கும் பரிசுகள் கொடுத்து, வறுமையினைப் போக்குகிறார்; மழையும் பொழிந்து வறுமை நீங்குகிறது.

சமுதாயத்தில் காணப்பட்ட ஊழல்கள்

பஞ்சத்தையும், அதன் விளைவுகளையும் கதையமைப்பாகக் கொண்ட இந்நூலில், சமுதாயத்தின் ஊழல்களை ஆராய்ந்து அவற்றைக் குத்தலான முறையில், புலவர் நையாண்டி செய்திருப்பதைக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காணமுடிகிறது. தமிழில் நையாண்டி முறையில் அமைந்த அங்கத நூலாக இதனைக் கொள்ளலாம். ''நம் நாட்டில் நையாண்டி இலக்கியம் எதுவுமே தோன்றவில்லை. அந்த சேவையில் பஞ்சலக்ஷ்ணம் தான் முதல் நூலாக விளங்குகிறது. ஹாஸ்ய ரசத்திலும் பஞ்சலட்சணத்தின் பக்கம் எந்தத் தமிழ்நூலும் நிற்காது என்பது என் அபிப்பிராயம். இதற்கடுத்ததாகச் சொல்லவேண்டுமானால், தேசிக விநாயகம்பிள்ளை எழுதிய நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழிமான்மியம் என்னும் நூலைத்தான் குறிப்பிடலாம்'' என்று சிதம்பர ரகுநாதன் குறிப்பிடுவதை இங்குக் குறிக்கலாம்.[2]

மழை இல்லாத காரணத்தால் பஞ்சம் தோன்றுகிறது. எங்கும் உணவு கிடைக்காத நிலை. பஞ்சத்திலிருந்து மீளமுடியுமா என்று சோதிடரை மக்கள் கேட்கின்றனர். 'நவக்கிரக தோசம் கழிந்தால் மழைபொழியும்' என்கிறான் சோதிடன்.

''அஞ்சேல் நவக்ரகத்தின் தோஷமும் இன்றோடேதுலைந்தது காண் காசினிக்கு நாளைமுதல் யோகம் நடக்குது; இனி அஞ்சாறு வேளைக்குள்ளாக மிகுந்த மழை-கோளமெங்கும் பூர்த்தியுடன் பெய்யும்; இது பொய்யாது. பொய்த்திடில் இச்சாஸ்திரத்தைக் கை தொடேன் சத்தியம்'' என்று சோதிடனின் வார்த்தையை நம்பி வானத்தைப் பார்க்கின்றனர் மக்கள்.[3] அப்பொழுது,

> ''மழைக்குறிகள் தோன்றாது—ஒடுக்கமுற்று
> நெஞ்சம் அயர்காலையில், நீள்வான் முகட்டினில் ஓர்
> பஞ்சனைய மேகம் பாவியே—தொஞ்சு
> பணியில்லார் உள்ள மெனப் பற்றின்றி, ஊழற்
> கொசுகு பறந்த குணம்போல்-பொசு பொசென்று
> தூசுபடியாமல், விழும் தூறல் கண்டு பஞ்சாங்கப்
> பூசுரர்கள் சொற்றதும் பொய்இலை''[4]

என, ஓரிரண்டு மழைத்துளிகள் பெய்து மறைந்ததைக் காட்டி, சோதிடர்கள் வார்த்தை பொய்க்கவில்லை என்று மக்கள் சோதிடத்தில் கொண்டிருந்த நம்பிக்கையும், மழை பெய்யாவிட்டாலும் சோதிடன் பொய் சொல்லவில்லை என எண்ணும் வெகுளித்தனத்தையும் ஏளனக் குறிப்போடு பாடுவது அங்கதக் குறிப்புடன் விளங்குகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பஞ்சத்தின் கொடுமையால் பணத்தட்டுப்பாடு ஏற்படுகிறது. பொருள் தருவார் இன்மையால், அங்கிருந்த வேசியர் நிலையினை அங்கதக் குறிப்புப்படக் காட்டுகிறார்.

"விப

சாரத் தொழில் புரிந்து சந்ததமும் தேடியுண்ட
சோரஸ்திரி கடனைத் துய்ப்பவர்கள் — ஆருமிலார்
ஆதலினால் அன்றோ அரிய வடமீன் நிகர்ப்ப
மேதகைய கற்புடைமை மேவினரால்"[5]

என்று வேசியர் அருந்ததி போலாயினர் என்கிறார். பொருள் தருவதற்கு இயலாத காரணத்தினால் வேசியிடம் வருவோர் யாரு-மில்லை. எனவே அவள் தனது தொழிலை நிகழ்த்த முடியவில்லை என்பதைக் கற்பிற் சிறந்தவளாகக் கருதப்படும் புராணக்கதை-மாந்தரான அந்ததிக்கு ஒப்புமை கூறிக் காட்டி இருப்பது நகைச்-சுவையுடன் கூடிய அங்கதமாக அமைகிறது எனலாம்.

வேலை எதிலும் ஈடுபட முடியாத காரணத்தாலும், பொருள் இல்லாத காரணத்தாலும் ஏமாற்றிப் பிழைக்கும் வேலையைச் செய்யத் தொடங்கும் சிலரை அங்கதக் குறிப்போடு காட்டுகிறார் வில்லியப்பபிள்ளை.

சாமியார் வேடம் தரித்து, தன்னைப்பற்றி உயர்வாக மக்களி-டம் கூறி ஊரை ஏமாற்றுவோரின் நிலையினை நையாண்டியாக எடுத்துரைப்பது அங்கதக் குறிப்புடன் விளங்குகிறது.

"சாவா அமிர்தரச சஞ்சீ வினியுடனும்
மூவா அநேக முறை பலவும் — பாவகமாய்ச்
செய்துமுடித்துளது தேர்ந்த ரசவாதமதில்
கைகண்டது இந்தக் கடுங் கழுதை — மெய்சோர்ந்து
பிள்ளையிலை என்றுவந்த பேதை மடவார் பலர்க்கும்
பிள்ளைகொடுத்த திந்தப் பேய்மாலம் — உள்ளபடி
மைவசியத்தால் உலக மன்னவர்கள் காரியத்தைக்
கைகூடச் செய்ததும் இக்கட்டையே — வெய்யவிழி
கூன் அதிர்ச்சி மூங்கை குரூடு பல நோய்களையும
ஞானதிருஷ்டியாலும் நலம்புரியும் — வான்முகிலை
ஐயென்றுறுக்கி அகன் காசினி செழிக்கப்
பெய்யென்னில் பெய்யும் பெருமழையே"[6]

என்றும்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"..... மீறுசெல்வம்
உற்றவரைப் பிச்சை எடுத்துண்ணவிடும்; கையில்நிதி
அற்றவரைப் லக்ஷப் பிரபு ஆக்குமே"[7]

என்றும் தன்னைப்பற்றிக் கூறும் இப்பகுதியில் சாமியார் வேடம் பூண்டு வருபவன் தன்னை அஃறிணைப் பொருளாகக் கொண்டு பேசுகிறான். 'கடுங்கழுதை', 'பேய்மாலம்', 'கட்டை' என்று தன்னைக்கூறுவதும், இரசவாத வித்தை கற்றவன்; மழைபொழியச் செய்யும் ஆற்றல் மிக்கவன்; செல்வத்தை ஆக்கவும் அழிக்கவும் செய்யும் சித்துவேலை தெரிந்தவன் என்று கூறுவதும், எதிர்மறைப் பொருளைக் குறிப்புமுரணாகத் தந்து அங்கதக் குறிப்பை உணர்த்து கிறது எனலாம்.

இதேபோன்று கோடங்கிக்காரனாக வேடமிட்டு வருபவனை யும் எள்ளல் குறிப்புடன் காட்டுவதைக் காணலாம்.

"காணிக்கைக்கு ஏதேனும் காசோ நெல்தானியமோ
பாணிப்பீர் என்ன பசப்புதலாய்—பேணி இவன்
மற்றும் உடுக்கை மெல்ல வாழ்த்தி எடுத்து அதனைச்
சற்றே தொனி கிளம்பத் தட்டியே"[8]

வரும் இக்கோடங்கிக்காரன்,

"..... .....வில்லங்கம்
மெத்த இருக்குதுஇனிமேல் இருகால் சிவனையோர்
சத்துருப்பேய் கங்குவைத்து சாடுதுபார்—இத்தைநீர்
ஆராய்ந்து தேடிஉமை ஆண்ட குலதெய்வத்தை
நேராயழைத்து நிலையறிற்று பாராமல்
சும்மா இருந்தால் சுகமுண்டோ என்றிந்த
வெம்மாயக் காரன் வெம்புளுகன் செம்மாந்து"[9]

கூறுவதில் மக்களின் மூடநம்பிக்கையைப் பயன்படுத்திப் பிழைக்கும் கோடங்கிக்காரனின் இயல்பை அங்கதக் குறிப்புடன் காட்டியிருக்கிறார்.

வைத்தியனைக் வருவோனின் இயல்புகளை அடுத்து அங்கதக் குறிப்புப் படப் பாடியிருப்பதைக் காணலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

''.....தொல்லாயுள்
வேதமென்பது இன்னவிதமென்று தானுணராப்
பேதையர் அநேகர் இந்தப் பேருலகில் மேதையுயிர்
காக்கும் மருந்து ஈவன்என்னக் கால்நோயைத்தான்
முழுநோய்
ஆக்கும் ஆசாமிகளிலாம் ஒருவன் ஊக்கமொடு
தேகமழியாப் பதினெண் சித்தர் திருவாய் மலர்ந்த
வாகட நூல் என்ற மறைமுழுதும் சேகரமாய்
கற்றுணர்ந்த பண்டிதன் நான் கைமுறை தப்பேன்[10]''

என்று தான் மிகச்சிறந்த வைத்தியன் என்று தன்வாய்ச் சாமர்த்தியத்தால் சிலர் நிறுவும் முறை இங்கு ஏளனம் செய்யப்படுவதைக் காணலாம்.

''மெல்ல அவன்
மென்கரத்தைப் பற்றி, விரல் எட்டி வாங்கி இவன்
தன் கரத்தினாலும் தடவியே — பின் குறித்த
நாடித்தலத்தில் நடுமுவிரல் பதித்து
நாடி அண்ணாந்து, நடுமுகட்டை — நேடிப்
புருவம் எழப்பார்த்து, மெலப் புன் சிரிப்புத் தோன்ற
சிரம் அசைத்து, சற்றே சிந்தித்து —...
ஏதுவைக் கண்டதுபோல் இயம்புவான்''[11]

என அவனது நடிப்பைக் காட்டுவதன் மூலம், எவ்வாறெல்லாம் ஏமாற்று வேலை செய்கிறார்கள் எனக் காட்டுகிறார்.

இதேபோன்று புலவனாக வருபவனைச் சித்திரித்துக் காட்டுவதிலும் அங்கதக் குறிப்பைக் கையாள்கிறார்.

''கல்விப் ரசங்கக் கவிராஜர் நாம்; நமது
நல்வித்தை கண்டு அயனும் நாணுவான் — பலகலை நூல்
ஆசிரியர் நம்மை அதிகப் பிரசங்கியெனப்
பேச உலகெங்கும் பெயர் பெற்றோம் — ஆசறுசீர்
விஞ்சைத் தமிழில் இவர் மெத்தப்படித்தவர் என்று
ஒஞ்சிப் புலவர் நமக் கோட்டமே''

என்று 'அதிகப்பிரசங்கி', 'மெத்தப்படித்தவன்' என்று முரண்குறிப்புப்படப் புலவனது தகுதியைச் சுட்டிக்காட்டுகிறார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வெறும் பேச்சும், போலிக்கௌரவமும் கொண்டு அலையும் நடுத்தர வர்க்கத்தினரின் நிலையை,

> ''..... திப்பியமா
> நல்லபலகார வர்க்கம் நாமருந்தோம் என்று சொல்லி
> செல்லஞ் செருக்கி நின்ற சீருடையார்—செல்லரித்த
> தூவல்புளி விதைக்கும் சோளத் தவிட்டினுக்கும்
> ஆவல்கொண்டும் கிட்டாது அலமலந்தார்-தேவரன்ன
> தென்புலத்தார் தன்திவசம் செய்யாது கண்டு இனத்தார்
> நன்குற நிந்திப்பர் என்று நாணுளராய்-முன்பகலே
> வேற்றூர் சென்று ஆங்குதிதி மேன்மையாய்ச் செய்தனென்று
> சாற்றிப் புளுகினவர்தான் அனந்தம்''[13]

என்று சுட்டிக்காட்டி நடுத்தரவர்க்கத்தினரின் போலிகௌரவத்தை வெளிக்காட்டுகிறார்.

பொருள் இருக்கின்ற காலத்தில் வேண்டாத செயலெல்லாம் செய்து, தனது பெருமையைக் காட்டிக்கொண்டவர்கள், பஞ்சகாலத்தில் உயிர் வாழ்வதற்காக புளியம் விதைக்கும், சோளத்தவிட்டுக்கும் தவித்தனர். அதேநேரத்தில் தம் போலிக்கௌரவத்தையும் விட்டுவிடாமல், தம் மூதாதையருக்குத் திவசம் கொடுக்காமலேயே கொடுத்ததாகப் பொய்கூறி, ஊரை ஏமாற்றுவதாக நினைத்துக்கொண்டு தம்மையே ஏமாற்றிக்கொண்டனர். இச்செய்கையை வெளிப்படுத்துவதன் மூலம் நடுத்தரவர்க்கத்தின் வறட்டுக்கௌரவத்தை ஆசிரியர் சரியானபடி குத்திக் காட்டுகிறார். இதேபோன்று இவர்கள் ஒரு சோற்றுப் பருக்கையைக் கஞ்சியில் தேடிப் பார்க்கும் நிலையைக் 'கஞ்சியப்பர் திருவிளையாட்டு' எனச் சிலேடை நயத்துடன் அங்கதப் படுத்திக் காட்டுவார்.

புலவர் வேடமிட்ட ஒருவன், காதிலே விளக்கிப் போட்ட கடுக்கன், கையிலே 'கில்ட்' கொடுத்த மோதிரம், தலைப்பாகையோடு ஒரு கற்றுச்சொல்லி பின்னே கைகட்டிவர, முன்னோர் பாடிய பாடல்களைத் தான் மனப்பாடம் செய்து மிகவும் பொய்கலந்து பேசுவான் என்றும், தான் பலர் மீது வசையும் அறமும் பாடியுள்ளதாகக் கூறுவான் என்றும் ஆசிரியர் காட்டி அவன் பொய்வேடத்தை வெளிப் படுத்துவார். இத்தகையோன் ஒரு சல்லிக்காசுக்கு அலையும் நிலையையும் காட்டுவார். புலவனுக்குக் கிடைத்த காலணாத் தொகையைப் பார்த்து நையாண்டியாகப் பேசுவது இங்குக் குறிக்கத்தக்கது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"..... போங்காணும்!
திட்டிபடப் போகுதுகாண்! சேலையினால் மூடியதைக்
திட்டிசுற்றி ஆங்கே செலுத்திவிடும் கட்டி எம்மூர்
செல்லும் வழிமார்க்கம் திருடர் பயமுண்டு கண்டீர்
நல்ல துணைகூட்டி நமை அனுப்பும்"[14]

என்று 'காலணாக் காசைக்கொண்டு செல்ல நல்ல துணைவேண்டும். ஏனெனில் வழியில் திருடர் பயமுண்டு' எனக் கூறுவது காலணாக் கொடுக்கும் வள்ளல் தன்மையைக் கேலிசெய்வதற்கேயாகும்.

மழைவேண்டிக் கிராம தேவதையை வழிபடும் மக்கள் மழை பெய்யாமைக்குக் காரணம் கிராமதேவதையின் சீற்றம் தான் என நம்புவதை,

"..... இந்திரனால்
ஏவுமுகிலேன் பொழிதலில்லை இது நம்கிராம
தேவதைகள் சீற்றமெனச் சிந்தித்தே ஆவலுடன்
பூசனை நைவேத்யம் புரவியெடுப்பு முதல்
ஆசரணையாடல் அதுபுரிந்தும்"[15]

எனக் காட்டுவதில் புலனாகிறது.

சவுளிக்கடைக்காரனைப் பற்றிக் கூறும்போது, எவரேனும் வந்தால் அவரை வரவேற்று வெற்றிலை பாக்குக் கொடுத்து உபசரித்து, மென்விசிறி கொண்டு வீசி நிற்பர் என்றும், எவராவது வேறு கடைக்குச் சென்றால் ஆசைகாட்டி அவரை அழைப்பர் என்றும், சேலை விலையில் குறைத்துப் பிறவற்றில் விலை ஏற்றிக்-கொள்வர் என்றும் கூறி, வகைதெரியாமல் அங்கு வருபவர்களிடம்

பகிடியுறப் பேசிப்பகட்டி மிகநீண்ட
காலங் கிடந்து நைந்த கட்டுக்கிடைகளையச்
சேலங்குடைந் தைத் தினுசெனவும் சாலமுடன்
காட்டி முழ நீட்டி நகைகாட்டி ரெட்டிப்பாக விலை
போட்டு அவர்கள் கண்ணில் மண்ணை"[16]

போடும் தன்மையினை நகைக்சுவையுடன் கூடிய அங்கதக் குறிப்பாக வெளிப்படுத்தியுள்ளார்.

"மெல்லியரை மாரியம்மை வேடமெடுத்து ஆடவிட்டு வல்ல பறைதானடித்து வாழ்த்திப் பின்னர் "இவள் கண்ட தேவியெனக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காட்டியதே சீவனமாய்ச் செய்து பிழைத்த'' சிலபேர்களை ஏளனமாக அறிமுகப்படுத்தி இனம் காட்டுகிறார்.[17]

தட்டானின் இயல்புகளைக் கூறும் வில்லியப்பபிள்ளை, தீயகள்வர் தட்டான்களைக் காட்டிலும் சாதாரணமானவர்கள் என,

''.....தீயகள்வர்
துஞ்சுதல் சோதித்து இரவில் சோரங்கள் செய்திடுவார்''

ஆனால்,

''.....பட்டப்
பகலேயாரும் அருகிருக்கச் செப்படிவித்
தைத்தொழில் போலும் திருடுந் தந்திரத்தைக் கண்டறிய
முத்தொழிலாளர்க்கும் முடியாதே''[18]

எனப் பகலில் அவைவரும் அருகில் இருக்கும்போது தங்கத்தைத் திருடும் தன்மையைக் காட்டி அவர்கள் திருட்டினை முத்தொழிலாகிய படைத்தல், காத்தல், அழித்தல் தொழிலைச் செய்யும் பிரமன், திருமால், சிவன் ஆகிய கடவுளராலும் காணவியலாது என அங்கதக் குறிப்புப்படப் பாடியிருக்கிறார்.

''பஞ்சம் என்ற சோக நாடகத்தின் திரைமறைவிலே நடக்கும் தில்லுமுல்லுகளையும், திருட்டுத்தனங்களையும் நகைச்சுவை ததும்ப அம்பலப்படுத்தி, துன்பத்திலும் வாழ்க்கையைச் சிரித்துக்கொண்டே ஏற்கக்கூடிய ஒரு மனத்தெம்பை ஊட்டும் விதத்தில் தமது நூலை ஆக்கியுள்ளார். பஞ்சத்தின் கொடுமையினால் அம்பலமான மனித வர்க்கத்தின் சகலவிதமான போலித் தனங்களையும் கண்டு, அவர் எள்ளி நகையாடிக் கைகொட்டிச் சிரிக்கிறார்; நம்மையும் சிரிக்க வைக்கிறார். அவரது சிரிப்பு நையாண்டிச் சிரிப்பு; அங்கதச் சிரிப்பு'' என்று சிதம்பர ரகுநாதன் கூறுவது குறிக்கத்தக்கது.[19]

ஆய்வு முடிவுகள்

தனிப்பாடல் பாடிய புலவர்களிடையே மலிந்து கிடந்த நகைச்சுவை உணர்வும், கேலியும், கிண்டலும் வளர்ச்சிபெற்றுப் பஞ்சலக்ஷ்ணத் திருமுக விலாசம் எனும் முழுநூல் கிடைத்துள்ளது. பஞ்சத்தால் மக்கள் அடைந்த பரிதாப நிலையைக் கண்ணீரோடு பாடுவதை விடுத்து, அந்நிலையை அங்கத உணர்வுபடப் பாடியிருப்பது குறிக்கத்தக்கதாகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

''பஞ்சலட்சணம்' என்ற தலைப்பிலேயே எள்ளற்குறிப்பினைப் புலவர் காட்டியுளளார். தாம் வாழ்ந்த காலச் சமுதாயத்தின் சீர்–கேடுகளைச் சிறந்த முறையில் அங்கதப்படுத்தும் இந்நூல், இருப–தாம் நூற்றாண்டு அங்கத இலக்கியத்திற்கு மிகச்சிறந்த முறையில் தோற்றுவாயாக அமைந்துள்ளது எனலாம். குறிப்பிட்ட சமீன்தார் மீது பாடப்பட்ட இந்நூல், புகழ்மொழியாக மட்டும் நின்றுவிடாமல், பொதுமக்கள் நிலையைச் சித்திரித்துக் காட்டுவது புலவரது சமுதாய உணர்வைக் காட்டுகிறது. ஏறக்குறைய இருபதாம் நூற்றாண்டில் எழுந்த அங்கதப்பாடல் அனைத்திற்கும் ஊற்றுக் கண்கள் இங்கே உள்ளன எனலாம். ஆனால் இந்நூல் மக்களிடையே செல்வாக்குப் பெறாமைக்கான காரணம் சிந்தித்தற்குரியது. சமுதாயப் பிரச்சினை–யைப் புலவர் எடுத்துக்கொண்ட போதிலும், பேச்சு வழக்குச் சொற்கள், மிகுதியான வடசொற் கலப்பு, சொற்களைச் சேர்த்து எழுதும் முறை ஆகியவற்றால் நடை கடுமையடைகிறது. எனவே பலாப்பழம் மீதுள்ள முள்போலக் கடுமையான நடை, கனியைச் சுவைக்கத் தடையாயுள்ளது எனலாம்.

குறிப்புக்கள்

1. ரகுநாதன், சமுதாய இலக்கியம், ப. 218
2. மேலது, ப. 211
3. வில்லியப்பபிள்ளை, பஞ்சலக்ஷணத் திருமுகவிலாசம், கண்ணி 173—175 ப. 14.
4. மேலது, கண்ணி 177—180, ப. 14
5. மேலது, கண்ணி 251—253, ப. 19
6. மேலது, கண்ணி 563—568, ப. 41
7. மேலது, கண்ணி 576—577 ப. 42
8. மேலது, கண்ணி 645—646 ப 47
9. மேலது கண்ணி 636—639, ப. 46
10. மேலது, கண்ணி 789—792, ப. 57
11. மேலது, கண்ணி 815—818, பக். 58—59
12. மேலது கண்ணி 887—889 பக். 63—64
13. மேலது, கண்ணி, 336—340, பக். 25—26
14. மேலது, கண்ணி 940—942 ப. 67
15. மேலது, கண்ணி 170—172, ப. 13
16. மேலது, கண்ணி 1170—1172, ப. 83
17. மேலது, கண்ணி 214—215, ப. 17
18. மேலது, கண்ணி 1277—1278, ப. 91
19. ரகுநாதன், சமுதாய இலக்கியம், ப. 210

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

(ஆ) மரபுக்கவிதைகளில் அங்கதம்

முன்னுரை

இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த கவிஞர்களான பாரதியார், பாரதிதாசன், கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை போன்றோர் மரபு வழிக் கவிதை இயற்றியவர்களாகத் திகழ்ந்தனர். இவர்கள் கவிதைகளில் காணப்படும் அங்கதக் குறிப்புக்கள் இங்கு விளக்கப்படுகின்றன.

1. பாரதியார்

பாரதியார் கவிதைகளில் தேசிய கீதங்கள், தெய்வப்பாடல்கள் பல்வகைப் பாடல்கள், முப்பெரும் பாடல்கள் என நான்கு பெரும் பிரிவுகளைக் காணலாம். இவற்றுள் தேசிய கீதங்களிலும், பல்வகைப் பாடல்களில் சமூகம் பற்றிப் பாடிய பாடல்களிலும், சுயசரிதையிலும் முப்பெரும் பாடல்களில் கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம் ஆகிய வற்றிலும் சிற்சில இடங்களில் அங்கதக் குறிப்புக்களைக் காணமுடிகிறது. இவரது பாடல்களில் அச்சம், ஒற்றுமையின்மை, மூடநம்பிக்கை, சாதி உணர்வு, சமய உணர்வு, ஆங்கிலக் கல்வி, விடுதலை உணர்வின்மை போன்றவை பெரிதும் அங்கதத் தாக்குதலுக்குள்ளாகின்றன. இவர் அங்கதக் குறிப்புக்களை மூன்று வகைகளில் வெளிப்படுத்துவதையும் காணலாம.

1. நேரடியாகக் கேலிசெய்து குறைகளைச் சுட்டிக்காட்டுவதன் மூலமும்,

2. பிறர் வாயிலாகவும். ஆங்கிலேயர் வாயிலாகவும் இந்தியர் நிலையினைக் காட்டுவதன் மூலமும்,

3. புராணக் கதைகளைச் சமகால நாட்டுநிலைக்குத் தகுந்தாற் போன்று அமைத்து புராணக் கதைமாந்தர்கள் மூலமும், அங்கதக் குறிப்புக்களை வெளிப்படுத்துகிறார்.

இந்திய மக்களின் நிலை

பாரதியார் வாழ்ந்த காலம் இந்திய நாடு அடிமைப்பட்டிருந்த காலம். எனவே மக்கள் அனைவரும் தம் நிலையினின்று தாழ்ந்து

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தன்மானமிழந்து வாழ்த்துவந்த நிலையைப் பாரதியார் கடுமையாகச் சாடுகிறார்.

அச்சம்

இந்திய மக்கள் எதற்குத்தான் பயப்படுவது என்றில்லாமல் தாம் காணும் அனைத்துக்கும் பயப்படுகின்றனர் என ''அஞ்சி அஞ்சிச் சாவார் இவர் அஞ்சாத பொருளில்லை அவனியிலே'' என்கிறார்.

சிப்பாய் வந்தாலும், ஊர்ச்சேவகன் வந்தாலும் அவனைக் கண்டு மனம் பதைத்து வீட்டிற்குள் ஒளிவதையும், வெகுதூரத்தில் செல்லுபவனின் ஆடையைப் பார்த்தே பயப்படும் நிலையையும் காட்டிச் சாடுகிறார்.[1]

ஒற்றுமையின்மை

மக்கள் தங்களுக்குள் வீண் சண்டையிடும் பழக்கத்தை நேரடியாகச் சாடுவதையும் இவர் பாடல்களில் காணலாம். தந்தை. 'பாம் பிற்குத் தலை ஐந்து' என்று சொன்னபோது, மகன் 'ஆறு தலை' என்று சொல்லி விட்டால் நெஞ்சு பிரிந்து நெடுநாள் பகைகொள்வார் என்கிறார்.[2]

சாத்திரங்களாலும், சமயங்களாலும் தம்முள் சண்டையிட்டுக் கொள்ளும் நிலையை, ''சாத்திரப் பேய்கள் சொல்லும் வார்த்தை நம்பியே கோத்திரம் ஒன்றாயிருந்தாலும் — ஒரு கொள்கையிற் பிரிந்தவனைக் குலைத்திகழ்வார்'' என்றும், ''ஆத்திரம் கொண்டே இவன் சைவன் — இவன் அரிபக்தன் என்று பெருஞ் சண்டையிடுவார்'' என்றும் நேரடியாகச் சாடுகிறார்.[3]

பாரதியார் இந்திய மக்களின் அக்கால இழிநிலையைக் கண்டு ''நெஞ்சு பொறுக்குதிலையே — இந்த நிலைகெட்ட மனிதரை நினைந்து விட்டால்'' என்று நேரடியாக வசைபாடுகிறார். அடிமை மனப்பான்மையால் எல்லோருக்கும் கைகட்டி நிற்பதும், யாரிடத்தும் பூனைபோல் அஞ்சி நடப்பது, இவர்தம் இயல்பு எனப் 'பாரத ஜனங்களின் தற்கால நிலைமை' எனும் கவிதையில் காட்டியிருக்கிறார்.

இந்தியர்கள் அடிமைகள், அடிமை மனப்பான்மை கொண்டவர்கள், ஒற்றுமை இல்லாதவர்கள் என்று ஓர் ஆங்கிலேயன் கூறுவதுபோல இந்திய மக்களைச் சாடுவதைக் காணலாம்.[4]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

''ஜாதிச் சண்டை போச்சோ — உங்கள்
சமயச் சண்டை போச்சோ!''

என்றும்,

''அச்சம் நீங்கினாயோ — அடிமை!
ஆண்மை தாங்கினாயோ?
பிச்சை வாங்கிப் பிழைக்கும் — ஆசை
பேணுத லொழித்தாயோ?''

என்றும்.

''சேர்ந்து வாழுவீரோ — உங்கள்
சிறுமைக் குணங்கள் போச்சோ?''

என்றும்,

''வெள்ளை நிறத்தைக் கண்டால் — பதறி
வெருவலை ஒழித்தாயோ?''

என்றும் கூறி,

''ஈன்மான தொழிலே — உங்களுக்கு
இசைவதாகும் போடா''

என ஆங்கிலேயன் கூற்று வாயிலாக மக்களை இகழ்ந்து பேசியிருப்பதைக் காணலாம். அச்சம் கொள்ளுதல், ஆண்மையற்ற தன்மை, பிச்சை வாங்கிப் பிழைத்தல் போன்ற குணங்களைக் கொண்டவர்கள் இந்திய மக்கள் என்றும்; அடிமை, நாய் என்றும்; வெள்ளை நிறத்தைக் கண்டாலே வெள்ளையனான ஆங்கிலேயன் என நினைத்துப் பயப்படுகிறார்கள் என்றும் சாடுவதைக் காணலாம்.

வெளிவேடம்

இந்திய மக்களின் தன்மையினை நடிப்புச் சுதேசிகள் எனும் கவிதையில் சாடுகிறார்.[5]

இந்திய மக்கள் நெஞ்சில் வீரம் இல்லாத நிலையையும் நேர்மை இல்லாத நிலையையும்.

''வஞ்சனை சொல்வாரடி — கிளியே!
வாய்ச்சொல்லில் வீரரடி!

என்று பாடுகிறார். இப்பாடலில் இந்திய மக்கள் வாய்ப்பேச்சில் தான் சிறந்தவர்களாக இருக்கிறார்களே தவிர, செயலில் இல்லை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்ற குறிப்புப்படப் பேசுகிறார். ஏனெனில் இவர்கள் கூட்டத்தில் கூடிப் பிதற்றலின்றி நாட்டத்தில் கொள்ளாத காரணத்தால்.

விடுதலை உணர்வின்மை

அடிமைத்தளையிலே வீழ்ந்து கிடக்கும் இந்தியர்களை — அதனின்று மீண்டும் வெளிவரவேண்டும் என்ற எண்ணம் இல்லாதவர்களை,

> ''சொந்த அரசும் புவிச்
> சுகங்களும் மாண்புகளும்
> அந்தகர்க் குண்டாகுமோ — கிளியே
> அலிகளுக் கின்ப முண்டோ?''

என்று 'அந்தகர்' எனவும், 'அலிகள்' எனவும் சாடுவதைக் காணமுடிகிறது. மேலும் இப்பகுதியில் மக்களின் குறைகளைச் சுட்டி, அக்குறைகளை அறியாத நிலையில் இருப்பதையும் காட்டி விளக்குகிறார்.

மானம் சிறிதென்று எண்ணி வாழ்வு பெரிதென்று எண்ணும் ஈனர் என்றும், வந்தேமாதரம் என்ற சொல்லை உண்மையில் மனங்கொள்ளாது வெளிவேடம் தரிப்பர் என்றும் கூறிச் சாடுவதையும் காணலாம். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவோர், உள்ளத்திலே கள் விரும்பி உதட்டளவில் சிவசிவ என்போர் போன்று இவர்கள் நிலை இருப்பதைக் காட்டிப் பழிக்கிறார்.

மேலும், 'ஊமைச்சனங்கள்' என்றும், 'ஊக்கமும் உள்வலியும் உண்மையில் பற்றும் இல்லாதவர்' என்றும், 'மானத்தைப் பெரிதென்று எண்ணாது வாழ்வே பெரிதென்று எண்ணும் ஈனர்' என்றும் மக்களின் குறைபாடுகளைக் குத்திக் காட்டியிருப்பதைக் காணலாம்.

முறைதவறி வாழல்

பாரதியார் அந்தணர் குலத்தவராக இருப்பினும் முறைதவறி வாழும் அந்தணர்களைச் சாடுவதையும் காணலாம்.

அந்தணரின் பொய்பேசும் தன்மையினையும், காசு ஒன்றே குறி என்றிருப்பதையும் காட்டிப் பழிக்கிறார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"முன்னாளில் ஐயரெல்லாம் வேதம் — ஓதுவார்
மூன்றுமழை பெய்யுமடா மாதம்;
இந்நாளி லேபொய்மைப் பார்ப்பார் — இவர்
ஏது செய்தும் காசு பெறப் பார்ப்பார்"

என்றும், 'பேராசைக் காரனடா' என்றும்,

"பிள்ளைக்குப் பூணூலாம் என்பான் — நம்மைப்
பிச்சுப் பணங்கொடெனத் தின்பான்"

என்றும் கூறி

"சொல்லக் கொதிக்குதடா நெஞ்சம் — வெறுஞ்
சோற்றுக்கோ வந்ததிந்தப் பஞ்சம்?"

என்று வயிற்றுப் பிழைப்புக்காக அந்தணர் செய்யும் செயலினைச் சாடுவதைக் காணலாம்.

"நாயும் பிழைக்கும் இந்தப் — பிழைப்பு"

என்று நேரடியாக இவர்களைக் கடுமையாகச் சாடுகிறார் பாரதியார்.[8]

"பெரிய துரை என்னிலுடன் வேர்ப்பான்" என்று ஆங்கிலேயருக்குப் பயப்படும் தன்மையையும், "சோரந் தொழிலாக் கொள்வோமோ?" என்று அந்தணர்கள் சோரமிக்க தொழில் செய்யும் தன்மையையும் சாடுகிறார்.

பாரதியார் இவ்வுலக வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள மக்கள் உண்பதும் உடுப்பதும் உறங்குவதுமாக இருக்கின்ற நிலையினை ஒரு பாடலில் எடுத்துக் காட்டுகிறார்.[9] நல்வாழ்வு வாழ முயலாமல் வேடிக்கையாக வாழ்ந்து வேடிக்கையாகவே மடிந்து போகிறார்களே என்று இந்நிலையைக் கண்டு வருந்திப் பாடுவதை,

"தேடிச் சோறுநிதந் தின்று — பல
சின்னஞ் சிறுகதைகள் பேசி — மனம்
வாடித் துன்பமிக உழன்று — பிறர்
வாடப் பலசெயல்கள் செய்து — நரை
கூடிக் கிழப்பருவ மெய்தி — கொடுங்
கூற்றுக் கிரையெனப்பின் மாயும் — பல
வேடிக்கை மனிதரைப் போலே — நான்
வீழ்வே னென்றுநினைத் தாயோ"

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்ற பாடலில் காணமுடிகிறது. மனித சமுதாயத்தின் குறைகளைக் கண்டு அக்குறைகளை நீக்கி வாழவேண்டுமே என்று நினைக்கும் உணர்வினையும் காணலாம்.

ஆங்கிலக் கல்வி

ஆங்கிலேயர்களையும், அவர்தம் ஆட்சியையும் வெறுத்தது போன்றே, அவர்தம் மொழியையும் வெறுத்துச் சாடுகிறார். ஆங்கிலம் பயிலவேண்டிய கட்டாயத்துக்கு ஆளாவதையும், அதனால் விளையும் சீர்கேடுகளையும் அங்கத முறையில் 'சுயசரிதை' எனும் பகுதியில் சுட்டிக்காட்டியிருப்பதைக் காணலாம்.

ஆங்கிலக்கல்வி, ஆங்கில அரசுக்குத் தேவையான அலுவலர்' களைத் தோற்றுவிக்கிறதே தவிர, இந்திய நாட்டுப் பண்பாட்டிற்கு-கந்த கல்வியாக இல்லை என்பதைச் சுட்டிக் காட்டுகிறார். ஆங்கில-வழிக் கல்விகற்போர் உண்மையான அறிவு பெறாதிருக்கும் நிலை-யினை,

> 'கணிதம் பன்னிரண் டாண்டு பயில்வர், பின்
> கார்கொள் வானிலோர் மீனிலை தேர்ந்திலார்;
> அணிசெய் காவியம் ஆயிரங் கற்கினும்
> ஆழ்ந்தி ருக்கும் கவியுளம் காண்கிலார்;
> வணிக மும்பொருள் நூலும் பிதற்றுவார்!
> வாழு நாட்டிற் பொருள்கெடல் கேட்டிலார்;
> துணியு மாயிரஞ் சாத்திர நாமங்கள்
> சொல்லு வாரெட் டுணைப்பயன் கண்டிலார்''[10]

என்று சுட்டிக்காட்டிக் கல்விமுறையைச் சாடுகிறார்.

இத்தகைய ஆங்கிலக்கல்வி கற்போர் 'நரியுயிர்ச் சிறுசேவகர்' 'தாதர்கள்', 'நாயெனத் திரியொற்றர்', 'உணவினைப் பெரிதெனக் கொடு தம் உயிர் விற்றிடும் பேடியர்', 'பிறர்க் கிச்சகம் பேசுவோர், என்று சாடுவதைக் காணமுடிகிறது.[11]

'அல்லல் மிக்கதோர் மண்படு கல்வி' யாகிய ஆங்கிலத்தின் மீது தாய்மொழியைப் புறக்கணித்து மோகம் கொண்டு அலையும் மக்களை,

> ''வேறுவேறு பாஷைகள் கற்பாய் நீ
> வீட்டு வார்த்தை கற்கிலாய் — போபோபோ''

என்று ஏளனம் செய்கிறார்.[12]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

''செலவு தந்தைக்கோ ராயிரஞ் சென்றது;
தீதெனக்குப் பல்லாயிரஞ் சேர்ந்தன;
நலமொ ரெட்டுணை யுங்கண்டி லேனிதை
நாற்ப தாயிரங் கோயிலிற் சொல்லுவேன்''

என்று ஆங்கிலக் கல்வியினால் பொருள் செலவாவதைத் தவிர வேறு பயன் இல்லை எனக் கூறுகிறார்.[13]

குழந்தை மணம்

சிறிய வயதிலேயே மணம் செய்துகொடுக்கும் குழந்தை மணத்தை வெறுத்துச் சாடுகிறார் பாரதியார். இம்மணத்தை நிகழ்த்துவோரை.

''பாலருந்து மதலையர் தம்மையே
பாதகக் கொடும் பாதகப் பாதகர்
மூலத் தோடுகு லங்கெடல் நாடிய
மூட மூடநிர் மூடப் புலையர்தாம்
கோல மாக மணத்திடக் கூட்டுமிக்
கொலை என்னுஞ் செயலொன்றினை யுள்ளவும்
சால வின்னு மோராயிரம் ஆண்டிவர்
தாத ராகி அழிகெனத் தோன்றுமே''

என்று நேரடியாகச் சாடுகிறார்.

காதல்

நாடகத்திலும் காவியத்திலும் காதல் என்றால் 'நன்று! நன்று! எனக் கூறுவோர், தம் வீட்டில் காதல் என்றால் உறுமுவதையும், பாடைகட்டி அதைக்கொல்ல வழிசெய்வதையும்,

''மூடரெல்லாம் பொருமையினால் விதிகள் செய்து
முறைதவறி இடர் எய்திக் கெடுகின்றாரே''

என 'மூடர்' என்று வசைபாடுகிறார் பாரதியார்.[15]

பணியாட்களால் அடையும் துன்பம்

வேலையாட்களால் ஏற்படும் அவலநிலையினையும் துன்பத்தையும் 'கண்ணன் என் சேவகன்' எனும் கவிதையில் நகைச்சுவைபட,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

''கூலிமிகக் கேட்பார் கொடுத்ததெல்லாம் தாம்மறப்பார்;
வேலைமிக வைத்திருந்தால் வீட்டிலே தங்கிடுவார்
'ஏனடா, நீ நேற்றைக் கிங்குவர வில்லை' என்றால்
பானையிலே தேளிருந்து பல்லால் கடித்த தென்பார்
வீட்டுலே பெண்டாட்டி மேற்பூதம் வந்ததென்பார்;
பாட்டியார் செத்துவிட்ட பன்னிரெண்டாம் நாளென்பார்
ஓயாமல் பொய்யுரைப்பார். ஒன்றுரைக்க வேறுசெய்வார்;
தாயாதியோடு தனியிடத்தே பேசிடுவார்
உள்வீட்டுச் செய்தியெல்லாம் ஊரம் பலத்துரைப்பார்
எள்வீட்டில் இல்லையென்றால் எங்கும் முரசறைவார்''

என அங்கதக் குறிப்புப்படக் காட்டியிருப்பதைக் காணலாம்.[16]

பாஞ்சாலி சபதமும் — அங்கதமும்

பாரதியார் பாஞ்சாலி சபதத்தில் தம் காலத்திய மக்களையும், அவர்களை அடிமைப்படுத்திய ஆங்கில அரசினையும் சாடுவதைக் காணலாம்.

தருமன் சூதாடுகின்றான்; தன்னிடம் இருக்கும் ஒவ்வொரு பொருளையும் தோற்று இழக்கிறான். இறுதியில் தனது நாட்டையே பணயமாக வைக்கிறான். இந்நிலையில் பாரதியாருக்குச் சினம் அதிக மாகிறது.

''கோயிற் பூசை செய்வோர்—சிலையைக்
கொண்டு விற்றல் போலும்,
வாயில் காத்து நிற்போன்–வீட்டை
வைத் திழத்தல் போலும்,
ஆயிரங்க ளான - நீதி
யவை உணர்ந்த தருமன்
தேயம்வைத் திழந்தான்-சீச்சீ
சிறியர் செய்கை செய்தான்''

என்று கோயிற் பூசை செய்வோர் கடவுட் சிலையை விற்கலாமா? வாயிற் காவலன் வீட்டை இழக்கலாமா? எனக் கேட்டுத் தருமனைச் 'சிறியன்' என்றும் 'சீச்சீ' என்றும் வசைபாடுகிறார்.[17]

''நாட்டு மாந்த ரெல்லாம்-தம்போல்
நரகர்க ளென்று கருதார்;
ஆட்டு மந்தையாமென்-றுலகை
அரச ரெண்ணி விட்டார்''

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்று மக்கள் எல்லாரையும் ஆட்டுமந்தையென நினைக்கிறாரா? என்று கேட்பதில் அடிமை கொண்ட இந்திய மக்கள் ஆட்டுமந்தைகள் எனச் சாடுவதைக் காணலாம்.

இதேபோன்று அத்தினாபுர மக்களைச் சாடுவதைப் போல, இந்திய மக்களைச் சாடும் நிலையைக் காணலாம்.

பாஞ்சாலியைத் துச்சாதனன் கூந்தல் பற்றி இழுத்து வருகிறான். பாஞ்சாலி அலறுகிறாள். பார்த்துக் கொண்டிருந்த மக்களோ செய்வதறியாது திகைத்து நிற்கின்றனர். இந்நிலையில் சினம் கொண்ட பாரதியார்,

> ''ஊரவர்தங் கீழ்மை உரைக்கும் தரமாமோ?
> வீரமிலா நாய்கள், விலங்காம் இளவரசன்
> தன்னை மிதித்துத் தராதலத்தில் போக்கியே
> பொன்னையவள் அந்தப்புரத்தினிலே சேர்க்காமல்
> நெட்டை மரங்களென நின்று புலம்பினார்
> பெட்டைப் புலம்பல் பிறர்க்குத் துணையாமோ,''[18]

என்று கேட்கிறார். இப்பாடலில், அத்தினாபுர மக்களை நேரடியாகவே 'வீரமிலா நாய்கள்' என்றும், 'நெட்டை மரங்கள்' என்றும் வசைபாடுகிறார். இந்திய மக்களின் இழிநிலையையும், நாட்டினை அடிமைத்தளையினின்று மீட்க முயலாமல் இருந்த தன்மையினையும், உதட்டளவில் அனுதாபம் காட்டிப் புலம்பிய நிலையினையும் சாடுகிறார் எனலாம்.

'பாரதகாலத்து அத்தினாபுரத்து மக்களைக் கடிந்துரைக்கும் இந்த வார்த்தைகளின் மூலம் இருபதாம் நூற்றாண்டின் பாரத மக்களிடத்தில் தர்மாவேச உணர்ச்சியும், கொடுங்கோன்மைக்கு எதிரான எண்ணமும் தோன்றும் வண்ணம் முறைமுகமாகக் குரல் கொடுக்கிறான் பாரதி'' என்ற ரகுநாதனின் கூற்று இங்குக் குறிக்கத்தக்கது.[19]

பாஞ்சாலி வாயிலாக அத்தினாபுர அரசனையும், அரசினையும், மக்களையும் ''பேயரசு செய்தால், பிணம் தின்னும் சாத்திரங்கள்'' என்று சாடுவதுபோல ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த இந்தியாவையும், இந்தியரையும் சாடுகின்றார் பாரதியார்.

''சமூகக் கொடுமைக்கு ஆளானோர் குரலாகக் குமுறியெழும் கண்டனம், கேட்போர் உள்ளத்தை உருக்கி அனுதாபம் பிறப்பிக்கவல்லது. அமைதி முறையிலே சீர்திருத்தம் எழுவதற்கு அனுதாப

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உணர்வே ஊற்றிடமாகும். எனவே, கொடுமைப்பட்டோர்க்கு வாயாக நின்று அங்கதம் பாடப் புல்வர்கள் முன்வருவதுண்டு. பாரதியாரின் 'பெண்ணுரிமை' அத்தகையது.

''மாட்டை அடித்து வசக்கித் தொழுவினில்
மாட்டும் வழக்கத்தைக் கொண்டுவந்தே
வீட்டினில் எம்மிடம் காட்டவந்தார். அதை
வெட்டிவிட்டோமென்று கும்மியடி
நல்ல விலைகொண்டு நாயை விற்பார், அந்த
நாயிடம் யோசனை கேட்பதுண்டோ?
சொல்லத் துணிவின்றி நம்மையும் அந்நிலை
கூட்டிவைத்தார், பழிகூட்டி விட்டார்''

என்று மரிய அந்தோணி இப்பாடலை அங்கதத்திற்குச் சான்றாகக் காட்டுவார்.[20]

''சுதந்திரப்பள்ளு' என்ற பாடலில் பாரதியார், வருணாசிரம தருமங்கள் நிலைகுலைந்து வாழ்வதைக் குறித்துப் பேசும்பொழுது குல ஒழுக்கத்தை மறந்து வாழ்தல் மனித முன்னேற்றத்திற்கு மாறுதலானது என்ற உண்மை தோன்ற இடித்துரைக்கின்றார்.

''பார்ப்பானை ஐயரென்ற
காலமும் போச்சே - வெள்ளைப்
பரங்கியைத் துரையென்ற
காலமும் போச்சே''

ஆறுதொழில் மறையவர் அந்தணராதலின், அவர்களுக்கென்ற ஒழுக்கவிதிகள் மக்கட் சமூகத்தின் மேன்மையைக் கருதியே முன்னோரால் வகுக்கப்பட்டிருக்கின்றமையின், அவ்வொழுக்கங்கள் நிலைதிரியாது இருத்தல் வேண்டுமென்பதே பாரதியாரின் அவா. முன்னணியிலேயே இருக்கும் பார்ப்பாரைக் கூறியிருப்பது உபசாரமேயன்றி, பின்னர் நிற்கும் வேறு ஒழுக்கத்தினருக்கும் அது பொருந்துமாறு கண்டுகொள்க. பிறப்பையே அடிப்படையாகக் கொண்டு பேதங்களை வளர்க்கும் அறிவீனம் மக்களிடையே நீங்க வேண்டுமென்பதே பாரதியார் கருத்தாகத் தோன்றுகின்றன. இவ்வடிகளும் அங்கதத்தின் பாற்படுமாறு அறிக'' என்று ப. மீ. சுந்தரம் தம் 'பாரதியார் வரலாறும் கவிதையும்' என்ற நூலில் கூறியுள்ளார்.[21] ஆனால் இப்பாடல் இங்கு வகுக்கப்பட்டுள்ள அங்கதத்திற்குரிய இலக்கண வரையறைக்கு ஏற்றாற்போல அமையுமா என்பது ஐயமே!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரதியார் வாழ்ந்த காலம் இந்திய நாடு ஆங்கிலேயர்க்கு அடிமைப்பட்டிருந்த காலம். அடிமைத்தளையறுத்துச் சுதந்திர இந்தியாவைக் காணவிழைந்த பாரதியார், தம் கவிதைகளின் மூலம் விடுதலை உணர்வினை மக்களிடையே எழுப்ப விரும்பினார். இக்குறிக் கோளுக்கு இந்தியரிடையே மண்டிக்கிடந்த சீர்கேடுகள் தடையாயிருந்தன. அச்சீர்கேடுகளைக் களைந்து தடைகளைத் தகர்த்தெறிய அங்கதக் குறிப்புடைய பாடல்களைப் பயன்படுத்தியுள்ளார். அவ்வகையில் எழுந்த பாடல்கள் அச்சம், மூடப்பழக்க வழக்கம், ஒற்றுமையின்மை, விடுதலை உணர்வின்மை, வெளிவேடம், முறைதவறிய வாழ்க்கை, ஆங்கிலவழிக் கல்வி போன்றவற்றைப் பெரும்பாலும் சாடுவதைப் பாடுபொருளாகக் கொண்டு எழுந்தன எனலாம்.

2. பாரதிதாசன்

பாவேந்தர் என்று பாராட்டப்படும் பாரதிதாசன் தொடக்க காலத்தில் பாரதியாரைப் பின்பற்றித் தேசியக் கவிதைகளை இயற்றினாலும், பின் தான் சார்ந்த திராவிட இயக்கத்தின் பகுத்தறிவுக் கொள்கை விளக்கங்களைத் தனது கவிதைகளின் பாடுபொருளாகக் கொண்டவர் இவர் பல்வேறு கவிதைகளையும் நாடகங்களையும் இயற்றியுள்ளார். இவரது கவிதைகள் ஒன்றுமுதல் ஐந்து தொகுதிகளாக வெளிவந்துள்ளன. இவரது சிறந்த படைப்புக்களில் பாண்டியன் பரிசு, குடும்ப விளக்கு, இருண்டவீடு, குறிஞ்சித்திட்டு, அழகின் சிரிப்பு போன்றவை அடங்கும். இவரது கவிதைப் படைப்புக்களில் ஆங்காங்கே அங்கதக் குறிப்புக்களைக் காணமுடிகிறது. இவை சமயங்களையும், சமயவாதிகளையும், சமுதாயத்தில் மண்டிக்கிடக்கும் மூடப் பழக்கங்களையும், திரைப்படத்துறையினையும் சாடுவதாக அமைகின்றன. இருண்ட வீடு, நல்லமுத்துக்கதை, சஞ்சீவிபர்வதத்தின் சாரல் போன்ற கதைப் பாடல்களிலும் அங்கதக் குறிப்புக்கள் காணப்படுகின்றன.

சமயமும் சமயவாதிகளும்

பாரதிதாசன் இச்சமுதாயத்தினையும், சமுதாயத்தில் அங்கம் வகிக்கும் சமயவாதிகளின் இயல்பினையும் சாடக் காணலாம்.

'எல்லாம் அவன்செயல்' என்று சொல்லிக்கொண்டே, பிறர் பொருளையெல்லாம் வெல்லம்போல் அள்ளி விழுங்கும் மனிதரும், 'கடவுள் உமைக் கட்டையில் போகுமட்டும் காப்பார், எனவே

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வேர்ப்பீர், உழைப்பீர்' என உரைக்கும் வீணரும், இன்றையச் சமுதாயத்தில் சமயவாதிகள் என்ற பெயரில் இருப்பதை, கடவுள் பெயரைச் சொல்லிப் பிறரை ஏமாற்றும் கயமையை ஏளனம் செய்கிறார்.[22]

இதேபோன்று,

''மக்கள் பசிக்க மடத்தலைவர்க் கெனில்
வாழை யிலைமுற்றும் நறுநெய்யாம் — இது
மிக்குயிர் மேல் தைத்த கருணையாம்''

என்று சமுதாயத்தில் மக்கள் பசியோடு இருக்கும்போது, சமயத்தலைவர்களான மடத்தலைவர்கள் நெய்ச்சோறு உண்பதைச் சாடுகிறார்.[23]

'கோயிலிலே பொருள் கூட்டும் குருக்கள் கோதையர் தோளினில் சாயும்' அவர்களின் பெண்ணாசையினையும் வெளிப்படுத்துகிறார்.[24]

இன்றையச் சமயவாதிகள், தங்களால்தான் சமயம் பிழைக்கிறது என்று சொல்லித் திரிவதையும், ஆனால் அவர்கள் பெண்ணுக்காகவும், பொன்னுக்காகவும்தான் இருக்கிறார்கள் என்பதையும் 'சைவப்பற்று' எனும் கவிதையில் அங்கதக் குறிப்புப்படக் காட்டியுள்ளார்.[25]

தனது மடத்திற்கு இருக்கும் கணக்கற்ற சொத்துக்களை எண்ணி மகிழ்ந்த மடாதிபதி, மேனியெல்லாம் சந்தனம் பூசி, அணிகலன்கள் பல அணிந்து பெண்கள் சூழ, பட்டு மெத்தையில் அமர்ந்து, நற்பண்டங்கள் உண்டு சைவத்தைப் பற்றிப் பேச ஆரம்பித்து உறங்கிவிட்டார். அப்பொழுது அவர் கனவில் சிவபெருமான் தோன்றி 'சைவத்தை அதிகமாகப் பரப்பிவிட்டமையால் மடத்தின் சொத்துக்களை மக்களுக்குக் கொடுத்துவிட்டேன், எனவே இனிமேல் சிவபுரி வாழ்க்கை நடத்து' என்று கூறினார். எண்ணம் கலங்கிய மடாதிபதி, விழித்தெழுந்து, தம் காவலரை அழைத்து 'பொருள் களவுபோகுமென்பதால் சாப்பளிக்க வேண்டும்' என்று ஆணையிட்டார், எனும் இக்கவிதையில் மடாதிபதிகளின் ஆடம்பர வாழ்வை,

''இரும்புப் பெட்டியிலே—இருக்கும்
எண்பது லக்ஷத்தையும்
... ...
வாடிக்கைக் காரர் தரும்—கொழுத்த
வட்டித் தொகையினையும்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எண்ணி எண்ணி மகிழ்ந்தே
... ...
கண்கவர் பூஷணங்கள்—அணிந்து
கட்டில் அறை நோக்கிப்
பெண்கள் பலபேர்கள்—குலவிப்
பின்வர முன் நடந்தார்''

ஒன்று காட்டுவதன் மூலம் வெளிப்படுத்துகிறார்.[26] மேலும்,

''சொப்பனத்தை நினைத்தார் — தம்பிரான்
துள்ளி விழுந்தழுதார்!
ஒப்பி உழைத்ததில்லை — சிறிதும்
உடல் அசைந்ததில்லை!
எப்படி நான் பிரிவேன் — அடடா!
இன்பப் பொருளை யெல்லாம்,
தப்பிப் பிழைப்பதுண்டோ — எனது
சைவம் எனத் துடித்தார்''[27]

என்று வரும்

'சைவப்பற்று' எனும் இக்கவிதையில் போலிச்சமயவாதி கடுமையான ஏளனத்திற்குள்ளாகிறார்.

மடாதிபதி மடத்தில் இருக்கும் சூழல் முதலில் காட்டப்படுகிறது. செல்வச் செழிப்பு மிக்க சூழலில், பெண்கள் சூழ, உயர்ந்த உணவுகொள்ளும் சூழலைக் காட்டுவது துறவு வாழ்க்கை மேற்கொள்ள வேண்டிய மடாதிபதி அதற்கு நேர்மாறான வாழ்க்கை வாழ்கிறார் என்பதைக் குறிப்பாகக் காட்டுவதற்கு எனலாம்.

இச்சூழலிலிருந்து கொண்டு 'சைவம்' பேசுவதும், அங்கதக் குறிப்புடையனவே.

மடாதிபதியின் கனவில் ''இத்தனை நாளாகப் புவியில் எனது சைவமதை நித்தநித்த முயன்றே நீளப்பரப்பிவிட்டாய்'' என்று சிவபெருமான் கூறுவது எதிர்மறைப் பொருளுடன் கேலியாகக் கூறுவதாக அமைந்து அங்கதக் குறிப்புடையதாகிறது.

கனவிலிருந்து மீண்ட மடாதிபதி ''ஒப்பி உழைத்ததில்லை சிறிதும் உடல் அசைந்ததில்லை'' என்பதும் ''தப்பிப்பிழைப்ப-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

துண்டோ எனது சைவம்'' எனத் தன்னால்தான் சைவம் பிழைப்ப தாக நினைப்பதும் அங்கதக் குறிப்புடையன.

மற்றொரு கவிதையில், இந்திய நாட்டில் பல்வேறு மதங்கள் தோன்றிக் கிளைத்துப் பெருகியிருக்கும் தன்மையை ஏளனம் செய்வதைக் காணமுடிகிறது.[28] பல்வேறு விதமாகப் பல மதங்கள் தோன்றின எனக் குறிப்பிடும் பாரதிதாசன்,

''நாம்பெற்ற பேறு யார் பெற்றார்கள்
ஒருமதம் தோன்றி அதன்கிளை ஒன்பதாய்த்
திருவருள் புரிந்த பெரியோரும் பலர்;
மதங்களைப் பலவாய் வகுக்க அவற்றில்
விதம்பல சேர்த்த வித்தக ரும்பலர்''

என்கிறார்.

இங்கு பல மதங்கள் இந்திய நாட்டில் தோன்றியதை ''நாம் பெற்ற பேறு'' என அங்கதக் குறிப்புப்படப் பேசுகிறார். ஒன்று பலவாக மதங்கள் தோன்றுவதற்குக் காரணமாக இருந்தவர்களைத் ''திருவருள் புரிந்த பெரியோர்'' என்றும், ''வித்தகர்'' என்றும் அங்கதக் குறிப்புப்படப் பாடியுள்ளார்.

சமயவாதிகளின் தன்மையினையும், அவர்களைத் துதிபாடும் மக்களின் மூடநம்பிக்கையினையும் இனம் காட்டுவதாக.

''உழைக்காத வஞ்சகர் தம்மை-மிக
உயர்வான சாதுக்கள் என்பது நன்றோ?
விழித்திருக்கும் போதிலேயே-நாட்டில்
ஈனையாடும் திருடரை 'சாமி' என்கின்றார்
அழியாத மூடத் தனத்தைஏட்டில்
அழகாய் வரைந்திடும் பழிகாரர் தம்மை
முழுதாய்ந்த பாவலர் என்பார்''[29]

என்னும் பாடல் அமைந்துள்ளது.

'சாதுக்கள்' என்றும், 'சாமி' என்றும், 'பாவலர்' என்றும், மிக உயர்வாக மக்களால் மதிக்கப்படுவோர் அச்சொற்களுக்கு உரிய முறையில் மேலான நிலையில் இருப்பதில்லை என்பதை இப்பாடல் மூலம் காட்டுகிறார். உழைக்காத வஞ்சகர்கள் 'சாது' வென்றும் நேர்மையற்ற முறையில் வாழ்வோரைச் 'சாமி' என்றும், மூடத்தனத்தைப் பரப்புவோரைப் 'பாவலர்' என்றும் நம்பும் மக்களின் மூடநம்பிக்கையையும் இங்குக் காட்டுகிறார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கோவிலில் இருக்கும் கடவுளருக்குக் காணிக்கை யளிப்பதையும், பால், பழம் கொண்டு வணங்குவதையும், சாடுகிறார் பாரதிதாசன்[30] ''கருங்கற்கோயில் கேட்டதா உனைக் காசு பணம்'' எனவும், ''பசிக்குமா கல்லுக்கும் செம்புக்கும், பாலொடு பழமா?- கொடுக்காவிடில் அழுமா?'' எனவும், ''பஞ்சமிலாக் கோயிலுக்குப் பஞ்சாமிர்தமா? படையல் அஞ்சாறு தரமா?'' எனவும், ''கோயிலின் கல்லின் தலையில் பாலூற்றினால் உலகம் ஒப்பாதே'' எனவும், இப்பழக்க வழக்கங்களைச் சாடுவதைக் காணலாம்.

இறை உணர்வு கொள்வதைவிட, ஆடை அணிகலன்கள் மீதும் தம் அழகினை ரசிப்பதிலுமே மக்களுக்கு ஆர்வம் இருக்கும் நிலையை 'ஏசுநாதர் ஏன் வரவில்லை' என்ற கவிதையில் அங்கதக் குறிப்புப் படச் சாடுகிறார். பாரதிதாசன்.[31]

நகையணியாமலும், விலை குறைந்த ஆடைகள் அணிந்தும் தான் கோயிலுக்கு வரவேண்டும் என்று பாதிரியார் சொன்னதும் ''விஷமென்று கோயிலை வெறுத்தார்கள் பெண்கள், புருஷர்!'' உடனே எட்டு உறுப்பேயன்றி இமைகள், உதடு, நாக்கு நிறைய நகை போடலாம் என்றும், கோயிலில் நிலைக்கண்ணாடி உண்டென இலைபோட்டழைத்ததும் நகைபோட்ட பக்தர்கள் எல்லோரும் வந்து சேர்ந்தார் என்று பாரதிதாசன் காட்டி,

''ஏசுநாதர் மட்டும் அங்கு வரவில்லையே
இனிய பாரததேசமே''

என ஏசுநாதர் வராத நிலையினையும் காட்டுகிறார். ''நீள் இமைகள், உதடு, நாக்கு நிறைய நகைபோடலாம்'' என்றும் ''கோயில் முகம் பார்க்க நிலைக்கண்ணாடியும் உண்டு'' என்றும் கூறுவது மக்கள் நகைமீது கொண்டிருக்கும் பற்றினையும், தங்கள் அழகைப் பார்த்து மகிழவேண்டும் என்ற எண்ணம் இருப்பதையும் அங்கதக் குறிப்புப்படக் காட்டுவதற்கே, ''நகை போட்ட பக்தர்'' என்பது இறையுணர்வோடு வரும் பக்தர்களாக அன்றி ஆடம்பரமான பக்தர்களாக இருக்கிறார்கள் என்பதைக் காட்டுவதற்கே. பக்தியோடு இறைவனை எண்ணி வழிபட வேண்டிய இடத்தில் அழகிலும் நகையிலும் நாட்டம் கொள்வதால், அவர்கள் கூடும் இடம் கோயிலாக இருக்காது; எனவே தான் ''ஏசுநாதர் மட்டும் அங்கு வரவில்லை'' எனக் காட்டுகிறார். ''இனிய பாரததேசமே'' எனக் கவிதையினை முடித்திருப்பதும் எதிர்மறைப் பொருளைத் தந்து அங்கதக் குறிப்புப்பட அமைந்துள்ளது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெண்டிரும் ஆடவரும்

இன்றைய நிலையில் சில பெண்கள் வீண்பேச்சுப் பேசுவதிலும், அடுத்த வீட்டில் நடப்பதை மறைந்திருந்து ஒட்டுக்கேட்டுப் பார்ப்பதிலும் காலம் கழிக்காமல் இருக்கக் குட்டைக் கழுத்தைப் பெற்றுள்ளனர் என 'மயில்' எனும் கவிதை மூலம்,

"பிறர் பழிதூற்றும் பெண்கள் இப்பெண்கள்!
அவர்கழுத்து உன்கழுத் தாகுமோ சொல்வாய்!
அயலான் வீட்டின் அறையில் நடப்பதை
எட்டிப் பார்க்கா திருப்ப தற்கே
இயற்கை அன்னை, இப்பெண கட்கெலாம்
குட்டைக் கழுத்தைக் கொடுத்தாள்"

என்று நகைச்சுவை படக் காட்டியுள்ளார்.[32]

பெண்கள் அளவுக்கதிகமாக விரதம் மேற்கொள்ளும் நிலையினைக் காட்டி, அதனால் அவர்கள் குடும்பம் சரிவரக் கவனிக்கப்படாமல் போகும் நிலையை அங்கதக் குறிப்புடன் காட்டுகிறார்.[33]

வீட்டிற்குள்ளே பதினைந்து திருடர்கள் மறைவாகப் பதுங்கிடும்படியும், உணவுப்பொருட்கள் மொய்க்கும்படியும், வீடு இருக்கும்; நோய் தீர்ப்பதற்கு கடவுளரையே வேண்டிக்கொண்டிருப்பர்; கணவன் ஆடையில் உள்ள கிழிசலைத் தைப்பதற்குக்கூடக் கூலியாள் வேண்டிய நிலையிருக்கும் என்று சொல்லி இதற்கெல்லாம் காரணம்,

"... ... ... இந்த
ஒழுங்கெலாம் நம்மாதர் வாரத்தின் ஏழுநாள்
உயர்விரதம் மேற்கொள்வதால்
உற்றபலன் அல்லவோ அறிவியக்கங்கண்
டுணர்ந்த என் அன்னை நாடே"

என்கிறார்.

இங்கு ஏழுநாள் விரதத்தைச் சாடுகிறார். வாரத்தில் உள்ள ஏழு நாட்களிலும் விரதம் இருப்பதால் வீட்டைக் கவனிக்க முடியாமற் போவதைக் காட்டியுள்ளார். "இந்த ஒழுங்கு", அறிவியக்கம் கண்டு உணர்ந்த என் அன்னை நாடே" என்பவை அங்கதக் குறிப்புப் பட உள்ளது.

குழந்தை பெற்ற பெண்ணின் அழகு குறைந்துபோனதால் கணவன் அன்பு குறைந்ததையும்,[34] தனது மனைவியிடம் திரைப்-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

படம் பார்க்கச் செல்கிறேன் என்று பொய் சொல்லி வேறு பெண்ணைச் சந்திக்கச் சென்றவன் அடைந்த நிலையினையும்[35] நகைச்சுவை-யுடன் எள்ளல் குறிப்புப்படப் பாடியிருப்பதைக் காணலாம்.

மக்கள் நிலை

மற்றொரு கவிதையில் அனைத்து வழிகளிலும் ஏமாற்றிப் பிழைக்கும் மக்களை இனம் காட்டுகிறார் பாரதிதாசன், பிறர் பொருளைப்பறிக்கும் பெருமாள், பங்குபோடும் குருமார், ஊரை ஏய்க்கும் கடைக்காரர்கள் ஆகியவர்களை இனம் காட்டுகிறார். பாலில் நீர் கலப்பதையும், பிறர் பாடலைத் தன்பாடல் என்பதையும், விலையேற்றத்தையும், அரிசியில் கல்லும் புழுவும் கலந்து கொடுப்பதையும் காட்டி, ஏமாற்றிப் பிழைப்போரின் இயல்பினைக் காட்டுகிறார்.[36]

அறிவு வளரவளரத் தருமமும் ஒழுக்கமும் சிதைந்து விடுகிறது என்பதை,

> "அறிவு வளரவளரத் தருமம் அரோகரா — ஒழுக்கம்
> அரோகரா"

என்று "அரோகரா" என்ற சொல் மூலம் கேலி செய்திருப்பதைக் காணலாம். இறைப்பக்தியுடன் கூறவேண்டிய சொல்லான அரோகரா, இங்கு எள்ளல் குறிப்புடன் இடம்பெற்றுள்ளது.[37]

இதேபோன்று மக்களுக்கு உள்ள பொருள் மோகத்தைக் கண்டு வணிகர்கள் ஏமாற்றும் நிலையினை 'எவர்சில்வர் ஏனம்' எனும் கவிதை மூலம் காட்டுகிறார். கணவரைத் தொல்லை செய்து எவர்சில்வர் பாத்திரத்தை வாங்கும் பெண்களை.

> "..... கேட்பான்
> தட்டைக்கொடுத்துப் பட்டுச்சேலையைப்பாவி
> சரிகைக் சேலையைச் சுரண்டித்
> தரவருவான் சிறுகரண்டி"

என ஏமாற்றும் வணிகர்களை இனம் காட்டுகிறார்.[38]

திரைப்படமும் திரைப்படத்துறையும்

திரைப்படத்தையும், திரைப்படத்தின் தரத்தையும் கடுமையாக விமரிசிக்கிறது இவரது பாடல்கள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

''சென்னையைக் காட்டிவை குந்தமென் பார்ஒரு
செக்கினைக் காட்டிச் சிவன்பிள்ளை என்பார்கள்
நன்னெறி காணாத மூதேவி தன்னையும்
நான்முகன் பெண்டென்பர்''[39]

என்று திரைப்படத் துறையினைச் சாடியிருப்பதைக் காணமுடிகிறது. 'நன்னெறி காணாத மூதேவி' என்று திரைப்பட நடிகையையும் கேலி செய்கிறார். மேலும்,

''பரமசிவன் அருள்புரிய வந்துவந்து போவார!
பதிவிரதைக் கின்னல் வரும் பழையபடி தீரும்!
சிரமமொடு தாளமெண்ணிப் போட்டியிலே பாட்டுச்
சிலபாடி மிருதங்கம் ஆவர்த்தம் தந்து
வரும் காதல்! அவ்விதமே துன்பம் வரும், போகும்?
மகரிஷிகள் கோவில்குளம் –இவைகள் கதாசாரம்''

என்று தமிழ்த் திரைப்படத்தின் கதையமைப்பினையும், நிலையினையும் கேலி செய்கிறார்.[40] பரமசிவன் முதலாக மகரிஷிகள் ஈறாகத் திரைப்படத்தில் புராணம் அதிகம் இடம்பெறுவதை ஏளனம் செய்வதாகக் கொள்ளலாம்.

பிறமொழிப் பாடலை விரும்பும் தமிழர் நிலையையும், இந்திப் பாடலையும் அங்கதக் குறிப்புடன் சாடுவதை,

''சங்கீத விற்பனனாம் ஒரு
சண்டாளன் ஆரம்பித்தான் இந்துஸ்தான் ஒன்றை
அங்கந்தப் பாட்டினிலே — சுவை
அத்தனையும் கண்டுவிட்டது போலவே
நம் குள்ளர் வாய்திறந்தே — நன்று
நன்றென ஆர்ப்பரித்தார்''

எனும் இப்பாடலில் காணமுடிகிறது.[41] இந்திப் பாடகரை 'சண்டாளன்' என்றும், அப்பாடலை விரும்பும் தமிழரைக் 'குள்ளர்' என்றும் நேராக வசைபாடுவதைக் காணலாம்.

மூட நம்பிக்கை

பகுத்தறிவு இயக்கத்தைச் சார்ந்த பாரதிதாசன் மூடநம்பிக்கைகளைக் கடுமையாகச் சாடுவதைக் காணலாம்.

'மூடநம்பிக்கை' எனும் கவிதையில் 'காக்கை கத்தினால் விருந்து வரும்' என்ற நம்பிக்கை சாடப்படுகிறது. ''தனது சாவையே அறி–

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யாத கன்னங்கரிய காக்கையா விருந்து வருவதை அறியும்'' என்றும் ''நல்லதா மூடநம்பிக்கையதே?'' என்றும் ஏளனமாகக் கேட்பதைக் காணலாம்.[42]

பாரதிதாசன் கதைப்பாடல்களில் அங்கதம்

பாரதிதாசனின் பல்சுவைப் பாடல்களில் அங்கதம் காணப்படுவது போலவே, அவரது கதைப்பாடல்களிலும் அங்கதக் குறிப்புக்கள் காணப்படுகின்றன.

பிறபாடல்களில் காணப்படும் அங்கதக் குறிப்புக்கள் போலன்றி, இக்கதைப்பாடல்களில் முதலிலிருந்து இறுதிவரை அங்கதம் மலர்-களைக் கட்டி மாலையாக்கும் நூலிழைபோலத் தொடர்ந்து சென்று கொண்டிருப்பதை உணரமுடிகிறது. 'சஞ்சீவி பர்வதத்தின் சாரல்', 'நல்லமுத்துக்கதை'[43] 'இருண்டவீடு' எனும் கதைப்பாடல்களில் காணப்படும் அங்கதம் இங்கு ஆராயப்படுகிறது.

சஞ்சீவி பர்வதத்தின் சாரல்

வஞ்சி என்பவள் சஞ்சீவி பர்வதத்தின் சாரல் எனும் காப்பி-யத்தின் தலைவி வேடர் குலத்தைச் சேர்ந்த குப்பனின் காதலி. சஞ்சீவி மலைமேல் இருக்கும் இரண்டு மூலிகைகளைப் பறித்துத் தருமாறு குப்பனிடம் கேட்டுப் பெறுகிறாள் 'அம்மூலிகைகளின் சிறப்பு, ஒன்றைத் தின்றால் உலக மக்கள் பேசுவதைக் கேட்கலாம்; மற்-றொன்றைத் தின்றால் உலகக் காட்சிகளை நேரில் காணலாம், இருவரும் ஒரு மூலிகையைத் தின்று பிரெஞ்சுக்காரன், அமெரிக்கன், ஆங்கிலேயன் ஆகியோரின் பேச்சைச் கேட்கின்றனர். காதல் முத்தம் கொள்ளத் தொடங்கியபோது எழுந்த ஓசை கேட்டு அனுமனால் மலை தூக்கப்படுமோ எனக் குப்பன் பயப்படுகிறான். இராமாயணம் சொல்-லும் பாகவதரின் கதைக்கு ஏற்றாற்போல அனைத்தும் நடப்பதாக எண்ணுகிறான். உண்மையை உணர்ந்திருந்த வஞ்சி, குப்பன் உள்ளத்தில் மண்டியிருந்த மூடப்பழக்கங்களை அகற்ற வாய்ப்புக் கிடைத்ததாக எண்ணிப் பலபடப் பேசுகிறாள். மற்றொரு மூலிகை-யைத் தின்று உண்மை உணர்கிறான் குப்பன்.

இது சஞ்சீவி பர்வதத்தின் சாரல் என்பதன் கதைச்சுருக்கம் இக்கதை ஒரு நையாண்டிக் காப்பியம் என மா. செல்வராசன் எடுத்-துக் காட்டுவார்.[44] ''இன்பச்சுவை மிகுந்து காணப்படும் இப்பகுதியில் உள்நோக்கம் கருதித் சொல்லப்படும் கதைகளில் வரும் உள்நோக்கை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மறந்து, கதையையே மெய் என்று நம்புகின்ற மக்களின் அறியாமை எள்ளிநகையாடப் படுகிறது'' என்று அ.ச. ஞானசம்பந்தன் கூறுவார்.[45]

இக்காவியம் மூலம் முடப்பழக்கங்களைச் சாடுவதையும், இராமாயணக் கதை கூறுவோனின் ஏமாற்று உள்ளத்தையும் எடுத்துக்காட்டுவதைக் காணலாம்.

மனிதருக்குள் வேறுபாடு இல்லை எனக் கூறும் பிரெஞ்சு மனிதனையும்,[46] எல்லோரும் நன்றாக இருக்கவேண்டும் எனக் கூறும் அமெரிக்கனையும்,[47] அடிமைத்தளையை மீறிட இந்தியரால் ஆகாது எனக்கூறும் ஆங்கிலேயனையும்[48] காட்டுவது இந்தியரின் அடிமை மனப்பான்மையினையும், மூடப்பழக்கங்களையும் எள்ளிநகையாடித் திருத்துவதற்கேயாகும்.

புராணம், மதம், பிற்போக்கு முதலிய பழைய மூடநம்பிக்கைகளின் வடிவமாகக் குப்பனும், பகுத்தறிவு, ஆற்றல், மக்கள், உழைப்பு, விடுதலை போன்றவைகளின் வடிவமாக வஞ்சியும் படைக்கப்பட்டு அங்கத உணர்வைக் கதைமுழுதும் பாரதிதாசன் வெளிப்படுத்துகிறார்.

இராமாயணக் கதை சொல்லும் பாகவதரை இக்காவியத்தில் காட்டி, அவர் மக்களை ஏமாற்றும் விதத்தை,

> ''சத்தியரா மாயணத்திற் சத்தான இப்பகுதி
> உத்தியரால்க் கேட்டோர் உரைத்தோர் எல்லாருமே
> இங்குள்ள போகங்கள் எல்லரம் அனுபவிப்பார்;
> அங்குள்ள வைகுந்தம் அட்டியின்றிச் சேர்வார்கள்;
> ஜானகீ கரந்தஸ் மரணே! ஜய ஜயராம்!''[49]

எனவும்,

> 'ராமாயணம் சொல்லி நாளைக் கழிக்கின்ற
> ஏமாந்தார் காசுக் கெசமானன் என்றுரைக்கும்
> பாகவதன் சொல்வதன் பலபேரைக் கூட்டியே
> ஆகியதும் இந்த அரிய உழைப்புக்கும்
> பத்தோ பதினைந்தோ பாகவதன் பெற்றிடுவான்''[50]

என ''ஏமாந்தார் காசுக்கு எசமானன் என்று உரைக்கும் பாகவதன்', எனவும் ஏளனம் செய்கிறார். ''இக்காவியத்தில் அறியாமையின் மொத்த உருவமாகக் குப்பனைப் படைத்து நையாண்டி மூலமாய்ச் சமுதாயக் கருத்துக்களைப் பூகம்பமாய்ப் பொழிந்திருக்கிறார் பாரதிதாசன்'' என்பவர் இராமலிங்கம்.[51]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நல்லமுத்துக்கதை

காலே அரைக்கால் கம்பராமாயணத்தைப் படித்துத் தந்தை-சொல் தட்டலாகாது எனப் பெண்ணைப் பார்க்காமலே தன்னுடைய திருமணத்திற்கு இசைந்து, பின்னர் இந்தி எதிர்ப்புப்போரில் சிறை சென்று திரும்பியபின், தந்தை சொல் மறுத்துக் காதல் மணம் புரிந்து கொள்கிறான் நல்லமுத்து.

இக்கதையில் நல்லமுத்துவின் பெற்றோரான விரசலூர் வெள்ளையப்பன், மண்ணாங்கட்டி ஆகியோரின் சாதகம் பார்ப்பது பற்றிய மூடநம்பிக்கையும், சொறிபிடித்த கொக்குப் புரோகிதன் என்ற சாதகம் பார்ப்பவனின் பொய்மை. போன்றவையும், புராணங்-களும் கேலிசெய்யப்பட்டிருப்பதைக் காணலாம்.

''காலே அரைக்கால் கம்பராமாயணம்'' படிப்பதாகக் கூறும் நல்லமுத்து, அதற்கான விளக்கத்தை.

> ''சிதம்பர நாதர் திருவரு ளாலே
> அரையே அரைக்கால் அழிந்தது போக
> மேலும் மொழிமாற்று வேலைப்பாட்டுடன்
> காலே அரைக்கால் கம்பரா மாயணம்
> அச்சிடப் பட்டதை அறியீரோ''52

என்று கூறுவதன் மூலம் கம்பராமாயணத்தை அழகாகக் கிண்டல் செய்கிறார் இதேபோன்று நல்லமுத்துவுக்கு மணமுடிக்க ஏற்பாடு நடைபெற்றபோது, இவனைப் பார்க்க விரும்புவதாகப் பெண் கூறி னாள். அப்பொழுது,

> ''அப்பாவைப் பார்த்தாள் அதுவேபோதும்
> அப்பா கருத்துக் கட்டி உண்டா?
> இந்தரா மாயணம் இயம்புவ தென்ன?
> தந்தை சொல்லைத் தட்டலா காதே
> என்று தானே இயம்பு கின்றது?''53

என்று கூறுவதன் மூலமாகத் 'தந்தை சொல் தட்டலாகாது' என்று இருந்த இராமனைக் கேலி செய்வதைக் காணலாம்.

விரசலூர் வெள்ளையப்பன் தனது மகன் திருமணம் பற்றிச் சாதகம் பார்க்கச் சொறிபிடித்த கொக்குப் புரோகிதனிடம் கேட்கி-றான். பிறருக்குச் சாதகம் பார்த்து நன்மை தீமை சொல்லும் அப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

புரோகிதனின் குடும்பத்தில் எதுவுமே நன்றாக நடைபெறவில்லை என்பதை அவன் வாயிலாகவே பாரதிதாசன் காட்டுகிறார்.

''தெரியா மல்என் பெரிய பெண்ணைத்
திருட்டுப் பயலுக்குத் திருமணம் செய்தேன்;
.....
சிறைக்குப் போனான் செத்தும் தொலைந்தான்;
.....
மொட்டைத் தலையுடன் மூதேவி போலப்
பெரியவள் பிறந்தகம் வரநேர்ந்து விட்டது''[54]

இரண்டாவது மகள் நிலையும் இவ்வாறே ஆகிவிட்டது என்று சொல்லும் புரோகிதன்'

''இந்நேர மட்டும் ஏதேதோ நான்
தில்லு மல்லுகள் செய்து பார்த்தேன்
யாரும் சிறிதும் ஏமாற வில்லை
உங்க ளிடத்தில் ஓடி வந்தேன்
சாதகம் பார்த்துச் சரியாய்ச் சொல்வேன்'' [55]

என்று கூறுவது அவன் ஏமாற்றுக்காரன் என்பதையும், தனது குடும்பத்திற்கே சரியாய்ச் சாதகம் பார்க்கத் தெரியாதவன் மற்றவர் குடும்பத்திற்கு எப்படிப் பார்ப்பான் என்பதையும் குத்திக்காட்டுகிறது. சாதகம் பார்த்துக் கூறுபவர்கள் மற்றவர் மனநிலையை அறிந்து கொண்டு வாய்ப்பேச்சினால் மயக்கிடுவர் என்பதையும், காசுக்காக எப்படி வேண்டுமானாலும் பேசுவர் என்பதையும் [56] எள்ளல் குறிப்புப் படக் காட்டுகிறார். சாதகம் பார்க்கின்ற மூடப் பழக்கத்தை ஏளனம் செய்யும் குறிப்பையும் காணலாம்.

இருண்ட வீடு

'குடும்பவிளக்கு' எனும் காவியத்தின் மூலம் நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம் என்றும் குடும்பத் தலைவியின் சிறப்பினால் குடும்பமே உயர்வடையும் என்றும் வெளிக்காட்டினார் பாரதிதாசன். குடும்பத்தலைவி நற்குணங்களைக் கொண்டிருப்பதற்கு மாறாக, சோம்பலும், மூடநம்பிக்கையும் கொண்டவளாகவும் கல்வியறிவற்றவளாகவும் இருந்தால் குடும்பம் சீரழியும் என்ற கருத்தினை 'இருண்ட வீடு' மூலம் விளக்குகிறார். ''கல்வி அறிவில்லாத குடும்பம் இருண்டவீடு எனப்பட்டது. கல்வியில்லையேல் அறிவில்லை; ஒழுக்கமில்லை; எதுவுமில்லை. அக்குடும்பத்தினர் அடையத்தக்கது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இன்னது என்பதை இந்நூலில் விளக்கியிருக்கிறேன். ஆடவர் பெண்டிர் அனைவரும் கல்வியின் இன்றியமையாமையை உணர்வது தான் இதை ஊன்றிப் படிப்பதால் ஏற்படும் பயனாகும்'' என்று பாரதிதாசனே இந்நூலில் 'என்னுரை' எனும் பகுதியில் கூறியிருக்கிறார்.[57] அறியாமையில் மூழ்கிக்கிடக்கும் இருண்ட வீட்டுத் தலைவியின் செயல்கள் நகையை விளைவிப்பதன் மூலம் அத்தகைய சமுதாயத்தையும் வெளிக்காட்டுகிறது.

இருண்டவீட்டுத் தலைவி, தன் வீட்டில் இருக்கும் கடிகாரத்திற்குக் கூடச் சாவி கொடுக்கத் தெரியாமல் இருக்கும் நிலையையும் ''சண்டி மணிப்பொறிக்கு சாவிகொடுக்க அண்டை வீட்டானை அன்றே அழைத்தேன்; வரவே இல்லை''[58] என்பதால் அதற்கும் பிறர் கையையே எதிர்பார்த்துக் காத்திருக்கும் நிலையையும் காட்டிச் சாடுகிறார்.

தன் மகன் நோயினால் தொல்லைப்படும்போது மந்திரக்காரனை அழைக்கச் செல்வதும், ''ஏழரை ஒன்பதிராகு காலம் இப்போது வேண்டாம்'' என்று கூறுவதும்,[59] 'காப்புங்கட்டி வேப்பிலை அடிப்பதும்', 'கன் மகனுக்கு இப்பொழுது சாவு இல்லை எனச் சாதகம் சொல்கிறது' என்று கூறுவதும் மூடநம்பிக்கையின வெளிப்பாடுகளே. குடும்பத்தலைவி சோம்பியிருப்பதால், வீட்டு வேலைக்காரிகள் பொருட்களைத் தம் வீடு செல்வதைக் காட்டியிருப்பதும், கல்வியறிவின்மையால் தங்களுக்கு வந்த கடிதத்தைக் கூடப் படிக்கத் தெரியாது அதனை ஒரு திருமண அழைப்பிதழ் என்று எண்ணி இருக்கும் நிலையைக் காட்டியிருப்பதும்[60] அறியாமையைக் காட்டுவதற்கேயாகும். ''இருண்ட வீட்டின் தலைவியை அறியாமை, மூடப்பழக்க வழக்கங்கள், குருட்டு நம்பிக்கைகள் ஆகியவற்றின் மொத்த உருவமாய்ப் படைத்துப் படிப்போரின் நகைப்புக்கு ஆளாக்கியிருக்கிறார். இங்கு அறியாமையைக் காட்டி அறிவைக் கொளுத்துவது கவிஞரின் நோக்கம்'' என்று இராமலிங்கன் கூறுவது கருதத்தக்கது.[61]

'சஞ்சீவி பர்வதத்தின் சாரல்', 'இருண்ட வீடு'. 'நல்லமுத்துக்கதை' மூன்றிலும் அங்கதக் குறிப்புக்கள் காணப்படினும், சாரலிலும், இருண்ட வீட்டிலும் முதலிலிருந்து கடைசிவரை அங்கத ஒலி தொடர்ந்து ஒலிப்பதைக் காணமுடிகிறது. ஆனால் நல்லமுத்துக்கதையின் முற்பகுதியில் காணப்படும் அங்கதக் குறிப்புக்கள் பிற்பகுதியில் இல்லை. இதற்கு இதன் தலைவனான நல்லமுத்து

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முதலில் நகைச்சுவை மாந்தராக இருந்து, பின்னர் கொள்கைப் பிடிப்புள்ளனவாக மாறுவதும், முற்பகுதியில் சாதகம் பார்த்தல், திருமண ஏற்பாடு செய்தல் போன்ற அங்கதக் குறிப்புக்கள் இடம் பெறுவதற்கு வாய்ப்பான களம் இருப்பதுமே காரணம் எனலாம்.

3. கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை

தேசிகவிநாயகம் பிள்ளை நாகர்கோவிலை அடுத்த தேரூரில் பிறந்தவர். 'கவிமணி' என்றும், 'தேவி' என்றும் சிறப்பாக அழைக்கப்பட்டார். ''உள்ளத்து உள்ளது கவிதை — இன்ப உருவெடுப்பது கவிதை; தெள்ளத்தெளிந்த தமிழில் — உண்மை தெரிந்துரைப்பது கவிதை'' என்று கவிதைக்கு இலக்கணம் தந்தவர். இனிமையும் எளிமையும் இவரது படைப்புக்களின் சிறப்புக் கூறுகள். மலரும் மாலையும், மருமக்கள் வழிமான்மியம், ஆசியஜோதி, தேவியின் கீர்த்தனங்கள், குழந்தைச்செல்வம், உமர்கய்யாம் பாடல்கள் என்ற நூல்களையும், கவிமணியின் உரைமணிகள் என்ற உரைநடை நூலையும் இயற்றியுள்ளார். இவரது படைப்புக்களில் மருமக்கள் வழி மான்மியம் எனும் நூல் மட்டுமே அங்கதக் குறிப்புக்கள் அதிகமாக அமைந்து அங்கத இலக்கியம் என்று போற்றப்படும் அளவிற்குச் சிறந்து விளங்குகிறது.

மருமக்கள் வழிமான்மியம் வெளிவர அமைந்த சூழல்

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை நாஞ்சில் நாட்டைச் சேர்ந்தவர் அவர் காலத்தில் வேளாளர் குலத்தவரிடையே 'மருமக்கள் வழித்தாயம்' என்ற முறை வழக்கில் இருந்தது. இதன்படி, குடும்பத் தலைவன் ஒருவனுடைய சொத்து அவனுடைய மக்களுக்குச் சேராமல் அவனது சகோதரி மக்களாகிய மருமக்களுக்கே உரிமையாகும். அவனது குழந்தைகளுக்கு 'உகந்துடைமை' எனப்படும் சிறு உரிமையைத் தவிர வேறு உரிமை இல்லை. இந்நிலையில் தன் குழந்தைகள் ஒருபுறமும், தன் சகோதரியின் குழந்தைகள் ஒருபுறமும் குடும்பத் தலைவனான காரணவனைத் துன்புறுத்துவது மிகச் சாதாரணமாகிவிட்டது. இயற்கையான அன்பு தன் குழந்தைகள் மீது செல்ல, செயற்கையான சட்டம் அவ்வன்பிற்கு இடங்கொடாபடி தன் சகோதரிகளின் குழந்தைகளுக்குக் குடும்பச் சொத்தைக் கொடுக்கும்படி செய்தது. இதனால் அவர்களிடையே எப்பொழுதும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நீதிமன்றத்தில் வழக்கு நடைபெறும் நிலை ஏற்பட்டது. சொத்தைப் பெருக்கவேண்டும் என்ற எண்ணம் குடும்பத் தலைவனான காரணவனுக்கு ஏற்படாதாகையால் குடும்பச் சொத்துப் பாழாகும் நிலையும் ஏற்பட்டது. இதுமட்டுமன்றி, ஒருவன் பல பெண்களை மணந்து கொள்ளுகின்ற முறையும், அதனால் அவன் இறப்புக்குப் பின்னர் அவன் மனைவியும், குழந்தைகளும் அல்லலுறும் நிலையும் ஏற்பட்டது. இத்தகைய சமுதாயத்தைக் கண்டு வேதனைப்பட்ட கவிமணி, மருமக்கள் வழித்தாயமுறையை நீக்குவது ஒன்றுதான் இன்னல்கள் தீரச் சரியான வழி என்று நினைத்தார். மக்கள் வழித்தாய முறை ஏற்பட்டால்தான் சமுதாயம் மலரும் என நினைத்தார். இதற்காக அரும்பணியாற்றினார். 'மலபார் குவார்டர்லி ரிவியூ' என்ற இதழில் கட்டுரைகள் எழுதியும், 'நாஞ்சில் நாட்டு வேளாளருக்கு ஒரு கோட்டை வினாக்கள்' என்ற தலைப்பில் இருபத்தொரு வினாக்கள் அடங்கிய ஒரு அறிக்கையை வெளியிட்டும், மக்கள் உணர்ச்சியைத் தட்டியெழச் செய்தார். வேளாளர் சமுதாயத்தையும், மக்களையும் நேரிடையாக இகழ்ந்து தாய முறையை மாற்றிக் கொள்ளும்படிக் கூறினால் சரியான பலன் ஏற்படாது என்று எண்ணி, நகைப்பு, இகழ்ச்சி, நன்னோக்கம் ஆகிய மூன்றும் இயைந்துவரும் காவியம் ஒன்றின் மூலமே இந்நிலையை மாற்ற முடியும் எனக்கொண்டார். அதனால் ''அச்சமுதாயத்தில் ஊறிப்போன காரணவர்களைத் திருத்த அங்கதப் பாடலே ஏற்றதெனக் கொண்டார். அறிஞர் பெர்னாட்ஷாவின் அங்கத இலக்கியத்தை ஒத்ததாக அமைந்தது கவிமணியின் அங்கதப்பாடல்''[62] இந்த அங்கதப் பாடல் சுவைப்பதற்காக மட்டும் எழுதப்பட்டதன்று.[63]

கதைச்சுருக்கம்

'மருமக்கள் வழிமான்மியம்' என்ற கவிமணியின் நூலின் கதை வருமாறு :

இந்நூலின் பாட்டுடைத் தலைவி நாஞ்சில் நாட்டு வேளாளப்பெண். அவள் தனக்கு ஏற்பட்ட துன்பத்தைச் சமுதாய மக்கள் கேட்க எடுத்துரைக்கிறாள். ஏழைக்குடும்பத்தில் பிறந்த இவள் தினராறாம் வயதில் ஒரு வயதான செல்வருக்கு ஐந்தாம் மனைவியாக வாழ்க்கைப்படுகிறாள். இவளை மணந்த பஞ்சகல்யாணிப் பிள்ளை வீட்டில் சக்களத்திகள், மாமி, மதனி முதலியோரால்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

துன்பமடைகிறாள். இவள் கணவனுக்கும், கணவனின் சகோதரி கணவனான மைத்துனருக்கும் மனமாற்றம் உண்டாகிறது. இருவரும் நீதிமன்றத்தில் முக்காடுகின்றனர். செல்வம் அனைத்தையும் இழந்து நிற்கின்றனர். கதைத் தலைவியின் கணவரும் நோயில் இறந்து விடுகிறார். சமுதாய் உரிமைப்படி மருமகன் காரணவனாகிறான். மனைவி மக்கள் உகந்துடைமை பெற்று வெளியேறும்படியாகிறது.

இந்நூல் தமிழ்மொழியில் இரண்டாவதாக எழுந்த முழுமையான அங்கத இலக்கியம் எனலாம். இதற்குமுன் அங்கதக் குறிப்புக்களடங்கிய பாடல்களும், சிறியசிறிய அங்கதப் பாடல்களும்தான் தோன்றியிருக்கின்றனவே ஆனால், முழுமையான அங்கத இலக்கியம் எனுமளவிற்குத் தோன்றியவை மருமக்கள் வழிமான்மியமும், பஞ்சலட்சணமும் ஆகும்.

இவ்விலக்கியத்தில் காணலாகும் அங்கத இயல்புகளைப் பின்வருமாறு வகைப்படுத்திக் காணலாம்.

பெயரிலும் பகுப்பிலும் அங்கதம்

'மகாத்மியம்' என்ற வடசொல் 'மான்மியம்' என நிற்கிறது. கி.பி. 17,18 ஆம் நூற்றாண்டுகளும், அதற்குச் சற்றுப் பிற்பட்ட காலமும் சிற்றிலக்கிய காலமாகும். அக்காலங்களில் மூர்த்தி, தலம், தீர்த்தச் சிறப்புக்களைக் கூறும் புராணங்களும், மான்மியங்களும் தமிழ்மொழியில் மிகுதியாகத் தோன்றின. அவற்றிற்கு இருந்த செல்வாக்கினை அறிந்த கவிமணி தம் படைப்பிற்கு 'மான்மியம்' என வஞ்சப்புகழ்ச்சியாகப் பெயர் சூட்டினார்.[64]

'மருமக்கள் வழிமான்மியம்' என்பதற்கு மருமக்கள் வழித்தாய முறையின் பெருமை என்பதே நேரிடையாக பொருளாக இருப்பினும், அதற்கு மாறான மருமக்கள் வழித்தாய முறையினால் அச்சமுதாயத்திற்கு ஏற்படும் தீமைகளைக் கூறும் நூல் என்ற பொருள்பட அமைந்து இருப்பதால், தலைப்பிலையே அங்கதக் குறிப்பினை அமைத்திருக்கிறார் எனலாம்.

நூலின் பகுப்பு முறையாகப் பதினாறு படலங்களைக் கவிமணி படைத்துள்ளார். இப்படலப் பெயர்கள் கம்பராமாயணம், சிலப்பதிகாரம் போன்ற காப்பியங்களை நினைவூட்டினாலும், 'படலம்' என்ற பெயரமைப்பினைக் கிண்டலுடன் அமைத்துள்ளார் எனலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'குலமுறைகிளத்து படலம்' முதலாகக் 'கும்பியெரிச்சல் படலம்' ஈறாக உள்ள இப்பதினொரு படலங்களின் தலைப்புக்களும் அங்கதக் குறிப்புப்பட அமைந்துள்ளன. 'மாமி அரசியற் படலம்' என்பது மாமியாரின் அளவுக்கதிகமான கொடுமையினைச் சுட்டுகிறது. 'கடலாடு படலம்' காரணவர் தனது ஐந்து மனைவியருடன் கடலில் குளித்த முறையையும், 'நாகாஸ்திரப் படலம்' காரணவனின் மருமகன் காரணவனைப் பழிப்பதையும், 'கருடாஸ்திரப் படலம், அதற்கு எதிராக காரணவன் பழிப்பதையும் (நாகாஸ்திரத்திற்கு எதிராகக் கருடாஸ்திரம்), 'யாத்திரைப் படலம்' காரணவன் இறந்த செய்தியையும் நகைச்சுவை, கேலி கலந்த அங்கதமாகக் கூறுகிறார் கவிமணி என்பது தெரிகிறது.

தனது நூலின் தொடக்கத்தில் 'விநாயகர் வணக்கம்' பாடும் போது கடவுளர்களையே சாடுவதைக் காணலாம். எல்லாவகையான இடையூறுகளையும் நீக்கவல்ல விநாயகக்கடவுள், நெஞ்சு கலங்கி வருந்தி நிற்பது போலவும், தந்தை வீடெனத் தங்கிடமின்றி, மாமன் வீடென மதிப்பிடமின்றி, சந்தியும் தெருவும் தண்ணீர்க் கரையும் மரத்தின் அடியும் வாழிடமாக'' இருப்பதைக் கரட்டி[65] மருமக்கள் வழித்தாய முறையினரும் காரணவன் இறந்தவுடன் போக்கிடமின்றி அலைவதைக் காட்டுகிறார்.

'அவையடக்கம்' எனும் பகுதியில் அக்கால இலக்கணப் புலவர்களின் நிலையைச் சாடுவதைக் காணலாம்.[66]

கதைத் தலைவரான 'பஞ்சகல்யாணிப் பிள்ளை' என்பாரின் பெயர்க்காரணமாக,

> ''ஆரைக் கேட்டுநீர் ஐந்துகல் யாணம்
> அடுக்கடுக் காகச் செய்தீர்! ஐயா!
> பட்டப் பெயரும் 'பஞ்சகல் யாணிப்
> பிள்ளை' யென்றுநீர் பெற்றுவிட் டீரே''[67]

என்று கூறுவதும் அங்கதக் குறிப்புப்பட அமைந்துள்ளது.

நாஞ்சில் நாட்டு மக்களைத் திருத்தவேண்டும் என்ற எண்ணத்துடன் இந்நூலைப் படைத்திருப்பதால், அச்சமுதாயமும், சமுதாயத்தில் உள்ள பல்வேறு அங்கங்களும் இவரது அங்கதப் பார்வைக்கு ஆளாகிச் சிறந்ததொரு சமுதாய அங்கத இலக்கியமாக இந்நூல் உருவாகியிருக்கிறது.

சக்களத்திகளின் வாழ்க்கை முறை

காரணவன் ஐந்து பெண்களை மணந்திருக்கிறான். ஐந்து மனைவியரின் வேலைகளை ஐந்தாம் மனைவி கூறுகிறாள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

''மனைவியர் வேலை வகையினைக் கேளும்
தொழுத்துச் சாணம் வழிக்க ஒருத்தி
தொட்டித் தண்ணீர் சுமக்க ஒருத்தி
அடுக்களைச் சமையல் ஆக்க ஒருத்தி
அண்டையில் அகலா திருக்க ஒருத்தி
அத்தனை பேருக்கும் அடிமை யாளாய்
ஏழை பாவி யானும் ஒருத்தி;
எளியேன் சென்ற நாள்முத லாக
எல்லா வேலையும் என்தலை மேலாம்
பெண்டிர் நால்வரும் பென்ஷன் பெற்றனர்''68

என்று கூறுவதில் தன் வீட்டில் உள்ள பல்வேறு வேலைகளைச் செய்வதற்கு மட்டுமே ஒருவன் பல மனைவியரை மணந்துகொள்ளும் வழக்கத்தைச் சாடுகிறார். இவள் அங்குச் சென்றவுடன் எல்லா வேலைகளும் இவள் தலை மேலாகிவிட்டதாம். ஒரு மனைவிக்கு ஏதேனும் வேலை கொடுத்தால் உடனே அவளது குழந்தை அழும் என்பதும், மூன்றுமாதமாய் முழுகாமல் இருக்கும் ஒருத்தி கட்டிலை விட்டு இறங்கவே மாட்டாள் என்பதும், இன்னொருத்தியை,

'அடுக்களை வந்திடாள் — அரக்குப் பாவையோ?
கரிக்கலம் கையெடாள் — கனகசுந் தரியோ?
வாருகோ லேந்திடாள் — மகாராணி மகளோ?
வெயிலில் இறங்கிடாள் — மென்மலர் இதழோ?
குடத்தை எடுத்திடாள் — குருடியோ நொண்டியோ'' 69

என்று கூறுவது அம்மனைவியர் தம் வேலையிலிருந்து நழுவுவதை-யும், ஐந்தாவது மனைவியைக் கொடுமைப் படுத்துவதையும் அங்கத முறையில் காட்டுவதற்கே எனலாம்,

மாமியின் கொடுமை

மாமியின் கொடுமையினை,

''அரங்கு பூட்டாம், அறைப்புரை பூட்டாம்
தட்டுப் பூட்டாம், சாய்ப்புப் பூட்டாம்
அரிசியை நிதமும் அளந்து வைப்பாள்
நல்ல மிளகை நறுக்கி வைப்பாள்
... ...
கடுகையும் எண்ணிக் கணக்கிட்டு வைப்பாள்
தீபா வளிக்குத் தீபா வளியே
எண்ணெ யறியும் என்தலை அம்மா'' 70

என்றும்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

''முன்னே நோக்கினும் பின்னுள தறியும்
எறும்பும் காணா இடத்திவள் கண்போம்
ஆணாய்ப் பிறந்தால் அகிலம் ஆளுவாள்
இருகண் இருப்பின் இடமிது போதுமோ? 71

என ஒற்றைக் கண்ணுடைய மாமியின் கொடுமையைக் கூறி, அவள் ''திருவிளையாடலை பத்துப் பரஞ்சோதிகளே பாடினும் முடியாது என்றால், மூதறிவு இல்லா அடியாள் சொல்லி அறியப்படுமோ?'' என்று கூறுவதில் அங்கதம் அமைந்திருப்பதைக் காணலாம்.

அத்தை மகள் வீரலட்சுமி தன் மாமன் வீட்டில் நீண்டநாள் தங்கியிருந்ததால் அவள் உடல் பெருத்துப்போனதை நகைச்சுவை-படக் குத்திக் காட்டுவதும்,72 விருந்தினர் எவரேனும் வந்தால் பலதரப்பட்ட உணவு வகைகளைச் சமைத்துப் படைப்பதால் அரசனும் கூட ஆண்டியாவானே என்று காட்டுவதும் 73 அன்றையச் சமுதாய நிலையைக் காட்டி ஏளனம் செய்யவே எனலாம்.

குமரித்துறையில் கடல் நீராடச் சென்றபொழுது.

''ஏக காலத் திவர்களை எல்லாம்
அங்கை பிடித்துநீர் ஆடு தற்குநான்
பன்னிரு கரத்தப் பரமன் அல்லவே,
இருபது கரத்தவ் இராக்கதன் அல்லவே,
ஆயிரங் கரத்தவ் அண்ணலும் அல்லவே!''74

என்று கூறுவதன் மூலம் பல மனைவியரை மணந்த கணவன் படும் துன்பம் நகைச்சுவை கலந்த அங்கதமாக வெளிப்படுத்தப்-பட்டுள்ளது.

கணவன் உண்ட எச்சில் இலையில் மனைவி உண்பது அக்-காலப் பழக்கமாக இருந்தது. ஒருநாள் கணவன் உண்ட எச்சில் இலையில் உண்பதற்காக மனைவியருக்குள் ஏற்பட்ட குடுமிப்பிடிச் சண்டையையும், இரத்தக் களரியையும் காட்டி, விருந்தினருக்கு முன் தங்கள் சண்டையை நிகழ்த்தியதையும் அதனால் திருநாளன்று கணவன் ஐந்து இலைகளில் உணவு படைத்து உண்ட பின்னர் அவ்வெச்சில் இலைகளில் மனைவியர் உண்ணவேண்டும் என்று வெள்ளையம்பிள்ளை என்பவர் நீதி கூறுவதுபோன்று அமைத்திருக்-கின்றார்.75 இப்பகுதியில் அக்காலச் சமுதாயப் பழக்கம் ஏளனக் குறிப்புடன் சாடப்பட்டிருக்கிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பொருளற்ற செலவுகள்

வெளிப்பகட்டிற்காகவும், மற்றவர்கள் முன் தான் உயர்ந்தவன், சிறந்தவன், பணக்காரன் என்று காட்டுவதற்காகவும் அன்றைய வேளாளர் குல மக்கள் தங்கள் பொருளை எல்லாம் செலவு செய்த முறையைச் சுட்டிக் காட்டுகிறார்.

ஆத்தாள் செத்தபொழுது ஆயிரக்கணக்கில் செலவு செய்ததையும்[76] ஆலடி மாடன் கொடைக்கு செலவு நிறைய ஆவதையும், வில்லுக்காரி வீரம்மைக்கு நாலு சேலையும், நாற்பது ரூபாயும் ஆனதையும், சல்லடம் கச்சை தைக்க ஐம்பது ரூபாய் ஆனதையும் அதற்கு விளக்கமாக,

> ''போக்கில் லாத பயல்களைப் போலத்
> துணியை அரையில் சுற்றிக் கொண்டு
> நானும் ஆடினால் நன்றா யிருக்குமா?
> காரணவன் என்றொரு கணிசம் வேண்டாமா''[77]

என்று கூறுவதையும் காட்டிப் போலிக் கௌரவத்திற்காகச் செலவு செய்வதைச் சாடுகிறார்.

அரசாங்கத்தில் மிகச் சிறிய பணியில் இருக்கும் 'சானல் வாச்சர்' சந்தனத் தேவருக்கும், கார்டர் அண்ணனுக்கும் 'சென்ட் ஆப்' நடத்துவதற்காகப் பொருள் செலவு செய்வதைக் காட்டித் தகுதியற்றவர்களுக்குக் கூடத்தங்கள் பெருமையைக் காட்டப் பொருள் செலவு செய்யும் நிலையை ஏளனம் செய்கிறார்.

நாட்டு வைத்தியரும், அரசனும்

நாட்டு வைத்தியர்களைக் கவிமணி சாடுவதைக் காணமுடிகிறது. மிசியன் தெரசர் என்னும் ஆங்கில முறை வைத்தியர் நல்லவர் என்றும் கூறுகிறார். ஏனெனில் இவர்,

> ''காட்டை வெட்டிக் கஷாய மிடவோ
> உடலைக் குறுக்கிக் குடிநீர் காய்ச்சவோ
> மலையை யிடித்துச் சூரணம் வைக்கவோ
> சொல்லி, எங்களைத் தொந்தரை செயவிலை''[78]

என்று கூறுவதன் மூலம் அவர் காலத்திய நாட்டு வைத்தியர்கள் தம் நோயாளிகளைப் பெரிதும் துன்பத்திற்கு ஆளாக்கினர் எனத்தெரிகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கவிமணியின் பார்வையில் அரசனும் தப்பவில்லை. அரசன் ஆடுபுலி ஆட்டம் ஆடுபவனாகவும், சீட்டு விளையாட்டில் ஈடுபாடு கொண்டவனாகவும், இருந்து, மக்களைக் கவனியாது இருப்பதைக் 'கருடாஸ்திரப் படலத்தில்' காட்டி ஏளனம் செய்கிறார்.[79]

நீதிமன்றமும் வழக்கறிஞர்களும்

நீதிமன்றத்தையும், வழக்கறிஞர்களையும் கவிமணி ஏளனத்துடன் சாடுகிறார். ''கோடேறிக் குடிமுடித்த படலம்'' முழுவதும் இதற்குச் சான்றாக விளங்குகிறது. வழக்கறிஞர் அலுவலகம் ''பொய்கள் அடைக்கலம் புகுமிடமாகியும், குதர்க்கம் குடிகொளும் புகலிடமாகியும்'' உள்ளது. என்றும், 'வக்கீல் குமாஸ்தா'வை 'ஆனைப் பொய்யன்' என்றும், வழக்கறிஞர் காசுக்காகப் பல்வேறு சரட்சியங்களை உருவாக்கும் நிலையினையும் கூறி,

> ''அல்லலை விருந்துக்கு அழைத்திட வேண்டாம்
> தொல்லைக்குத் தூது சொல்லிட வேண்டாம்
> ஐயோ! கோர்ட்டிற்கு யாரோ போவார்!''[80]

என்று அறிவுரையும் கூறுகிறார்.

அரையடிச் சுவருக்காக 'ஐகோர்ட்டு' வரையிலும் ஏறி வழக்குப் பேசி அடியோடு கெட்ட மந்திரம் பிள்ளை கதையினையும் காட்டுகிறார்.[81]

சாட்சிகள், சாட்சி சொல்ல வருவதற்காக இல்லாதவற்றை எல்லாம் கூறிப் பணம் பறிப்பதையும், தன்னுடைய மக்களுக்கு உண்ண உணவில்லாத பொழுது கூட 'வக்கீல்' வீட்டிற்குக் கட்டுக்கட்டாகக் காய்கறிகள், மாம்பழம், பால், நெய், வைக்கோல் அனுப்புவதையும் காட்டிக் குடும்பநிலை தாழ்வதை வெளிப்படுத்துகிறார். மேலும் கோர்ட்டில் எதற்கெடுத்தாலும் காசு கேட்பதை,

> ''கோர்ட்டு பீஸு. குமாஸ்தா பீஸு
> கூடிக் காப்பி குடிக்கப் பீஸு
> வெற்றிலை வாங்கிட வேறொரு பீஸு
> .....
> நிற்கப் பீஸு இருக்கப் பீஸு
> நீட்டிய கையை மடக்கப் பீஸு
> .....''

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அந்தப் பீஸு இந்தப் பீஸு
.....
இப்படியாக என்றென் றைக்கும்
பீஸு பீஸாப் பிச்சுப்பிடுங்கும்''[82]

நிலையைக் காட்டி ஏளனம் செய்கிறார்.

வழக்கறிஞர்கள் ஆடிக்கறப்பதை ஆடிக்கறப்பர், பாடிக்கறப்பதைப் பாடிக் கறப்பர் என்றும், சாட்சிகளைத் தேவையில்லாமல் கேள்விகளைக் கேட்டு இழுத்தடிப்பர் என்றும் கூறி அவர்களின் முகத்திரையைக் கிழிக்கிறார்.

வெறும் பேச்சுக்காரர்களுக்கே இவ்வுலகில் இடம் என்பதையும், அவர்கள் மற்றவர்களைப் பலபடத் துன்புறுத்தும் விதத்தையும் நாலாம் மனைவியின், மாமன் மகனான வக்கீல் குமாஸ்தா முலம் காட்டுகிறார்.

கல்வியும் முடநம்பிக்கையும்

கவிமணியின் பார்வையில் கல்விமுறையும் ஏளனம் செய்யப் படுவதைக் காணலாம்.

தந்தையின் இறுதிக்காலத்தில் தலைமாட்டிலிருந்து திருவாசகம் படிக்குமாறு ஐந்தாம் மனைவியின் மகனைக் கேட்டுக்கொள்கிறார்கள். அவன்

''ஆரே தமிழை அறிபவர்! என்றான்;
பள்ளியில் தமிழும் படித்தேனோ? என்றான்
பரீக்ஷையில் தமிழொரு பாடமோ? என்றான்;
என்னால் படிக்க இயலாது;'' [83]

என்று கூறுவது அக்காலக் கல்வித்தரத்தை எடுத்துக் காட்டுவதாக அமைகிறது.

''பிலே நீ
ஏழு வஷமாய் இங்கிலீஷ் படித்தையே
ஏ, பி, ஸி, டி எழுதத் தெரியுமா?
எத்தனை பணத்தை வாரியெறிந்தேன்'' [84]

எனவும், சாஸ்தாங் கோயில் சாந்தி அய்யர் மகன் படித்துப் பதவியிலிருப்பதைக் கூறி,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

''பட்டினி கிடந்து படிப்பவர் மட்டுமே
பரீட்சை தேறுவர், பட்டமும் பெறுவர்'' [85]

என்று கூறுவதும், தம் சமுதாயத்தில் கல்வி கல்லாத நிலைடை அங்கதக் குறிப்புடன் எடுத்துக்காட்டுவனவாக அமைகின்றன.

சிறு தெய்வங்களுக்காகக் கடன்பட்டாகிலும் காலாகாலத்தில் காரியம் செய்யவேண்டும் என்றும், கொடை ஓராண்டு கொடுக்கத் தவறினால் குடும்ப தோசமும், குறையும் வரும் என்றும் [86] பேயும் அஞ்சும் பெரும் பழஞ்சி ஐயனிடத்தில் ஆண்டுதோறும் கொண்ய கடனைக் கொடுக்காவிட்டால் அவர் வயிற்றை ஊதவைத்து விடுவார் என்றும், குறளி ஏறிக் கொன்றிடுவார் என்றும், எதிர்பாராமல் நிறையச் செலவுகள் வந்திடும் என்றும் கூறுவதன் மூலம் அன்றைய மூடநம்பிக்கைகளை வெளிக்காட்டிச் சாடுகிறார்.

நூலின் இறுதியில் மருமக்கள் வழித்தாய முறையின் கொடுமையினைக் 'கும்பியெரிச்சல் படலத்தில்' வசைமாரி பொழிகிறார் கவிஞர்.

''கற்றவருளரோ! கற்றவ ருளரோ!
பெற்ற மக்களைப் பேணி வளர்த்திடாக்
கற்றவ ருளரோ! கற்றவ ருளரோ!
.....
நீதியு முளதோ நீதியுமுளதோ!
மாதர் கண்ணீர் மாறா நிலத்தில்
நீதியு முளதோ! நீதியு முளதோ!'' [87]

என்று ஐந்தாம் மனைவி கூவி ஓலமிடுவது கண்ணகியின் குரல்போல ஒலிக்கக் காணலாம்.

கவிமணியின் இம்முயற்சியின் பலனாக நாஞ்சில் நாட்டு மக்கள் விழித்தெழுந்தனர். வேளாளரின் தாயமுறைச் சீர்திருத்த மசோதா கொல்லமாண்டு 1101ல் சட்டமன்றத்தில் கொண்டு வரப்பட்டு நடைமுறைக்கு வந்தது.

ஆய்வு முடிவுகள்

பாரதியார் கவிதைகளில் முழுவதும் அங்கதமாக அமைந்த பாடல்களைக் காணமுடியவில்லை, அங்கதக் குறிப்புடைய பாடல்களே காணப்படுகின்றன. பாரதியார் கவிதைகளில் தெய்வப்பாடல்களில் அங்கதக் குறிப்பினைக் காணமுடியவில்லை. கண்ணன் பாட்டில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வேலைக்காரன் இயல்பைக் கூறும்போது இக்கால வேலைக்காரன் நிலையை அங்கதக் குறிப்போடு சொல்லக் காணலாம்.

இவர் கவிதைகளில் பெரும்பாலும் விடுதலை வேட்கையினைக் கூறுகின்றபொழுது அங்கதக் குறிப்புக்கள் அமைந்திருக்கக் காண்கிறோம். அதிலும் குறிப்பாக, அடிமைப்பட்டு ஒற்றுமை குலைந்து அச்ச உணர்வோடு வாழ்கின்ற இந்திய மக்களின் நிலையினைச் சொல்கின்றபோது அவரிடத்தில் அங்கத உணர்வு தோன்றக் காண்கிறோம். அஞ்சி அஞ்சிச் சாகும் மக்கள் நிலை, மூடப்பழக்கங்களுக்கு ஆட்பட்டுள்ள தன்மை, ஒற்றுமையின்மை, சமயச் சண்டை, சாதிச்-சண்டை, விடுதலை வேட்கையின்மை, குழந்தை மணம் ஆகிய இயல்புகள் இவரது அங்கதப் பார்வைக்கு உட்படுகின்றன. மேலும், விடுதலை வீரர்களில் உள்ள போலிகளையும் சாடக் காண்கிறோம்.

ஆங்கிலக் கல்வியைப் பற்றித் தமது சுயசரிதையிலும், மற்றொரு இடத்திலும் பேசுகிறார். காதல், நாடகத்திலும் காவியத்-திலும் ஏற்றம் பெற்று நடைமுறையில் பழிக்கப்படும் நிலையைச் சாடுகிறார். அக்கால வேலைக்காரரது இயல்பைக் 'கண்ணன் என் சேவகன்' என்னும் பாடலில் புலப்படுத்தக காண்கிறோம்.

பாஞ்சாலி சபதத்தில் பாரதியார் பாரத நாட்டு விடுதலைப் பொருளை உள்ளுறைப் பொருளாகப் பாடுகிறார் என்பது அனைவரும் அறிந்த ஒன்றாகும். அவ்விதம் பாடும்போது விடுதலைப் போராட்ட காலத்தில் காணப்பட்ட பல்வேறு நிலையினரைப் பல்-வேறு நிலையில் அங்கத முறையில் சாடக் காணலாம்.

இவ்வாறு பாரதியார் தம்கால மக்கள் நிலையைப் பாடுகின்ற போது நேரடியாகக் கேலி செய்கிறார்; வெள்ளையன் கூற்றில் ஏளனம் செய்கிறார்; பாஞ்சாலி சபதத்தில் புராணம் வாயிலாகச் சாடுகிறார்.

நேரடியாகச் சாடுவதே பாரதியாரின் பொது இயல்பாகக் காணப்படுகிறது.

பாரதியாருக்குப் பின்னர் வந்த பாரதிதாசன் பகுத்தறிவு இயக்கத்தோடு பெரிதும் தொடர்புடையவர். எனவே, சமயம், சமய-வாதி, மூடப்பழக்க வழக்கங்கள், விரதம், புராணங்கள் ஆகியவை இவரால் பெரிதும் ஏளனம் செய்து சாடப்படுகின்றன. பெண்கள் நிலை திரைப்படம், படிப்பறிவின்மை ஆகிய பொதுச்செய்திகளும் இவரால் சாடப்படுகின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரதிதாசன் கவிதைகளில் காணப்படும் அங்கதக் குறிப்புக்களைத் தவிர, 'சஞ்சீவி பர்வதத்தின் சாரல்', 'நல்லமுத்துக்கதை' 'இருண்டவீடு' ஆகிய கதைப்பாடல்களிலும் அங்கதச் சுவை அமைந்துள்ளது. பாரதிதாசன் பாடல்களில் 'சஞ்சீவி பர்வதத்தின் சாரல்' முழுமையாக மூடநம்பிக்கைகளையும், சமயச் சொற்பொழிவுகளையும் ஏளனம் செய்யும் தனிக்கதைப்பாடல் எனலாம்.

பாரதியார் விடுதலை உணர்வையே மையப்படுத்திப் பாடியிருக்க, பாரதிதாசன் சமுதாயச் சீர்திருத்தத்தை அதிகமாகப் பாடுகிறார். ஆயினும், இவரிடத்தில் பாரதியாரைப் போன்றே, வன்மையாகச் சாடுவது மேலோங்கியிருக்கிறதே தவிர, அங்கதச் சுவை குறைந்தே காணப்படுகிறது.

மொத்தப் பாடல்களை நோக்க இவர் பாடிய அங்கதக் குறிப்புக்கள் கொண்ட பாடல்களின் எண்ணிக்கை மிகக் குறைந்திருப்பது இதற்குச் சான்றாகும்.

இதே காலகட்டத்தில் வாழ்ந்த கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, பாரதியாரைப் போன்று தேசிய உணர்வையோ, பாரதிதாசனைப் போன்று சமுதாய உணர்வையோ கொண்டு பாடவில்லை. ஆனால் அவர் வாழ்ந்த நாஞ்சில் நாட்டு வேளாளர் மக்களிடையே காணப்பட்ட மருமக்கள் வழித்தாயமுறையை அழகியதொரு அங்கத இலக்கியம் மூலம் வெளிப்படுத்திச் சாடக் காண்கிறோம். தமிழிலக்கியத்தில் முழுவதும் அங்கதமாக அமைந்த ஒரு தனிநூல் இதுவாகும்.

பாரதியார், பாரதிதாசன், கவிமணி ஆகிய மூவர் பாடல்களும் அவர்கள் வாழ்ந்த காலச் சமுதாயத்தில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தப் பெரிதும் பயன்பட்டன. பாரதியார் கவிதைகள் விடுதலை உணர்வினை ஏற்படுத்தின; பாரதிதாசன் கவிதைகள் தமிழ் உணர்வினை ஏற்படுத்தின; கவிமணியின் இலக்கியமோ மருமக்கள் வழித் தாயமுறையை மாற்றியமைக்கக் காரணமாக அமைந்தது; சமுதாய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியது.

குறிப்புக்கள்

1. பாரதியார் கவிதைகள், பாரத ஜனங்களின் தற்கால நிலைமை, ப. 24.
2. மேலது, ப. 25.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3. மேலது, ப. 25.
4. பாரதியார் கவிதைகள், தொண்டு செய்யும் அடிமை. பக். 62—63.
5 பாரதியார் கவிதைகள், நடிப்புச் சுதேசிகள், ப, 69.
6. மேலது, ப. 69.
7. மேலது. பக். 70—71.
8. பாரதியார் கவிதைகள் நாட்டுக்கல்வி, ப. 266.
9. பாரதியார் கவிதைகள், யோகசித்தி, ப. 153.
10. பாரதியார் கவிதைகள், சுயசரிதை, ப. 315.
11. மேலது, ப. 315.
12. பாரதியார் கவிதைகள், போகின்ற பாரதமும் — வருகின்ற பாரதமும், ப. 27.
13. பாரதியார் கவிதைகள், சுயசரிதை, ப. 317.
14. மேலது, ப. 318.
15. பாரதியார் கவிதைகள், சுயசரிதை, பாரதி அறுபத்தாறு ப. 338.
16. பாரதியார் கவிதைகள், கண்ணன் என் சேவகன், ப. 404.
17. பாரதியார் கவிதைகள், பாஞ்சாலி சபதம், ப. 518.
18. மேலது, ப. 542.
19. ரகுநாதன், பாரதியும் ஷெல்லியும், ப. 71.
20. வி. மரிய அந்தோனி, இலக்கிய உலகம், ப. 262.
21. ப. மீ. சுந்தரம், பாரதியார் வரலாறும் கவிதையும், ப. 125.
22. பாரதிதாசன் கவிதைகள் - முதல்தொகுதி, ஆண்குழந்தைத் தாலாட்டு, ப. 126.
23. பாரதிதாசன் கவிதைகள் - முதல்தொகுதி, சாய்ந்த தராசு, ப. 151.
24. மேலது, ப. 152.
25. பாரதிதாசன் [கவிதைகள் – முதல்தொகுதி, சைவப்பற்று பக். 175-177.
26. மேலது, ப. 175.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

27. மேலது, ப. 177.

28. பாரதிதாசன் கவிதைகள் - நான்காம் தொகுதி. நாட்டியல் நாட்டுவோம், ப. 128.

29. பாரதிதாசன் கவிதைகள் – முதல்தொகுதி, வாழ்வில் உயர்வு கொள், ப. 140.

30. பாரதிதாசன் கவிதைகள் - நான்காம் தொகுதி. கையேந்துவார் மகிழ்ச்சி - கடவுள் மகிழ்ச்சி, பக். 157-159.

31. பாரதிதாசன் கவிதைகள் - முதல்தொகுதி, ஏசுநாதர் ஏன் வர-வில்லை, ப. 182.

32. பாரதிதாசன் கவிதைகள் – முதல்தொகுதி, மயில், ப. 54.

33. பாரதிதாசன் கவிதைகள் - இரண்டாம் தொகுதி, நம்மாதர் ப. 132.

34. பாரதிதாசன் கவிதைகள் - நான்காம் தொகுதி, தேனமுதே, ப. 85.

35. பாரதிதாசன் கவிதைகள் - அயன்மனை விரும்பியவன் பட்ட பாடு, ப. 96.

36. பாரதிதாசன் கவிதைகள் – நான்காம் தொகுதி, ஏய்க்கின்றாரே, ப. 164.

37. மேலது, ப. 164.

38. பாரதிதாசன் கவிதைகள் – நான்காம் தொகுதி, எவர்சில்வர் ஏனம், ப. 163.

39. பாரதிதாசன் கவிதைகள் - இரண்டாம் தொகுதி, படத்தொழிற் பயன், ப. 152.

40. பாரதிதாசன் கவிதைகள் - முதற்தொகுதி, தமிழ்நாட்டிற் சினிமா, ப. 168.

41. பாரதிதாசன் கவிதைகள் - முதற்தொகுதி, தமிழ் உணவு, ப.91.

42. பாரதிதாசன் குயில் பாடல்கள், மூடநம்பிக்கை, ப. 107.

43. நல்லமுத்துக்கதை — ஒற்றுமிகுந்திருப்பது பாரதிதாசன் கவி-தைத் தொகுதியில் உள்ளவாறு.

44. மா. செல்வராசன், பாரதிதாசன் ஒரு புரட்சிக்கவிஞர், ப.198.

45. அ. ச. ஞானசம்பந்தன். இன்றைய இலக்கியம், பக். 106-107.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

46. பாரதிதாசன் கவிதைகள் — முதல் தொகுதி, சஞ்சீவி பர்வதத்தின் சாரல், ப. 5.

47. மேலது. பக். 5–6.

48. மேலது. ப. 7.

49. மேலது, ப. 13.

50. மேலது, ப. 13

51. அரங்க. இராமலிங்கன். பாரதிதாசன் படைப்புக்களில் நகைச் சுவை, ப. 108.

52. பாரதிதாசன் கவிதைகள் — மூன்றாம் தொகுதி, நல்லமுத்துக் கதை, ப. 128.

53. மேலது, ப. 129.

54. மேலது, ப. 119.

55. மேலது, ப. 120.

56. மேலது, ப. 23.

57. பாரதிதாசன், இருண்டவீடுநூல், 'என்னுரை' ப. 4.

58. பாரதிதாசன், இருண்டவீடு, ப. 10.

59. மேலது, ப. 16.

60. மேலது, ப. 27.

61. அரங்க. இராமலிங்கன், மு. நூ. ப. 102

62. கவிமணி தேவிமலர், ச. மீனாட்சிநாதன், அங்கம் பாடிய அறவோன். ப. 142.

63. மேலது, தே. வேலப்பன், மான்மியத்தின் மான்மியன், ப. 114

64. செ. சதாசிவம், கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை, ப. 47.

65. மருமக்கள் வழிமான்மியம், விநாயகர் வணக்கம், வரி. 22–25.

66. மருமக்கள்வழிமான்மியம், அவையடக்கம் வரி. 37–38.

67. மருமக்கள் வழிமான்மியம். நாகாஸ்திரப் படலம், வரி. 54—57,

68, மருமக்கள் வழிமான்மியம், குலமுறை கிளத்துப் படலம், வரி, 35—40.

69. மருமக்கள் வழிமான்மியம். வரி. 79—83.

70. மருமக்கள் வழிமான்மியம், மாமி அரசியற்படலம், வரி. 3—10.

71. மேலது, வரி. 26—29.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

72. மருமக்கள் வழிமான்மியம், கேலிப்படலம், வரி. 2—14.

73. மேலது, வரி. 18—25.

74. மருமக்கள் வழிமான்மியம், கடலாடு படலம், வரி. 17—21.

75. மருமக்கள் வழிமான்மியம், பரிகலப்படலம், வரி. 51—58.

76. மருமக்கள் வழிமான்மியம், நாகாஸ்திரப் படலம், வரி. 8—9.

77. மருமக்கள் வழிமான்மியம், கருடாஸ்திரப் படலம், வரி. 30—33.

78. மருமக்கள் வழிமான்மியம், கடலாடு படலம், வரி. 41—44.

79. மருமக்கள் வழிமான்மியம், கருடாஸ்திரப் படலம், வரி. 180—191.

80. மருமக்கள் வழிமான்மியம், கோடேறிக்குடிமுடித்த படலம், வரி. 124—126.

81. மேலது, வரி. 146—150.

82. மேலது, வரி. 294—311.

83. மருமக்கள் வழிமான்மியம், கருடாஸ்திரப் படலம், வரி. 110—113.

84. மருமக்கள் வழிமான்மியம், யாத்திரைப்படலம், வரி 130—132.

85. மேலது, வரி. 124—125.

86. மேலது, வரி. 46—47.

87. மருமக்கள் வழிமான்மியம், கும்பியெரிச்சல் படலம், வரி. 91—101.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

5. (இ) புதுக்கவிதைகளில் அங்கதம்

முன்னுரை

இருபதாம் நூற்றாண்டில் பெரு வளர்ச்சியும் பெருமதிப்பும் பெற்றது புதுக்கவிதை இயக்கம். மணிக்கொடிக்காலக் கவிஞர்கள் எழுத்துக் காலக் கவிஞர்கள், வானம்பாடி இயக்கக் கவிஞர்கள் புதுக்கவிதையின் வளர்ச்சிக்குக் காரணமாக அமைந்தவர்கள் எனலாம். மரபுக்கவிதைகளிலிருந்து மாறுபட்ட இக்கவிதைகள் சமுதாய உணர்வு மிக்கவையாக அமைந்தன, புதுக் கவிஞர்களில் ''வானம்பாடிக் கவிஞர்கள் இன்றைய சமுதாயத்தின் ஏற்றத்தாழ்வுகளையும், சீரழிவுகளையும் கண்டு கோபம் கொள்கிறார்கள் பரிகசிக்கிறார்கள், பழித்துக் குறை கூறுகிறார்கள். இன்றைய இழிநிலை மாறவேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். சுரண்டலையும் சுரண்டல் சமுதாயத்தைப் பாதுகாக்கும் தத்துவங்கள், கடவுள்கள், சாதிசமயங்கள் முதலியவற்றையும் கண்டிக்கிறார்கள்'' என்று வல்லிக்கண்ணன் கூறுவார்.[1] புதுக்கவிதைகளில் அங்கத அமைவு மிகுதி என்பார் தமிழ்க்குடிமகன்[2]. ''தமிழில் சங்ககாலத்திலிருந்தே அங்கதச்சுவை தரும் பாடல்கள் இருந்தாலும், புதுக்கவிதை தரும் அங்கதத்தொனி புதுசாக இருக்கிறது என்பார்''[3] தமிழவன். இத்தகைய அங்கதக் குறிப்பினைக் கையாண்ட புதுமைப்பித்தன், மீரா, வாலி, மேத்தா, வைரமுத்து ஆகியோரின் கவிதைகள் இங்கு ஆராயப்படுகின்றன,

1. புதுமைப்பித்தன்

புதுக்கவிதையின் ஆரம்பகாலக் கவிஞர்களுள் குறிப்பிடத்தக்கவர் புதுமைப்பித்தன். வெ. கந்தசாமிப்பிள்ளை என்ற புனை பெயரிலும் இவரது கவிதை வெளியாகியுள்ளன. இவரது கவிதைகள் அனைத்தும் தொகுக்கப்பெற்று சிதம்பர ரகுநாதனால் வெளியிடப்பட்டது. புதுமைப்பித்தன் கவிதைகளில் பழந்தமிழ்க் கவிதை மரபின் பாதிப்பினைக் காணலாம். பழைய கவிதை நடைப் போக்கினையும், இன்றையப் பேச்சுவழக்கு நடையினையும் கலந்து வேகமும், உணர்ச்சியும் நிறைந்த புதுமையான நடையினைப் பின்பற்றினார் புதுமைப்பித்தன். புதுமைப்பித்தன் கவிதைகள் எண்ணிக்கையில் குறைவாக இருப்பினும், உயிர்த்துடிப்பும், அங்கதச் சுவையும் நிறைந்தவை. தம் காலத்திய தமிழ்க்கவிதைகளை, கவிஞர்களை,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இலக்கிய வாசகர்களைக் கேலி செய்கிறார். ஆங்கில அரசின்பால் மோகம் கொண்டவர்களை ஏளனம் செய்கிறார்.

புலவர்களும் சமுதாயமும்

கவிஞன் உயிருடன் இருக்கும்போது அவனை எவரும் மதிப்பதில்லை; அவனையோ, அவன் படைப்புக்களையோ ஆதரிப்பதில்லை. ஆனால் அவன் இறந்தவுடன் அவனைப்பற்றியும் அவன் படைப்புக்களைப் பற்றியும் வானுயரப் புகழ்ந்து, ''அவனைப்போல் இதுவரை எவரும் பிறந்ததில்லை'' என்று பேசும் பழக்கம் வெகுவாக இருந்திருக்கிற நிலையினைச் சாடுகிறார் புதுமைப்பித்தன். புதுமைப்பித்தனின் நெருங்கிய நண்பரும், சிறந்த கலைஞருமான கு.ப. ராஜகோபாலன் இறந்தபின்னர் அவரது குடும்பத்துக்குத் தமிழகம் உதவி செய்ய முன் வந்தது. தமிழ்மக்களின் இந்தக்காலம் கடந்த 'தாராள மனப்பான்மை' கொண்ட நன்றியறிதலை,

''... ... ... ஐயா! நான்
செத்ததற்குப் பின்னால்
நிதிகள் திரட்டாதீர்!
நினைவை விளிம்புகட்டி
கல்லில் வடித்து
வையாதீர்;
''வானத்து அமரன்
வந்தான் காண்! வந்ததுபோல்
போனான் காண்'' என்று
புலம்பாதீர்!
அத்தனையும் வேண்டாம்
அடியேனை விட்டு விடும்''[4]

ஏனும் கவிதையில் ஏளனக் குறிப்புடன் பாடுகிறார்.

உயிருடன் இருக்கும்போது எவ்வித உதவியும் செய்யாது, இறந்ததற்குப் பின்னர் நிதி திரட்டுவதைக் கண்டித்து, அதனால் பயனில்லை என்பதைக் காட்டுகிறார். சிலை எடுக்கும் பழக்கத்தையும் ஏளனம் செய்கிறார். இருக்கும்போது கவிஞனைப் பற்றி எதுவும் பேசாமல், அவனை மதிக்காமல், மறைந்தவுடன் வானத்து அமரனான இந்திரன் என்று புகழ்கின்ற தன்மையினைச் சாடுகிறார். இத்தகைய செயல்களைத் தனக்குச் செய்யவேண்டாம் என, ''அத்தனையும் வேண்டாம்; அடியேனை விட்டுவிடும்'' என்று அங்கதக் குறிப்புடன் பாடியுள்ளதைக் காணலாம். புதுமைப்பித்தன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கவிதைகளின் தொகுப்பாசிரியரும் நண்பருமான ரகுநாதன் ''கலைஞனைச் சாகவிட்டுவிட்டு அவனது புகழுடம்பைத் தூக்கி-வைத்துக் கூத்தாடும் ரசிகத்தனத்தைக் குத்திக்காட்ட எழுந்த 'வீறாப்புத் தார்க்குச்சி? தான் இந்தப்பாடல்'' என்று கூறுவது குறிக்கத்தக்கது.[5]

பழமைக் கவிஞர்களைப் புதுமைப்பித்தன் வெகுவாகக் கேலி செய்கிறார்.

''சாகாவரம் பெற்ற
சரஸ்வதியார் அருள்பெற்ற
வன்னக் கவிராயன்
நானல்ல,
.....
வானக் கனவுகளை
வக்கனையாச் சொல்லும்
உண்மைக் கவிராயன்
நானல்ல.
சத்தியமாச் சொல்லுகிறேன்
சரஸ்வதியார் நாவினிலே
வந்து நடம்புரியும்
வளமை கிடையாது''[6]

என்று பண்டைக்கவி என்றும், உண்மைக்கவி என்றும் கூறித் திரிந்த கவிஞர்களைக் கேலி செய்வதைக் காணலாம்.

கவிஞர்களில் சிலர் காசுக்காக அலைந்ததையும் உண்மையைத் திரித்துக் கவிதை எழுதிய தன்மையினையும், பிறரை ஏமாற்றும் தன்மை கொண்டிருந்ததையும் மற்றொரு கவிதையில் காட்டுகிறார்

''உம்மைப்போல் நானும்
ஊக்கம் குறையாமல்
பொய்கள் புனைந்திடுவேன்
புளுகுகளைக் கொண்டும்மை
கட்டிவைத்துக் காசை
ஏமாந்தால்,—
கறந்திடுவேன்.''[7]

என்று பொய்கூறி, ஏமாற்று வேலை செய்யும் நிலையைக் காட்டிச் சாடுகிறார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உணவுக்காக மட்டுமே கவிதை எழுதிய தன்மையினை, 'காதல் கவிதை வேண்டாம், தேசபக்திக் கவிதை வேண்டும் எனக் கேட்டால், கல்லும் உயிர்பெற்றுக் காலன் போல நடமாடும்படிப்பாடுவேன். என்று காட்டியிருப்பது கவிஞர்களின் நிலையினை எடுத்துக்காட்டிச் சாடுதற்கே.[8]

•'சோகக் கதை என்றால்
சோடி ரெண்டு ரூபா!
காதல் கதை என்றால்
கைநிறையத் தரவேணும்!
ஆசாரக் கதை என்றால்
ஆளுக்கு ஏற்றதுபோல்!
பேரம் குறையாது
பேச்சுக்கு மாறில்லை''[9]

என்று கவிஞன் எந்தக்கதை வேண்டுமானாலும் பணத்திற்காக எழுதும் தன்மையையும் காட்டுகிறார்.

காதலர் நிலை

இன்றைய நாகரிக உலகில் இளைஞர்களின் வாழ்வில் காதல் என்பது மலிவாகவும், இழிவாகவும் போய்விட்டது என்பதைக் காட்டுவதற்கு ஒரு நையாண்டிப் பாடலைக் 'காதல் பாட்டு' என்று பாடியுள்ளார்.

கல்லூரியில் படிக்கும் 'பேபி' என்பவளும் 'கண்ணன்' என்பவனும் காதல் கொள்கின்றனர். இருவரும் தனியே சந்திக்கின்றனர், தான் அரசுப்பணியில் இருப்பதால் அவளைத் திரைப்படம் அனைத்திற்கும் அழைத்துச்செல்வதாயும், நம்பும்படியும் கூறுகிறான் கண்ணன். 'பணம்தான் உயர்ந்தது; பணமின்றி எதுவும் நடக்காது' என்கிறாள் பேபி. 'கடன் வாங்கினால் பணம் கிடைக்கும். கல்யாணம் எப்போது? என்று கேட்ட கேள்விக்கு, அதற்கு அவசரமில்லை, தொல்லை வராமல் தொட்டுப் பழகிடலாம்' என்கிறாள் பேபி. அவனுடன் பழகிவிட்டு இறுதியில் 'மறுநாளும் அடுத்தநாளும் சீனுவுடன் சினிமாவுக்குச் செல்வதால் வீணாகக் காத்திருக்க வேண்டாம்' என்று சொல்கிறாள். இது கவிதையின் சுருக்கம்.

திரைப்படம் செல்வதைத்தான் காதலர்கள் சிறப்பாகக் கருதுகிறார்கள், தாங்கள் பெறும் சம்பளம் அனைத்தையும் அதற்கே செலவுசெய்யத் தயங்குவதில்லை என்பதை,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

''கச்சேரி வேலை அது!
... ...
முப்பது ரூபாய்க்கு மோசமிலை
அலவன்சும் உண்டு
அடியே பேபி! உன்னை
சினிமாவுக்கத்தனைக்கும்
சோர்வு சற்றும் காட்டாமல்
அழைத்தழைத்துச் சென்றிடுவேன்'' 10

என்று காட்டுகிறார்.

திருமணத்திற்கு அவசரப்படாமல் இருக்கும் தன்மையையும், திருமணத்திற்கு முன்னர் நெருங்கிப் பழகும் தன்மையையும் காட்டி நையாண்டி செய்கிறார்.

''அப்பாவைக் கேட்டிடுவேசம்
அதற்கென்ன அவசரம் காண்!
தொல்லை வராமல் நாம்
தொட்டுப் பழகிடுவோம்;
எல்லை தெரியாதா நமக்கெல்லாம்!'' 11

என்று கூறும் அவளே முத்தமிட்டு மோகத்துடன் செயல்பட்ட நிலையைக் காட்டுகிறார்.

கண்ணனுடன் காதல் கொண்ட பேபி,

''சீனுவுடன் நாளைக்கு
சினிமாவுகுப் போறேன்;
நாளைக் கியலாது; மறு
நாளைக்கு மப்படியே
வீணுக்கு அலையாதே
வீட்டுக்குப் போ'' 12

என்று கூறுவது, காதல் என்பது பொழுதுபோக்கிற்கு மட்டுமே என்று கருதும் பெண்கள் நிலையை வெளிப்படுத்தி நிற்கிறது.

''காதல் இதுகாதல்!
ஆமாம்
காதல் இதுகாதல்!''

என்று புதுமைப்பித்தன் கூறுவது 'இக்காலத்தில் உண்மையான காதல் இல்லை; பணத்திற்காகத்தான் காதல் என்றும், காதலித்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

துத் திருமணம் செய்துகொள்ள விரும்பாமல், பலருடன் பழகி உறவுகொள்வதையே விரும்புகின்றனர்' என்றும் காட்டுவதற்கே எனலாம்.

இந்தியாவும் இந்தியரும்

'இணையற்ற இந்தியா' என்னும் கவிதையில் இந்தியாவையும், இந்தியர்களையும் நையாண்டி முறையில் குத்திக்காட்டுவதனைக் காணலாம்.[13]

இந்திய நாட்டில் இந்திரர்களும், கடவுளர்களும் இருக்கிறார்கள். சிறந்த செழிப்பான நாடு என்று பலரும் சொல்கிறார்கள். இவற்றை எல்லாம் உடனே நம்பி ''எவனுக்கும் மண்டியிடும் ஏந்து புயநாடு'' என்று வந்தவரை எல்லாம் வரவேற்று அடிமைப்படும் தன்மையை ஏளனம் செய்கிறார்.

''ஆற்றுக்கரை யருகே அணிவயல்கள் உண்டு
சோற்றுக்குத் திண்டாட்டம் சொல்லி முடியாது''

என்று இந்திய நாட்டின் இழிநிலையைக் காட்டுகிறார்.

பழங்கதை பேசித் திரியும் நிலையினையும், வயிற்றுப் பிழைப்புக்காக எதையும் செய்யத் துணியும் தன்மையினையும், காந்தியின் பெயரைச் சொல்லிப் பிழைக்கும் தன்மையினையும்,

''வேதம் படித்திடுவோம் வெறுங்கை முழம் போட்டிடுவோம்
சாதத்துக் காகச் சங்கரனை விற்றிடுவோம்!
அத்தனைக்கும் மேலல்லோ அஹிம்சைக் கதைபேசி
வித்தகனாம் காந்தியினை விற்றுப் பிழைக்கின்றோம்!''

என்று ஏளனக் குறிப்புப்பட எடுத்துக்காட்டுகிறார்.

''இணையற்ற இந்தியா'' என்ற கவிதைத் தலைப்பும்,

''இந்தியா தேசம் – அது
இணையற்ற தேசம்''

என்ற வரிகளும் சிலேடையில் அமைந்து, எதிர்மறைப் பொருளைக் குறிப்பாகக் காட்டி, அங்கதக் குறிப்புப்பட அமைந்திருக்கக் காணலாம். இணையற்ற இந்தியா, இணையற்ற தேசம் என்ற தொடர்கள் நேரடியான பொருளைத் தராமல எதிர்மறைப் பொருளைத் தருமாறு கவிதை அமைத்து அங்கதத்தினை வெளிப்படுத்தியிருக்கக் காணலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிற இலக்கிய நடைகளையும், தலைப்புக்களையும் சற்றே மாற்றித் தம் கவிதைகளில் பயன்படுத்தி, அங்கதக் குறிப்பினை வெளிப்படுத்தும் முறையினைப் புதுமைப்பித்தனிடம் காணலாம்.

''திரு ஆங்கில அரசாங்கத் தொண்டரடிப் பொடியாள்வார் வைபவம்'' என்ற தலைப்புக்கொண்ட கவிதை இத்தகைய அமைப்புக் கொண்டதே.[14]

நாலாயிரதிவ்வியப் பிரபந்தத்தைப் பின்பற்றி இவ்வாறு அமைத்து இருப்பதை உணரலாம்.

இதில் திருவரங்கனின் அடியாராகிய தொண்டரடிப் பொடியாழ்வார் போன்று ஆங்கில அரசாங்கத் தொண்டரடிப் பொடியாள்வார் என வேறுபொருளைத் தரும்படி அமைத்திருப்பதைக் காணலாம். (ஆழ்வார்-ஆள்வார்).

இத்தொடர் அக்காலச் சமுதாய நிலையினை அங்கதக் குறிப்-போடு வெளிப்படுத்தி நிற்கிறது.

ஆங்கிலேயருக்குக் கீழ் பணியாற்றுவதை உயர்வாகக் கருது-வதாக இக்கவிதையில் கூறுவதன் மூலம் அதன் இழிவை வெளிப்-படுத்துகிறார்.

திவ்வியப்பிரபந்தத்தின் பதிக அமைப்பினை இக்கவிதையில் பின்பற்றி அமைத்ததின் மூலம் அங்கதக் குறிப்பை வெளிபடுத்தி யுள்ளார்.

வணிகத்தின் மூலம் பெறும் செல்வத்தை விட, ஆங்கில அரசில் 'அட்டெண்டர்' ஆகப் பணிபுரிய விரும்பும் நிலையை,

''உற்றாரையான் வேண்டேன், ஊர் வேண்டேன் பேர்
வேண்டேன்
மற்றுமிந்த வாணிபத்தின் புன்செல்வம் யான் வேண்டேன்
பொற்றோளாய்! உன்னுடைய பெருமைமிகு சர்விஸில்
சிற்றுருவ மானதொரு அட்டெண்டர் ஆகேனோ''[15]

என்பதில் நகைச்சுவை உணர்வுடன் ஏளனம் செய்திருப்பதைக் காணலாம்.

''வானோங்கு புகழ்மிகுந்த நின்வாயில் இட்டு உண்ணும் மீனாய்ப் பிறக்கும் தவமுடையன் ஆவேனோ'' என்பதும், ''நின்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அந்தமில் சீர்க்கல்லால் அகங்குழைய மாட்டேனே'' என்பதும் ஏளனக்குறிப்புக்களாக அமைந்து உள்ளன.[16]

''மன்னிய தண்சாரல் சிம்லாவில் உறைவான்தன்
பொன்னியலும் சேவடியில் அமர்வான் புரிந்திறைஞ்சும்
சென்னியன்சீர் தொண்டரடிப் பொடியான் சொல்வார்த்
தைகளை
பன்னியநூல் தமிழ்வல்லார் பாங்காய பக்தர்களே!''[17]

என்று திவ்வியப்பிரபந்தப் பதிக அமைப்பினைச் சற்று மாற்றி அமைத்து நையாண்டி செய்வதன் மூலமும் அங்கதக் குறிப்பினை வெளிப்படுத்துகிறார்.

இக்கவிதையின் இறுதியில் 'ஆள்வார் திருவடிகளே சரணம்' என்று கிலேடை அமைப்பில் அங்கதக் குறிப்பினை வெளிப்படுத்தியுள்ளார்.

தனிமனிதச் சாடல்

தனிமனிதனைச் சாடுவது சிறந்த அங்கதமாகக் கருதப்படாவிடினும், புதுமைப்பித்தன் கவிதைகளில் அத்தகைய அங்கதக் குறிப்புடன் அமைந்த பாடலையும் காணலாம்.

''ஓடாதீர்'' என்ற புதுமைப்பித்தன் பாடலைப் படித்த ஒரு எழுத்தாளர் 'மளிகைக்கடை மாணிக்கம் செட்டியார்' என்ற புனைபெயரில் 'ஓடும் ஓய்! உம்மால் ஒரு மண்ணும் ஆகாது' என்று புதுமைப்பித்தன் பாணியிலேயே புதுமைப்பித்தனின் பாட்டுக்கு ஒரு எதிர்வெட்டுப்பாடல் எழுதி, 'கலாமோஹினி' என்ற பத்திரிகையில் வெளியிட்டார். அந்தச் செட்டியாருக்கு மீண்டும் 'கிராம ஊழியன்' மூலம் புதுமைப்பித்தன் அளித்த பதில்தான் 'உருக்கமுள்ள வித்தகரே' என்ற பாடல்'' என்று இப்பாடல் எழுந்ததற்கான சூழலை ரகுநாதன் காட்டுகிறார்.[18]

தன் கவிதைக்கு எதிர்க்கவிதை எழுதியமைக்காக இப்பாடலை எழுதினார் எனத் தெரிகிறது. மளிகைக்கடை மாணிக்கம் செட்டியார் என்ற பெயரில் எழுதியிருந்தமையால், வணிகர் கவிஞராக முடியாது என்ற பொருளில் அவர் கவித்தொழிலை விடுத்து வணிகத் தொழிலுக்குச் செல்லட்டும் என்று நேரடியாக வசைபாடும் நிலையைக் காணலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

''குப்பைகூளம், செத்தை
கூட்டி வைத்த
தூசு தும்பட்டம்
அத்தனைக்கும்—
உப்பு, பருப்பு,
உளுத்தம்பயறு
சித்தரத்தை, புளி
சீமை இலந்தை
எனவே,
செப்பி விலைகூறும்
வாணிபத்துக்கு
ஒத்துவருமோ
உயர்கவிதை?''[19]

என்று வணிகருக்கும் கவிதைக்கும் தொடர்பில்லாததால் கவிதை எழுதக்கூடாது என்கிறார்.

'மளிகைக்கடை மாணிக்கம் செட்டியாரின்' மீது கொண்டிருக்கும் கோபத்தை ''ஒற்றைச் சிதையினிலே, உம்மெல்லோரையும் வைத்து எரித்திட்டாலும் வயிற்றெரிச்சல் தீராது'' என்றும், ''போமையா போம்! நும்முடைய பெட்டியடி சொர்க்கத்தில் புகுந்து விடும்! உருப்படியாய் வாழுப்! உலகத்தைக் கட்டியழும்'' என்றும் சாடுகிறார்.

மேலும், ஆங்கில ஆட்சியை எதிர்க்காது, அவர்களுக்கு அடிமைப்பட்டு, தன்னலத்திற்காக அவர்களை அண்டிப் பிழைக்கின்ற அவலநிலையைக் கடுமையாகச் சாடுகின்ற நிலையினை,

''வேற்றரசர் நிழலிலே
வேலைக்கும் வழியுண்டு!
கூடைமுறை பின்னிடலாம்
தேசத்து லெச்சுமியை,
மானத்தை கவுரவத்தை,
கூட்டிக் கொடுத்திடலாம்.
நச்சிவந்த பேருக்கு
நாமங்கள் சாத்திடலாம்!
வேற்றரசர் ஆட்சியிலே
வேலைக்கும் வழியுண்டு
கூலிக்கும் அட்டியில்லை''[20]

என்ற இப்பாடலில் காணமுடிகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தேசத்து லட்சுமியை, மானத்தை 'கவரவத்தைக் கூட்டிக் கொடுத்திடலாம் என்ற தொடர்களில் புதுமைப்பித்தனின் மிதமிஞ்சிய சினம் வெளிப்படுகிறது.

இதே போன்று மற்றொரு கவிதையிலும் தனி மனிதனைச் சாடும் நிலையினைக் காணலாம்.

''அலர் மகளின் அட்டமத்துச்
சனியான
அருமைத் திருமகனே!
பாட்டுக் களஞ்சியமே!
பலசரக்குக் கடை வையேன்!
... ...
சற்றே நீ மவுனம்
சாதித்தால் போகுமடா!
எழுத்தை மறந்துவிடு
எருவடுக்கிப் பிழையப்பா!'' 21

எனச் சனியன் என்றும், பலசரக்குக் கடைக்காரன் என்றும், எருவடுக்கிப் பிழை என்றும் நேரடியாக வசைபாடுவதைக் காணமுடிகிறது. ''அருமைத் திருமகனே' என்பதும் 'பாட்டுக் களஞ்சியமே' என்பதும் எதிர்மறைப் பொருளைத் தந்து அங்கதக் குறிப்புடையனவாகின்றன.

சிறையின் சீர்கேடு

மற்றொரு கவிதையான,

''ஏட்டையா வந்துவிட்டார்
எழுந்திரடா, நில்லு
'ஏ' வகுப்புக் கைதியென்று
இடையிடையே சொல்லு'' 22

என்னும் கவிதை 'கைதிகளுக்குள் 'ஏ' வகுப்புக் கைதிகளாய் இருந்தால் கிடைக்கும் மரியாதையையும், சாதாரணக் கைதியாயிருந்தால் கிடைக்கும் அவமரியாதை, துன்பம், கடின வேலைகளையும் காட்டி, கைதிகளைக் காவல் புரியும் ஏட்டையா சாதாரணக் கைதிகளை அடிப்பார், 'ஏ' வகுப்புக் கைதிகளை அடிக்கமாட்டார், ஆகையால் 'ஏ' வகுப்புக் கைதியென்று இடையிடையே சொன்னால் தடிகளிலிருந்து தப்பிக்கலாம்! என்று கூறுவதன் மூலம் சிறையில் நடக்கும் சீர்கேட்டை அங்கதக் குறிப்போடு பாடுகிறார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சத்திமுத்தப்புலவர் இயற்றிய ''நாராய் நாராய் செங்கால் நாராய்'' என்ற பாடலைப் பின்பற்றி எழுதிய நையாண்டிப் பாடல் ஒன்றின் மூலமும் புதுமைப்பித்தன் அங்கதக் குறிப்பினை வெளிப்படுத்துகிறார். [23]

ஒருமுறை காசநோயால் துன்பமடைந்த கவிஞர் தன் நிலையைத் தன் மனைவிக்குத் தெரிவிப்பது போல அமைந்த பாடல், பழம்பாடல் ஒன்றினை நையாண்டி செய்கின்ற நிலையில் மட்டுமே அங்கதப் பாடலாகி,

''கையது கொண்டு மெய்யது பொத்தி
போர்வையுள் கிடக்கும் பெட்டிப் பாம்பென
சுருண்டு மடங்கி சொல்லுக்கு இருமுறை
லொக்கு லொக்கென இருமிக்கிடக்கும்
ஏழையாளனைக் கண்டனம் எனுமே!''

என்று அமைகிறது.

2. மீரா

மீ. இராசேந்திரன் என்ற இயற்பெயர் கொண்ட இக்கவிஞர் 1938 ஆம் ஆண்டு சிவகங்கையில் பிறந்தார். இவரது கவிதையின் தொடக்க காலம் பாரதிதாசனைப் பின்பற்றியமைந்தது. பின்னர், புதுக்கவிதையின்பால் ஈடுபாடு கொண்டு 'வானம்பாடி இயக்கத்தில்' முன்னணிக் கவிஞராகவிளங்கினார். இவரது கவிதைகள்

1. ஊசிகள்
2. கனவுகள் + கற்பனைகள் = காகிதங்கள்
3. மூன்றும் ஆறும்
4. இராசேந்திரன் கவிதைகள்

என்னும் தொகுதிகளாக வெளிவந்துள்ளன. இவற்றுள் 'ஊசிகள்' என்ற தொகுதியில் மட்டுமே அங்கதக் குறிப்புடைய கவிதைகளைக் காணமுடிகிறது. இவ்வங்கதம் சமுதாயம் பற்றியதாகவும், அரசியல் பற்றியதாகவும் அமைந்திருக்கக் காணலாம்.

சமுதாய அங்கதம்

சமுதாயத்தில் உள்ள அனைத்துக் கூறுகளும் இவரது அங்கதப் பார்வைக்கு ஆளாகியுள்ளன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கல்வி

இன்றையக் கல்விமுறையும், கல்வியால் கிடைக்கும் பட்டமும் பயனற்றதாக இருக்கும் தன்மையை அங்கதக் குறிப்புப்பட எடுத்துக்காட்டுகிறார் கவிஞர் மீரா.

கல்வி கற்றுப் பட்டம் பெற்ற ஒருவன் தன் வீட்டிற்குச் சென்றபோது அவனது தம்பி ''கையில் என்ன?'' என்றான். ''பட்டம்'' என்று சொன்னவுடன் தம்பி புலியாய்ப் பாய்ந்தானாம். எங்கே என்று கேட்ட பொழுது ''நூல் வாங்க'' என்றானாம்.[24]

இக்கவிதையில் கல்வி கற்றுப் பெற்ற பட்டம், காற்றில் பறக்கவிடப்படும் பட்டம் போன்றதே என்றும், அப்பட்டத்தினால் வேறு பயன் இல்லை என்றும் அங்கத முறையில் குத்திக்காட்டுகிறார் கவிஞர்.

இத்தகைய பட்டங்களைத் தரும் கல்வி கூட எளியவர்களுக்குக் கிடைப்பதில்லை என்பதையும், பொருளுடையவர்தான் கல்வி கற்கமுடியும் என்ற நிலை தோன்றியுள்ளது என்பதையும் மற்றொரு பாடலில் காட்டுகிறார்.[25]

''பி. யு. சி. யா?
ஒருநூறு போதும்
பி. எஸ். சி பி. எட்.
இருநூறு ஆகும்
எம். எ.சி. ஆயிரம்;
எம். பி, பி. எஸ்
ஏழுஆயிரம்
இங்கே
சேரவாரும்
செகத்தீரே''

என்று கல்விக்கு விலை வைத்திருப்பதைக் குத்திக்காட்டுகிறார். இக்கவிதையின் தலைப்பான 'கல்வி சிறந்த தமிழ்நாடு' எதிர்மறைப் பொருளைத் தந்து அங்கதக் குறிப்புப்பட அமைந்திருப்பதையும் காணலாம்.

புலவர் நிலையும் ஆசிரியர் நிலையும்

கல்வி கற்ற புலவர்களும் ஆசிரியர்களும் தம் நிலையினின்று தாழ்ந்து இருப்பதையும், பொருளுக்காக இழிசெயல் செய்வதையும் காட்டுகிறார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வயிற்றுப்பிழைப்புக்காக ''நீண்ட கண்கள், கரியநாசி...மலை போல் மார்பு'' என்று எவரையும் பாராட்டும் குணம் கொண்ட புலவர்களைக் காட்டுகிறார். இவர்களது இந்நிலைக்கான காரணமாக ''ஓகோ உனக்கு ஒட்டிய வயிறு போலும்'' என்று காட்டுவது அங்கதக் குறிப்புடன் அமைந்திருக்கக் காணலாம்.[26]

இவர்களே, ஒருவர் இறந்தபின்னர் எழுதவேண்டிய வரலாற்றை உடனே எழுதமுடியும் என்று கூறியவுடன், அவர்களை

''அடடா போதும்
அண்டப்புளுகரே
இனிமேல் நீரே
எனது பரம்பரைச்
சரித்திரப் பண்டிதன்'' [7]

என்று 'அண்டப்புளுகரே' என நேரடியாகக் கேலி செய்வதைக் காணலாம்.

பட்டிமன்றங்கள் தரம் தாழ்ந்துவிட்ட நிலையினையும், எப் பொருளில் வேண்டுமானாலும் புலவர்கள் பேசும் நிலையினையும்

''பாட்டி செத்த பத்தாம் வினாடி
பெரிய குழப்பம் —
பிணத்தை
எரிப்பதா புதைப்பதா என்று ...
உள்ளூர்ப் புலவர் ஓடிவந்தார்
பட்டிமன்றம் வைத்துப்
பார்த்தால் என்ன என்று''[28]

என்ற கவிதையில் குத்திக்காட்டுகிறார். ப(ர)ட்டிமன்றம் என்ற தலைப்பும் பட்டிமன்றங்கள் எல்லாம் பாட்டி மன்றங்களாகிவிட்ட தன்மையினைக் காட்டுவதற்காகப் பயன்படுத்தப்பட்டிருப்பதைக் காணலாம்.

இதேபோன்று புலவர்களது தமிழ்ப்பற்றினையும் சாடுகிறார். ''ஜாதி வேண்டும் ஜாதி வேண்டும்'' என்று ஒருவர் சொன்னவுடன், சீறி ஒரு தமிழ் மறவர்,

''ஓய் ஓய், இனி நீர்
ஜாதி வேண்டும்
என்றால் பொறுமையாய்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இருக்க முடியாது என்னால்...
சரியாய்ச்
சாதி வேண்டும்
என்றே சாற்றும்''[29]

என்று கூறுவது இன்றையய புலவர்கள் உண்மையான பிரச்சினையை மறந்துவிட்டுத் திசைதிருப்பும் நிலையினை, வடமொழி எழுத்தில் எழுதிய முறை புலவரைக் கோபப்படுத்திய தன்மை மூலம் காட்டுகிறார். கவிதைத்தலைப்பான 'தமிழ்ப்பற்று' என்பதும் அங்கதக் குறிப்புப்பட அமைந்து நிற்கிறது.

இன்றைய ஆசிரியர்களுக்குக் கல்வி கற்றுத் தரும் பணியுடன் வேறு பணிகளும் அரசினரால் தரப்படுவதால் கல்விப்பணியில் சரியாக ஈடுபட முடியாத நிலையினை,

''பள்ளி திறந்தது
அ—சொல்லிக் கொடுத்தோம்''

பின் 'அறுவைச் சிகிச்சைக்கு ஆள் பிடிக்கவும்', 'சீரி அட்டையை விநியோகிக்கவும்', 'மக்கள் தொகைக் கணக்கெடுக்கவும்' போன பின்னர்,

''தேர்வு வந்தது;
ஃ—சொல்லி முடித்தோம்''

என்று காட்டுவதன் மூலம் அரசின் தவறுகளைச் சுட்டிக்காட்டிச் சாடுவதைக் காணலாம்.[30]

இன்றைய செய்தித்தாள்களின் நிலையினையும். செய்தி நிருபர்களின் செயலையும் காட்டிச் சாடுகிறார்.

செய்தித்தாள்களில் 'லாரி மோதி மாடு சாவு', 'கிழவி மரணம்,' 'கணவன் மனைவியின் கழுத்தை அறுத்தான்', 'மருமகன் மாமன் மண்டையை உடைத்தான்' என்ற செய்திகளே வெளிவருவதைக் காட்டி,

''இவைதாம்
என் தமிழ் இனத்தை மேலே
உயர்த்த வந்த
ஒரே உயிருள்ள
பத்திரிகையிலே
பரிச்சிடும் செய்திகள்''

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்று செய்தித்தாளின் தரம் தாழ்ந்திருப்பதை அங்கத முறையில் காட்டியிருக்கக் காணலாம். 'உயிருள்ள பத்திரிகை' என்ற விளம்பரத்துடன் வெளிவரும் செய்தி இதழ்களையும் சாடுகிறார்.[31]

செய்தித்தாள் நிருபர்கள் சீமான் வீட்டுத் திருமணத்தைப் பற்றியே எழுதுவதாகவும், 'இரண்டு லட்சம் பேர் இருக்கத்தக்க பந்தல்' என்றும், 'மூன்று லட்சம் பேர் தினமும் காண வரிசையாய் வருகிறார்' என்றும் உண்மையற்ற செய்திகளையே வெளியிடுவதாகவும் காட்டுவதன் மூலம் நிருபர்களைக் கேலி செய்வதைக் காணலாம்.

காதலும் சாதியும்

இக்காலகட்டத்தில் காதல் என்பது தன் புனிதத்தை இழந்து, மிகவும் மலிவாகிவிட்ட நிலையையும், காதலில் சாதி பெறும் இடத்தையும் கவிஞர் மீரா எள்ளல் குறிப்புடன் காட்டுகிறார்.

'காதலோ காதல்' என்ற தலைப்பில் மீரா எழுதும் கவிதையின் முற்பகுதியில் 'காதலென்ன கத்தரிக்காயா?' என்று வாணிமணாளன் எழுதும் காதல் கதையைக் கேலி செய்கிறார். பிற்பகுதியில் கத்திரிக்காயை விடக் காதல் தாழ்ந்தது என்ற கருத்துப்படப் பேசுகிறார். விலைவாசி உயர்வைப் பிற்பகுதியில் அங்கதப்படுத்துகிறார் என்றும் கொள்ளலாம். மொத்தத்தில் இக்கவிதையில் காதல் கதை எழுதுவோர், அவர்கள் வைத்துக் கொள்கின்ற புனைபெயர், விலைவாசி உயர்வு, காதல் மலிவாகிப்போன நிலை ஆகிய பல்வேறு இயல்புகளை அங்கத முறையில் கேலி செய்கிறார் மீரா. காதலென்ன கத்திரிக்காயா?' என்ற வழக்கமான தொடருக்குப் பதில் 'கத்தரிக்காய். என்ன காதலா?' என்ற முரண்பட்ட புதுத்தொடரைப் பயன்படுத்துவதன் மூலம் இந்த அங்கதக் குறிப்புக்களைக் கொண்டு வருகிறார் காதலென்ன கத்தரிக்காயா?' என்ற கவிதையின் தலைப்பும், வாணிமணாளன் என்று வைத்திருக்கும் புனைபெயரும் பாடலில் அங்கதக் குறிப்புடையன. 'காதலென்ன கத்தரிக்காயா?' என்று தொடங்கி, 'கத்தரிக்காய் என்ன காதலா?' என்று கவிதை முடிவதும் அங்கத உணர்வினை மிகுதிப்படுத்துகின்றதெனலாம்.[32]

காதலிப்போரும் உள்ளன்போடு காதலிப்பதில்லை என்பதையும், ஊர், மதம், சாதி விசாரித்தே காதலிக்கிறார்கள் என்பதையும் 'உனக்கும் எனக்கும் ஒரே ஊர் - வாசுதேவநல்லூர்; நீயும் நானும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஒரே மதம்; திருநெல்வேலிச் சைவப்பிள்ளைமார்; உன் தந்தையும் என் தந்தையும் சொந்தக்காரர்கள்' என்றுகூறி,

"எனவே
செம்புலப் பெயல்நீர்போல
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே"

என்று காதலிக்கத் தொடங்குவதில் காதலை ஏளனம் செய்திருப்பதைக் காணமுடிகிறது. இத்தகைய காதலுக்கு 'நவயுகக்காதல் என்று தலைப்பிட்டிருப்பதும் அங்கதக் குறிப்புடையதே. செம்புலப்பெயல் நீராரின், 'யாயும் யாயும் யாராகியரோ' என்ற குறுந்தொகைப் பாடலைப்போலவே இதனையும் வடிவமைத்து, வேறுபாட்டினை அங்கதக் குறிப்போடு வெளிப்படுத்தியிருப்பது குறிக்கத்தக்கது.[34]

சாதி சமயம் ஆகிய உணர்வுகள் அடிப்படையிலேயே இக்காலக் காதல் தோன்றி, அதுவே மேலோங்கியிருக்கும் நிலையினைக் கவிஞர் வெகுவாக ஏளனம் செய்கிறார்.

திரைப்படம்

திரைப்படம் இன்றைய சமுதாயத்தில் பெற்றிருக்கும் செல்வாக்கினைப் 'பெருங்காயம்?' என்ற கவிதையில் எடுத்துக்காட்டிச் சாடியிருப்பதைக் காணலாம்.

'விமான விபத்தில் மூவர்க்குக் காயம், ஜெஸ்ஸூர் முனையில் நடந்த சண்டையில் முப்பது பேருக்குக் காயம்' என்று காட்டி,

"சித்ரை வீதியில்
சினிமா நடிகை
ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீயைத்
திக்கு முக்காடச்
செய்த கும்பலில்
சிக்கிய அறுபது பேர்க்கு
முதுகில் முகத்தில்
நெஞ்சில் காயம்"

என்று ஏளனம் செய்கிறார்.[35] "சிந்தனைக்குரிய செய்திகள் மூன்று" என்று தொடங்கும் இக்கவிதையில் விமானவிபத்து, போர்முனை ஆகியவற்றைக் காட்டிலும், சினிமா நடிகையைப் பார்க்கச் சென்ற கும்பலில் அடிபட்டவர்கள் அதிகம் என்று கூறுகிறார். திரைப்படமும்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நடிக நடிகையரும் சமுதாயத்தில் பெறும் இடத்தைக் காட்டுவதன் மூலம் திரைப்பட மோகத்தில் சிக்கிச் சீரழியும் இச்சமுதாயம் திருந்த வேண்டுமே என்ற ஏக்கம் இருப்பதைக் காணமுடிகிறது.

உணவு உற்பத்தியும், குடும்பக்கட்டுப்பாடும்

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் சிறந்த திட்டம்தான். அத்திட்டம் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப் பட்டும் மக்களுக்குத் தேவையான பொருட்கள் கிடைக்காமல் இருக்கும் நிலையினைச் சாடுவதைக் 'கேப்பையில் நெய் வழியும் என்றால்.....' என்ற கவிதையில் கட்டாடுகிறார். பெரிய மனிதனின் பேச்சைக் கேட்டுக் கெட்டேன் என்று சொல்லும் ஒருவன் அதற்கான காரணத்தை,

''இப்போது
சீனிக்கொன்று
சீமை
எண்ணெய்க்கொன்று
மாவுக்கொன்று
எருமைப்
பாலுக்கொன்று
புழுத்த
அரிசிக்கொன்று
என்று
ஐந்துக்குமேல் வேண்டுமே
இரண்டுக்கு மேலே இல்லையே'' 36

என்று சொல்வதாகக் காட்டுவதில் உணவுப்பொருள் ஒவ்வொன்றையும் வாங்குவதற்காக வரிசையில் நிற்க ஆள் வேண்டுமே என நினைப்பதையும், எல்லாப்பொருட்களும் வரிசையில் நின்று வாங்க வேண்டிய நிலையினையும், குடும்பக்கட்டுப்பாடு செய்து விட்டதால் இரண்டு குழந்தைகளுக்கு மேல் இல்லாத நிலையையும் அங்கதக் குறிப்புப்படப் பாடுகிறார். குடும்பத்திற்குரிய உணவுப் பொருட்கள் அனைத்தையும் வரிசையில் நின்று வாங்க வேண்டிய இழிநிலையை இடித்துரைப்பதோடு குடும்பக் கட்டுப்பாட்டுப் பிரசாரத்தையும் கவிஞர் இங்கு கேலி செய்வது குறிக்கத்தக்கது. 'கேப்பையில் நெய்வழியும் என்றால்... ... ...' என்ற கவிதையின் தலைப்பிலும் குடும்பக்கட்டுப் பிரசாரத்தைக் கேலி செய்வதனைக் காண்கிறோம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அரசுப் பணியாளர்கள்

இன்றைய அரசுப் பணியாளர்கள் தம் அலுவலகத்தில் ஒழுங்காகப் பணியாற்றுவதில்லை என்பதைக் 'கடமையைச் செய்' என்ற கவிதையில் எடுத்துக்காட்டி ஏளனம் செய்திருப்பதைக் காணமுடிகிறது,[37] பாலைவனத்தில் செல்லும் ஒட்டகத்தின் முதுகில் அளவுக்கதிகமான சுமையை ஏற்றுகிறார்கள். பின்னர் அச்சுமை-யிலிருந்து ஒரு துரும்பை மட்டும் எடுத்துக் கீழே போடுகின்றனர். உடனே மனம் மகிழ்கிறது ஒட்டகம் என்ற கவிதையின் தலைப்-பாகப் 'பஞ்சப்படி' என்று அமைத்திருப்பது அங்கதக் குறிப்புடன் இருப்பதைக் காணமுடிகிறது. விலைவாசி அதிகமாக உயர்கிறது ஆனால் ஒரேஒரு பஞ்சப்படியை மட்டும் அறிவித்தவுடன் அரசுப் பணியாளர்கள் மனம் மகிழ்ந்துவிடுகின்றனர் என்று அவர்களின் அறியாமையைச் சுட்டிக்காட்டி ஏளனம் செய்வதை இக்கவிதையில் காணலாம்.[38]

கடத்தல்

இந்திய நாட்டின் சார்பாக வெளிநாடு சென்றுவருவோர் பொருட்களைக் கடத்திவரும் நிலையைக் காட்டிச் சாடுவதை ஒரு கவிதையில் காணலாம்.[39] நமது விளையாட்டுக்காரர்களாக மலேயா சென்றவர்கள் கடத்தல்காரர்களாகத் திரும்பி வருவதை ஏளனம் செய்கிறார். ஆட்டக்காரர்களைக் கடத்தல்காரர்களாக மாற்றும் மலேயாவைப் புகழ்வதுபோல ஆட்டக்காரர்களைச் சாடுகிறார்.

குறிப்பிட்ட காலகட்டத்தில் விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்ள மலேயா சென்ற இந்திய விளையாட்டுக்காரர்கள், சில பொருள்களைச் சட்டத்திற்கு மீறிக் கொண்டுவந்து பிடிபட்ட-தாக வந்த செய்தியை மனதில் கொண்டு இக்கவிதையை ஆசிரியர் எழுதியுள்ளார். 'மண்ணைச் சர்க்கரையாக்கும் மாயவித்தையைக் காட்டிலும், ஆட்டக்காரர்களைக் கடத்தல்காரர்களாக மாற்றம் மாயம் பெரிது' என்று கவிஞர் கேலி செய்யக் காணுகிறோம். தலைப்பு 'மாயம்' என்றிருப்பதும் அங்கதக் குறிப்புடையதே.

அரசியல் அங்கதம்

அரசியலில் காணப்படும் அனைத்து ஊழல்களும் ஏளன முறை-யில் எடுத்துக்காட்டிச் சாடப்பட்டிருப்பதை இவரது கவிதைகளில் காணலாம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஊழல்

இலஞ்சஊழல் எல்லா இடங்களிலும் இருப்பதைக் காட்டுகிறார்.

அமைச்சர் ஒருவர் மாறுவேடத்தில் ஆட்சித்தலைவர் அலுவலகம் செல்கிறார். பத்துரூபாயை ஊழியரிடம் கொடுத்து விபரம் கேட்கிறார். வாங்க மறுக்கிறார் ஊழியர். 'மந்திரி மகிழ்ந்தார்; தம் துறை ஊழியர் நேர்மையை நினைத்து நெஞ்சங்குளிர்ந்து வெளியே சென்றார்'. அமைச்சர் வெளியே சென்றதும்.

''..... ஊழியர்
திருவாய் மலர்ந்தார்
பத்து ரூபாய்க்கா
பார்த்துச் சொல்வேன்
அவ்வளவு எளிதாய்?
அலையவிட்டு நான்
அப்புறம் கறப்பேன்
அறுபது எழுபது''

என்று மக்களை அலையவிடுவ்துடன் மட்டுமல்லாது, அதிக அளவு பணத்தை இலஞ்சமாகப் பெறுவதையும் காட்டி ஊழலின் தன்மையை ஏளனம் செய்கிறார்.[40]

சிலை செய்வதில் மோசடி நடப்பது தெரிந்தும், 'மோசடிக் கிடையில் சிலையும் செய்ய முடிகிறதே என்பதை நினைத்து மகிழுங்கள்' என மோசடியின் தன்மையைக் கவிதை ஒன்றில் காட்டுகிறார்.[41]

மோசடி செய்வோருக்குப் பாராட்டுக் கிடைக்கும் இன்றைய அரசியல் நிலையினையும் ''கத்தி வந்தது டும்... டும்... டும்'' என்ற கவிதையில் எடுத்துக்காட்டி ஏளனம் செய்கிறார் கவிஞர்.[42]

கலப்படத்தையும் கேலிசெய்து சாடுகிறார் மீரா. 'பீகார் பகுதியிலிருந்து வந்த கோதுமை மூட்டையில் இரும்புத்தூள் கலந்திருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டது'' என்று ''நமக்கினி பயமேது?'' என்றார். ஏனெனில்,

''எங்கும்
இரும்பு மனிதரை
எதிர்பார்த்திடலாம்''

எனக் கேலிசெய்கிறார்.[43]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தேர்தல்

தேர்தல் காலத்தில் மட்டுமே அரசியல்வாதிகள் மக்களிடம் வந்து பல்வேறு வாக்குறுதிகளை அளிப்பர்; பொருள் செலவிடுவர் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை வரும் தேர்தல் களத்தில், பெரும் புள்ளிகள் வெள்ளிப்பணத்தை அள்ளி இறைப்பதைக் கண்ட கவிஞர், அத்-தேர்தல் ஆண்டுக்கொருமுறை வந்தால் மக்களுக்கு இன்னும் பொருள் நிறையக் கிடைக்குமே 'ஜனநாயக சோஷலிசம்' அடையலாமே என நகைச்சுவையுடன் தேர்தலில் பொருள் அதிகம் செலவிடுவதைச் சாடுகிறார்.[44]

கட்சி மாறல்

அரசியல்வாதிகளின் கட்சிமாறலை மின்னலுடன் உவமித்து ஏழுமாதத்தில் எட்டுத்தடவை கட்சி மாறுவதைக் காட்டி 'என்ன தேசம் இந்தத்தேசம்' என்கிறார் மீரா.

''எங்கள் ஊர் எம். எல்.ஏ
ஏழுமாதத்தில்
எட்டுத்தடவை
கட்சிமாறினார்
மின்னல் வேகம்
என்ன வேகம்?
இன்னும் எழுபது
கட்சி இருந்தால்
இன்னும் வேகம்
காட்டி இருப்பார் ...
என்ன தேசம்
இந்தத் தேசம்!''

என 'இன்னும் எழுபது கட்சிகள் இல்லையே கட்சிமாற', என் அரசியல்வாதிகள் நினைப்பதாகக் கூறுகிறார்.[45]

தமிழகத்தில் புதிய புதிய கட்சிகள் தோன்றிவருவதையும், எவர் வேண்டுமானாலும் கட்சி தொடங்கலாம் என்ற நிலை ஏற்பட்டிருப்பதையும் காட்டி ஏளனம் செய்கிறார். ஐயப்பன் கோவிலுக்கு லட்சக்கணக்கில் கூட்டம் செல்வதைக் கண்டு, சிலையாக இருப்பதை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விட்டுவிட்டு 'இப்போது கூடக் காலம் வீணாய்க் கடத்தாமல் புதுக்-கட்சியைத் தொடங்கினால் கண்டிப்பாக ஆட்சியைப் பிடிக்கலாம் என்று ஐயப்பனிடம் கூறுவது யாருக்கு அதிகக்கூட்டம் கூடுகிறதோ, அவர்கள் புதிதாகக் கட்சியை ஆரம்பித்து ஆட்சியைப் பிடிக்க முடியும் என்ற நிலை இருப்பதைக் காட்டி ஏளனம் செய்கிறார்.[6]

பதவிமோகம்

அரசியல்வாதிகள் பதவிவெறி பிடித்து அலைவதை,

''அப்புசாமியின்
அப்பா
ஆனைமாதிரி!
இருந்தபோது
எம். பி. பதவி
இறந்தபோது
சிவலோக பதவி''

என்று இறந்ததைக் கூடச் சிவலோக பதவியாகக் குறிப்பிடும்-நிலையைக் கேலிசெய்கிறார்.[47] 'யானை இருந்தாலும் ஆயிரம் பொன், இறந்தாலும் ஆயிரம் பொன்' என்பதுபோல, இருந்தாலும் பதவி, இறந்தாலும் பதவி என்றிருப்பதை 'ஆனை மாதிரி' என்ற சொல் குறிப்பாகக் காட்டுகிறது.

சொல்லொன்று செயலொன்று

'வறுமையை வெளியேற்றுவோம்' எனப் பேசும் அரசியல்வாதிகள் வறுமைக்குப் பதிலாக வறியவர்களை எட்டி உதைப்பதை 'வறுமை மிக வேகமாய் வெளியேறிற்று — பரட்டைத் தலையும், எலும்பும் தோலும் கிழிந்த கந்தையுமாக' என்று காட்டுவதன் மூலம் சாடுவதைக் காணலாம்.[48]

அதேபோன்று அமைச்சரவையின் எண்ணிக்கையைக் குறைக்காது, 'விருந்தைக் குறைப்பீர்; வெளிநாடு செல்வதைக் குறைப்பீர்; தொலைபேசிப் பேச்சைக் குறைப்பீர்; காரில் செல்வதைக் குறைப்பீர்' என்று பிரதமர் பேசி வருவதையும் 'எதிரொலி' எனும் கவிதையில் சாடுகிறார்.[49]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சிவப்புநாடா

இன்றைய அலுவலகங்களில் எல்லா நிலைகளிலும் தாமதம் நிகழ்வதையும் சிவப்புநாடா முறையால் மக்கள் பாதிக்கப்படுவதனை-யும் காட்டுவதில் அரசை ஏளனம் செய்து கண்டிக்கிறார்.

'அருப்புக்கோட்டை அழகர்சாமி காசநோய்க்கு மருத்துவம் பார்க்க மருத்துவமனைக்கு மனுப் போட்டபின், சென்றவாரம் அவனுக்கு அனுமதி வழங்கிக் கடிதம் போனது. போன மார்கழி-யிலோ, தையிலோதான் காலன்போட்ட கடிதம் கண்டு போய்ச் சேர்ந்தானாம்' என்று ''அழகர்சாமி அவசரக்காரன்'' என முடிக்-கிறார் கவிஞர். 'அவசரக்காரன்' என்னும் இக்கவிதை மருத்துவ-மனையின் நீண்ட தாமதத்தைச் சுட்டிக்காட்டி அங்கதக் குறிப்புப்-பட அமைந்திருக்கிறது எனலாம்.[50]

இவரது கவிதைத்தொகுதிகளில் 'ஊசிகள்' என்ற தொகுதி-யில் மட்டுமே அங்கதக் குறிப்புக்களைக் காணமுடிகிறது. இவர் கையாளும் அங்கத முறை மிக அழுத்தமும் ஆழமும் உடையதாக விளங்குகிறது. இப்பண்பே இவரது தனித்தன்மையாக விளங்கக் காணலாம்.

3, வாலி

வாலி திரைப்படப் பாடல்கள் இயற்றிப் புகழ்பெற்றவர். இவரது புதுக்கவிதைகளும் சிறப்புப் பெற்றவை. 'பொய்க்கால் குதிரைகள்' என்ற தலைப்பில் வெளிவந்துள்ள கவிதைத் தொகுப்பு இங்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. இவரது புதுக்கவிதை-களில் மகளிர் நிலை, நாட்டுப்பற்றின்மை, அரசியல்வாதிகளின் போலித்தன்மை சாடப்பட்டு, அங்கதப் பார்வைக்கு இலக்காகி-யிருப்பதை அறியமுடிகிறது.

சமுதாய அங்கதம்

சமுதாயத்தில் காணப்படும் பல்வேறு குறைபாடுகளும், மூட நம்பிக்கைகளும் இவரது கவிதைகளில் எடுத்துக்காட்டிச் சாடப்படு-வதைக் காணலாம்.

தன்னலம்

இவ்வுலகில் வாழும் மக்கள் தன்னலம் மிக்கவர்களாக இருப்-பதைச் சுட்டிக்காட்டுகிறார் கவிஞர். இரு கவிதைகளில் பிறர்மீது இரக்கம் காட்டுவது கூடத் தன்னலம் கருதித்தான் என்ற நிலையினை உணர்த்துவதைக் காணமுடிகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மனிதன் செம்மறியாடுகளை வளர்க்கிறான். அவை மலைப்-பகுதிக்கு மேயச் செல்கின்றன. மேய்ப்பவன் அங்குள்ள மூலிகைகளை மேயச் செய்கிறான். தப்பித் தவறிக்கூட நச்சுச் செடிகளில் வாய் வைத்துவிடாதே என்கிறான். 'உனக்குஒன்று நேர்ந்துவிட்டால்-என் உள்ளம குலுங்கிக் குலுங்கிக் குழந்தைபோல் அழும்' என்றும் அவைகளுக்கு எலும்புகள் முறிந்துவிட்டால் 'என் கண்களை முட்டிக் கொண்டு கண்ணீர் வரும்' என்றும் கூறுகிறான். புத்தன் ஆட்-டினைக் கையில்தான் ஏந்தினான். ஆனால் 'நான் கண்ணில் ஏந்திக் கொண்டிருக்கிறேன்' என்கிறான். 'இருட்டியதும் நீயாகவே வீடு திரும்பிவிடு' என்றும், 'அரைத்தூக்கத்தில் ஆனந்தமாக அசை போடு' என்றும் கூறுகிறான். இச்செயல்கள் எல்லாம் அச்செம்மறி ஆட்டின்மீது அவன் உண்மையான அன்பு செலுத்துகிறான் என்று காட்டுவன போல அமைந்திருக்கின்றன. ஆனால் இத்தகைய செயல்களுக்கெல்லாம் காரணம் அவனது தன்னலம்தான் என்பதைக் கவிதையின் இறுதிப் பகுதியில் காட்டுகிறார் கவிஞர்,

''பிடிந்த
பிறகுதான் ... ...
பக்ரீத்''

இவ்வரிகளே மனிதனின் உண்மை நிலையைக் காட்டுகின்றன. பக்ரீத் பண்டிகைக்குத் தனக்குத் தேவையான உணவுக்காக மட்டுமே அச்செம்மறியாட்டினைப் பேணி வளர்க்கிறானே தவிர, ஆட்டின் மீது உண்மையான அன்பினாலல்ல என்பதையும், ஆட்டுக்கு ஏதேனும் நேர்ந்தால் அதற்காக உண்மையாக வருத்தப்படாமல் தனக்குக் கிடைக்கும் உணவினை இழந்துவிடுவோமே என்ற நினைப்பால வருந்துகின்ற நிலையையும் இக்கவிதைமூலம் காட்டுவதைக் காண முடிகிறது. ஆட்டின் மீது காட்டுகின்ற இரக்கம் போலியானது என்-பதை அங்கதக் குறிப்புப்பட அமைத்துள்ளார்.[51] இக்கவிதையின் தலைப்பான 'இரக்கம்' என்பதும், ஆட்டின்மீது மனிதன் காட்டு-கின்ற இரக்கம் உண்மையானதல்ல, போலியானது என்ற அங்கதக் குறிப்புப்பட அமைந்துள்ளது.

இதே நிலையை இன்னொரு கவிதையிலும் காணமுடிகிறது.[52] பட்டுப்பூச்சிகளைத் தன் இடத்துக்கு அழைக்கிறான் மனிதன். பங்களாவில் இருக்கும் மலர்ச்செடிகளில் தேனைக் குடித்துக் கும்-மாளம் போடுங்கள் என்கிறான். இதற்குக் காரணமாக 'எங்களுக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குப் பட்டுநூல் வேண்டும்' என்று தன்னலேத்தைச் சுற்றிய மனி தனின் இரக்கம் உள்ளது என்பதைக் காட்டி, இத்தகைய குணத்-தைச் சாடுவதைக் காணமுடிகிறது. இக்கவிதையின் தலைப்பான 'பெரிய இடத்து விருந்து' என்பதும் அங்கதக் குறிப்புடையது.

மகளிர் நிலை

தகுந்த மணமகன் கிடைக்காது, வரதட்சணை கொடுக்க முடி-யாத நிலையினால் பெண்கள் படும் இன்னல்களைக் காட்டி இச் சமுதாயத்தைச் சாடுவதையும் காணலாம்.

பெண்கள் ஆடுகள் என்றும், அதுவும் 'புக்ககம் என்ற பட்டியில் அடைக்கப்படுவதற்காகவே படைக்கப்பட்ட ஆடுகள்' என்றும் காட்டு கிறார். பட்டியில் ஆடுகள் அடைக்கப்படுவது இயல்பு. ஆனால் இந்த ஆடுகளோ ''வைரத்தோடுகளோடு வந்தாலேயன்றி, எந்தப் பட்டியும் ஏற்கச் சித்தமாக இல்லை'' என்று காட்டுவது பெண்-களுக்கு மதிப்பில்லை, வைரத்தோடுகளுக்குத தான் மதிப்பு என்று இச்சமுதாய நிலையைச் சித்திரிப்பதற்கே.[53] ''பணப்பைகளோடு வாராத கருப்பைகளுக்குத் தன் வாரிசுகளைச் சுமக்கும் வாய்ப்பை வழங்குவதில்.....எந்த ஆண்மகனும் ஆர்வங் காட்டுவதில்லை'' என்பதும் இத்தகைய கருத்தையே காட்டுகிறது.[54]

புராணத்தில் கௌதமனால் அகலிகை கல்லாகும்படிச் சபிக்கப்-படுகிறாள். அவ்வகலிகை இராமனின் கால்பட்டு மீண்டும் உருப்-பெறுவதற்காக அவனை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாள். ஆனால் இங்குப் பெண்கள் ''கல்லாய்ப் போ எனச் சபிக்க...ஒரு கௌதமன் வாரானோ என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்''[55] என்று கூறுவது, உயிருள்ள நிலையில்தான் பல இன்னல்களைச் சந்திக்க வேண்டியுள்ளது; கல்லாகி விட்டால் அத்தகைய நிலை ஏற்படாது என்பதற்காகத்தான்.

புராணக்கதை மாந்தர்களான இராமன், அகலிகை, கௌதமன் ஆகியோர் இக்கவிதையில் பயன்படுத்தப்பட்டுள்ளனர். இன்றைய நிலையில் பெண்களை வாழவைக்கத் தக்க ஆடவர் இல்லாத நிலை-யில், கல்லாகிப் போவது கூட நல்லது என்று நினைக்கும் பெண்களின் அவலநிலையையும் இக்கவிதையில் அங்கதக் குறிப்புப்படப் பாடு-கிறார். அகலிகையைச் சபித்த கௌதமன், அகலிகையை வாழவைத்த இராமன் -இவர்களுள் வாழவைக்கும் இராமன் இல்லாததால், சபிக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கும் கௌதமனே வேண்டும் என்று சுட்டப்பட்டிருப்பதைக் காண முடிகிறது. இக்கவிதையில் சமுதாயச் சீர்கேடான வரதட்சணைக் கொடுமை அங்கதக் குறிப்புடன் சாடப்பட்டுள்ளது.

ஆடவர் நிலை

வரதட்சணைக் கொடுமையால் பெண்களை மணமுடிக்க மறுக்கின்றனர் ஆடவர். அதே ஆடவர் தட்சணை கொடுத்து விலைமகளிரிடம் செல்கின்றனர் என்று இன்றைய ஆடவர் நிலையினைச் சுட்டிக்காட்டுகிறார்.[56] வரதட்சணை கொடுக்க வழியின்றி விலைமகளிரான நிலையில், ''இப்போது அதே ஆடவர்கள் இங்கே வர, தட்சணை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்'' என்று விலைமகளிரிடம் செல்கின்ற ஆடவர் செயலையும், சிலபெண்கள் விலைமகளிராக மாறக் காரணமான சமுதாய நிலையினையும் காட்டுகிறார். இத்தகைய 'ஆடவர்களைச் 'செம்மறியாடுகள்' என்று நேரடியாக வசைபாடுகிறார் கவிஞர்.

''இவர்களைப்
பார்த்து
ஆடவர்கள்
என்று
அழைப்பதில்
அர்த்தமிருக்கிறது ...
ஆம்!
சாய்ந்தால்
சாய்கின்ற பக்கம்
சாய்கின்ற
செம்மறி
ஆடவர்கள்''[57]

என்கிறார்.

இக்கவிதையில் வரதட்சணை, வர-தட்சணை; ஆடவர், ஆடு-அவர் என்று அங்கதக் குறிப்புப்படச் சொற்சிலம்பமாடுகிறார் கவிஞர்.

ஆடவர்க்குக் காதல் என்பது விளையாட்டாகவே இருந்து வந்துள்ளது என்பதை ''எனக்கு மானம் காக்கும் சேலையாக இருந்த காதல்-உனக்கு மூக்கைச் சிந்தும் கைக்குட்டையாகவே இருந்திருக்கிறது'' என்ற பெண்ணொருத்தியின் சொற்கள் மூலமாகத் தெளிவுபடுத்துகிறார்.[58]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நாட்டுப்பற்றின்மை

நாட்டுப்பற்றின்மை ஒரு கவிதையில் நயமாக ஏளனம் செய்யப்படுகிறது.[59] ஆகஸ்டு பதினைந்தும், அக்டோபர் இரண்டும் காந்தியடிகளுக்கு நன்றி கூறும் நாட்கள் என்று கூறும் கவிஞர் அதற்கான காரணம் காட்டுகிறார்.

''உன்னால்
எங்களுக்கு —
விடுதலை கிடைத்ததற்காக
அல்ல — இரண்டுநாள்
விடுமுறை
கிடைத்ததற்காக''

என்று தங்களுக்கு விடுமுறை கிடைத்ததற்காக மட்டுமே நன்றி கூறுகிறார்களே தவிர, விடுதலை கிடைத்ததற்காக அல்ல என்பதனை ஏளனம் செய்வதைக் காணலாம்.

மூடநம்பிக்கை

பிற கவிஞர்களைப் போன்று இவரும் சாதகம் பார்த்தலை மூடநம்பிக்கை எனச் சாடுகிறார்.

ஓர் ஆடவனும் பெண்ணும் காதலிக்கிறார்கள். ஆனால் அவன் பெற்றோர் இருவர் சாதகங்களையும் பார்க்கின்றனர். பெண் சாதகத்தில் உள்ள செவ்வாய் தோஷம் ஆண் சாதகத்தில் இல்லாததால் அவர்கள் காதலை மறுக்கின்றனர். ''செவ்வாய் தோஷத்தால் நம் போன்ற ஏழைகளின் சந்தோஷங்கள் நசுக்கப்படுகின்றன'' என்ற வரிகள் மூடநம்பிக்கையால் உண்மைக்காதல் மறுக்கப்படும் நிலையைக் காட்டுகின்றன. மேலும் ''விண்வெளிக் கலங்கள் — செவ்வாயை வெல்லும் முயற்சியில் விரைந்துகொண்டிருக்கின்றன'' என்ற வரிகள், செவ்வாய்க்கோளுக்கு மனிதன் செல்லும் இச்சூழலில் 'செவ்வாய் தோஷம்' என்று கூறி மனமொத்த இருவரின் மணம் மறுக்கப்படுகின்ற அவலநிலையைக் காட்டுகிறார் கவிஞர்.[60]

''நடைபாதைகளில் கோவில்கள் முளைத்தால் கும்பிடப்படுகின்றன'' என்ற வரிகளும் மூடநம்பிக்கையைச் சாடுவனவே.[61]

அரசியல் அங்கதம்

இவரது கவிதைத்தொகுப்பில் அரசியற் சீர்கேடுகளை அங்கதப்படுத்தியிருக்கும் முறையினைப் பின்வருமாறு வரிசைப்படுத்தலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அரசியல்வாதிகள்

தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற அரசியல்வாதிகள் அமைச்சராகி விடுகின்றனர்.

''எங்களால்
மனிதர்களை
மந்திரிகளாக்க
முடிகிறது.
மந்திரிகளைத்தான்
மறுபடியும்
மனிதர்களாக்க
முடிவதில்லை''

என்ற கவிதையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு அமைச்சரானவர்கள் மனிதத்தன்மை இழந்து விடுகின்ற நிலையைக் காட்டுகிறார்.[62]

விடுதலைக்காகப் போராடிய காந்தியடிகளின் பெயரைச் சொல்லியே இன்றைய அரசியல்வாதிகள் பெருமளவு பொருள் சேர்ப்பதை நயமாகக் கண்டிக்கிறார்.

காந்தியடிகள் எவ்வித ஆஸ்தியும் வைத்துக்கொள்ளாமல் அஸ்தியை மட்டும் வைத்துப் போனார். ''அந்த அஸ்தியைச் சுமந்த உன் அடியார்கள் தற்போது ஆஸ்தியைச் சுமக்கிறார்கள்'[63] என்று கூறுவது அரசியல்வாதிகளின் நிலையைக் காட்டுகிறது.

கதராடை அணிந்த அரசியல்வாதிகள் சிலரால் துன்பங்கள் நிறைந்துவிட்டதாக நேரடியாகச் சாடுவதையும் காணமுடிகிறது. ''உன்னுடைய கதராடைகள் தறியாசனத்தில் இருந்தவரை எங்கள் கண்ணீரைத் துடைத்தன. அவைகள் அரியாசனத்தில் அமர்ந்தபின்னர்– எங்கள் புன்னகைகளைத் துடைத்து விட்டன'' என்று மிக உயர்ந்த மரபிலிருந்து வந்த அரசியல்வாதிகள் தற்பொழுது தாழ்ந்த நிலைக்குச் சென்ற தன்மையினைக் காட்டுகிறார்.[64]

அரசியல்வாதிகளின் ஆதிக்கம் மேலோங்கியிருப்பதை மற்றொரு இடத்திலும் காட்டுவதைக் காணமுடிகிறது. இந்திய நாடு ஆரம்ப நிலையில் அரசர்கள் கையில் இருந்தது; பின் அந்நியர் ஆட்சியில் இருந்தது என்றுகூறி;

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"தற்போது
அரசியல் வாதியின்
கையில்
இருக்கிறது"

என்று கூறுகிறார். அவரே "எப்போது மக்களின் கைக்கு வந்து சேரும்?" எனக் கேட்பது அரசியல்வாதிகளால் நாடு அடையும் துன்பங்களிலிருந்து எப்பொழுது மீளும்? என்ற பொருள்பட அமைந்து நகைச்சுவைக் குறிப்போடு விளங்கக் காணலாம்.[65]

"தேர்தல் கூட்டத்தில் இந்தத் தலைவர்கள் மீது பந்தயம் கட்டியே கட்சித்தொண்டர்கள் கைக்காசை இழக்கிறார்கள்" என்று இன்றையக் கட்சித்தொண்டர்களின் நிலையை மற்றொரு கவிதையில் காட்டுகிறார்.[66]

அரசியலில் சாதி பெறுமிடத்தை நயமாகச் சுட்டிக்காட்டி பொய்யான வாக்குறுதிகளைத் தரும் அரசியல்வாதிகளை இனம் காட்டுகிறார்.

வாக்காளர்களைப் பார்த்து ஒரு வேட்பாளர் 'என்னைத் தேர்ந்தெடுங்கள். நான் சாதிகளை ஒழிப்பேன். நீ அந்த சாதி, நான் இந்த சாதி என்று பேசுவோரால் தேசம் கெட்டுவிட்டது. சாதியற்ற சமுதாயத்தை அமைக்க எனக்கே ஓட்டுப்போடுங்கள்' என்று கேட்கிறார். கவிதை இத்துடன் நின்றிருந்தால் அரசியல்வாதியின் சிறப்புக் குணத்தை,—சாதியற்ற சமுதாயம் அமையவேண்டும் என்று உண்மையாக நினைக்கும் குணத்தை,-வெளிப்படுத்துகிறது எனலாம். ஆனால்,

"நினைவில்
இருக்கட்டும்
நான்
உங்கள்
ஜாதிக்காரன்"

என்று முடித்திருப்பது அரசியல்வாதியின் வெளிவேடத்தைத் காட்டுவதுடன் அரசியலில் சாதி நீக்கமற நிறைந்திருக்கும் தன்மையையும் வெளிப்படுத்துகிறது.[67]

காந்தியடிகளின் தண்டிப்பயணம் சிறப்புமிக்கது. இவரைப் போன்று உயர்ந்த குறிக்கோளின்றி இன்றைய அரசியல்வாதிகள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இருப்பதைப் 'பொய்க்கால் குதிரைகள்' காட்டுகிறது.[68] 'இன்றைய அரசியல்வாதிகள் கிண்டியில் உள்ள குதிரைப்பந்தய மைதானத்திற்கே செல்கிறார்கள். நிறைவேற்றப் பல வேலைகள் இருக்க குதிரைகளுக்குப் பரிசளிக்கவே செல்கிறார்கள்' என்று அரசியல்வாதியின் பொறுப்பற்ற தன்மையை எடுத்துரைக்கிறார். மக்களாட்சியில் மக்கள் இன்னும் பேச்சுரிமையற்ற நிலையில் இருப்பதை ''வண்டிக் குதிரைகள் வாய்ப்பூட்டோடு நிற்க-'' என்று[69] காட்டுகிறார். அரசியல்வாதிகள் உண்மையான குதிரைகள் அல்ல. பொய்க்கால் குதிரைகள் என்பது நேரடியான சாடலாக அமைகிறது[70]. அதுவும் 'மைய அரசின் நையாண்டி மேளத்திற்கேற்பப் பொதுநடனம் புரியும் — பொய்க்கால் குதிரைகள் என்பது மைய அரசினையும், அவ்வரசின் விருப்பத்திற்கேற்ப நடக்கும் மாநில அரசினையும் காட்டி ஏளனம் செய்வதாக அமைகிறது.[71] பொய்க்கால் குதிரைகள் எவ்வாறு தன்னால் ஓடவோ, நடக்கவோ முடியாதோ அதே போன்று மாநில அரசியல்வாதிகளும் தங்களால் ஏதும் செய்யமுடியாத நிலையில் உள்ளனர். பொய்க்கால் குதிரையை ஆட்டிவைக்கும் ஒருவன்போல இவ்வரசியல்வாதிகளை மைய அரசு ஆட்டிவைக்கிறது என்பதை அங்கதக் குறிப்புடன் சுட்டிக்காட்டியிருப்பதைக் காணலாம்.

வாலியின் 'பொய்க்கால் குதிரைகள்' எனும் கவிதைத் தொகுப்பில் 51 கவிதைகள் இடம்பெற்றுள்ளன. இவற்றுள் 13 கவிதைகளில் மட்டுமே அங்கதக் குறிப்புக்கள் காணப்படுகின்றன. இக்கவிதைகளிலும் மகளிர் நிலையும் அரசியல் நிலையுமே பெரிதும் விமரிசிக்கப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது. தட்சணை, வர-தட்சணை போன்ற சொற்கள் மூலமே பெரிதும் அங்கதக் குறிப்பினை வெளிப்படுத்தியிருக்கிறார் கவிஞர், இவரது கவிதைகளில் ஏளனக் குறிப்பு அதிகம் காணப்படவில்லை. மாறாக நேரடியாகச் சாடும் நிலை காணப்படுகிறது. சமுதாயச் சீர்கேடுகளைக் கவிஞர் களைய விரும்புவது போன்றே, அரசியல் தூய்மையையும் இவரது உள்ளம் அவாவி நிற்பதையும் இவர் கவிதைகளில் காணமுடிகிறது.

4. மேத்தா

இவர் 1945ஆம் ஆண்டு பெரியகுளத்தில் பிறந்தவர். தமிழிலக்கியம் முறையே கற்ற இவர், மரபுக்கவிஞராக இருந்து புதுக்கவிஞராக மலர்ந்தவர். ''சமூகமே இவரது தரிசன ஆலயம்; அதன் சிக்கல்களே இவர் கவிதைகளின் கீதாலயம்; வட்டமதிக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குடை ஏந்தி வந்தாலும், நட்சத்திர எழில்பூண்டு நின்றாலும், இருட்டின் பவனியைத் தட்டிக்கேட்கிற பிரகாச ஊர்வலம் இவரது கவிதைகள்'' என மது. ச. விமலானந்தம் குறிப்பிடுவதுபோல இவரது கவிதைகள் சமுதாயச் சிக்கல்களைச் சுற்றியே வட்டமிடுவதை உணரமுடிகிறது. இவரது படைப்புக்களாக

1. ஒரு வானம் இரு சிறகு
2. அவர்கள் வருகிறார்கள்
3. மனச்சிறகு
4. நடந்த நாடகங்கள்
5. ஊர்வலம்
6. கண்ணீர்ப் பூக்கள்
7. முகத்துக்கு முகம்
8. காத்திருந்த காற்று
9. நந்தவன நாட்கள்
10. திருவிழாவில் ஒரு தெருப் பாடகன்

போன்ற தொகுதிகள் வெளிவந்துள்ளன. இத்தொகுதிகளில் காணப்படும் அங்கதக் குறிப்புக்கள் பின்வருமாறு வகைப்படுத்தி ஆராயப்படுகின்றன.

சமுதாய அங்கதம்

சமுதாயத்தில் காணப்படும் பல்வேறு சீர்கேடுகள் இவரது அங்கதத்தாக்குதலுக்கு ஆளாகின்றன.

இலஞ்சம்

இலஞ்சம் எல்லா இடங்களிலும் நிறைந்து இருப்பதை மேத்தா தம் கவிதைகள் சிலவற்றில் காட்டுகிறார்.

அலுவலகத்தில் பணியாற்றும் அலுவலர்கள் தங்கள் பணியினைச் சரிவரச் செய்யாமையால், கோப்புகள் தேங்கிக்கிடக்கின்றன. கோப்புக்களுக்கு உரியவர்களுக்கு எவ்விதப் பயனும் ஏற்படுவதில்லை. ''வாடிக்கையாளர்களை வரச்சொல்லுங்கள். அலுவலகம் முழுவதும் ஒரே குப்பை'' எனக் கோப்புக்கள் நிறையச் சேர்ந்தமையால் அலுவலகம் முழுதும் ஒரே குப்பை போலக் காட்சியளிக்கிறது; அதனை விரைவில் நீக்கவேண்டும்; எனவே வாடிக்கையாளர்களை வரச்சொல்லுங்கள் என்று அலுவலர் ஒருவர் கூறுவதுபோலக் கவிதை இருப்பதைக் காணலாம். ஆனால் இறுதியில் ''காசு கொடுக்காமல் தூசும் நகராது'' என முடிக்கிறார். அலுவலகம் குப்பைபோல மாறினாலும் பரவாயில்லை; காசு கொடுத்தால்தான் செயல்கள் நடைபெறும்; கோப்புக்கள் நகரும் என்று இங்குச்-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

டேட்டியிருப்பதைக் காணமுடிகிறது. இக்கவிதையில் அரசுப்பணி புரி சுவாரின் இலஞ்சம் வாங்கும் தன்மை அங்கதக் குறிப்புடன் வெளிப் படுத்தப் பட்டுள்ளது.[72]

இக்கவிதை சப்பானியக் கவிதை 'ஹைகூ' வடிவில் அங்கதக் குறிப்பினை வெளிப்படுத்தியிருக்கக் காணலாம்.

பணமற்ற ஏழைகளால் அலுவலகங்களில் எவ்விதச்செயலையும் கிடிக்க இயலாத நிலையையும், பணமுடையவர்கள் எளிதில் முடித்து விடும் நிலையையும் மற்றொரு கவிதையில் சாடுகிறார்.[73]

இலஞ்சம் நீதித்துறையிலும் நுழைந்துவிட்ட தன்மையினையும் அங்கதக் குறிப்புப்படக் காட்டுகிறார். பணம் படைத்தவன் தனக்குச்-சாதகமாக நீதியை ஆக்கிக் கொள்கிறான்; ஆனால் பணமற்ற ஏழைக்கோ நீதி கிடைப்பதில்லை என்பதை,

''நியாயங்களின் விலை
இங்கே
அதிகமாகிவிட்டது
எனவேதான்
ஏழைகளால்
அதை வாங்க
இயலவில்லை''

என்று கூறும் கவிஞர் ''நீதிமன்றத்தின் நிழலிலேயே நீதி செத்துக்-கிடக்கிறது'' என்று நேரடியாகவும் சாடுகிறார்.[74]

திரைப்படத்துறை

திரைப்படத்துறை அனைவரையும் ஈர்க்கின்ற தன்மையினை-யும், ஈர்த்துவரப்பட்டவர்கள் அதிலேயே மூழ்கி மடிகின்ற தன்மை-யினையும் காட்டுகிறார். ''இது ஓர் அதிசய நந்தவனம்'' என்று இத்-துறையை வித்தியாசமாக அறிமுகம் செய்கிறார்.[75] ஏனெனில் இத்துறையாகிய நந்தவனத்தில் ''மலர்களெல்லாம் சிறகடிக்கின்றன, பின்தொடர்கின்ற வண்டுகள்தான் வாடி உதிர்கின்றன'' என்கிறார். பொதுவாக மலர்கள்தான் வாடி உதிர்ந்துவிடும் இயல்பின; வண்டுகள் சிறகடித்துப் பறக்கும் தன்மையன. ஆனால் இங்கு மாற்றிக் கூறுவது அங்கதக் குறிப்புடையது. கவிதைத் தலைப்பான 'கோடம்பாக்கம்' என்ற ஊர்ப்பெயரும் குறிப்பாகத் திரைப்படத் துறையைச் சுட்டி நிற்கிறது. கோடம்பாக்கத்தில்தான் திரைப்படத் துறை தொடர்பான

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அனைத்துச் செயல்களும் நடைபெறுகின்றன. எனவே, இக்கவிதை திரைப்படத் துறையினால் கவரப்பட்டோர் அடையும் இழிநிலையினை அங்கதக் குறிப்புடன் வெளிப்படுத்துவதைக் காணலாம்.

கல்வி

இன்றையக் கல்விமுறை, கல்வித்திட்டம், பெறுகின்ற பட்டம் இவற்றால் எவ்விதப் பயனும் இல்லாத தன்மை இவரது பல கவிதைகளில் சுட்டிக்காட்டப்படுகின்றன.

பாடநூல்களின் எண்ணிக்கைதான் அதிகமாகிவிட்டனவே தவிர அவற்றால் உண்மையான பயன் ஏற்படவில்லை என்பதைக் ''கல்வி இங்கே இதயத்தில் சுமக்கும் இனிமையாய் இல்லாமல், முதுகில் சுமக்கும் மூட்டையாகி விட்டது'' என்று அங்கதக் குறிப்புப்படக் காட்டுகிறார். இதனால் ''குழந்தைகளெல்லாம் கூனிகளாயினர்'', என்று முதுகில் சுமக்கும் புத்தகச் சுமையால் முதுகு வளைந்து காணப்படும் நிலையைக் காட்டுகிறார்.[76] இராமாயணக் கதை மாந்தரான கூனியைப் பள்ளிக் குழந்தைகளுடன் ஒப்பிட்டிருப்பது அங்கதக் குறிப்புடையது.

மேலும், கல்வி கற்றுப் பட்டம்பெற்ற மாணவர் நிலையினையும் இக்கவிதையில் வெளிப்படுத்துகிறார். மாணவர் பெறும் பட்டத்தையும், காகிதத்தில் செய்த விளையாட்டுப் பட்டத்தையும் ஒப்பிட்டு, ''காகிதத்தில் செய்த பட்டமாவது பறக்கிறது; எங்கள் மாணவ மணிகள் படித்து வாங்கிய பட்டமோ அவர்களை இறக்குகிறது''[77] என்று கல்விப்பட்டத்தால் எவ்விதப் பயனும் ஏற்படாத நிலையைக் காட்டுகிறார்.

பணத்திற்கு உள்ள மதிப்பு கல்விக்கு இல்லை என்பதையும் கல்வி கற்பதற்குக் கூட அதிகப் பொருள் தேவைப்படும் இன்றைய நிலையினையும்,

> ''லட்சுமி தன்னை
> லட்சியம் செய்யாததால்
> இங்கே
> சரஸ்வதி மிகவும்
> சங்கடப் படுகிறாள்''[78]

என்ற கவிதையின் மூலம் எடுத்துக்காட்டுகிறார். இக்கவிதையில் கல்விக்கு ஏற்பட்ட அவலநிலையைக் குறிப்பாகச் சுட்டுவதைக் காணமுடிகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கல்வி கற்றுத் தேர்ந்த புலவர்களுள் ஆட்சியாளருக்கு அடிமைப்பட்டுத் தன்மானமிழந்து நிற்கும் நிலையினை மற்றொரு கவிதையில் காட்டுகிறார்.[79]

அரசன் தனக்கு எத்தனை இலட்சம் ஓட்டுக்கள் விழுந்திருக்கும் என்ற நினைவில் உறங்கிக்கொண்டிருக்கிறான், அவனை எவ்வாறு பள்ளி எழுச்சி பாடி எழுப்புவது என்ற சிந்தனையில் புலவர் நுழைகிறார். புழுக்கம் தாழாது புரண்டு படுக்கிறான் அரசன். புரிந்துகொண்ட புலவர் அவன் காலருகே நின்று கவரி வீசுகிறார்.

அரசனின் உதவிகிட்டாதா என்று ஏங்கி நிற்கும் நிலையினையும். கல்விகற்ற புலவர்கள் தன் பெருமையிழந்து நிற்கும் நிலையினையும் இக்கவிதையில் அங்கதக் குறிப்புப்படக் காட்டியிருக்கிறார் கவிஞர்.

மரபுக்கவிதையைக் கேலிசெய்தல்

மரபுக்கவிஞராக இருந்து புதுக்கவிஞராக மாறியவர் மேத்தா. முறையாகத் தமிழ் கற்றுக் கவிதைகள் இயற்றியவர். இவர் மரபுக் கவிதைகளைக் கேலி செய்வதைக் காணமுடிகிறது.

மரபுக்கவிஞர்கள் தமது கவிதையில் எதுகைக்காகச் சிரமப்படும் நிலையையும், அதனால் பொருளற்ற சொற்களையெல்லாம் கலந்து எழுத வேண்டிய நிலையில் இருப்பதையும் காட்டுகிறார். கவிதை என்பது அனுபவத்தின் வாயிலாக வெளிப்பட வேண்டும். உள்ளத்து உணர்ச்சிகளின் அத்துமீறிய வெளிப்பாடே கவிதையாகும். இதற்கு அளவற்ற அனுபவ அறிவு தேவை. ஆனால் சில மரபுக்கவிஞர்கள் எவ்வித அனுபவமும் இன்றிக் கவிதை எழுதத் தொடங்குவதைக் கேலி செய்கிறார்.

''உறங்கிக்கொண்டிருந்த முருகனின்'' என்று ஒரு கவிதையின் முதலடியைத் தொடங்குகிறார் ஒரு புலவர். இரண்டாம் அடியை எழுதுவதற்கு ஓர் எதுகையைத் தேடுகிறார். பல சொற்களைச் சிந்திக்கிறார். இறுதியில் ''உறங்கிக் கிடந்த முருகனின் முதுகில் இறங்கிப் பாய்ந்தது எதிர்வீட்டான் கத்தி'' என்று முடிக்கிறார்.[80]

இக்கவிதைகளில் 'உறங்கி' என்பதற்கு எதுகையாகப் பல சொற்களை நினைத்துப் பார்த்த புலவர் 'பறங்கி' என்ற சொல்லை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எழுத நினைக்கிறார். ஆனால் பறங்கிப் பூவைப் பார்த்ததில்லையே என்று கலங்குகிறார். எதுகைக்காகச் சொற்களைத் தேடிச் சோர்ந்தே போகிறார் இறுதியில் தேவையற்ற சொற்களைம் கொண்டு கவிதையினை முடிக்கிறார். இக்கவிதையின் மூலக் இன்றைய நிலையில் சில கவிஞர்கள் மரபுக்கவிதை எழுத அடையும் துன்பத்தை அங்கதக் குறிப்புடன் வெளிக்காட்டியிருப்பதைக் காண முடிகிறது. உணர்ச்சி, அனுபவம் மூலமாகத்தான் கவிதை வெளிப்-படுமேதவிர, தன்னையேவருத்திக் கொண்டு ஒவ்வொரு சொல்லாகத் தேடி எழுதுவதால் கவிதை உருவாகாது என்று காட்டுகிறார்.

திரைப்பட நடிக நடிகையர் மக்களிடையே பெறும் மதிப்பை-யும், கல்வியாளர்கள், சிந்தனையாளர்கள் மதிப்பிழந்து நிற்பதையும் பிற கவிஞர்களைப் போன்று இவரும் எடுத்துக்காட்டுகிறார். [81]

மிகுந்த ஒப்பனையுடன் மெல்லிய ஆடை அணிந்து மேடை வெளிச்சத்தில் மினுக்கியபடி நடிகையர் வருகின்றனர். இவர்களைக் கண்டவுடன் இரசிகர்களின் உற்சாகம் அதிகமாகிறது. இச்சூழலில்,

''இடையே இடையே
எழுந்திருக்கிற
சிந்தனையாளர்களே
சற்றே
தள்ளி நில்லுங்கள்-
உங்கள்
தலை மறைக்கிறதாம்''

என்கிறார்.

மக்களை நன்முறையில் வழிநடத்திச் செல்லச் சிந்தனை-யாளர்கள் தேவை. ஆனால் அவர்களை விடத் திரைப்பட நடிகை-யரே மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றிருப்பதையும், நல்வழி நடத்த விரும்பும் சிந்தனையாளர்களைக கண்டு 'தள்ளி நிற்கச் சொல்வதையும்' அங்கதக் குறிப்புடன் காட்டுகிறார். நடிகையரைக் காணும் இரசிகர்களை 'இராஜாஜி ராஜ ரசிக மாமணிகள்' என்பதும் இத்தகைய குறிப்புடையது எனலாம். கவிதைத் தலைப்பான 'வெளிச்சத்தை நிராகரிக்கும் விளக்குகள்' என்பதும் அத்தகையதே. விளக்குக்கு வெளிச்சம் வேண்டும், ஆனால் இங்கு விளக்குகள் வெளிச்சத்தை விலக்குகின்றன. மக்களை நல்வழியில் நடத்தச் சிந்தனையாளர்கள் தேவை; ஆனால் அதைவிடுத்து—இருட்டையே விரும்பும் விளக்குப்போல—பயனற்ற நடிகையரின் பின்னே சுற்று

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கின்ற தன்மையை உணர்த்துவதன் மூலம் இக்கவிதைத் தலைப்பு அங்கதக் குறிப்போடு விளங்குகிறது எனலாம்.

வரதட்சணை

பிற கவிஞர்களைப் போன்று, வரதட்சணையையும் இவர் சாடுவதைக் காணமுடிகிறது. இன்றைய இளைஞர்கள் வரதட்சணையை ஒழிப்பதற்கு முயற்சிப்பதில்லை; மாறாகப் பெண் வீட்டில் வரதட்சணை கொடுப்பார்களா? என்றுஎதிர்பார்க்கிறார்கள் என்கிறார்.

'இளைஞர்கள் இராமர்கள்; தசரதர் தந்தையர்; இவர்களிடம் வரதட்சணை வில்லைத் தருகிறார்கள்; இராமர்களும் வில்லைத் தூக்கி வருகிறார்கள்; முறிப்பதற்கு அல்ல; பெண்ணால் சுமக்க முடியுமா என்று சோதிப்பதற்கு' என்று அங்கதக் குறிப்புடன் கூறுகிறார். [82]

இராமாயணக் கதையைக் கையாண்டு, அக்கதையினை இக்காலச் சூழலுக்கு ஏற்பச் சற்றே மாற்றி அங்கதக் குறிப்பினை வெளிப்படுத்துகிறார் கவிஞர்.

அன்றைய இராமன் சீதையை மணக்க வில்லை முறித்தான்; இன்றைய இராமனோ வில்லை முறிக்காமல் சீதையால் தூக்க முடியுமா என்று பார்ப்பதையும்; தந்தையே வரதட்சணை கேட்டு அனுப்புகிறான் என்பதையும் இக்கதையின் மூலம் காட்டுகிறார்.

பெற்றோரே வரதட்சணை கேட்கும் நிலையை இன்னொரு கவிதையிலும் காட்டுகிறார் [83]

''..... பெரியவர்கள் மட்டும்
விலைதரச் சொல்லி
விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள்.....
வேருடன் பிடுங்கிப் போக''

என்ற இக்கவிதையில் வளரவேண்டிய செடியினை வேருடன் பிடுங்குவதுபோல வாழவேண்டிய பெண்ணை வரதட்சணையால் கொடுமைப்படுத்துகின்றனர் என்ற கருத்தினை இங்குக் காட்டுகிறார்.

மற்றொரு வரலாற்று நிகழ்ச்சியின் மூலம் கவிஞர் அங்கதக் குறிப்பினை வெளிப்படுத்தியிருப்பதையும் காணமுடிகிறது. 'குளிரால்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நடுங்கிய மயிலுக்குப் போர்வை கொடுத்தவன் பேகன். இங்கு இலட்சக்கணக்கான பெண் மயில்கள் வரதட்சணைக் குளிரால் நடுங்குகின்றன என்றபோது, "அப்பேகன் போர்வையை எடுத்துத் தன் முகத்தைப் போர்த்துக் கொண்டான்' என்பதை,

''லட்சோப லட்சம் பச்சைமயில்கள்
வறுமை அடிமை வரதட்சணைக் கொடுமை
இவற்றில்
நடுங்குகின்றன என்றேன்.
வேக வேகமாய்
எதிரே வந்த பேகன்
அவசர அவசரமாய்ப்
போர்வையை எடுத்துத் தன்
முகத்தைப்
போர்த்துக் கொண்டான்''

என்று காட்டுவதன் மூலம் வெளிப்படுத்துகிறார்.[84]

காதல் மணம், கலப்பு மணம் போன்றவை ஏட்டளவிலும், உதட்டளவிலும் உள்ளனவே தவிர, உண்மையான வாழ்வில் அவற்றிற்கு வரவேற்பு இல்லாத நிலையை,

''அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்
இரண்டு பேரையும் அடித்து நொறுக்குவதற்கு
அப்பன் காரனும் நோக்கினான்''[85]

என்று உணர்த்துகிறார். இராமாயண அடியான 'அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்' என்பதை இங்குப் பயன்படுத்தி அங்கதக் குறிப்பினை வெளிப்படுத்தியிருக்கிறார்.

இளைஞர் நிலை

இன்றைய இளைஞர்களின் உறுதியற்ற நிலையினையும், வாழ்க்கையினை எதிர்நோக்க அஞ்சும் தன்மையினையும் காட்டுகிறார்.

'வரதட்சணை வாங்கமாட்டோம்' என்று இளைஞர்கள் கூறுகிறார்கள். இவர்களைப் புகழ்ந்து மற்றவர்கள் பேசுவதைக் கேட்டவுடன் இக்கொள்கையினை விட்டுவிடுகிறார்கள். இந்நிலையினை.

' வாங்கமாட்டோம்
வரதட்சணை
என்கிற

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வாலிப வாக்குறுதிகள்
குமுதம் இதழில்
தங்கள்
படத்தையும் பெயரையும்
பார்த்து ரசிக்கிற
பரவசத்தோடு முடிந்து விடுகின்றன''

என்ற கவிதையில் சாடுகின்றார்.[86]

வேலை கிடைக்காத இளைஞர்களுக்குப் 'பத்திரிகைகளின் தேவைப்பகுதிகள் பைபிள்' என்றும், 'வேலை வாய்ப்பு நிலையங்கள் தான் அன்றாடம் வணங்கும் ஆலயங்கள்' என்றும், 'எம்பிளாய்-மெண்ட் தலைவர்களே இணையற்ற தெய்வங்கள்' என்றும் காட்டி, இன்றைய இளைஞர் நடுவே இருக்கும் வேலையில்லாத் திண்டாட்-டத்தை அங்கதக் குறிப்புடன் எடுத்துக் காட்டுகிறார்.[87]

மனித மனத்தின் நிலையினை ஒரு கவிதையில் காட்டுகிறார் கவிஞர். பக்தன் ஒருவன் கோயிலுக்குச் சென்று இறைவன் முன்னர் விழுந்து வணங்கி, எதிரே தோன்றிய இறைவனிடம் தன் மனத்தில் வந்து இருக்கச் சொல்லிக்கதறுகிறான். பரமனும் உடனே பறந்-தான்'. இதுவரை இறைவன் மீது உண்மையான பக்தி கொண்டி-ருக்கிறான் பக்தன் என்ற உணர்வினைத்தான் உணர்த்துகிறார். ஆனால்,

''பரமன் உடனே பறந்தான்
பக்தனின் செருப்புகள்
கிடந்த
வாயிற்
படிக்கட்டை நோக்கி''[88]

என்று முடிப்பது கோயிலுக்குச் சென்று இறைவனை வணங்கும் போது கூட அவன் மனம் வெளியே, தான் வைத்து வந்திருக்கும் செருப்பின் மீது நிலைத்து இருக்கும் தன்மையினையும், உண்மை-யான பக்தியற்ற நிலையினையும் அங்கதக் குறிப்புப்படக் காட்டு-வதற்கே எனலாம்.

'வியாபாரிகள் உயிர் வேறு எங்கும் இல்லை, பணப்பெட்டி-யில் பத்திரமாக இருக்கிறது. இவனது ஆசைகள் கடைவீதியில் அலைகின்றன' என்று கூறுவது,[89] இன்றைய இளைஞர்கள் பெண் சபலம் கொண்டு அலைவதை 'பெண்ணொருத்தி அவன் எதிரே

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நடமாடக் கூடத் தேவையில்லை; சுவரொட்டிப் படம் கூட இளைஞர்களைப் படாதபாடுபடுத்துகிறது'[90] என்பது, தான் எடுத்துக் கொண்ட குறிக்கோளை அடையாது இடையிலே தேவையற்ற பிறபணிகளில் ஈடுபடுவதை 'மைதானத்தில் எங்கோ ஒரு மூலையில் பார்ப்பாரற்றுக் கிடந்த பந்து பார்த்துச் சிரித்தது' என்பது மூலம், கொள்கையற்ற தன்மையைக் காட்டுவது,[91] ''மதயானை குறுக்கிட்டாலும் நடுங்காத சூரர்களும், மதிற்பூனை குறுக்கிட்டால் நடுங்குகிறார்கள்; பல்லவன் வந்து மேல் விழுந்தாலும் பதறாதார் பல்லி விழுந்தால் பதறுகிறார்'' என்று மக்களின் மூடநம்பிக்கையினைக் காட்டுவது[92] கவிஞரின் அங்கதக் குறிப்புடைய கவிதைகள் எனலாம்.

இன்றைய நகரங்களில் நடைபெறும் காட்சிகளை அங்கதக் குறிப்புப்பட,

''நகரங்கள்
நாகரிகமடைந்து விட்டன
தெருவெல்லாம்
அன்றாடம்
அனுமதிக்கப்பட்ட அடிதடிகள்''

என அடிதடிகளே நாகரிகமாகி விட்ட நிலையைக் கேலிசெய்திருப்பதை இப்பாடலில் காணமுடிகிறது.[93]

அரசியல் அங்கதம்

இவரது கவிதைத்தொகுப்புக்களில் பெரும்பாலும் அரசியல் வாதிகள், தேர்தல், பதவி போன்றவற்றின் இன்றைய நிலை ஏளனக்குறிப்புடன் எடுத்துக் காட்டப்படுகிறது.

அரசியல்வாதிகள்

அரசியல்வாதிகள் பொய் பேசுவதைத் தம் தொழிலாகக் கொண்டிருப்பதை ''மேடைக்குத் தலைவன் மெதுவாக வந்தான். அழகான பொய்களை அவிழ்க்கத் தொடங்கினான்'' என்று கூறும் கவிஞர், ஆசிரியை மாணவனை அடித்துத் திருத்துவதைப் போலத் தலைவனை யார்தான் திருத்துவார்களோ?'' என்று கேட்கிறார்.[94]

சீனக் கவிதை வடிவமொன்றைப் பின்பற்றி எழுதப்பட்டிருக்கும் இக்கவிதையில் அரசியல்வாதியின் மீது கவிஞர் கொண்டிருக்கும் தார்மீகமான கோபம் அங்கதக் குறிப்புடன் வெளிப்பட்டிருப்பதைக் காணலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இதே கோபம், அரசியலில் சில கோமாளித் தலைவர்கள் உள்ளனர்; அவர்கள் தேசத்தையே குட்டிச்சுவராக்கி அதில் வால்-போஸ்டர் ஒட்டுகிறார்கள் என்று கூறுவதிலிருந்து வெளிப்படு-கிறது.[95]

அரசியல்வாதிகள் நுழையாத இடமே இல்லை என்னும்படி, கல்வித்துறையில் இவர்கள் நுழைந்த தன்மையினைக் காட்டும் கவிஞர்

''கலைமகளின் வீணையை
ஏலம் போடுகிறார்கள்
அன்பான
அரசியல்வாதிகள்''

எனும் கவிதையில் 'கலைமகளின் வீணையான' கல்வியைப் பாழ்படுத்தும் அரசியல்வாதியை 'அன்பான' என்ற சொல்லால் குறித்து அங்கதமாக்கியிருப்பதைக் காணமுடிகிறது.[96]

அரசியல்வாதிகள் உண்ணாவிரதப் போராட்டம் என்று இப்பொழுது அறிவிப்பது அனைத்தும் ஏமாற்று வேலையே என்ற கொள்கையுடையவர் கவிஞர். ''உண்மையைச் சொல்லப்-போனால் இவனது புகழ்பெற்ற உண்ணாவிரதப் போராட்டம் இங்குதான் ஒழுங்காக நடக்கிறது'' என்று அரசியல்வாதியின் கல்லறையில் எழுதப்படவேண்டிய தொடராகக் கூறுவதிலிருந்து அறியலாம்.[97] இப்பாடலில் அரசியல்வாதிகள் உண்ணாவிரதப் போராட்டம் என்று நடத்தவது மக்களை ஏமாற்றுவதற்கே என்பதை நயமாகச் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வேண்டியவர்கள் அரசியல் வாதிகள். ஆனால் இவர்களோ, தீர்வு ஏதும் காணாது, காணவும் முயற்சி செய்யாது, தங்கள் பேச்சுத் திறமையால் மக்களிடமே அப்பிரச்சினையை விட்டுவிடுவதையும், அதனால் அம்மக்கள் அரசி யல் வாதியைச் சிறந்தவன் என்று பாராட்டும் நிலை ஏற்படுவதையும் காட்டியிருப்பதன் மூலம் இன்றைய அரசியல்வாதிகள் சிலரின் நிலையைக் காட்டுகிறார்.[98]

'பாரதநாட்டின் மாபெரும் தலைவர்கள் மக்கள் உற்சாக மழையில் கார்வலம் வருகின்றனர். கப்பல் வடிவ விழாமேடையில், இந்தியாவின் எதிர்கால இருட்டில் வாழமுடியாத வாலிபர் முன்-னர்ப் பேச எழுகின்றனர். வேலையில்லா நெருக்கடி, வறுமைப்-பேய், விலைவாசி உயர்வு போன்ற பிரச்சினைகளால் தாக்கப்-பட்டிருக்கும் இளைஞர்களிடம்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

''வேலையின்மையை விரைந்து துறத்தவும்
விலைவாசி வேதாள மரத்தை வீழ்த்தவும்
வறுமைக் குரங்கின் வாலை நறுக்கவும்
கறுப்புச் சந்தையைப் கட்டுப்படுத்தவும்
நாடு உம்மையே நம்பியுள்ளது
இளைஞர் உலகமே என்ன சொல்கிறாய்?''

என்று அவர்களை நோக்கி வினாத்தொடுத்து விட்டுக் கைதட்டல் ஒலியுடன் காரில் ஏறி மறைகின்றனர்.

அலங்காரமாகப் பேசியே, மக்களைப் பிரச்சினைகளிலிருந்து திசை திருப்பிவிடும் அரசியல்வாதிகளையும், பிரச்சினைகளுக்குத் தீர்வுகிடைக்காதா என ஏங்கி நிற்கும் மக்கள், அரசியல்வாதியின் பேச்சில் மயங்கி அவனுக்காகக் கைதட்டும் நிலையினையும் அங்கதக் குறிப்புடன் காட்டியிருக்கிறார்.

அரசியல்வாதிகள் கட்சிமாறும் நிலையினையும் சில இடங்களில் கவிஞர் சாடக் காணலாம். ''சிலருக்கு தான் எந்தக் கட்சியில் இருக்கிறோம் என்பதே தினசரித்தாள் வாசித்த பின்னரே தெரிகிறது''[99] என்ற வரிகள் இவர்களைக் கேலி செய்கின்றன எனலாம்.

பதவி

பதவியையும், பதவிக்கு வருவதற்காகத் தலைவர்கள் பின் பற்றும் ஒழுங்கற்ற வழிமுறைகளையும், பதவியிலிருந்துகொண்டு செய்யும் மோசடிகளையும் தம் கவிதைகளில் விளக்கி இன்றைய அரசியல் நிலையினை வெளிக்காட்டுகிறார் கவிஞர்.

'பதவி ஒரு புதுமாதிரியான போதை' என்று கூறும் கவிஞர் 'பதவியில் இருப்பவன் மட்டுமன்றி, கூட இருப்பவனும் கொண்டாட்டம் போடுகிறான்' எனச் சுற்றியிருப்போரின் நிலையினைக் காட்டுகிறார். 'பதவி, ஒரு பசை. அதனால்தான் அதன்மீது அமர்பவர்கள் கெட்டியாக ஒட்டிக்கொள்கிறார்கள்' என்று பதவியை விட மறுப்பதற்கான காரணத்தை நகைச்சுவையுடன் காட்டி, பதவி வெறியர்களைச் சாடுகிறார்.[100]

பதவியில் அமர்வதற்காக ஒருவரை ஒருவர் அடித்துக்கொள்ளும் நிலையினை,

''பதவிக் கனிகளைப் பறிப்பதற்காக
சீட்டுகள் யாருக்கென்று

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஒருவரை ஒருவர்
குலுக்கிப் பார்க்கிறோம்''

என்று காட்டுகிறார்.[101]

பதவிக்காக எதுவும் செய்யும் அரசியல்வாதிகளையும், பதவி கொடுத்து யாரையும் தன்வயப்படுத்தும் நிலையினையும்,

''பதவிக்காக வலை விரிக்கப்பட்டது
பதவியும் வலையாய் விரிக்கப்பட்டது
கண்விழித்தால் இந்தியாவைக் காணவில்லை''

எனும் கவிதையில் இந்தியநாடு இத்தகைய அரசியல்வாதிகளால் அழிந்துகொண்டிருப்பதையும் சாடக் காணலாம்.[102]

பதவியைப் பிடிப்பதற்காக ஆயிரக்கணக்கில் பொய் கூறுவோரையும், அதற்கான வழிமுறைகளைப் பற்றி மட்டுமே சிந்தித்துக் கொண்டிருப்போரையும், அவர்கள் பதவிக்கு வரவிரும்புவதன் காரணத்தையும் காட்டுகிறார்.

''நாற்காலிகள்
காலியாக இருக்கின்றன
யார் வரப் போகிறீர்கள்?
பரவாயில்லை.....வாருங்கள்
காலிசெய்யத்தானே
வருகிறீர்கள்''[103]

என்ற இக்கவிதையில் 'காலியாக இருக்கும் நாற்காலியைப் பிடித்து. 'காலி' செய்ய வருகிறார்கள் என, 'காலி' என்ற சொல்லின், மூலமும் அங்கதக் குறிப்பினை வெளிப்படுத்துகிறார். மக்களிடம் இருக்கும் பொருட்களைக் கவர்வதற்கும், அவர்களிடம் எதுவுமே இல்லாமல் காலியாக்குவதற்கும்தான், அரசியல்வாதிகள் பதவிக்கு வருகிறார்கள் என்பதை இக்கவிதையில் அங்கதக் குறிப்புப்படக் கவிஞர் எடுத்துக்காட்டுவதைக் காணலாம்.

மக்களாட்சி முறை

மக்களாட்சியின் சீர்கேடுகளை ஒரு கவிதையில் கேலி செய்கிறார் கவிஞர். ''ஜனநாயகம் பரவாயில்லை; எப்போதும் ஒரு கோட்டுக்கு உட்பட்டே இருக்கும்'' என்று கூறும்போது சனநாயகத்திற்கெனக் கட்டுப்பாடுகள் இருப்பதை அறியமுடிகிறது. ஆனால்,

''தாண்டத் தாண்டக்
கோடுகளைத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தள்ளிப்போட்டுக்
கொண்டால்
ஜனநாயகம் பரவாயில்லை
எப்போதும்
ஒருகோட்டுக்கு
உட்பட்டே இருக்கும்''

என்று சனநாயகத்தின் இன்றைய நிலையைக் காட்டுகிறார். சனநாயகம் கோடுகளைத் தாண்டுகிறது. ஆனால் மற்றொரு கோடு போட்டுவிட்டால் அதற்குக் கட்டுப்பட்டிருப்பது போலத் தோன்றும் என்று மாற்றி மாற்றிச் சட்டங்கள் இயற்றுவதையும், சனநாயகத்திற்குப் புதுவிளக்கம் அவ்வப்போது தருவதையும் காட்டிக் கேலி செய்வதைக் காணமுடிகிறது.[104]

தேர்தல்

இன்றையத் தேர்தல் முறையின் ஒழுங்கீனங்களையும் தம் கவிதைகளின் மூலம் சாடுகிறார் கவிஞர்.

தேர்தல் நேரத்தில் இறந்தவர்கள் பெயரில் கூடப் பிறர் வாக்களித்துவிடுவர் என்பதைத் ''தேர்தல் என்கிற திருவிழாக் காலங்களில் பிணங்களையும் எழுந்து பேசவைக்கின்ற வித்தைகள் அத்துபடியாகும்'' என்கிறார்.[105] சாதியைச் சொல்லி வாக்குக் கேட்டலையும், சேவைகள் அளிப்பதையும், கைகுவித்து வணங்குவது போன்ற பலமுறைகளைப் பின்பற்றி தேர்தலில் வெற்றிபெற நினைக்கும் நிலையையும் காட்டிச் சாடுகிறார் கவிஞர்.[106]

காந்தி

இன்றைய அரசியலில் மகாத்மா காந்தியடிகளின் பெயரைத் தவறாகப் பயன்படுத்திப் பயனடையும் அரசியல்வாதிகளின் நிலையை இனம் காட்டுகிறார்.

இந்தியாவில் காந்தியடிகளை மறக்கவே இல்லை என்று கூறி, அதற்கான காரணங்களைக் காட்டுகிறார்.

காந்தியடிகள் விடுதலைப் போராட்ட காலத்தில் மக்களுக்கு உபதேசம் செய்தார், உபவாசமும் இருந்தார். இப்பொழுது,

''கேட்காவிட்டாலும் உபதேசம் கிடைக்கிறது
வேறுவழியின்றி உபவாசம் நடக்கிறது''

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்று தேவையற்ற அறிவுரை கூறுவோரின் எண்ணிக்கைதான் அதிகரித்துவிட்டதே தவிர, உண்மையான — மக்களுக்குத் தேவைப்படும் — அறிவுரைகளைக் கூறுவோர் இல்லை என்பதையும், வயிற்றுக்குச் சோறு கிடைக்காத காரணத்தால் வேறுவழியின்றிப் பட்டினி கிடப்பதையும் காந்தியடிகளின் 'உபதேசம்', 'உபவாசம்' என்பதுபோல் காட்டியிருப்பது அங்கதக் குறிப்புடையது.[107] இந்தியா 'உத்தம தேசம்' என்ற சொல்லிலும் எதிர்மறைப் பொருளுடன் அங்கதக் குறிப்பு இருப்பதைக் காணலாம்.[108]

'இன்றைய அரசியல்வாதிகளுக்குக் காந்தியடிகள் தேவையில்லை; அவரது பெயர்தான் வேண்டும்' என்பதன் மூலம் காந்தியின் பெயரைக்கொண்டு, நேர்மையற்ற அரசியல் நடத்தும் அரசியல்வாதிகளைச் சாடுகிறார்.[109]

இன்றையப் புதுக்கவிதை உலகில் முன்னணியில் விளங்கும் கவிஞர் மேத்தாவின் கவிதைகளில் காணப்படும் அங்கதம் இலக்கியத் தரம்மிக்கதாக விளங்குகிறது. அரசியலைவிடச் சமுதாயச் சீர்கேடுகளே பெரிதும் இவரது கவிதைகளில் அங்கதப் பார்வைக்கு இலக்காகியிருப்பதை அறியமுடிகிறது.

5. வைரமுத்து

இவர் 1955ஆம் ஆண்டு பெரியகுளத்தை அடுத்துள்ள வடுகபட்டி என்னும் சிற்றூரில் பிறந்தவர். இவரது கவிதை வாழ்வு, மரபில் தொடங்கி, பின்னர் புதுக்கவிதையாக நடமிடுகிறது எனலாம். இவரது கவிதைகள் ஐந்து தொகுதிகளாக வெளிவந்துள்ளன. அவை,

1. திருத்திய எழுதிய தீர்ப்புகள்
2. இன்னொரு தேசியகீதம்
3. கொடிமரத்தின் வேர்கள்
4. வைகறை மேகங்கள்
5. ரத்ததானம்

என்பனவாகும். இவரது கவிதைகள் பெரும்பாலும் சமுதாயச் சீர்கேடுகளை எள்ளல் முறையிலும், சாடல் முறையிலும் வெளிக்காட்டுவனவாக அமைகின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சமுதாய அங்கதம்

சமுதாயத்தில் காணப்படும் நடுத்தர வர்க்கத்தினரின் நிலை, தரந்தாழ்ந்த இலக்கியம், சாதி, திரைப்படம், இன்றையக் கல்வி முறை ஆகியவற்றை இவர் தம் கவிதைகளில் அங்கதப்படுத்திப் பாடியுள்ளார்,

நடுத்தரவர்க்கத்தின் நிலை

பணிக்குச் செல்லும் நடுத்தர வர்க்கத்தினர் ஒவ்வொரு மாத இறுதியிலும் படும் துன்பத்தை 'இயற்கையோடு இயைந்த வாழ்வு' எனும் கவிதையில் அங்கதக் குறிப்புப்படக் காட்டுகிறார்.[110] வானத்தில் உள்ள பிறை நிலவைக் கண்ட மகன், தந்தையிடம் ''ஏம்ப்பா நிலா சூம்பிப்போச்சு?'' என்று கேட்கிறான். தந்தை சிரித்துக்கொண்டே,

''அதுக்கும் நம்மைப்போல்
மாசக்கடைசியோ!
என்னவோ மகனே!''

எனப் பதிலுரைக்கிறான்.

''இயற்கையோடு இயைந்த வாழ்வு
என்பது இதுதானோ?
எந்தமிழர் சொன்னதும்
சரிதானோ?''

என்று கேட்பது அங்கதக் குறிப்புப்பட அமைந்துள்ளது. மாதக்கடைசியில் இத்தகைய குடும்பங்களில் ஏற்படும் பணத்தட்டுப்பாட்டைப் பிறை நிலவுக்கு ஒப்பிட்டுக் காட்டியிருப்பதைக் காணலாம்.

இலக்கியம்

எவர் வேண்டுமானாலும் கவிதை எழுதவும், அச்சகம் வைக்கவும் தொடங்கும் இன்றைய நிலையைக் கவிஞர் எள்ளி நகையாடுகிறார்.[111]

''அச்சகம் வைத்தோரெல்லாம்
கவிதை எழுதவும்
கவிதை எழுதுவோரெல்லாம்
அச்சகம் வைக்கவும்''

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தொடங்கிவிட்ட நிலையைக் காட்டுகிறார். இத்தகைய நிலையினால் கவிதையின் தரம் குறைந்துவிடும் தன்மையைக் காட்டிச் சாடுகிறார்.

''பழைய புத்தக
வியாபாரிகளே
இன்று
விமர்சகர்கள்''

என்று படைப்புக்கள் மக்களைச் சென்று சேர்ந்து, அவர்களால் விமரிசனம் செய்யப்படாமல் பழைய புத்தகக் கடைக்காரர்களால் விமரிசிக்கப்படும் நிலையினைக் குறிப்பாகக் காட்டுவதன் மூலம் தரமான இலக்கியம் தோன்றாமல் இருப்பதைக் காட்டுகிறார். ''வட வேங்டகந் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகத்துள்'' என்று பனம்பாரனாரின் வரிகளை அப்படியே கையாண்டு, அடிக்-குறிப்பில் ''நன்றி பனம்பாரனாருக்கு'' என்று குறிப்பிட்டிருப்பதும் அங்கதக் குறிப்புடையது.

வீண் பேச்சுப் பேசுவதில் மக்கள் காலம் கழிக்கின்றனரே தவிர, ஆக்கச் செயலில் ஈடுபடுவதில்லை என்பதை நயமாகத் தம் கவிதைகளில் சாடுகிறார்.

பாரதி விழா நடத்துகின்றனர். பாரதியைப் பற்றியும், அவனது செயல்களைப் பற்றியும், அறிவுரைகளையும் கேட்கின்றனர். ஆனால் அவற்றின்படி நடப்பதில்லை. மாறாக,

''பாரதி மீசைவைத்த
வயது
பதினெட்டா இருபத்தெட்டா
எனும்பட்டி மன்றந்தான்
இன்னும் நடக்கிறது''

என்று பாரதியின் கனவுகளைப் பற்றியும், அவன் கூறிய வழியைப் பற்றியும் எண்ணாமல், வீண்பொழுதுபோக்கிக் கொண்டிருப்பதைக் காட்டுகிறார்.[112] இப்பகுதியில் தேவையற்ற செயலைப்பற்றிச் சிந்திக்கும் தன்மையுள்ள பட்டிமன்றங்களைக் கவிஞர் சாடுகிறார். பாரதியின் பாடல்கள் இப்பொழுது மிகச்சிறிய வடிவில் வெளியாகி உள்ள நிலையினை.

''அவன்
கண்ட கனவு
சுருங்கிச் சுருங்கிக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கையடக்கப் பதிப்பாய்க்
காட்சி தருகிறது;''[113]

என்று கூறி அவனது கனவுகள் நிறைவேறாமல் இருக்கும் தன்மையையும், அவனது பாடல்கள் அடங்கிய நூல் மிகச்சிறிய அளவில் அச்சாகியிருப்பதையும் சாடுகிறார். மிகச்சிறிய அளவில் இருக்கும் புத்தகத்தைப் போன்று அவனது கனவும் சுருங்கிவிட்டது என்று கூறுவது அங்கதக் குறிப்புடையது. ''பாரதி நினைக்கப்படுகிறான்'' என்ற இக்கவிதைத் தலைப்பிலும் அங்கதக் குறிப்புக் காணப்படுகிறது. பாரதியை நினைக்கிறார்கள்; ஆனால் பின் பற்றுவதில்லை என்பதையும்; விழா எடுப்பது ஒன்றுதான் அவனை நினைப்பதற்குரிய வழி என்று எண்ணியிருக்கும் நிலையினையும் அங்கதக் குறிப்புப்பட எடுத்துக்காட்டியிருக்கிறார் கவிஞர்.

இலக்கியம் படித்தவர்கள் தங்கள் பேச்சுத்திறமையால் மக்களைத் திசைதிருப்புப் தன்மையையும், தங்கள் பெருமையினைப் பறைசாற்றிக் கொள்வதில் விருப்பம் அடைவதையும், சூழ்நிலைக்குத் தக்கவாறு நடந்துகொள்ளாத தன்மையையும் ஒரு கவிதையில் எடுத்துரைக்கிறார்.[114]

மயில்வாகனன் என்பவர் கந்தபுராணத்தில் எம். லிட். பட்டம் பெற்றுப் பல இடங்களிலும் கந்தபுராணக் கதை சொல்லி வருபவர். ஒருசமயம் 'புலவர் திலகம் ஈற்றடியார்' மறைந்ததற்காக இரங்கல் நாள் நடைபெறுகிறது. மயில்வாகனன் ஒருமணி நேரத்திற்கும் மேலாகக் கந்தபுராணத்தைப் பற்றியே பேசுகிறார். பின்னர்,

''இப்படிப்பட்ட கந்தபுராணத்தை
நாளும் ரசிப்பவர் மறைந்தார்
அவர்
நாமம் வாழ்க! வணக்கம்''

என்று முடிக்கிறார்.

இரங்கற் பேச்சு இறந்தவரைப் பற்றித்தான் அமைய வேண்டுமே தவிரத் தனக்குத் தெரிந்ததைப் பேசும் பேச்சாக இருக்கக்கூடாது என்பதை நயமாகக் காட்டுகிறார்.

'அறுபத்தேழு நிமிடம் சோர்வடையாமல் சொல்லி முடித்து' என்று நீண்டநேரம் பேசியதையும்.

''.....முடித் தாரோ இல்லையோ!
கைதட்டல் அடங்கக்
கால் மணி ஆயிற்று''

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்று இரங்கலின் போது கைதட்டி ஆரவாரம் செய்யும் அளவிற்குப் பேச்சு அமைந்ததையும் காட்டிக் கேலி செய்கிறார், 'பேச்சு வியாபாரி' என்ற தலைப்பின் மூலமும், இவர்கள் தங்கள் பேச்சினை வைத்து வியாபாரம் செய்யும் தன்மையினை அங்கதக் குறிப்புப்படக் காட்டியிருக்கிறார். பேச்சாளர்களின் இன்றைய நிலையும், கலைஞர்களின் நிலையும் அங்கதக் குறிப்புடன் இக்கவிதையில் வெளிப்பட்டிருக்கின்றன எனலாம்.

எழுத்துச் சுதந்திரத்தால் ஏற்படும் நிலையினை ஒருபாடலில் கேலி செய்கிறார் கவிஞர்.[115]

"நடிகையின் வீட்டு
நாலுநாய்களில்
மூன்றுநாய் கர்ப்பமென்று
முதல்செய்தி வந்தது"

என்று நடிகை வீட்டு நாய்கள் கர்ப்பம் அடைந்திருப்பதைச் செய்தியாக வெளியிட்டிருப்பதைக் காட்டிக் கேலி செய்கிறார். எழுத்துச் சுதந்திரம் அளிப்பதால், வேறுபல பயனுடைய செய்திகள் இருந்தும் அவற்றை விடுத்துப் பயனற்ற செய்திகளை வெளியிடும் நிலை தோன்றுவதை ஏளனம் செய்கிறார்.

"விசாரித்த போதுதான்
விவரம் தெரிந்தது
அத்தனை நாய்களும்
ஆண்நாய்கள்"

கவிதையின் இவ்வரிகள் அங்கதக் குறிப்புடன் அமைந்துள்ளன.

இன்றையச் செய்தியாளர்கள் தேவையற்ற செய்திகளை மட்டுமல்ல; உண்மையில்லாத செய்திகளையும் வெளியிடும் நிலையினையும், அத்தகைய சூழலை எழுத்துச் சுதந்திரம் அவர்களுக்கு அளித்து விடுவதையும் காட்டியுள்ளார். 'எழுத்துச் சுதந்திரம்' என்ற தலைப்பும், எது வேண்டுமானாலும் எழுதும் நிலை வந்திருப்பதை அங்கதக் குறிப்புப்படக் காட்டியுள்ளது எனலாம். மேலும், தரைப்படச் செய்திகள் பத்திரிகை உலகை அதிகமாகத் தன் வயப்படுத்தியிருக்கும் நிலையினையும் வெளிக்காட்டுகிறார்.

சாதி

சாதிக்கொடுமையினைப் பிற கவிஞர்களைப் போலவே இவரும் அங்கதக் குறிப்புடன் எடுத்துக் காட்டுகிறார்.[116]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கலப்பு, பிற இடங்களில் இருந்தால் வரவேற்கிறார்கள். வண்ணங்களின் கலப்பை வானவில் என்றும், பூக்களின் கலப்பை மாலை என்றும், கட்சிகளின் கலப்பினைக் கூட்டணி என்றும் கலர்த்-துணிகளின் கலப்பைத் தேசியக்கொடி என்றும் பாராட்டுவார்கள். ஆனால் ஓர் ஆணும் பெண்ணும் கலப்பு மணம் புரிந்தால் ஒப்புக் கொள்ளாத நிலையினை,

''நம் ஊரில்
கொசுக்களையும் ஜாதிகளையும்
ஒழிப்பதற்கு இன்னும்
உத்தரவாதமில்லை''

என்கிறார். கொசுக்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கும் அளவு, சாதிகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது என்பதையும், கொசுக்களை அறவே ஒழிக்க முடியாததுபோலச் சாதிகளையும் ஒழிக்க முடியாத நிலையினையும் நயமாகக் கேலி செய்வதைக் காணலாம். சாதி மக்களிடையே ஆழமாக வேரோடியிருப்பதை.

''இங்கு
ஜாதிதான் பெயர்
பலபேருக்கு
பெயர் — வெறும் பேருக்கு''

என்று அங்கதக் குறிப்புப்படச் சாடியிருப்பதைக் காணலாம்.

திரைப்படம்

திரைப்படம் மாணவர்களைக் கவர்ந்திழுக்கும் முறையினைக் காட்டுகிறார். கல்லூரி மாணவர்கள் தாம் இருக்கும் விடுதி அறைச் சுவர்களுக்கு வெள்ளையடிப்பதை விரும்பவில்லையாம். அதற்கான காரணமாக,

''சுவரில் வெள்ளையடித்தால்
சினிமாக் காரர்களின்
முந்நூறு முகவரிகள்
மொத்தமாய் அழியுமே''[11]

என்று கூறுவதில் கல்வி, தாங்கள் வாழும் அறைத்தூய்மை இவற்றைக் காட்டிலும் அவர்களுக்குத் திரை உலகினரின் முகவரிகள் தேவையானதாக மாறிவிட்ட நிலையைக் காட்டி அங்கதக் குறிப்போடு ஏளனம் செய்கிறார்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இன்றையக் கல்விமுறை

இன்றைய இளைஞன் பெறும் பட்டத்தினால் எவ்விதப் பயனும் இல்லை என்பதையும் நயமாகக் குத்திக் காட்டுகிறார். இந்தியா வாங்கிய சுதந்திரத்திற்கும் இளைஞன் வாங்கிய பட்டத்திற்கும் வித்தியாசம் இல்லை என்று கூறும் கவிஞர்,

''இரண்டும் இருப்பது
சட்டத்திலே தானே''

என்று கூறுவது, பட்டங்கள் கண்ணாடிச் சட்டத்திற்குள் வைத்து அழகு பார்ப்பதற்கு மட்டும் பயன்படும் நிலையையும், வேலைவாய்ப்பிற்குப் பயன்படாத நிலையையும் அங்கதக் குறிப்புடன் காட்டுகிறார்,[118]

படித்துப் பட்டம் பெற்ற இளைஞர்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தையும், இளமையிலேயே முதுமையாக அவர்கள் தோற்றம் அளிப்பதையும்,

''எம்ப்ளாய்மெண்ட் அட்டையில்
புதுப்பிக்கும் தேதியைத்
தேடித் தேடியே
கண்களின் வெளிச்சம்
கரைந்து விட்டதா?''

என்று கேட்பதன் மூலம் வெளிக்காட்டியிருக்கிறார்.[119] கவிஞர் இக்கவிதையில் வெகுநாட்களுக்கு முன்னரே வேலைவாய்ப்பு அலுவலகத்தில்பெயர்ப்பதிவு செய்தவர்களுக்கும் கூட இன்னும் வேலைவாய்ப்பு அளிக்க முடியாத நிலையினை அங்கதக் குறிப்போடு எடுத்துக் காட்டுகிறார்.

இன்றைய ஆய்வு முறைகள்

இன்றைய ஆய்வு முறைகளைக் கேலி செய்யும் கவிஞர்,

''ஆய்வா?
பெரிய எழுத்து விக்கிரமாதித்தனின்
முதல்பதிப்பு முதல்
மூன்றாம் பதிப்பு வரை
அட்டை வித்தியாசங்களைப்
பட்டியல் போடுவது —
அதுதானே தாயே ஆய்வு''[120]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்று கூறுவது இக்கால ஆய்வின் தரம் மிகவும் தாழ்ந்து இருப்பதைக் குறிப்பாகச் சுட்டிக் காட்டவே எனலாம்.

போலித் துறவிகள்

சமுதாயத்தில் இருக்கும் போலித் துறவியரை இனம் காட்டுகின்ற கவிஞர், அனைத்தையும் துறந்து பற்றற்ற நிலையில் இருக்க வேண்டிய துறவிகள், பெண்ணாசையைத் தீர்த்துக்கொள்ள முடியாமல் இருப்பதை,

"இங்கு
பலதுறவிகள்
தம்
மௌனவிரதங்களை
முத்தமொழி பேசித்தானே
முடித்துக் கொள்கிறார்கள்"121

என்று காட்டி ஏளனம் செய்கிறார்.

அரசியல் அங்கதம்

இக்காலகட்டத்தில் ஆட்சியாளரிடையே காணப்படும் அரசியற் சீர்கேடுகளைச் சுட்டிக்காட்டுவதில் இவர் சிறப்பிடம் பெறுகிறார்.

விடுதலை

இந்தியநாடு அடிமைத்தளையினின்று நீங்கிச் சுதந்திரம் பெற்றுவிட்ட நாடு. ஆனால் சுதந்திரம், நாட்டுமக்கள் அனைவருக்கும் கிடைக்கவில்லை என்ற நிலையினை அங்கதக் குறிப்புப்பட எடுத்துக் காட்டியிருப்பதைக் காணலாம்.

"சுதந்திர வெளிச்சம்
சேரியில் விழாமல்
மாளிகை நிழல்களே
மறைத்துவிட்டன"122

என்று, கீழ்மட்டத்தில் இருக்கும் மக்களுக்குச் சுதந்திரம் இல்லாத தன்மையினையும், அவர்களை மேல்மட்டத்தினர் இன்னும் அடிமையாகவே வைத்துள்ள தன்மையினையும் சுட்டிக்காட்டிச் சாடுகிறார்.

"அப்பனின் திருவோட்டை
புத்திரனுக்கு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இது
புதுப்பித்துத் தந்தது''[123]

என்றும்,

''வெளிநாட்டான் இட்ட
விலங்கை உருக்கி
உள்ளூர் விலங்குகள்
உற்பத்தி செய்தது''[124]

என்றும் 'சுதந்திரத்துக்குக்' கவிஞர் தரும் விளக்கம் விடுதலை அடைந்தும் எந்தவித மாற்றமும் ஏற்படாத நிலையையும், ஆங்கிலேயர்களிடமிருந்து விடுதலையடைந்தும் இந்தியர்களிடமே அடிமைப்பட்டுவிட்ட நிலையையும் அங்கதக் குறிப்புப்பட வெளிக்காட்டுவதாக விளங்குகிறது.

அரசியலும் ஆட்சிமுறையும்

இன்றைய அரசியலையும். ஆட்சிமுறையினையும் கேலி செய்து, அவற்றின் குறைகளைத் திருத்த நினைக்கிறார் கவிஞர்.

'ஊராட்சி ஒன்றியக் கட்டடத்தில், ஊரில் எரியாத விளக்குகள் எத்தனை என்று சொல்லும் புள்ளி விவரக் கணக்குகள் தான் இருக்கும்' என்று விளக்குகளைப் பற்றிய கணக்குக் காட்டுவதில்தான் ஆர்வம் கொண்டிருக்கிறார்களே தவிர, அவை எரிகின்றனவா? என்று பார்ப்பதில்லை என்பதை அங்கதக் குறிப்புடன் காட்டுகிறார்.[125]

அரசாங்கம் கவிஞர்களின் நினைவாக விழா எடுப்பதையும், அவர்கள் வாழ்ந்த வீட்டினை நினைவகமாகப் பாதுகாப்பதையும் அங்கத முறையில் காட்டி அரசாங்கத்தைச் சாடுவதையும் காணலாம். விழா எடுக்கும் அரசு, கவிஞன் உயிரோடு இருக்கும்போது உதவி செய்ததா? என்று கேட்கிறார்.

''வாடகை தர இயலாமல் வருகிற சண்டையால் இப்போது நானிருப்பது இருபத்தேழாவது வீடு!'' என்று கூறி,

''நீங்கள் எனக்கு
''நினைவகம்' அமைக்க
எத்தனை வீட்டைத்தான்
வாங்கித் தொலைப்பீர்கள்?''

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்றும் கேட்பது, உயிருடன் இருக்கும்போது எவ்வித உதவியும் செய்யாது, இறந்தபின் விழா எடுப்பதும், நினைவகம் அமைப்பது மான செயல்களில் ஈடுபடும் நிலையினக் காட்டி. அரசாங்கத்தைச் சாடுவதற்கே எனலாம்.[16]

அரசியல்வாதிகள் கவிஞர்களுக்கு நடத்தும் விழாவினைக் கூட உள்ளன்போடு நடத்தாமல், அதன்மூலம் தங்களுக்கு ஆகாயம் தேடிக்கொள்ளும் நிலையினை அங்கதக் குறிப்புப்படக் காட்டுவதை-யும் காணமுடிகிறது.

பாரதிவிழாக் காலத்தில் பாரதி சிலைகளுக்கு மலர்களால் மரியாதை செய்து ''மாலைகளால் மூடிவிட்டோம்'' என்று கூறிக் ''கடைசியில் நாங்களே ஜெயித்தோம்'' என எக்காளமிடுவது பாரதியின் பெயரையும், புகழையும் மறைத்துவிட்டுத் தங்கள் பெயரே வெளிவருமாறு செய்த நிலையினைக் காட்டி, அரசியல்-வாதிகளின் விளம்பர உணர்வினை வெளிப்படுத்துகிறார்.[127]

பாரதிவிழாக் கலகமான ஒருவருடம் முழுவதும் ''பேச்சாளர் மனைவியரெல்லாம் பிறந்தகத்தில்'' என்றுகூறி, ''லாபம் தான்' என்பது, ஆண்டு முழுவதும் பாரதியைப் பற்றிப் பல்வேறு இடங்-களில் பேசிப் பயன்பெற்ற பேச்சாளர் நிலையைக் காட்டுவ-தாகும்.[128]

''உன்னை
ஒருவருஷம் நினைத்துக்
களைத்து விட்டோம்
இனி
ஒருயுகத்திற்கு
ஓய்வெடுப்போம்''[129]

என்று விழாக்காலத்தில் மட்டுமே நினைத்துப் பிற நேரங்களில் மறந்துவிடும் அரசியல்வாதிகளின் நிலையைச் சாடுகிறார். ',களைத்துவிட்டோம்'', ''ஓய்வெடுப்போம்'' என்ற சொற்கள் அங்கதக் குறிப்புடன் அமைந்திருக்கக் காணலாம்.

மகாத்மா காந்தியடிகளின் கொள்கைகள் இப்பொழுது பின்பற்றப் படாமல் இருக்கும்தன்மையை அங்கதக் குறிப்புப்படக் குத்திக்காட்டுகிறார் கவிஞர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காந்தியடிகள் வெள்ளாட்டுப்பால் அருந்தச் சொன்னார். அது மலிவு என்பதற்காகவும், உடலுக்கு நல்லது என்பதற்காகவும். ஆனால்,

''இப்போது எங்களூரில்
வெள்ளாட்டுப் பாலை விடவும்
மலிவாய்க் கிடைப்பது
மதுதான் மகாத்மா''[130]

என்று இந்திய நாட்டில் மதுதான் மலிவாகக் கிடைக்கிறது என்று, மகாத்மாவால் கடைப்பிடிக்கப்பட்ட மதுவிலக்குக் கொள்கை இப்பொழுது தளர்ந்துவிட்ட நிலையையும், மதுவின் ஆதிக்கத்தையும் அங்கதக் குறிப்புப்படக் காட்டியிருக்கிறார்.

இதேபோன்று, காந்தியடிகளின் கொள்கை இப்பொழுது நகரத்துப் பெண்களிடம் செல்வாக்குப் பெற்றிருக்கிறது என்று கூறி, அதற்கான காரணத்தை அங்கதக் குறிப்புப்பட வெளிப்படுத்தியிருக்கிறார்.

''உன்னைப் பின்பற்றி
அரையாடை கட்டுவது
அவர்கள்தாம் இப்போது''[131]

என்று இன்றையப் பெண்களின் நிலையினை, காந்தியடிகள் எளிமைக்காக கட்டிய அரையாடையை நாகரிகம் என்ற பெயரில் உடலை வெளிக்காட்டும் முறையில் உடுத்துகிறார்கள் என்று கேலி செய்கிறார் கவிஞர்.

முதலாளிகள்தான் காந்தியடிகளை மறக்கவில்லையாம். ஏனெனில்,

''அவர்களே
உனது
வரிகொடா இயக்கத்தை
வழிநடத்தும் வாரிசுகள்''[132]

என்று வரியேய்ப்புச் செய்யும் முதலாளிகளை இனம் காட்டுவதுடன், காந்தியடிகளின் கொள்கை மறக்கப்பட்டு வரும் நிலையையும் நயமாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார். இப்பகுதியில் 'அரையாடை', 'வரிகொடா இயக்கம்' என்ற உயர்ந்த குறிக்கோள்கள் அவற்றின் மதிப்-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பினை இழந்து, சீர்கெட்டிருப்பதை அங்கதக் குறிப்புடன் வெளிப்–படுத்தியிருக்கிறார்.

இறுதிப்பகுதியில் காந்தியடிகளை வசைபாடுவது போல இந்திய நாட்டைச் சாடுகிறார். காந்தியடிகளைப் பின்பற்றும் அளவில் இந்தியநாடு இல்லை, அது தன் நிலையில் மாறிவிட்ட தன்மையை,

''காந்திமகாத்மா
நீ
நல்லநாணயந்தான்
.....
.....
ஆனாலோ
செல்லாத நாணயம் போ''[133]

என்ற கவிதைப் பகுதியில் காட்டுகிறார்.

இன்றையச் சட்டசபையையும், அதன் நடவடிக்கைகளையும் கேலி செய்யும் கவிஞர், சட்டசபைகளைக் கோவிலுக்கு உவமையாக்கு கிறார். ''இன்னும் கொஞ்சநாளில், அத்தனை சட்டசபைகளும் ஆல-யங்கள் ஆகலாம்'' என்று கூறுவதால் ஆலயம் போன்று சட்டசபை–களும் புனிதமான இடங்களாக ஆக்கப்படும் என்று நினைக்கத் தோன்றும். ஆனால்,

''அங்கும்–'
செருப்போடு நுழைவது
தடை செய்யப்படலாம்''[134]

எனச்சட்டசபைக்குள் நடைபெறும் நாகரிகமற்ற செயல்கள்-செருப்பு வீச்சு போன்றவை—நிகழாமல் இருக்கவே என்று காட்ட அங்கதக் குறிப்பினைப் பயன்படுத்தியிருப்பதைக் காணலாம்.

அரசியல் கட்சிகள் அனைத்து இடங்களிலும் பரவியிருக்கின்ற, நிலையையும், எண்ணற்ற கட்சிகள் பெருகிவிடும் நிலையினையும்,

''கிராமத்துப் பொது மரத்தில்
அதன் இலைகளை விட
அதில் பறக்கும்
கட்சிக் கொடிகளின்
எண்ணிக்கையே அதிகம் இப்போது''[135]

என்று காட்டுகிறார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மன்னராட்சிக் காலத்தில் அரசாண்ட மன்னர்களுக்கு இருந்த மதிப்பைவிட இன்றையக் குடியாட்சி நாட்டில் அமைச்சர்களுக்கு மதிப்பு அதிகம் என்பதை அங்கதமாகப் பாடுகிறார் கவிஞர். 'எல்-லோரும் இந்நாட்டு மன்னர்!' என்று பொதுக்கூட்டத்தில் அமைச் சர் ஒருவர் பேசிச்சென்றபொழுது,

''மன்னர்களுக்கேதப்பா
மரியாதை?
எல்லோரும் இந்நாட்டு
மந்திரிகள் ஆவதெப்போ?''[136]

என்று ஒருவன் கேட்பதுபோல் அமைச்சர்களுக்குக் கிடைக்கும் அள வற்ற மரியாதையை வெளிப்படுத்தியிருக்கிறார்.

வறுமையின் காரணமாக, உடுத்த உடையின்றி இருக்கும் இந்தியப் பெண்கள் தங்கள் மார்பகத்தை மறைப்பதற்குக் குழந்தை-களையே ஆடைகளாகப் பயன்படுத்துகின்ற நிலையினைக் காட்டி,

''உண்மையே! உண்மையே! உண்மையே!
மானங்காப்பான் மகனென்ப துண்மையே''

என்று அங்கதக் குறிப்புப்பட வெளிக்காட்டுகிறார்.[137] இக்கவிதையின் தலைப்பான 'மரபு மாறவில்லைதானே!' என்பதும் அங்கதக் குறிப்புப் படவே அமைந்துள்ளது

இவரது ஐந்து கவிதைத் தொகுதிகளில் 'ரத்ததானம்', 'வைகறை மேகங்கள்' ஆகிய இரு தொகுதிகளைத் தவிர ஏனைய மூன்று தொகுதிகளில் மட்டுமே அங்கதக் குறிப்புடைய பாடல்கள் காணப்படுகின்றன.

பிற கவிஞர்களைப் போன்றே இவர் கவிதைகளும் சமுதாயச் சீர்கேடுகளைச் சாடி, அவற்றைத் திருத்தவேண்டும் என்ற நோக்கம் கொண்டவையாக விளங்குகின்றன. இந்நோக்கத்தை நிறைவேற்றப் பல இடங்களில் கவிஞர் அங்கத முறையினைக் கையாண்டுள்ளார்.

6. பிற கவிஞர்களின் கவிதைகளில் அங்கதம்

புதுமைப்பித்தன், மீரா, வாலி, மேத்தா, வைரமுத்து தவிர மேலும் பலர் தம் புதுக்கவிதைகளில் அங்கதத்தை மிகச்சிறப்பாகக் கையாண்டிருப்பதைக் காணமுடிகிறது. அத்தகைய கவிஞர்களின் சில கவிதைகளை இங்குக் காணலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அரசியலும் அரசியல்வாதிகளும்

அரசியலும், அரசியல்வாதிகளும் மேலும் பல புதுக்கவிஞர்களின் அங்கதப் பார்வைக்கு ஆளாகின்றனர்.

ஓர் ஊரின் சாலை ஓரத்தில் சாலை போடுவதற்காகக் குவிக்கப்பட்டிருந்த கற்கள் ஆறுமாத காலமாக அப்படியே இருந்ததாம். கற்களின் அளவு குறையாமல் இருந்ததைக் கண்ட கவிஞர்,

> ''ஊரை அண்ணாந்து உற்றுப்பார்த்தேன்
> அரசியல் கட்சிக்கொடிகள் எதுவும்
> அந்த ஊரில் பறந்திட வில்லையே''

என்று கூறுகிறார்.[138]

குருவிக்கரம்பை சண்முகத்தின் இக்கவிதையில் அங்கதக் குறிப்பு இருப்பதைக் காணமுடிகிறது. அவ்வூரில் கட்சிக்கொடிகள் இல்லாததால் கட்சிகள் இல்லை; எனவே அவர்களுக்குள் கல்வீச்சு போன்ற சண்டைகள் இல்லை; ஆதலால் குவிக்கப்பட்டிருந்த கற்கள் அப்படியே இருந்தன என்று கட்சிகள் இருந்தால் வீணாகச் சண்டை வரும் நிலையை மறைமுகமாகக் காட்டி, அரசியற் கட்சிகளைச் சாடுகிறார்.

அரசியல்வாதிகளின் ஆணவத்தையும், ஆடம்பர வாழ்க்கையையும் குழந்தையைத் தாலாட்டும் முகமாக,

> ''ஆராரோ ஆராரோ
> அப்பா நீ கண்ணுறங்கு!
> .....
> அஞ்சு ஸ்டார் ஓட்டலிலே
> அலங்காரி அரவணைப்பில்
> துஞ்ச ஒருகாலம் வரும்
> சுகவாசி கண்ணுறங்கு''[139]

என்று சக்திக்கனல் காட்டுகிறார். அரசியல்வாதிகள் நன்கொடையையே மூலதனமாகக் கொண்டு, சுவரெல்லாம் வால்போஸ்டரில் தோன்றி அலங்காரி அரவணைப்பில் துஞ்சும் நிலை இங்கு ஏளனம் செய்யப்படுகிறது.

இதேபோன்று,

''பிறந்த பையன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கொள்ளைக் காரனாய்
வருவான் என்று
சோதிடர் சொன்னதும்
அப்பனுக்கு
அளவிலா மகிழ்ச்சி
மகன்
மந்திரியாவான் என்று''

என்னும் இக்கவிதையில் அமைச்சர்களெல்லாம் கொள்ளைக்காரர் கள் போன்றிருப்பதாகவும், கொள்ளைக்காரர்களே அமைச்சராக முடியும் என்ற நிலையினையும் கிண்டல் செய்யக் காணலாம்.

இன்றைய அரசியலில் காணப்படும் வன்முறை குறிப்பாக ஏளனம் செய்யப்படுவதை,

''இந்த
சைக்கிள் செயின் மட்டும்
அன்றே கிடைத்திருந்தால்
பதினாலே நொடிக்குள்
பாரதப் போரில்
துரியோதனன் ஜெயித்திருப்பான்''

எனும் கவிதையில் காணமுடிகிறது.[141] நேர்மையற்றவர்களும் 'சைக்கிள் செயின்' உதவியால் வன்முறையில் ஈடுபடும் இன்றைய நிலையை ஏளனம் செய்யப் புராணக் கதையைக் கையாளும் உத்தி யைக் காணலாம்.

''வேலிக்கு வெளியே
தலையை நீட்டிய என்
கிளைகளை வெட்டிய
தோட்டக்காரனே,
வேலிக்கு அடியில்
நழுவும் என் வேர்களை
என்ன செய்வாய்''[142]

என்று, அப்துல் ரகுமான், அரசியலில் ஆழமாக வேரோடிக்கிடக்கும் கொடுமைகளுக்கான மூலங்களைக் களையாமல், வெளியே தெரியும் கொடுமைகளைக் களைய முற்படும் அரசினைக் கேலிசெய்கிறார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அதிகாரிகள்

இன்றைய அரசு அதிகாரிகளின் முறையற்ற செயலைச்சக்திக் கனல்,

"அதிகாரி வீட்டுக்
கோழிமுட்டை ஒன்று
குடியானவன் வீட்டு
அம்மியை உடைத்துவிட்டது
உடைத்த அம்மியை எடுத்து
ஓரத்தில் போட்டுவிட்டு
பலத்த போலீஸ் பாதுகாப்போடு
கோழிமுட்டையை
மியூசியத்திற்கு
அனுப்பி வைத்தோம்"

என்று காட்டுகிறார்.[143] ஏழைகளிடம் அதிகாரிகள் நடந்துகொள்ளும் முறையை இங்குக் 'கோழிமுட்டை அம்மிக்கல்லை உடைத்தது' என்று சுட்டப்பட்டிருப்பதில் காணலாம்.

குருவிக்கரம்பை சண்முகம் கிராம அதிகாரியான கர்ணத்தின் லஞ்ச ஊழலைப் பின்வருமாறு காட்டுகிறார்.[144]

"கொடுத்துக் கொடுத்துச்
சிவந்தன
கர்ணனின் கரங்கள்
வாங்கி வாங்கிச்
சிவந்தன
எங்களூர்க் கர்ணத்தின்
கரங்கள்"

என்ற இக்கவிதையில் புராணக்கதை மூலமும் 'கொடுத்துச் சிவந்-தன..... வாங்கிச் சிவந்தன' என்ற முரண் மூலமும், கர்ணன்-கர்ணம் என்ற சொற்கள் மூலமும் அங்கதக் குறிப்பு உணர்த்தப்படுகிறது.

காந்தியடிகளின் கொள்கை

காந்தியடிகள் தன் வாழ்வில் அரிச்சந்திர நாடகம் பார்த்து, பொய்பேசாதிருக்க உறுதிகொண்டார் என்பர். அந்நாடகத்தால் காந்தியடிகள் ஓர் உண்மையை அறிந்தது போல, இன்றைய மனிதன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஒருவன் அறிந்த உண்மையை அங்கதக் குறிப்புபடக் கவிஞர் காட்டுகிறார்.[145]

''அரிச்சந்திர நாடகம்
அடிக்கடி பார்த்த
எங்களூர் வாசி
எண்ணினான் மனத்தில்
எப்படி மனைவியை
அடகு வைக்கலாம்''

என்று கூறும் 'காந்தி பார்த்த நாடகம்' எனும் தலைப்பமைந்த இக்கவிதையில் அரிச்சந்திர நாடகம் உணர்த்திய உயர்ந்த கருத்தை மறந்துவிட்டு, மனைவியை அடகு வைப்பது ஒன்றையே மனதில் கொள்ளும் நிலையைத் திருமலைராசன் காட்டுகிறார்.

விடுதலை என்பதற்கு மக்கள் கொண்ட விளக்கத்தை,

''இரண்டடிக் கயிற்றால்
முனையுடன் கட்டப்பட்டுள்ள
மாடு கதறியது
மா.....மா
எங்கிருந்தோ வந்த ஒருவன்
இரண்டடிக் கயிற்றை அவிழ்த்து
இருபதடிக் கயிற்றைக் கட்ட
மாடு இன்று துள்ளுகிறது
சுதந்திரம் அடைந்து விட்டதாய்''[146]

என்று காட்டுகிறார்.

இரண்டடிக் கயிற்றுக்குப் பதில் இருபதடிக் கயிற்றைக் கட்டியவுடன் மாடு சுதந்திரம் அடைந்ததாகத் துள்ளுவதன் மூலம், அந்நியரிடமிருந்து சுதந்திரம் அடைந்த இந்தியர்கள், இந்தியர்களிடமே அடிமைப்பட்டதை அறியாமல் சுதந்திரம் பெற்றுவிட்டதாக நினைத்து மகிழும் நிலையை அங்கதக் குறிப்போடு காட்டுகிறார்.

நீதிமன்றம்

நீதிமன்றத்தில் பதவி வகிப்போரின் உண்மை நிலையினைச் சிற்பி தன் கவிதையில் அங்கதக் குறிப்புடன் காட்டுகிறார்.[147]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"கீழ்க்கண்ட பதவிகளுக்கு
என்னிடம்
கீழ்க்கண்டவர் மட்டுமே
விண்ணப்பம் இடுக
வழக்கறிஞர்-ஊமைகள்
குமாஸ்தா-கையில்லாதவர்
சாட்சி-குருடர்கள்
நீதிபதி-காதுகேளாதவர்
ஊனமுற்றோருக்கு ஏனிந்தச் சலுகையெனில்
நீதி முடமாகாமல் இருக்க"

என்பது இக்கவிதை. இக்கவிதையில் தகுதிக்கு முரணானவர்களே பதவி வகிக்கும் நிலையைக் காட்டுகிறார். நீதிமன்றத்தில் நடக்கின்ற சீர்கேடுகள் களையப்பட, அச்சீர்கேடுகளுக்குக் காரணமாக விளங்குகின்ற உறுப்புக் குறைபாடுடையவர்களே தனக்கு வேண்டும் என்று கேட்பது அங்கதக் குறிப்புப்பட நிற்கிறது.

கல்வி

வேலையில்லாத் திண்டாட்டமே இன்றையக் கல்வி முறையால் பெருகும் நிலையும், வேறு எப்பயனும் ஏற்படாத நிலையும் கவிஞர்களால் பெரிதும் ஏளனம் செய்யப்படுகின்றன.

"இருபது வருடம்
இனிது வாழ்ந்தவன்
இனி
இருக்கும் வரைக்கும்
அழுதே மாய்வேன்
'ஏன்' னா
அடுத்த ஜூனில்
நானொரு பி. ஏ..."[148]

என்பதில், பட்டம் பெற்ற பின்னர் பட்டதாரிகள் பாடுகின்ற துன்பத்தினைக் குறிப்பாகக் காட்டுகிறார். மேலும்,

"எம்ப்ளாய்மெண்ட்
எக்சேஞ்சுக்குப்
பதிவுசெய்யப் புறப்பட்ட
மகனிடம் கேட்டுக்கொண்டார்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தந்தை
என்னுடையதையும்
ரெனிவல்
செய்துகொண்டு
வந்துவிடப்பா''[149]

என்று கூறும் கவிதையில், நீண்ட நாட்களுக்கு முன்பே வேலை-வாய்ப்பு அலுவலகத்தில் பதிவுசெய்திருந்தும் வேலை கிடைக்காத இன்றைய நிலை ஏளனம் செய்யப்படுகிறது.

ஆய்வு முடிவுகள்

தமிழ்க்கவிதை வரிசையில் ஏனையப் பாடல்களை விட இக்-காலத்தில் தோன்றி வளர்ந்த புதுக்கவிதைகளே அங்கதத்தைக் கை-யாள்வதில் சிறப்பிடம் வகிக்கின்றன.

புதுக்கவிதை பாடுவோர் வரிசையில் குறிப்பிடத் தக்க இடம் பெறு-கின்ற புதுமைப்பித்தன், இவர்காலச் சமுதாயத்தில் பல்வேறு சீர்கேடு களை அங்கத முறையில் சாடக் காண்கிறோம். கவிஞர்கள் உயிரோடு இருக்கும் போது பேணப்படாத நிலை, கவிஞர்கள் காசுக்காகக் கவிதை பாடும் தன்மை, போலியாக அமைந்த காதல், இழிநிலையில் உள்ள இந்தியா, அஞ்சி வாழும் தமிழர் நிலை ஆகியவை இவர் கவிதைகளில் அங்கதத்திற்குள்ளாகின்றன.

அங்கதத்தை வெளிப்படுத்தப் புதுமைப்பித்தன் பல உத்தி-களைக் கையாள்கிறார். புராணக் கருத்துக்களைக் காட்டுதல், பழைய பாடல்களைப் புதிய வடிவத்தில் தருதல் போன்றவை புதுமைப்பித்தன் பாடல்களில் காணப்படுகின்ற உத்திகள் எனலாம்.

சமுதாயத்தின் பல்வேறு கூறுகளை அங்கதப்படுத்தும் புதுக்-கவிஞர் வரிசையில் மீரா சிறப்பிடம் பெறுகிறார்.

கல்வி முறையில் உள்ள சீர்கேடுகள், பழமைவாதிகளாக அமைந்துள்ள புலவர்கள், செய்தித்தாள்களின் நிலை, போலியான காதல், திரைப்படம், அரசுப்பணியாளர்கள் ஆகிய சமுதாயச் சீர்கேடு-கள் இவர் கவிதைகளில் அங்கதப்படுத்தப்படுவதோடு, அரசியல்வாதி களும் அங்கதப்படுத்தப்படுவது குறிக்கத்தக்கது. ஊழல், தேர்தல், கட்சிமாறுதல், பதவி ஆசை, பொய்யான மேடைப்பேச்சு ஆகியவை அரசியல்வாதியின் தீய இயல்புகளாகச் சாடப்படுகின்றன. இவரது பாடல்களில் அங்கதச் சுவை ஊசி தைப்பது போன்று நறுக்கென எடுத்துச் சாடுவதாக அமைகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வாலியின் கவிதைகளில் தன்னலம், வரதட்சணை, நாட்டுப்பற்றின்மை, மூடநம்பிக்கை ஆகிய சமுதாயச் சீர்கேடுகளும், காந்தியடிகள் மதிக்கப் பெறாமை, அரசியல்வாதியின் வெளிவேடம், அரசியலில் சாதி பெறுமிடம் ஆகிய அரசியற் சீர்கேடுகளும் அங்கதப்படுத்தப்படுகின்றன. இவரது கவிதைகளில் நேரடியாகச் சாடும் முறை மிகுந்து காணப்படுகிறது.

மேத்தாவின் கவிதைகளில் பல்வேறு சமுதாயச் செய்திகள் அங்கதப் பார்வைக்கு ஆளாகின்றன. இலஞ்சம், திரைப்படத்துறை, இன்றையக் கல்விமுறை, மரபுக்கவிதை, வரதட்சணை, வேலையின்மை ஆகிய சமுதாயச் சீர்கேடுகளும், பொய்யான அரசியல் தலைவர்கள், கட்சிமாறல், பதவிமோகம், தேர்தல் ஒழுங்கீனம், காந்தியடிகளை இழிவுபடுத்தும் நிலை ஆகிய அரசியற் செய்திகளும் பெரிதும் இவரது கவிதைகளில் அங்கதக் குறிப்புடன் வெளிப்படுத்தப்படுகின்றன. இவரது கவிதைகளில் அங்கதம் சிறந்த இலக்கிய வடிவில் தரப்பட்டுள்ளமை குறிக்கத்தக்கது.

வைரமுத்துவின் கவிதைகளில் பழைய புலவர்களின் நிலை, சாதி, திரைப்படம், கல்விமுறை, போலித்துறவியர், ஆய்வுமுறை ஆகிய சமுதாயச் சீர்கேடுகளும், நாடு உண்மையாக விடுதலை பெறாதநிலை, காந்தியடிகள் போற்றப்படாமை, கட்சிகள் பெருகும் நிலை ஆகிய அரசியற் கேடுகளும் அங்கதப்படுத்தப்படுகின்றன.

பொதுவாக, புதுக்கவிதைகள் மரபுக்கவிதைகளையும், மரபுக் கவிஞர்களையும் அங்கதப்படுத்துவதைப் பெரிதும் காணமுடிகிறது. அரசியல் செய்திகளையும், அரசியல்வாதிகளையும் அங்கதப்படுத்துவது இக்கவிதைகளில் அதிகமாகக் காணப்படுகிறது. அரசியல் அங்கதம் பேசப்படும் போதெல்லாம், காந்தியடிகளைப் பற்றி நினைவூட்டிச் செல்லக் காண்கிறோம். புதுக்கவிதை அங்கதத்தை மிக எளிமையாகவும், வலிமையாகவும் தரும் ஆயுதமாகப் பயன்படுத்தியுள்ளமையைக் காணமுடிகிறது.

மேலைநாட்டார் தாக்கத்தைப் புதுக்கவிதைகளிலேயே அதிகம் காணமுடிகிறது. மேலைநாட்டார் அங்கதத்தினை, அரசியல் அங்கதம் (Political Satire), சமுதாய அங்கதம் (Social Satire) சமய அங்கதம் (Religious Satire), தனிமனித அங்கதம் (Personal Satire) எனப்பிரித்துக் காட்டியிருப்பதைப் புதுக் கவிதைகளில் காண முடிகிறது. தனிப்பட்ட முறையில் ஒருவரைச் சாடும் தனிமனித அங்கதம், தமிழ்க்கவிதைகளில் அதிகம் வளரவில்லை. புதுமைப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பித்தனிடம் ஓரிரு கவிதைகள் இருக்கக் காண்கிறோம். ஏனைய இடங்களில் தனிப்பட்டவரைத் தாக்கும் அங்கதத்தைக் காணமுடிய-வில்லை.

அங்கதத்திற்கு மேலைநாட்டார் கூறும் இலக்கணங்கள், இயல்புகள் அனைத்தும் புதுக்கவிதைகளில் பெரிதும் பின்பற்றப் பட்டிருப்பதைக் காணலாம்.

பிற காலகட்டக் கவிதைகளை ஒப்பிடும்போது, இக்காலக் கவிதைகளே அங்கதத்தைப் பொருத்தமாகவும், வலிமையாகவும் பயன்படுத்தக் காண்கிறோம். ஆங்கில இலக்கியத்தில் பதினெட்டாம் நூற்றாண்டு 'அங்கதக் காலம்' (The Age of Satire) எனப் போற்றப்படுவது போலத் தமிழில் இருபதாம் நூற்றாண்டைக் கூறலாம்.

இருபதாம் நூற்றாண்டுக் கவிதைகளில் தொடக்க காலத்தில் விடுதலை உணர்வும், அடுத்த காலகட்டத்தில் பகுத்தறிவு உணர்வு சமுதாய உணர்வோடு கலந்து பாடப்பட்டன. அதற்கடுத்த காலகட்-டத்தில் சமுதாயச் சீர்கேடுகளும், அரசியற் சீர்கேடுகளும் பெரிதும் அங்கதத்திற்குள்ளாகும் நிலை வளர்ந்தது.

சொல்லமைப்பு, குறிப்புமுரண், முரண்படவைத்துப் பேசுதல், புராணத்தைப் புதுமையாகப் பயன்படுத்துல் ஆகிய அங்கத உத்திகள் சிறப்பாக இக்காலகட்டங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன. பொது வாகவே இருபதாம் நூற்றாண்டு சமுதாயத்தையும், தன்மனி தனையும் பாடுபொருளாகக் கொண்டிருப்பதால் சமுதாயச் சீர்கேடு கள் பெரிதும் சாடப்படுகின்றன. அங்கதம் அதற்கு மிகச் சரியான தொரு கருவியாக அமைந்துள்ளது குறிக்கத்தக்கதாகும்.

தனிநிலைப் பாடல்களில் அங்கத உணர்வு அமைந்திருப்ப-தைப் போலவே, அங்கதச்சுவை அமையச் சில நெடும்பாடல்களும் தோன்றியுள்ளன. பஞ்சலக்ஷ்மணத் திருமுகவிலாசம், சஞ்சீவி பர்வதத் தின் சாரல், மருமக்கள்வழி மான்மியம் ஆகியவை அத்தகையன.

இக்காலக் கவிதைகளையோ, கவிஞர்களையோ முழுவதுமாக இவ்வியலில் ஆராய முடியவில்லை. விரிவஞ்சிச் சில கவிஞர்களும், சிற்சில கவிதைகளுமே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குறிப்புக்கள்

1. வல்லிக்கண்ணன், புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும், ப. 285.
2. மு. தமிழ்க்குடிமகன், பத்தாண்டுத் தமிழ்க் கவிதைகள் (பிஎச்.டி. ஆய்வேடு), ப. 1.
3. தமிழவன், இருபதில் கவிதை, ப. 157.
4. ரகுநாதன் (தொ. ஆ.), புதுமைபித்தன் கவிதைகள், ப. 38.
5. மேலது, ப. 93
6. மேலது, ப. 36.
7. மேலது. ப, 37.
8. மேலது. ப. 37.
9. மேலது, ப. 39.
10. மேலது, ப. 51
11. மேலது, ப. 52
12. மேலது, ப, 53.
13. மேலது, ப. 61
14. மேலது, ப. 69
15. மேலது, பா. 1, ப. 69.
16. மேலது, பா. 4,5, ப. 70.
17. மேலது, பா. 7, ப. 70
18. மேலது, ப. 93.
19. மேலது, ப. 42
20. மேலது, ப. 44.
21. மேலது, ப. 84.
22. மேலது, ப. 87.
23. மேலது. பா. 10, ப. 90.
24. மீரா, ஊசிகள், ப. 31.
25. மேலது, ப, 67.
26. மேலது, ப. 20.
27. மேலது, ப. 55.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

28. மேலது, ப. 21.
29. மேலது, ப. 14.
30. மேலது, ப. 80.
31. மேலது, ப. 54.
32. மேலது, ப. 61.
33. மேலது, ப. 18.
34. மேலது, ப. 48.
35. மேலது, ப. 27.
36. மேலது, ப. 69.
37. மேலது, பக். 72, 73.
38. மேலது, ப, 76.
39. மேலது, ப. 45.
40. மேலது, பக். 38, 39.
41. மேலது, ப. 64.
42. மேலது, ப. 70.
43. மேலது, ப. 35.
44. மேலது, ப. 28
45. மேலது, ப. 13.
46. மேலது, ப. 26.
47. மேலது, ப. 22.
48. மேலது, ப. 16.
49. மேலது, ப. 46.
50. மேலது, ப. 50.
51. வாலி, பொய்க்கால் குதிரைகள், பக். 35-38.
52. மேலது, ப. 120.
53. மேலது, ப. 123.
54. மேலது, ப. 124.
55. மேலது, ப. 126.
56. மேலது, பக். 43-47.
57. மேலது, ப. 46.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

58. மேலது, ப. 116.
59. மேலது, ப. 53.
60. மேலது, ப. 96.
61. மேலது, ப. 99.
62. மேலது, ப. 50.
63. மேலது, ப. 50.
64. மேலது, ப. 98.
65. மேலது, ப. 143.
66. மேலது, ப. 155.
67. மேலது, பக். 57-58.
68. மேலது, பக். 153–156.
69. மேலது, பக். 154.
70. மேலது, ப. 155.
71. மேலது, ப. 155.
72. மு. மேத்தா, ஒருவானம் இருசிறகு, ப. 7.
73. மேலது, ப. 81.
74. மேலது, பக். 14, 15.
75. மேலது, ப. 67.
76. மேலது, பக். 24-25.
77. மேலது, ப. 25.
78. மேலது, ப. 26.
79. மு. மேத்தா, காத்திருந்த காற்று, ப. 56.
80. மு. மேத்தா, ஊர்வலம், ப. 64.
81. மு. மேத்தா, ஒரு வானம் இருசிறகு, ப. 82.
82. மு. மேத்தா, காத்திருந்த காற்று, ப. 51.
83. மு. மேத்தா, ஒருவானம் இருசிறகு, ப. 28.
84. மு. மேத்தா, ஊர்வலம், ப. 40.
85. மேலது, ப. 89.
86. மு. மேத்தா, அவர்கள் வருகிறார்கள், ப. 12.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

87. மேலது, ப. 56.
88. மேலது, ப. 72.
89. மு. மேத்தா, ஊர்வலம், ப. 69.
90. மு. மேத்தா, முகத்துக்கு முகம். ப. 83.
91. மு. மேத்தா, ஊர்வலம், ப. 91.
92. மு. மேத்தா, முகத்துக்கு முகம், ப. 42.
93. மு. மேத்தா, ஒருவானம் இருசிறகு, ப. 51.
94. மேலது, ப. 45.
95. மு. மேத்தா, கண்ணீர்ப் பூக்கள், ப. 29.
96. மு. மேத்தா, ஒருவானம் இருசிறகு, ப. 26.
97. மு. மேத்தா, ஊர்வலம், ப. 70.
98. மேலது, ப. 35.
99. மு. மேத்தா, முகத்துக்கு முகம், ப. 86.
100. மேலது. ப. 86.
101. மேலது, ப. 22.
102. மு. மேத்தா, ஒருவானம் இருசிறகு, ப. 7.
103. மு. மேத்தா அவர்கள் வருகிறார்கள், ப. 38
104. மு. மேத்தா, ஊர்வலம், ப. 26.
105. மு. மேத்தா, முகத்துக்கு முகம், ப. 68.
106. மேலது, ப 69.
107. மேலது, ப. 18.
108. மேலது, ப. 17.
109. மேலது, ப. 20.
110. இரா. வைரமுத்து, திருத்தி எழுதிய தீர்ப்புகள், ப. 98.
111. மேலது, ப. 31.
112. மேலது, ப. 46.
113. மேலது, ப. 46.
114. மேலது, ப. 77.
115. இரா. வைரமுத்து, கொடிமரத்தின் வேர்கள், ப. 20

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

116. இரா. வைரமுத்து, இன்னொரு தேசியகீதம், ப. 33,
117. மேலது, ப.22.
118. இரா. வைரமுத்து, கொடிமரத்தின் வேர்கள், ப.47.
119. மேலது, ப. 45
120. இரா. வைரமுத்து, திருத்தி எழுதிய தீர்ப்புகள், ப. 121.
121. மேலது, ப, 57
122. மேலது, ப. 25
123. மேலது, ப. 27
124. மேலது, ப. 27.
125. மேலது, ப. 38.
126. மேலது, ப. 41.
127. இரா. வைரமுத்து, கொடிமரத்தின் வேர்கள். ப. 64.
128. மேலது, ப. 64.
129. மேலது, ப. 65.
130. இரா. வைரமுத்து, திருத்தி எழுதிய தீர்ப்புகள், ப. 81.
131. மேலது, ப. 81.
132. மேலது, ப. 81.
133. மேலது, ப. 82.
134. இரா. வைரமுத்து, இன்னொரு தேசியகீதம், ப. 57.
135. மேலது, ப. 101.
136. இரா. வைரமுத்து, கொடிமரத்தின் வேர்கள், ப. 95.
137. இரா. வைரமுத்து, திருத்தி எழுதிய தீர்ப்புகள், ப. 102.
138. குருவிக்கரம்பை சண்முகம், குருவிக்கரம்பை சண்முகம் பாடல்கள், ப. 31.
139. சக்திக்கனல், கனகாம்பரமும் டிசம்பர்ப் பூக்களும், ப. 19.
140. ந. சுப்புரெட்டியார், புதுக்கவிதை போக்கும் நோக்கும், ப.115.
141. மேலது, ப. 126.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

142. அப்துல் ரகுமான், பால்வீதி, தாகம் (பக்கம் இல்லை).

143. சக்திக்கனல், மு. நூ., ப. 36.

144. குருவிக்கரம்பை சண்முகம், மு. நூ, ப. 30.

145. எஸ். திருமலைராஜன், ஒரு புயலின் ஆரம்பம், ப. 69.

146. நா. வானமாமலை, புதுக்கவிதை முற்போக்கும் பிற்போக்கும், ப. 64.

147. சிற்பி. சர்ப்பயாகம், ப. 48.

148. சுப்ர. அரங்கநாதன், இதயம், வேலை காலிஇல்லை, ப. 8.

149. கோ. கண்ணன், புதுக்கவிதைகள், தமிழ் இலக்கியக் கொள்கை தொகுதி-3, ப. 352.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

6. முடிவுரை

தமிழில் அங்கத இலக்கணத்தை வரையறை செய்கின்ற பொழுது, அவ்வரையறை காலத்திற்கேற்ப மாறுபட்டு வந்துள்ளமை தெரிகிறது.

நகைச்சுவையுடன் கேலி செய்வதும், நேரடியாக வசைபாடுவதும் தொல்காப்பியரால் அங்கதம் எனக் கூறப்பட்டன. சங்க காலத்தில் வசை மொழியாக அமைந்த பாடல்களை அதிகம் காணமுடியவில்லை. இடைக்காலத் தனிப்பாடல்களில் ஓரளவு வசை மொழிகளைக் காணமுடிகிறது. அதற்குப்பிறகு, நேரடியாக வசைபாடுகின்ற மரபோ, அவ்வாறு வசைபாடுவதை அங்கதம் எனக்கூறும் மரபோ காணப்படவில்லை. தவறு கண்டபொழுது திருத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு நகைச்சுவையோடு கேலி செய்வது அங்கதம் என்பது எல்லாக் காலங்களிலும் மாறாமல் அமைந்துள்ளது. இவ்விலக்கணமே தமிழ் இலக்கியத்தில் எவ்வித மாற்றமும் இன்றி வந்துள்ளது எனலாம்.

சங்ககாலத்தில், பாடுகின்ற புலவர்கள் அரசரோடு தொடர்புடையவர்களாக இருப்பதாலும், பாடுகின்ற களம் அரசவை என்பதாலும், கேட்போன் அரசன் என்பதாலும் புறப்பாடல்களில் பெரும்பாலும் அரசியல் பற்றிய செய்திகளே அங்கதப்படுத்தப் பட்டுள்ளன. அரசியல் தொடர்பான மன்னன் குறைகளைக் கண்ட போது, புல்வர்கள் அங்கதக் குறிப்புடைய பாடல்களைப் பாடினர். சமுதாயத்தில் உள்ள சீர்கேடுகளையோ, தனிமனிதன் குறைகளையோ அங்கதப் பொருளில் பாடவில்லை.

சங்க அகப்பாடல்களில் பரத்தமை, வரைவுகடாஅதல், பிரிவு ஆகிய மூன்று சூழல்களில் அங்கதக் குறிப்புக்கள் காணப்படுகின்றன. பெரும்பாலும், அகப்பாடல்களில் தலைவனையே அங்கதத்திற்குரிய பொருளாக அமைத்திருப்பது குறிக்கத்தக்கது. இயற்கை வருணனையில் உள்ளுறை அமைத்து அங்கதப்படுத்தும் முறை சங்ககாலத்தில் காணப்படுகிறது. புராணச் செய்திகளில் உள்ளுறைப் பொருளை வைத்து அங்கதப்படுத்தும் முறை இருபதாம் நூற்றாண்டில் காணப்படுகிறது.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் தோன்றிய காலகட்டத்தில் அங்கதம் முற்றிலும் மாறுபட்ட சூழலில் அமைந்திருக்கக் காண்கி-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

றோம். சங்ககால வாழ்வியற் கோட்பாடு மாறி நிலையாமைக் கோட்பாடு கால்கொள்ளத் தொடங்கிய நிலையில், நிலையாமையை வலியுறுத்தும் வகையிலும், பெண் பிறவியை இழித்துப் பேசும் நிலையிலும் அங்கதம் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் காணலாம், திருவள்ளுவரைப் பொருத்தவரை சங்க அகநெறியைப் பின்பற்றுகிறார். பெண் பிறவியை இழித்துப் பேசவில்லை. ஆனால் நிலையாமைக் கோட்பாட்டை வலியுறுத்தத் தவறவில்லை. சங்க இலக்கியம், பதினெண்கீழ்க்கணக்கு ஆகிய இரண்டிலும் காணப்படும் அங்கக் மரபுகளைத் திருவள்ளுவரிடம் காணமுடிகிறது.

இடைக்காலத் தனிப்பாடல்களில் வள்ளல்கள், புலவர்கள் நிலை சங்ககாலத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டுத் தரம் தாழ்ந்திருக்கக் காணலாம். பொருள் கொடாத வள்ளல்களைத் தூற்றிப் பாடுவதும், போலிப் புலவர்களைச் சாடுவதும் இதனைப் புலப்படுத்துகின்றன. சங்கப்பாடல்கள் குற்றங்குறைகளற்ற குறிக்கோள் வாழ்க்கையைக் காட்டுகின்றன. ஆனால் இடைக்காலத் தனிப்பாடல்களோ குறிக்கோள் வாழ்க்கையைக் காட்டுவதற்குப் பதிலாகச் சமுதாயாகுற்றங்குறைகளை எடுத்துப்பேசும் நடப்பியல் முறையினை மேற்கொண்டிருப்பதைக் காணமுடிகிறது. இவ்வாறு அமைந்ததால், பலதரப்பட்ட மக்களும் நிலை தாழ்ந்த சூழல் அங்கதப்படுத்தப்படும் முறையைக் காணமுடிகிறது. சமுதாயச் சீர்கேடுகளைச் சாடும் நிலை இக்காலப் புதிய வளர்ச்சியாகக் காணப்படுகிறது. புலவர்கள் கேடுகள் நிகழ வசை பாடும் நிலை இருந்தமைக்கான நேரடியான சான்றுகளை இக்காலகட்டத்தில் காணமுடிகிறது. அங்கதப்படுத்தப்படும் பாடுபொருட்களில் சமயமும் இடம்பெற்றுள்ளமை குறிக்கத்தக்கது.

தமிழ் இலக்கிய வரலாற்றில் அங்கதச் சுவைபட அமைந்த முதல் நூலாகப் பஞ்சலக்ஷ்ணத் திருமுக விலாசம் அமைந்துள்ளது எனலாம். மொழிநடையே இந்நூல் செல்வாக்குப் பெறுவதற்குப் பெருந்தடையாக அமைந்திருப்பதை உணரலாம். இந்நூல் இடைக்காலத் தனிப்பாடல்களின் வளர்ச்சியாகவும், இருபதாம் நூற்றாண்டுப் பாடல்களுக்குத் தோற்றுவாயாகவும் அமைந்துள்ளது எனலாம்.

இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்களுள், தேசிய உணர்வை வலியுறுத்தும் பொழுதே பாரதியார் அங்கத முறையைக் கையாண்டுள்ளதைக் காணலாம். அவ்வாறே, பகுத்தறிவுக் கோட்பாடுகளை வலியுறுத்தும் போதே பாரதிதாசன் அங்கதத்தைப் பயன்படுத்துகிறார். கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை நாஞ்சில் நாட்டு வேளாள மக்களிடையே காணப்பட்ட மருமக்கள் தாய முறையை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மையமாகக் கொண்டு அங்கத நூல் பாடியுள்ளார். இந்நூல் இலக்கிய உலகில் தனியிடத்தைப் பெற்றுள்ளமை குறிக்கத்தக்கது.

இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய புதுக்கவிதைகள் அங்கதத்திற்கென்றே தோன்றிய புதிய யாப்பு எனுமளவிற்கு அங்கதத்தைப் பயன்படுத்தியிருப்பதை அறியலாம். சமுதாயச் சீர்கேடுகளும், அரசியற் சீர்கேடுகளும் இப்புதுக் கவிஞர்கள் கூரிய பார்வையில் பட்டுச் சீரிய அங்கதப் பாடல்களாக உருவெடுத்துள்ளன. மேலைநாட்டுச் செல்வாக்கு இக்கவிதைகளில் மிகுந்திருப்பதையும் காணலாம். பிற காலகட்டங்களைக் காட்டிலும், இருபதாம் நூற்றாண்டுக் கவிதைகளில் அங்கதம் முழுமையாகவும், கூர்மையாகவும் அமைந்துள்ளது எனலாம்.

இருபதாம் நூற்றாண்டுப் புதுக்கவிதைகளைப் போன்றே, நாடகங்கள், சிறுகதைகள், நாவல்கள் ஆகியவற்றில் அங்கதம் மிகச சிறப்பாகப் பயன்படுத்தப்படுகின்றது. மேடை நாடகங்கள் இவ்வரிசையில் முதலிடம் வகிக்கின்றன எனலாம். 'சோ'வின் நாடகங்கள் குறிக்கத்தக்கவை. இவை அனைத்தும் மிகச்சிறந்த ஆய்வுக்களங்களாக உள்ளன. காப்பியங்களும், சிற்றிலக்கிய நூல்களும், பக்திப்பாடல்களும் அவ்வளவாக அங்கதத்தைப் பயன்படுத்தவில்லையெனினும், பிற்காலச் சிற்றிலக்கிய வகைகளில் பள்ளு, குறவஞ்சி, நொண்டி நாடகம் போன்றவை அங்கதக் குறிப்புடன் அமைந்திருக்கக் காணலாம். இவைகளும் ஆராயத்தக்கன எனலாம்.

இவ்வாய்வேடு, அங்கதத்தை அறிமுகம் செய்து, வரலாற்றையும் வளர்ச்சியையும் காட்டிப் புதுக்கவிதையோடு தன் எல்லையை வரையறுத்துக் கொள்கிறது, தலைக்காவிரி முதல் அகண்ட காவிரி வரை காட்டியிருப்பதுபோல. எஞ்சியவை ஆய்வுலகிற்கு,



CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பின்னிணைப்பு—1

சங்கப் பாடல்களில் அங்கதம்

புறப்பாடல்களில் அங்கதம்

புறநானூற்றில் அங்கதக் குறிப்புக்கள் அமைந்திருக்கும் பாடல் எண், புலவர், திணை, துறை

பாடல்எண்	புலவர்	திணை	துறை
35	வெள்ளைக்குடி நாகனார்	பாடாண்	செவியறிவுறூஉ
95	ஔவையார்	,,	வாண்மங்கலம்
162	பெருஞ்சித்திரனார்	,,	பரிசில்விடை
196	ஆவூர் மூலங்கிழார்	,,	பரிசில்கடாநிலை
202	கபிலர்	,,	பரிசில்துறை
204	கழைதின் யானையார்	,,	,,
205	பெருந்தலைச் சாத்தனார்	,,	,,
206	ஔவையார்	,,	,,
207	பெருஞ்சித்திரனார்	,,	,,
208	,,	,,	,,
209	பெருந்தலைச்சாத்தனார்	,,	,,
210	பெருங்குன்றூர்க்கிழார்	,,	,,
211	,,	,,	,,
47	கோவூர்கிழார்	வஞ்சி	துணைவஞ்சி
53	பொருந்திலிளங்கீரனார்	வாகை	அரசவாகை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

பின்னிணைப்பு—2

சங்கப்பாடல்களில் அங்கதம்

அகஇலக்கியங்களில் திணை, கூற்று வாரியாக அங்கதம் அமைந்திருக்கும் பாடல்களின் எண்ணிக்கை

திணை	குறிஞ்சி			மருதம்			நெய்தல்		பாலை		மொத்த எண்ணிக்கை
கூற்று / இலக்கியம்	தலைவி	தோழி	பாங்கன்	தலைவி	தோழி	பரத்தை	தலைவி	தோழி	தலைவி	தோழி	தாய்
நற்றிணை	1	2		2	5	2		2			1 15
குறுந்தொகை		1	1	1	4	1	1		2	1	12
ஐங்குறுநூறு		5		3	1		2				11
கலித்தொகை				6						1	7
அகநானூறு				6	7	2			1		16
	1	8	1	18	17	5	3	2	3	2	1 61
		10			40			5		6	

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பின்னிணைப்பு—3

அகப்பாடல்களில் கூற்றுவாரியாக அங்கதம் அமைந்திருக்கும் பாடல்களின் எண்ணிக்கை

இலக்கியம் கூற்று	நற்றிணை	குறுந்-தொகை	ஐங்குறு நூறு	கலித்-தொகை	அகநா நூறு	மொத்த எண்-ணிக்கை
தலைவி	3	4	5	6	7	25
தோழி	9	6	6	1	7	29
பரத்தை	2	1			2	5
தாய்	1					1
பாங்கன்		1				1
	15	12	11	7	16	61

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

பின்னிணைப்பு : 4

அகப்பாடல்களில் அங்கதக் குறிப்புக்கள் அமைந்த பாடல் எண்கள்

திணை	குறிஞ்சி			மருதம்		நெய்தல்		பாலை			
கூற்று இலக்கியம்	தலைவி	தோழி	பாங்கன்	தலைவி	தோழி	பரத்தை	தலைவி	தோழி	தலைவி	தோழி	தாய்	
நற்றிணை	136	34,365		250, 309	200, 230, 300, 360, 380	40,320		295. 395			293	15
குறுந்தொகை		342	78	93	139, 196, 295, 384	8	122		20,216	331		12
ஐங்குறுநூறு		226, 247, 248, 249, 284		41,65 90	1		131, 132					11
கலித்தொகை				89, 93, 95, 96. 97, 98						19		7
அகநானூறு				6, 16, 36, 56, 146, 196.	46,116 226, 256, 296, 306, 346.	166, 276			267			16
	1	8	1	18	17	5	3	2	3	2	1	61

* முல்லைத் திணைப்பாடல்களில் அங்கதக் குறிப்புக்கள் காணப்படவில்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பின்னிணைப்பு — 5

இடைக்காலத் தனிப்பாடல்களில் அங்கதம்

புலவர்களும், அங்கதக் குறிப்பமைந்த பாடல் எண்ணிக்கையும்

	புலவர்	பாடல் எண்ணிக்கை
1.	காளமேகப்புலவர்	19
2.	ஔவையார்	7
3.	அந்தகக்கவி வீரராகவ முதலியார்	2
4.	இரட்டையர்	3
5.	இராமச்சந்திரக் கவிராயர்	3
6.	ஒப்பிலாமணிப் புலவர்	1
7.	கம்பர்	2
8.	கையேட்டுத்தம்பான்	1
9.	சவ்வாதுப் புலவர்	3
10.	சாமிநாதப் புலவர்	1
11.	சிவப்பிரகாச சுவாமிகள்	1
12.	சுத்தானந்த பாரதியார்	1
13.	செகவீரபாண்டிய கவிராச பண்டிதர்	2
14.	தத்துவப்பிரகாசர்	1
15.	படிக்காசுத் தம்பிரான்	2
16.	பலபட்டடைச் சொக்கநாதப் புலவர்	1
17.	பொய்யாமொழிப் புலவர்	1
18.	வசைகவி ஆண்டான் கவிராயர்	1
19.	வேலாயுதம் பிள்ளை	1
20.	நையாண்டிப் புலவர்	1
21.	முத்துராம முதலியார்	1
22.	முத்துச்சுப்பையர்	6
23.	வேதநாயகம் பிள்ளை	13
	பெயர்தெரியாத பிற புலவர்கள்	3
	மொத்த எண்ணிக்கை	77

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

துணைநூற் பட்டியல்

(அ) அடிப்படைச் சான்றாதாரங்கள்

அப்துல் ரகுமான், — பால்வீதி, அன்னம் வெளியீடு, சிவகங்கை, 1977, இரண்டாம் பதிப்பு.

———, — நேயர் விருப்பம், அகரம் வெளியீடு சிவகங்கை, 1978.

இராசேந்திரன், மீ., — இராசேந்திரன் கவிதைகள், தோழமை நிலையம், சிவகங்கை, 1965.

இராமசாமிப் புலவர், சு. அ. (உ.ஆ.), — தனிப்பாடல் திரட்டு - முதற்பகுதி, கழக வெளியீடு, 1969.

———, — தனிப்பாடல் திரட்டு - இரண்டாம் பகுதி, கழக வெளியீடு, 1964.

———, — தனிப்பாடல் திரட்டு - மூன்றாம் பகுதி, கழக வெளியீடு, 1964.

———, — தனிப்பாடல் திரட்டு - நான்காம் பகுதி, கழக வெளியீடு, 1964.

———, — தனிப்பாடல் திரட்டு - ஐந்தாம் பகுதி, கழக வெளியீடு, 1972.

இராமசாமி நாயுடு, கா. (ப.ஆ.), — தனிப்பாடற்றிரட்டு, பாகம் 1 & 2, பார்த்தசாரதி நாயுடு, சென்னை, 1913.

இன்குலாப், — வெள்ளை இருட்டு, அகரம் வெளியீடு, சிவகங்கை, 1971.

கந்தசாமிக் கவிராயர், மு.ரா. (ப. ஆ.), — தனிச்செய்யுட் சிந்தாமணி, பாகம் 1 & 2, 1908.

குருவிக்கரம்பை சண்முகம், — குருவிக்கரம்பை சண்முகம் கவிதைகள், பாண்டியன் பதிப்பகம், சென்னை, 1976.

சக்திக்கனல், — கனகாம்பரமும் டிசம்பர்ப் பூக்களும், அகரம் வெளியீடு, சிவகங்கை, 1976.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சாமிநாதய்யர், உ. வே. (ப. ஆ.), குறுந்தொகை, கபீர் அச்சுக்கூடம், சென்னை, 1955, மூன்றாம் பதிப்பு.

———— –, புறநானூறு, உ.வே.சா. நூலகம், சென்னை, 1950.

————, ஐங்குறுநூறு, உ. வே. சா. நூலகம், சென்னை, 1946

சிற்பி, ஒளிப்பறவை, அன்னம் வெளியீடு, சிவகங்கை, 1974

————, சர்ப்பயாகம், அன்னம் வெளியீடு, சிவகங்கை, 1978.

சுப்பிரமணிய பிள்ளை, கா. ச. (ப. ஆ.), தலிப்பாடற்றிரட்டு, இரத்தின நாயகர் சன்ஸ், சென்னை, 1948.

ஞானக்கூத்தன், அன்று வேறுகிழமை. இலக்கிய சங்கம், சென்னை, 1973.

தண்டியாசிரியர், தண்டியலங்காரம். கழக வெளியீடு, சென்னை, 1966.

திருவள்ளுவர், திருக்குறள் – பரிமேலழகர் உரை, கோபாலகிருட்டினமாசாரியார், வை. மு (ப. ஆ.), 1955.

————, திருக்குறள் பரிமேலழகர் உரை, கழக வெளியீடு, சென்னை.

திருமலைராஜன், எஸ்., ஒரு புயலின் ஆரம்பம், ஸ்ரீராம் பதிப்பகம், சென்னை, 1982.

துரைசாமிப்பிள்ளை, ஔவை. சு. (உ. ஆ.), புறநானூறு - முதலாம் பகுதி, கழக வெளியீடு, சென்னை, 1951.

————–, புறநானூறு – இரண்டாம் பகுதி, கழக வெளியீடு, சென்னை.

துரைசாமிப்பிள்ளை, ஔவை. சு. (உ.ஆ.), ஐங்குறுநூறு, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1957

தேசிகவிநாயகம் பிள்ளை, கவிமணி., மருமக்கள் வழிமான்மியம், பாரி நிலையம் சென்னை, 1974.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தொல்காப்பியர், தொல்காப்பியம்—பொருளதிகாரம், இளம்பூரணர் (உரை), கழக வெளியீடு, சென்னை, 1974.

———. தொல்காப்பியம்—பொருளதிகாரம், பேராசிரியர் (உரை), கழக வெளியீடு, 1951.

———, தொல்காப்பியம்—பொருளதிகாரம்—செய்யுளியல், நச்சினாக்கினியர் (உரை), கழக வெளியீடு, சென்னை, 1965.

நச்சினார்க்கினியர் (உ.ஆ.), கலித்தொகை, த.வை.சி. தமிழ்ச்சங்கம், 1958. ஐந்தாம் பதிப்பு.

நடராசபிள்ளை, அ. (உ.ஆ.), ஐந்திணையெழுபது, கழக வெளியீடு, சென்னை, 1961.

நாராயணசாமி ஐயர், அ, (ப.ஆ.), நற்றிணை நானூறு, கழக வெளியீடு, சென்னை, 1956.

பதிப்பாசிரியர் குழு, எட்டுத்தொகை ராஜம் எஸ்.கம்பெனி, சென்னை, 1957.

———, பத்துப்பாட்டு, ராஜம் எஸ்.கம்பெனி, சென்னை, 1957.

———, பதினெண்கீழ்க்கணக்கு, ராஜம் எஸ்.கம்பெனி, சென்னை, 1957.

பாலசுந்தரம்பிள்ளை, தி.சு. (உ.ஆ.), நாலடியார், கழக வெளியீடு, சென்னை, 1968.

பாரதியார், பாரதியார் கவிதைகள், மெர்க்குரி புத்தகக் கம்பெனி, சென்னை. 1962.

பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள் – 1, செந்தமிழ் நிலையம், இராமச்சந்திர புரம், 1974, இருபதாம் பதிப்பு.

———, பாரதிதாசன் கவிதைகள் - 2, பாரி நிலையம், சென்னை, 1967, ஏழாம் பதிப்பு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரதிதாசன் — பாரதிதாசன் கவிதைகள் - 3, பாரி நிலையம், சென்னை, 1974, ஐந்தாம் பதிப்பு.

——, பாரதிதாசன் கவிதைகள் - 4, பாரி நிலையம், சென்னை, 1977, முதற்பதிப்பு.

——, பாரதிதாசன் கவிதைகள் - 5, பாரி நிலையம், சென்னை,

——, அழகின் சிரிப்பு, செந்தமிழ் நிலையம், இராமச்சந்திரபுரம், 1976, பதின்மூன்றாம் பதிப்பு.

——, இருண்டவீடு பாரி நிலையம், சென்னை, 1982.

——, இளைஞர் இலக்கியம், பாரி நிலையம், சென்னை, 1967, நான்காம் பதிப்பு.

——, குடும்பவிளக்கு, பாரி நிலையம், சென்னை, 1974, மூன்றாம் பதிப்பு.

——, குறிஞ்சித்திட்டு, பாரி நிலையம், சென்னை, 1968, இரண்டாம் பதிப்பு,

——, தமிழச்சியின் கத்தி, பாவேந்தர் பதிப்பகம், புதுச்சேரி, 1967, மூன்றாம் பதிப்பு.

——, தமிழியக்கம், செந்தமிழ் நிலையம், இராமச்சந்திரபுரம், 1975, எட்டாம் பதிப்பு.

——, குயில்பாடல்கள், பூம்புகார் பிரசுரம், சென்னை, 1977.

——, படித்த பெண்கள், பாரி நிலையம், சென்னை, 1974, மூன்றாம் பதிப்பு,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரதிதாசன், — ஆண்டிமன் பரிசு,
செந்தமிழ் நிலையம், புதுக்கோட்டை,
1969, ஒன்பதாம் பதிப்பு.

மணி, சி., — வரும் போகும்,
க்ரியா பப்ளிகேஷன்ஸ், சென்னை, 1974.

மீரா, — ஹைகூ,
அன்னம் வெளியீடு, சிவகங்கை, 1982,
நான்காம் பதிப்பு.

——— — கனவுகள் + கற்பனைகள் = கராத்தேக்கள்,
அன்னம் வெளியீடு, சிவகங்கை, 1972,

——— — மூன்றும் ஆறும்,
மீனாட்சி புத்தக நிலையம், (வி.உ.),
மதுரை, 1976.

மேத்தா, மு., — இவர்கள் வருகிறார்கள்,
அகரம் வெளியீடு, சிவகங்கை, 1980.

——— — ஊர்வலம்,
விஜயா பதிப்பகம், கோவை, 1982,
நான்காம் பதிப்பு.

——— — ஒருவானம் இருசிறகு,
திருமகள் நிலையம், சென்னை, 1983,

——— — கண்ணீர்ப் பூக்கள்,
தமிழ்ப்புத்தகாலயம், சென்னை, 1976,
இரண்டாம் பதிப்பு.

காத்திருந்த காற்று,
பாரி நிலையம், சென்னை, 1982.

———, — திருவிழாவில் ஒரு தெருப்பாடகன்,
கவிதாபானு பதிப்பகம், சென்னை, 1984.

———, — தந்தவன நாட்கள்,
திருமகள் நிலையம், சென்னை, 1984.

———, — நடந்த நாடகங்கள்,
நர்மதா பதிப்பகம், சென்னை, 1983,
இரண்டாம் பதிப்பு

———, — நானும் என் கவிதையும்,
வர்மா பதிப்பகம், சென்னை, 1984.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மேத்தா, மு., மனச்சிறகு,
விஜயா பதிப்பகம், கோவை, 1981,
இரண்டாம் பதிப்பு.

———, முகத்துக்கு முகம், பாரதி பதிப்பகம்,
சென்னை, 1982, இரண்டாம் பதிப்பு.

ரகுநாதன், (தொ. ஆ.), புதுமைப்பித்தன் கவிதைகள்,
ஸ்டார் பிரசுரம், சென்னை, 1957,
இரண்டாம் பதிப்பு.

வல்லிக்கண்ணன், அமரவேதனை,
எழுத்துப்பிரசுரம், சென்னை, 1974.

வாலி, பொய்க்கால் குதிரைகள்,
வானதி பதிப்பகம், சென்னை, 1982.

வில்லியப்பபிள்ளை, பஞ்சலட்சணத் திருமுகவிலாசம்,
இராம, குருசாமிக் கோனார் சன்,
மதுரை, 1956.

வேங்கடசாமி நாட்டார், அகநானூறு,
ந.மு. வேங்கடாசலம் கழக வெளியீடு, சென்னை, 1961
பிள்ளை, ரா. (உ.ஆ.),

வையாபுரிப்பிள்ளை, எஸ்., சங்க இலக்கியம்,
பாரி நிலையம், சென்னை, 1973,
இரண்டாம் பதிப்பு.

வைரமுத்து, இரா., இன்னொரு தேசீயகீதம்,
கலைஞன் பதிப்பகம், சென்னை, 1983,
நான்காம் பதிப்பு

———, கொடிமரத்தின் வேர்கள்,
பாரதி பதிப்பகம், சென்னை, 1984,

———, திருத்தி எழுதிய தீர்ப்புகள்.
கலைஞன் பதிப்பகம், சென்னை, 1982.
நான்காம் பதிப்பு

———, ரத்ததானம்.
கலைஞன் பதிப்பகம் சென்னை, 1984

———, வைகறை மேகங்கள்,
கலைஞன பதிப்பகம், சென்னை, 1984,
நான்காம்பதிப்பு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

(ஆ) துணைமைச் சான்றாதாரங்கள்

அரசுமணி, 'தனிப்பாடல் கனிச்சுவை',
அருணோதயம் பப்ளிகேஷன்ஸ்,
சென்னை, 1959.

அறவாணன், க.ப., கவிதையின் உயிர் உள்ளம் உடல்,
பாரி நிலையம், சென்னை, 1976

இன்னாசி, கு., புரட்சிக்கவி,
ஆய்வுக்கோவை 5 ஆம் தொகுதி, மாநிலக் கல்லூரி தமிழ்த்துறைச் சார்பு
வெளியீடு, சென்னை, 1973.

இராமலிங்கன், அரங்க., பாரதிதாசன் படைப்புக்களில் நகைச்சுவை'
கற்புக்கரசி பதிப்பகம், சென்னை, 1978.

கதிரேசச்செட்டியார், மு., உரைநடைக்கோவை
(இரண்டாம் பாகம்), மீனாட்சி புத்தக
நிலையம், மதுரை, 1984.

சுபிலன், வே., 'தனிப்பாடல்களில் நகைச்சுவை
அருணோதயம் பப்ளிகேஷன்ஸ்,
சென்னை, 1959,

கந்தையாபிள்ளை, ந. சி., தமிழ்ப்புலவர் அகராதி,
ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம். சென்னை,
1952.

கனகசபாபதி, சி., பாரதி—பாரதிதாசன் கவிதை மதிப்பீடு,
நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் பிரைவேட் லிட்,
சென்னை, 1979,

குருசாமி, மா. பா.
(தொ.ஆ.). பலகோணங்களில் பாரதி,
ஆதித்தனார் கல்லூரி, திருச்செந்தூர்,
1978.

கோதண்டராமன், பி., இலக்கியமும் விமர்சனமும்,
மணிவாசகர் நூலகம், சென்னை, 1962.

கோவிந்தன், வை.(ப.ஆ.), தர்மராட்சகன்
சக்தி காரியாலயம், சென்னை, 1950,

கோவிந்தசாமி, மு., பாரதிதாசன் கவித்திறன்,
பாரி நிலையம், சென்னை, 1969,
இரண்டாம் பதிப்பு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சஞ்சீவி, ந.. இலக்கிய இயல்.
தமிழ் எழுத்தாளர் கூட்டுறவு சங்கம்,
சென்னை, 1974

சஞ்சீவி, ந.(ப.ஆ.), தமிழாய்வு தொகுதி—1,
சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.
1974.

சண்முகம், இராம. (ப ஆ.), பாரதி இயல்,
மணிவாசகர் பதிப்பகம்,
சிதம்பரம், 1982.

சுரலை இளந்திரையன், புதிய தமிழ்க்கவிதை.
தமிழ்ப்புத்தகாலயம், சென்னை. 1976.

சுப்பிரமணியம், க.நா., விமரிசனக்கலை,
தமிழ்ப்புத்தகாலயம், சென்னை, 1959.

ப்பிரமணியன், ச வே., தமிழ் இலக்கியக் கொள்கை (1),
வீராசாமி, தா. வே. (ப.ஆ) 'தொல்காப்பியம்' – ச. வே.
சுப்பிரமணியம், உலகத்தமிழ் ஆராய்ச்சி
நிறுவனம், சென்னை, 1975.

சுப்பிரமணியம், ச. வே., தமிழ் இலக்கியக் கொள்கை (2),
திருநாவுக்கரசு, க. த. உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்,
(ப. ஆ.), சென்னை, 1977.

சுப்பிரமணியன், ச. வே. தமிழ் இலக்கியக் கொள்கை (3)
மணவாளன், அ. அ.(ப.ஆ.) உலகத்தமிழ் ஆராச்சி நிறுவனம்.
சென்னை, 1978.

சுப்பிரமணிய பிள்ளை, கவி இன்பம்,
கோ., பழனியப்பா பிரதர்ஸ். திருச்சி 1957.

சுப்பிரமணியபிள்ளை. ஜி., அங்கதனின் அங்கதம்
கம்பர் விருந்து, மணிவாசகர் நூலகம்
சிதம்பரம், 1974, இரண்டாம் பதிப்பு.

சுப்புரெட்டியார், ந., புதுக்கவிதை போக்கும் நோக்கும்,
பாரி நிலையம், சென்னை, 1983.

சுந்தரம், ப. மீ., பாரதியார் வரலாறும் கவிதையும்,
உஸ்மானியா பல்கலை, ஹைதராபாத்
ஓரியண்ட் லாங்மன்ஸ், 1958.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

செயராமன், நா , சங்க இலக்கியத்தில் பாடாண்திணை மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1975.

செல்வராசன், மா., பாரதிதாசன் ஒரு புரட்சிக் கவிஞர், பாரி நிலையம் (வி. உ.) சென்னை, 1979.

சேதுப்பிள்ளை, ரா. பி., நகைச்சுவை, தமிழ் விருந்து, பழனியப்பா பிரதர்ஸ், திருச்சி, 1965, ஒன்பதாம் பதிப்பு.

சொக்கலிங்கம், பா., கவிமணி, கருணா பப்ளிகேசன், 1955.

ஞானசம்பந்தன், அ. ச., இன்றைய இலக்கியம், மெர்குரி புத்தகக்கம்பெனி, கோயம்-புத்தூர், 1971.

தசரதன், ஆ., தற்காலத் தமிழ்க் கவிதைகள் ஆய்வு, International Printers & Publishers, Madras. 1982.

தண்டாயுதம். இரா, தற்காலத் தமிழ் இலக்கியம், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1983, இரண்டாம் பதிப்பு.

தமிழவன், இருபதில் கவிதை, ஜெய்குமாரி ஸ்டோர்ஸ், நாகர்கோவில், 1971.

தூரன், பெ., பாரதியாரின் நகைச்சுவையும் நையாண்-டியும், வானதி பதிப்பகம். சென்னை. 1980.

பாலச்சந்திரன், சு., இலக்கியத் திறனாய்வு, அணியகம், சென்னை, 1976

———————, கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, அணியகம் சென்னை. 1978

பிச்சை, அ., தொல்காப்பியரின் அங்கதம், ஏழா-வது ஆய்வுக்கோவை, தொகுதி-1, தெ.தி.இ. கல்லூரித் தமிழ்த்துறைச் சார்பு வெளியீடு, நாகர்கோவில், 1975.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

புன்னைவன நாத முதலியார் & செ.ரெ. இராமசாமிபிள்ளை, உ.ஆ.), நந்திக் கலம்பகம், கழக வெளியீடு, சென்னை, 1961.

பெரியகருப்பன், இராம., ஒப்பிலக்கிய அறிமுகம். மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1973.

" " சங்க இலக்கிய ஒப்பீடு. இலக்கியக் கொள்கைகள். மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1975.

" " சங்க இலக்கிய ஒப்பீடு, இலக்கிய வகைகள, மீனாட்சி புத்தக நிலையம். மதுரை, 1978.

பெருமாள், ஏ.என்., தமிழ் நாடகம் ஓர் ஆய்வு, தமிழ்ப் பதிப்பகம், சென்னை, 1979.

பெருமாள், தே.ப. (ப.ஆ.) கவிமணி தேவி மலர், நீலா நூலகம், சென்னை, 1975.

" " கவிமணியின் வாழ்வும் கவிதை வளமும், வானதி பதிப்பகம், சென்னை, 1972.

பொன்னுசாமி, செ, காளமேகம், இருமுனை, நல்லமுத்துப் பதிப்பகம், தஞ்சை. 1962.

மகாதேவன், கதிர்., ஒப்பிலக்கிய நோக்கில் சங்க காலம், சர்வோதய இலக்கியப்பண்ணை, மதுரை, 1976.

மணவாளன், அ.அ., அரிஸ்டாடிலின் கவிதை இயல், தமிழ்ப் புத்தகாலயம் (வி.உ.), சென்னை, 1976.

மரிய அந்தோணி, வி, இலக்கிய உலகம், பூங்கொடிப் பதிப்பகம், நாகர்கோவில், 1976, நான்காம் பதிப்பு

மாணிக்கம் வ.சுப., 'தொல்காப்பிய புதுமை', செல்வி பதிப்பகம், காரைக்குடி, 1958.

மீனாட்சிசுந்தரனார், கா., பாரதி பாநிலை, மெர்குரி புத்தகக் கம்பெனி, கோவை, 1972.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முத்துச்சண்முகம் & பெரியகருப்பன், இராம. (ப.ஆ.), — வையமலர் - ஒன்று, மதுரைப் பல்கலைக்கழகம், 1976.

முத்துவீராசாமி நாயுடு, ஜே., — 'அங்கதம்', இலக்கியச்செல்வி, கழகம், 1956.

ரகுநாதன், — சமுதாய இலக்கியம், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1980, இரண்டாம் பதிப்பு.

ரகுநாதன், (தொ. ஆ.), — பாரதியும் ஷெல்லியும், நியூசெஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை, 1979. இரண்டாம் பதிப்பு.

ராஜம் கிருஷ்ணன், — பாஞ்சாலி சபதம் பாடிய பாரதி, பாரி புத்தக நிலையம், சென்னை, 1983.

வல்லிக்கண்ணன், — புதுக்கவிதை தோற்றமும் வளர்ச்சியும், எழுத்துப்பிரசுரம், சென்னை, 1977.

வானமாமலை, நா., — புதுக்கவிதை-முற்போக்கும் பிற்போக்கும் மக்கள் வெளியீடு, சென்னை.

விசுவநாதன், ஈ.ச., — இலக்கியச் சுவைகள், பாரி நிலையம் சென்னை. 1971.

விசுவநாதன், சீனி., மணி டி. எஸ். (ப.ஆ.) — மகாகவி பாரதி மஞ்சரி சங்கம் புக்ஸ், சென்னை, 1982.

வீராசாமி, தா. வே., — பட்டறையிலே பாரதிதாசன் மெர்க்குரி புத்தகக் கம்பெனி கோயம்புத்தூர், 1971.

வையாபுரிப்பிள்ளை எஸ்., — இலக்கிய உதயம், முதற்பாகம், இரண்டாம் பாகம். தமிழ்ப்-புத்தகாலயம் சென்னை, 1954.

———, — கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை நடராசன், சு. வே. (ப, ஆ.) பூமகள் பதிப்பகம், நாகர்கோவில். 1967

——— — நகைச்சுவை, தமிழ்ப்புத்தகாலயம், சென்னை, 1961. ஐந்தாம் பதிப்பு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

(இ) இதழ்களும் ஆய்வேடுகளும்

செந்தமிழ்ச்செல்வி, சிலம்பு. - 6 பரல்-1.

செந்தமிழ்ச்செல்வி, சிலம்பு - 21, பரல்-6.

செந்தமிழ், தொகுதி-56.

கணேசன், பி., பாரதிதாசன் பாடல்கள், ஒரு திறனாய்வு பிஎச். டி. ஆய்வேடு சென்னைப்பல்கலைக்கழகம், 1976.

தமிழ்க்குடிமகன், பத்தாண்டுத் தமிழ்க் கவிதைகள் (1967-1976), பிஎச்.டி, ஆய்வேடு,, மதுரைப் பல்கலைக்கழகம் 1982.

பாலச்சந்திரன், சு. ''கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை — ஒரு திறனாய்வு'' பிஎச்.டி பட்டத்திற்கு அளிக்கப்பட்ட ஆய்வேடு சென்னைப்பல்கலைக்கழகம் 1974.

போதலிங்க குருசாமி, எம். ஆர்., தமிழ் நூல்களில் குறிப்புப்பொருள், பிஎச்.டி ஆய்வேடு, சென்னைப் பல்கலைக்கழகம், 1976.

(ஈ) ஆங்கில நூல்கள்

Butcher, S.H., Aristotle's theory of poetry and Fine Arts, Dover Publications, 1951.

Gilbert Highet, The Anatomy of Satire, Princeton University Press, Princeton 1972.

Higginbotham, John. (Ed.), Greek and Latin Literature, Methuen & Co. Ltd., London. 1969.

John Samuel, G., Studies in Tamil Poetry, Mani Pathippagam, Madras, 1978.

Knox, E.V., Satire : Mechanism of Satire, Leslie Stephen Leetine, 1951.

Lillian Herlands Hornstein. (Ed.), World Literature, The New American Library, New York.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

Meenakshisundaram, TP., 'Tolkapirian Literary Theory Proceeding of Internationa, Conference Seminar of Tamil Studies, Madras. Vol.II, 1966.

———— 'Tamil' Indian Literature Since Independence, Sakitya Academy, Delhi, 1973.

Michael Coffey, Roman Satire, Methuen & Co. Ltd., London, 1976.

Nurman Furlong, English Satire — An Anthology, George G.Harrap & Co. Ltd., 1947.

Paulson, (Ed.), Satire : Modern Essays in Criticism, Prentice Hall, New Jersey, 1971.

Polard. Arthur, Satire, Methuen & Co. Ltd., 1970.

Rees, R.J., An Introduction to English Literature, Macmillan & Co., 1968, IInd Edition

Sirnivasa Iyengar, K R., The Adventure of Criticism, Asia Publishing House,Madras, 1962.

Subramania Aiyar, A.V., 'Tamil Studies', 1969.

Sutherland. James, English Satire, Cambridge Press, 1962.

(உ) கலைக்களஞ்சியம் / அகராதி

Cuddon, J.A.(Ed.), A Dictionary of Literary Terms, Indian Book Company, Andre Deutsch. 1977.

Shipley, Joseph, T.(Ed.) Dictionary of World Literary Terms.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

Alex Presminger (Ed.), Princeton Encyclopaedia of Poetry and Poetics, Macmillan, 1974.

Steinberg, S.H. (Ed.), Cassell's Encyclopaedia of Literature, Vol. I, Cassell & Co. Ltd., London, 1953.

Encyclopaedia Americana — Vol. 24, Americana Corporation, New York, 1976.

The New Encyclopaedia Britannica — Vol. 16, William Benton Publishers, London, 1981.

6845

GURUKUL KANGRI LIBRARY
Accos on 15.2.91
Class on
Cat on
Tag etc.
Checked
Any Other

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்நூலாசிரியர் பேராசிரியர் டாக்டர் மு. அருணகிரி, எம்.ஏ., பிஎச்.டி. அவர்கள் காமராசர் மாவட்டம் அருப்புக்கோட்டை வட்டம் செட்டிகுறிச்சி என்னும் சிற்றூரில் 16-9-1946 இல் பிறந்தார். தந்தையார் ச. முத்துச் சாமி முதலியார், தாயார் மு. உலோகாம்பாள். பள்ளிப்படிப்பைப் பெரியகுளத்தில் முடித்தபின் மதுரை தியாகராசர் கல்லூரியில் பி.எசி., (வேதியியல்) பட்டம் பெற்றார். சிறிது காலம் அக்கல்லூரியில் விளக்கவுரையாளராகப் பணியாற்றியபின் தமிழ் இலக்கியத்தில் எம்.ஏ., பட்டம் பெற்றார். மதுரைப்பல்கலைக் கழகத்தில் **தமிழ் இலக்கியத்தில் அங்கதம்** என்ற உயரிய ஆய்வு நூல் வழங்கிச் சிறப்புமிக்க டாக்டர் பட்டம் பெற்றார். விரிவுரையாளராகவும் பேராசிரியராகவும் தியாகராசர் கல்லூரியில் பணியாற்றிய காலத்தில் இதழியல், மொழியியல், மொழிபெயர்ப்பியல், நாடகவியல் ஆகிய கலைத்துறைகளில் பட்டயச் சான்றிதழ் தேர்வுகளில் வாகை சூடினார். வடமொழிப் பயிற்சியும் பெற்று விளங்குகிறார்.

இவர் தியாகராசர் கல்லூரியில் தொடர்ந்து ஏறத்தாழக் கால் நூற்றாண்டாக ஆசிரியராகப் பணியாற்றி இப்போது பேராசிரியராகப் பணிபுரிந்து வருகிறார். இவர் நல்ல எழுத்தாளர், பேச்சாளர், வழக்காடி. இவ்வாறு நல்லாசிரியர்க்குரிய இயல்புக்கேற்ப எப்போதும் பயில்வதும் பயிற்றுவிப்பதுமாகவே கடமை ஆற்றுகிறார். நல்ல பண்பாளர், பழகுதற்கு இனியர், பிறர்க்கு உதவும் பேரியல்பினர்.

மதுரைப் பல்கலைக்கழக மாலை நேரக்கல்லூரியில் சிறப்பு விரிவுரையாளராகவும் விளங்குகிறார். இது காறும் இவர் 50 ஆய்வுக் கட்டுரைகளைப் பல்வேறு கருத்தரங்குகளில் வழங்கியுள்ளார். இவர் கல்லூரி தேசிய மாணவர் படையின் கப்பற்படைப்பிரிவில் கடந்த 11 ஆண்டுகளாக அதிகாரியாகவும் பணிபுரிந்து வருகிறார். இவர்தம் பல்துறை ஆற்றல்களைக் கண்டு மகிழ்வதோடு இவர் மேலும் பல உயர்பதவிகள் பெற வாழ்த்துகிறேன். வாழ்க; வளர்க.

பேராசிரியர் டாக்டர் **நா. பாலுசாமி**
எம் ஏ., பி எல்., எம்.லிட்., பிஎச்.டி.

மேலட்டை: மதுரை - 625020

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar